1325

தமிழ் நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செய்தி வெளியீடு

VOL:- 10 APR 1989 NO:- 2

14 361

வெளியீடு 14-9-1989 Issued 14-9-1989

1275

தமிழ்நாடு அரசு வணக்காப்பகம் 11 சன 1990 எழும்பூர், சென்னை-600008.

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 19, 1989–தொகுதி 10–எண் 2
Wednesday, the 19th April, 1989–Volume 10-No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat, Fort St. George**
**Madras-600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

# உள்ளடக்கம்.

19—4—1989


| | |
|---|---|
| **1. வினாக்கள்—விடைகள் —** | பக்கங்கள் |
| உடுக்குறியிட்ட வினாக்கள். | 217-248 |
| **2. தகவல் கோரல் —** | |
| (அ) பேரவையில் நடைபெற்ற முன்னைய நிகழ்ச்சிகள் குறித்து விசாரிக்கஒரு குழு அமைத்து இருப்பதாக திரு. சி. சுப்பிரமணியம் அறிவித்துள்ளது குறித்து. | 248-267 |
| (ஆ) தமிழ்ப்புத்தாண்டு தினத்தன்று பேராஆரணியில் நடைபெற்ற இலவச அரிசி வழங்கும் விழா ஏற்பாடுகள் குறித்து. | 267-268 |
| (இ) இலங்கைப் பிரச்சினை பற்றிய பேச்சு வார்த்தையை மீண்டும் தொடங்க இருப்பதாக வந்துள்ள செய்தி குறித்து. | 268-269 |
| **3. ஒழுங்குப் பிரச்சினை —** | |
| மானியக் கோரிக்கைகள் தொடர்பான கொள்கை விளக்கக் குறிப்புகள் முன்கூட்டியே உறுப்பினர்களுக்குக் கிடைக்காதது குறித்து. | 273 |
| **4. கவன ஈர்ப்பு —** | |
| (அ) தர்மபுரி மாவட்டம், தொட்டம்பட்டியிலுள்ள ''தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் தொழிற்சாலை'' மூடப்பெற்றிருப்பது குறித்து. | 269-271 |
| (ஆ) திருவாரூர் மருத்துவமனைக்குத் தண்ணீர் இணைப்பு வழங்கப் பெறாதது குறித்து. | 271-272 |

144361
600 009

5. அறிவிப்புகள் —

பக்கங்கள்.

(அ) பேரவை அலுவல்கள் .. .. 297-298

(ஆ) ''இந்திய உழவர்—உழைப்பாளர் கட்சி'' பேரவையில் தனி அணியாகச் [illegible] படுதல். 367

(இ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் .. 367-368

(ஈ) பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள். 368-369

(உ) உரிமைக் குழு உறுப்பினர்கள் .. .. 369-370

6. மானியக் கோரிக்கைகள், 1989-90—விவாதமும். வாக்கெடுப்பும்—தொடர்ச்சி—

(அ) கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிருவாகமும். 273-366

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் 273-275, 335-336, 345-366

திருமதி பி. லட்சுமி 275-279

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் 280-285

*திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் 285-297

*திரு. கே. பிச்சாண்டி 298-301

*திரு. எஸ். ஏ. தங்கராஜன் 302-306

திரு. என். பெரியசாமி 306-308

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் 308-314

திரு. பி. என். வல்லரசு 314-319

*திரு. எம். எஸ். கே. ராஜேந்திரன் 319-324

திரு. ரா. சொக்கர் 324-328

திரு. ஜி. பழனிச்சாமி 329-331

திரு. எம். அப்துல் லத்தீப் 331-335 338-339



பக்கங்கள்.

*திரு. எஸ். டி. உகம்சந்த். 339-345

(ஆ) கோரிக்கை எண். 36—பாசனம் .. 370-371

(இ) கோரிக்கை எண். 37—பொதுப்பணிகள்—கட்டிடங்கள். 371-372

(ஈ) கோரிக்கை எண் 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும். 372

(உ) கோரிக்கை எண். 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு. 373

(ஊ) கோரிக்கை எண். 53—பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. 373-463

மாண்புமிகு திரு. துரைமுருகன். 373-375 436-460

திரு. கோ. வீரையன். 375-384

திரு. வ. அன்பழகன். 385-390

திரு. கோ. பூவராகன். 390-398

திரு. ஐ. பெரியசாமி 398-404

திரு. பொன். விஜயராகவன். 404-411

திரு. பி. எச். பாண்டியன். 411-415

*திரு. க. சொ. கணேசன். 415-421

திரு. பா. அப்துல் சமத். 421-423

*திரு. ஆர். வரதராஜன். 423-425

திரு. மா. மணிமாறன். 425-429

திரு. சோ. அழகர்சாமி. 429-436

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். 463-46

D
V211,31'N89
N89.10.2

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989, ஏப்ரல் 19, புதன்கிழமை.

சித்திரை 6, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2020.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி''.

கடல் சூழ்ந்த அகன்ற உலகத்தில் மழை பெய்யாமல் பொய்த்து விடுமானால் பசியானது உள்நோக்கி ஊடுருவி நின்று உயிர்களை வாட்டி வதைக்கும்.

## (i) வினாக்கள்—விடைகள்.

## உடுக்குறியிட்ட வினாக்கள்.

**கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு சட்டக் கல்லூரி**

74*—(*வினா எண். 348)—திரு. பொன். **விஜயராகவன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

*கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு சட்டக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு சட்டக் கல்லூரி அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. பொன். விஜயராகவன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டம்தான் என்று percentage of literacy )

சொல்வார்களே அந்த அடிப்படையில் அதிகமாக இருக்கிற மாவட்டமாகும். ஆகவே, இதைக் கருத்திற்கொண்டும் இவ றைக்கு அரசுத் துறையின் சார்பில் எந்த அரசுக் கல்லூரியும் அந்த மாவட்டத்தில் இல்லை என்பதைக கணக்கில் எடுத்துக் கொண்டும், கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் அரசு சட்டக் கல்லூரி அமைப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதை அமைப்பதற் கான கருத்துருவை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நான்கு சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. வட்டார அடிப்படை யில் சென்னை, மதுரை, திருச்சி, கோவை ஆகிய நான்கு வட்டாரங்களில் அவை உள்ளன. அதிலே ஒரு வட்டாரத்திற் குள்ளே நாகர்கோவிலில் அமைக்க வேண்டுமென்பது, இரண்டா வது பகுதித் திட்டத்தில் 1985– 86 ஆம் ஆண்டில் அப்படிப் பட்ட கல்லூரியை ஏற்படுத்த முடியுமா என்று ஆராயப்பட்டு, நிதிநிலை காரணமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. நிதிநிலை மேலும் மோசமாக இருக்கிறதே தவிர. உயர்ந்த நிலைக்கு வருவதற்கு, அண்மையில் இன்னும் ஒரு ஆறு திங்களுக்கு வாய்ப்பு இல்லாததால் உடனடியாக அவைபற்றி பரிசீலிக்கக் கூடிய வாய்ப்பு இல்லையென்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பொன். விஜயராகவன் :** மாண்புமிகு தலைவர் அவர் களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடு கிறபோது ஏற்கெனவே ஆராயப்பட்டு நிதிநிலை காரணமாக இது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இன்னும ஒரு ஆறு திங்களுக்கு நிதிநிலை நன்றாக இல்லை யென்று சொன்னாலும், இந்த ஆண்டு தொடக்கத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றாலும், அடுத்த ஆண்டிலா வது இதைக் கருத்திற்கொண்டு செய்ய வேண்டும். அங்கேயிருந்து ஏராளமான மாணவர்கள் நம்முடைய மாநிலத்தில் இருக்கக் கூடிய சட்டக் கல்லூரிகளில் இடம் கிடைக்காத காரணத்தால் கேரளா மாநிலத்திலும், கர்நாடகா மாநிலத்திலும் சென்று படிக்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். இதை அடிப்படை யாக எடுத்துக்கொண்டு இப்போது வருகின்ற ஆண்டில் இல்லை யென்றாலும், அடுத்த ஆண்டிலாவது துவங்குவதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படி ஒரு உறுதியைக் கொடுக்கக் கூடிய நிலையில் கல்வித்துறை இப்போது இல்லை.



**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல் லியபடி நான்கு வட்டாரங்களில் சட்டக் கல்லூரிகள் நடந்து வருகின்றன. என்னுடைய திருச்சி ஜில்லாவில் ஒரு சட்டக் கல்லூரி நடந்து வருகிறது. அதிலே Co-education— ஆண்களும், பெண்களும் ஒன்றாகப் படிக்கிறார்கள். அதில் ஹாஸ்டல் வசதி என்பது ஆரம்ப காலத்திலிருந்தே வாடகைக் கட்டடம் என்பதால் சரியாக வரவில்லை. மறுபடி மறுபடி அதனை மாற்றினார்கள். இதுவரையில் ஹாஸ்டல் ஏற்பட வில்லை. படிப்பதற்காவது கட்டடம் வசதியாக இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. அதுவும் வாடகையில் இருக்கிறது. ஆகவே இதுபோன்ற கஷ்டங்கள் இருக்கின்றன. (குறுக்கீடு). Self financing அடிப்படையில் தனிப் பட்டவர்கள் மூலமாக ஏதாவது ஆரம்பிப்பதற்கு முயற்சி யெடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சுயநிதிக் கல்லூரிகளைப் பற்றிய அனு பவம் பெருமளவிற்கு மகிழ்ச்சிகரமானதாக இல்லை. எனவே சுயநிதிக் கல்லூரி என்றால் அதற்குரிய சட்ட திட்டங்களை எந்த வகையில் செயல்படுத்துவது, அவைகளால் பின் விளைவு கள் மோசமாக ஆகாமல் இருப்பதற்கு, முன்னதாக என்ன நடவடிக்கையெடுக்க வேண்டும் என்பது இனிதான் தீர்மானிக்கப் படவேண்டும். அவைகள் தீர்மானிக்கப்பட்டதற்குப் பின்னர் தான் சுயநிதிக்கல்லூரி என்றால் என்ன என்ற அடிப்படையில் செயற்படுவது போன்றவற்றை (Capitation Fee வாங்காமல் நடத்துவதற்குரிய நிலை உருவாகுமா என்பது ஆராயப்பட்டு, அதற்குப்பின்னர் நான் முடிவு செய்யப்படும்.

**திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரியில் படித்து வரக்கூடிய மாணவர் களுக்குத் தமிழில் புத்தகங்கள் இப்போது கிடைப்பது தடை யாக இருக்கிறது என்ற புகார் வந்திருக்கிறது. விசாரித்த போது, தமிழில் பாடப் புத்தகங்கள் வருவது ஏற்கெனவே கழக அரசு 'எல்லாம் தமிழ் எங்கும் தமிழ்' முறையில் பாடப் புத்தகங்களை வெளியிட்டு வந்தது ஒரு குறிப்பிட்ட அளவோடு நிறுத்தப்பட்டது என்றும், இப்போது பாட நூல் நிறுவனம் அச்சடிக்கவேயில்லை என்றும் வந்திருக்கிறது. ஆகவே இனி யாவது சட்டக் கல்லூரி மாணவர்களுக்குத் தமிழில் போதுமான புத்தகங்கள் கிடைக்க வழிவகை செய்யப்படுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, தமிழ் பாட நூல்கள் அதிகம் வெளிவருவதற்கான முயற்சிக்கு அடிப்படையான பணி இனிதான் தொடங்கப்பட வேண்டும். ஏற்கனவே வெளிவந்த நூல்கள் மறுபடியும் மறுபதிப்பு செய்யத் தேவைப்படுமானால், அவைகள்

[1989 ஏப்ரல் 19

மறுபதிப்பு செய்யப்படும். எழுதப்படவேண்டிய நூல்களுக்குத் தகுந்த ஆலோசனை வழங்குவதற்குத் தகுந்த குழு அமைக்கப்படும்.

திரு. சோ. வீரையன் : தலைவர் அவர்களே, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் நிதிநிலை காரணமாகப் புதிய சட்டக் கல்லூரி துவக்கக்கூடிய நிலையில் இல்லை என்று சொன்னார்கள். நான் கோருவது நிதி சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல. இன்றைக்கு இருக்கக்கூடிய சட்டக் கல்லூரியில் பயிலக்கூடிய மாணவர்களுக்கு அவர்களுடைய நலனையும், அவர்களுடைய பெற்றோர்களுடைய நலனையும் கருதி, இந்தத் தடைக்கல்வி சிஸ்டத்தால் பெரும் தொந்திரவு மாணவர்களுக்கு ஏற்படுவதை நீக்கி, இந்த 'பிரேக் சிஸ்டத்தை' மாற்றி, முன்னாலே இருந்த நிலைக்கு இந்தச் சட்டக் கல்வியினுடைய நிலையைக் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தத் தடைக் கல்வித் திட்டம் என்பது எதனாலே உருவாயிற்று என்று கேட்டால், 3 ஆண்டு படிப்பாக இருந்த சட்டக் கல்லூரி படிப்பு, பட்டம் பெற்றவர்கள் சேரக்கூடிய படிப்பு. பட்டம் பெறாத மாணவர்கள் சேரக்கூடிய நிலைமையைப் புதிதாக உருவாக்கி, 5 ஆண்டுக்கால படிப்பு என்று ஏற்படுத்திய காரணத்தால் முதல் இரண்டு ஆண்டு ஏறத்தாழ பட்டப் படிப்புக்குச் சமமானது என்ற அந்த அடிப்படையில், முதல் இரண்டு ஆண்டில் முழுத் தேர்ச்சி பெற்றால்தான் மூன்றாவது ஆண்டுக்குச் செல்லலாம் என்ற ஒரு விதி ஏற்பட்டது. அந்த 5 ஆண்டுக் கல்வித் திட்டம் அந்த முறையில் இடம் பெற்றிருக்கிறது. இருந்தாலும் அவற்றைப் பரிசீலனை செய்வதற்கும், கூடுமானால் இந்தத் தடைக்கல்வி முறையை தடையில்லாத கல்வியாக மாற்றுவதற்கும் முயற்சிக்கப்படும். உறுதி கூற இயலாது.

திரு. ப. முத்துசாமி : தலைவர் அவர்களே, தபால் முறையில் சட்டப் படிப்பைப் படிப்பதற்கு அனுமதி இருக்கிறதா? அப்படி என்றால் ஒவ்வொரு ஆண்டுக்கும், எத்தனை மாணவர்கள் இதில் படித்துத் தேறுகிறார்கள்?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தபால் எழுதினால், விடை எழுதப்படும். (சிரிப்பு)

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தமிழகத்திலே சுயநிதிக் கல்லூரி அடிப்படையில் சட்டக் கல்லூரிகள் ஏதேனும் செயல்படுகின்றனவா?



1989 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் தலைவர் : அவர்களே, நான் அறிந்திருக்கிற வரையில் இப்பொழுது விவரம் இல்லாவிட்டாலும் கூட, சேலத்தில் ஒரு கல்லூரி செயல்படுவதாக அறிகிறேன்.

**வத்தலக்குண்டில் மாவட்ட முன்சிப் நீதிமன்றம்.**

75—(*வினா எண். 796) திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டைத் தொகுதி, வத்தலக்குண்டில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே 1982—83ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன் Predecessor Government assurance given by the Hon. Minister in the Assembly அதாவது சாங்ஷன் செய்யப்பட்டது என்று முன்னால் இருந்த அரசாங்கம் சொல்லி இருக்கிறதே, அதுகூட அமைச்சருடைய கவனத்திற்கு வரவில்லையா? அப்படி அது செயல்படாவிட்டாலும் கூட, இப்போது புதிதாகவாவது, தயவு செய்து இதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு District Munsif's Court at Batlagundu or Nilakottai எங்கு இடம் இருக்கிறதோ, அங்கே அமைப்பதற்கான வழிவகையைச் செய்ய முடியுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தச் சட்ட மன்றத்தில் இதுபோன்ற வினா வந்தபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கருத்தைச் சொன்ன பிறகு, உயர்நீதிமன்றத்தோடு கலந்து நடவடிக்கை எடுப்பதாக நானும் அன்று சொல்லியிருக்கிறேன். இப்போதும் அதே பதிலை நான் தெரிவித்துக்கொள்கிறேன். உயர்நீதிமன்றத்தைக் கலந்து, தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தில்கூட ஏற்கெனவே 2 ஆண்டுகளுக்கு முன்பே, நானே சென்று அந்த ரிஜிஸ்திரார் மற்றும் நீதிபதிகளை எல்லாம் பார்த்து இருக்கிறேன். அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், நிச்சயமாக நாங்கள் சிபாரிசு செய்திருக்கிறோம் என்று சொல்கிறார்களே, அவர்களுடைய அந்தச் சிபாரிசு இன்னும் வரவில்லையா? அப்படி வராமல் இருந்தால் தயவுசெய்து மறுபடியும் அவர்களிடத்திலே துரிதப்படுத்தி அந்தச் சிபாரிசை வாங்கி, விரைவில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** தலைவர் அவர்களே, இதில் உள்ள பிரச்சினை நிதிப் பிரச்சினை. அதுதான் முக்கியமான பிரச்சினையாக இருந்து வருகிறது. நிதிப்பற்றாக் குறை காரணமாகத்தான் சில நீதிமன்றங்களை ஆரம்பிப்பதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து மனதில் கொள்ளப்படும்.

**டாக்டர் எஸ். சுந்தரராஜ் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நீதிமன்றங்கள் அமைக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா? மாவட்டங்களைப் பிரித்தபின்பும், மாவட்ட நீதிமன்றங்கள் அடுத்த மாவட்டத்திலே உள்ளன என்பதை அரசின் கவனத்திற்குத் தெரியுமா?

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்று மாவட்டங்களாகப் பிரித்த பிறகு, மதுரையிலே இயங்குகின்ற அந்த மாவட்ட நீதிமன்றங்களை அந்தந்த மாவட்டத் தலைநகருக்குக் கொண்டுபோக வேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய கொள்கைக் குறிப்பு. அதன்படி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இராமநாதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இராமநாதபுரம் மாவட்டம், அந்த சிவகெங்கையைத் தலைநகராகக் கொண்டிருக்கிற பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருடைய மாவட்டத்திற்கான அந்த நீதிமன்றங்களை உடனடியாகக் கொண்டுவரவேண்டுமென்று அரசாங்கம் முடிவெடுத்து உயர்நீதிமன்றத்திற்குத் தெரிவித்திருக்கிறது.

**திரு. என். கணபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கலைஞர் ஆட்சியில் 30—1—1976 அன்று இரண்டாவது வகுப்பு நடுவர்களைப் பதவி உயர்த்தி முதல் வகுப்பு நடுவர்களாகவும், மாவட்ட முன்சிப்களாகவும் ஒருங்கிணைத்து "இண்டக்ரேஷன் ஆர்டர்" என்கின்ற உத்தரவு ஒன்று பிறப்பித்திருக்கிறது. அது 1988 ஆம் ஆண்டுதான்





அமலுக்குக் கொண்டுவரப்பட்டு, ஏதோ பெரிய மனது செய்து, சென்ற ஆட்சியாளர்கள் கொண்டு வந்தார்கள். அதன்படி ஏறக்குறைய 225 புதிய முன்சீப் மாஜிஸ்ட்ரேட்டுகள் தமிழகத்திலே உருவாகியிருக்கிறார்கள். ஒவ்வொரு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிற்கும் இப்போது அதிகபட்ச வேலை இல்லாத காரணத்தால் அவர்களுக்கு முன்சீப் மாஜிஸ்ட்ரேட் என்கிற அந்தஸ்து சட்ட ரீதியாகக் கொடுக்கப்பட்ட பிறகு, அவர்களே சிவில் வழக்குகளை விசாரிப்பதற்கான அதிகாரம் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்று பல ஆண்டுகளுக்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆண்ட காலத்தில் இதுபோன்ற ஒரு திட்டம் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 'டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கம் ஜுடிஷியல் மாஜிஸ்ட்ரேட்' என்று இப்போது எல்லா செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டுகளும் ஃபர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டுகளாக உயர்த்தப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எல்லா விவரங்களும் நன்றாகத் தெரியும். இருந்தாலும் கேள்வி கேட்பதற்காக நான் சொல்கிறேன். 'டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கம் ஜுடிஷியல் ஃபர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்' என்ற நிறுவனத்தின் மூலமாக சிவில் நீதிமன்றங்களில் அவர்களுக்கு நிச்சயமாக அதிகாரங்கள் அளிப்பதற்கு நடவடிக்கை உயர்நீதிமன்றத்தின் மூலமாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. சொக்கர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கேள்விக்கு சட்ட அமைச்சர் பதிலளிக்கையில் இராமநாதபுரம் மாவட்டம் பிரிக்கப்பட்ட பிறகு இராமநாதபுரத்திற்கும், சிவகெங்கைக்கும் செல்லும் என்று சொன்னார். ஆனால், காமராஜர் மாவட்டத் தலைநகரான விருதுநகர் பற்றி ஏனோ குறிப்பிடாது விட்டுவிட்டார். விருதுநகரில் கட்டிடங்கள் கட்டும் வரையில் வாடகைக்கான கட்டிடங்களைக் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். எனவே, அதற்கான உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்திற்கும் மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்படும். இப்போது உடனடியாக இராமநாதபுரத்திற்கும், சிவகெங்கைக்கும் அமைக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதால் அங்கு அமைக்கப்படுகிறது. காமராஜர் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

[1989 ஏப்ரல் 19

**மாமல்லபுரத்தில் ஒலி, ஒளிக்காட்சி அமைத்தல்.**

59— (*வினா எண். 104) **திரு. வி. தமிழ்மணி :** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரத்தில் சுற்றுலாத் துறையின் சார்பாக ஒலி, ஒளிக்காட்சி அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மாமல்லபுரத்தில் சுற்றுலாத் துறையின் சார்பாக ஒலி—ஒளிக்காட்சி அமைக்கும் திட்டம் அரசின் சஆய்வில் உள்ளது.

(ஆ) இந்த ஒலி - ஒளிக்காட்சி ரூ. 47 லட்சம் மூலதன செலவில் அமைக்க 1988-ல் மாநில அரசு ஆணை பிறப்பித்தது என்றாலும் இந்திய தொல்பொருள் ஆராய்ச்சித்துறை Department of Archaeology, Government of India எழுப்பிய ஆட்சேபணையினால் இத்திட்டத்தில் தாமதம் ஏற்பட்டது.

**திரு. வி. தமிழ்மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆய்வில் இருக்கிறது என்று சொன்னதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது அங்கு ஒலி - ஒளிக்காட்சி அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு பணிகளும் துவக்கப்பட்டதாக நான் அறிகிறேன். அது எந்த அளவிற்குத் தடைபட்டது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கத்திலே மாமல்லபுரத்தில் கடற்கரைக் கோயில் ' Shore Temple ' என்று சொல்லப்படுகின்ற கடற்கரைக் கோயில் அருகாமையில் அல்லது 5 ரதங்கள் இருக்கின்ற இடத்திலே இந்த ஒலி - ஒளிக்காட்சியை அமைக்கலாம் என்று திட்டமிடப்பட்டது. ஆனால் மத்திய அரசு சுற்றுலாத்துறை இத்திட்டம் பற்றி இந்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையுடன் கலந்தாலோசித்தது. அங்கே இந்த இரண்டு இடங்களும்— கடற்கரை கோயில், ஐந்து ரதங்கள்—இந்திய தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிற காரணத்தாலே அவர்கள் அதை புரொடெக்டட் ஏரியா என்று அழைக்கிறார்கள். ஆகவே அந்த இடங்களிலே ஒலியும் - ஒளியும் காட்சியை அமைக்கக்கூடாது என்று



1989 ஏப்ரல் 19]

ஆட்சேபணை கிளப்பியதன் காரணமாக அந்தத் திட்டத்திலே தாமதம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு மாநில அரசு மாற்று ஏற்பாடாக அங்கே அமைக்கப்பட இருக்கிற அரும்பொருள் காட்சியகம், யூத் ஹாஸ்டல் அருகிலே ஏறத்தாழ 30 ஏக்கா நிலத்திலே அமைக்கலாம் என்று திட்டம் இருக்கிறது. அது நிறைவேற்றப்படுகிறபோது அங்கே இந்த ஒலி - ஒளிக் காட்சியை அமைக்கலாம் என்று ஒரு கருத்து ஆய்வில் இருக்கிறது.

**திரு. வி. தமிழ்மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தைத் துல்லியமாக அளந்து அங்கே இருக்கிற நிலைமைகளை வெகு அழகாக அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், இந்தத் திட்டத்தைத் துவங்குவதற்கு ஏற்பட்டிருக்கிற தடைகளை உடனடியாக அகற்றி உலக சுற்றுலாப் பயணிகளைக் கவருகிற வகையில் ஒலி - ஒளிக் காட்சியை கூடிய சீக்கிரத்தில் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி:** தலைவர் அவர்களே, இந்த ஒலி— ஒளிக் காட்சி அமைப்பதன் மூலமாக அங்கே வருகிற பயணிகளுக்குத் தேவையான விவரங்களை எடுத்துச் சொல்ல முடியும். அந்தப் பகுதியைப் பற்றி மட்டுமல்ல, தமிழகத்தைப் பற்றி சொல்ல முடியும். ஆனால் இதன் மூலமாக வருகிற வருவாயைக் கணக்கிட்டுப் பார்த்தால், ஒலி - ஒளி நிகழ்ச்சியைக் காண வருகிறவர்களுடைய எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், அந்தத் திட்டம் இறுதியில் அவசியம் தானா என்ற ஆய்வு இன்னும் தீவிரமாகச் செய்யப்பட வேண்டியிருக்கிறது.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு இடங்கள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாகவும், சரித்திர சம்பவம் நடைபெற்ற இடங்களாகவும் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களி இந்த ஒலி - ஒளிக் காட்சியை விரிவு படுத்திட அரசிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** தலைவர் அவர்களே, மதுரையில் இப்படிப்பட்ட ஒலி - ஒளிக்காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கேயும்கூட ஆரம்ப காலத்திலே வந்து பார்த்தவர்களுடைய எண்ணிக்கையைவிட இப்போது அங்கே வந்து பார்க்கிறவர்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைந்து இருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். அதுவும் தவிர அந்தக் கருவிகளிலே சில பழுது ஏற்பட்ட காரணத்தினால் ஒரு மணி நேரம் காட்டப்படுகிற காட்சி இப்போது 40 நிமிடம்தான் காட்டப்படுகிறது. இப்போது மாமல்லபுரத்திலே இதை அமைக்கலாம் என்ற திட்டம் ஆய்வில் இருக்கிறது. இது தவிர வேறு எங்காவது அமைக்க வேண்டுமென்று உறுப்பினர்கள் ஆலோசனை தெரிவித்தால் அது பற்றி பரிசீலிக்கப்படும்.

[1989 ஏப்ரல் 19

**திரு. வெ. இராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, எனது குளத்தூர் தொகுதியில் விராலிமலை ஒன்றியத் தைச் சேர்ந்த சித்தன்னவாசல் மிகவும் வரலாற்று சிறப்பு மிகுந்த சுற்றுலா மையமாக இருக்கிறது. மேலும் விராலிமலை ஒன்றியத்தைச் சேர்ந்த கொடும்பாளூரில் மூவர் கோயிலும் வர லாற்று சிறப்பு மிக்க சுற்றுலா மையமாக இருக்கிறது. இந்த இரண்டு இடங்களிலும் மேலும் விஸ்தரிப்பு செய்து, அங்கே ஒலி - ஒளிக்காட்சி அமைக்கபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வெளிநாட்டிலேயிருந்து வருகிற பயணி கள் ஒலி - ஒளிக் காட்சிகளைப் பார்ப்பதில் அதிகம் ஆர்வம் காட்டுவதில்லை. சுற்றிச் சுற்றி வெவ்வேறு இடங்களை நடந்து போய்ப் பார்ப்பதிலேதான் அவர்களுக்கு அதிக ஆர்வம் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் பகல் நேரத்திலே அந்தக் கட்டிடங்களை, அந்தச் சிற்பங்களை நேரிலே பார்ப்பதிலேதான் அவர்களுக்கு ஆர்வம் இருக்கிறது. மேல் நாட்டிலே இருப்பதைப் போல ஒலி - ஒளிக் காட்சிகளைப் பார்ப்பதிலே தீவிரமான ஆர்வம் இல்லை என்பதும் அதற்காக அவர்கள் நேரம் செலவிட முன் வருவதில்லை என்பதும் இன் றைக்கு இருக்கிற நிலைமை ஆகும்.

**திரு. பொன். விஜயராகவன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது மதுரையிலே இது நடைபெற்று வருகிறது, மாமல்லபுரத்திலே ஆய்வில் இருக் கிறது என்று குறிப்பிட்டார்கள். வேறு இடங்களில் இது பற்றி சொன்னாலும் ஆய்வில் எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்னார்கள். கன்னியாகுமரியில் அது ஒரு சர்வதேச சுற்றுலா மையம் என்ற அளவிலே இருக்கின்ற காரணத்தினாலே அங்கே அவை முன்னவர் அவர்கள் சொன்னதைப் போல, சிற்பங்களை எல்லாம் சுற்றி பார்ப்பதற்கு நேரம் இல்லாத காரணத்தால் மாலையிலே அவர்கள் தங்கியிருந்து அடுத்த நாள் காலையிலே சூரிய உதயம் பார்ப்பதற்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் தங்குகின்ற காரணத்தினாலே— அவர்களுக்கு இரவு நேரத்தில் ஒலி, ஒளிக் காட்சி அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** தலைவர் அவர் களே, கன்னியாகுமரிக்கு வருகின்ற பயணிகள் காலையிலே வந்து விட்டு மாலையிலே திருவனந்தபுரத்தின் அருகிலே இருக்கின்ற கோவளம் என்ற இடத்திற்குச் செல்கிறார்கள் என்பதுதான் இன்றைக்கு இருக்கின்ற நிலைமை. இரவிலே வெளிநாட்டுப் பயணிகள் அங்கே அதிகமாக தங்கக்கூடிய வசதிகள் இல்லை. ஆகவே அதற்கான வசதிகளை முதலில் உருவாக்கித்தர வேண்டும். அதற்குப்பிறகு இந்த யோசனை பரிசீலனையில் எடுத்துக் கொள்ளப்படும்.



1989 ஏப்ரல் 19]

**தர்மபுரி மாவட்டத்தில் கூடுதலாக ஒரு தொழிற்பேட்டை.**

76—(*வினா எண். 1040) **திரு. வ. முல்லைவேந்தன் :** மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் மேலும் ஒரு தொழிற் பேட்டை அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மொரப்பூர் தொகுதியில் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. வ. முல்லைவேந்தன் :** தலைவர் அவர்களே, கழகத் தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்த காலத்தில் ஓசூரில் ஒரு தொழிற்பேட்டை உருவாக்கப்பட்டு அந்தப் பகுதி ஓரள விற்கு முன்னேறியிருக்கிறது. அந்த மாவட்டம் தமிழகத்திலே ஒரு பிற்பட்ட மாவட்டம் ஆகும். குறிப்பாக அந்த மாவட்டத் தில் இருக்கின்ற மக்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் படுகின்ற அவதியைப் போக்குகின்ற வகையில் இந்த ஆண்டு தமிழக அரசு சார்பாக ஒரு தொழிற்பேட்டையை உருவாக்கி அங்கு வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கின்ற பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகின்ற வாய்ப்பை நம்முடைய அரசு உருவாக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே தர்மபுரி மாவட்டத்தில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனங்கள் சார்பாக 3 பெரிய தொழிற் பேட்டைகளையும் 23 இடங்களில் பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் தீப்பெட்டி தொழிலுக்கான சின்னஞ்சிறு தொழிற்கூடங்களை யும் ஏற்படுத்தி உள்ளதால், அம்மாவட்டதில் மேற்கொண்டு ஒரு புதிய தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனை யில் இல்லை.

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு :** தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் ஆலங்குளம் தொகுதியானது மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிறது. அங்கு ஒரு தொழிற் பேட்டையை அமைத்துக் கொடுத்தால் அங்குள்ள.........

[1989 ஏப்ரல் 19

திரு. ந. நஞ்சப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் பின் தங்கிய மாவட்டம் என்று மத்திய, மாநில அரசுகள் அறிவித்திருக்கின்றன. இந்த நிலையில் அந்த பின்தங்கிய நிலைமையை கணக்கில் எடுத்துக்கொண்டு இன் னொரு தொழிற்பேட்டையை அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா? ஏற்கெனவே, தர்மபுரி மாவட்டத்தில் பெண்ணா கரத்தில் தொழிற்பேட்டையை அமைக்க மாவட்ட வளர்ச்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றியது. அது அரசின் கவனத்தி திற்கு வந்துள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, ஏதாவது ஒரு இடத்தில் புதியதாக தொழிற் பேட்டை உருவாக்க வேண்டும் என்ற நிலைமை ஏற்படுகின்ற போது அங்கு இருக்கக்கூடிய சிறு தொழில் மேற்கொள்ள வேண் டும் என்று விரும்புகிறவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து மாவட்ட தொழில் மையத்தின் மூலமாக சிறு தொழில் நிறுவனத்தினுடைய கவனத்திற்கு கொண்டு வருவார்களேயானால் சிறு தொழில் நிறு வனத்தின் மூலமாகவும், மாவட்ட தொழில் மையத்தின் மூல மாகவும், அந்த இடத்தினுடைய தன்மையை உணர்ந்து, தொழில் தொடங்க முன்வருபவர்களுடைய பொருளாதார நிலைமை, தொழிலில் அவர்களுக்கு இருக்கக்கூடிய ஊக்கம், உற்சாகம் இவைகளை உணர்ந்து அந்த இடத்தில் தொழிற் பேட்டையை அமைத்தால் அவர்களால் அதைந் திறம்பட நடத்த முடியும் என்று அரசு கருதுமேயானால், அந்த இடத்தில் நிலத்தை ஆர்ஜிதம் செய்து தொழிற்பேட்டைகளை அமைத்துத் தருவதிலே அரசுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த பகுதியில் இப்படி தொழிற்பேட்டையைத் தொடங்க வேண்டும் என்று விரும்பு கிறார்களோ அந்த இடத்தில் தொழிற்பேட்டையைத் தொடங்கு வதற்கான வாய்ப்புகளை உருவாக்க அரசினுடைய கவனத்திற்கு அதை கொண்டுவருவார்களேயானால் அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

திரு. ந. நஞ்சப்பன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த அரசும் இன்னொரு தொழிற்பேட்டை அமைப்பதாக அறிவித்தது. ஆனால், நடைமுறைப்படுத்தவில்லை. இனி வரும் காலத்திலாவது பெண்ணாகரத்தில் அமைக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுவார்களேயானால், அதைப்பற்றி நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.

திரு. எம். அண்ணாமலை : பேரவைத் தலைவர் அவர் களே, 1985ஆம் ஆண்டு, முந்தைய முதலமைச்சர் அவர்கள் தர்மபுரியில் தொட்டம்பட்டியிலிருந்து, காரிமங்கலம் வரை



[1989 ஏப்ரல் 19]

தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பு அறிவிப்பாகவே இருந்து வருகிறது. அது அரசுக்கு தெரியுமா என்பதை அறிய விரும்புவதோடு அதை இந்த அரசு பரிசீலிக்க முற்படுமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, அந்த அறிவிப்பு என்ன நிலையில் இருக்கிறது என்பதை அறிந்துகொள்ள வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி விடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, தொழிற்பேட்டை அமைப்பதற்கு என்ன வாய்ப்புக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன? அமைக்காத இடங் களில் அமைப்பதற்காக எந்த மாதிரி நிலைமை இருந்தால், அந்தத் தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்பதையும் அமைத்த தொழிற்பேட்டைகளிலும், அமைக்கப்பட இருக்கின்ற தொழிற் பேட்டைகளிலும், பெண்கள் இன்றைக்குச் சுதந்த் தொழில், பல்வேறு சிறு தொழில்களில் ஈடுபட்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், பெண்களுக்கென்று, அந்த தொழிற்பேட்டைக்குள் ஒரு தனி ஏற்பாடு- தனி பேக்டரி ஏற்பாடு செய்வதற்கு அமைச்சர் முன் வருவாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தொழில் முனைவோரின் தேவைக்கேற்ப தொழிற்பேட்டைகள் அமைக்கப் படுகின்றன. ஒரு இடத்தில் குறைந்த பட்சம் 20 தொழில் முனைவோர் இருந்தால், அந்த இடத்தில் தொழிற்பேட்டை அமைப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும். தொழிற்பேட்டை அமைப்பதற்கான வசதியான நிலம், போக்குவரத்து இணைப்பு தண்ணீர்வசதி, மின்சாரவசதிஆகியவைகளை, அடிப்படைத்தேவை களைக் கருத்திலே கொண்டு, தொழிற்பேட்டை அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்படி அமைக்கப்படு கின்ற தொழிற்பேட்டைகளில் தொழில் தொடங்கவேண்டும் என்று விண்ணப்பம் போடுகிறவர்களுடைய விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, தகுதியானவர்களுக்கு அந்தத் தொழிற்பேட் டைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. அதிலே பெண்கள் தொழில் அதிபர்களாக வரவேண்டும் என்று விரும்பி, விண்ணப் பங்களை அனுப்புவார்களேயானால், அதில் தொழில்பேட் டைகள் அவர்களுக்காக ஒதுக்குவதிலே எந்தவித ஆட்சேபணை களும் இல்லை.

### பெரியார் மாவட்டத்தில் தொழிற்பேட்டை.

77—(*வினா எண். 1150) திரு. ஜி. ஜி. குருமூர்த்தி: மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டத்தில் தொழிற்பேட்டை அமைக் கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

[1989 ஏப்ரல் 19

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமிசெகதீசன் :** தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பெரியார் மாவட்டம் பெருந்துறை தாலுக்காவில் உள்ள வடமுகம் காங்கேயம்பாளையம் கிராமத்தில் சிறு தொழில்களுக்கான தொழிற்பேட்டை ஒன்று நிறுவ சுமார் 50 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையிலுள்ளது.

**திரு. ஜி. ஜி. குருமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டிருக்கின்ற இடங்களில் அவை சரியாகச் செயல்பட்டு வருகின்றனவா, மற்ற தொழிற்பேட்டைகளும் சரியாக செயல்பட்டு வருகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு தொழில் நடத்துவோருக்கு விண்ணப்பம் கோரப்பட்டு, அவைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்குப் பிறகு அங்கே சிறு தொழில்கள் தொடங்கப்படுகின்றன. தொடங்கப்பட்டிருக்கிற எல்லா இடங்களிலும் ஓரளவிற்குத் தொழில்கள் நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சில இடங்களில் தொடங்கப்பட்ட தொழில்கள் ஏதாவது பின்னடைவு ஏற்படுமேயானால், அந்தப் பின்னடைவைப் போக்கவும் மாவட்டத் தொழில் மையங்களின் மூலமாக, தேவையான நிதி வசதி வங்கிகளின் மூலமாகப் பெற்றுத்தரப்படுகிறது. அவர்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை வழங்குவதில் மாவட்டத் தொழில் மையங்கள் அவர்களுக்கு உதவி செய்கின்றன. மேற்கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை விற்பனை செய்வதற்கும் மாவட்டத் தொழில் மையம் உதவி செய்வதால், பெரும்பாலான தொழிற்பேட்டைகள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்துறையிலே பின் தங்கிய மாவட்டங்கள் என்று மத்திய அரசால் நம்முடைய தமிழ்நாட்டில் ஏதேனும் மாவட்டம் சமீபத்திலே அறிவிக்கப்பட்டிருக்கிறதா? அறிவிக்கப்பட்டிருந்தால் எந்தெந்த மாவட்டங்களை அப்படி அறிவித்திருக்கிறார்கள் என்றும், நம்முடைய மாநில அரசு எந்தெந்தத் தாலூக்காக்களைத் தொழிற்துறையிலே பின்தங்கிய தாலுக்காக்கள் என்று அறிவிக்க உத்தேசித்துள்ளது என்றும் அறிய விரும்புகிறேன்.



1989 ஏப்ரல் 19]

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி எழுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்பயிற்சியிலே பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்காமல் பல்லாயிரக்கணக்கான தொழிற் பயிற்சியாளர்கள் காத்திருக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற சூழ்நிலையை தமிழக அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்பயிற்சிப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிற்சி பெற்ற மாணவர்கள் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் தொழில் தொடங்குவதற்கான வாய்ப்பினை. மத்திய அரசும், மாநில அரசும் உருவாக்கித் தந்திருக்கின்றன. கடந்த பல ஆண்டுக் காலமாக, தமிழகத்தில் தொழிற்துறையில் ஏற்பட்ட நலிவின் காரணமாக, பயிற்சி பெற்ற அந்த மாணவர்களுக்கு உடனுக்குடன் வேலை வாய்ப்பு வழங்குவதிலே கடந்த கால அரசு தாமதப்படுத்தி இருக்கிறது. இதையெல்லாம் கருத்திலே கொண்டு தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருகின்ற ஆண்டுகளில் ஏராளமான தொழிற்சாலைகளை தமிழகத்திலே உருவாக்குவதன் மூலமாக, பயிற்சி பெற்ற பல மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குகிற திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள்.

(முற்பகல் 9-30)

**திரு. கே. ரமணி :** தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம் அண்மை காலத்திலே ஈரோட்டைத் தலைநகராகக்கொண்டு வந்திருக்கக்கூடிய ஒரு மாவட்டம். அந்த ஈரோட்டில் வேகமாக சிறு தொழில்கள், அதிலும் இன்ஜினீயரிங் தொழில்கள் போன்ற சிறு தொழில்கள் அதிகமாகப் பரவி வளர்ந்து வருகின்றன. அந்த ஈரோடு நகரத்தினுடைய ஒரு நான்கைந்து கிலோ மீட்டருக்குள்ளாக, தொழிற்பேட்டையோ அல்லது வேறுவிதமான தொழில் முயற்சியையோ எற்படுத்துவது, துரிதமாக தொழில் வளர்ச்சிக்கு அந்த மாவட்டத்திற்கு உதவி செய்யும், இப்படி இந்த பெருந்துறை என்பது அங்கிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும்படியான இடம், ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்து ஈரோட்டிலிருந்து 4, 5 கிலோ மீட்டர் வட்டாரத்திற்குள் அப்படிப்பட்ட ஒரு தொழில் பேட்டையை அல்லது தொழில் முன்னேற்றத்திற்கான ஒரு ஏற்பாட்டை செய்வதற்கு முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்?

[1989 ஏப்ரல் 19

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டிலும் ஏற்கனவே தொழிற்பேட்டைக்கான இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு தொழில் கூடங்கள் கட்டப்பட்டு 15 தொழில் கூடங்கள் ஈரோட்டிற்கு அருகிலேயே செயல்படுகின்றன. பெரியார் மாவட்டம் பிரிக்கப்பட்டு ஈரோட்டைத் தலைநகரமாக அறிவித்ததற்குப் பிறகு ஈரோட்டைச் சுற்றி ஒரு 10 கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்திற்குள் இருக்கக்கூடிய இடங்கள் மிக அதிகமாக விலை உயர்ந்து இருக்கின்றன. எனவே அவ்வளவு விலைக்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்து தொழில் பேட்டையை கட்டுவது என்பது அரசினுடைய நிதிநிலைக்கு உகந்தது அல்ல என்பதாலேதான் ஈரோட்டிலிருந்து 15 கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கும் படியான பெருந்துறை சாலையில் அமைந்துள்ள காங்கேயன் பாளையம் கிராமத்தில் 50 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுகிற நிலையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பேராவூரணி பேரூராட்சியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி.**

78. (*வினா எண். 204) திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி பேரூராட்சியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, பேராவூரணி பேரூராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் ஒன்றை நிறைவேற்றுவதற்கு 3—1—1989-ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒப்புதல் தந்துள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. 1989 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் பணிகள் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மிக்க நன்றி. அந்தத் திட்டத்திற்கு அந்த பேரூராட்சி மன்றம் எவ்வளவு நிதி அளிக்கிறது? அதிலே நிதி போதாத காரணத்தால் இன்சூரன்ஸ் திட்டத்திலிருந்து கடன் வாங்கி கட்டுவதாக அங்கே சொல்லப்படுகிறது. அதற்கு தமிழக அரசு முழு நிதி அளிப்பதாக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்த அளவுக்கு தமிழக அரசு முழு நிதி கொடுத்து அந்தத் திட்டத்தை விரைவில் செயற்படுத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



1989 ஏப்ரல் 19]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி பேரூராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் ரூபாய் 86.36 லட்சம் செலவில் செயற்படுத்த வாரிய நடைமுறை எண். 2, நாள் 3—1—1989-ல் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இடைக்கால மக்கள் தொகை 28 ஆயிரம், மற்றும் எதிர்பார்க்கும் மக்கள் தொகை 37 ஆயிரம் என கணக்கிடப்பட்டுள்ளது. முறையே 2,001 மற்றும் 2,016 ஆம் ஆண்டு கால அளவில் பயன்படும் அளவில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினால் மக்களுக்கு கிடைக்கப்பெறும் சராசரி குடிநீர் அளவு நாள் ஒன்றுக்கு 70 லிட்டர் ஆகும். ஆகவே ரூபாய் 86.36 லட்சம் செலவில் குடிநீர் வடிகால் வாரியமே இதற்கான திட்டத்தை வகுத்துள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் இன்னும் பல ஆண்டு காலம் ஆகும் போல் தெரிகிற காரணத்தால் தற்போது எல்லா போர் வெல்களிலும் தண்ணீர் நின்று விட்டது. அந்த நகரம் மட்டும் அல்ல, அந்த பேராவூரணி தொகுதி கடற்கரை பகுதி அத்தனையிலும் தண்ணீர் நின்று விட்டது. ஆகவே அதற்கு இப்போதே போர்க்கால நடவடிக்கை எடுத்து விரைவான ஒரு திட்டத்தை செயற்படுத்த அரசு முன்வருமா? லாரிகளில தண்ணீரை கொண்டு வந்து அந்த மக்களுக்கு கொடுத்து காப்பாற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பிரச்சினைகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் தமிழக முதலமைச்சர் அவர்கள் அனைவரையும் போர்க்கால நடவடிக்கையின் அடிப்படையில் இதுபோன்ற பணிகளைச் செய்யுமாறு பணித்துள்ளார்கள். ஆகவே ஆங்காங்கே தேவைகளுக்கு ஏற்ப இந்தப் பணி தொடர்ந்து செயற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் ஒகனேக்கல் நீர் வீழ்ச்சியிலிருந்து தர்மபுரி மாவட்டம் முழுவதும் குடிநீர் கொண்டு வரும் திட்டம் அரசின்

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் 672 பேரூராட்சிகள் இருக்கின்றன என்று அறிகிறேன். அந்த பேரூராட்சிகளில் சுமார் 250-க்கும் மேற்பட்டபேரூராட்சிகளுக்கு அரசு முழு மானியத்தோடு

குடிநீர் திட்டத்தை வகுப்பதற்கு உத்தரவுகள் ஏற்கெனவே
பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றன. மீதம் உள்ள 400 பேரு
ராட்சிகளுக்கு இது போன்ற முழு மானியத்தோடு இருக்கின்ற
திட்டத்தை உருவாக்க அரசு முன்வருமா என அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி** என்கிற **தெய்வசிகாமணி:**
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற
திட்டங்கள் பரிசீலனையிலே உள்ளன. கூடிய விரைவிலே
அவைகளை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை அரசு மேற்
கொள்ளும்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு பேரவைத்தலைவர்
அவர்களே, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் கூறியபடி அநேகமாக தமிழகத்தில் பல்
வேறு இடங்களிலே தொட்டிகள் இருக்கின்றனவே தவிர, அதிலே
தண்ணீரை நிரப்புவது இல்லை. அதை அவர்களே தெரிவித்
தார்கள். போர்க்கால நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று
முடிவு செய்திருப்பதாக அறிவித்தார்கள். ஆனால், அதற்கு
குறுக்கே நிற்பது குடிநீர் வடிகால் வாரியம்தான். அவர்களிடத்
திலே எதைச் சொன்னாலும், போர்க்கால நடவடிக்கை என்
றாலும், ஒரு மாதம், இரண்டு மாதம் கழித்துத்தான் இதைச்
செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். வறட்சி தாண்டவம்
ஆடிக்கொண்டிருப்பதால், நான்கூட 17-ஆம் தேதியன்று என்
னுடைய தொகுதி பூராவையும் பார்க்கச் சென்றபோது அப்படிப்
பட்ட 6 தொட்டிகள் தண்ணீர் நிரப்பப்படாமல் இருக்கின்றன.
அங்கேயுள்ள மோட்டார் முழுவதும் மோசமாக பழுத
டைந்து இருக்கின்றன. இவைகளையெல்லாம் திருத்தி
யமைக்க போர்க்கால நடவடிக்கையை மனதில் கொண்டு அரசு
நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி** என்கிற **தெய்வசிகாமணி:**
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதைத்
தான் முதலிலேயே குறிப்பிட்டேன். இடைக்காலத்திலே அதி
காரிகள் மெத்தனமாக இருந்த போக்கினை மாற்றி அமைத்துக்
கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்
கள் மாவட்ட ஆட்சியர்களுடைய மாநாட்டிலே அவர்களுக்கு
மிகுந்த வேண்டுகோளாகவும், அதே நேரத்தில் மிகுந்த எச்ச
ரிக்கையாகவும் விடுத்திருக்கிறார்கள். ஆகவே அதிகாரிகள்
இப்போது சுறுசுறுப்பாகச் செயல்பட ஆரம்பித்திருக்கிறார்கள்.
நிச்சயமாக உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றி
வைக்கப்படும்.

**திரு. கே. ஆர். சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பேரூராட்சி
களுக்கு மானியத்திலே இடம் இருப்பதாக அறிவித்தார்கள்.
ஏற்கெனவே காட்பாடி வட்டாரத்திலேயுள்ள பேரூராட்சிக்கு
அதனுடைய நிதிநிலையை கருத்தில்கொண்டு, கடனாகப் பெற்றுத்





தான் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆகவே
அதையும் மானியமாகக் கருதி அந்தக் கடன்களை ரத்து
செய்வதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி** என்கிற **தெய்வசிகாமணி :**
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து
தனிக்கேள்வியாகக் கேட்க வேண்டும்.

**திரு. எம். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, சில இடங்களில் குடிநீர்த் தொட்டிகள்
கட்டியும், மோட்டார்கள் வைத்தும்கூட, குடிநீர் வடிகால்
வாரியத்திடம் அதற்கான தொகையைக் கட்டினால்தான்
மின்சாரம் தரப்படும் என்று மின்சார வாரியத்திலிருந்து சொல்
கிறார்கள். குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் அதன்மேல்
உடனே நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்துகிறார்கள்.
அப்படிப்பட்ட வேலைகளை அவசரமாகச் செய்வதற்கு அரசு
ஆணையிடுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி** என்கிற **தெய்வசிகாமணி :**
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று
பல்வேறு துறைகளுக்கு இடையிலேயான தொடர்பு அவசிய
மாகத் தேவைப்படுகிறது. அவைகளையெல்லாம் சுட்டிக்
காட்டி ஆங்காங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அனைத்து துறையினரையும் ஒருங்கிணைத்து உடனடியாக
நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்
கள். இதுபோன்ற பணிகளை விரைவில் அரசு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு நல்வாழ்வுத்
துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மின்துறை அமைச்சர்
அவர்களும் பக்கத்து பக்கத்தில் இருக்கிறார்கள். எனவே
நல்ல உறவோடு அதைச் செயல்படுத்துவார்கள் என்று நான்
நினைக்கிறேன்.

**திரு. எம். முத்தையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஒவ்வொரு ஒன்றியத்திலும் நீர்த்தேக்கத் தொட்டி
களுக்கு மோட்டார்கள் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட
பெரும் பகுதி மோட்டார்களில் காயில் போய்விடுகிறது. அப்படி
காயில் போய்விட்டால், அங்குள்ள பிரசிடெண்ட் டி.டி.ஓ.,-க்கு
தபால் எழுதுகிறார். டி.டி.ஓ., குறிப்பிட்ட காலங்களில், 20
மைல், 30 மைல்களுக்கு அப்பால் இருக்கிற ஒரு மெக்கானிக்குக்கு
தபால் எழுதுகிறார். அதாவது, அரசம்பட்டியில் இருக்கிற
அந்த மோட்டாரை பார்க்கும்படி தபால் எழுதுகிறார்.
அந்த மெக்கானிக் அங்கேயிருந்து பூதக்கண்ணாடி வைத்துப்
பார்க்கிறார். மோட்டாரில் காயில் போய்விட்டதா இல்லையா
என்று பார்க்கிறார். அப்படி பார்த்துவிட்டு அந்த மோட்
டாரில் காயில் போயிருப்பதாக எனக்கு தெரிகிறது என்று
சொல்லி அவர் ரிப்போர்ட் எழுதிய பிறகு அந்த மோட்டாரை
எடுத்துக்கொண்டு வரும்படி ஒரு உத்தரவு போடுகிறார்.

உத்தரவு போட்ட ஒரு மாதத்திற்குப் பிறகுதான் அந்த உத்தரவே பெறப்படுகிறது. இப்படித்தான் பெரும் பகுதி சமாச்சாரங்களில் ஏற்படுகிறது. அந்த மோட்டாருக்கு காயில் கட்டி 8 மாதத்திற்குப்பிறகு தான் அங்கே வந்து சேருகிறது. இப்படி ஒரு மோட்டாருக்கு காயில் கட்டுவதற்கு 5 ஆயிரம் ரூபாய், 6 ஆயிரம் ரூபாய் என்று போடுகிறார்கள். நாங்களெல்லாம் குடியானவர்கள். ஆயிரம் ரூபாயில் காயில் கட்டிவிடலாம். 8 ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு காயில் கட்டுகிறார்கள். இந்தத் தகவலை நான் கலெக்டர் வரையில் சொல்லியிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நீங்கள் மானியக் கோரிக்கையின் மேல் பேசுகிறீர்களா?

திரு. எம். முத்தையன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, அதை சீரமைத்து, முக்கியமானவற்றை, வேகமாகச் செய்யக்கூடிய சமாச்சாரங்களை உடனடியாகத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கையை மேற்கொண்டு பழுதடைந்த மோட்டார்களை அந்த ஊராட்சி மன்றமே, ரிப்பேர் செய்யக்கூடிய 3 கம்பெனிகளிடமிருந்து கொட்டேஷன் பெற்றுக்கொண்டு, அவர்களே நேரடியாக எடுத்துச் சென்று, காயிலையெல்லாம் கட்டிக் கொள்ளலாம் என்று சமீபத்திலே உத்தரவு வழங்கிவிட்டோம்.

(முற்பகல் 9-40).

திரு. த. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மோட்டார் பொருத்தப்படாமல் இருக்கும்போது ஊராட்சி ஒன்றியத்தைக் கேட்டால் குடிநீர் வடிகால் வாரியத்திடம் கேட்கவேண்டுமென்று சொல்கிறார்கள். குடிநீர் வடிகால் வாரியத்தைக் கேட்டால் ஊராட்சி ஒன்றியத்திடம் கேட்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த இரண்டையும் இணைத்து குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற புதுழாய்க் கிணறுகளை அமைக்கும் பணி ஒப்படைக்கப்பட்டிருப்பது குடிநீர் வடிகால் வாரியத்திடம். அவற்றைப் பராமரிக்கின்ற பணி உள்ளாட்சித் துறையிடம் இருக்கிறது. இதைப் போன்ற பல்வேறு பிரச்சினைகளை முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இப்போது கேள்வி கேட்ட உறுப்பினர் அவர்களும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பதால் இதுபற்றி அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





செங்கிப்பட்டி காச நோய் மருத்துவ மனை.

79. (*வினா எண். 218)— திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், செங்கிப்பட்டி மகாத்மா காந்தி நினைவு காச நோய் மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்பெறும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ); தற்போது இதுபற்றிய குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. துரை சந்திரசேகரன் : தலைவரவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து அறுநூறுக்கும் மேற்பட்ட உள் நோயாளிகளும் நூற்றுக்கணக்கான புறநோயாளிகளும் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வந்த மருத்துவ மனையில் இன்றைக்கு மிகக் குறைந்த அளவில் சிகிச்சைப் பெறும் உள்நோயாளிகள், புறநோயாளிகள் எண்ணிக்கை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவரவர்களே, வெளிநோயாளிகள் பற்றிய சராசரியான எண்ணிக்கை 1987-ல் 254 ஆக இருந்தது; உள் நோயாளிகள் சராசரியான எண்ணிக்கை 17 ஆக இருந்தது; பிரசவ எண்ணிக்கை 108 ஆக இருந்தது.

திரு. துரை சந்திரசேகரன் : தலைவரவர்களே, அந்த மருத்துவ மனைக்குச் சொந்தமான 500 ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்கள் மூலம் ஆண்டுதோறும் வருகின்ற வருமானம் எவ்வளவு? அரசு, மருத்துவ மனைக்கு வழங்கும் மானியம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவரவர்களே, 1988-89-ல் மொத்த நிதி ஒதுக்கீடாக ரூ.5,35,000 வழங்கப்பட்டிருக்கிறது. 1988-89-க்கு மருந்துகள் வாங்குவதற்காக மட்டும் 2,62,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கேயிருந்து வருமானம் எதுவும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். அண்ணாநம்பி : தலைவரவர்களே, அவினாசி அருகில் இருக்கிற. . . . . . . . . . . .

[1989 ஏப்ரல் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி செங்கிப்பட்டி பற்றியது.

**திரு. இரா. இராசமாணிக்கம் :** தலைவரவர்களே, புகழ் பெற்று விளங்கிக்கொண்டிருந்த அந்த காசநோய் மருத்துவ மனையில் இவ்வளவு குறைவான நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படும் வகையில் தாழ்வுற்றிருப்பதற்கு என்ன காரணம்? அந்தத் தனியார் மருத்துவமனையை அரசு மருத்துவ மனையாக எடுத்துக்கொள்ள அரசுக்கு ஏதாவது சங்கடம் இருக்கிறதா? அது சம்பந்தமாக அரசு பரிசீலனை செய்து அரசு மருத்துவ மனையாக எடுத்துக்கொள்ள அரசு முயற்சி செய்யுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** தலைவரவர்களே, மருத்துவப் பணி மற்றும் குடும்பநல இணை இயக்குநர் 29 2 1988 அன்று அந்த செங்கிப்பட்டி மகாத்மா காந்தி நினைவு காசநோய் மருத்துவமனையைப் பார்வையிட்டார். மருத்துவமனை பற்றிய அவருடைய கருத்துக் குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த மருத்துவமனையில் உள்ள வார்டுகள் மற்றும் அதைச் சுற்றியுள்ள 50? ஏக்கர் நிலத்தை அரசு பொது மருத்துவமனை கட்ட உபயோகப்படுத்தலாம் என்று அவர்கள் குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். செங்கிப்பட்டியில் வசிக்கும் காசநோயாளிகள் 100 படுக்கை வசதி கொண்ட அரசு இராஜா மருத்துவமனை, திருச்சி அல்லது தஞ்சாவூர் மருத்துவமனைக்குச் சென்று அவசர அல்லது சிறிதான சிகிச்சைப் பெறுவதற்கு வாய்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த மருத்துவமனையை பொது மருத்துவமனையாக மாற்றுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மருத்துவ மனைத் தலைவர், தஞ்சாவூர் ஆகியவர்களிடம் கருத்து கேட்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அது குறித்து இன்னாள் வரையில் பதில் எதும் வரவில்லை. இந்த மருத்துவமனையை தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டு பொது மருத்துவ மனையாகச் செயல்படுத்தலாம் என்ற கருத்து அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. இதனால், அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு தோராயமாக 50 இலட்சம் ரூபாய் செலவாகும். ஆகவே, இது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கருத்தைப் பெற்ற பிறகு முடிவு செய்யப்படும்.

**திரு. எஸ். எ. தங்கராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை விபத்துக்களில் ஏராளமான விபத்துக்கள் தினசரி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவைகளைத் தவிர்க்கவும்...........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் செங்கிப்பட்டிக்கு வரவேண்டும். (சிரிப்பு).



1989 ஏப்ரல் 19]

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கிப்பட்டி மருத்துவ மனைக்குச் சொந்தமான ஒரு பொது நிர்வாகத்திற்குட்பட்ட நஞ்சை நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தற்போது வருமானம் இல்லை என்று சொன்னார்கள். அதற்குரிய நிலங்களிலிருந்து ஏன் வருமானம் வரவில்லை? அப்படி வராமல் இருப்பதற்கு என்ன காரணம்? அதுபற்றி ஆராய்ந்து அந்த நஞ்சை நிலங்களிலிருந்து வருகிற வருமானத்தைப் பெருக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பெ. ஆசையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலிருந்த அரசு தமிழ்நாட்டில் இருக்கிற பல அரசு மருத்துவமனைகளை ஒரு பொது உத்தரவு மூலம் ஆரம்பச் சுகாதார நிலையங்களாக ஆக்கி இருந்தது. இதனால் பாதிக்கப்பட்டுப் போன அரசு மருத்துவமனைகளில் ஆண்டிப் பட்டியையும் குறிப்பிடலாம். தற்போது அந்த மருத்துவ மனைக்கு........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது காச நோய் மருத்துவ மனை பற்றியது.

**திரு. எஸ். எஸ். தென்னரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் ஆஸ்டின்பட்டி ஒன்றில்தான் காச நோய் ஒழிப்பு மருத்துவமனை இருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் எந்த அமைச்சரும் அதைப் பார்வையிட்டு விஸ்தரிப்பு செய்வதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வில்லை. இப்போது எவ்வளவு படுக்கைகள் இருக்கின்றன? மேலும் இப்போது அதிக படுக்கைகள் ஏற்படுத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி செங்கிப்பட்டி தொடர்பானது. ஆஸ்டின்பட்டி தொடர்பானதல்ல.

**திரு. சா. கணேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மாதங்களுக்கு முன்னாலே என்னுடைய தொகுதியிலே காச நோய் மருத்துவமனையின் எக்ஸ்ரே யூனிட் ஒன்று துவக்கப்பட்டது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்தான் எக்ஸ்ரே யூனிட்டைத் தொடங்கி வைத்தார்கள். அது இன்னும் செயல்படவில்லை. அதை இயங்க வைக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1989 ஏப்ரல் 19

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி செங்குப் பட்டி பற்றியதாக இருக்கிறது. ஆனால இதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிற காரணத்தாலே உடனடியாக இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குலசேகரம் அரசு மருத்துவமனை விரிவாக்கம்.

80— (*வினா எண். 423) **திரு. செ. நூர்முகமது :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், குலசேகரம் அரசு மருத்துவ மனையை விரிவாக்க எடுத்த அரசின் முடிவுகள் நிறைவேற்றப் பட்டதா?

(ஆ) அங்கு அதிக படுக்கைகளைக் கொண்ட ஒரு கட்டிடம் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** (அ) மற்றும் (ஆ) : தற்போது அரசிடம் அதுபற்றிய குறிப்புகள் ஏதும் இல்லை.

**திரு. செ. நூர்முகமது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த குலசேகரம் பகுதி என்பது மலைகள், காடுகள், தோட்டங்கள் நிறைந்த பகுதி. எனவே அந்தப் பகுதயிலே ஏராளமான தொழிலாளர்களும், ஆதிவாசி மக்களும் வாழ்ந்து வருகிற காரணத்தால் குலசேகரம் அரசு மருத்துவ மனையில் குறைந்த பட்சம் அவசரப் பிரிவு, விபத்துப் பிரிவாவது துவக்க அரசு ஏதாவது பரிசீலனை வைத்திருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவ மனையை விரிவாக்கம் செய்யவேண்டுமென்ற குறிப்பு, அதாவது 20 படுக்கைகள் கொண்டதாகவும், 6 படுக்கைகளுடன் கூடிய அறுவை அரங்கத்துடன் கூடியதாகவும் கட்டவேண்டுமென்று 1988-89 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அனுப் பப்பட்டுள்ளது. ஆனால் அரசினுடைய நிதி நிலையைக் கருதி இது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே மாண்புமிகு உறுப் பினர் அவர்களுடைய கருத்து அடுத்த ஆண்டு நிதிநிலையைப் பொறுத்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 19]

**திரு. செ. நூர்முகமது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக குலசேகரம் பகுதி என்பது கல்குளம் வட்டத் திற்குட்பட்ட பகுதி. இப்போது அங்கே ஏதாவது விபத்து ஏற்பட்டாலோ அல்லது அவசர நிலைமை ஏற்பட்டாலோ சுமார் 50 கிலோ மீட்டர் வரை சென்று நாகர்கோவில் தலைமை மருத்துவமனையில்தான் காட்ட வேண்டி இருக்கிறது. எனவே குறைந்த பட்சம் தாலுகா தலைநகரமாக இருக்கின்ற தக்கலை மருத்துவமனையிலேயாவது அவசரப் பிரிவும், அதே மாதிரி விபத்துப் பிரிவுகளும் துவக்க, அதுவும் இந்த ஆண்டிலேயே துவக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்தினை அரசு பரிசீலிக்கும்.

**திரு. ஆர். நடேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1988—89-ல் 26 படுககைகள் கொண்டதாக அமைக்கிற வகையில் ஒரு தீர்மானம் அனுப்பப் பட்டதாகச் சொன்னார்கள். மேலும் நிதிநிலை சரியில்லை என்றும் சொன் னார்கள். ஆனால நான் சென்று விசாரித்த போது * * * ஒரு தகவலை குலசேகரத்தில் இருந்து தந்ததாகக் கூறினார்கள். 4 'இன்பேஷன்ட்ஸ்' தான் அங்கே இருப்பதாகக் கூறினார்கள். ஆனால் நான் நேற்று குலசேகரம் சென்று கரெக்டாக டாக்ட ரிடம் அது குறித்துக் கேட்டு குறித்து வந்துருக்கிறேன். 50 'இன்பேஷண்ட்ஸ்' தினசரி அங்கே வருகிறார்கள். 500-க்கு மேற்பட்ட 'அவுட் பேஷண்ட்ஸ்' அங்கே தினசரி.....

(முற்பகல் 9-50)

**திரு. பொன். விஜயராகவன் :** மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, * * * என்பது அன்பார்லிமெண்டரி. அந்த சொல்லைத் தவிர்ப்பது நல்லது. அதை நீக்கிவிட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆர். நடேசன் அவர்கள் கூறிய அந்த * * * என்ற சொல் அவைக் குறிப்பி லிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ஆர். நடேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உண்மைக்கு மாறான தகவல்'. நான் புதிதாக பேசுவதால் வந்துவிட்டது. மன்னித்துக்கொள்ளவும். அவர் கள் சொன்னார்கள். அதை டாக்டரிடமே எழுதி வாங்கி வந்திருக்கிறேன். அந்த இடத்தில் எப்படியாவது படுக்கை களைக் கட்டி ஆஸ்பத்திரியை பெரிதாக்கி கொடுத்து மக்களுக்கு உதவி செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம்வந்திருக் கின்ற குறிப்பு 20 படுக்கைகள், மற்றும் 6 படுக்கைகளுடன் கூடிய தேவைதான் அங்கே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவல் சரியாக இருக்குமா என்பதை மேலும் அவர்களிடம் கேட்டு அறிந்து கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்ற நிலையில், மதுரை மாவட்டம் உசிலம்பட்டி யிலிருந்து விரிவாக்கம் செய்யவேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறது. அந்த வட்டாரம் ரெவின்யு டிவிஷன் ஆக இருக்கின்ற காரணத்தினால், அந்த வட்டார மக்கள் எல்லாம் அங்கேதான் வருகிறார்கள். மிகவும் கஷ்டமான நிலை யில் இருக்கிறார்கள். புதிய இடத்தில் தான் கட்டடங்கள் இருக்கின்றன. உசிலம்பட்டி மருத்துவ மனையை அரசு விரிவாக்கம் செய்ய அரசு முன்வருமா?

(பதில் இல்லை).

## மின் தட்டுப்பாடு.

81—(*வினா எண். 243) திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் தட்டுப்பாட்டின் காரணமாக பாசனத்திற்குப் போதுமான அளவு தண்ணீர் கிடைப்பதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே,

(அ), & (ஆ): தமிழ்நாட்டில் தற்போதுள்ள மின் பற்றாக் குறை காரணமாக விவசாயப் பம்பு செட்டுகளுக்கு 7—2—89-ல் இருந்து கீழ்க்கண்ட வகையில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்படுகிறது—

பிரிவு (i)—காலை 6 மணி முதல் 10 மணி வரை.
நள்ளிரவு 12 மணி முதல் காலை 6 மணி வரை.





பிரிவு (ii)—காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை.
இரவு 11 மணி முதல் காலை 5 மணி வரை.

பிரிவு (iii)— மதியம் 2 மணி முதல் மாலை 6. மணி வரை.
இரவு 10 மணி முதல் காலை 4 மணி வரை.

இம்முறையினால் விவசாய பம்பு செட்டுகளுக்கு பகலில் நான்கு மணி நேரமும் இரவில் 6 மணி நேரமும் மின்சாரம் கிடைக் கின்றது.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 3 பிரிவு களாகப் பிரித்து மின்சாரம் வழங்குவதாக அறிவித்தார்கள். எந்தெந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகள் எந்தெந்த நேரத்தில் வயலுக்குச் செல்லவேண்டும் என்று இதுவரை அவர்களுக்கு அறிவிக்கப்படவில்லை. கரண்ட் திடீரென்று நள்ளிரவில் வருகிறது, விவசாயிகள் படுத்துறங்கிக்கொண்டு இருக் கும்போது. அதனால் அவர்கள் உடனே சென்று பார்க்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. ஏற்கெனவே நம்முடைய மாநிலத்தில் 8 லட்சம் டன் அளவிலிருந்து 7 லட்சமாக உணவு உற்பத்தி குறைந்து விட்டதாக நாமே அறிவிக்கிறோம். எனவே, இப்படிப் போவதன் காரணமாக, விவசாயத்தை அபிவிருத்தி செய்யவோ அல்லது விவசாயம் செய்வதற்கோ அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். மின்சாரப் பற்றாக்குறை நமக்குத் தெரிகிறது. எனவே, ஸ்டேகரிங் செய்துபகிர்ந்தளிப்பது என்ற முறையிலே இதிலே 3 பிரிவுகள் என்பதை 'பீக் அவர்ஸ்' என்று வரும்போது மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரைக்கும், அநேகமாக இன்டஸ்ட்ரீஸ், கடைகள், கடைத் தெருக்கள், சினிமாக்கள் இதெல்லாம் இருக்கின்ற காரணத்தினால் அதை காலையிலே 4 மணி முதல் 10 மணி வரை அல்லது 6 மணி முதல் 12 மணி வரை என்ற முறையிலே ஸ்டேகரிங் செய்து பகிர்ந்து அளித்து விவசாயிகளுக்கு முன்கூட்டியே அறிவிப்பதற் கான ஏற்பாடுகளை அரசு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒவ்வொரு பகுதியிலேயும் எந்தெந்த நேரத்தில் மின்சாரம் வழங்கப்படும் என்பதைப் பற்றி விவசாயிகளுக்கு அறிவித்திருக்கிறார்கள். அது சரியானபடி விவசாயிகளுக்கு செல்லவில்லை என்றால் நிச்சயமாக எந்தெந்த நேரத்தில் மின்சாரம் வழங்கப்படும் என்பது அறிவிக்கப்படும். அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல, அவர்கள் சொன்ன நேரத்தில் மின்சாரம் வழங்கப் படுவதற்கு இடமிருக்குமானால் அதை நிச்சயமாகப் பரிசீலித்து அதுபோலவே வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரப் பற்றாகுறையைக் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இங்கே

நம்முடைய மாநிலத்தில் இருக்கக்கூடிய அனல் மின் நிலையம் என்று வரும்போது கல்பாக்கம் செயல்படவில்லை என்பது அனைவருக்கும் தெரிந்தது. அதிலே நாம் ஒன்றும் செய்ய முடியாத நிலையிலே இருக்கிறோம். அது மத்திய அரசைச் சேர்ந்தது. அது தவிர எண்ணூர். தூத்துக்குடி, மேட்டூர் மின் நிலையம்-ஹைட்ரோ புராஜெக்ட்ஸ்-க்கு போக வில்லை. அது இல்லாமல், நெய்வேலியில் கார்ப்பரேஷனாக இருந்தாலும் அதில் நமக்கும் உரிமையுண்டு. இதெல்லாம் சேர்ந்து 3,500 மெகா வாட் இருக்கக்கூடிய நிலைமையில் இதை விவசாயத்திற்கு என்று பகிர்ந்தளிப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை செய்ய இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சே. என். நேரு :** பேரவைத் தலைவரவர்களே, நீர் மின் நிலையங்களிலிருந்து எடுக்கக்கூடிய மின்சாரம், பருவ மழை சரியாக இல்லாத காரணத்தால் தற்போது எடுக்க முடியவில்லை. தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலிருந்து முழுமையாகவும் அதே நேரத்தில் நெய்வேலியிலிருந்து நமக்கு தரக்கூடிய மின்சாரத்தை மிகவும் குறைத்துத் தருவதாலும் ஏற்படுகின்ற அந்தப் பற்றாகுறை காரணமாகத்தான் இது போல் ஒவ்வொரு பகுதிக்கும் பிரித்துத் தர வேண்டியிருக்கிறது. எண்ணூரைப் பொறுத்தவரையில் அங்கே வெகுவிரைவில் உற்பத்தியைத் தொடங்க அனைத்து முயற்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேட்டூரிலே இடையிலே ஏற்பட்ட தடங்கலை உடனே நிவர்த்தி செய்வதன் பொருட்டு அங்கே வேலைகள் நடக்கின்றன. வெகுவிரைவில் இவை சீராக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. இரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய பூங்காநகர் தொகுதியில், புளியம் தோப்பு பகுதியில் தொடர்ந்து அறிவிக்கப்படாத மின்வெட்டு தொடர்ந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் மின் பற்றாக்குறைக்கு காரணம் சொன்னார்கள், எனவே, தொடர்ந்து மின் பற்றாகுறை இருந்தால், கேரளாவிலிருந்து, மற்ற மாநிலங்களிலிருந்து மின்சாரத்தைக் கடன் வாங்க ஏற்பாடு உண்டா? அல்லது இதுகுறித்து மத்திய அரசிடம் வேறு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுபற்றி தமிழக அரசு முயற்சி எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மற்ற மாநிலங்களில் இருக்கக்கூடிய மின்சாரப் பற்றாக்குறை காரணமாக நமக்குத் தரக்கூடிய அளவுக்கு அவர்களிடம் மின்சாரம் இல்லை. இதுகுறித்து மத்திய அரசுக்கு பல முறை தந்திகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இராமகுண்டத்திலிருந்து அவர்கள் தரக்கூடிய மின்சாரத்தைப் பெற முடியவில்லை. அங்கே தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்வதால், அங்கே மின் உற்பத்தியில்லை. ஆகவே அவர்களிடம் பல முறை தெரிவித்தும் நடவடிக்கை எடுப்பதாக உறுதிமொழி அளித்திருக்கிறார்கள், அவ்வளவுதான்.



**திரு. கோ. பூவராசன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள், விவசாயத்திற்கு என்று காலையிலும் இரவிலும் இவ்வளவு மணி என்று 3 பிரிவுகளாகப் பிரித்து வழங்குவதாகச் சொன்னார்கள். அது பெயர் அளவில் தான் இருக்கிறது. இப்போது மின்சாரம் எப்போது வருகிறது. எப்போது போகிறது என்று தெரியாது. கடந்த 10, 15 தினங்களாக தென்னாற்காடு மாவட்டத்தில் குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாமல் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, பெயரளவில் 4 மணி நேரம், 6 மணி நேரம் என்று சொல்லிக்கொண்டிருக்காமல், குறிப்பாக மின்சார உற்பத்தி இவ்வளவு இருக்கிறது என்று சொல்லி, மின்சார வெட்டை அதிகரிக்க வேண்டுமென்றால் அதிகரித்து, 4 மணி நேரம் என்றாலும் அது உறுதி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினரவர்களுடைய கருத்தை ஏற்றுக் கொண்டு, ஒவ்வொரு பகுதியிலும் எந்தெந்த நேரத்தில் மின்சாரம் அளிக்கப்படுமென்று அறிவிக்கப்படுகிறதோ, அந்த நேரத்தில் நிச்சயமாக அந்தப் பகுதியில் மின்சாரம் வழங்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் கொடுத்தாலும், அவர்கள் ஜெனரேட்டரை வைத்து இயக்கி கொள்ளலாமென்று இருக்கிறது. விவசாயிகளிடம் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் இல்லையென்றால், தண்ணீரை இரைக்க முடியாமல், விவசாயமே பாழாகிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் 3 பிரிவு என்று சொன்னார்கள். பகல் நேரத்தில் 4 மணி நேரம் தொடர்ச்சியாக மின்சாரம் வர வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா? மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் சொன்னதுமாதிரி, ஒரு வாரமாக திடீர் திடீரென்று மின்சாரம் நின்றுவிடுகிறது, இரவிலும் பகலிலும் தொடர்ந்து ஒரு மணி நேரம் வருகிறது, இரண்டு மணி நேரம் வராமல் இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று கண்டுபிடித்து, சீராக 4 மணி நேரம் பம்ப்செட்டுகளுக்கு முறையாக மின்சார விநியோகம் செய்ய அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாயிகளுக்கு சீராக மின்சாரம் விநியோகிக்க அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இராமகுண்டத்திலிருந்து நமக்குத் தரப்படும் மின்சாரம், அங்கே நடைபெறும் ஸ்டிரைக்கால் சரியான அளவுக்கு வராமல், அங்கே இருந்து வருகின்ற மின்சாரத்தின் அளவு குறைந்து, நம்முடைய மின்சாரமே அங்கே சென்றுவிடும் காரணத்தாலும் எப்போது கூட்டுகிறார்கள், எப்போது குறைக்கிறார்கள் என்று தெரியாததால், உடனடியாக அனைத்தையும் நிறுத்த வேண்டியிருப்பதால், இந்த நிலைமை இருக்கிறது. இவையெல்லாம் வெகுவிரைவிலே சீராக்கப்பட்டு, விவசாயிகளுக்குப் பகலில் நான்கு மணிநேரம் குறித்த நேரத்தில் வழங்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

### மின்வாரிய ஊழியர்கள், தொழிலாளர்கள் ஊதிய உயர்வு.

82.—(*வினா எண். 452) திரு. கே. ரமணி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்வாரிய ஊழியர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் ஊதிய உயர்வு மற்றும் கோரிக்கைகள் மீது பேச்சு வார்த்தைகள் நடைபெறுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, (அ) & (ஆ): தமிழ்நாடு அரசு ஊதியக்குழுவின் பரிந்துரைகள் வெளிவந்தபின்பு அவற்றையும் கருத்தில் கொண்டு மின்வாரியப்பணியாளர்களில் ஊதிய உயர்வு பற்றிய பேச்சு வார்த்தைகளை நடத்தலாம் என்று சில தொழிற்சங்கங்கள் கருத்து தெரிவித்ததால் அந்தப் பேச்சு வார்த்தைகள் தள்ளிவைக்கப்பட்டுள்ளன.

திரு. கே. ரமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த 30-11-1988 தேதியோடு ஒரு ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது. அந்த ஒப்பந்தம் காலாவதியாவதற்கு முன்னதாகவே, குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகப் புதிய ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்வ்தைகள் நடைபெற்றிருக்க வேண்டும். அப்போதுதான் தொழில் தகராறுகள் திடீரென்று வெடித்து, பெரிதாகாமல் தடுக்க முடியும், அந்த முறையில் இங்கே நடக்காமல், பேச்சுவார்த்தைகைளத் தொடங்கி, இரண்டு சுற்று பேச்சுவார்த்தைகள் நடந்து அதுவும் நின்றுவிட்டது. நாங்கள் நடத்துகிற பல தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் யாரும் அரசாங்கத்தினுடைய ஊதியக் கமிஷன் விசாரணை முடியும்வரை பேச்சு வார்த்தைகளை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டதாகத் தெரியவில்லை. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சங்கங்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் பேச்சுவார்த்தைகள் ஒத்தி வைக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அப்படி ஒத்தி வைக்க வேண்டுமென்று எந்தெந்தச் சங்கங்கள் கேட்டுக் கொண்டன. பெருவாரியான சங்கங்கள் அப்படிக் கேட்கவில்லை என்று எங்களுக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. எனவே எந்தெந்தச் சங்கங்கள் அப்படிக் கேட்டுக் கோண்டன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ? மேலும் மறுபடியும் அந்தப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு தலைவர் அவர்களே, 30-11-1988-உடன் முடிந்த அந்தப் பழைய முறைக்குப் பிறகு, 1-12-1988-ல் ஊதிய உயர்வுபற்றி பேச்சுவார்த்தை தொடங்கி, 1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2, 4, 5 மற்றும் 9 தேதிகளில் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடந்தபோது, தமிழ்நாடு மின்வாரியத் தொழிலாளர் கூட்டமைப்பு, தமிழ்நாடு மின்வாரியக் கணக்கியல் மற்றும் நிர்வாகப் பணியாளர் சங்கம், மத்தியில் இணைக்கப்பட்டுள்ள 5 சங்கங்கள், தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர்கள் சங்கம், தமிழ்நாடு மின்வாரிய கணக்கியல் அதிகாரிகள் சங்கம் போன்றவைகளெல்லாம், ஊதியக் குழுவின் பரிந்துரையின் பேரில் நாம் பேச்சு வார்த்தை நடத்தலாம் என்று சொன்னதற்கு இணங்க அது தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. வெகு விரைவில் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பேச்சுவார்த்தையைத் தள்ளி வைப்பதன் மூலமாகத் தொழிலுறவுதான் கெடும். அதை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். அரசாங்கம் நியமித்திருக்கிற ஊழியர் சம்பளக் கமிஷனின் பரிந்துரை வந்து, அரசு அதன் அடிப்படையில் சில முடிவுகளுக்கு வர வேண்டியிருக்கும் என்பது உண்மை. அதை ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். ஆனால் திடீரென்று பேச்சுவார்த்தையைத் தள்ளிவைப்பதன் மூலமாக, மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடங்கி நீண்ட நாட்களுக்குப் பேச வேண்டிய நிலை ஏற்படும் என்பதையும் கணக்கில் கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே அதற்கு முன்னதாகவே, இரண்டு தரப்பாரும் எந்த இடத்தில் நிற்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். எனவே அரசு அந்த முறையைக் கையாள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அதோடு போக்குவரத்துத் துறையில் உள்ள ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்ட அந்த அளவு இடைக்கால நிவாரணம் கூட மின்வாரியத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இதற்கும் ஊதியக் கமிஷன் பரிந்துரைக்கும் சம்பந்தமில்லை. ஆகவே, போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட இடைக்கால நிவாரணத்தை மின்வாரியத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கவும் நேரடியாகப் பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து நடத்தவும் ஏற்பாடு செய்யப்படுமா ? இதைச் செய்யாவிட்டால் சுமுக நிலை கெட்டுவிடக்கூடிய ஆபாய நிலை இருக்கிறது. எனவே இதையெல்லாம் அரசு உணர்ந்து, உடனடியாக இவற்றைச் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பேச்சுவார்த்தையை ஊதியக் குழுவின் பரிந்துரைக்குப் பிறகு வைத்துக் கொள்ளலாம் என்று வந்தபோது, இடைக்கால நிவாரணம் ரூ. 70 முதல் ரூ. 100 வரை

1-4-1988 வரை வழங்குவதற்கான அரசாணை 1454, பொதுப்பணித்துறை—நாள் 13—9- 1988 அன்று வழங்கப்பட்டது. அதேபோல் போக்குவரத்துத் துறையில் கொடுக்கப்பட்டதைப் போல் ரூ. 600 கொடுக்க வேண்டுமென்று கேட்ட கோரிக்கையை ஒட்டி ரூ. 600 இடைக்கால நிவாரணமாக மின்வாரியத் தொழிலாளர்களுக்கு கொடுக்கும் பிரச்சினையை ஊதிய உயர்வு பரிந்துரையோடு தீர்த்துக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் இடைக்கால நிவாரணம் தற்போது கொடுக்கத்தேவையில்லை என்று அரசு தீர்மானித்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## (2) தகவல் கோரல்

(அ) பேரவையில் நடைபெற்ற முன்னைய நிகழ்ச்சிகள் குறித்து விசாரிக்க ஒரு குழு அமைத்து இருப்பதாக திரு. சி. சுப்பிரமணியம் அறிவித்துள்ளது குறித்து.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் பத்திரிகைகளில் ஒரு சமாச்சாரம் வந்திருக்கிறது. அதுபற்றி ஒரு விளக்கம் தேவை. நம் நாட்டில் மிக உயர்ந்த பதவிகளையெல்லாம் வகித்திருப்பவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள். பெரிய பெரிய பதவிகளையெல்லாம் வகித்திருக்கிறார்கள். ஃபைனான்ஸ் மினிஸ்டராக இருந்திருக்கிறார். பல்வேறு துறைகளில் மினிஸ்டராகவும் இருந்திருக்கிறார். மத்திய அமைச்சராகவும் இருந்திருக்கிறார். இங்கேயும் அமைச்சராக இருந்திருக்கிறார். அவர் பதவி வகித்த காலத்திலெல்லாம் இப்படி ஒரு விளக்கம் கொடுக்கவில்லை. இப்போது மாத்திரம் இங்கே அவையில் நடைபெற்ற விவகாரங்களைக் குறித்து ஒரு கமிட்டி போட்டு விசாரிக்க இருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அதற்கு ஏதாவது விளக்கம் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

இன்றைக்கு பத்திரிகையில் பார்த்திருப்பீர்கள். அவர்கள் கேட்கிறார்கள். பிறகு பாராளுமன்றத்திற்குப் போகும். பிறகு எங்கே போகுமென்றே தெரியவில்லை. அதுபற்றி இன்றைக்குப் பத்திரிக்கையில் வந்திருக்கிறது. அதுபற்றி விளக்கம் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதே பிரச்சினையைக் குறித்துதான் நானும் எழுப்பலாமென்று இருந்தேன். இந்த அவையைப் பொறுத்த வரையில இந்த அவையின் இறையாண்மையை யாராலும் குறைக்க முடியாது. அதற்கு நம்முடைய விதிகள் இடம் தரவில்லை. இந்த அவையிலுள்ள நிகழ்ச்சிகளை முடிவு செய்யக்கூடிய ஒரு அதிகாரம் இந்த அவைக்குத்தான் உண்டு. (ஆ) The House is the sole judge of its own Proceedings. இது இங்கேமட்டுமல்ல. உலக நாடுகளிலும் பாராளுமன்ற ஜனநாயகத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று ஆகும். நம்முடைய இந்தியத் திருநாட்டில் கூட பல்வேறு நேரங்களில் பாராளுமன்றங்களில இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்ற நேரங்களில் எல்லாம் கருத்துக்கள் வேகமாகப் பரவும்போது சபாநாயகர் முடிவு எடுக்கிறார். அதற்கு, வெளியில் இதுபோன்ற கமிட்டிகளோ, இதுபோன்ற பேச்சுக்களோ கிடையாது. ஆனால் நம்முடைய சட்டப் பேரவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் குறித்து எதுவானாலும்—அவர்கள் வெளியிட்டிருக்கிறார்களே, ஒரு கிரிமினல் குற்றம் என்று சொன்னாலும்கூட—சபாநாயகர் எடுத்த முடிவுககு ஏற்பதான் அதுபோன்ற விவகாரங்களைத் தொடர முடியும். சபாநாயகர் கருதினால்தான் ஒரு குற்றத்தையே கூட, அது இந்த அவையிலும் நடைபெற்றாலும்கூட காவல் துறையினரே மேல் நடவடிக்கை எடுக்க முடியும்.

சென்ற ஆண்டுகூட இதுபோன்ற ஒரு நிகழ்ச்சி நடைபெறும்போதுகூட, அன்றைக்கு இருந்த காவல் துறையினர் வழக்குகள்கூட பதிவு செய்து செக்ஷன் 161-ன்படி வாக்கு மூலம் வாங்கி, அதற்குப்பிறகு நான் ஆங்கே சபாநாயகராக இருந்தபோது கைவிடப்பட்டது. அதுபோன்ற வழக்குகளைத் தொடர வேண்டாம் என்றும் காரணம் பாராளுமன்ற நடைமுறைகளில் உள்ளே நடைபெறக்கூடிய விவகாரங்கள் உள்ளேயே பாராளுமன்ற உறுப்பினர்களால், சபாநாயகரால் தீர்த்துக்கொள்ளப்பட வேண்டிய விவகாரங்களில் வெளியார் யாரும் தலையிடக்கூடாது என்றும் கருதி அன்றைக்கு அதைக கைவிட்டோம். இன்றைக்கு வெளிவந்திருக்கும் செய்தியைப் பார்க்கும்போது சபாநாயகருடைய அதிகாரம், இந்த சபையின் மாண்பு, இறையாண்மை குறைக்கப்படுவது போல் ஆகும்.

அந்த அறிக்கையை வெளியிட்டவர்கள், அந்தக் குழுவில் இருப்பவர்கள் என்னைப் பொறுத்தவரை எனக்கும் நண்பர்கள் தான். சபாநாயகர் அவர்கள், அவர்களை அழைத்து இந்த விளக்கத்தை எல்லாம் எடுத்துச் சொல்லி, உலக பாராளுமன்ற முன்னுதாரணங்களை எடுத்துச் சொல்லி, சில வேளைகளில் இதுபோன்ற விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்றாலும் கூட, அவையே இதற்கு முடிவு எடுக்க வேண்டும்

என்பதை நீங்கள் அவர்களை அழைத்துப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், இந்த அவைக்கு மேல், எந்த அவையோ, எந்த அமைப்போ எந்த மாநிலத்திலும் இல்லை என்பதை உணர்த்த வேண்டும் என்பதைத்தான் நான் இங்கே சொல்கின்றேன். ஒரே ஒரு வாசகத்தோடு முடித்துவிடுகிறேன்.

May's Parliamentary Practice—19th Edition—Page 91: With regard to a crime committed in Parliament, the House within which it was committed might claim the right to decide whether to exercise its own jurisdiction or to hand the offender over to the Criminal Courts. In taking this decision, it would no doubt be guided by the nature of the offence and the adequacy or inadequacy of the penalties—somewhat lacking in flexibility—which it could inflict. ஆகவே, இந்த அவையே இல்லாவிட்டாலும், சபாநாயகர் இங்கு இருக்கக்கூடிய உறுப்பினர்களில் ஒட்டுமொத்தமான ஆதரவைப் பெற்று இருக்கின்ற காரணத்தால் நீங்கள் முடிவு எடுக்கலாம்; இந்தந்த விவகாரங்களில் இன்னின்னமாதிரி நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்லலாம். நீங்களே கூட இந்த அவையில் ஏதாவது நடைபெற்றாலும்கூட காவல் துறையினரை அழைத்து நடவடிக்கை எடுங்கள்; வழக்குப் பதிவு செய்யுங்கள் என்று கூடச் சொல்லலாம். அந்த அவைக்கு இறையாண்மையைக் கேட்பதற்குக் காரணம், சபாநாயகருடைய வாக்குமூலத்தை சாதாரண ஒரு காவல் துறை ... செக்ஷன் 161-ன்படி ஸ்டேட்மென்ட் ரிகார்ட் செய்யக் கூடாது என்பதற்காகத்தான், இப்படி இறையாண்மை வழங்கப்பட்டிருக்கிறது. அதுகுறித்து நீங்கள் சம்பந்தப்பட்டவர்களை அழைத்து, இந்த அவையின் மாண்பையும், இந்த அவையின் நடவடிக்கைகள் சுயேட்சையாக நடைபெறுவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே ஒரு தீர்ப்பே இந்த அவையில வழங்கப்பட்டிருக்கிறது. சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு, திரு. சி. எஸ். சட்ட அமைச்சராக இருந்தபோது அன்றைக்கு திரு. அழகர்சாமி அரசாங்க வழக்கறிஞராக எடுக்கப்பட்டார். உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. உயர்நீதிமன்றம் சட்ட அமைச்சர் மீது ஒரு ஸ்ட்ரிக்சர் பாஸ் செய்தது.

(முற்பகல் 10-10)

உடனே அன்றைக்குச் சட்ட அமைச்சராக இருந்த திரு. சி. எஸ். அவர்கள் இந்த அவையிலேயே, நானும், இந்த அமைச்சரவையும் இந்த அவைக்குத்தான் கட்டுப்பட்டவர்கள், இந்த அவையில்தான் பதில் சொல்லவேண்டும், இந்த அவையிலே நிறைவேற்றப்படக்கூடிய பல்வேறு கொள்கைக் குறிப்புகள் குறித்து நீதிமன்றத்தில் சர்ச்சை எழுந்து, Stricture வழங்கினால் அது அவையின் உரிமை மீறிய



செயலாகும் என்று அன்றைக்கு அவர்களே இங்கே கொண்டு வந்தார்கள். திரு. பாலகிருஷ்ண ஐயர், நீதிபதி மீது இங்கே அன்றைக்கு வந்து, பிறகு பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் இரு சாராரும் அழைக்கப்பட்டு அன்றைக்கு ஒரு சுமுகமான நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தக் கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொல்லி இந்த அவையின் மாண்பைக் காப்பாற்றுவீர்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தியாவிலேயே பல பொறுப்புக்களை வகித்திருக்கக் கூடியவரும், சட்ட நுணுக்கங்களை, நிர்வாக நெறிமுறைகள், சட்டமன்ற மரபுகளையெல்லாம் நன்றாக அறிந்திருக்கக் கூடிய ஒருவர் என்று நாட்டிற்கு அறிமுகமாகியிருக்கிற மரியாதைக்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சில கருத்துக்களை வெளியிட்டு இருப்பதன் வாயிலாக மிக பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய, அரசமைப்புச் சிக்கலை அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்ற அடிப்படையில், அவர் வெளியிட்டிருக்கிற கருத்துக்களை, இந்த அவை கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியமேற்பட்டிருக்கிறது.

திரு. சுப்பிரமணியம் அவர்கள் தெரிவித்திருக்கின்ற கருத்துக்கள் அசாதாரணமானவைகள் மட்டுமல்ல; அவர் ஒரு விசாரணைக் குழு என்று ஏற்படுத்தி, இந்த அவையிலே நடந்த நிகழ்வுகளைக் குறித்து, விசாரணை செய்வதற்காக அந்த விசாரணைக் குழு செயல்படும் என்று அறிவித்திருப்பது, முன் உதாரணம் இல்லாதது; அரசமைப்புச் சட்டம் ஏற்படுத்தியிருக்கிற வரையறையை மீறுவது; இன்னும் சொல்லப்போனால் நேரிடையாக இந்த அவையினுடைய இறையாண்மையை ஆக்கிரமிப்பு செய்யக்கூடிய அளவிற்கு அது அமைந்திருக்கிறது என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அவை பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவை; அதிலே எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. இந்த அவையினுடைய நடவடிக்கைகள் வெளிப்படையாக நடைபெற வேண்டும்; Public debates, Public discussions என்ற அளவிற்கு இது வெளிப்படையாக நடைபெறவேண்டும்; அதிலேயும் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. இந்த அவையிலே நடைபெறுகிற விவாதங்கள், அறிவிக்கப்படுகின்ற அறிவிப்புகள், தாங்கள் கூறுகிற தீர்ப்புகள் இவைகளின் மீது fair comments என்ற அடிப்படையில் சில கருத்துக்களைச் சொல்லலாம். அதுவும் நாட்டுக்கு நன்மை பயக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் அந்தக் கருத்துக்கள் fair comments என்ற அடிப்

படையிலே சொல்லப்படலாம். அதிலேயும் யாரும் குறுக்கிட முடியாது. ஆனால் அவையிலே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி யைக் குறித்து, வெளியிலே இருக்கின்ற தனிப்பட்டவர்களோ அல்லது ஒரு அமைப்போ ஒரு விசாரணைக் குழுவை ஏற படுத்தி, அந்த விசாரணைக் குழு யாரை விசாரிக்கப் போ றது என்பது எனக்குத் தெரியவில்லை. அவைத் தலைவரை விசாரிக்கப் போகிறதா ? அவைத் தலைவரவர்கள் அவா களுடைய விசாரணையினுடைய அதிகாரத்திற்குக் கட்டுப்படப் போகிறாரா அல்லது இந்த அவையிலே அவர்கள் யாரை விசாரிக்க விரும்புகிறார்கள். விசாரணை என்று சொன் னால் எல்லாத் தரப்பு, சம்பந்தப்பட்டவர்களையெல்லாம் விசாரணை செய்தால்தான் விசாரணை முடியும். ஆனால், திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு இது தெரியாதது அல்ல. இருந்தாலும் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இது ஒரு மிகநுட்பமான constitutional question அர சமைப்புச் சட்டம் பற்றி அவர்கள் ஏற்படுத்தியிருக்கிற ஒரு கேள்வியாக இருக்கிற காரணத்தினால் இதைக் குறித்தும் நாம் சிந்திக்க வேண்டும்.

அவர்கள் இரண்டு வகையிலே கருத்துக்களைத் தெரிவித் திருக்கிறார்கள். ஒன்று It seemed as if the entire Assembly was an unlawful Assembly என்று சொல்லியிருக்கிறார்கள். இது மிகுந்த வரம்பு மீறிய, அக்கிரமமான, எல்லா உறுப்பினர்களையும் பாகுபாடு செய் யாமல், இவர் அவர் என்று தகுதியையெல்லாம் அதிலே குறிப்பிட்டுச் சொல்லாமல், எல்லோரையும் ஒட்டுமொத்த மாக, தாங்கள் உள்ளிட்டு, Members of an unlawful Assembly என்ற ஒரு கருத்தை, திரு. சி. சுப்பிரமணியம் போன்ற ஒரு பழுத்த அரசியல்வாதி, நல்ல நிர்வாகி, நன்கு விவேகமாகச் சிந்தித்துச் செயல்படக்கூடிய ஒருவர் சொல்லியிருப்பது சாதாரணமாக விட்டுவிடக்கூடிய ஒன்று அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். The entire Assembly was an unlawful Assembly என்று சொல்லியிருக்கிறார்கள் என்றால் என்னைக்கூட, தனிப்பட்ட முறையிலே பாதிக்கிறது. இந்த மன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அது பாதிக்கிறது. Members of an unlawful Assembly என்று சொன்னால் என்ன பொருள் ? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசமைப்புச் சட்டம் உருவாக்கி யிருக்கிற ஒரு அரசமைப்புச் சட்ட நிறுவனத்தை, அதிலே என்ன நடந்தது என்பது வேறு பிரச்சினை, அதைக் கவ னிக்க வேண்டிய முழுப் பொறுப்பும், கட்டாயமும், கடமையும் அவைத் தலைவர் மூலமாகத்தான் அது செய்யப்பட வேண்டு மென்பது நம்முடைய மரபாக இருக்கிறபோது, Entire Assembly Unlawful Assembly என்று சொல்லியிருப்பது



Sir, it should be taken due cognisance by the Chair and by the Assembly and institute such action or actions as are essential and desirable under the circumstances, however high he may be, however eminent he may be; however much experienced he may be, it is for this House to decide and to announce such decision or to award such punishment or punishments as are essential. I claim and I demand from the Chairman, that as a Member of this house, I am also a part of this House. According to Mr. C. Subramaniam's opinion this House was an unlawful Assembly. I am a member of this House, of this Assembly. I dispute and I contradict and I challenge Mr. C. Subramaniam on this. It is for you Mr. Speaker to safeguard the dignity and decorum of this House, both individual dignity and collective dignities of this House. I have got every right to claim it from the Chair, because I am also a Member of this House. I have got every right to claim from the Chair that my rights Member's right should be scrupulously and zealously safeguarded.

ஆகவே இது ஒரு குற்றம். இரண்டாவது, சபாநாயகருடைய சில அறிவிப்புகளை பற்றியும் அவர் தன்னுடைய கருத்துக் களைத் தெரிவித்து இருக்கிறார். ஒன்று இந்த அவை முழுவதும் unlawful Assembly என்று சொல்லியிருப் பது, அது ஒரு மகத்தான குற்றம். இரண்டாவது, தங்க ளுடைய தீர்ப்பை அவர் அப்படிச் சொல்வதற்கு உரிமை இல்லை என்று சொல்லியிருக்கிறார்.

He has no right to say like that. I want to know from the Legal luminaries—he is also an Advocate—in what capacity has questioned or adjudged the decision of the Speaker of the House. How can he sit over the judgement of the Hon. Speaker, who for all practical purposes represents the arpirations of the Members of the House.

உங்களுடைய டெசிஷனை சொல்ல உங்களுக்கு உரிமை இல் லையென்று சொல்லப்பட்டிருக்கிறது. நாங்கள் உங்களுக்கு இதனைத் தெரிவித்துக் கொள்கிறோம். இங்கே இரண்டு விதமான கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கிறது. ஒன்று இந்த அவை unlawful Assembly என்று சொல்லப்பட் டிருப்பது. இரண்டாவது சில குறிப்பிட்ட விஷயங்கள் மீது தீர்ப்பு சொலல சபாநாயகருக்கு தகுதி இல்லை, தடுப் பதற்கு உரிமை இல்லை என்று கருத்து சொல்லப்பட்டிருக் கிறது. இந்த இரண்டு கருத்துக்களும் மிகப்பெரிய பாதக மான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒன்று. அதே நேரத்தில் நான் ஒப்புக்கொள்கிறேன். இங்கே வெளிப்படை யாகத் தான் 'டிபேட்ஸ்' நடைபெற வேண்டும். அதை fair Comments என்ற அளவிற்கு நம்முடைய தீர்ப் புகள், நம்முடைய விவாதங்கள் விமர்சனம் செய்யப்படலாம். ஆனால் இப்போது எழுந்திருப்பது வெறும் விமர்சனம் அல்ல. fair comments அல்ல

(Interruption)

I do not know how Mr. So and so is interested. This will have far-reaching constitutional implications. This has taken place and it will have grave constitutional crisis which has been created by some person outside the Hall of this House. If somebody takes cognisance of this House, it is a serious matter which has to be discussed. He has given his opinion. According to my opinion, the authority of the Chair has been challenged. He has challenged the constitutional sovereign authority of the House. We represent our aspirations through the medium of Hon. Speaker. There fore, I would like to get a clear verdict from the Chair on this point.

திரு. கோ. பூவாரகன் : மாண்புமிகு சட்டப்பேரவைத்
தலைவர் அவர்களே, இன்றையதினம் வெளியே நம்முடைய
சட்டமன்றத்தில் 25-ம் தேதி நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி
ஒரு மூவர் குழு விசாரித்து அவர்கள் தீர்ப்பு எழுதுவதாக
இருக்கிறார்கள். இந்த மன்றத்தில் குறிப்பாக இரண்டு விஷ
யங்களை அவர்கள் இன்றையதினம் வெளியே செய்திகளாக
அறிவித்து இருக்கிறார்கள். சட்டம் படித்தவர்கள், இந்த
சட்டமன்றத்தில் பணியாற்றியவர்கள், பாராளுமன்றத்தில்
இருந்தவர்கள், பல பொறுப்புகளை வகித்தவர்கள், பொறுப்
புகள் என்னவென்று நன்கு உணர்ந்தவர்கள், சட்டமன்ற
சபாநாயகர் அவர்கள் ஒரு தீர்ப்பை அறிவித்து விட்ட பிறகு
அவர்கள் அதைச் சொல்வதற்கு— அதாவது சொல்வதற்கு
அருகதை இல்லையென்று எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.
சட்டமன்றத்தில் அமைச்சர்கள் கூட சில சமயங்களில் நாங்கள்
கேள்விகளை எழுப்புகிறபோது, இது பொது நன்மைக்கு
உகந்தது அல்ல என்று சொல்லி, அவற்றை நாங்கள் வெளி
யிடுவதற்கு இல்லையென்று சொல்லிவிடுகிறார்கள்.

அப்படிப் பார்க்கின்றபோது, இது பொது நன்மைக்கு உகந்தது
இல்லை என்று சொன்னால், வெளியிலே இந்த மாதிரி ஒரு
குழு போட்டு, இதை எல்லாம் நீங்கள் வெளியிடவேண்டும்
என்று சொல்வதற்கு வெளியிலே இருப்பவர்களுக்கு யாருக்கும்
அதிகாரம் இல்லை. சட்டமன்ற சபாநாயகர் அவர்கள்
அந்தப் படங்களை வெளியிடவேண்டாம் என்று கேட்டுக்
கொள்வதற்கு அவர்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்
கிறார்கள். அப்படி என்று சொன்னால், சில சமயங்களிலே
பொறுப்புள்ள உறுப்பினர்கள் சொல்லுகின்ற வார்த்தைகளை
நீக்கிவிடவேண்டும். அவைகளை பிரசுரிக்கக்கூடாது என்று
சொல்கிறீர்கள். வெளியிலே இருப்பவர்கள் இதை எல்லாம்
வெளியிட்டால் எங்களுக்கு படிப்பதற்கு சுவையாக இருக்கும்,
கிளுகிளுப்பாக இருக்கும், அதையெல்லாம் கூட ஏன் நீங்கள்
வெளியிடக் கூடாது, அதை ஏன் நீங்கள் தடை செய்கிறீர்கள்



என்று கேட்கக்கூட நாளைக்கு வேறு ஒரு குழு அமைக்கக்
கூடும். ஆனால் இவ்வாறு எல்லாம் குழு அமைத்து, அதிலே
சட்டமன்றத்தில் நடக்கின்ற அந்த நடவடிக்கைகளை எல்லாம்
அவர்கள் பரிசீலனை செய்து, அவர்கள் ஒரு தீர்ப்பு வழங்கி,
அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொன்னால்,
இந்த மூவர் குழுவையே ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஏற்பாடு
செய்து, சட்டமன்றமே வேண்டாம், நிதிநிலை அறிக்கை
எல்லாம் அவர்களே ஏற்பாடு செய்து கொள்ளலாம்,
சட்டங்களை அவர்களே இயற்றிக் கொள்ளலாம், அவர்களே
ஒரு தீர்ப்பை எழுதி வெளியிட்டு விடலாம் என்று சொல்லக்
கூடிய நிலைமை வரலாம். இவர்கள் எல்லாம் சட்டத்தை
உருவாக்கக்கூடிய பொறுப்பிலே இருந்தவர்கள். இவ்வாறு
ஒன்று செய்து, இதுமாதிரி ஏதாவது தவறு நடந்தால், வெளி
யிலே செய்து கொள்ளலாம், சட்டமன்றத்தைக் கலைத்து
விடலாம் செலவு மிச்சம், விவாத நேரங்கள் மிச்சம் என்று
எல்லாம் சொல்லிக் கொள்ள முடியும். எனவே இதையெல்
லாம் தவிர்க்கக்கூடிய வகையில், அன்றையதினம் இந்தச்
சட்டமன்றத்திலே நடந்த நிகழ்ச்சியை விவாதிப்பதற்கு வெளி
யிலே இருப்பவர்களுக்கு உரிமையோவேறு முறையோ ஒன்றும்
இல்லை. அவர்கள் ஒன்று சொல்கிறார்கள், கொலை நடந்
தால்கூட நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா என்று
கேட்கிறார்கள். எங்காவது கொலை நடந்தால், மூவர் குழு
போட்டு, அவர்கள் கேசை ரிஜிஸ்தர் செய்து, நடக்கின்ற
முறை இருக்கிறதா? அவர்கள் எல்லாம் வழக்கறிஞர்கள்,
கிரிமினில் வழக்கறிஞர்கள் ஒரு கொலை நடந்துவிட்ட
பிறகு, எங்கே நடந்தாலும் சரி சட்டமன்றத்திலே
நடந்தாலும் சரி, வெளியிலே நடந்தாலும் சரி, இந்த
மூவர் குழு போட்டு, அவர்களே கேசை ரிஜிஸ்தர்
செய்து கோர்ட்டுக்கு அனுப்பாமல் தீர்ப்பை வழங்கியிருக்
கிறார்களா? அதற்கு என்று தனி அதிகாரம் இருக்கிறது.
எது நடந்தாலும், ஒரு முறை இருக்கிறது. அதை விட்டுவிட்டு,
கொலை நடந்தாலும் நாங்கள் பார்த்துக்கொண்டு இருக்க
முடியுமா என்று சொல்கிறார்கள். **
(கூச்சல்-குழப்பம்).

(முற்பகல் 10-20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் உட்
காருங்கள். (குறுக்கீடுகள்). எல்லோரும் உட்காருங்கள்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்
களே, இதுபோன்ற அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்து
பேசும்போது, சம்பந்தப்பட்ட அந்தக் கருத்துக்களை, எப்படி
அவையினுடைய உரிமை மீறப்படுகிறது என்ற அந்தக் கருத்
துக்களை மாத்திரம் பேசினால் நன்றாக இருக்கும். அதற்கான
உள்நோக்கங்கள் கற்பிக்கப்படும்போது, இதுபோன்ற எதிர்ப்பு

கள் நிச்சயமாக வருவது இயல்புதான். எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் ** போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம். (குறுக்கீடு) அதுதான் *** நீக்கிவிடவேண்டும் என்று சொல்லக்கூடாது என்பதற்காக இதைச் சொல்லவில்லை நான், * *

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : திரு பூவராகன் அவர்கள் சொன்னதில் ஒன்றும் தப்பில்லை. நடந்ததைச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * என்ற பகுதி அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. உறுப்பினர்கள் ஒன்றைக் கவனிக்கவேண்டும். ஒரு செய்தியை என்னுடைய கவனத்திற்குக்கொண்டு வருவதற்காகத்தான் நீங்கள் பேசவேண்டுமே தவிர, அதிலே ஒரு நீண்ட உரையை எடுத்துக்கொண்டு பேசுவது பொருந்தாது. நீங்கள் முடித்தால், நான் அடுத்த செய்திக்குப் போக முடியும்.

திரு. கோ. பூவராகன் : சுருக்கமாக நான் சொல்லி முடித்து விடுகிறேன். இந்த நிகழ்ச்சி நடந்தது சென்ற மார்ச் 25-ம் தேதி. ஒரு மாதம் ஆகிவிட்டது. இப்போது திடீரென்று ஒரு ஞானோதயம் ஏற்பட்டு ஒரு குழு வந்ததற்குக் காரணம் ஒருவேளை * * (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து செய்தியை மட்டும் சொல்லி முடிக்கவேண்டும். (கூச்சல்-குழப்பம்).

திரு. கோ. பூவராகன் : நீங்கள் இதில் ஆத்திரப்படுவதற்கு ஒன்றும் அவசியம் இல்லை. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து தொடர்புடைய செய்தியை மட்டும் கவனப்படுத்தினால் தான் நான் தொடர்ந்து பேச அனுமதி அளிப்பேன். இல்லாவிட்டால் நான் அடுத்த அலுவலுக்குப் போகவேண்டியதாக இருக்கும். (கூச்சல்-குழப்பம்).

திரு. மா. சுந்தரதாஸ் : You are insinuating others. I am also a lawyer.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



(கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோருமே உட்காருங்கள். இல்லாவிட்டால் நான் அவையை ஒத்திவைத்து விட்டுப் போவேன். உட்காருங்கள் எல்லோரும. அடுத்து திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம். (கூச்சல்-குழப்பம்).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்..... (கூச்சல்-குழப்பம்).

திரு. எம். அப்துல் லத்தீப் : * * (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது எல்லோரும் உட்கார முடியுமா, முடியாதா ? எல்லோரும் உட்காருங்கள். நான்தான் எழுந்து நிற்கிறேனே.

திரு. லத்தீப் அவர்கள் உறுப்பினர் அவர்களை ஒருமையிட்டுக் கூறிய பகுதி அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) மறுபடியும் திரும்பப் பேசக் கூடாது.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வரம்பு மீறிப் போகவில்லை. ஏனென்றால் இந்த மூவர் குழுவிலே பத்திரிகை நிருபர்கள் கேட்டிருக்கிறார்கள். இந்த மன்றத்திலே நடந்த நிகழ்ச்சிகளை மட்டும் விசாரணை செய்வதாக இருக்கிறார்களா, இல்லையென்றால் நம்முடைய நாட்டிலே, இந்தியா முழுமையிலும் நடந்த நிகழ்ச்சிகளை பற்றியெல்லாம் விவாதம் நடந்திருக்கின்றனவே, அதையும் விசாரணை செய்வதாக இருக்கிறார்களா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். எல்லாவற்றையும் சேர்த்து மொத்தமாக நாங்கள் விசாரணை செய்வதாக இருக்கிறோம் என்று பதில் வந்திருப்பதாலே நான் டில்லியிலே நடந்த நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டேனே தவிர, வேறு ஒன்றுமில்லை என்று இந்தச் சமயத்தில் நான் சொல்லிக்கொண்டு, இவ்வாறு நம்முடைய மன்ற நடவடிக்கைகளில் வெளியார் தலையிடுவது என்று சொன்னால், நாம் ஒரு நிகழ்ச்சியையும் தொடர்ந்து நடத்தமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். அதை உணர்ந்து மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். எங்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கவேண்டும். ஏனென்றால் எல்லோரும சேர்ந்து, உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று, எல்லோரும் கலாட்டா செய்கிறார்கள். இந்த மன்றமே கலாட்டா செய்கின்ற மன்றம் போல் வெளியிலே நிலவுகின்ற ஒரு சூழ்நிலையில் நீங்கள் தக்க நடவடிக்கை எடுத்து, அதற்குத் தகுந்த பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவை தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியவர்கள் தங்கள் தீர்ப்புக்கு எதிராக வெளியே ஏதோ விசாரணை செய்வதாகச் சொன்னார்கள். உங்களுடைய தீர்ப்பை நாங்கள் ஏற்றுக்கொண்டோம். சட்டமன்றத்திலே நடைபெற்ற சம்பவங்களை, அந்தப் படங்களை வெளியிடக் கூடாது என்று நீங்கள் ஆணை பிறப்பித்திருக்கிறீர்கள். ஆனால் சில நாட்களுக்கு முன்னால் சென்னையிலே நடைபெற்ற ஒரு கூட்டத்திலே திராவிடக் கழகத் தலைவர் வீரமணி அவர்கள் சட்டமன்றத்திலே நடைபெற்ற சம்பவங்கள் என்று கூறிக் கொண்டு, சில படங்களை வெளியிட்டு, இந்தப் படங்கள் எல்லாம் சட்டமன்றத்திலே எடுக்கப்பட்டவை, எனக்கு இந்தச் சட்டமன்றத்திலே யார் இந்தப் படங்களை எடுத்தார்களோ, அவர்கள் கொண்டுவந்து கொடுத்திருக்கிறார்கள், தைரியம் இருந்தால் என் மீது நடவடிக்கை எடுக்கட்டும் என்று பேசி யிருக்கிறார்கள். எனவே அது போன்ற விஷயங்களையும் நீங்கள் கருத்திலே கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதுபோன்று நீங்கள் தீர்ப்பு அளித்ததற்குப் பின்னாலும் அமைச்சர்கள் வெளியிலே சட்டமன்றத்திலே நடந்ததைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக முதலமைச்சர் அவர்களே பேசிக் கொண்டிருக்கிறார்கள். இன்றும் ஒரு அமைச்சர் ஒரு படி மேலே போய், தன்னை முதலமைச்சர் அவர்கள் தான் தூண்டி விட்டார், எனவே தான் நான் அப்படி ஆடினேன் என்று ஒரு அமைச்சர் குறிப் பாக பல இடங்களில் பேசியிருக்கிறார். என்னைத் தாக்க வாரங்கூடா என்று சொன்னதற்குப் பிறகு தான் நான் மீண்டும் கோபமாக, ஆத்திரமாகப் போனேன் என்று ஒரு அமைச்சர் பேசியிருக்கிறார். அதேபோன்று இன்னொரு அமைச்சர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் மட்டும் நீங்கள் சட்ட விதிகளின்படி நடங்கள் என்று சபாநாயகருக்குச் சொல்லி இருப்பாரேயானால், எதிர்க்கட்சியினுடைய தலைவர் ஜெயலலிதா அவர்களுடைய எம். எல். ஏ. பதவி பறிபோயிருக் கும், கருணையோடு அவர்கள் நடந்து கொண்ட காரணத்தால் தான் இன்றையதினம் அவர்கள் எம்.எல்.ஏ.வாக நடிக்கிறார். எதிர்க்கட்சித் தலைவியாக நீடிக்கிறார் என்று பேசியிருக்கிறார். அப்படி என்று சொன்னால், நீங்கள் அளித்த தீர்ப்பு சட்ட விதிகளுக்கு, தமிழ்நாடு சட்டமன்ற விதிகளுக்கு மாறானது, புறம்பானது என்று பொருளாகிறது. அதுமட்டுமல்ல, Your ruling is erroneous என்று பகிரங்கமாக உங்கள் மீது ஒரு அமைச்சர் குற்றம் சாட்டிப் பேசியிருக்கிறாரே, அது முறைதானா, அது சபை உரிமை மீறலில் வராதா ? சபாநாயகர் தீர்ப்பை சபையிலே அல்ல, சபைக்கு வெளியே நின்று, சட்டமன்றத்திலே விதிகளுக்கு மாறாக சபாநாயகர் தீர்ப்பு அளித்திருக்கிறார் என்று சொல் வது சரியாகுமா என்று நான் அறிந்து கொள்ள விரும்பு கிறேன்.



அதேபோன்று இங்கே சென்ற ஆண்டு நடைபெற்ற ஒரு சம்பவத்திலே அடிபட்ட எங்களுடைய கட்சியைச் சார்ந்த உறுப் பினர் திருமதி யசோதா படத்தைப் போட்டு 10 போஸ்டர்கள் அடித்து ஒட்டியிருந்தார்கள். அந்த போஸ்டர் எந்த நிமி ஷத்திலே வெளியே ஒட்டப்படுகிறதோ, அதே நேரத்திலே இரண்டே இரண்டு பத்திரிகைகளில் மட்டும் அந்த போஸ் டரில் என்ன வாசகம் இருந்ததோ. அதே வாசகத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். (குறுக்கீடு).

**மாண்மிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பூவராகன் அவர்கள் பேசும்போது எப்படித் தொடர்பில்லாது பேசக் கூடாது என்று நான் சொன்னேனோ, அதே நிலையில்தான் நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசும்போதும் தொடர்பில்லாத விஷயத்தைப் பேசுவது குறித்து, என்னுடைய விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30.)

இப்பொழுது பிரச்சினையே திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு குழுவைப் போட்டு விசாரணை நடப்பது என்பது பற்றித்தான் பேசப்பட்டிருக்கிறது. அதை விட்டு விட்டு வேறு பல பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருந் தால் எப்படி அதோடு அது சம்பந்தப்பட்டதாகும் என்று தெரியவில்லை.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** சட்டமன்றத்திற் குள்ளே நடைபெற்ற சம்பவங்கள் அதன் தொடர்பாக நடை பெற்ற சம்பவங்களைப் பற்றி மட்டுமே குறிப்பிடுகிறேனே தவிர வேறு எதைப்பற்றியும் நான் குறிப்பிடவில்லை. திருமதி யசோதா அவர்கள் இதைப் பற்றி மிகத் தெளிவாகச் சொல்லி யிருக்கிறார்கள். என்னுடைய பெயரில் எந்த மன்றமும் கிடையாது என்று......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த "Subject" -க்கு வரலாம். திரு. சி. சுப்பிரமணியம் குழு சம்பந்தப் பட்ட "Subject"-க்கு வர வேண்டும்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் ;** திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் எந்த நிலையிலே இந்தக் கமிட்டியை அறிவித்திருக் கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. திரு. பூவராகனைப் பொறுத்தவரையில் திரு. பூவராகனுக்கு அவர் அரசியல் வழிகாட்டியாக இருந்தவர். இன்னும் சொல்லப்போனால் அரசியல் சட்ட நிர்ணய சபையிலே உறுப்பினராக இருந்த வர். சபாநாயகருக்கு என்று பல பொறுப்புகள் இருக்கின்றன.

அவர்கள் நிச்சயமாக சபையிலே உள்ள இரண்டு தரப்பிலேயும் உள்ள உறுப்பினர்கள் சுமுகமாகச் செயல்படுவதற்கு வழி காண முடியும். வழி காண வேண்டுமென்று 'மே'ஸ் பார்லிமெண்டரி பிராக்டிஸ் பற்றி குறிப்பிட்டார்கள். அதனை முன்னாள் சபாநாயகர் அவர்கள் அது போல் கேட்டுக் கொள்கிறேன். எனவே நீங்கள் அழைத்துப் பேசி சபையிலே சுமுகமான உறவோடு அவை நடவடிக்கைகள் நடைபெற வழி காண வேண்டுமே தவிர, தினசரி இந்தப் பிரச்சினையை எழுப்ப அனுமதிப்பது முறையல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. ரமணி, (குறுக்கீடு) உங்களுடைய கட்சியின் சார்பிலே கொறடா அவர்கள் பேசி விட்டார் என்றால் அதோடு நிறுத்திவிட வேண்டும். இது ''Debate'' அல்ல.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, இந்தச் செய்தியை பத்திரிகையில் படிக்கும்போது உண்மையாகவே வேதனைக்குரிய செய்தியாக அதை நான் படிக்க வேண்டியிருந்தது. மதிப்பிற்குரிய முக்கியமான தலைவர்கள். பாராளுமன்றத்திலே அரசியல் நிர்ணய சபையிலே, அமைச்சரவையிலே அமைச்சர்களாக இருந்தவர்கள் எல்லாம் இதற்கு பொறுப்பேற்றிருக்கிறார்கள். நீதி மன்றத்திலே நீதிபதியாக இருந்தவர், அதே போன்று அரசாங்கத்திலே முக்கியமான உத்தியோகப் பொறுப்பிலே இருந்தவர்கள் ஆகியவர்களைக் கொண்டு அப்படிப்பட்ட 3 முக்கியஸ்தர்களைக் கொண்டு ஒரு கமிட்டி வெளியே அமைக்கப் பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டி ஒரு சூப்பர் பொறுப்பிலே இருக்கிறது. சட்டமன்றத்தினுடைய சகல நடவடிக்கைகளையும் ஆராய்வதுதான் அதனுடைய குறிக்கோளும் கடமையுமாக இருக்கின்றன.

சட்டமன்றத்திலே நடந்திருக்கும்படியான பல நடவடிக்கைகளும் சட்ட விரோதமானது, இது சட்டமன்றத்திலே இருக்கிற அத்தனை உறுப்பினர்களையும், உறுப்பினர்கள் மட்டுமல்ல பார்வையாளர்களாக வந்திருந்த அவர்கள் அத்தனை பேரும் இவ்வளவு சட்ட விரோதமாக நடந்தது பற்றி கவனிக்காமல் அதை நடத்துவதற்கு உறுதுணையாக இருந்து சட்டமும், நீதியும் ஜனநாயகமும் நியாயமும் அல்லாத ஒரு சபையாக ஆக்கப்பட்டது என்று அர்த்தம் தொனிக்கிற தன்மையிலே தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அவைகளை பரிசீலனை பண்ணுவதற்குத்தான் இந்த வெளி கமிட்டி அமைக் கப்பட்டிருக்கிறது. அப்படியானால் இந்த அவையிலே இருக்கும்படியான உறுப்பினர்கள் அத்தனை பேருடைய உரிமையை முழுமையாக பாதிக்கக்கூடிய மீறக்கூடிய ஒரு செயல் இது. இந்த நடவடிக்கை மீது திட்டவட்டமாக என்ன செய்வது, இப்படி வரக்கூடாது என்பதற்கு என்ன செய்வது, அதற்கு



நாம் என்ன சமாதானம் காணுவது என்பதுதான் பிரச்சினை. அதோடு வேறு எந்தப் பிரச்சினையையும் இணைத்து குழப்பி கவனத்தை வேறு திசை திருப்பி போவது தவறு. அப்படிச் செய்யக்கூடாது. ஆனால் மதிப்பிற்குரிய நம்முடைய திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுடைய பேச்சை நான் முழுவதுமாக பத்திரிகையில் பார்த்தேன். திரு. கார்த்திகேயன் அவர்கள், திரு. வெங்கடநாராயணன் அவர்கள், திரு கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள், இவர்கள் 3 பேரும் சேர்ந்தது இந்தக் கமிட்டி.

இந்தக் கமிட்டிக்கு என்ன கடமை, என்ன செய்யப்போகிறார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால் இந்த அவையிலே இருக்கும்படியான அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களையும் விசாரித்து அன்றைக்கு இந்த அவை மாடத்திலே வந்திருந்த பார்வையாளர்களாக இருந்தவர்கள் அத்தனை பேரையும் விசாரிக்கும் என்று சொல்லுகிறார்கள். ஆக இந்த அவைக்குள்ளே நடைபெற்றது பற்றி விசாரிக்கும் ஒரு சூப்பர் கமிட்டியாக இந்தக் கமிட்டியை அமைத்திருக்கிறார்கள். இந்த அவையினுடைய நடவடிக்கை பற்றி பேசுவதற்காக என்றால், அதுதான் திட்டவட்டமாக இந்த அவையினுடைய உரிமையை மீறி, பாதித்து தவறான ஒரு நடைமுறைக்கு கொண்டு செல்கிறது. இது நியாயம் அல்ல, நல்லது அல்ல. இதை பூரணமாக நாம் பரிசீலிக்க வேண்டி இருக்கிறது. இந்த அவையினுடைய உரிமையை மீறுவதற்கு யாருக்கும் உரிமை இல்லை. பாராளுமன்றத்திலே இதைக் கிளப்பியபோது அன்றைக்கு இதே மன்றத்திலே நான் எடுத்துச் சொன்னேன். அங்கே இருக்கிற சபாநாயகர் இந்த அவையிலே நடந்திருக்கின்ற விஷயங்களை அங்கே கிளப்பக்கூடாது என்று திட்டவட்டமாக அதைக் குறிப்பிட்டார். தடுத்தார். அதே மாதிரி இன்னொரு அமைச்சர் அவர்கள், அவரும் அதே மாதிரி தலையிட்டு இந்த விஷயங்களை கிளப்பக்கூடாது என்று தடுத்தார். மாநிலங்களுக்கு இருக்கும்படியான, இந்த அவைகளுக்கு இருக்கும்படியான உரிமைகள் என்ன என்பதைக் கருத்தில் கொண்டு அரசியல் சட்டத்திற்குட்பட்டு நடைமுறைகளுக்கு உட்பட்டு அவர்கள் அந்த மாதிரி தீர்ப்பு அளித்து இருக்கும்போது, இது நடைமுறையாக இருக்கும்போது எப்படி இப்படிப்பட்ட ஒரு சூப்பர் கமிட்டி உருவாகும் என்பது ரொம்ப கவலையோடு கவனிக்க வேண்டிய விஷயம். என்ன உத்தேசத்தோடு காரியம் செய்யப்படுகிறது. இந்த அவை இங்கிருந்து செயல்படுவதை அவர்கள் விரும்பவில்லை என்று சொன்னால் அது அவர்களுடைய சொந்த இஷ்டமாக இருக்கலாம். விருப்பமாக இருக்கலாம். அதை அவர்கள், அவர்களுடைய நெஞ்சுக்குள்ளே வைத்துக்கொண்டு இருக்க வேண்டுமே தவிர, இந்த அவையைக் குறிப்பிட்டுக்காட்டி, இதன்பேரிலே விசாரணை செய்வேன் என்று சொல்வதற்கு எந்த உரிமையும் அவர்களுக்கு கிடையாது. அதற்கு மேல் சபாநாயகர் இந்த அவைக்குள்ளே நடந்திருக்கும் நிகழ்ச்சிகள் முழுவதையும் கண்டு,

தெரிந்து, விவாதத்தையும் கேட்டு அவர் கொடுக்க கூடிய
முடிவுகள், அந்த முடிவுகளைப் பற்றி பல கருத்துக்கள் இருக்
கலாம். அது வேறு விஷயம். ஆனால், சபாநாயகர் என்ற
முறையில் அவர் கொடுத்து இருக்கும்படியான அந்த முடிவை,
அந்த முடிவு அவர் கொடுத்தது தப்பு என்றும் ஒரு தீர்ப்பு
உருவாவதற்கு எந்த நியாயமும் கிடையாது. ஆகவே திட்ட
வட்டமாக இனிமேல் இப்படிப்பட்ட நிலைமை மறுபடியும்
மறுபடியும் உருவாவதற்கு அனுமதிக்கக்கூடாது. இந்த அவை
யினுடைய பரிபூர்ணமான இதனுடைய சுப்ரிமசி அதற்கு
இருக்கும்படியான அதிகாரம், என்ன மேல் அதிகாரம் இருக்கி
றதோ அதற்குமேல் இந்த அவையின் பேரிலே அதிகாரம்
செலுத்துபவர்கள் இருக்க முடியாது. எந்த கமிட்டியும்
அப்படி இருக்க முடியாது. அவர்களுடைய நடவடிக்கையும்
அதற்கு உட்பட்டதாக இருக்க முடியாது. அதை ஒரு சரியான
இடத்திற்கு கொண்டு வருவதற்கு தலைவர் அவர்கள் அந்த
சம்பந்தப்பட்ட பெரியோர்களை நேரில் அழைத்து பேசுவதோ
அல்லது அவர்களிடத்திலே அவர்கள் வெளியிட்டு இருக்கும்படி
யான விவரங்களை எடுத்து பரிசீலித்து அதன் மூலம் ஏதாவது
அவர்களோடு கடிதப் போக்குவரத்து நடத்தியோ, வேறு.
விதத்தில், நேரில் பேசியோ, எந்த முறையில் இதை ஒழுங்க
படுத்தணுமோ, அந்த முறையில் ஒழுங்குபடுத்தி நடவடிக்கை
எடுக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமை ஏற்படக்கூடாது.
மொத்த அவையினுடைய உரிமையையும் மீறக்கூடிய ஒரு
கடுமையான நடவடிக்கையாக இருக்கிறது. இதற்கு இடம்
அளிக்கக்கூடாது என்று கேட்டுக் கொண்டு அதற்கு வேண்டிய
நடவடிக்கைகளை தாங்கள் துவக்க வேண்டும் என்று கோரு
கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சிங்காரம் அவர்கள்
ஒன்றைக் கவனிக்க வேண்டும். இது பொது விவாதம்
அல்ல. ஒரு கட்சியின் சார்பில் ஒருவருக்கு அனுமதி கொடுத்
தால், அடுத்தவர் அமர வேண்டும். பேரவைத் தலைவர்
அனுமதி கொடுக்கவில்லை என்று அன்றைக்கே ஒரு தடவை
அனுமதி கொடுத்த போது தனிப்பட்ட முறையில் நீங்கள் எழுந்து
போனீர்கள். இதுபோன்ற தவறான நடைமுறைகளைக்
கையாள மாட்டீர்கள் என்று கருதுகிறேன். நீங்கள் உட்கார
லாம்.

***திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்
களே, சட்டமன்றம், நாடாளுமன்றங்களுக்கு, சட்டமன்ற
நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சட்டமன்றத்திலோ, நாடாளு
மன்றத்திலோ சில ப்ரிவிலேஜஸ் சலுகைகள் பிரத்யேகமாக
உண்டு என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது
தான். ஆனால், அதே நேரத்திலே அந்த பிரிவிலேஜஸ்,
அந்த வாய்ப்புகள், சலுகைகள், இந்திய தண்டனைச் சட்டம்
இந்தியன் பீனல் கோடோ அல்லது இந்திய அரசியல்
சட்டமோ கான்ஸ்டிடியுஷனோ இந்த இரண்டிலேயும் இருந்து



முழுமையான சலுகையோ பிரத்யேக உரிமையோ பெற்ற
தாக நாடாளுமன்றமோ அல்லது சட்டமன்றமோ இருக்க
முடியாது. எனவே, வெளியே இந்திய தண்டனைச் சட்டத்தின்
கீழே ஒரு குற்றம் நடக்கின்ற போது அது எப்படி காவல்தான்
துறையினரால் பதிவு செய்யப்படவேண்டுமோ அது போலத்
திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல
செக்ஷன் 302, 307, 354 அது மாதிரி இருக்கின்ற இந்திய
தண்டனைச் சட்டம் இந்தியன் பீனல் கோடிலே அட்ரேக்ட்
ஆகின்ற அந்தக் குற்றங்கள் நடக்குமேயானால் அதுவும் அந்தக்
குற்றங்கள் காக்னிசபிள் அஃபென்ஸ் ஆக இருக்கின்ற போது,
அதாவது போலீசே தானே வழக்கு பதிவு செய்யலாம் என்ற
நிலைக்குரிய குற்றங்களாக இருக்கின்ற போது, ஒன்று காவல்
துறை தானாகவே அந்தக் குற்றங்களைப் பதிவு செய்யலாம்.
அல்லது சபாநாயகர் பதிவு செய்யச் சொல்லி இருக்கலாம்.
எனவே இப்படி இவற்றின் கீழே அவை வருவதறகு வாய்ப்பு
இருக்கிறது. அதற்கு முழுவதுமான விதி விலக்கு இருப்ப
தாகச் சொல்ல முடியாது. சட்டமன்றத்திலே 25-ம் தேதி
நடந்த சம்பவங்கள் வேதனைக்குரியவை. இங்கே உள்ளே
இருககின்ற மன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல நாட்டு மக்களும்
கவலை தெரிவிக்கக்கூடிய அசம்பாவித நிகழ்ச்சிகள்.

---

(முற்பகல் 10-40)

இதிலே மேற்கொண்டு ஒருவிதமான நடவடிக்கையும் இல்லாத
காரணத்தினாலேதான், இப்படிப் பலபேர் முன் வந்து,
நாங்களே விசாரிக்கிறோம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு
திரு. சி. சுப்பிரமணியம் போன்றவர்களும், மற்றவர்களும்
குழு போட வேண்டிய சூழ்நிலை வெளியே உருவாகியிருக்கிறது.
எனவே, பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உத்தர
விட்டிருப்பதை மாற்றி உண்மையிலேயே சட்டமன்றத்திலே
யார் தவறு செய்திருந்தாலும் சரி, அவர்கள் மீது நடவடிக்கை
எடுக்கிற விதத்திலே, இங்கே எடுக்கப்பட்ட புகைப்படங்களை
யும், டி. வி. போன்றவற்றையும் வெளியிடுவதற்கு நீங்கள்
அனுமதிக்கலாம் என்பது ஒன்று. இரண்டாவது, இங்கேயே
எதிர்க்கட்சித் தலைவர்கள், பத்திரிக்கையாளர்கள் ஆகியோ
ரைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து, வெளியே குழுக்களுக்கு
அவசியம் இல்லாமல், நீங்களேகூட, இங்கே இருக்கிற எதிர்க்
கட்சித் தலைவர்கள், மற்றும் மேலே உட்கார்ந்து பார்த்த
பத்திரிக்கையாளர்கள் குழுவினருக்கு புகைப்படங்கள், டி. வி.
தமிழ்நாடு செய்தித்துறை மூலமாக எடுத்து படங்களைக் காட்டி
இந்தப் பிரச்சினைக்கு நீங்கள் ஏதாவது பரிகாரம் காண முயற்
சிப்பீர்களேயானால், வெளியே இதுபோன்ற அறிவிப்புகள்
வருவது குறையும். அதற்குப் பேரவைத் தலைவர் அவர்கள்
முயற்சிக்கவேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்து நான் விரிவாக எதுவும் பேச விரும்பவில்லை. ஒரு சட்ட நுணுக்கத்தின் அடிப்படையிலே ஆதாரமாக ஒன்றைத் தங்களுக்கு, ஏதாவது முடிவு எடுப்பதற்கு அதற்கு உதவிகரமாக இருக்கக்கூடுமோ என்கிற எண்ணத்தோடு தங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன். 1988 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் இந்த மாமன்றத்திலே நடைபெற்ற சில சம்பவங்களைக் குறித்து, மத்தியிலே பாராளுமன்றத்திலே உரையாற்றிய மத்திய இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் ஒரு பதிலைச் சொன்னார்கள். அந்தப் பதில் எப்போது சொல்லப்பட்டதென்றால், 'பிரசிடென்ட் ரூல்' எக்ஸ்டென்ஷன் செய்யவேண்டும் என்பதற்காகத் தீர்மானம் வந்தபோது சொல்லப்பட்டது.

While replying to the debate in the Lok Sabha recently on the extension of President's Rule in Tamil Nadu, the Honourable Minister of State for Public Grievances and Pension has made a statement that the matter will be investigated by the Police and the individual found guilty proceeded against.

அந்தப் பதில் அளிக்கப்பட்ட பிறகு இது குறித்து தமிழ்நாடு அரசும், அன்றைக்கு இருந்த சபாநாயகரும் ஆராய்ந்தார்

Both the Speaker of the Tamil Nadu Legislative Assembly and the Legislative Assembly Secretary indicated that the Speaker does not propose to permit a Police investigation into the matter. Considering the importance of the issues involved in this case we may perhaps seek the opinion of the Advocate General also in the matter.

என்று அன்றைக்கு இருந்த அட்வகேட்-ஜெனரலுடைய கருத்தை அது குறித்துக்கேட்டார்கள். அவருடைய கருத்து முழுமையும் படிக்க விரும்பவில்லை. ஒரு நீண்ட நெடிய கடிதம் அது. அதிலே தொடக்கத்திலே, அட்வகேட்-ஜெனரல் அவர்கள்

I have perused the papers என்று தொடங்கி The question that has been posed for my opinion is as to whether the police would have jurisdiction to investigate into the incidents which took place in the Tamil NaduLagislative Assembly Hall on 28-1-1988 within the precincts of the Legislative Assembly,

என்று கூறிவிட்டு அவர் கடைசியாகச் சொல்கிறார்,

I am of the opinion that the Police have no jurisdiction to investigate into the incidents which took place in the Legislative Assembly Hall on 28-1-1988 என்று அட்வகேட்-ஜெனரல் அப்போது கவர்னர்



ஆட்சியிலே இந்தக் கருத்துத் தருகிறார். அந்தக் கருத்தை
அப்போது இருந்த ஆட்சி ஏற்றுக்கொண்டது. இது கடந்த
காலத்தினுடைய வரலாற்றுப் பகுதியிலே ஒன்று என்பதைத்
தங்களுக்கு, நான் தங்களுடைய தீர்ப்பிற்கு அல்லது தங்களுடைய
முடிவிற்குத் துணையாக இருக்கும் அல்லது இருக்கக்கூடும் என்ற
எண்ணத்தோடு தங்கள் முன் வைக்கின்றேன்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, முதல்வர்
அவர்கள் சொன்ன கருத்தைப் பற்றி நான் அபிப்பிராயம்
சொல்லவில்லை. ஆனால் இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம்
தாங்கள் தீர்வு காண்கின்ற வகையிலே அவைக் குழு ஒன்று போட்டு
விசாரிக்கப்படுமா? 'ஹவுஸ் கமிட்டி' என்று போட்டு விசாரிக்
கப்படுமா என்று இந்தப் பகுதியிலிருந்து எழுப்பிய வினாவிற்கு
மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் பதில் அளித்தால் நலமாக
இருக்கும்.

திரு. சி. கோவிந்தராஜன் : பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன்.
ஒரு கவர்னர் சட்டசபையில் உரையாற்றும்போது, அவரை
சிலர் தாக்க முயற்சிப்பது அல்லது....(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாக மட்டும்
பேச வேண்டும். (குறுக்கீடு) இதில் "Clarincation" இல்லை.

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு கடந்த 5 நாட்கள் விடு
முறையாக விடப்பட்டு அனைவரும் அவரவர் பகுதிகளுக்குச்
சென்று இன்று மீண்டும் சந்தித்து நம்முடைய மானியக் கோரிக்
கைகள் மீது விவாதத்தைத் தொடங்குவதற்கு முன்னால் அண்
மைக் காலத்தில் இநத 5 நாட்களுக்குள் செய்தித்தாளில் வந்த
செய்திகளை அடிப்படையாக வைத்து இந்த அவையினுடைய
உரிமை தனிப்பட்ட சிலரால் பாதிப்பதாகவும் அதே
நேரத்தில் பேரவைத் தலைவருடைய தீர்ப்புகள் குறித்து
திறனாய்வு செய்வதாகவும் அனைவரும் எடுத்து வைத்தீர்கள்.
முதலில் இதில் 3 பகுதிகளை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

வெளியில் பேசப்பட்டு செய்தித்தாளில் வந்தவற்றை மட்டுமே
வைத்துக்கொண்டு நாம் ஒரு முடிவுக்கு வரக்கூடாது என்பது
என்னுடைய முதல் கருத்து. என்றாலும் உறுப்பினர்கள்
இன்று எடுத்து வைத்த கருத்தின் அடிப்படையில் திரு. சி. சுப்பி
ரமணியம் அவர்கள் இதே பேரவையில் கல்வி அமைச்சராக
இருந்தவர்; நிதி அமைச்சராக இருந்தவர்; அதே நேரத்தில்
மாண்புமிகு இராசாசி அவர்கள் அமைச்சரவையில், மாண்புமிகு
காமராசர் அவர்கள் அமைச்சரவையில் இன்னும் தொடர்ந்து
பல்வேறு பதவிகளை வகித்த சிறப்புக்குரியவர், அதே நேரத்தில்
பாராளுமன்றத்திலும் அவர் இந்திய துணைக்கண்டத்தினுடைய
மிகப் பெரிய ஆற்றல் படைத்த ஒரு நிதி அமைச்சராக இருந்து
சிறப்புப்பெற்றவர். எனவே அவரைப் பொறுத்தவரையில்

நாடாளுமன்ற நடைமுறைகள் என்ன, சட்ட மன்ற நடைமுறைகள் என்ன, அதற்கான அதிகாரங்கள் என்ன என்பதை அவர் முற்றிலும் அறிந்துகொண்டவரே தவிர அவற்றைத் தெரிந்து கொள்ளாமல் எதையும் அவர் சொல்லி இருக்க மாட்டார் என்று நான் இன்றைக்கும் நம்புகிறேன். எனவே, நம்முடைய உறுப்பினர்கள் இரண்டு திட்டங்களைச் சொன்னார்கள். ஒன்று அவை உரிமையை மீறி இப்படி ஒரு விசாரணைக் குழுவை அமைப்பது முறையா என்று கேட்டார்கள். அதை நான கவனத்தில் வைத்திருக்கிறேன். மற்றும் ஒன்று, அவரை அழைத்து இது குறித்துப் பேசி முடிவு எடுக்கலாம் என்று உறுப்பினர்கள் சொன்னார்கள். அப்படிச் சொன்ன கருத்தையும் நான் கவனத்தில் வைத்திருக்கிறேன். எனவே இரண்டையும் அடிப்படையாக வைத்து இருக்கிறேன். ஆக, இப்போதைக்கு நான் ஒன்றும் சொல்வதற்கு இல்லை. மேலும் இது பற்றி நான் முழுமையாக ஆராய்ந்து உங்களுக்கு என்னுடைய தீர்ப்பையோ என்னுடைய கருத்தையோ அளிப்பேன் என்பதையும் ஆனால் அதே நேரத்தில் அனைவரும் தெரிந்துகொள்வதற்காக அவையில் இருப்பவர்களும், அவையில் இல்லாத வெளியில் உள்ள மக்கள் அதில் ஆற்றல் பெற்றவர்களா, ஆற்றல் குறைந்தவர்களா, என்று எல்லாம் இல்லாமல் அனைத்துக் குடிமக்களுக்கும் பொருந்துகிறபடி சில செய்திகளை மட்டும் நான் சுட்டிக்காட்டுகிறேன். இது தீர்ப்பு அல்ல; சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமையாகும்.

"No member or officer of the Hoı se should give evidence in any Court of Law in respect of any proceedings of the House or Committees of the House or any other document connected with the proceedings of the House." என்பது 'Practice and Procedure in Parliament' என்ற நூலில் இருக்கிற பகுதி ஆகும். மற்றும் ஒன்று,

"Anything said or done in the House is a matter to be dealt with by the House itself" என்பதும் அதில் இருக்கிற பகுதி ஆகும். மூன்றாவது' "It is also the duty of a Member that he should not give evidence before the other House or a Committee thereof .. etc. without the leave of the House being first obtained. Any neglect or breach of this duty by a Member would be regarded by the House as the contempt of the House."

அடுத்து, "For a speech and action in Parliament, a member is subject to the discipline of the House itself and no proceedings, civil or criminal, can be instituted against him in any Court in respect of the same" என்ற சில பகுதிகளை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உறுப்பினர்களுடைய, இந்த அவையினுடைய சிறப்புக்கும் கண்ணியத்துக்கும் பொருந்துமாறு காலப்போக்கில் மிகச்சிறப்பாக இந்த அவை நடைபெற வேண்டும் என்ற உயர்ந்த ஆர்வத்திற்கு நான் மதிப்பு அளித்து இந்தக் கருத்துக்களையும்



மனதில் வைத்துக்கொண்டு தக்கவாறு நான் செயல்படுவேன் என்று கூறி இது குறித்து நான் மேலும் இப்போது ஒன்றும் சொல்வதற்கு இல்லை என்று மட்டும் தெரிவிப்பதன் வாயிலாக இதற்கு ஒருமுடிவுக்கு வந்து அடுத்த அலுவலுக்குப் போகிறேன்.

**(ஆ) தமிழ்ப்புத்தாண்டு தினத்தன்று பேராவூரணியில் நடைபெற்ற இலவச அரிசி வழங்கும் விழா ஏற்பாடுகள் குறித்து.**

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் அரிசி வழங்குகின்ற விழா வருட பிறப்பு அன்று நடத்துவதற்கு அனைத்து சட்ட மன்ற உறுப்பினர்களும் கட்சி மாறுபாடு இன்றி அனைவரும் அரிசி வழங்குகின்ற விழாவில் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற உத்தரவினை பிறப்பித்து இருப்பதாக இங்கே சொன்னார்கள்.

(முற்பகல் 10-50)

நான் வருடப் பிறப்பன்று காலை, டிரெயின் சற்று தாமதமாகப் போன காரணத்தினால், 9.15 மணிக்கு பேராவூரணி நகரத்திலே இறங்கி, நான் குளிக்காமல் உடனடியாக சைக்கிளை எடுத்துக்கொண்டு அந்த இடத்திற்கு ஓடோடி சென்றேன். அதற்கு முன்னதாகவே 8.30 மணிக்கெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக கட்சிக்காரர்கள் அரிசி வழங்கும் விழாவை நடத்தி விட்டார்கள் என்று கேள்விப்பட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லா இடத்திலும் 8.00 மணிக்குத் தொடங்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் 8.00 மணிக்குத் தொடங்கப்பட்டது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதனால் யார் நடத்தினார்கள் என்பதல்ல, என்ன நேரத்தில் நடத்தினார்கள் என்பதிலும் தவறு ஒன்றும் இல்லை.

**திரு. ஆர். சிங்காரம் :** முன்னதாகவே அரிசி வழங்கி விட்டார்கள். (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் குளித்து விட்டே போய் இருக்கலாம் என்பது என்னுடைய கருத்து (சிரிப்பு).

**திரு. ஆர். சிங்காரம் :** அவசரமாகப் போக வேண்டும், டிலே ஆகக்கூடாது மக்கள் காத்திருப்பார்கள் என்பதற்காகத் தான் நான் அப்படிச் சொன்னேனே தவிர வேறு ஒன்றுமல்ல. அவசர நிமித்தமாக அப்படிச் சென்றேன். அதற்குள்ளாக அங்கே கட்சிக்காரர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து அதிகாரிகளை வற்புறுத்தி, என்ன சட்டமன்ற உறுப்பினர்? நாங்கள் தான் சட்டமன்ற உறுப்பினர்கள் என்று கூறி அரிசி வழங்கி

விட்டார்கள். எனக்கு இழைக்கப்பட்ட அவமானம் மேலும் என்னுடைய தொகுதியில் எல்லா இடங்களிலும் கட்சிக் கொடிகளை அங்காடிகளில் கட்டி அதை ஒரு கட்சி விழாவாகவே நடத்தினார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இதுபோன்று இனிமேல் செய்யாமல் இருக்க ......(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேட்டுக் கொள்கிறீர் கள். (குறுக்கீடு) அது அவைக்குத் தெரியும். தேவைப்படு கின்ற போது பதில் சொல்வார்கள். இதைக் கவன ஈர்ப்பாகவே சிலபேர் கொடுத்து இருக்கிறார்கள். அதுபற்றி வரும்போது கூட விரிவாகப் பேசலாம், உட்காருங்கள்.

திரு. ஆர். சிங்காரம் : மேலும் அந்த அரிசி வழங்கு வதில், 300 ரூபாய்க்கு கீழே உள்ளவர்களுக்கெல்லாம் அரிசி வழங்கப்படும் என்று சொன்னார்கள். 300 ரூபாய்க்கு கீழே உள்ளவர்கள்....(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு மானியத்தின் மீது இது விவாதிக் கப்பட்டவிருக்கிறது. அப்போது நீண்ட நேரம் பேசலாம். உறுப் பினர் குளித்துவிட்டு வந்தே பேசலாம். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உணவு மானியத்தின் மீது பேசும்போது தன்னுடைய உணர்வை முழுமையாகக் காட்டி பேசுமாறு மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரத்திற்கு அனுமதி வழங்கப்படுகிறது. இப்போது திரு. பீட்டர் ஆல்போன்ஸ் பேசு வார்.

(இ) இலங்கைப் பிரச்சினை பற்றிய பேச்சு வார்த்தையை மீண்டும் தொடங்க இருப்பதாக வந்துள்ள செய்தி குறித்து.

*திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புயலுக்கும் இடிக்கும் இடையில் நான் ஒரு இனிப்பான செய்தி வைத்திருக்கிறேன். உலக தமிழ் சமுதாயத்தின் இதயத்தை இறுக்கி நெஞ்சத்தை உலுக்கிக் கொண்டிருந்த ஒரு பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்கிற நம்பிக்கையொளி நேற்றைய முன்தினம் பிறந்திருக்கிறது. இலங்கையிலே போராடிக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகள் இலங்கையினுடைய ஜனாதிபதி பிரேமதாசா அவர்களைச் சந்தித்து பேச்சு வார்த்தையின் மூலம் தீர்வு காண முன்வந்திருப் பது நிச்சயமாக தமிழ்த்தாயின் கண்ணீரைத் துடைக்கும் புதிய முயற்சி என்பதை நாம் எல்லோரும் ஒத்துக் கொள்கிறோம். இந்த மிகப் பெரிய தடைகளையும் சிக்கல்களையும் கடந்து பேச்சு வார்த்தை மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்ற நிலையை உருவாக்கிய மூன்று பெருமைமிகு இந்தியர்களை





நாம் நன்றியோடு நினைத்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கி றோம் மிகுந்த எச்சரிக்கையோடும் மனிதாபிமானத்தோடும் அரசியல் சாதுரியத்தோடும் இலங்கைத் தமிழர்களின் இன்னல் காத்த பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள், இந்தப் பிரச்சினையின் உச்சக் கட்டத்தில் அரசியல் எதிர்ப்புகளுக்கு அப்பாற்பட்டு, பாரதப் பிரதமரோடு இணைந்து நின்ற முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், சிறப்பாக அரசியல் மனமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு குறுகிய அரசி யல் வட்டத்திற்குள் நில்லாமல் மிகுந்த தொலை நோக் கோடு மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு தார்மீக ஆதரவு தந்து இந்தச் சூழ்நிலையை உருவாக்கிய தமிழகத்தி னுடைய இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், இந்த மூன்று இந்தியப்பெருங்குடி மக்களையும் தமிழ்ச் சமுதாயம் நன்றியோடு நினைத்துக் கொள்ளும். நன்றியோடு நினைத்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறது. எனவே அந்தப் பேச்சு வார்த்தை நல்லமுறையில் நடந்து வெற்றியடைய வேண்டு மென்று இந்த அவை தங்கள் மூலமாக இலங்கையினுடைய ஜனாதிபதிக்கும், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களுக்கும் ஒரு வாழ்த்துச் செய்தியை உங்கள் மூலமாக அனுப்ப முடியுமா என்கிற கோரிக்கையை எங்கள் சார்பாக உங்கள் முன் வைக்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றாக இணைத்து நன்றி தெரிவித்ததற்கும், வாழ்த்துத் தெரிவித்ததற்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டு, தங்கள் கோரிக் கையை இந்த அவை கவனத்தில் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்து ஏற்கெனவே நாம் முடிவெடுத்தபடி காலை யிலும் மாலையிலுல் நாம் சட்ட மன்றத்தில் இருக்கப் போகி றோம் என்பதை நான் உங்களுக்கு கவனமூட்டவேண்டும். எனவே இப்போது நேரடியாக அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளைக் குறித்த கவன ஈர்ப்பு எடுத்துக் கொள்ளப்படும்.

(4) கவன ஈர்ப்பு.

(அ) தர்மபுரி மாவட்டம், தொட்டம்பட்டியிலுள்ள "தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் தொழிற்சாலை" மூடப்பெற்றிருப்பது குறித்து.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே; "தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், தொட்டம் பட்டியில் உள்ள தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் தொழிற்சாலை 1983 ஆம் ஆண்டு முதல் மூடிக்கிடப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

அறிக்கை.

**மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் சுமார் 400 தொழிலாளர்கள் பணி செய்தார்கள். பொருளாதார நெருக் கடி காரணமாக இந்நிறுவனம் 15-6-1983-க்குப் பிறகு செயல் படவில்லை. இந்நிறுவனம் யூகோ வங்கிக்கு வட்டியுடன் சேர்த்து சுமார் ரூ. 2 கோடி திருப்பித்தர வேண்டியுள்ளது. இத் தொகையை நிர்வாகம் செலுத்தாததால் அவ்வங்கி நிர்வாகத் தின்மீது உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. மேலும் இந்நிறுவனத்தின் சொத்துக்கள் இவ்வங்கிக்கு அடமானத்தில் ( Hypothecation ) உள்ளது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ( TIIC ) மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ( TIDCO ) ஆகிய நிறுவனங்களுக்கு முறையே ரூ. 27 லட்சமும் ரூ. 80 லட்சமும் வட்டியுடன் சேர்த்துக் கட்ட வேண்டிய பாக்கியுள்ளது. இச்சூழ்நிலையில் 'டிட்கோ' இந்நிறுவனத்தை மே, 1984-ல் அதன் பங்குதாரர்கள் (சுமார் 650 பேர்கள்) வசம் ஒப்படைத்த தாகவும், அதன்பிறகு பங்குதாரர்கள் எவ்வித நடவடிக்கை யும் எடுக்காமல் உள்ளனர் என்று நிர்வாகத்தின் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இந்நிறுவனம் செலுத்த வேண்டிய கடன் தொகை வட்டி யுடன் சேர்த்து ரூ. 3 கோடிக்கு மேல் உள்ளது. இச்சூழ்நிலை யில் தொழிலாளர்கள் கோரியுள்ள வேலை நடைபெறா காலத் திற்கான பணம் வழங்க இயலாது. மீண்டும் ஆலையை இயக்க இயலாத நிலையில் உள்ளதால், தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க இயலவில்லை.

சேலம் தொழிலாளர் துணை துறை ஆணையர், தொழி லாளர்களுக்கு சேர வேண்டிய நட்ட ஈட்டுத்தொகை மற்றும் பணிக்கொடைத் தொகை ஆகியவைகளைப் பெறுவதற்காக, நட்ட ஈட்டுத்தொகையை பொறுத்தவரை 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டப்பிரிவு 33-சி(2)-ன்கீழ் அரசுக்கு மனுச் செய்து கொள்ளுமாறும் பணிக்கொடைக்காக 1972 ஆம் வருட பணிக்கொடைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட அதிகாரியின்முன்பு வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் பெற்றுக் கொள்ளுமாறும்தொழிலாளர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

*திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த ஆலையில் 400 தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்கிறார்கள். அது இன்றைக்கு மூடிக்கிடக்கிறது. 1974 ஆம் ஆண்டு அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த ஆலையை தேசியமயமாக்க வேண்டுமென்று முடிவு



எடுத்தது. மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் மத்திய அரசில் ஜனாதிபதி ஒப்புதல் அளிக்காமையால் தாமதப்பட்டு கைவிடப்பட்டதாக அறிகிறேன். இன்றைக்கு மூடிக்கிடக்கக்கூடிய அந்தத் தொழிற்சாலையை தொழி லாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதகமான நிலைமைகளை எண்ணிப் பார்த்து இடர்பாடுகள் பலவும் இருப்பினும் இந்த அரசு அந்த ஆலையை மீண்டும் திறக்க முயற்சி செய்யுமா என்று அறிய விருப்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் :** தலைவரவர் களே, இந்த ஆலை கடுமையான நிதிப் பற்றாக்குறை காரண மாக 15—6—1983 லிருந்து மூடப்பட்டிருக்கிறது. இதை அரசு ஏற்றுக்கொள்ளுமா என்பது பல்வேறு கூறுபாடுகளை எல் லாம் அலசிப் பார்த்து முடிவெடுக்க வேண்டிய ஒன்று. அரசு ஏற்றுக்கொண்டாலும் ஒரு 'வயபிள் யூனிட்' டாக கொண்டுவர இயலுமா என்று எண்ணிப்பார்த்துதான், இந்தப் பரிசிலனைக் குப் பின்னால் தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

**திரு. எம். அண்ணாமலை :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதாகத் தெரிவித்ததற்கு நன்றி. இந்த ஆலை அந்த மாவட்டத்தில் உள்ளபடியே ஒரு பெரிய உருக்கு திறன் கொண்ட உருக்காலையாக அமைந்தது. மூடப்பட்டபோதும் கூட இருந்த யதார்த்த நிலைமை, நல்ல ஆர்டர் இருந்தது. ஆனால நிர்வாகிகளின் நடவடிக்கையின் காரணமாக, சீர்கேடுகள் உருவாக்கப்பட்டதின் காரணமாக மூடப்பட்டது. அவற்றை எல்லாம் அரசு கருத்தில் கொண்டு பின்தங்கிய இப்பகுதியில் அந்த ஆலையை மீண்டும் செயல் படுத்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய பெரிதும் ஆசைப் படுகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் :** தலைவரவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும்.

**(ஆ) திருவாரூர் மருத்துவமனைக்குத் தண்ணீர் இணைப்பு வழங்கப் பெறாதது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை திரு. வி. தம்புசாமி அவர்களுக்குப் பதிலாக திரு. கோ. வீரையன் அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

**திரு. கோ. வீரையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருவாரூர் அரசு மருத்துவ மனையில் ஆறு ஆண்டுகளாக தண்ணீர் இணைப்பு வழங்கப்பெறாமல் இருப்பது'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாகடர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருவாரூர் நகர விஜயபுரம் மருந்தகத்தில் கண் சிகிச்சை முகாம் தற்போது நடந்து வருகிறது. இரண்டு குழாய்கள் மூலமாக மட்டுமே தண்ணீர் மருத்துவமனைக்கு வருவதால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மேற்கொண்டு அதிக அளவு குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்க அங்குள்ள நகராட்சி அமைப்பினை அணுகி வேண்டுவன செய்ய மாவட்ட மருத்துவ அலுவலர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். மேலும், இங்கு வழங்கப்படும் தண்ணீர் திருவாரூர் நகராட்சி மூலமாக வழங்கப்படுகிறது என்று மருத்துவப் பணி மற்றும் குடும்பநல இயக்குநர் கூறியுள்ளார்.

**திரு. கோ. வீரையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே கூறப்பட்டிருப்பதற் கும் அங்கே இருப்பதற்கும் ஒத்துவரவில்லை. ஆறு ஆண்டு காலமாக அந்த மருத்துவமனைக்கு தண்ணீர் வழங்கப்பட வில்லை. தண்ணீர் வழங்குவதற்கான இணைப்பு வழங்கப் படாமல் இருக்கிறது என்றுதான் மாண்புமிகு அமைச்சர் அவர் களுடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இரண்டு குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்குவதாகச் சொல்லப்பட்டிருப் பது யதார்த்தமான நிலைமை இல்லை. இன்னும் தண்ணீர் வழங்கப்படாமல்தான் இருக்கிறது. இப்போதாவது அந்த மருத்துவமனைக்கு துரிதமாக நகராட்சியிலிருந்து தண்ணீர் இணைப்பு கொடுத்து, தண்ணீர் தட்டுப்பாட்டை, தண்ணீர் இல்லாமையைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** தலைவரவர்களே, அந்த மருத்துவமனைக்கு நகராட்சி மூலமாக குடிநீர் வழங்கப்படுகிறது. அந்த நகராட்சி ஆணையரை அணுகி மேலும் விரைவாகப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று மருத்துவத் துறை இயக்குநர் அந்த ஆணையருக்கு கடிதம் எழுதியிருக்கிறார். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர் களின் கருத்தை மனதில் கொண்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து 1989-90 ஆம் ஆண்டிற்கான மானியகோரிக்கைகள்மீது விவாதமும் வாக் கெடுப்பும். . . .

(3) ஒழுங்குப் பிரச்சினை

மானியக் கோரிக்கைகள் தொடர்பான கொள்கை விளக்கக் குறிப்புகள் முன் கூட்டியே உறுப்பினர்களுக்கும இடைக்காதது குறித்து.

***திரு. சோ. அழகர்சாமி :** சார். பாயின்ட் ஆப் ஆர்டர், மானியக் கோரிக்கைகளை விவாதிப்பதற்காக, உறுப்பினர்கள் சில விவரங்களைத் தெரிந்துகொள்வதற்காக சில குறிப்புகள், பிரசுரங்கள் எல்லாம் கொடுக்கப்படுகின்றன. ஆனால இன் றைக்கு விவாதிக்கப்படவிருக்கிற மானியக் கோரிக்கைகள் பற்றிய குறிப்புகள் எல்லாம் இன்றைக்கு மேசைமேலே வைக்கப் பட்டிருக்கின்றன. சில நேரங்களில இரவு நாங்கள் தூங்கப் போகிறபோதுதான் குறிப்புகள் வந்து சேருகின்றன. ஆகவே, அந்த விவரங்களை முழுமையாக நாங்கள் படித்து, தெரிந்து கொள்ள வாய்ப்பு இலலாமல் போய்விடுகிறது. ஆகையால் சில தினங்களுககு முன்பு அல்லது இரு தினங்களுக்கு முன்பா வது குறிப்புகள் கிடைக்க ஏறபாடு செய்யப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது ஒழுங்குப் பிரச் சினை அலல. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து முற்றிலும் ஏற்கப்படுகிறது. சில தினங்கள் விடுமுறையாக இருநததால் மாணபுமிகு உறுப்பினர்கள் எல்லோரும் குளித்து விட்டு அவசரம் அவசரமாக வந்திருப்பார்கள். அதனால படித்துப்பார்க்க நேரம் இல்லாமல இருந்திருக்கக்கூடும்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, நான் காலை 5-00 மணிகே எழுந்து குளித்துவிடும் பழக்கம் உள்ளவன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மதிப்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்களுக்காக சிங்காரமாகச் சொன்னேன் (சிரிப்பு) அடுத்து மானியக் கோரிக்கைமீது விவாதம்.

(முற்பகல் 11—0(.)

6. மானியக் கோரிககைகள் 1989-90 விவாதமும் வாக்கெடுப்பும் — தொடர்ச்சி.

[அ] கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்.

**மாண்புமிகு திரு. வீரப்பாண்டி சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 28— சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 242,70,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங் கப்பெற வேண்டும்.''

**திரு. ஜி. ஜி. குருமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 28— சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 242,70,48,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி நகராட்சி மேல்நிலைப் பள்ளியில ஒவ்வொரு பாடத்திற்கும் தேவையான ஆசிரியர்கள் இல்லாததால் மேலும் அதுக ஆசிரியர்கள் நியமிக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 28— சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 242,70,48,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''.

**Thiru M. SUNDARADAS.** Sir, :'To discuss the need to adhere strictly the buildings construction rules at Madras City by the Madras Corporation and to demolish all the unauthorised constructions' I move that the sum of Rs. 2,42,70,48,000/- under Demand No. 28 Community Development Projects and Municipal Administration be reduced by Rs. 100.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கை களும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு @ மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கெல்லாம் வழங்கப்பட்டு இருக்கின்றன. அதனை நான் இங்கே அவையிலே படித்ததாக

@ 466 முதல் 522 முடியவுள்ள பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.



அப்படியே தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுடைய கருத்துக்களை எல்லாம் கேட்டதற்குப் பிறகு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும், மேலும் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கிற கருத்துக்கள் குறித்தும் இறுதியாக நான் பதில் தர விரும்புகிறேன் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து விவாதம் தொடங்க இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அன் பான ஒரு வேண்டுகோள். சரியாக ஒரு மணி அளவிலாவது முற் பகல் நிகழ்ச்சிகளை முடித்தால்தான் மீண்டும் நாம் வீட்டுக்குச் சென்றுவிட்டு 4 மணிக்குத் திரும்புவதற்கான வாய்ப்பு இருக்கும். எனவே அதனை உறுப்பினர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

இறுதியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றிய பதிலுரையைத் தரவேண்டும் என்ற ஒரு பகுதி இருக்கிறது என்பதை நம்முடைய உறுப்பினர்கள் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். எனவே பேசுகிற ஒவ்வொருவரும் தரப்படு கின்ற 10 மணித்துளிகளுக்குள் தங்களுடைய கருத்துக்களைக் கட்டாயமாக முழுமைப்படுத்தித் தரவேண்டும் என்று தெரி வித்துக் கொண்டு முதலில் திருமதி லட்சுமி அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**திருமதி பி. லட்சுமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் இரண்டாவது முறையாக எனக்குப் பேசுகிற வாய்ப்பினை அளித்த எனது வால்பாறைத் தொகுதி மக்களுக்கும், எங்களது கழகப் பொதுச் செயலாளர் அவர்களுக்கும், எங்களது கொறடா அவர்களுக்கும், எங்களது துணைத் தலைவர் அவர்களுக்கும் முதற்கண் எனது நன்றியினை யும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர்களின் பதவிக்காலம் 3 ஆண்டுக்காலம் என்றிருந்ததை மாற்றிமேலும் இரண்டுஆண்டுகள் அதிகரித்து ஆகமொத்தம் 5 ஆண்டுக்காலம் என்று அவர்களுக்கு பதவி நீட்டிப்பு தரப்பட்டிருக்கிறது. கடந்த முறை ஊராட்சி ஒன்றியங்களில் கடன் உதவிகள் வழங்குவதற்கும், மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு இலவச வீட்டுமனை தரு வதற்கும் என்று ஒரு குழு அமைத்து அந்தக் குழு பரிந்துரை செய்கிற நபர்களுக்கு அத்திட்டத்தின் பயன் கிடைக்கும் வண் ணம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. முன்பிருந்த அரசு ஊராட்சி ஒன்றியத் தலைவர்களிடத்திலிருந்து பறித்த அதிகாரத்தைத் திரும்ப அவர்கள் பெறுகிற வகையில் இப் போது ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு புதிதாக அதிகாரங் கள் வழங்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் கடந்த காலகட்டத்தில் எங்களுடைய இதய தெய்வம், மாண்பு மிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்த அந்தக் குழு

வில் சட்டமன்ற உறுப்பினர்களும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்
களும், ஊராட்சி மன்றத்தலைவர்களும், ஆணையாளர்களும்
ஊராட்சி உறுப்பினர்களும் என்று 5 பேர்கள் கொண்ட குழுவாக
அமைத்திருந்தார்கள். ஆனால் தற்போது ஊராட்சி மன்றத்
தலைவர்கள் அந்தக் குழுவிலே அங்கீகாரம் பெறவில்லை.
சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கீகாரம் பெறவில்லை.
இருக்கிற தருணத்தில் அந்தத் தொகுதியின் வாக்காளர் பெரு
மக்களிடத்திலிருந்து ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும், சட்ட
மன்ற உறுப்பினர்களும் வாக்குகளைப் பெற்றிருக்கின்ற தரு
ணத்தில் அந்தக் குழுவில் அவர்கள் இல்லாமல் மற்றைய
கிராமங்களில் இருப்பவர்கள் மட்டுமே அந்த குழுவிற்குரிய
வர்கள் என்று ஆணையினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
பிறப்பித்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களும்,
ஊராட்சி மன்றத் தலைவர்களும் இருக்கிறார்கள். அந்த
தலைவர்களுக்கெல்லாம் நாங்கள் வாக்களிக்கவில்லையா என்று
ஒரு இக்கட்டான சூழ்நிலை கிராமப்புறங்களில் தற்போது
நிலவி வருகிறது. அப்படி நிலவி வருகின்ற காரணத்தினாலே
கிராமப்புறங்களில் உள்ளவர்கள் நாங்கள் தாழ்த்தப்பட்ட சமு
தாய மக்கள், எங்களுக்கு வீட்டு மனைகள் ஒதுக்கி வீடுகள்
கட்டித் தருவதாகவும், கடன் உதவிகள் வழங்குவதாகவும்
நீங்கள் வாக்களித்தீர்களே, இப்போது மட்டும் நீங்கள் ஏன்
செய்து தர முன்வரவில்லை என்று கேட்கிறார்கள். ஒரு இக்
கட்டான சூழ்நிலையில் எங்களையெல்லாம் ஆளாக்கி வருகி
றார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஊராட்சி மன்றத் தலை
வர்களுக்கு அதிகாரத்தை அதிகமாக வழங்கியிருப்பதாக கூறி
யிருந்தாலும், அந்த ஊராட்சி மன்றத் கூட்டத்தில் கலந்து
கொள்வதற்கு சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு முன்பிருந்த
எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்
களின் அரசு, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுடன் அமர்ந்து
அவர்களுடன் அந்தக் குழுவிலே பிரச்சினைகளைப் பரிசீலிக்
கின்ற அந்த பொறுப்பை எங்களுக்கு அளித்திருந்தார்கள்.
இப்போது அந்தப் ஊராட்சிமன்ற தலைவர்களுக்கும், சட்ட
மன்ற உறுப்பினர்களுக்கும் இடம் இல்லை என்ற நிலையை
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அந்த
குழுவிலே சட்ட மன்ற உறுப்பினர்களும், ஊராட்சி மன்ற
தலைவர்களும் உள்ளடங்கியிருக்கவேண்டும். அந்தக் குழுவை
அப்படி அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பேரூராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட கிராமங்கள் சுமார்
15, 20 கிராமங்கள் இருக்கின்றன. தற்போது ஊராட்சி
கிராமங்களுக்கு மட்டுமே இலவச வீட்டுமனைகள் வழங்குவது,
அவர்களுக்கு கடன் உதவி வழங்குவது என்று வைத்திருக்கின்
றார்கள். அப்படி பேரூராட்சி மன்றத்திற்கு உட்பட்ட கிராமப்
புறங்களில் உள்ளவர்கள் நாங்கள் மட்டும் என்ன பாவம் செய்



தோம்? எங்களுக்கு வீட்டுமனைகள் தருவதில்லை, கடனுதவி
யும் வழங்குவதில்லை என்ற குற்றச்சாட்டை எங்கள் மத்தியில்
எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு கடன் உதவி
தருகிறபோதும், பேரூராட்சிக்கு உட்பட்டவர்களுக்கு, பெட்டி
கடைகள் அல்லது சைக்கிள் கடைகள் வைப்பவர்களுக்கு கடனு
தவியைத் தருகிறார்களே தவிர' ஆடு மாடுகள் வளர்க்கின்றவர்
களுக்கு, கறவை மாடு லோன், ஆடு வளர்க்கிற லோன் என்ற
அளவுக்கு கடனுதவி தருவதில்லை. கிராமப்புறங்களில் இருக்
கின்றவர்களுக்கு அந்தக் கடனுதவிகளை தருவது கிடையாது.
அதுபோலவே பேரூராட்சிக்குட்பட்ட கிராமப்புறங்களில் உள்ள
வர்களுக்கு இலவச வீட்டு மனைகள் தருவதில்லை. அப்படி
யிருக்கின்ற தருணத்தில், பேரூராட்சிக்குட்பட்டு இருக்கக்கூடிய
கிராமப்புற மக்கள் இந்த பேரூராட்சியில் நாங்கள் இருப்பதே
பாவமா, எங்களுக்கு அந்த வீட்டுமனைகள் ஒதுக்கி வீடுகள்
கட்டித் தரவில்லையே என்ற குறைபாடுகள் அவர்கள் மத்தி
யிலே இருக்கின்றது. இந்த ஆண்டாவது பேரூராட்சிக்கு
உட்பட்ட கிராமங்களில் வீட்டு மனைகளை அதிகமாக வழங்கி
வீடு கட்டித்தருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெண்களுக்கு 30 சதவிகிதம்
வேலை வாய்ப்பில் முக்கியத்துவம் தந்து இருக்கின்றார்கள்.
அதற்கு பெண் சமுதாயத்தின் சார்பில் அவர்களுக்கு என்னு
டைய நன்றியைச் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இந்த
மாமன்றத்தில் சட்டமன்ற அமைச்சர் பெருமக்கள் அதிகமாக
இருக்கின்றார்கள். அப்படி இருக்கின்ற தருணத்தில், பெண்
சமுதாயத்தில் மாண்புமிகு பெண் அமைச்சர், ஒருவர்தான், இருக்
கின்றார்கள். ஆகவே 30 சதவிகிதம் என்று மாண்புமிகு தமிழக
முதல்வர்கள் அவர்கள் அறிவித்த, அந்த கோரிக்கையை இந்த
மாமன்றத்திலேயும் நிறைவேற்றவேண்டும் என்று பெண் சமு
தாயத்தின் சார்பில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக்
கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** மாண்புமிகு முதல்வர்
அவர்கள் 30 விழுக்காடு வேலை வாய்ப்புகளை பெண்களுக்குத்
தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அமைச்சரவையி
லேயும் 30 சதவிகிதம் பெண்களுக்குத் தரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய கருத்து
மிகவும் இனிப்பானது. உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து
பேசட்டும். பொதுவாக இன்றைக்கு உறுப்பினர் அவர்கள்
புதிதாக முதல் தடவையாகப் பேசுகிறார்கள். யாரும் குறுக்கிடக்
கூடாது. நான் தேவைப்படும்போது பாராட்டுவேன்.

**திருமதி பி. லட்சுமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி, மேலும் ஜவஹர்லால் நேரு வேலை வாய்ப்புத்திட்டம் என்று கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் புதிதாக ஒரு திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித் தார்கள். அந்தத் திட்டத்தின் மூலம் 8 மாவட்டங்கள் பயன் பெறும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள், கோவை மாவட் டத்தையும் அத்துடன் இணைத்து, எனது வால்பாறைத் தொகுதி யில் தோட்டத் தொழிலாளர்கள் அதிகமாக இருப்பதால், அந்த வேலை வாய்ப்புத் திட்டத்தில் வால்பாறை ஒன்றியத் தையும் இணைத்து, அதன்மூலம் அந்தத் தொழிலாளர்கள் பயன் பெறும் வண்ணம் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.10.)

வால்பாறை நகரிய நிர்வாகத்திற்கு பெரும் பகுதியான வருமானம் தேயிலை தோட்டங்கள் மூலமாகத்தான் கிடைத்து வருகிறது. வால்பாறை நகரத்திலும் பெரும்பான்மையாக உள்ள தேயிலைத் தோட்டப் பகுதிகளிலும் தொழிலாளர்களும், பொது மக்களும் பெரும்பான்மையாக இருந்து வருகிறார்கள். அவர்கள் அத்தியாவசியமாக தேயிலைத் தோட்டங்களிலிருந்து வால்பாறை நகரத்திற்கு வர வேண்டுமென்றால் நல்ல சாலை வசதியில்லை. அவர்களுக்கு பஸ் வசதி இருந்தாலும், சாலை கள் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ளதால், அந்தச் சாலைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. தேயிலைத் தோட்ட அதிபர்களும், நகரியத்திற்குட்பட்ட பகுதியில் நிலம் வைத்துள்ள அதிபர்களும் இந்த முறைகேடுகளைச் சரிவரக் கவனிக்காத நிலையில், அந்தச் சாலைகள் வழியாக பஸ்கள் வால்பாறை நகரத்திற்கு வருவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. இந்த முறைகேடுகளை நிவர்த்தி செய்வதற்கு வால்பாறை நகரியத்திடம் நிதி வசதியில்லை. இந்த ரோடுகள் மிகவும் பழுதடைந்துள்ளதே, இதை சரி செய்யக்கூடாதா என்று கேட் டதற்கு, நிதிநிலை மிகவும் பற்றாக்குறையாக இருப்பதால் தேயிலைத் தோட்ட அதிபர்கள் முன்வந்து சிறிது நிதி உதவி தந்தார்களானால் பெரும் உதவியாக இருக்கும். இதை மாமன்றத்தில் நீங்கள் எடுத்துக்கூறி, அந்த நிதியை எங்களுக்குப் பெற்றுத் தருவீர்களானால், இந்தச் சாலைகளைச் சீர்படுத்த முடியுமென்று அதிகாரிகள் கூறுகிறார்கள். அந்த வால்பாறை தொகுதியில் தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் அதிகமாக வசிக்கின்ற காரணத்தால், அவர்கள் சிறுது தூரம்கூட நடந்து வரக்கூடிய சூழ்நிலையில் இல்லை. அந்தச் சாலைகள் குண் டும், குழியுமாக, மிகவும் சீர்கேடாக உள்ளதால், நகரியமும், தேயிலைத் தோட்ட அதிபர்களும் அந்தச் சாலைகளைப் பரா



மரிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் அதிகமாக நிதியினை அளித்து, சாலை பராமரிப்பு செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் ஆண்களாக இருக்கிறார்கள். பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் 10 பேர்தான் இருக்கிறோம். அதி லும் மாண்புமிகு அமைச்சர் ஒருவர்போக 9 பேர்தான் இருக்கி றோம். எங்களுககு சிறிது நேரத்தை நீட்டித்துத்தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் முதன்முறை யாகப் பேசுகிறீர்கள் என்பதற்காக நானே உட்கார்ந்து கவனித் துக்கொண்டிருக்கிறேன். அதை நீங்கள் கவனித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

**திருமதி பி. லட்சுமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, நன்றி, மேலும் வால்பாறை நகரம் மலைக்குன்றின்மேல் உள்ளதால், இங்குள்ள குடியிருப்புகள் மேடு பள்ளங்களில் அமைந் துள்ளன. பள்ளப் பகுதியில் உள்ள வீட்டுச் சொந்தக்காரர் களும், பொது மக்களும் சரிவாக உள்ள மேட்டுப்பாங்கான வழிகளில் சென்றால் இடறிவிழும் அபாயம் உள்ளது. எனவே நடந்து செல்லும் வழிகளில் படிக்கட்டுகள் இல்லாத இடங்களில் விரைவில் அதை அமைத்துத்தர நடவடிக்கை எடுக்க வேண்டு கிறேன்.

அடுத்து, வெள்ளமடை மட்டம் என்ற இடத்தில் மனமகிழ் மன்றம் ஒன்று நீண்ட நாட்களாக செயல்பட்டு வருகிறது. அந்த மன்றத்திற்கு நகரியம் மூலம் எல்லாவிதமான பத்திரிக்கைகளும் வந்துகொண்டிருந்தன. கடந்த இரண்டு மாதங்களாக அந்தப் பத்திரிகைகளை நகரியம் அனுப்புவது கிடையாது. அங்கே சென்று கேட்டபோது, எங்களுக்கு அனுப்பக்கூடாது என்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள்.

ஆகவே, அந்த மன்றத்திற்குக் கடந்த முறை அனுப்பி வைக்கப்பட்ட அத்தனை நாளிதழ்களையும் அனுப்பி வைத்து, அந்த மன்றத்தில் வந்து படிக்கும் மக்களுக்கு உதவிட நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, கடைசி யாக ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனைமலை ஒன்றி யத்தின் பொங்காளியூர் கிராமத்தில் 3,000 பேர்கள் குடியிருக்கி றார்கள். அதில் 2,000 பேர்கள் நன்கு படித்த இளைஞர்கள், அவர்களெல்லாம் ஆனைமலை ஒன்றியத்திற்கு வந்து அங்குள்ள நூல்நிலையத்தில்தான் படிக்க வேண்டிய சூழ்நிலை தற்போது இருக்கிறது. எனவே அந்தப் பொங்காளியூர் கிராமத்திற்கு ஒரு நல்ல நூல்நிலையம் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இங்கே பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திருமதி லட்சுமி அவர்களுக்குப் பாராட்டுதல்கள். அடுத்து தொடர்பவர் திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்.

**திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் பேசுவதற்கான வாய்ப்பினை வழங்கிய தமிழ்க்குடிமகனார் அவர்களுக்கு முதலில் நான் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் போலவே, நான் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்திருந்தாலும் வரலாற்றுச் சிறப்புமிக்க தி.மு.க.வில் நான் இருக்கிற காரணத்தால் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், இந்த மாமன்றத்திற்கு நான் வருகை தருவதற்கான அனைத்து உதவிகளையும் செய்தார் என்பதை இந்த நேரத்தில் மறந்து விட முடியாது என்பதால் அவருக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு— மாற்றுத் தலைவர் தலைமை)

அதைப் போலவே சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் சட்டப் பேரவை உறுப்பினராகப் பணியாற்ற வேண்டும் என்று விரும்பி பணியாற்றிய கழக முன்னோடிகளுக்கும் அதைப் போலவே, தொகுதியில் இருக்கிற வாக்காளப் பெருங்குடி மக்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியறிதலையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன்.

இன்றையதினம் மாநில உள்ளாட்சித்துறை நிர்வாகம் என்ற மானியக் கோரிக்கையின்மீது பேசுகிற வாய்ப்பை வழங்கியமைக்காகவும் நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிப் படி ரூ. 100 கோடியை மாநகராட்சிக்காக ஒதுக்குவோம் என்று சொன்னபடி, இந்த ஆண்டு ரூ. 20 கோடியைப் பல இனங்களில் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதால் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நான் மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் சென்னையில் இருக்கின்ற காரணத்தால்—தாளமுத்து நடராசன் பெயரால் மிகப் பெரிய கட்டிடமான எம். எம். டி. ஏ. கட்டிடத்திற்குப் பெயர் வைத்திருப்பதை—முதன் முதலாகச் சென்னையில் பேசுகிற வாய்ப்பு பெற்ற காரணத்



தால்—மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது தொகுதியைப் பொறுத்தவரையில், சென்னை மாநகராட்சியிலே கடந்த 13 ஆண்டுகாலமாகக் குறிப்பாக சைதாப்பேட்டை தொகுதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கே எந்த விதமான வசதிகளும் செய்து தரப்படவில்லை. ஏனென்றால் அது தி.மு.க-வின் கற்கோட்டையாக இருக்கிற காரணத்தால்— இதற்கு முன்பு இருந்த அரசு அந்தப் பகுதியை உதாசீனப்படுத்தியது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்தில்தான் சைதாப்பேட்டைக்கு ஏராளமான வசதிகள் செய்து தரப்பட்டன. காரணம் சைதாப்பேட்டை கலைஞர் அவர்களுடைய சொந்தத் தொகுதியாக இருந்தது. எனவே கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் உங்களுடைய தொகுதியான சைதாப் பேட்டையில் இரண்டு சுரங்கப் பாதைகளை உடனடியாக அமைத்துத்தர வேண்டும்.

பாலங்கள் என்ற தலைப்பில் ரூ. 10 கோடி வழங்கியிருக்கிறீர்கள். அந்த ரூ. 10 கோடியில் சைதை தொகுதியில் இரண்டு சுரங்கப் பாதைகளை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்குக் காரணம், மேற்கு சைதாப் பேட்டையில் இருப்பவர்களெல்லாம் இன்றையதினம் ஏன் சைதாப்பேட்டையில் இருக்கிறோம் என்று வருத்தப்படுகிற அளவுக்கு நிலைமை இருக்கிறது. அங்கே இருக்கிற ரெயில்வே கேட்டை மூடிவிட்டால் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே உடனடியாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் தொகுதிக்கு அந்தப் பணியைச் செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ரா. சொக்கர் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட மானியங்கள்மீது விவாதம் நடந்து கொண்டிருக்கும்போது அந்தத் துறைக்குரிய அமைச்சர்கள் அவையில் இருக்க வேண்டுமா, 'வேண்டாமா என்பதைப்பற்றி தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் இங்கே இல்லை என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் இது தொடர்பாகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத்

கலந்து ஆலோசிக்கச் சென்றிருக்கிறார். விரைவில் வந்து விடுவார். அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு உண்டு என்ற அடிப்படையில் எங்களுக்கும் இதில் பொறுப்புண்டு. தேவையான பதில்களும் தரமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20.)

**திரு. ஆர். எஸ் ஸ்ரீதர்:** கழகத் தலைவர் கலைஞர் அவர்களுடைய காலத்திலதான சென்னையில்அழகான சுரங்கப் பாதைகள் கட்டப் பட்டன என்பதை யாரும் மறந்துவிட முடியாது. அந்த அளவுக்கு சென்னையை சிங்கார சென்னை நகரமாக ஆக்க வேண்டு மென்ற உணர்வின் காரணமாகத்தான் அன்றைக்கு மாஸ்டர் பிளான ஒன்றை தயாரித்து, மிகப் பெரிய சாலைகளை 'கிராஷ் புரோகிராம்' என்ற அடிப்படையில் அன்றைக்கு உருவாக்கினார்கள். இன்றைக்குக் கூட தனியார் தெருக்களுக்கு 1 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். அதற்காக நான் கழக தலைவர் அவர்களை பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். தனியார் தெருக்கள் என்று சொல்லி அங்கு எந்த விதயான வசதிகளும் செய்யப்படாமல் இருக்கும் நிலைமையில் நாங்கள் அங்குள்ள வாக்காளர்களை சந்திக்கும்போது கடுமை யான சொற்களால் தாக்கப்படுகிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்றை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் தடுப்புச் சுவர் கட்டப்பட வேண்டு மென்று 1971 ஆம் ஆண்டு கேட்டதற்கு இணங்க, கழக தலைவர் அவர்கள் இந்திய திருநாட்டில் இல்லாத அளவுக்கு, மிகப் பெரிய அளவில் அந்தத் தடுப்பு சுவரை தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்காக கட்டினார்கள். மீண்டும் அந்தப் பணி தொடர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் ரிக்ஷா தொழிலாளர்களுக்கு கழக தலைவர் கலைஞர் அவர்களும், சென்னை மாவட்ட கழக செயலாளர் பாலு அவர்களும் சம்பந்தப்பட்ட அதிகாரி களிடத்தில் சென்று உடனடியாக ஆயிரம் சைக்கிள் ரிக்ஷாக் களை 10 மணி நேரத்திற்குள்ளாக திரும்பப் பெற்று, அவர் களுக்கு எல்லாம் மாவட்ட கழகத்தின் சார்பாக சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொறுத்த வேண்டுமென்ற வேண்டு கோளை விடுத்தார்கள். அதன் அடிப்படையில் மே மாதம் முதல் தேதி அன்று அந்தக் காரியத்தை கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆரம்பித்து வைக்க இருக்கிறார்கள் என் பதற்காக அவர்களை இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.



அதைப்போலவே, இப்போது அண்மையிலேகூட கழகத் தலைவர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். 'மாஸ் ராபிட் டிரான்ஸ்போர்ட் சிஸ்டம்' இருக்கிற சூழ்நிலையை நேரடியாகப் போய்ப் பார்த்து, அதற்கு உடனடியாக ஏதாவது செய்ய வேண்டுமென்ற உணர்வு இருந்த காரணத்தினாலே தான் அதைப்பற்றி மாநிலங்கள் அவையில் நாடாளுமன்ற கழகத் தலைவர் மாண்புமிகு முரசொலி மாறன் அவர்களும், நாடாளுமன்றத்தில் பணியாற்றும் மாவட்ட கழக செய லாளர்— பாராளுமன்ற உறுப்பினர் பாலு அவர்களும் எடுத்து வைத்திருக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் மாண்புமிகு உறுப் பினர் என்.வி.என். சோமு அவர்களும், கலாநிதி அவர்களும் தொடர்ந்து அந்தக் காரியங்களை செய்திருக்கிறார்கள். முதன் முதலாக அந்தத் திட்டம் போடும்போது 54 கோடி ரூபாய் ஒதுக்கி இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு சற்றேறக் குறைய 108 கோடி ரூபாய்க்கு வந்திருக்கிறது. தமிழ்நாடு எந்த அளவுக்கு புறக்கணிக்கப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் கவனத்தில் எடுத்துக் கொண்டு, அதற்காக மத்திய நிதிநிலை அறிக்கையில் சேர்த்து இருக்கும் தொகை ரூ. 9.85 கோடி என்றுதான் இருக்கிறதேயொழிய— அது 10 கோடி என்று சொன்னாலும், இன்னும் காலம் ஆக ஆக, அதை 'ராபிட்' என்று சொல்வதை எடுத்துவிட்டு வேறு ஒரு வார்த்தைகூட போடலாம் என்ற நிலைமையிலே, நாம் கண்டிக்க வேண்டிய சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக் கிறோம்.

அதைப்போலவே தெலுங்கு கங்கை திட்டம் பற்றி கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்கள். வேறு முதலமைச்சர் கொண்டு வந்தது என்பதற்காக அதை தள்ளிவிடமாட்டேன்; அதை துரிதமாக செயல்படுத்துவேன் என்று கலைஞர் அவர் கள் சொல்லி இருக்கிறார்கள். இந்த நேரத்திலே கலைஞருக்கு யோசனை சொல்லும் அளவுக்கு நான் இல்லாவிட்டாலும்—, ஆனால் பொதுமக்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டிருக் கிறார்கள் — அத்திட்டத்திற்கு 108 கோடி ருபாய் தேவைப் படுகிறது; நிதிநிலைமை காரணமாகத்தான் அத்திட்டம் தாமதமாகிறது என்றால், பொது மக்களிடத்தில் ஒரு வேண்டு கோள் கலைஞர் அவர்கள் விடுவார்களேயானால் நிச்சயமாக ஏராளமான பணம் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. பல பெரியோர்கள் அதுபற்றி என்னிடம் சொல்லி இருக் கிறார்கள்.

அடுத்து, சைதாப்பேட்டையில் நீண்டநெடுங்காலமாக ஏராளமானவர்கள் பிளாட்பாரத்தில் கடைகள் வைத்திருக் கிறார்கள். அவர்களுக்கு ஒரு நல்ல நிலைமை உருவாக்கித் தர மாநகராட்சி நல்ல பணிகளை எடுத்திட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

சாலைகள் போடுவதற்கு இத்தனை கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது உள்ள படியே பூரிப்பும், பெருமையும் அடைய நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

சென்னை, சைதாப்பேட்டையில் கைத்தறி நெசவாளர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களிடத்திலும், எங்களிடத்திலும் ஏராளமான தாய்மார்கள் தங்களுக்கு மாடி குடியிருப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றுதான்விண்ணப்பங்கள் வந்தவண்ணம்இருக்கின்றன. அதற்கு பரிகாரம்— என்னுடைய தொகுதியில் நூறு ஏக்கர் நிலம் காஸ்மோபாலிட்டன் கிளப் வைத்துக்கொண்டு அங்கே அவர்கள் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் மிக வசதியானவர்கள். அவர்களுக்கு தரக்கூடாது என்பது எனது அபிப்பிராயம் அல்ல. அவர்கள் மிகப்பெரிய வசதியானவர்கள்; கார்களை வைத்துக்கொண்டிருக்கிற அவர்கள் கோமான்கள். அவர்களுக்கு எல்லாம் வண்டலூர் பக்கத்தில் இருக்கிற 100 ஏக்கர் நிலத்தைக் கொடுத்துவிட்டு, இங்கு இருக்கிற அந்த 100 ஏக்கர் நிலத்தை பொது மக்களுக்கு கிடைக்கிற நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு மு. இராமநாதன்) :** இன்னும் ஒரு நிமிடத்தில் முடிக்க வேண்டும்.

**திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் :** சென்னையில் பல இடங்களில் வெள்ளைக்காரனால் போடப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டம் தான் இருக்கிறது. அவைகளெல்லாம் சீர் கெட்டுக் கிடக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாநகராட்சிப் பள்ளிகள உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, ஒன்றை மட்டும் சொல்லி முடிக்கிறேன்.

என்னுடைய வட்டாரத்தில், கோட்டூரில், கழகத் தலைவருடைய காலத்திலே விளையாடுவதற்கான இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த இடத்தை இன்றைக்கு, இதற்கு முன்னாலேயிருந்த அரசாங்கம் வேறு வகைக்குப் பயன்படுத்திக் கொண்டது. அதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் நேரிடையாக வந்து பார்த்து, அதற்கான நடவடிக்கைகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அது முற்றிலும் வெற்றிபெற வேண்டுமானால் நம்முடைய மாண்புமிகு கல்வி





யமைச்சர் பேராசிரியர் அவர்கள் தான் கருணை காட்ட வேண்டும். அவசியம், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களும், கல்வியமைச்சரவர்களும் இந்தக் காரியத்தைச் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டுமொத்தமாக இன்றைக்குப் பார்க்கின்றபொழுது, சைதாப்பேட்டை பின்தங்கிக் கிடப்பதைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால்— நம்முடைய மாநகராட்சி அதிகாரிகள் இன்றைக்கு நல்லமுறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்; அதைப்போலவே; குடிநீர் வடிகால் வாரியத்தைச் சார்ந்த அதிகாரிகளும் நல்லமுறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்— ஆனால், காவல்துறையைப்பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். அந்த அளவிற்குச் சரியான முறையில் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, சென்னையிலே இருக்கிற மாவட்ட ஆட்சியர் ஆங்கிலம் தெரிந்தவராக இருக்கிறார். அவரிடம்பொதுமக்கள் எல்லோரும் சென்று தங்களுடைய எண்ணங்களைச் சொல்ல வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, அந்த நிலையை உடனடியாக மாற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, இந்த நல்ல வாய்ப்பைத் தந்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தின் மொத்த நிலப்பரப்பிலும், மொத்த ஜனத்தொகையிலும் நான்கில் மூன்று பங்கு இடத்தினையும், எண்ணிக்கையினையும் தங்களதாக ஆக்கிக் கொண்டிருக்கிற கிராமப்புறங்களில் வாழ்கின்ற ஏழை எளிய பாட்டாளி மக்களின் சமூக, பொருளாதார வாழ்வை நிர்ணயம் செய்யும் உள்ளாட்சித் துறை மானியத்திலே நடைபெறும் விவாதங்களில் பங்கு கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு தந்த உங்களுக்கு நான் நன்றி சொல்கிறேன்.

கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் வாழ்கின்ற மக்களின் அன்றாடத் தேவைகளான ஆரம்ப சுகாதாரம், வேலை வாய்ப்பு, அடிப்படை வசதிகளான குடிநீர், தெருவிளக்குகள், கல்வி மற்றும் மக்களின் அன்றாடத் தேவைகளை நடத்தக்கூடிய ஊராட்சி நிறுவனங்களுக்கு, வயதினைக் கூட்டி, வாலிபமாக்கி, அதிக அதிகாரத்தினைத் தருகிறோம் என்று, சொன்னதைச் செய்வோம், என்று சொல்லும் நீங்கள் சொன்னீர்கள். வயதினைக் கூட்டினீர்கள், அதிகாரத்தையும் கூட்டுவீர்கள் என்று நாங்களெல்லாம் எதிர்பார்த்தோம். ஆனால்

. . . . . . . . . .

[1989 ஏப்ரல் 19

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்) :
நீங்கள் சொன்னீர்கள் என்றால், அவைத் தலைவரைக் குறிப்
பிடுகிறது. அரசு சொல்லியது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : இந்த அரசு சொன்னது,
நாங்களும், சொன்னதைச் செய்தவர்கள்தானே, அதை
நிச்சயம் செய்வார்கள் என்று எதிர்பார்த்தோம். பட்ஜெட்
உரையின் மீது நடந்த உரையிலே உரையாற்றிய முதல்வர்,
தடைக் கற்கள் உண்டெனினும் தடந்தோள் உண்டு எனச்
சிரிப்போம் என்று சொன்ன முதல்வர், தடைக் கற்களைக்
கண்டு பயந்து அதைப்பற்றிப் பேசுவதையே தவிர்த்து, பட்
ஜெட் உரையிலேகூட அதிகாரங்களை உயர்த்துவதைப் பற்றி
ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் 'Escapist' ஆகி
விட்டார் என்று நான் குற்றம் சாட்ட ஆசைப்படுகிறேன்.

பதவி ஏற்றதும், நகர் மன்ற, ஊராட்சி ஒன்றியத்
தலைவர்களையெல்லாம் கூட்டி, வாருங்கள் வாருங்கள்,
சென்னைக்கு வாருங்கள், அதிக அதிகாரம் தருகிறேன் என்று
சொன்னீர்கள். ஆனால், நீங்கள் தருவதாகச் சொன்ன அதி
காரம் என்ன ஆனது என்பதை நீங்கள் இந்த மாமன்றத்
திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டவர்கள்.

ஊராட்சி ஒன்றியத்தின் அதிகாரத்தைக் கூட்டுவோம்,
பொதுச் சுகாதாரம் முழுவதும் உங்கள் மேற்பார்வையிலே
தருவோம்; நகரப் பஞ்சாயத்துக்களின் நிர்வாகத்தை
நீங்களே பாருங்கள்; பள்ளிக் கூடங்களையும் நீங்களே கவனி
யுங்கள், மருத்துவத்தைக் கவனியுங்கள், விவசாயத்தைக்
கவனியுங்கள் என்று சொன்ன நீங்கள் இன்று, வாயிருந்தும்
பேசாத மடந்தையாக இருப்பதைப் பார்க்கின்றபொழுது,
இந்த அதிகாரத்தைப் பகிர்ந்து அளிப்பதற்கு பின்னால்
என்ன நடந்தது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்பு
கிறேன்.

அதிக அதிகாரம் தர முடியும் என்று நீங்கள் சொன்
னீர்கள். ஆனால், அதற்கான அடிப்படை முயற்சிகளைக் கூட
இந்த பட்ஜெட்டிலே, அதற்கான நடவடிக்கைகளில் நீங்கள்
எடுக்கவில்லை என்று நான் சொல்லிக்கொண்டு, அதற்கு
என்ன காரணம் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல
ஆசைப்படுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)
The Government lacks the Political will.
அரசியல் மனப் பக்குவம், அந்த அதிகாரத்தைப் பகிர்ந்து அதற்கான
அளிக்க வேண்டும் என்ற அரசியல் மனப் பக்குவமும் இந்த
அரசுக்கு இல்லை என்று நான் குற்றம் சாட்ட ஆசைப்படு
கிறேன்.



அதனால்தான், நாங்கள், மத்தியிலே சொல்கிறோம்.
We will bring Panchayat Raj. அதாவது அதிகமான
அதிகாரங்களை ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவாச
லுக்கே கொண்டு வந்து தருவோம், மாவட்ட அரசு அமைப்
போம், அதிகாரங்களைப் பகிர்ந்து அளிப்போம் என்று இன்று
பாரதப் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் சொல்கிறதை,
நாங்கள்தான் மாநில சுயாட்சி பெற்றுத் தருவோம்,
ஸ்தல ஸ்தாபனங்களுக்காக அதிக அதிகாரங்களைத் தருவோம்
என்று சொல்கிற நீங்கள் இன்று 'அ'னா, 'ஆ,'வன்னாகூட
எழுத முடியாத நிலைமையிலே, நீங்கள் சொன்ன வாக்கு
றுதிகளைக்கூட காப்பாற்ற முடியாத நிலையில், Escapist-
ஆக Political will இல்லாமல் இருப்பவர்களாக
நீங்கள் இருக்கிறீர்கள்.

தயவு செய்து, மத்திய அரசு கொண்டு வரவிருக்கிற
அந்த பஞ்சாயத்து ராஜ் என்கிற அமைப்பினுடைய அத்தனை
கொள்கைகளையும் ஆதரிக்க வேண்டுமென்று நான் உங்களை
மிக்க பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புற சீரமைப்புக்கும், நகர்ப்புற வளர்ச்சிக்கும்
மத்திய அரசு கோடிக்கணக்கிலே பணத்தை கொடுக்கிறது. இந்த
மத்திய அரசு தருகின்ற பணம் இங்கு இல்லை என்று சொன்
னால் உள்ளாட்சித் துறை என்ற ஒரு அமைச்சகத்துக்கே
இங்கே வேலையில்லை.

IRDP, NREP. RLEGP, HADP என்று ராஜீவ் காந்தி
அவர்களுடைய அரசாங்கம் கொட்டுகிற கோடிக்கணக்கான
பணம் டெல்லியிலிருந்து புறப்பட்டு, சென்னை வந்து,
திருநெல்வேலி வந்து, தென்காசி வந்து, என்னுடைய தொகுதி
யில் இருக்கும் அரியப்பபுரம் என்ற ஒரு பஞ்சாயத்திற்கு வரு
கிறபோது கோடி ரூபாய் என்பது கொசுவாக மாறி விடுகிறது.
பாரதப் பிரதமர் அவர்களே மிக வேதனைப் பட்டிருக்கிறார்.
ஊராட்சி வளர்ச்சிக்காக ஆறு ரூபாய் மத்திய அரசு கொடுத்
தது என்று சொன்னால் டெல்லியிலிருந்து வருகிற அந்தப்
பணம் கிராமப்புறத்தில் இருக்கிற பஞ்சாயத்திற்கு வருகிற
போது ஒரு ரூபாய் ஆகிறது என்று சொல்கிறார்.

(முற்பகல் 11-30).

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது குறுக்கிடக்
கூடாது என்று கருதுகிறேன். ஆனால் டெல்லியிலிருந்து
வருகிற பணம் என்ற காரணத்தால் ஏதோ டெல்லியிலிருந்து
பணம் அச்சடித்து இவர்கள் தருவதைப் போல பேசுவது
நல்லதல்ல. மக்களுடைய வரிப் பணத்தை வாங்கித் தரு

கிறார்களே தவிர, டெல்லிக்கு என்று ஒரு அதிகாரம் வைத்துக் கொண்டு தனி ஆட்சி நடத்துவது போலவும், அதற்கு நாம் சம்பந்தம் இல்லாதவர்கள் போலவும் பேசுவது, அவர்கள் ஏதோ பணம் தருவது கடனுக்காக தருவது, கருணைக்குத் தருவதல்ல. நம்முடைய உரிமையை நாம் பெறவில்லை என்ற நிலையில்தான் மாநில சர்க்கார் இருக்கிறதே தவிர, மாநில சர்க்காருக்கு தர வேண்டிய அளவிற்கு இன்னும் மத்திய அரசு தரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்தில் கொண்டு பேச வேண்டும். டெல்லிக்காக பேசவேண்டாம் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அத்தோடு திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு ராஜீவ் காந்தி அவர்களுடைய பணம் என்று சொல்லிவிட்டார். அதை மத்திய அரசின் பணம் என்று சொன்னால் போதும். அதனால்தான் எஸ். ஆர். இராதா அவர்கள் குறுக்கிட்டு விளக்கம் தரவேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : துணைத் தலைவர் அவர்களே, அரிசி கொடுக்கிறபோது கூட கலைஞர் அரிசி கொடுக்கிற மாதிரி தான் சொல்கிறார்கள். படம் போட்டது கூட கலைஞர் அரிசி கொடுப்பதைப் போலத் தான் போட்டிருக கிறார்கள். அதனால் தான் நாங்கள் ராஜீவ் காந்தி பணம் என்று சொல்கிறோம், வேறு ஒன்றுமல்ல.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, ஒரு தவறுக்காக இன்னொரு தவறை உருவாக்கக் கூடாது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன்: துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் சொல்கிற போது மத்திய அரசு திட்டங்களுக்கு எல்லாம் இங்கே வருகிற பணம் பூராவும் திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய பணம் என்றாலும் சரி, மத்திய அரசினுடைய பணம் என்றாலும் சரி, அல்லது வேறு என்ன சொன்னாலும் சரி, மத்திய அர சினுடைய பணம் இங்கே அள்ளிக் கொட்டப்படுகிறது. அது தான் தென்காசி வரையில் செல்கிறது என்று குறிப்பிட்டார் கள். தென்காசிக்கு அந்தப்பக்கம் கன்னியாகுமரியிலிருந்து டெல்லி வரைக்கும் தமிழகத்திலிருந்து ஒரு ஆண்டிற்கு எவ் வளவு பணம் போய்ச் சேருகிறது? அதிலே எவ்வளவு பகுதி இங்கே வருகிறது என்பதைச் சேர்த்து அவர்கள் சொல் வார்களானால், நமக்குக் கிடைக்க வேண்டிய பகுதி கிடைக் காமல் இருக்கிறது, அவர்கள் இங்கேயிருந்து அள்ளிச் செல் கிறார்கள் என்பது புரியும். இதுதான் ஒவ்வொரு ஆண்டும் நடக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.





திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி ஆளுகிறபோது கிராமப் புறங் களில் வாழ்கிற மக்களுக்கு சேவை செய்வதற்காக சரியான நபர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு கிராமப்புற வாழ்வில் இரண்டாண்டுகள் பயிற்சி கொடுத்து, கிராம சேவக்குகள் என்ற பட்டத்தையும் தந்து அவர்களை கிராமத்தின் சேவைக் காக அனுப்பி வைத்தோம். ஏனென்றால் ஆட்சி என்பதை நாங்கள் சேவை என்று நினைத்தோம். நீங்கள் ஆட்சி என்றால் அதை அதிகாரம் என்று எண்ணி கிராம சேவக்கு களை கிராம அதிகாரிகளாக்கி இந்த மக்கள் நலம் பற்றி சிந்திக்கும் ஒரு மனப்பக்குவம் இல்லாத அதிகார கூட்டம் கிராமப்புற ஏழைகளைச் சுரண்டிக் கொண்டிருக்கிறது என் பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர நான் கடமைப்பட்டிருக்கிறேன். மீண்டும் அந்த நாட்களைக் கொண்டு வாருங்கள். இதற்காக தனிப் பயிற்சி பெற்ற அரசு ஊழியர்களை முழுமையாக களப்பணியில் பயன்படுத்துங்கள். களப்பணியாளர்களையும், நிர்வாகப் பணியாளர்களையும் சேர்த்து குழப்பி பயன்தராத களப்பணித் திட்டத்தை செயல்படுத்துவதை மாற்றி, களப்பயிற்சி பெற்றவர்கள் மட்டுமே களத்தில் பணியாற்ற முடியும என்ற நிலையை உரு வாக்குங்கள். ஒருபணி பற்றிய அரசு ஆணையை முழுமையாக ரத்து செய்வதன் மூலம் தேங்கியுள்ள நிர்வாகத்தை சரி செய்ய வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள் கிறேன்.

ஐ. ஆர். டி. பி. மூலம் கடந்த காலத்தில் வழங்கப்பட்ட ஆடுகள் எத்தனை லட்சம் இருக்குமென்று நீங்கள் கணக்குப் பார்க்கவேண்டும். ஐ. ஆர். டி. பி. மூலம் கொடுக்கப்பட்ட ஆடுகள் இன்றைக்கு தமிழகத்தில் இருக்குமென்று சொன்னால் தமிழகத்தில் மனிதர்கள் இருப்பதற்கே இடம் இருக்காது. அவ்வளவு ஆடுகளை ஐ. ஆர். டி. பி. மூலம் வழங்கியிருக் கிறார்கள். ஐ. ஆர். டி. பி. மூலம் வழங்கப்பட்ட கறவை மாடுகள் இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்குமென்று சொன் னால் காவிரி, வைகை, தாமிரபரணி போன்ற ஆறுகளில் தண்ணீர் ஓடாது. ஐ. ஆர். டி. பி. மூலம் வாங்கப்பட்ட மாடு களின் பால் தான் ஓட வேண்டும். இந்த ஆடுகள், மாடுகள் எல்லாம் எங்கே இருக்கின்றன என்று இந்த அரசு பார்ப்ப தற்கு ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : துணைத் தலைவர் அவர்களே, மாடுகளை எல்லாம் ஏராளமாக கேரளாவிற்கு வாங்கிக் கொண்டு போய் விட்டார்கள். நல்ல விலை கொடுத்து வாங்கிக் கொண்டு போய்க் கொண்டே இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :
தீட்சிதர் அவர்கள், மாடுகள் எதற்காக மாண்புமிகு
போகின்றன என்றும் சொல்ல வேண்டும். கேரளாவிற்குப்

திரு. ஒய். வெங்கடேஸ்வா தீட்சிதர் : துணைத் தலைவர்
அவர்களே, அவையில் ஒரு புத்தகம் கொடுத்திருக்கிறார்
கள். அதில் மாடுகள் அரேபியன் கன்ட்ரீஸ்-க்கும் போகின்றன
என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நாம் என்ன பண்ண
முடியும் ? அவர்கள் நிறைய பணம் கொடுத்தவுடன் நாம்
ஆசைப்பட்டு விற்கிறோம்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : அசட்ஸ் கிரியேட் பண்ண
முடியாத ஒரு திட்டம். அசட்ஸ் கிரியேசனுக்காகத்தான் இந்
தத் திட்டத்தை மத்திய அரசு இவ்வளவு தூரம் ஆராய்ச்சி
செய்து, இந்தப் பணம் கிராமப்புறத்திலே உள்ள மக்களின்
வீட்டுக் கதவுகளைத் தட்டி, அங்கே வேலை வாய்ப்பில்லா
மல் இருக்கிறவர்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்த
வேண்டும் என்ற அளவில், நிரந்தரமான ஒரு வருமானத்தை,
ஒரு சொத்தை உருவாக்குவதன் மூலம் இதைச் செய்து தர
முடியும், அங்குள்ள சூழ்நிலையை மாற்ற முடியும் என்று
சொல்லிச் செய்வதை இங்கே ஒரு சிலர் கேலிக்கூத்தாக, சில
பேர்கள் கொள்ளையடிக்கின்ற ஒரு முயற்சியாக, அந்த மிகப்
பெரிய திட்டத்தை கொச்சைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்
என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர
விரும்புகிறேன்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுடைய
கவனத்திற்கு ஒரு பணிவான வேண்டுகோள். அதிக அதிகாரம்
தருகிறேன் என்று சொன்னீர்கள். இப்போது கூப்பிட்டு
வந்து மேல் துண்டைத் தருகிறேன் என்று சொல்லி, அரை
வேட்டியை அவித்துவிட்டதைப் போல், எங்களை இந்த
டாஸ்க் ஃபோர்ஸ் கமிட்டியிலே கூட மெம்பர்களாக வைக்க
வில்லை. 1987-88 ஆம் ஆண்டிலே, இந்த டாஸ்க் ஃபோர்ஸ்
கமிட்டியிலே, ரூரல் டெவலப்மெண்ட் ஸ்கீமினுடைய பெனி
பிசியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான கமிட்டியிலே கூட,
சேர்மனுக்கு முதலிடம் கொடுத்தார்கள், நாங்கள்
அதிகாரத்தைத் தருகிறோம் என்று சொல்லிவிட்டு, இருக்கிற
அதிகாரத்தை நீங்கள் பறித்துவிட்டீர்கள். இப்போது அந்த
சேர்மனுக்கு அங்கே இடமில்லை. சட்டமன்ற உறுப்பினர்களாக
இருக்கிற நாங்களாவது சொல்லவேண்டாமா ? இந்தத்
தொகுதியிலே இத்தனை பேர்கள் இருக்கிறார்கள், ஐயா,
என்று சொல்லி, அவர்களை ஐடென்டிஃபை பண்ணக்கூடிய
அந்த பவரைக்கூட சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்க
வேண்டாமா ? எங்களை அந்தக் கமிட்டியிலே போடவேண்
டாமா ? நாங்கள் காங்கிரஸ்காரர்களுக்காகப் பேசவில்லை



இங்கே இருக்கிற எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும்
பேசுகிறேன். தயவுசெய்து மாண்புமிகு உள்ளாட்சித்துறை
அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களை இந்த
டாஸ்க் ஃபோர்சிலே போடவேண்டும். இல்லை என்றால், இந்த
டாஸ்க் ஃபோர்சைக் கலந்து, அதற்கு அடுத்து உள்ள இந்த
சிபாரிசுக் கமிட்டியிலே சட்டமன்ற உறுப்பினர்களை நீங்கள்
தயவுசெய்து சேர்த்துக்கொள்ள வேண்டும். பாராளுமன்ற
உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். நிச்சயமாக
இந்த ஊராட்சி ஒன்றியத் தலைவரை விட்டுவிட்டு இந்த டாஸ்க்
போர்சை அமைப்பது, மாப்பிள்ளை இல்லாமல் நீங்கள்
செய்கின்ற கல்யாணம் போன்றது. அந்தக் கல்யாணத்திற்கு
அந்தஸ்து இருக்காது. எதற்கு அவர்களுக்கு ஓட்டு, சேர்
மனுக்கு எதற்காக ஓட்டு ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர்
ஆல்போன்ஸ் அவர்கள் மாப்பிள்ளை இல்லாத கல்யாணமா
என்றார்கள். யார் உண்மையான மாப்பிள்ளையோ, அவர்
களுக்குத்தான் திருமணம் நடைபெற வேண்டுமே தவிர,
போலி மாப்பிள்ளைகளுக்கு திருமணம் நடக்கக்கூடாது.
இதனால் மற்றவர்கள் போலி என்று எடுத்துக்கொள்ளக்
கூடாது. பயனீட்டாளர்களைத் தேர்வு செய்வதற்கு, அந்த
கிராமத்தில் உள்ள, அதாவது ஊராட்சி ஒன்றியக் குழு,
கிராமங்களைத் தேர்வு செய்கிறது. அந்தக் குழுவிற்குத்தான்
இப்போதும் அதிகாரம் இருக்கிறது. பயனீட்டாளர்களைத்
தேர்வு செய்வதற்கு அந்த உள்ளூரிலே இருக்கிற ஊராட்சி
மன்றத் தலைவர், அங்கே இரண்டு பெண்கள், ஒரு சிறு
விவசாயி, தாழ்த்தபட்ட மலைஜாதி வகுப்பினரைச் சேர்ந்த
பிரதிநிதி, அதேபோல் சிறு விவசாயி, இவர்களில் படித்த
இளைஞர் ஒருவர், ஆகிய இவர்களைக் கொண்ட ஒரு குழு
போடப்படுகிறது. ஆகவே உண்மையான மாப்பிள்ளை நல்ல
திருமணத்தைக் செய்து கொண்டு, வாழவேண்டும் என்பதற்
காகத்தான் இந்த ஏற்பாடு.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பாயின்ட் ஆப்
ஆர்டர். மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே,
இந்த டாஸ்க் ஃபோர்ஸ்-சில் ஒரு சிறு விவசாயி, ஒரு படித்த
வேலையில்லாத இளைஞர், பின்தங்கிய சமுதாயத்தைச்
சேர்ந்தவர்கள் எல்லாம் சேர்க்கப்படுகிறார்கள் என்று சொன்
னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமை
நிலையத்திலேயிருந்து ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டு இருப்
பதாகவும், அந்தச் சுற்றறிக்கையை மாவட்டச் செயலாளர்
கள், ஒன்றியச் செயலாளர்கள் எடுத்துக்கொண்டு போய்,
ஒன்றிய பி.டி.ஓ-விடத்திலே கொடுத்து, நாங்கள் கொடுக்
கின்ற பெயர்களை மட்டும், நாங்கள் சிபாரிசு செய்கின்ற

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம] [1989 ஏப்ரல் 19

பெயர்களை மட்டும் இந்த டாஸ்க் ஃபோர்சிலே போட
வேண்டும் என்று நிர்பந்திப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்
கிறது. இது அமைச்சருக்குத் தெரியுமா? நிச்சயமாக
இவற்றை எல்லாம் களையவேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: துணை சபா
நாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ். ஆர். பால
சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன்.
இருந்தாலும் இப்போது இந்த செட்யூல்டு பேங்க் மூலமாக
கடன் கொடுக்கிறார்கள். அதை எப்படிக் கொடுக்கிறார்கள்
என்றால், அவர்கள் கட்சியில் உள்ள எம். பி.க்கள்
கையெழுத்துப் போட்டுக் கொடுத்தால், கடன் கொடுக்
கிறார்கள். யாருக்கு கட்சிப் பிரமுகர்கள் கையெழுத்துப்
போட்டுக் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு மட்டும்தான்
கொடுக்கிறார்கள். அதைத் திருப்பிக் கட்டுகிறார்களா,
இல்லையா என்பது வேறு பிரச்சினை. எல்லாம் பப்ளிக்
மணிதானே. இந்தப் பணத்தைக் கொடுப்பதற்கு என்ன ரகசி
யமான அறிக்கை வேண்டி கிடக்கிறது என்று இப்போது
நேரடி அறிக்கையாகவே வெளியிலே விழாவே போட்டு விடு
கிறார்கள். ஒரு சில இடங்களிலே மந்திரிகள் மேலே போய்
ஏறி நின்று, இவர்களுக்கு எல்லாம் கொடுங்கள் என்று சொன்
னவுடனே அவர்களுக்கு மட்டும், மெம்பர்கள் கையெழுத்து
போட்டு, எம்.பி. சீல் போட்டுக் கொடுத்தால், உடனே
வாங்குங்கள் கடன் என்று சொல்கிறார்கள். அதற்குக் கடன்,
ஆனால் எங்கள் கட்சியின் சார்பில், அல்லது மற்ற கட்சி
களின் சார்பில் போனால், பின்னால் வாருங்கள், இன்னும்
பணம் வரவில்லை, அல்லது வந்தது, எல்லாம் தீர்ந்து போய்
விட்டது, கோட்டா தீர்ந்துபோய்விட்டது என்று சொல்கிறார்கள்.
இந்தமாதிரி நிலை இருக்கிறதே, இதுமட்டும் சரிதானா என்பதை
உறுப்பினர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: துணைத் தலைவர்
அவர்களே, தேசியமயமாக்கப்பட்ட வர்த்தக வங்கிகள்
அனைத்திலும் அனைத்துக் கட்சிக்காரர்களுக்கும் பாரபட்ச
மின்றி வழங்கப்படுகிறது.

திரு. பெ. சீனிவாசன்: துணைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் சொல்
வது எந்த நாட்டிலே நடக்கிறது என்பதை நான் தெரிந்து
கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: தமிழ்நாட்டிலே
ந்தியாவிலேதான் நடைபெறுகிறது.



1989 ஏப்ரல் 19]

(முற்பகல் 11-40).

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்தக் கடன்களைப் பெறுவதற்காக
விண்ணப்பத்தாள்கள் அச்சடிக்கப்பட்டு காங்கிரஸ் கட்சியி
னுடைய அலுவலகங்களிலே வினியோகிக்கப்படுகின்றன. அது
வும் விலை கொடுத்து வினியோகிக்கப்படுகின்றன. அது
எல்லோருக்கும் தெரிந்த ஒன்று, அதுவும் காங்கிரஸ் கட்சி
யிலே உறுப்பினர்களாகச் சேர்ந்தால்தான் அது கொடுக்கப்
படுகின்றது. அவர்களுடைய சிபாரிசுகளின் அடிப்படையில்
தான் கடன் தொகைகளும் வழங்கப்படுகின்றன. நான்
பொறுப்பேற்றுக்கொண்டு இதைச் சொல்கிறேன். இதை
மறுக்கமுடியுமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்
களே, தயவுசெய்து இன்றையதினம் எந்த மானியத்தின் மீது
நாம் விவாதம் நடத்துகின்றோமோ அதைப்பற்றி பேசுவது
நல்லது. பிரச்சினைகள் வேறு பக்கம் திசை திரும்பினால்
இந்த மன்றத்தினுடைய நடவடிக்கைகளை குறிப்பிட்ட
நேரத்தில் முடிக்க முடியாது. எனவே இந்தப் பிரச்சினைக்கு
தயவுசெய்து முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்று நான் கேட்
டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள்
சொன்ன குற்றச்சாட்டையும், தேவைப்பட்டால் வேறு மானி
யத்தில் வைத்துக்கொள்ளலாம், அதையும் நீக்கிவிடுவது
நல்லது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களிடம் நான்
ஒரு கோரிக்கையினைக் கொடுத்தேன். எல்லா சட்டமன்ற
உறுப்பினர்களின் சார்பாகவும் நான் கேட்கிறேன். தயவு
செய்து அந்த டாஸ்க் போர்சிலே சட்டமன்ற உறுப்பினரை
ஒரு உறுப்பினராகத் தாங்கள் நியமனம் செய்யவேண்டும்.
நீங்கள் அமைத்த கமிட்டியை வேண்டாம் என்று நான்
சொல்லவில்லை. அவர்களுக்கு உதவி செய்வதற்காகவாவது
ஆலோசனை சொல்வதற்காகவாவது, எங்களையும் அந்த
டாஸ்க் போர்சில் உறுப்பினர்களாக நியமிக்க வேண்டுமென்று
சொல்லி, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களின்
சார்பிலேயும், இங்கே இருக்கின்ற எல்லா கட்சி உறுப்பினர்
களின் சார்பாகவும், நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை
கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து வனவிலங்கு இனத்திலும் சேராமல், பறவை இனத்
திலும் சேராமல், வௌவால் வாழ்கின்றதைப் போல், ஒரு
டவுன் பஞ்சாயத்தும் இருக்கிறது. இந்த டவுன் பஞ்சாயத்தில்

இருந்து, கிராமப்புற வளர்ச்சியும் அதற்குக் கிடைக்கவில்லை. நகர்ப்புற மக்களுடைய வசதியும் அதற்குக் கிடைக்காமல், அந்த மக்கள் மிகவும் சங்கடப்படக் கூடிய ஒரு சூழ்நிலையில் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் லட்சுமி அவர்கள் பேசும்போதுகூட சொன்னார்கள். ஹரிஜன மக்களுக்கு கட்டித் தரக் கூடிய வீடுகள், டவுன் பஞ்சாயத்தில் இருக்கக் கூடிய மக்களுக்கு கட்டிக் கொடுக்கப்படுவதில்லை. மேச்சிங் கிராண்ட் அவர்களுக்குக் கிடையாது. ஆனால் நகர்ப்புறத்தில் வாழ் கின்ற மக்களுக்கு இருக்கக் கூடிய சவுகரியங்களாவது அவர்களுக்குக் கிடைக்கிறதா என்று சொன்னால், அதுவும் இல்லை. அந்தப் பக்கத்தில் இருக்கிற மக்கள் சேர்மனுக்கு ஓட்டு போட்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து கௌன்சிலில் அந்த பிரசிடென்ட் மெம்பராக இருக்கிறார். ஆனால் பஞ் சாயத்து யூனியனுக்கும் அந்த டவுன் பஞ்சாயத்திற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. உதாரணமாக ஒரு டவுன் பஞ்சாயத்தில் இருக்கக் கூடிய குழாய் பம்ப் ரிப்பேர் ஆனது என்று சொன்னால், யூனியன் ஆபிசில் இருக்கிற மெக்கானிக் போய்ப் பார்த்து, அதை ரிப்பேர் செய்ய முடியாது. அந்த மெக்கானிக் சும்மாயிருந்தால் கூட, அப்படிப்பட்ட ஒரு சூழ் நிலை. அது எதற்காக இருக்கிறது? இது ஒரு ஃபிராட். அப்படிப்பட்ட ஒரு செட்-அப் தேவையா? டவுன் பஞ்சாயத்து என்ற அமைப்பை ஏற்படுத்தி, தனியாக வெளவாலைப் போன்று வாழ்வதற்கு நீங்கள் அனுமதிக்கப் போகிறீர்களா? அதைப் பற்றி அரசு என்ன நிலை எடுக்கப்போகிறது? அந்த டவுன் பஞ்சாயத்து மக்கள் ஒன்றியத் தலைவருக்கு ஓட்டு போட வேண்டிய அவசியம் என்ன? ஊராட்சி ஒன் றியத் தலைவர் ஒன்றியக் கவுன்சிலில் மெம்பராக இருக்க வேண்டிய அவசியம் பற்றி எல்லாம் இந்த அரசு விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இரண்டு பி. டி. ஓ-க்கள் வைத்திருக்கிறார்கள். வங்காளத் திலே இரட்டை ஆட்சி இருந்தது மாதிரி, ஒரு பஞ்சாயத்திற்கு இரண்டு பி. டி. ஓ-க்கள், சிலவற்றில் 4, 5 பி. டி. ஒக்கள் கூட இருக்கிறார்கள். அங்கே என்ன நடக்கிறது என்றால், கோஷ்டி சண்டை நடக்கிறது, அவர் ஸ்கீம் பி.டி.ஓ. ஆள். இவர் ரெகுலர் பி.டி.ஓ. ஆள். அப்படி பஞ்சாயத்துக்கள் இன்று ஒரு குழப்பமான நிலையில் நடந்து வருகின்றன. அப் படித் தேவையில்லை. வேண்டுமானால் ஒரு பி.டி.ஓ-வை கமிஷனராகப் போட்டுவிடுங்கள். இன்னொருவரை பி.டி.ஓ. வாகப் போடுங்கள். சன்ட்ரோலை ஒருவரிடம் கொடுத்தால் தான் அங்கு பணிகள் ஒழுங்காக நடக்கும். இப்போது சேர்மன் நடுவிலே இருக்கிறார். ஸ்கீம் பி.டி.ஓ. ஒரு பக்கம் இருக்கிறார். ரெகுலர் பி.டி.ஓ. இன்னொரு பக்கம் இருக் கிறார். எனவே பஞ்சாயத்து யூனியனில் எந்த வேலையும் நடக்கவில்லை. 10 கிராம சேவக்குகளை எல்லாம் பாதி



பாதியாக பிரித்து கைவசம் வைத்திருக்கிறார்கள். பஞ்சாயத்துக்களில் எந்தவிதமான களப்பணிகளும் நடக்கவில்லை. எந்தவிதமான திட்டமும் நடக்காமல், மினிஸ்ட்டீரியல் வேலையும், டெவலப்மெண்ட் வேலையும் ஒன்றுக்கொன்று குழம்பி, ஒன்றியங்களில் பணிகள் ஸ்தம்பித்துப் போகக் கூடிய நிலைமையில் இன்றைக்கு இருக்கிறது.

டவுன்ஷிப்களில் கமிட்டிகளே போடாமல் அப்படியே வைத்துருக்கிறார்கள். குத்தாலம் டவுன்ஷிப்பில் என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே, அதற்கு டவுன்ஷிப் கமிட்டி போடப்படவில்லை. மணிமுத்தாறு டவுன்ஷிப்பிற்கு இந்த கமிட்டி போடப்படவில்லை. இந்த கமிட்டிகள் விஷயத்தில் ஏற்கனவே கேஸ் போட்டிருக்கிறீர்கள், கடந்த ஆட்சியிலே. மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், அந்தக் கேஸ்களை அரசு வாபஸ் வாங்கி விடலாம். வாங்கிக் கொண்டு சட்டவிதிகளுக்கு உட்பட்டு, டவுன்ஷிப் கமிட்டிகளை நீங்கள் உடனடியாக நியமனம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து நிறைய திட்டங்சள் கொண்டு வந் திருக்கிறார்கள். (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு உறுப்பினருக்கு உடனேயே பதில் சொல்லிவிடுகிறேன். நகரிய கமிட்டியை விரைவில் அமைக்க இருக்கிறோம். யார் யாரை குழுவிலே உறுப்பினர்களாக போடலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயும் நகரியத்திலேயும் விவரம் கேட் டிருக்கிறோம். வந்தவுடன் விரைவில் அந்த நகரியக் குழு அமைக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்:** ஆர். எல். இ. ஜி. பி. என். ஆர். இ. பி. போன்ற திட்டங்களெல்லாம் சீசனல் ஸ்கீம்ஸ். இவைகளுக்கு பெர்மெனன்சி கிடையாது. இப்போது எல்லாமே இலவசமாக ஆரம்பித்திருக்கிறது. இலவச சேலை, இலவச அரிசி, இலவச செருப்பு, இலவச பற்பொடி, இப்போது கடைசியிலே கோழி முட்டையிலே வந்து நிற்கிறது. இது எங்கே போய் முடியுமோ என்று தெரியவில்லை. இவைகளினால் அந்தக் கிராமப்புற மக்களுக்கு ஒரு நாள் நன்மை கிடைக்குமே ஒழிய நிரந்தரமான தீர்வு இருக்க முடியுமா என்பதை அரசு சிந்திக்க வேண்டும். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது பாயின்ட் ஆப் ஆர்டர் வேண்டாம். நேரம் இல்லை.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : நான் முடித்து விடு கிறேன். நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்று சொன் னால் ஒரு ஆக்ட் இருக்கிறது. மகாராஷ்டிராவிலே போய் பாருங்கள். எம்பிளாய்மெண்ட் கியாரிண்டி ஆக்ட் என்று ஒரு ஆக்ட் இருக்கிறது. அந்த எம்பிளாய்மெண்ட் கியாரண்டி ஆக்டிலே அந்த கிராமத்திலே வாழ்கிற அத்தனை ஏழை களுக்கும் வருடத்திலே 250 நாளைக்கு வேலைக்கு உத்திர வாதத்தை மகாராஷ்டிரா அரசு கொடுத்திருக்கிறது. மாண்பு மிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அந்தச் சட்டத் டத்தை தயவுசெய்து வாங்கிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். காங்கிரஸ் ஆளுகிற மாநிலம் என்பதாலே அதை நீங்கள் தயவுசெய்து ஒதுக்கிவிடாதீர்கள். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்ற பரம்பரையிலே வந்தவர்கள் நீங்கள். ஆகவே அந்தச் சட் டத்தை வாங்கிப் பார்த்து, இப்படி சீசனலாக பண்ணாமல், சேலை, வேட்டி, செருப்பு, பல்பொடி, இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து நிரந்தரமான ஒரு திட்டமாக, இந்த எம்பிளாய்மெண்ட் கியாரண்டி ஸ்கீம் ஆக்ட்டை அமல்படுத்த முடியுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும்.

இன்னும் ஒரு விஷயம். உள்ளாட்சி மன்றங்களிலே பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன. அதைப்பற்றி யாருமே கவனிப்ப தில்லை. ஆனால் அதைப்பற்றி ஒரு சிறிய கருத்தை அமைச் சருடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். அரும்பாக்கத்தில் ஒரு கார்ப்பொரேஷன் ஸ்கூல் இருக்கிறது. அங்கே ஒரு அம்மா 'தமிழரசி' என்ற அழகான தமிழ்ப் பெயர் கொண்ட ஒரு அம்மா ஹெட்மிஸ்ட்ரசாக இருக்கி றார்கள். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே இருந்து போய் அந்தப் பள்ளிக் கூடத்தைப் பற்றி போட்டோ எடுத்து கார்ப்பரேஷன் ஸ்கூல் எப்படி இருக்கிறது பார்த்தீர்களா என்று ஒரு ஆர்டிகிளும் எழுதிவிட்டார்கள். இப்போது அந்த ஹெட்மிஸ்ட்ரஸ் அம்மாவைப் போட்டு பழி வாங்குகிறார்கள். அந்த அம்மா என்ன செய்யும் பாவம். பள்ளிக் கூடம் இடிந் திருக்கிறது. பத்திரிக்கைக்காரன் வந்து படம் எடுத்திருக்கிறான். ஆனால் பெண்களுக்கு முக்கியத்துவம் என்று சொல்லுகிறீர்கள். தமிழ் வளர்க்க வேண்டுமென்று சொல்லுகிறீர்கள். தமிழரசி என்ற பெயருள்ள பெண் பழி வாங்கப்படுகிறாள். ரொம்ப சங்கடம் அந்த அம்மாவிற்கு. கண்ணீர் விட்டு அழுகிறார்கள். இது மாதிரி நிலைமை எல்லாம் நான் அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : அது என் னுடைய கவனத்திற்கு வரவில்லை. எப்பொழுது அவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். எப்பொழுது அந்த ஆர்டர் வந்தது என்பதைத் தெரிவித்தால் நலமாக இருக்கும்.



திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : நான் அது சம்பந்த மான பேப்பர்களை அமைச்சரிடத்திலே கொடுத்து விடுகிறேன் ஒரு மாதத்திற்கு முன்னால் வந்தது. ஆகவே அந்த மகாராஷ் டிர அரசினுடைய நடவடிக்கைகளைப் பார்த்து அதைப் போன்று— இது மாதிரி சிதறுகிற திட்டங்களாக இல்லாமல்— எம்பிளாய்மெண்ட் கியாரண்டியாக, கிராமப்புறங்களிலே வாழ் கிற மக்களுக்கு சட்டம் மூலம் உரிமையாக்கி உறுதி செய்து கொடுக்கிற ஒரு சட்டத்தை, கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அதிக அதிகாரத்தை உள்ளாட்சி நிறு வனங்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

## 5. அறிவிப்புகள்.

### (அ) பேரவை அலுவல்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட வாறு மாற்றங்கள் செய்யப்பட உள்ளன என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன் :

25—4—1989 அன்று மாலை எடுத்துக் கொள்ளப்பட இருந்த கைத்தறியும் துணித் தொழிலும் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஆகிய மானியக் கோரிக்கைகள் 21—4—1989 அன்று மாலை எடுத்துக் கொள்ளப்படும்.

27—4—1989 அன்று காலை எடுத்துக்கொள்ளப்பட இருந்த பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் 22—4—1989 அன்று எடுத்துக் கொள்ளப்படும்.

21—4—1989 அன்று மாலையில் எடுத்துக் கொள்ளப்பட இருந்த கூட்டுறவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் 25—4—1989 அன்று காலையில் எடுத்துக் கொள்ளப்படும்.

25—4—1989 அன்று காலையில் எடுத்துக் கொள்ளப்பட இருந்த பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வை களும்— நிருவாகம், மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாவட்ட நிருவாகம், ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும், பல்வகை, பல்வகை மூலதனச் செலவு, மாநில அரசு வழங்கும் கடன் களும் முன்பணங்களும் ஆகிய மானியக் கோரிக்கைகள் அன்று மாலை எடுத்துக்கொள்ளப்படும்.

[பேரவைத் துணைத் தலைவர்]

28—4—1989 அன்று எடுத்துக் கொள்ளப்பட இருந்த மாநில சட்டமன்றம் மற்றும் தேர்தல்கள் 27—4—1989 அன்று மாலை எடுத்துக் கொள்ளப்படும்.

22—4—1989 அன்று எடுத்துக் கொள்ளப்பட இருந்த பால் வழங்கு திட்டங்கள், மீனளம் மற்றும் கால்நடை வளர்ப்பு 28—4—1989 அன்று காலை எடுத்துக் கொள்ளப்படும்.

மாற்றங்கள் குறித்த திருத்திய நிகழ்ச்சி நிரல் உறுப்பினர்களுக்கு மாலை அனுப்பி வைக்கப்படும்.

(முற்பகல் 11-50).

மானியக் கோரிக்கைகள், 1989-90—விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

*திரு. கே. பிச்சாண்டி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் என்னுடைய கன்னிப்பேச்சினை ஆற்றுவதற்கு காரணமாக இருக்கின்ற தமிழகத்தின் ஒப்பற்றதலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், கல்வி அமைச்சர் இனமான பேராசிரியர் அவர்களுக்கும், இளைஞர் அணி தளபதி மு. க. ஸ்டாலின் அவர்களுக்கும் என்னை கழக உணர்வோடு வளர்த்த என்னுடைய தந்தை குப்புசாமி அவர்களுக்கும், நகர தந்தை எஸ். முருகய்யன் அவர்களுக்கும், எங்கள் தொகுதி வளர்ச்சிக்காக தானைத் தலைவர் கலைஞர் அவர்களை நம்பி அதிக வாக்கு வித்தியாசத்தில் என்னை வெற்றிபெறச் செய்த திருவண்ணாமலைத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், கழக தொண்டர்களுக்கும், இளைஞர் அணித் தோழர்களுக்கும் என் நன்றியை இந்த மன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாய வளர்ச்சித் திட்டம் மற்றும் நகராட்சி நிர்வாகம் பற்றிய மானிய கோரிக்கையின்மீது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தின்முன் வைத்திருக்கக்கூடிய கோரிக்கைகளை முழுவதுமாக ஆதரித்து என் கருத்துக்களை கூற விரும்புகிறேன். சமுதாயம் என்ற காட்டைத் திருத்தி ஒரு சமதர்மப் பூங்காவாக தமிழ் திருநாட்டை மாற்ற முனைந்திருக்கும் தானைத் தலைவர் கலைஞர் அவர்களின் வழிபோற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். சமுதாய நல வளர்ச்சி மற்றும் நகராட்சி நிர்வாகம் என்று வருகின்ற போது எங்கள் தொகுதியில் பல்வேறுபட்ட திட்டங்களைச் செயல்படுத்தினால் தான் பெருகி வரும் மக்கள் தொகை விரிவடைந்து வரும் நகர வளர்ச்சி இவைகளுக்கு ஈடுகொடுக்க இயலும். பல ஆண்டுகளுக்கு முன்னாலே திட்டப்பட்ட திருவண்ணாமலை நகரின் குடிநீர்த் திட்டம் இன்றைக்கு முழுவதுமாக பலன்



அளிக்கவில்லை. எனவே 6 1/4 கோடி ரூபாய் செலவில் உலக வங்கியின் உதவியுடன் கூடிய புதிய குடிநீர் திட்டத்தை வேகமாக செயல்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டும்.

அதே போல தொகுதியில் உள்ள அனைத்து கிராமங்களிலும் குடிநீர் குழாய் கிணறுகளும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் விரைந்து அமைக்க ஆவன செய்ய வேண்டும். திருவண்ணாமலைத் தொகுதியைச் சேர்ந்த வேட்டவலம் பேரூராட்சிக்கு தென்பெண்ணை ஆற்றிலிருந்து கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மின்சார தடை மற்றும் குறைந்த மின் அழுத்தம் காரணமாக குடிநீர் பொதுமக்களுக்கு தினசரி கிடைக்காமல் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை கிடைப்பது— எல்லா பகுதிகளுக்கும் வழங்கப்பட்டாலும்— மக்கள் அல்லல்படுகிறார்கள். எனவே குறைந்த மின் அழுத்தம் மின் தடை ஆகியவை நீக்கப்பட்டு முறையான சரியான மின்சாரமும், அதன் மூலமாக பொது மக்களுக்கு குடிநீர் கிடைக்கவும் அரசு வழி வகை செய்ய வேண்டும்.

கீழ்ப்பெண்ணாத்தூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம் உலக வங்கி உதவியுடன் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இந்த வறட்சி காலத்தில் அப்பணியை விரைவாக நிறைவேற்ற அரசு முனைந்து ஆவன செய்து கீழ்ப்பெண்ணாத்தூர் மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.

அடுத்து சாலைகள். சாலைகளைப் பொறுத்தவரையில் எனது தொகுதியில் நகரமானாலும், பேரூர், சிற்றூரானாலும் கடந்த 13 வருடங்களாக சீரமைக்கப்படவில்லை. கிராமத்திற்குள்ளே செல்லக்கூடிய டவுன் பஸ்கள் எல்லாம் சரியான சாலை வசதிகள் இல்லாததால் ஊருக்குள்ளே செல்லாமல் அவதிப்படுகிறார்கள். முழுவதும் சாலை வசதிகளே இல்லாத கிராமங்களும் இருக்கின்றன. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால் திருவண்ணாமலை நகருக்கு அருகாமையில் உள்ள சாவல்பூண்டி கிராமம் இன்றைக்குத் தனித் தீவாக காட்சி அளிக்கிறது. அந்த கிராமத்திற்கு பாலமும் போடப்படவில்லை. சாலை வசதிகளும் செய்யப்படவில்லை. ஆகவே அதை உடனடியாக செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எமது நகரைப் பொறுத்தவரை பெயரே மலை நகரம் என்ற பெயர் கொண்ட நகரம். எதிர்காலத்தில் மாவட்டத்தின் தலைநகராகப் போகின்ற நகரம். வளர்ந்து வரும் நகரம். மேடு, பள்ளம் நிறைந்த தெருக்களைக் கொண்ட நகரம். எமது நகரச் சாலைகளில் மழை பெய்தால் மலையிலிருந்து வருகின்ற வெள்ளம் வாய்க்கால்களில் மண் தூர்ந்து அடிக்கடி மண் தூர்க்கப்பட்டு ரோடுகளில் வெள்ளம் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது. அதை நிபுணர்களோடு கலந்து பேசி, பாதாளச் சாக்கடைத் திட்டம் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல வளர்ந்து வரும் நகரத்தின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நகரைச் சுற்றி பை-பாஸ் ரோடு அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை நகரம் கடலுக்கு அருகில் இல்லாவிட்டாலும் சமுத்திரம் என்ற பெயரைக் கொண்ட பெரிய நகர எல்லை விளிம்பில் ஏரி இருக்கிறது. அந்த ஏரிக்கு சாத்தனூர் அணையிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து நிரப்பி அந்தப் பகுதியில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்களுடைய பிரச்சினையைத் தீர்த்து சமுதாய வளர்ச்சியிலே அவர்கள் ஏற்றம் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல சமுத்திரம் ஏரியிலிருந்து ஓலையாறு என்று சிறிய ஆறு உற்பத்தியாகி தென்பெண்ணை ஆற்றில் போய் கலக்கிறது. ஓலையாற்றின் மூலமாக நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாய்ச்சல் பெறுகின்றன. அந்த ஒலையாற்று தண்ணீர்— கலைஞர் அவர்களால் 15 வருடங்களுக்கு முன் துவக்கப் பட்ட நந்தன் கால்வாய்த் திட்டம் என்ற திட்டம் கடந்த அரசால் நிறைவேற்றப்படவில்லை. அந்தத் திட்டத்தை நிறைவேற்றி எங்களுடைய பகுதியினுடைய விவசாயப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

சமுத்திர ஏரிக்கு செய்யாற்றிலிருந்து இரையூர் வழியாக வாய்க்காலை வெட்டி சமுத்திர ஏரியை நிரப்பி வைத்தால் கூட ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பயன் அடைவதோடு மட்டும் அல்லாமல் நிலத்தடி நீர் வசதி இல்லாத புஞ்சை நிலங்களுக்கும், குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நிர்வாக வசதிக்காக நீண்டகாலமாக பிரிக்காமல் ஒதுக்கப் பட்ட பெரிய வடஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் மக்களை உடனடியாக விரைந்து சென்றடைய. எனது மாவட்டத்தை உடனடியாக இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கோரிக்கையாக வைக்கிறேன்.

எங்கள் திருவண்ணாமலைத் தொகுதியில் நகராட்சியினுடைய பள்ளிக் கட்டிடங்கள் ஆனாலும், ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்களானாலும் மிகவும் சீரழிந்து இருக்கின்றன. இவற்றைப் புதுப்பிப்பதற்காக அதிக நிதி ஒதுக்க வேண்டும்.

திருவண்ணாமலைப் பகுதியில் ஒரு ஆடிட்டோரியம் அரசு செலவில் அமைத்து பொது நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்வதோடு, விளையாட்டுக்கள், உடற் பயிற்சிகள் போன்றவற்றை ஊக்குவிக்க விளையாட்டு மைதானம் அமைக்க ஆவன செய்ய வேண்டும்.



ஆதிதிராவிட மக்களுக்கு கிராமப் பகுதிகளில் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுப்பதைப் போலவே நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்தி தொகுப்பு வீடுகள் நகரப் பகுதிகளிலும் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

ஊராட்சி மன்றங்களில் குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளுக்கும், தெரு விளக்குகளுக்கும் மின் இணைப்பு வழங்குவதற்குக் கூட மின்சார இலாக்காவில், முன்னுரிமை என்றும், காத்திருக்கவும் சொல்லி விடுகிறார்கள். குடிநீருக்கும், தெரு விளக்குகளுக்கும் எவ்விதத் தாமதமுமின்றி மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும். நகராட்சிகளில் துப்புரவுப் பணிகளைப் பொறுத்த வரை, விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப குப்பைகளை அள்ளுவதற்கும், வெளியேற்றுவதற்கும் புது மாதிரியான இயந்திரங்களைப் பயன்படுத்த வேண்டும்.

அதே போல், நகராட்சியில் பணிபுரிகின்ற சுகாதாரத்துறை அலுவலர்கள் சுகாதாரத் துறையின் கீழ் பணிபுரிவதால், பல சமயங்களில் ஆணையருடைய உத்தரவுக்குக் கீழ்ப்படியாமல் தனித்து இயங்கக் கூடிய சூழ்நிலையில் உள்ளனர். எனவே, சுகாதார அதிகாரிகள் ஆணையருக்கு ஒத்துப்போகும் ஒரு நிலையில் அரசு விதிகளை மாற்றியமைக்க வேண்டும். நகராட்சி லாரிகளையும், வாகனங்களையும் பழுது பார்ப்பதற்கு அரசாங்கமே ஒரு பொறியியல் கூடத்தை ஏற்படுத்தி, அதனால் ஏற்படும் வீண் செலவுகளைத் தவிர்த்து, ஒழுங்காக ரிப்பேர் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்த வரையில் பல்வேறு துறைகளில் இரண்டு ஆண்டுகள் பணி முன்பயிற்சி பெற்றுள்ள கிராம சேவகர்கள், விரிவாக்க அலுவலர்கள் போன்றவர்களை அலுவலகப் பணிக்கு பணி மாற்றம் செய்துள்ளனர். அதனால் மக்களின் தேவைப் பணிகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் பின் தங்கிப் போய் இருக்கின்றன. இந்த அரசு ஆணையை அரசு பரிசீலிக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஊராட்சி மன்றங்களில் பகுதிநேரப் பணி செய்பவர்களை நிரந்தரமாக ஆக்க ஆவன செய்ய வேண்டும். சினிமா தியேட்டர்களில் காம்பவுண்ட் வரிகள் என்று போட்டதால் நிறைய முறைகேடுகள் நடைபெறுகின்றன. ஆகவே, அதைக் கண்டுபிடித்து, நகராட்சிக்கு அதிகம் வருமானம் வருவதற்கு எற்பாடுகள் செய்ய வேண்டும். மக்களின் உணர்வுகளை மதிக்காமல் உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரங்களைப் பறித்து சென்ற அரசு செய்த கொடுமைகளைக் களைந்து மீண்டும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கி, சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் செம்மையாக நடைபெறச் செய்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, கோடையிலே வரும் குளிர் நிலவாய் உள்ள இந்த மானியத்தை வரவேற்று அமைகிறேன், நன்றி, வணக்கம்.

14436
D
V211,31'N89
N99.1.2

***திரு. எஸ். ஏ. தங்கராஜன் :** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி வளர்ச்சி
மன்றங்களுக்கு அரசு அறிவித்ததைப் போல புதிய அதிகாரங்
களை வழங்குவதோடு, நிதி ஆதாரங்களை வழங்குவதற்கான
திட்டவட்டமான ஆணைகளை அரசு அளிப்பதன் மூலம் தான்
முழுமையான சுதந்திரத்தோடும், நிதியாதாரத்தோடும், இந்த
மன்றங்கள் செயல்படுவதற்கு ஏதுவாக இருக்கும் என்ற முறை
யில் நான் சில விவரங்களை மட்டும் அரசின் கவனத்திற்கு
கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

அதிகாரங்கள் மட்டும் அளிப்பது போதாது. நிதி ஆதாரங்
கள் இல்லாத நிலையில் இந்த மன்றங்கள், ஊராட்சி வளர்ச்சி
மன்றங்கள் போதிய வளர்ச்சி குன்றி இருப்பதை அரசின் கவனத்
திற்குக் கொண்டு வந்து, கடைகள், கலைக்கூடங்கள், திரை
யரங்கம், திருமண மண்டபங்கள், டவுன் ஹால், விளையாட்டு
அரங்கம் போன்ற கட்டிடங்கள் கட்டி அதன்மூலம் இந்த
உள்ளாட்சித் துறை நிறுவனங்களுக்கு நிதியாதாரத்தைத் தேடிக்
கொள்வதற்கான திட்டவட்டமாக அரசு அறிவிப்பு இருக்க
வேண்டும்.

இவ்வாறு, இந்த ஊரக வளர்ச்சி, உள்ளாட்சி மன்றங்
களுக்கு அதிகாரமும், நிதி வசதியும் இருப்பதன் மூலமாகத்
தான் மக்களின் ஆட்சி மன்றங்களாக வளர்ந்து மாநில
அரசே வலிவும், உரமும் பெற்று இருக்கமுடியும் என்பதை
அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

ஆக, ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் பெரும் கடமை
யாக இருப்பது. பொதுச் சுகாதாரம் என்பது இந்த ஊரக
வளர்ச்சி உள்ளாட்சி மன்றங்களுடைய கடமையாகும். கக்கூஸ்,
சாக்கடை, குப்பைக் கூளங்களை அப்புறப்படுத்துவது
தகைய சுகாதாரப் பணியில் 3½ இலட்சம் இத்
தொழிலாளர்கள் ஈடுபட்டு இருக்கின்றனர். துப்புரவுத்
ஊழியர்களாக இன்றுவரை அங்கீகரிக்கப்படவில்லை. அவர்கள் அரசு
ஆட்சி ஊழியர், சுடுகாட்டுக் காவலர் ஆட்சி ஊழியர், ஆனால்
மூன்றரை இலட்சம் துப்புரவுத் தொழிலாளர்கள் அரசு ஊழியர்
களாக அங்கீகரிக்கப்படாமல் இருக்கின்ற நிலை கொடுமை
யிலும் கொடுமையானது. பேரூராட்சி நகராட்சியாக மாறி
விட்டது. நகராட்சிகள் மாநகராட்சிகளாக மாறிவிட்டன.
ஆனால் கடந்த 50 ஆண்டு காலமாக துப்புரவுத் தொழிலாளர்
கள் இந்தப் பணிக்கு புதியவர்கள் அமர்த்தப்படாத நிலை
இருக்கின்றது. 1976 ஆம் ஆண்டு 'இருண்ட இந்தியா' என்று
அழைக்கப்பட்ட காலம், அவசர கால நிலையின் போது,
தமிழக அரசால் போடப்பட்ட உத்தரவு ஜி.ஓ. எண். 389-இல்
புதிய ஆட்கள் எடுப்பதற்குத் தடையாக இருக்கிறது. தடை
விதித்திருக்கிறது. காலியிடங்கள் நிரப்பப்படாத நிலை நீடித்



துக்கொண்டிருக்கிறது. அதையும் அரசின் கவனத்திற்கு
நான் கொண்டு வந்து அந்த உத்தரவு ரத்துச் செய்யவேண்டும்
என்று கேட்டுக் கொள்கின்றேன்.

(நண்பகல் 12-00)

மனிதன் மலத்தையும் மனிதன்
புழுமேயும் குப்பையையும், கொடுமை உலகத்தில்
தன் கையில் எடுத்து தலையில் சுமக்கின்ற
வேறு எந்த நாட்டிலும் இல்லை என்பதை இந்த அவைக்கு
தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அடிப்படையான சமு
தாயத்தினுடைய கடமைகளை நிறைவேற்றுகின்ற இந்த
துப்புரவுத் தொழிலாளர்களை அரசு ஊழியர்களாக அங்கீ
கரித்து அவர்களுக்கு குடியிருப்பு வசதிகளைச் செய்து தர
வேண்டும். குடியிருப்பு வசதிகளை செய்வதற்கு எண்ணற்ற
திட்டங்கள் இருந்தாலும் இந்த சமுதாயத்தின் கடைநிலை
ஊழியர்களாக இருக்கின்ற இந்த சுகாதார தொழிலாளர்
களுக்கு போதிய பாதுகாப்பு இல்லாத நிலை நீடிக்கிறது.
மேலும் இந்த மன்றங்கள் நிறைவேற்றும் தீர்மானங்களுக்கு
மாநில அரசிடமிருந்து காலத்தில் அனுமதி கிடைப்பது இல்லை.
அதன் காரணமாக நடைமுறை வேலைகள் பெரும் அளவுக்கு
பாதிக்கப்பட்டு வருகிறது. சிறு தொழில் கூடங்கள் இந்த
மன்றங்கள் ஏற்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும்.
அவ்வாறு இருந்தால் தான் இந்த வாகன வசதிகளை உடனுக்
குடன் ரிப்பேர் செய்து வேலைகளை துவங்குவதற்கு ஏதுவாக
இருக்கும். ஒரு குப்பை வண்டியினுடைய சக்கரம் பஞ்சர்
ஆகிவிட்டால் இதற்கு டெண்டர் கால்ஃபார் செய்து நிதி ஒதுக்
கீடு செய்வதற்கு அனுமதி வாங்கி செய்யவேண்டும் என்ற கட்டா
யத்தினால் நடைமுறைப் பணி சிக்கல் ஆகிவிடுகிறது. அது
போல கட்டிடங்களை மரமத்து செய்வதற்கு கொத்தனார்
குழுவை வைத்துக்கொள்வதற்கு அனுமதித்தால் தான் பள்ளிக்
கூட கட்டிடங்கள், நகரசபை கட்டிடங்கள் இது போன்ற கட்டி
டங்களில் ஏற்படும் சிறு சிறு மராமத்துக்களை உடனுக்குடன்
கவனிக்கக்கூடிய நிலை எற்படும், அதுபோல் தச்சு வேலைக்
காரர்களுக்கு ஒரு குழுவை இந்த மன்றம் வைத்துக்
கொள்வதன் மூலம் ஜன்னல், கதவு போன்றவைகளை
உடனுக்குடன் மராமத்து செய்வதற்கு ஏதுவாக இருக்கும்,
இந்த வசதிகள் எல்லாம் இல்லாமல் இந்த மன்றங்கள் சுயேச்சை
யாக இயங்குவது என்பது கொடுமையானது, கடுமையானது.

மேலும், பொதுப்பணித்துறை, குடிநீர் வடிகால் வாரியம்,
கல்வித் துறை, மின்சாரத் துறை, இவர்களுடைய ஒத்துழைப்பு
என்பது இந்த மன்றங்களுக்கு போதிய அளவுக்கு இல்லாத
காரணத்தால் ஏற்படும் படியான பிரச்சினைகளுக்கு உடனுக்
குடன் பரிகாரம் காணுவதற்கு முடியாமல் இருக்கிறது.

ஊராட்சிகளில் மன்றத் தலைவருக்கே பழுதுபட்ட மின் விளக்கு களை மாற்றிக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் நகரசபைகளில் மின்சார வாரியம் தான் மாற்ற வேண்டிய நிர்பந்தம் இருக்கிறது, இதனால் இந்த வாரியங்களின் ஒத் துழைப்பு போதுமான அளவுக்கு இந்த மன்றங்களுக்கு இல்லாத நிலை இருக்கிறது. மேலும் அரசின் கவனத்திற்கு நான் ஒன்றை கொண்டுவர விரும்புகிறேன். ரிவிஷன் அதிகாரி என்ற ஒருவரை திடீர் என்று கடந்த கால அரசு போட்டு அவர்கள் இஷ்டப் போல் வரியை உயர்த்தி செல்வந்தர்கள் இடத்தில் பேரம் பேசி செல்வந்தர்களுக்கு வசதியை செய்து விட்டு நடுத்தர மக்கள், ஏழை மக்கள் இந்த வரி உயர்வுக்கு மார்க்கம் இல்லாமல் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, குடிசைகளுக்கு இந்த வீட்டு வரியை ரத்து செய்ய வேண்டும் என்று அரசை நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மன்றங்களில் கண்டிராக்ட் ஒழிப்பு முறை சட்டத்தை இந்த அரசு கொண்டுவர வேண்டும். காண்டிராக்ட்காரர்களின கொள்ளைக்கு எல்லை இல்லாமல் இருக்கிறது. அவர்கள் கடைகளில் வரி வசூலிப்பது, சந்தைகளில் கட்டணம் வசூலிப்பது இதுபோன்ற வசூலில் ஷெட்டியூல் ரேட்டுக்கு மேலே இந்த காண்டிராக்டர்காரர்கள் கொள்ளையோ கொள்ளை என்று அடிக்கிறார்கள்.

ஒரு விஷயத்தை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். நவீன கழிப்பறைகள் என்று கட்டப் பட்டு இருக்கின்றன. இந்த நாட்டு மக்களுடைய அவசிய தேவைக்காக. ஆனால் அந்த கழிப்பறைக்கு செல்வதற்கு சிறு நீர் கழிப்பதற்கு 30 பைசா முதல் 50 பைசா வரையில் வசூ லிக்கப்படுகிறது. இது பெரிய கொடுமையானது. ஒரு குடும்பம் அவசரமாக பஸ்சில் பயணம் செய்யக்கூடியவர்கள் ஒரு பஸ் நிலையத்தில் இறங்கினால் அந்த குடும்பம் முழுவதும் சிறு நீர் கழிக்க வேண்டும் என்று சொன்னால் 3 ரூபாய் முதல் 4 ரூபாய் வரை கொடுக்க வேண்டியிருக்கிறது. இது அரசு செய்ய வேண்டிய கடமைக்கு இவ்வாறு நிதி வசூல் செய்வது என் பது கொடுமையானது ஆகவே, இந்த காண்டிராக்ட் முறையை ரத்து செய்ய வேண்டும். கழிப்பறை இல்லாமலேயே தட்டிகள் கட்டிகொண்டு கரூர் பஸ் நிலையத்திலும், கடலூர் பஸ் நிலையத்திலும் ஏராளமான காசுகள் வசூலிக்கப்படுகிறது. இது வேதனைக்குரியது.

அதுபோலவே ஆசிரியர்கள் சம்பளம், பள்ளிக்கூட மராமத்து இவைகளை நேரடியாக அரசு மேற்கொள்ள வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். அது இல்லை என்று சொன்னால் இந்த சின்னசின்ன ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் அவைகளை நிறைவேற்ற முடியாத நிலை நீடித்துக்கொண்டு இருக்கிறது.



லே அவுட் என்று போட்டு நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தை விற்று விட்டுப் போய் விடுகிறார்கள். ஊராட்சி மன்றங்களில் அதற்கு லைட் வசதி, சாலை வசதி, ஓடை வசதி செய்வதற்கு பெரும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, இத்தகைய அங்கீ காரமற்ற மனை அடி நில (லே அவுட்) முறைகளை ரத்துச் செய்வதோடு இந்த லே அவுட் திட்டத்திற்கு ஒரு அடிப்படை யான ஒரு கொள்கையை அரசு பிரகடனம் செய்ய வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதி லுரையில் இதற்கு மாற்றம் காணவேண்டும் என்பதை வற் புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஊராட்சி மன்றங்கள் அரசுக்கு அனுப்பி வைத்திருக் கும்படியான பல கோரிக்கைகள் நீண்ட காலமாக நிறைவேற்றப் படாமல் காலதாமதமாக இருப்பதால் அந்த வேலைகள் தடை பட்டுக் கிடக்கின்றன. மாநில அரசு கொடுக்கின்ற மானி யம், மாநில அரசு கொடுக்கவேண்டிய கிராண்ட் காலா காலத்தில் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஒரு உதாரணத் திற்கு நான் சொல்வேன, திண்டுக்கல் நகராட்சிக்கு ஆரம்பக் கல்வி நிதி 40 இலட்சம் ரூபாய் 3 ஆண்டுகாலமாக கொடுககப்பட வில்லை. மலேரியா தடுப்பு நிதி 23 இலட்சம் ரூபாய் கடந்த 2 ஆண்டு காலமாகக் கொடுக்கப்படவில்லை. குடும்பநலத் திட்டத்தின் கீழ் மாநில அரசாங்கமே மேற்கொள்ளும்படியான இந்தத் திட்டத்திற்கு இரண்டு ஆண்டுக் காலமாக 16 இலட்சம் ரூபாய் கொடுக்கப்படவில்லை. ஆகவே அரசு இவைகளைக் கவனமாகப் பரிசிலித்து இந்த நிதிகளை கொடுப்பதற்கு உடனடியாக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உடுமலை நகரத்திற்கு அரசு ஒப்புக்கொண்ட குடிநீர் திட்டத்திற்கு $1\frac{1}{4}$ கோடி ரூபாய் ஒதுக்கி நீண்ட காலம் ஆகியும் அவை நிறைவேற்றப்படவில்லை. அதேபோன்று பொன்மலை நகராட்சிக்கு 'ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்' கட்ட ஒத்துக்கொண்டு ஐந்தாண்டுகளுக்கு மேலாகியும் அதுவும் நிறைவேற்றப்படவில்லை. பழனி பேருந்து நிலையத்தை பை-பாஸ் ரோடு வரையிலும் விஸ்தரிப்பதற்கு திட்டமிட்டு அதுவும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. குடியாத்தம் நகராட்சிக்கு, மோசமான நிதி நிலை காரணமாக அந்த நகராட்சியின் ஊழியர்களுக்கு ஊதி யம்கூட வழங்கப்படாத நிலை நீடிக்கிறது. நெல்லிக்குப்பம் பஸ் நிலையத்தை விஸ்தரிக்கவேண்டுமென்று (மணியடிக்கப் பெற்றது) கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : ஒரு சிறிய வேண்டுகோள்
திண்டுக்கல் நகரத்திற்கு, குடிநீர்த் திட்டத்திற்கு ஏற்பட்டுள்ள
தடையின் காரணமாக உந்தும் சக்திக்கு ஜெனரேட்டர் வாங்கித்
தரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. இதுவரையிலும் கொடுக்
கப்படவில்லை. பாதாளச் சாக்கடைக்கு 6 இலட்சத்து 50
ஆயிரம் ரூபாய் கட்டப்பட்டிருக்கிறது. இன்று வரையிலும்
அந்த பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படாமல்
இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் அரசு கவனத்
திற்கு கொண்டு வந்து இந்த ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்
துறை மன்றங்கள் செம்மையாக, சீராக, தீவிரமாக, மக்கள்
வாழ்க்கையோடு இரண்டறக் கலந்து செயல்படுவதற்கு மாநில
அரசு ஆக்கபூர்வமான, அடிப்படையான விதிகளை நிறைவேற்றி
இந்தச் சபையில் அறிவிப்பார்கள் என்று உறுதியாக நம்பி, என்
உரையை முடிக்கிறேன்.

திரு. என். பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, என்னை இந்த மாமன்றத்திற்கு வர அனுமதி
கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் எங்கள்
குடும்பத் தலைவருமான கலைஞர் அவர்களுக்கும், என்னைத்
தேர்ந்தெடுத்து அனுப்பிய தூத்துக்குடி வாக்காளப் பெருமக்க
ளுக்கும் முதற்கண் என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரி
வித்துக் கொண்டு என்னுடைய கன்னிப் பேச்சைத் தொடங்கு
கிறேன்.

நகராட்சித் தலைவர்களுக்கெல்லாம் 3 ஆண்டுகளாக இருந்
ததை 5 ஆண்டு காலம் ஆக்கிய தமிழக அரசுக்கும் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களுக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

நகராட்சி ஆசிரியப் பெருமக்களை, இரண்டு ஆண்டுகளுக்கு
முன்னால் அரசுடைமை ஆக்கிவிட்டதாக முந்தைய அரசு அறிவித்
தது. ஆனால், இதுவரைக்கும் நகராட்சி மன்றம்தான் அவர்
களுக்கு சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அதை ஒன்று
இந்த அரசு எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால்
அந்தந்த நகராட்சிக்கு அதிகாரத்தைக் கொடுக்க வேண்டுமென்று
தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

தூத்துக்குடி நகரத்தைச் சுற்றியுள்ள, 10 மைல் சுற்றியுள்ள
கிராமப் பெருமக்களை நகராட்சியோடு இணைக்க வேண்டு
மென்று நாங்கள் எங்கள் தூத்துக்குடி நகராட்சியில் தீர்மானம்
போட்டு அனுப்பியிருந்தோம். அதையும் கவனித்து, அவர்களை
தூத்துக்குடி நகராட்சியோடு இணைக்க ஆவன செய்யவேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்ளவிரும்புகிறேன்.



சிதம்பரனார் மாவட்டம் பிரிக்கப்பட்டு இரண்டு ஆண்டு
களுக்கு மேலாகியும் இதுவரையில் அங்கே மாவட்ட ஆட்சித்
தலைவர் அலுவலகம் கட்டப்படவில்லை. எந்த ஒரு பிரிவும்
பிரிக்கப்பட்டு அதற்கென்று ஒருஅமைப்பும் அமைக்கப்படவில்லை.
அதையும் இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

பனையேறும் தொழிலாளர்களுக்கு இந்த அரசு பல
சலுகைகளை அறிவித்து இருக்கிறது. குறிப்பாக, சிதம்பரனார்
மாவட்டத்தில் பனையேறும் தொழிலாளர்கள் அதிகமாக இருக்
கின்ற காரணத்தினால் அவர்களுக்கு பல நன்மைகளை அறிவித்து
இருந்தாலும் அவர்களுக்கென்று ஒரு வாரியம் அமைக்க வேண்டு
மென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

தூத்துக்குடிக்கு புதிய பஸ் ஸ்டாண்ட் அமைக்க 25 இலட்சம்
ரூபாயை அனுமதித்த இந்த அரசைப் பாராட்டி, நன்றி தெரிவித்
துக் கொள்கிறேன்.

தூத்துக்குடிக்கு அருகில் உள்ள வாகைக்குளத்தில் விமான
தளம் கட்ட வேண்டுமென்று ஓராண்டுக்கு முன்னால் அங்கே அடிக்
கல் நாட்டப்பட்டது. அந்த விமான தளம் இதுவரையில் கட்டப்
படவில்லை ; அடிக்கல் நாட்டப்பட்டது அப்படியே இருக்கிறது.
மீண்டும் அதற்கான வேலை தொடங்கப்படவில்லை. அந்த
வேலையை துரிதமாகச் செய்து, விமான தளத்தைக் கட்டி
முடிக்க இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

தூத்துக்குடிக்கு அருகில் கோரங்குளம் கிராமத்தில் ஒரு கண்
மாய் இருக்கிறது. கடந்த 20 ஆண்டு காலமாக அந்தக் கண்மாய்
ஆழப்படுத்தப்பட வில்லை ; தூர் எடுக்கப்படவில்லை. அந்தக்
கண்மாயை நம்பி பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் இருக்கிறார்
கள். அந்தக் கண்மாயை ஆழப்படுத்தினால் அந்த விவசாயி
களுக்குப் பேருதவியாக இருப்பதோடு தூத்துக்குடி நகரத்தைச்
சுற்றியிருக்கிற கிராமங்களில் குடிதண்ணீர் பஞ்சமும் போக்கப்
படும். ஆகவே, அதையும் இந்த அரசு செய்துதர வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

வரிவிதிப்பைப் பொறுத்தவரையில் அந்தந்த நகராட்சித்
தலைவருக்கு அந்த அதிகாரம் இருந்தது. வரி விதிப்பு கமிட்டி
ஒன்று போட்டு அந்தக் கமிட்டிக்கு நகராட்சித் தலைவர் தலைவ
ராக இருப்பார். முந்தைய அரசு நகராட்சித் தலைவருக்கு
இருந்த அந்த அதிகாரத்தை நீக்கிவிட்டது. புதிதாக ஒரு கமிட்டி
போட்டார்கள். அந்தக் கமிட்டி நடைபெறவில்லை. மீண்டும்

[திரு. என். பெரியசாமி] [1989 ஏப்ரல் 19

தமிழக அரசு அந்த அதிகாரத்தை அந்தந்த நகராட்சித் தலைவ ருக்குக் கொடுத்திருக்கிறது. அந்த அதிகாரத்தைக் கொடுத்து இதுவரைக்கும் ஆணை பிறப்பிக்கப்பட வில்லை ; இன்னும் அந்த ஆணை வந்து சேரவில்லை. ஆகையால் ஆங்காங்கே பல நகராட் சிகளில் வரி விதிப்பு செய்து, வசூல் செய்ய முடியவில்லை. ஆதலால் நகராட்சிக்கு பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. தூத்துக்குடியைப் பொறுத்தமட்டில் ஒரு கோடி ரூபாய் வசூல் செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே, அந்த ஆணையை உடனடியாக அந்தந்த நகராட்சிக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகளில் பதவி காலத்தை இந்த அரசு உயர்த்தி யிருக்கிறது. எங்களுடைய நகராட்சிக்கும் பல சலுகைகளை இந்த அரசு செய்திருக்கிறது. தமிழகத்தில் நகராட்சிகளுக்கு பல சலுகைகளை அளித்து, நகராட்சித் தலைவர்களுக்கு அதிக அதிகாரத்தையும் கொடுத்த தமிழக அரசைப் பாராட்டி, எனக்கு பேசுவதற்கு அளித்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறு கிறேன். வணக்கம்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு டெபுடி ஸ்பீக்கர் அவர்களே, இந்த நகராட்சி, உள்ளாட்சித் துறை மானி யக் கோரிக்கையின் மீது எனக்கும் சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்ததற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நகராட்சிகள் ஏற்பட்டு 100 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது ; ஓராண்டு, ஈராண்டு, பல ஆண்டுகள் அல்ல ; 100 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. பிரிட்டிஷ் காலத்தில் இருந்தே இருக்கிறது. அதற்கு அடையாளமாகத்தான் 'ரிப்பன் பில்டிங்' இருக்கிறது. அவர் நல்ல திறமையானவர் ; வேகமாகச் செயல்பட்டவர். நகராட்சிகளுக்கெல்லாம் ஒரு காலத்திலே தலைவர்களை ஜனங்க ளால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பார்கள். அவர்கள் எல்லாம் நல்லமுறையில் பணியாற்றி, மக்களுடைய பாராட்டுக்களை எல்லாம் பெற்றிருக்கிறார்கள். பின்னாலே அந்த முறையை மாற்றிவிட்டார்கள். ஜனங்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஏற்கெனவே நகராட்சித் தலைவர்களுக்கு பல அதிகாரங் களைக் கொடுத்திருந்தார்கள். பின்னாலே வந்த அரசாங்கம் அந்த அதிகாரங்களை நீக்கிவிட்டது. அதனால் பல சங்கடங்கள் வந்திருக்கின்றன. தலைவருக்கு இருந்த அதிகாரங்களை எல்லாம் கமிஷனருக்குக் கொடுத்து விட்டார்கள். வரி விதிப்பை ரிவிஷன் பண்ண வேண்டுமென்றால் தலைவருக்கு அதிகாரம் இல்லை : கமிஷனர்தான் செய்ய முடியும். சேர்மனுக்கு அதிகாரத்தைக் குறைத்து கமிஷனருக்கு அதிக அதிகாரங்களைக் கொடுத்ததால் தலைவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நகராட்சி நிர் வாகம் சரியாக இல்லை.



1989 ஏப்ரல் 19] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

வெகு சிரமப்பட்டு, மக்களுடைய ஓட்டுகளைப் பெற்று தலைவராக வருகிறார்கள். அவர்களுக்கு அதிகாரம் இல்லை. ஆனால் எங்கிருந்தோ வருகின்ற கமிஷனருக்கு எல்லா அதிகாரங் களும் இருக்கின்றன. இலட்சக்கணக்கான ரூபாய் வரி என்ற முறையிலும் வேறு வகையிலும் வசூல் பண்ணுகிறோம். ஆனால் அந்த செயர்மனுக்கு செக்கிலே கையெழுத்துபோட பவர் இல்லை. 10 ரூபாய் முதல் பல இலட்சம் ரூபாய் வரையில் செக் ட்ரான்ஸாக்ஷன் நடக்கிறது. அந்தச் செக்கிலே கையெழுத்துப் போட சேர்மனுக்கு பவர் இல்லை ; கமிஷனர்தான் கையெழுத்துப் போடுவார்.

அங்கே இருக்கிற ஊழியர் தவறு செய்தால் அவரை 'பனிஷ்' பண்ணுகிற அதிகாரம் சேர்மனுக்கு கிடையாது. பனிஷ்மெண்ட் கொடுக்கும் அதிகாரம் கமிஷனருக்குத்தான் இருக்கிறது. முன்னாலே எல்லாம் தவறு நடந்தால் செயர்மேன் ஜனங்களிடத் திலே போய் 'ப்ராசிக்கியூஷன்' கூட பண்ணுவார். இப்போது அவரால் அதைச் செய்ய முடியாது. அதையும் கமிஷனருக்குக் கொடுத்துவிட்டார்கள். வரி விதிப்பிலே ரிவிஷன் வேண்டுமென் றால் தலைவரிடம் போகவேண்டியதில்லை; அவருக்கு அதிகாரம் இல்லை. முனிசிபாலிட்டி கமிஷனரிடம்தான் பெட்டிஷன் கொடுக்கப் போகிறார்கள்; கமிஷனர்தான் ரிவிஷன் கொடுக்கி றார்: சேர்மேனுக்கு அதிகாரம் இல்லை.

இத்தனை அதிகாரங்களையும் அவர்களிடத்திலே கொடுத்து இருக்கும்போது நகராட்சித் தலைவர் எப்படி இருக்கிறார் என் றால் அசல் 'ஸ்பேட்' ராஜா மாதிரிதான் இருக்கிறார். எனவே இந்த நகராட்சித் தலைவர் என்பதைப் பொறுத்த வரையில் பெயரளவில்தான் இருக்கிறாரே தவிர உருப்படியாக எந்தவித மான சேவையையும் செய்வதற்கான வாய்ப்பு இல்லாமல் பலவித மான சங்கடங்கள் இருக்கின்றன. இதுவரை எந்தவிதமான சர்க்காரும் அதை நிவர்த்திக்கவில்லை. கலைஞர் சர்க்காரிலே அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். 3 வருஷத்தை 5 வருஷமாக உயர்த்தியிருக்கிறார்கள் என்றாலும்கூட அதாவது அதைச் செய்திருக்கிறோம், இதைச் செய்திருக்கிறோம் என்றெல்லாம் சொல்கிறோமே தவிர கமிஷனரிடமிருந்து அந்த அதிகாரத்தை இன்னும் வாங்கிக் கொடுக்கவில்லை. ஒரு சிப்பந்தி தவறு செய் கிறார் என்றால் அவருக்கு பனிஷ்மெண்ட் கொடுங்கள் என்றெல் லாம் போய் கமிஷனரிடத்திலே கெஞ்ச வேண்டிய நிலைமைதான் தலைவர்களுக்கு இருக்கிறது. அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

அடுத்து, பொதுச் சுகாதாரம். சுகத்திற்கு ஆதாரமாக இருப் பது சுகாதாரம் என்று சொல்கிறோம். ஆனால் நம்முடைய ஜனங்களுக்கு சுத்தமாக வைத்துக் கொள்ளத் தெரியவில்லை. காலை எழுந்தவுடன் எங்கே மலத்தைக் கழிப்பது, எங்கே யூரின்

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1989 ஏப்ரல் 19

கழிப்பது, எங்கே துப்புவது என்றுகூடத் தெரியவில்லை. புகை
யிலை போட்டுக் கொண்டு வந்து கண்ட இடத்திலே துப்புகின்ற
நிலைமையும் இருக்கிறது. மல, ஜலங்கள் கழிப்பது என்றால்
வாய்க்கால் கரை, சாலையோரம் போன்ற இடங்களில்தான் பல
ரும் உட்காரக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படி எல்லாம்
கழிக்கலாமா என்று அவர்களுக்குத் தெரிவதில்லை. இது நரகமா
அல்லது நகரமா என்று கூடத் தெரியவில்லை. அப்படிப்பட்ட
நிலைமைகள் இருக்கின்றன.

அடுத்து, அந்தத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில்
தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் ரொம்பக் கம்மியாகத்தான்
இருக்கிறார்கள். கூட்டுகிறவர்கள் மட்டும்தான் தமிழ்நாட்
டைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். மற்ற வேலைகளைச்
செய்பவர்கள் எல்லாம் அதாவது கக்கூஸ் எடுப்பது, சாக்கடை
தள்ளுவது போன்ற பணிகளை எல்லாம் செய்பவர்கள் எல்லாம்
ஆந்திராவிலே இருந்து வந்தவர்கள். ஆந்திரா, தமிழ்நாடு, சவுத்
கன்னடம், நார்த் மலபார் ஆகிய நான்கும் முன்பு ஒன்றாக
இருந்தது. அதாவது சென்னை ராஜதானியாக இருந்தபோது
அவர்கள் எல்லாம் இங்கே வந்து சேர்ந்தார்கள். எனவே நிறைய
பேர் தமிழ் பேசுபவர்கள் அல்ல. அவர்கள் என்ன பேசுகிறார்கள்
என்பதுகூட நமக்குத் தெரியாது. நான் சொல்ல வருவது என்ன
வென்றால் இவர்களுடைய வேலைப்பளு மிக அதிகமாக இருக்
கிறது. என்னதான் நாம் குடும்ப நலத் திட்டத்தைக் கொண்டு
வந்தாலும் கூட இன்றைக்கு ஜனத்தொகை பெருகிக் கொண்டு
தான் இருக்கிறது.

மேலும் இந்தக் குடும்ப நலத் திட்டத்தினால் என்னென்ன
கஷ்டங்கள் இருக்கின்றன என்பதையும் பார்க்க வேண்டும். அவர்
களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் பல்வேறு வசதிகளை எல்லாம்
செய்யவேண்டி இருப்பதால் இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டம்
அவசியமானதுதான். மேலும் இதிலே கோட்டா எல்லாம் நிர்ண
யிக்கிறோம். அப்படி கோட்டா இருப்பதன் காரணத்தால் என்ன
செய்கிறார்கள் என்றால் கைக்காசையும் கொடுத்து அதாவது
100 ரூபாய், 150 ரூபாய் என்று கொடுத்து ஆட்களைக் கூட்டிக்
கொண்டு வருகிற நிலைமை இருக்கிறது. மாதத்திற்கு இவ்வளவு
கோட்டா என்று சொன்னால் என்ன செய்வார்கள். இப்படித
தான் செய்வார்கள். அங்கேயுள்ள டாக்டர்கள் என்ன செய்கி
றார்கள்? இரண்டாம் தரம் செய்கிறோமா, மூன்றாம் தரம்
செய்கிறோமா என்று கூட பார்ப்பதில்லை. அந்தக் காலத்திலே
மாட்டுக்கு எல்லாம் என்ன செய்வார்கள் என்றால் காய் அடிப்பார்
கள். அதுபற்றி அனைவரும் கேள்விப்பட்டிருப்பீர்கள். அந்த
மாதிரி கிழவன், கிழவிகளை எல்லாம் பிடித்துக் கொண்டு வந்து
காயடித்து அனுப்பிவிட்டார்கள். 70 வயது, 80 வயது ஆனவர்
களுக்குக் கூட அவ்வாறு செய்கிறார்கள்.



1989 ஏப்ரல் 19]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதுபற்றி உங்க
ளுடைய நிலைமை என்ன என்பதைச் சொன்னால் நலமாக இருக்
இருக்கும். (சிரிப்பு.)

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** எனக்குத் தான் அனு
பவம் ஜாஸ்தியாக இருக்கிறதே, என்ன நிலைமை என்பது தெரி
யும். எனவே இப்படி எவ்வளவுதான் நாம் நடவடிக்கை இந்தக்
குடும்பக் கட்டுப்பாட்டைப் பொறுத்த வரையில் எடுத்தாலும்கூட
ஜனத்தொகை குறையாது. குழந்தைகள் பெருகிக் கொண்டுதான்
இருக்கின்றன. இப்படிப் பட்ட நிலைமையில் கக்கூஸ் அள்ளுவது,
சாக்கடை தள்ளுவது போன்ற வேலைகளை எல்லாம் அவர்கள்
செய்ய வேண்டி இருக்கிறது. முனிசிபாலிட்டியிலே 200 பேர்
வேலை செய்கிறார்கள் என்றால் அவர்கள் எப்போது நியமிக்கப்
பட்டவர்கள், அதாவது 15 வருஷம், 20 வருஷத்திற்கு முன்பு
அப்பாயின்ட் பண்ணினார்கள். அதற்கப்புறம் அப்பாயின்ட்
மெண்ட் பண்ணவே இல்லை. எனவே அவர்களுக்கு ஒர்க் லோட்
அதிகமாகும்போது அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால்
ஓரே நாளில் கூட்டுகிற இடத்தை மூன்று நாட்கள் கூட்டுகிறார்கள்.
ஒரு நாளில் மூன்று தெரு கூட்ட வேண்டுமென்றால் அரைத்தெரு
தான் கூட்டுகிறார்கள்.

(பிற்பகல் 12-20)

ஆகையால் சுகாதார கேடுகள் நிறைய உண்டாகின்றன.
அப்படி எல்லாம் நடக்கிறது. அதற்கு மிஞ்சிய காரணம் சொல்
கின்றார்கள். அப்படியும் குப்பையைக் கூட்டி வைத்து இருந்தால்
கூட அதை அள்ளுவதற்கு வண்டி கிடையாது. ஸ்ரீரங்கம் முனிசி
பாலிட்டி என்பது மட்டுமல்ல. எல்லா முனிசிபாலிட்டிகளிலும்
அப்படித்தான் இருக்கின்றது. பற்றாக்குறை முனிசிபாலிட்டி
கிட்டத்தட்ட 80 சொச்சத்திற்கும் மேல் இருக்கின்றன. பற்றாக்
குறை நிதிநிலைமைகள் இருக்கின்றன. இதை எப்படி சரி
பண்ணப் போகிறார்கள். அதற்கெல்லாம் திட்டம் போட வேண்
டும். சில முனிசிபாலிட்டிகள்தான் சர்ப்ளஸ் ஃபண்ட் உள்ளதாக
இருக்கின்றன. கரண்ட், எனர்ஜியை அவர்களே வினியோகம்
பண்ணுகின்றார்களே அவர்களுக்கு சர்ப்ளஸ் ஆக இருக்கிறது.
அப்படி 5 அல்லது 7 நகராட்சிகள் இருக்கின்றன. பெரிய நக
ராட்சி, சிறிய நகராட்சி, மற்ற நகராட்சிகள், கார்ப்பரேஷன்
இவைகளுக்கெல்லாம் கடன் கொடுத்தும், நிதி உதவி கொடுத்து
ஹெல்ப் பண்ணியும் நிதி நிலைமை சரியாக இல்லையே என்ன
காரணம்? ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை குவின்குன்னியல்
ரெவிஷன் என்று கட்டாய முறையிலே நடைபெற்றது. அது
நடுவிலே நிறுத்தப்பட்டது. அரசியல் காரணமாக ஜனநாயகத்
திலே, எங்கள் கட்சிக்கு வோட்டு வாங்கவேண்டும் உங்கள்
கட்சிக்கு வோட்டு வாங்கவேண்டும் என்று நினைக்
கிறோம். குவின்குன்னியல் ரெவிஷனை நிறுத்தும்போது ஆளுங்
கட்சியில் இருப்பவர்களும் பேசாமல் இருக்கிறோம். எதிர்க்

கட்சியில் இருப்பவர்களும் பேசாமல் இருக்கிறோம். ஏனென்றால் ஜனங்கள் மத்தியில் கெட்ட பெயர் என்று இருந்து விடுகிறோம். எதிர்க் கட்சியும் பேசாமல் இருக்கும்போது நிதிநிலைமையில் பற்றாக்குறை ஏற்படுகிறது. பல வருடங்கள் ரெவிஷன் நடத்தாமல் இருக்கும்போது புதிதாக விடு கட்டுபவர்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. விலையை ஏற்றி விடுகிறார்கள். ஒரு நேரத்தில் மனு போட்டு விலை ஏற்றிவிடுகிறார்கள். ஜனங்கள் வீட்டுவாடகை 500 ரூபாய், 1,000 ரூபாய் என்று கொடுத்தாலும் அவர்களைக் கேட்கும்போது எங்கள் சொந்தக்காரர் குடியிருக்கிறார்கள் என்று சொல்கின்றார்கள். மற்றவர்கள் குடி இருந்தாலும் வாடகை ஆயிரம் என்று கொடுத்தாலும், ரூ. 200, ரூ. 100-க்கு மேலே வாடகை இல்லை என்று சொல்கின்றார்கள்கள். நம்முடைய நிதி நிலை ஏறுவதற்கும் வழியில்லை. உண்மையைச் சொல்வது வழக்கம் கிடையாது. எப்படி நிதிநிலைமை ஏறும். நிதி நிலைமை ஏறுவதற்கும் எதுவும் வழியில்லை. இதுமாதிரி வேலைகள், துப்புரவு வேலை செய்வதற்கு, கக்கூஸ் எடுப்பதற்கு, ஸ்டாய்களை இங்க்கிரீஸ் பண்ணுவதற்கும்வழியில்லாமல் போய்விடுகிறது. ஆனால் மாநில சர்க்காரிலே மத்திய சர்க்காரிலே வேஜஸ் ஏற்றும்போது, அவரவர்களுக்குப் பஞ்சப்படி ஏற்றும்போது இந்த நகராட்சி சிப்பந்திகளுக்கும், ஊராட்சி சிப்பந்திகளுக்கும் ஒன்றிய சிப்பந்திகளுக்கும் எல்லோருக்கும் ஏற்றி விடுகிறோம். நிதி நிலைமை போதிய அளவில் இருக்கிறதா இல்லையா என்பது பற்றி கவலையில்லை. ஏற்றிவிடுகிறோம். அவர்களுக்கு கொடுத்துதான் ஆகவேண்டியிருக்கிறது. ஆக நிதிநிலைமையை சரிப்படுத்த வேண்டும்.

நாம் பஸ்களிலே போகிறோம். பஸ் ஸ்டாண்டுகள் இருக்கின்றன. அங்கே கழிப்பிடங்கள் இருக்கின்றன. சட்டம் எப்படி இருக்கிறது என்று சொன்னால் பஸ் ஸ்டாண்டுகளிலே அதற்கு என்று வசூல் பண்ணுகிறோம். ஒரு பஸ் வந்தால் இவ்வளவு கட்டணம் பணம் என்று கேட்கிறோம். ஒரு பஸ்-க்கு இவ்வளவு பணம் வரி என்று கேட்கிறோம். சாக்கடை வரி வசூல் பண்ணுகிறோம். கக்கூஸ் வரி வசூல் பண்ணுகிறோம். அவர்கள் ஒரு டுயல் பாலிசி போல கட்டண கழிப்பறை என்று வைத்து அதற்கும் பணம் வசூல் பண்ணுகிறார்கள். நாம் வரி என்று கொடுக்கிறோமே அது கட்டணம் இல்லாமல் வேறு என்ன. நாம் என்ன கிழிந்த நோட்டா அதற்கு கொடுக்கிறோம். கட்டண கழிப்பறை எப்படி இருக்கிறது என்று பார்த்தால், அது சுத்தமாக இருக்கிறதா என்றால் இல்லை. 2-வது வரி கொடுத்து இது 3-வது வரியாக ஆகிவிடுகிறது. 3 வரி வசூல் பண்ணுகின்ற அளவுக்கு இது ஆகிவிடுகிறது என்று நினைக்கிறேன். கடைசியாக ஒரு வரியாக நம் மீது சுமந்தப்படுகிறது. இங்கே ஒரு வரி கொடுத்து விட்டு அங்கே ஒரு வரி கொடுத்துவிட்டு அங்கேயுள்ள கழிப்பறைக்குப் போவதற்கு ஒரு வரி, மலம் கழிப்பதற்கு இன்னொரு வரி என்று மக்கள் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அப்ப



கொடுத்தும் சரியாக இருக்கிறதா என்றால் நிச்சயமாக சரியாக இல்லை. அதுபோல ரோடுகள். முனிசிபாலிட்டி ரோடுகளை பராமரிக்க முடியவில்லை. வெகிகிள்ஸ் வரி என்றாலும், சர்க்கார்தான் வாங்குகிறார்கள். எல்லா வெகிகிள்களுக்கும் வாங்குகிறார்கள். அது பெட்ரோலாக இருந்தாலும், டீசலாக இருந்தாலும் எதுவாக இருந்தாலும் சர்க்கார் தான் வாங்குகிறார்கள். முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷனில் வாங்குவது இல்லை. முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷனிலே கிட்டத்தட்ட 50, 60 பர்செண்ட் ரோடுகளை முனிசிபாலிட்டி நிர்வாகத்திலே பராமரிக்க முடியவில்லை. ஜல்லி விலையேற்றம், தார் விலையேற்றம், லேபர் சார்ஜ் ஏற்றம் இவைகளை எல்லாம் பார்க்கும்போது, அவர்களாலே பராமரிக்க முடியவில்லை. வரியை சர்க்கார் வாங்கிக்கொள்கிறார்கள். வெகிகிள்ஸ் பூராவுக்கும் அவர்கள் வாங்கிக்கொள்கிறார்கள். அந்த வண்டிகள் தேய் தேய் என்று ரோடுகளை தேய்க்கின்றன. முனிசிபாலிட்டி நிதிநிலைமை சரி இல்லாமல் என்ன செய்ய முடியும்? பண்ணவே முடியவில்லை. இந்த சேர்மேன் வந்து ஒன்றுமே பண்ண முடியவில்லை என்கிறார்கள். 3 வருடத்தை 5 வருடமாக ஆக்கி இருக்கிறார்கள். இவர் பேசாமல் தூங்குகிறாரே என்கிறார்கள்.

இந்த சர்க்காரை குறை சொல்லமுடியாது. இப்போதுதான் 2 மாதம் தான் ஆகிறது. இனிமேல் சரிபண்ணுவார்கள் என்று நினைக்கிறேன். இந்த நேரத்தில் வாட்டர் சப்ளை பற்றி சொல்கிறேன், வாட்டர் சப்ளை என்று பார்த்தால் அது பயங்கரமான நிலையில் இருக்கிறது. ஸ்ரீரங்கத்தைப் பொறுத்தவரைக்கும் காவிரி கரையில்தான் இருக்கிறோம். டவுனிலே திருச்சி முனிசிபாலிட்டியில் வாட்டர் சப்ளைக்கு தண்ணீர் எடுப்பதால் பக்கத்து கிராமங்களிலே தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது. கிணற்றிலே பார்த்தால் வறண்டு இருக்கிறது. எத்தனை கிணறுகள் இருக்கின்றனவோ அத்தனையும் வறண்டு இருக்கின்றன. அவர்கள் போட்டிப் போட்டுக் கொண்டு பில்ட்டர் பாயின்ட் போட்டு எடுக்கிறார்கள். கிணறுகளை ஆழப்படுத்த முடியவில்லை. ஏனென்றால் அவர்கள் 80 அடி, 100 அடியில் இருந்து தண்ணீர் எடுக்கிறார்கள். அப்படி எடுக்கும்போது, சுற்றுவட்டாரத்திலே கிட்டத்தட்ட பல கிராமங்களில் வறட்சியாக இருக்கிறது. காவிரி கரையிலேதான் இருக்கிறோம் என்று சொன்னாலும் தண்ணீர் இல்லை. வாட்டர் லெவல் இறங்கிப் போய்விடுகிறது. இது மாதிரி கஷ்டம் இருக்கிறது.

ராசிபுரத்தில் 10 நாளைக்கு ஒரு தடவை தண்ணீர் கொடுக்கிறார்கள். எவ்வளவு என்று பாருங்கள், 10 நாட்களுக்கு ஒரு தடவை வாட்டர் சப்ளை என்று சொல்லும்போது எவ்வளவு கஷ்டமாக இருக்கும். மேல்நாடுகளில் ஒரு நாளைக்கு அவர்கள் உபயோகிக்கின்ற தண்ணீர் அளவையும், நம்நாட்டிலே நாம் உபயோகிக்கின்ற தண்ணீர் அளவையும் பார்க்கும்போது, நாம்

என் இந்த நாட்டிலே பிறந்தோம். ஜெர்மனியிலோ, அமெரிக்காவிலோ, லண்டனிலோ பிறந்திருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது. நமக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. இன்னும் நிறைய இருக்கிறது சொல்கிறேன். அது என்னவென்றால் 16 வருடமாக நான் சேர்மேனாக இருந்தேன்.

நகராட்சியில் 1 வருஷம், 2 வருஷமல்ல, 16 வருஷங்கள் சேர்மேனாக இருந்தேன். எந்தவிதக் குறைபாடுமில்லை. ஆகையால் இந்த மாதிரிக் குறைபாடுகளையெல்லாம் நம்முடைய கழக அரசின் ஆட்சிக் காலத்திலே நிவர்த்தி செய்ய வேண்டும். முன்பு அன்பில் அவர்கள் அமைச்சராக இருந்தபோது, எல்.ஐ.சி. யிடமிருந்து பல லட்சம் ரூபாய் வாங்கிக் கொடுத்து, அவரே கூட இருந்து, செய்து கொடுத்தார்கள். இப்போது பில்ட்டர் பாய்ண்ட் தான் இருக்கிறது. ஓர்க் பண்ணவில்லை. மோட்டார் ஓர்க் பண்ணவில்லை. அவற்றைப் பழுது பார்ப்பதற்கான செலவுக்குப் பணமில்லை. எனவே ஊராட்சி ஒன்றியங்களுக்கு, நகராட்சிகளுக்கு, அவற்றின் நிதி நிலைமையை உயர்த்தி, ஜனங்களுக்குப் பயன்படும்படிச் செய்யுமளவுக்கு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சந்தர்ப்பமளித்த தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து, விடை பெறுகிறேன்.

திரு. பி. என். வல்லரசு: சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டு மக்களுடைய ஒட்டுமொத்தமான முன்னேற்றம், குறிப்பாக தமிழக கிராம மக்களுடைய முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிற காரணத்தாலே, தமிழக வளர்ச்சி உள்ளாட்சித் துறையினுடைய வளர்ச்சியாக இருக்கிறது. உள்ளாட்சித் துறை தமிழக வளர்ச்சிக்கு இதயமாக இருப்பதால், அந்த இதயம் நல்லபடியாகச் செயலபட்டால்தான், தமிழக மக்கள் வாழ்க்கை முன்னேறும் என்பதால், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அந்த இதயத்திற்கு அதிக அதிகாரங்கள் என்று பல்வேறு டானிக்குகளை வழங்கியிருக்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லை என்று இங்கே குறிப்பிட்டது எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. இருக்கின்ற ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், நகராட்சித் தலைவர்களை எல்லாம் அழைத்துப் பேசிய அரசு, எந்தவித அதிகாரமும் வழங்கவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். உண்மையிலேயே இந்த உள்ளாட்சி அமைப்பு இதயமாக இருப்பதால், அந்த இதயம் நன்றாக இருந்தால்தான், சமுதாயம் நன்றாக இருக்கும் என்பதால், பல்வேறு அதிகாரங்களை வழங்கியிருக்கிறார்கள். முன்பு வேளாண்மைத் துறை உள்ளாட்சித் துறையில் இல்லை, இப்போது அதை இணைத்திருக்கிறார்கள். கால்நடைத் துறை இல்லை, அங்கே இணைத்திருக்கிறார்கள். மற்ற மருத்துவத் துறை, சுகாதாரத் துறை, கல்வித்துறை ஆகிய துறைகளில் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து விலக்கி வைத்திருந்த பதவிகளை மீண்டும் அங்கே கொடுத்து, அதிகாரங்களைப் பரவலாக்கி இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இன்றையதினம் பல்வேறு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கிற நேரத்தில், இனிமேல் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதையும், இதுவரை என்ன சாதக பாதகங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது கழக ஆட்சி வருவதற்கு முன்பு கடந்த காலத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் வாயிலாக எவ்வளவோ ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன. முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. அவைகள் இனிமேல் நடைபெறக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடிக் குழாய் என்ற பெயரில் 150 அடி தோண்டுகிறோம் என்று சொல்லி, 100 அடிதான் தோண்டியிருக்கிறார்கள். 50 அடி தோண்டாமலேயே, 150 அடி என்று தவறான கணக்கு காட்டி, ஊழல் செய்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், ஊராட்சி மன்றங்களுக்குச் செல்லும்போது, எந்த குழாயும் வேலை செய்யவில்லை என்று சொல்லுகிறார்கள். நான் ஆச்சரியப்பட்டேன். ஏன் எல்லாக் குழாய்களும் வேலை செய்யவில்லை என்று சொல்லுகிறார்கள் என்று பார்த்தால், கணக்குக் காட்டப்பட்ட அளவுக்கு குழாய் போடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 200 அடி குழாய் போடப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்ட இடத்தில், உண்மையில் 100 அடிதான் போட்டிருக்கிறார்கள். அப்படி இருப்பதால்தான் அந்தக் குழாய்கள் பங்ஷன் பண்ணவில்லை என்ற நிலை இருக்கிறது. இதில் பல்வேறு தரப்பட்டவர்களுக்கு கமிஷன் போகிறது. பிரைவேட் ஏஜென்சியை அங்கே பயன்படுத்துகிறார்கள். கவர்ன்மெண்ட் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் இருக்கிறது. அதன் மூலம் குழாய்கள் போடலாம். அவர்கள் மூலம் செய்தால், தங்களுக்கு கிடைக்கும் கமிஷன் கிடைக்காது என்பதால், பிரைவேட் ஏஜென்சியை நியமித்து, குழாய் போடுவதற்கு முன்பே 20,000, 30,000 ரூபாய் அவர்களுக்குச் சேர்ந்துவிடுகிறது என்று பரவலாகச் சொல்லப்படுகிறது. அந்த நிலைமைகள் நம்முடைய கழக ஆட்சிக் காலத்தில் நீடிக்கக்கூடாது என்பதில் கண்ணுங்கருத்துமாக இருக்க வேண்டும். மேலும் சமுதாயத்திலே ஒட்டுமொத்தமான பிரச்சினையை இது உருவாக்கிவிடுகிறது. ஒரு வருஷத்தில், 6 மாதங்கள் தண்ணீர் இல்லை என்று வரும்போது, குழாய் போட்டு என்ன பிரயோசனம்?

போடு குழாய்களை சரியான அளவோடு போட வேண்டு மென்பதில் அரசு திட்டவட்டமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

அதைப் போலத்தான் மின்சார பல்புகள் விஷயத்திலும் தவறுகள் நடக்கின்றன. அவர்களுக்கு— குறிப்பாக 3 பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு— மூன்று பங்கீடு போட்டு கமிஷன் கிடைக்கிற நிலைமை இருக்கிறது. பல்புகள் வாங்குகிற நேரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே பல்புகளை வாங்குகிறார்கள். அவரவர்களுக்கு என்று ஒரு பங்கீடு வைத்திருக்கிறார்கள். எனவே, இப்படி வாங்கிய பல்புகளைத் தெரு விளக்குக் கம்பங்களில் போட்டுவிட்டால் பிறகு ஒரு வாரத்திற்குள்ளாகவே அந்த பல்புகள் எரிவதேயில்லை. இன்றைக்கு ராத்திரி ஒரு பல்பைப் போட்டாலும் கூட அந்த பல்பு அடுத்த நாளே வேலை செய்வதில்லை என்ற நிலைமை இருக்கிறது. எனவே இதைப் பார்க்கிற மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால்— மறுபடியும் பல்பு வாங்குகிற அதிகாரத்தை யூனியனுக்கே கொடுக்காமல் ஏற்கனவே இருந்ததைப்போல் மின்சார இலாகாவுக்கே கொடுத்துவிடலாமா என்று நினைக்கிறார்கள். ஏனென்றால் அந்த அளவுக்கு பல்புகள் வாங்குவதில் தவறுகள் நடைபெறுகின்றன. நீடித்து உழைக்கிற பல்புகள் வாங்குவதில் தவறுகள் நடைபெறுகின்றன. நீடித்து உழைக்கிற பல்புகள் வாங்கப்படாத காரணத்தால்— உடனடியாக அவைகள் வீணாக போய்விடுகிற காரணத்தால்— மின்சார இலாகாவிடமே இதை மீண்டும் ஒப்படைக்கலாமே என்று நினைக்கிறார்கள். இதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே பேசும்போது அவரும் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அதாவது "அவர்களும் உதாசீனப்படுத்திவிட்டால் என்ன செய்வது" என்று அவரே வேதனைப்பட்டார்கள். எனவே, இன்றைக்கு இருக்கிற நிலைமை— பஞ்சாயத்துத் தலைவர்கள் யூனியன் தலைவர்கள் ஆகியோரே பல்புகளை வாங்குகிற காரணத்தால், மின்சார இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் அவற்றை மாற்றுவதற்கு முன்வருவதில்லை. கேட்டால் "சோக்" போய்விட்டது என்று சொல்லி விடுகிறார்கள். அல்லது சின்ன சின்ன பிரச்சினைகள் இருந்தால்கூட அதையெல்லாம் அவர்கள் உதாசீனப்படுத்துகிற நிலைமை இன்றைக்கு இருக்கிறது. ஆக இரண்டு பக்கமும் கான்ட்ரவர்சி ஏற்படுகிற நிலை இன்றைக்கு இருக்கிறது. எனவே, பல்புகளை வாங்குவது யார் என்பதைப் பற்றி அரசு சிந்திக்க வேண்டும். யூனியன் தலைவர்களே வாங்குவதா அல்லது மின்சாரத் துறைக்கு கொடுத்துவிடுவதா என்பதை யோசித்து இதில் ஊழல்கள் இல்லாமல் செய்வதற்கு அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து, இப்போது "கிளஸ்டர்வில்லேஜஸ்" என்று நத்து கிராமங்களாக எடுத்து அதன் மூலம் அங்கெல்லாம் மாடு வாங்கிக் கொடுப்பது— பசுமாடு வாங்கிக் கொடுப்பது— ஆடுகள் வாங்கிக் கொடுப்பது போன்ற திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் கிராமப்புறத்தில் இந்தத் திட்டம் சரிவர மேற்கொள்ளப்படுவதில்லை. எங்காவது ஆடு வாங்கியிருக்கிறார்களா, மாடு வாங்கியிருக்கிறார்களா என்று கடந்த 15 ஆண்டுக் காலத்தில் பார்க்கிறபோது எங்கேயும் மாடும் இல்லை, ஆடும் இல்லை. ஆனால் ஆடு மாடுகளை வாங்கியதாகக் கணக்கில் இருக்கிறது. அதற்குரிய கமிஷன் அது அது சம்பந்தப்பட்டவர்களுக்குப் போய்விடுகிற காரணத்தால் இதை சரி செய்ய வேண்டும். இப்போது எல்லோருமாகச் சேர்ந்து பழைய ஆடுகளையெல்லாம் கொண்டுவந்து காலில் சீல் போட்டுவிட்டு இரண்டாவது நாளே அவைகளை அங்கே போய் பார்த்தால் இருப்பதில்லை. நம் ஆட்சியிலும் இனிமேல் அப்படிப்பட்ட நிலைமை இருக்கக் கூடாது. உண்மையிலேயே ஆடு மாடுகள் வாங்கிக் கொடுக்கிற திட்டத்தைச் சரியாகச் செயல்படுத்தினால் நிச்சயமாக விவசாயிகள் பயன் அடைவார்கள். ஆனால் இன்றையதினம் அதற்கான பணத்தையெல்லாம் பல்வேறு விதமான தவறுகளைச் செய்வதற்கும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக அந்தத் திட்டம் ஊனமுற்றோர் திட்டமாக இருக்கிறது. எனவே அரசு அதை கவனித்து சரியான முறையில் அந்தத் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கிராமச் சாலைகள் எல்லாம் இன்றைக்கு சீர் குலைந்த நிலையில் இருக்கின்றன. யூனியனில் கேங்க் கூலிகள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் எங்கேயாவது உண்மையிலேயே வேலை செய்கிறார்களா— சாலையைப் பராமரிக்கின்றார்களா என்று பார்த்தால் இல்லை. அவர்களெல்லாம் ஏ. ஈ. வீட்டில் ஒருவர், சேர்மன் வீட்டில் ஒருவர்— கமிஷனர் வீட்டில் ஒருவர் என்று கேங்க் கூலிகள் வீட்டிற்கு ஒருவராக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அன்றைக்கு ஆர்டர்லி வேலை என்று போலீஸ் துறையில் போட்டார்கள். அந்த மாதிரியான வேலையைத்தான் இன்றைக்கு கேங்க் கூலிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். கேங்க் கூலிகள் எங்கேயும் இயங்குவதில்லை. அவர்கள் சரிவர வேலை செய்தால் இருக்கிற சாலைகளையெல்லாம் நிச்சயமாக சீர் செய்யலாம். இந்த வாரம் இந்தப் பக்கத்துச் சாலைகள், அடுத்த வாரம் அடுத்தப் பக்கத்துச் சாலைகள் என்று திட்டமிட்டு வேலை கொடுத்தால் நிச்சயமாக கிராமச் சாலைகளைப் பராமரிக்க முடியும். அங்கே இருக்கிற பள்ளங்கள் மேடுகளைச் செப்பனிட முடியும், என்று கருதுகிறேன்.

அதைப்போலவே ஆரம்ப சுகாதார நிலையங்கள் இன்றைய தினம் சரிவர இயங்காமல் இருக்கின்றன. எனவே ஆரம்ப சுகாதார நிலையங்கள் சரிவர இயங்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு மகப்பேறு மருத்துவமனை ஒவ்வொரு ஊரிலும் இருக்கிறது. ஆனால் எங்கே பார்த்தாலும் அந்தக் கட்டிடம் பாழடைந்துதான் இருக்கிறது. எங்கேயும் செயல்பட முடியாத நிலையில் இருக்கிறது. அதையெல்லாம் அரசு கவனித்து சரி செய்யவேண்டும்.

அதைப் போலவே பள்ளிக் கட்டிடங்கள் எங்கேயும் சரிவர இல்லை. என்னுடைய தொகுதியில் பள்ளிக் கட்டிடங்களைப் பார்க்கின்றபோது எந்த நேரத்தில் அவை இடிந்து விழுமோ என்று அச்சப்படக் கூடிய அளவுக்கு இருக்கிறது. என் தொகுதியில் உச்சப்பட்டி கிராமம் என்று இருக்கிறது. அங்கே பாராளுமன்ற உறுப்பினரான திரு. மாயத் தேவர் பிறந்த ஊர்—சட்டமன்ற உறுப்பினர் திரு. கந்தசாமி பிறந்த ஊர்—அந்த ஊரில் நான் போய்ப் பார்த்தபோது ஆசிரியர்கள் நின்றுகொண்டே பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். உட்கார சேர், மேஜை நாற்காலி எதுவும் கிடையாது. தரை கூட சரியாக இல்லை. கேட்டபோது எங்களை கவனிப்பார் யாருமில்லை என்று சொன்னார்கள். எனவே யூனியன்களைச் சேர்ந்த பள்ளிக் கட்டிடங்களையெல்லாம் ரிப்பேர் செய்ய உடனடியாக அரசு முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் உசிலை பேரூராட்சி, நகராட்சியாவதற்குரிய தகுதி பெற்றிருக்கிற காரணத்தால் உசிலையை நகராட்சியாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே இருக்கிற தினசரிச் சந்தை, வாரச் சந்தை ஆகியவற்றையெல்லாம் யூனியனே நடத்துகிறது. அதன் காரணமாகப் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுகின்றன. உசிலை பேரூராட்சிக்குள் இருக்கிற நகர தினசரி சந்தைகளையும் வாரச் சந்தைகளையும் பேரூராட்சிக்கே வழங்க வேண்டு, மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு உசிலை பஸ்-ஸ்டான்டு கட்டுவதற்காக ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டு கட்டிடம் ஆரம்பிக்கப்படுகிறது. அதற்கு மேலும் ரூ. 25 லட்சம் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்றும்—ஒதுக்கப்பட்ட தொகை குறைவாக இருக்கிறது என்றும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எம்.எல்.ஏ-க்களோடு தற்போது உள்ளாட்சி அமைப்புகள் கலந்து பேசுவதில்லை என்ற நிலை இருக்கிறது. நாங்களும் வாக்காளர்களிடம் வாக்குபெற்று வந்தவர்கள்தான் என்பதால்



அதற்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டும். கமிஷனர்களும் மற்றவர்களும் எங்களோடு கலந்து பேச வேண்டும். ஜீப் அனுப்ப வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால் அனுப்புவதே இல்லை. எங்களுக்கு எதிரான சேர்மென்கள் இருக்கிறார்கள்...... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. பி. என். வல்லரசு ; அரசு உத்திரவிட முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பஞ்சாயத்துகளில் கண்டக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு தரவேண்டும். பஞ்சாயத்துக்களில் எழுத்தர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் அங்கே இருக்கிற ரிக்கார்டு கிளார்க்குகளுக்கும், கிளார்க்குகளுக்கு கொடுக்கிற அடிப்படை சம்பளம் தர வேண்டும். சத்துணவு திட்டத்தில் இருப்பவர்கள் நிரந்தரமாக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் பஞ்சாயத்துகளில் இருக்கிற கண்டக்டர்கள் தாங்கள் என்ன பாவம் செய்து இருக்கிறோம் என்று கேட்கிறார்கள். எனவே அவர்களையும் நிரந்தரமாக்க வேண்டுமென்று கோரி, விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. எம். எஸ். கே. ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு இருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் பேசுமுன் எனக்கு இவ்வரிய வாய்ப்பை நல்கிய, நான் சார்ந்திருக்கிற தி.மு.க. தலைமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். முகவையின் முடி சூடிய மன்னர் சண்முகராஜேஸ்வர சேதுபதி அவர்களும், முகவையின் முடி சூடா மன்னன் என்று மாண்புமிகு உறுப்பினர், எங்கள் அமைப்பு செயலாளர் அவர்களாலும் சேதுபதி சீமையின் செந்தாமரை என்று தமிழக முதல்வர் கலைஞர் அவர்களாலும் பாராட்டப்பட்ட எம். எஸ். கே. சத்தியேந்தரன் அவர்களும் உறுப்பினராய் வீற்றிருந்த இந்த மாமன்றத்திற்கு என்னை அனுப்பிய இராமநாதபுரம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு முதலில என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு நகராட்சி தலைவர்களுக்கு நகர மன்றங்களின் தனித் தன்மை, கௌரவம் மற்றும் உரிமைகளை மீண்டும் அளிக்க முன் வந்திருப்பதற்கு ஒரு நகர மன்றத்தின் தலைவன் என்ற முறையில் நான் எனது நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எம். எஸ். கே. ராஜேந்திரன்] [1989 ஏப்ரல் 19

உள்ளாட்சி நிறுவனங்கள் தங்களுக்கு வருவாய் தரக்கூடிய திட்டங்களை பெருக்கிக் கொள்ள, அத்தியாவசியமான திட்டங்களை செயல்படுத்த நகராட்சி நகர்புற வளர்ச்சி நிதி அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டு இருப்பது கண்டு நான் மனமகிழ்கின்றேன்.

உள்ளாட்சி மன்றங்களின் முக்கியமான சில பிரச்சினைகளை இந்த அரசின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். முதலாவதாக ஜனநாயகத்தின் அடிப்படையை தகர்த்து எறியும், திரும்ப அழைக்கும் அதிகாரம். அந்த சட்ட திருத்தத்தை அடியோடு ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சி தலைவர்கள் மற்றும் நிபுணர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்து, வரி விதிப்பு முறைகளில் மக்களுக்கு எந்தவிதமான பாரபட்சமான முடிவுகளோ அல்லது சிரமங்களோ இல்லாத முறையில், அவைகளை சீர்திருத்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது இருக்கிற வரி விதிப்பு முறைகள் 1: 2: 3 என்று விகிதப்படி இருப்பது ஓரளவுக்கு தான் சரியாக இருக்கிறது என்றாலுங்கூட அது முழுமையான நிவாரணம் அளிப்பதாக இல்லை. எனவே ஒரு குழு அமைத்து மக்களுக்கு சுமை ஏற்படாத விதத்தில் இந்த வரி விகிதத்தை திருத்தி அமைக்க நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேல் முறையீட்டை விசாரித்து, அதிலே இருப்பதை 5 சதவீதம் தான் நகர்மன்ற தலைவர் குறைக்க முடியும் என்ற அந்த உச்சவரம்பை தளர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சிகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கு மாநில அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம், அகவிலைப்படி மற்றும் அனைத்தும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கேளிக்கை வரிகள் மீதான சர்சார்ஜ், காட்சிகள் மீதான சர்சார்ஜ் ஆகியவற்றில் நகராட்சிகளுக்கு 90 சதவீதம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய பலரும் குறிப்பிட்டதுபோல வாகன் வரியில் 25 சதவீதம் நகராட்சிகளுக்கு வழங்க வேண்டுமென்று இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் களப் பணியாளர்களையும், அமைச்சுப் பணியாளர்களையும் ஒன்றாக கருதுவதை விடுத்து, அவர்கள் முன்பு இருந்ததுபோல அவர்களு



1989 ஏப்ரல் 19] (திரு. எம். எஸ். கே. ராஜேந்திரன்]

டைய புரமோஷன் போன்றவற்றிற்கு தனித் தனியான முறையிலே கணக்கு எடுக்க வேண்டுமென்று இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன்.

மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாமல் நகரியங்களாக இயங்கி வருகின்ற இராமேஸ்வரம் போன்ற நகரியங்களை மக்கள் பிரதிநிதிகள் உள்ள நகராட்சி மன்றங்களாக மாற்ற வேண்டுமென்று அரசை கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் மேல் முறையீடு செய்வதா வேண்டாமா என்பதை முடிவு செய்ய நகர சபைகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டும். ஆனால் மாநகராட்சிகள் மட்டும் தான் தங்கள் சொந்த சட்ட ஆலோசகரின் கருத்தை கேட்டு முடிவு செய்யலாம் என்று இப்போது இருக்கிறது. அந்த நிலையை மாற்றி, ஏனைய நகராட்சிகளும் அவ்வாறு செயய அதிகாரம் வழங்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி 1,600 கி.மீ. கொண்ட சாலைகளை பராமரித்து வருகிறது. அதேசமயம் மதுரை மாநகராட்சி 474 கி.மீ. கொண்ட சாலைகளை பராமரித்து வருகிறது. சென்னை மாநகராட்சிக்கு 220 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டு இருக்கும்போது மதுரை மாநகராட்சிக்கு 10 லட்சம் ரூபாய் தான் வழங்கப்பட்டு இருக்கிறது. எனவே மதுரை மாநகராட்சிக்கு போதுமான அளவுக்கு அதிகத் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது நகராட்சி நிதி ஆதாரங்களை ஆய்வு செய்யும் போது, இந்த மாநிலத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய மாநகராட்சிகள்தான் போதுமான வருவாயை பெற்று இருக்கின்றன.

(பிற்பகல் 12-40.)

மற்றபடி இந்த நிதிப் பற்றாக்குறையை அரசு கருத்தில் கொண்டு நகராட்சிகளுக்குப் போதுமான நிதி ஆதாரங்களைத் தேடித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிக்குத் தேவையான வாகனங்களை அரசு அனுமதி பெற்றுத்தான் வாங்க வேண்டுமென்ற நிலையை மாற்றி, நகராட்சி நிர்வாக இயக்குநர் அனுமதி பெற்றால் போதும் என திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். எஸ். கே. ராஜேந்திரன்] [1989 ஏப்ரல் 19

சுகாதார அதிகாரிகள், பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கி வருகிறார்கள். இந்த நிலை மாறுபட்டு அவர்களும் நகராட்சி நிர்வாகத்தின் கீழ் இடம் பெறும் நிலை உருவாக்கப்பட வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிக் கடைகள், சந்தைகள், கட்டிடங்கள் ஆகியவைகளின் கட்டண உயர்வுக்கு எதிராக வர்த்தகர்கள் உச்ச நீதி மன்றத்துக்குச் சென்று உள்ளார்கள். இவ் வழக்குகளை விரைந்து முடித்து, நகராட்சி வருவாயைப் பெருக்க வழிவகை காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தனி அதிகாரிகள் காலத்தில் ஆறு மாதங்களுக்குள் புதுப்பித்துக் கொள்ளாமல் காலாவதியான பணியிடங்களை அந்தந்த நகராட்சிகள் மீண்டும் புதுப்பித்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சிகளை ஏ, பி, சி, என்று பிரிக்காமல், எல்லா நகராட்சிகளும் ஒரே அளவில் பேருந்துகளுக்கு ரூபாய் ஐந்து வீதம் வசூலிக்க அனுமதி வழங்க வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சித் துறையில் நிறைவேற்றப்படும் திட்டங்கள் நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும். ஏனெனில் நகராட்சி எல்லைக்குள்ளேயும் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கிறார்கள், படித்த வேலையில்லாதவர்கள் இருக்கிறார்கள், ஏழை விவசாயிகள் இருக்கிறார்கள். விவசாயக் கூலிகள் இருக்கிறார்கள்; வீடு அற்றவர்கள், நிலமற்றவர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கருத்திற்கொண்டு, வறட்சிப் பணிகள், வேலை வாய்ப்புப் பணிகள் போன்ற அனைத்துத் திட்டங்களும் நகராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்பட வேண்டுமென்றும் நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை எளிய மக்கள், அவர்கள் கிராமப்புறங்களில் இருந்தாலும், நகரப்புறங்களில் இருந்தாலும், பாகுபாடின்றி அனைத்து மக்களுக்கும் புத்தாண்டு தினத்தன்று ஐந்து கிலோ அரிசியை வழங்கி, ஏழை எளிய மக்களின் அகமும், முகமும் மலரச் செய்த தமிழக அரசு இதுபோல் அனைத்து நல்வாழ்வுத் திட்டங்களையும் நகராட்சி, ஊராட்சி என்ற பாகுபாடின்றி நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 19] [திரு. எம். எஸ். கே. ராஜேந்திரன்)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

எனது நகர்மன்றமான இராமநாதபுரம் நகர மன்றத்தின் பிரச்சினைகளுக்கு நான் வருகிறேன். எங்களை நோக்கியுள்ள தலையாய பிரச்சினை குடிதண்ணீர்ப் பற்றாக்குறை. 35 இலட்சம் செலவில் நிர்மாணிக்கப்பட்ட கொட்டிதட்டி குடிநீர் விநியோகத் திட்டம், வைகை வறண்டு விட்டதால் பயனற்றுப் போய்விட்டது. எனவே, வைகை என்னும் பொய்யாக் குலக்கொடி மீண்டும் தனது பழைய பொலிவோடு நடைபோட வழிவகை செய்ய வேண்டும். வைகை நதியில் ஆக்கிரமிப்புகளை அகற்றி வைகையைக் காப்பாற்ற வேண்டும். அப்படிச் செய்தால்தான் மதுரை, மானா மதுரை அருப்புக்கோட்டை, திரு. புவனம், பாமக்குடி மற்றும் இராமநாதபுரத்தின் குடிநீர்ப் பிரச்சினையை சமாளிக்க முடியும். மேலும் வைகையாற்றில் மண் எடுப்பதும் தடை செய்யப்பட வேண்டும்.

அதுவரையில் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்வது மற்றும் சிறிய தற்காலிக நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வது போன்ற நடவடிக்கைகளுக்கு நகராட்சிகளுக்கு அரசு உரிய மானியம் வழங்கி உதவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் பாதாள சாக்கடைத் திட்டம் பூர்வாங்க ஆய்வு செய்யப்பட்டு விட்டது. இருந்தாலும் வேலைகள் இன்னும் துவங்கப்படவில்லை. அந்தக் காலதாமதத்தை நீக்கி உடனே செயல்பட அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், மாவட்டத் தலைநகரான இராமநாதபுரம் நகராட்சியின் தோற்றத்தை மேம்படுத்த 30 இலட்சம் உதவி கோரினோம். அது உடனடியாக வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் நகரில் ஒரு சமுதாயக் கூடமும், கலையரங்கமும் மற்றும் விளையாட்டரங்கமும் கட்டித் தர வேண்டுமெனத் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் நகராட்சியில் மகப்பேறு மருத்துவமனை இருக்கிறது; ஆனால் தகுதி வாய்ந்த பெண் டாக்டர்கள் இல்லை. அந்தக் குறையை நிவர்த்தி செய்ய வேண்டும்.

இராமநாதபுரம் நகராட்சிக்கு ஹெல்த் ஆபிசர் வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரத்தின் மத்தியில் கொசு உற்பத்தி பண்ணையாக இயங்கிவரும் செம்மங்குண்டு ஊரணியைத் தூர்த்து, அந்த இடத்தில் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் மற்றும் திரையரங்கம் கட்டித் தர வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

இது போன்ற பலவிதமான சீர்திருத்த திட்டங்களை மேற்கொண்டு இந்த மக்களுக்கு சீரிய பணியாற்றி வருகின்ற இந்த அரசைப் பாராட்டி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காலங்கருதி சொல்லக்கூடியவைகளை மிகச் சுருக்கமாகச் சொல்ல விழைகிறேன். நகராட்சிக்குப் பிரதான வருமானமாக நகராட்சி சொத்துக்களிலிருந்துதான் வருமானம் வருகிறது. ஆனால், கடந்த காலங்களில் அந்தச் சொத்துக்களை வாடகைக்கு எடுத்திருப்பவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடையுத்தரவு பெற்றிருப்பதன் காரணமாக அந்த வாடகையை அதிகமாக உயர்த்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஒன்று, அரசு அந்தத் தடை உத்தரவை நீக்குவதற்காகத் துரிதமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படியில்லாத பட்சத்தில் விருதுநகர் நகராட்சியில் நாங்கள் அந்த வாடகைக்கு இருப்பவர்களுடன் சுமுகமாகப் பேச்சு வார்த்தை நடத்தி இரண்டு முறை ஐம்பது, ஐம்பதாக மொத்தம் 100 சதவிகித வாடகையை உயர்த்தியிருக்கிறோம். அந்த அளவிலாவது எல்லா நகராட்சிகளிலும் நடைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சிகளுக்கு உபயோகப்படுத்தக்கூடிய டிராக்டர்கள், லாரிகள் போன்றவைகள் சுமார் இருபது, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு வாங்கப்பட்டவைகளாக இருப்பதால் அவைகளுக்குச் செலவும் அதிகமாகி இருக்கிறது. ரிப்பேராகி, மாதத்தில் பல நாட்கள் அவைகளை இயக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, புதிய வண்டிகள் வாங்கிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

கொசு ஒழிப்புத் திட்டத்திற்காக நகராட்சிகள் செலவு செய்ய 25 சதவீதம் மட்டும் மானியமாக வழங்கப்படுகிறது. அது காணவில்லை. அதை 50 சதவீதமாக உயர்த்திக் கொடுக்கவேண்டும். அதைப்போல மகப்பேறு மானியத்தையும் 25 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் வரியைப் பொறுத்தவரையில் அரசுப் பணியாளர்கள் 'பி' — 'சி' பிரிவுகளில் உள்ளவர்களிடம் தொழில் வரி வாங்க வேண்டாம் என்றும், அரசே அந்தத்



தொழில் வரியைச் செலுத்திவிடும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இதுவரையில் அரசு அந்தத் தொழில் வரியை நகராட்சிகளுக்குச் செலுத்தவில்லை. ஆகவே இவைகளை நகராட்சிகளுக்குச் செலுத்த அரசு துரித நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சிப் பொறியாளர்களைப் பொறுத்தவரையில் 50,000 ரூபாய்க்கு மேல் அவர்கள் எஸ்டிமேட் தயாரிக்க முடியாத நிலை இருக்கிறது. அந்தத் தொகை பல ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயம் செய்யப்பட்டதால், தற்போதுள்ள மதிப்பைக் கணக்கிட்டு இரண்டு லட்சம் ரூபாயாக அதனை உயர்த்தினால் பலவேலைகளை நகராட்சிகளில் செய்வதற்கு எளிதாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகராட்சிப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் இது திரிசங்கு சொர்க்கமான நிலையில்தான் இருக்கிறது. அதாவது அரசு ஏற்றுக் கொண்டு விட்டது என்று சொல்கிறார்கள். எந்த அளவிற்கு அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்? பள்ளிக் கட்டடங்களைப் பராமரிப்பது யார் என்ற விஷயங்கள் எல்லாம் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது கூடச் சொன்னார்கள். நகராட்சிகளே ரிப்பேர் பார்க்கலாம் என்று சொன்னார்கள். விருதுநகர் நகராட்சியில் நாங்கள் ரிப்பேர் பார்த்ததை ஆடிட்டில் அப்ஜெக்ட் செய்திருக்கிறார்கள். நீங்கள் ஏன் செலவு செய்தீர்கள், அரசுதான் ஏற்றுக்கொண்டு விட்டதே என்று சொன்னார்கள். ஆகவே அதில் ஒரு தெளிவான விளக்கம் ஒவ்வொரு நகராட்சிக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கல்வி அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி நகராட்சிகளால் பராமரிக்க முடியாது என்ற நிலையில் உள்ள அரசுப் பள்ளிகளை, சில தனியார் பள்ளிகள் நன்றாக நடத்தினார்கள் என்றால், அந்தப் பள்ளிகளோடு இணைத்து விடலாமா என்ற ஒரு கொள்கை அளவிலான முடிவை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கேளிக்கை வரியின் மூலமாக முன்பு நகராட்சிகளுக்கு 90 சதவீதம் வரையில் பங்குத் தொகை கொடுக்கப்பட்டது. பின்னர் அது 70 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. அதை முன்பு கொடுத்ததைப் போல 90 சதவீதமாக உயர்த்திக் கொடுத்தால் நகராட்சிகளுக்கு நிதியாதாரம் அதிகமாக கிடைக்கும் என்று நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அரசிலிருந்து நிதியுதவி பெற்றுதான் பல காரியங்களைச் செய்யக்கூடிய நிலையில் எல்லா நகராட்சிகளும் இருக்கின்றன. அப்படி இருக்கிறபோது 'டீச்சிங் கிராண்ட்'

1985-86-ம் ஆண்டிலிருந்து விருதுநகர் நகராட்சியில் இன்னும் அரசிடமிருந்து பெறப்படவில்லை. அதனுடைய மொத்தத் தொகை 18,84,432 ரூபாய் 60 பைசா அரசிடமிருந்து விருது நகர் நகராட்சிக்கு 'டீச்சிங் கிராண்ட்' மட்டும் வரவேண்டி யிருக்கிறது. இதுசம்பந்தமாக பலமுறை நான் அரசுக்குக் கோரிக்கை அனுப்பியும் அது இன்னும் கவனிக்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து அந்த மொத்தத் தொகையையும் செலுத்த அரசுக்கு நிதி வசதி இல்லையென்றால் ஏதாவது ஒரு கணிசமான தொகையைக் கொடுத்தார்களானால் நாங்கள் எங்களுடைய நகராட்சிப் பணிகளைச் செய்ய உதவிகரமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல 'மெட்டர்னிட்டி ஹோமிற்காக' ஒரு லட்சம் ரூபாய் வர வேண்டியிருக்கிறது. மெட்டர்னிட்டி கிராண்ட் 1985-86-ல் 57 ஆயிரம் ரூபாய் வர வேண்டும். 1986-87-ம் ஆண்டிற்கு 65 ஆயிரம் ரூபாய் வர வேண்டும். 'ஆண்டி மஸ்கிட்டோ கிராண்ட்' 11 ஆயிரம் ரூபாய் வர வேண்டும். ஆக மொத்தம் 23,58,000 ரூபாய் வர வேண்டியிருக்கிறது. இவற்றை எல்லாம் நான் ஏதோ வட்டிக் கடைக்காரன் போல வற்புறுத்திக் கேட்பதாக நினைக்காமல், அரசினுடைய நிதியாதாரத்தைப் பொறுத்து, எங்களுடைய நகராட்சியின் தேவைகளையும் கருத்திற்கொண்டு ஓரளவிற்காவது அந்த 'ஃபண்டை' 'ரிலீஸ்' பண்ண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதைவிட முக்கியமான விஷயம். கடந்த வறட்சியின் போது அரசிடமிருந்து நகராட்சிகளில் லாரிகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அரசிட மிருந்து மானியமும் கொடுத்தார்கள். அந்தத் தொகை போதாமல் இருந்தபோது, நகராட்சிகளுடைய 'ஜெனரல் ஃபண்டிலிருந்து' நீங்கள் செலவழித்துக் கொள்ளுங்கள். எவ்வளவு அதிகமாகச் செலவழிக்கிறீர்களோ அதைக் கொடுத்து விடுகிறோம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், டைரக்டர் ஆஃப் முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன் அவர்களும் ஒப்புதல் அளித்தார்கள். அதற்கு அரசின் குறிப்பாணையும் இருக்கிறது. அந்த வகையில் கூடுதலாக இரண்டு லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் நாங்கள் செலவழித்து இருக்கிறோம். அந்தத் தொகையைக் கேட்கும்போது இன்னும் அந்தத் தொகை வரவில்லை. பல உள்ளாட்சிகளுக்கு இந்தத் தொகையை நீங்கள் உங்கள் 'ஜெனரல் ஃபண்ட்'-லிருந்து 'மீட் அவுட்' செய்து கொள்ளுங்கள் என்றும், அரசிடமிருந்து வராது என்ற அளவில் அவர்கள் ஒரு ஜீ. ஓ.-வை பிறப்பித்து இருக்கிறார்கள். அரசு கொடுக்கிறேன் என்று ஒரு தொகையைச்



சொல்லிவிட்டு, பிறகு அதைக் கொடுக்க மறுத்தால் அரசின் மீது நம்பிக்கையை இழக்கக்கூடிய ஒரு சூழ்நிலை வந்து விடும் என்ற காரணத்தால, கொடுப்போம என்று சொன்ன தொகையைக் கொடுப்பதற்கு ஏறபாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 'டவுன் பிளானிங்கைப்' பொறுத்தவரையில் 'லே அவுட் அப்ரூவல்' செய்வதில் ஏதோ சிக்கலகள் இருக்கின்றன. அவை என்ன சிக்கல்கள் என்று தெரியவில்லை. 'லே அவுட் அப்ரூவல்' ஆகாமல் இருப்பதால் நகராட்சிப் பகுதிகளில கட்டடங்களுக்கு அனுமதியில்லாமல் அவர்கள் கட்டக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஒரு பகுதியில் சாலை வசதி, மின்கம்பங்கள் அமைப்பதற்கும், தண்ணீர் குழாய்கள் பதிப்பதற்கும் வசதிகள் இல்லாதபடி அவரவர்கள் இஷ்டப்படி கட்டடங்களைக் கட்டினால் பின்னால வரக்கூடிய காலங்களில் அது இடைஞ்சலாக இருக்கும் என்ற கருத்தைக் கவனத்தில கொண்டு 'லே அவுட் அப்ரூவல்' செய்யக்கூடிய விதிமுறைகளை எளிமைப் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்ஸ் அப்பீல் கமிட்டி'யில் 5 சதவீதம் என்று இருந்ததை திரும்பப் பெறப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்கு மிக்க மகிழ்ச்சி. ஆர்.டி.ஓக்குப் பதிலாக சேர்மன்தான் சேர்மனாக இருப்பார் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால் சில நகராட்சிகளில் ஐந்து சதவீதம் என்ற விதிமுறையை வைத்து பல டேக்ஸ் அப்பீல்களை டிஸ்போஸ் செய்திருக்கிறார்கள். ஏற்கனவே அந்த மாதிரி டிஸ்போஸ் செய்திருந்தாலும் கூட, மறுபடியும் அவர்கள் அப்பீல் செய்வதற்காக ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து, நியாயமான வழியில் அவர்களுக்கு வரி குறைப்பு செய்வதற்கான நடவடிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

'உலக வங்கி' நிதி உதவி திட்டத்தின் கீழ் 640 கோடி ரூபாய் நிதி உதவி கிடைக்கிறது. அது நகராட்சிகளுக்கும் கிடைக்கிறது. அதற்குத்தமிழக அரசு மானியத் தொகையாக 10 கோடி ரூபாயைச் செலுத்தியிருக்கிறது. அந்த 10 கோடி ரூபாய் செலுத்தப் பட்டும், பல மாதங்களான பிறகும் இன்னும் அந்த வேலை ஒவ்வொரு இடத்திலும் ஒரு ரூபாய்க்குக் கூட ஆரம்பிக்கப்பட வில்லை. ஏற்கனவே ஜனவரி மாதத்தில் ஆரம்பித்து விடலாம் என்று சொன்னார்கள். ஆனால் தேர்தல் காரணமாக தள்ளிப் போட்டிருக்கலாம். இப்போதுகூட இன்னும்அந்தப் பணம் கொடுக்கப்படவில்லை. அதில் விருதுநகர் நகராட்சிக்கும்

பணம் வர வேண்டியிருக்கிறது. அதைப் பார்த்துச் செய்ய வேண்டும். விருதுநகரில் அண்டர் கிரவுண்ட் டிரைனேஜ்—பாதாள சாக்கடைத் திட்டம்— வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். விருதுநகரில் ஒரு ஓவர்பிரிட்ஜ் கட்டப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, மின்சாரம் அடிக்கடி தடைப் படுவதால், குடிநீர் வழங்குவதில் மிகச் சிரமம் ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மோட்டார் காயில் ரீ-ஒயின்டிங் பற்றி இப்போது ஒரு நல்ல உத்தரவைப் பிறப்பித்திருக்கிறீர்கள். உள்ளாட்சிகளுக்கே அந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கிறீர்கள். அதற்கு மிக்க நன்றி. அதில் ஒரு சின்ன மாறுதல் செய்யப்பட வேண்டும். அதனைச் செய்தால் இன்னும் நன்றாக இருக்கும். ஒவ்வொரு காயில் போகும்போதும் டெண்டர் கேட்க வேண்டுமென்றில்லாமல், விருதுநகர் நகராட்சியில் அலுவல் டெண்டராகக் கேட்டிருக்கிறார்கள். ஒரு ஹார்ஸ் பவருக்கு என்றால் இவ்வளவு, இரண்டு ஹார்ஸ் பவர் என்றால் இவ்வளவு, ஐந்து ஹார்ஸ் பவர் என்றால் இவ்வளவு என்று. அதனால் ஒவ்வொரு முறையும் டெண்டர் கேட்க வேண்டுமென்ற காலதாமதத்தைத் தவிர்க்க முடியும்.

மேலும் பஞ்சாயத்து யூனியன்களிலோ அல்லது கலெக்டர் அலுவலகத்திலோ -ஸ்பேர் மோட்டார்ஸ்' என்று இருபது அல்லது முப்பது மோட்டார்களை வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு மோட்டார் காயில் போன பிறகு, அதைப் பழுதுபார்க்க அனுப்பி, அது ரெடியாகிற வரையில் ஸ்பேர் மோட்டாரை வைத்துக் கொண்டால், மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்குவதில் இருக்கக்கூடிய பெரும்பாலான பிரச்சினை நீங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது குடித் தண்ணீர் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு ஹேண்ட் பம்ப் ரிப்பேர் பண்ணுவதற்கு பஞ்சாயத்து யூனியனில் போதிய நபர்கள் கிடையாது இதைக் கலெக்டர் அலுவலகத்தில் ஒப்படைத்து, வறட்சி முடியக்கூடிய காலவரையிலாவது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ரிப்பேர் செய்யப்பட வேண்டுமென்று சொன்னால், நிச்சயமாக பிரச்சினையைச் சமாளிப்பதற்கு உதவியாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அதோடு, பிளாக் அட்வைசரி கமிட்டிக்கும், டாஸ்க் போர்ஸ் கமிட்டிக்கும் எம்.எல்.ஏ.க்களையும், எம்.பி.க்களையும் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, அமருகிறேன். நன்றி.



**திரு. ஜி. பழனிச்சாமி :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்பம் தரக்கூடிய உள்ளாட்சி மானியக் கோரிக்கையின்மீது நானும் சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன். உள்ளாட்சி அமைப்பு என்பது, தமிழகத்தில் இருக்கக் கூடிய கிராமப்புறத்து மக்களுடைய வாழ்க்கையில் பெரும்பகுதி அத்தியாவசியமான பணிகளைச் செய்கின்ற ஒரு அமைப்பு என்பதாகும். கிராமப்புறத்திலும் நகர்ப்புறத்திலும் வாழக்கூடிய மக்கள் பிரச்சினைகளில் பொதுவாக எடுத்துக் கொண்டால், குடி தண்ணீர் பிரச்சினை, சாலை வசதி, சுகாதாரம் போன்ற பணிகளையெல்லாம் இந்த அமைப்புகள் தான் செய்து கொண்டிருக்கின்றன. இப்போது அந்த விஷயங்களில் நான் அதிகமாகச் சொல்வதை விட, முக்கியமான ஒரு விஷயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நான்கு தினங்கள் சட்டப் பேரவைக்கு விடுமுறை விட்ட நாட்களில் நான் என்னுடைய தொகுதியிலே சுற்றிப் பார்த்தேன். அப்படிப் பார்க்கிறபோது, பொதுவாக குடிநீர்ப் பிரச்சினை என்பது மிகவும் கவலை தரும் நிலையில் இருக்கிறது என்பதை நேரில் கண்டேன். பல மைல்களுக்கு அப்பால் சென்று, வண்டியிலே தண்ணீர் கொல்டு வந்து, தண்ணீரை அந்தக் கிராமப்புற மக்களுக்கு அளிக்ககூடிய நிலைமை இருக்கிறது. பொதுவாக முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் இருக்கக் கூடிய விளாங்காடு, பாண்டி, கீழப்பாண்டி, ஓவரூர் இடையூர் சங்கந்தீ, ஆரியலூர் போன்ற பகுதிகளில் நீர்ப் பிரச்சினை என்பது, பல மைல்களுக்கு அப்பால் சென்று மக்கள் தண்ணீர் கொண்டு வருகிறார்கள். பஞ்சாயத்துக்களில் இருக்கக்கூடிய மக்களே ஒன்று சேர்ந்து, பண வசூல் செய்து கொடுத்து, டிராக்டர் மூலமாகத் தண்ணீர் கொண்டுவந்து கொடுக்கக் கூடிய நிலைமை இருந்து வருகிறது. இதை உணர்ந்து அந்த ஒன்றியத்திற்கு நிதி ஆதாரம் செய்து கொடுத்து, வாகனம் மூலமாக குடிநீர் வழங்குவதற்கான முயற்சிகளைத் துரிதமாக எடுத்துக் கொடுக்காவிடில் நிச்சயமாக அந்தப் பகுதி மக்கள் அந்த ஊரை விட்டே நகரக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அப்பிரச்னையை உடனடியாக தீர்த்துவைக்க வேண்டுமென்று சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். அப்படி வருகிற பொழுதுகூட. டிராக்டர் மூலமாகத் தண்ணீர் கொண்டு வருவதற்கு அந்தப் பகுதியிலே இருக்கக் கூடிய ரோடு சரியாக இல்லாமல் அங்கேயிருக்கிற மக்கள் மைல் கணக்கில் நடந்து ரோடுக்கு வந்து, தண்ணீர் எடுத்துக் கொண்டு போக வேண்டிய நிலைமையிருக்கிறது. அதற்காக இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அது சம்பந்தமாக கலெக்டர் அவர்களிடம் நேற்றைய தினம் நேரடியாக முறையிடு கொடுத்திருக்கிறோம்.

நான் பத்திரிகையிலே ஒரு செய்தியைப் பார்த்தேன், தஞ்சாவூரிலே இருக்கக் கூடிய பெரிய கோவிலில் குடி தண்ணீர் இல்லாத அளவிற்கு 120 அடிக்கும் கீழாக தண்ணீர் போய்விட்ட

தால், அங்கே அவல நிலை ஏற்பட்டிருப்பதாகப் பத்திரிகை
யிலே ஒரு செய்தியைப் பார்த்தேன். தஞ்சை சட்ட மன்ற
உறுப்பினர் அவர்கள் அதுபற்றி சொல்வார்கள் என்று நினைத்
தேன். அப்படிப்பட்ட நிலைமை தஞ்சையில் இருக்கிறது.
நாங்கள் அடி பம்ப் போட்டு அதன் மூலமாகத் தண்ணீர்
எடுக்கலாம் என்று கருதினால், எல்லாம் உப்புத் தண்ணீராக
இருக்கிறது. உப்புத் தண்ணீர் என்றால் குடிக்க முடியாத
அளவுக்கு இருக்கிறது. ஆகவே, அக்குறையைப் போக்க அரசு
தக்க வழிவகை செய்ய வேண்டும்.

அதே போல், சமுதாய வளர்ச்சித் திட்டத்திலே, ஐ.ஆர்.
டி.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டங்களின் பலன், சாதாரண
சிறு விவசாயிகளை போய்ச் சேரவில்லை. அதற்கு மாறாக,
அதற்குக் கொடுக்கின்ற மானியம், சப்சிடியை அரசியல் கட்சி
யிலே விவரம் தெரிந்தவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.
விவரம் தெரிந்தவர்கள், பாங்கிலே இருக்கக் கூடிய அதிகாரி
களைப் பயன்படுத்திக் கொண்டு, அந்த மானியத் தொகையை
மட்டும் எடுத்துக் கொண்டு, திரும்ப உடனடியாகப் பணத்தைக்
கட்டக்கூடிய முறைகேடான நிலைமைகள் இருக்கின்றன.
ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக குழு அமைக்கப்பட்டிருப்ப
தால், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், சட்டமன்ற உறுப்
பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றவர்கள்,
ஏழை, ஏளியவர்களுக்கு, கடன் கிடைக்கக் கூடிய வகையிலே
ஏற்பாடு செய்ய வேண்டும். அதே போன்று, ஐ.ஆர்.டி.பி.,
ஆர். எல். இ. ஜி.பி. போன்றவைகளுக்கு அரசால் கொடுக்கப்
படும் தொகை காலத்தோடு பாங்குக்குப் போய்ச் சேருவதில்லை.
பாங்கு அதிகாரிகள், அந்த ஊராட்சி ஒன்றியங்களிலே தீர்வு
செய்வதற்கு நாங்கள் லோன் கொடுக்க வேண்டிய அவசியம்
இல்லையென்று சொல்கிறார்கள். நிறைய இடங்களிலே அப்படிப்
பட்ட நிலைமை இருக்கிறது. ஆகவே, சாதாரண ஏழை எளிய
மக்கள் அந்தக் கடனைப் பெற்று, சிறு தொழில் நடத்தி,
தங்களுடைய கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான வழிவகை
களுக்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

அதேபோன்ற நகர்ப்புற பஞ்சாயத்திலே இருக்கக்கூடிய
வர்கள் சாதாரண, ஏழை எளியவர்கள், அந்த ஏழை, எளிய
மக்களுக்கு ஐ.ஆர்.டி.பி., ஆர்.எல். இ.ஜி.பி. கடன் கிடைப்ப
தில்லை. அதே போன்று, சமூக காலனி வீடுகள் அவர்களுக்குக்
கிடைப்பதில்லை. ஏனென்றால், நகர்ப்புறத்திலே இருப்பவர்கள்
வசதி, வாய்ப்பைப் பெற்றவர்கள் என்ற காரணத்தினால்,
அவர்களை ஒதுக்கி விடுகிறார்கள். அவர்களுக்கும் கடன்.
கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும். ஆர்.எல்
இ.ஜி.பி. ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் கட்டியிருக்கக்கூடிய
பல்வேறு அரிசன காலனிகளுக்கும் குடிநீர் வசதியும் கிடையாது.



அதே நேரத்திலே மின்சார வசதியும் கிடையாது. அன்றைய
தினம் எங்கெங்கோ அத்தகைய வீடுகள் கட்டப்பட்டிருக்கின்
றன. அந்தவீடுகளை ஏதோ கட்டிக் கொடுத்திருக்கிறார்களே தவிர
எந்த வசதியும் கிடையாது. ஆகவே, அங்கு குடியேறியவர்கள்
வீட்டைப் பராமரிக்க முடியாமல், பழைய வீட்டுக்குத் திரும்பக்
கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அந்தக் காலனி வீடுகளுக்கு
அரசு குடிநீர் வசதி, மின்சார வசதிகளைச் செய்து கொடுக்க
ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

அதே போன்று நகர்ப்புறத்திலே இருக்கக் கூடிய சாக்கடைத்
திட்டம், அநேகமாக என்னுடைய திருத்துறைப்பூண்டி பேரு
ராட்சியில் இத்திட்டம் இல்லை. சாக்கடை ஆறுகள் போல்
ரோடுகள் பூராவும், நகரம் பூராவும் ஓடிக் கொண்டிருக்கின்றன
பன்றிகள் அதிகமாக இருக்கக் கூடிய நகரம் திருத்துறைப்
பூண்டி. அந்தப் பன்றிகளாலும் சாக்கடையாலும் கொசுத்
தொல்லைகள் அதிகம். கொசுத் தொல்லைகளோடு பலபேர்கள்
சொல்லுகிறார்கள். கொசுக்களால்தான் மூளைக் காய்ச்சல் வரு
கிறது. என்று. டாக்டர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.
பஞ்சாயத்துக்கள் மூலமாக, பன்றிகளைச் சுட்டுத் தள்ளினார்கள்.
பன்றிகளைப் பிடிப்பதற்கு நிர்வாக அதிகாரிகள், பஞ்சாயத்துத்
தலைவர்கள் முயன்றபோது, பஞ்சாயத்தில் சுத்தமாகப் பணம்
இல்லையென்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே,
அதுபோன்ற நகராட்சிகளுக்குப் பணம் ஒதுக்கி, சாக்கடைத்
திட்டத்தை அமுல் படுத்துவதற்கான முயற்சியை இந்த அரசு
செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்
கொள்கிறேன். நான் பேசுவதற்கு வாய்ப்பு பேரவைத்
தலைவரிடம் கேட்டது கூட, குடி நீர் பிரச்சினைப் பற்றிப்
பேசத்தான். முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி அதே
மாதிரி, கோட்டூரிலே இருக்கக்கூடிய நிலைமைகளை நான்
நேரடியாகப் பார்த்த காட்சி, இன்றைக்கு அந்த ஊரிலே
இருக்கிற மக்களே நேரடியாக தண்ணீர் கொண்டு வந்து, குடங்
களில் வைத்து இருக்க வேண்டிய துர்பாக்கியமான நிலைமைகள்
இருக்கின்றன. அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து,
வாகனங்கள் மூலமாக தண்ணீர் அளிக்க வேண்டுமென்று நான்
கேட்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[பிற்பகல் 1.00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதி
யோடு அவையின் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, விவாதத்தில் உள்ள இந்த மானியங்களைக் குறித்து
ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்
சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், சென்னை நகரத்தி
னுடைய முன்னேற்றத்திற்காக ஓரளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டு

இருப்பதை நான் வரவேற்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு குறிப்பாக சென்னை நகரத்தில், மக்கள் பிரதிநிதிகள் அதிகாரிகளைச் சந்தித்து துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு, துப்புரவு வேலைகளை, சுகாதாரப் பணிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு விளக்குகள் எரிய வேண்டும். ஏனைய சௌகரியங்கள் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் போது அவர்கள் மக்கள் பிரதிநிதிகளுடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதோடு மட்டுமல்லாமல், அவர்களாகவே பல்வேறு பகுதிகளுக்குச் சென்று, துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்பதை நகர மக்கள் மிகவும் பாராட்டுகிறார்கள்.

அதே நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட சென்னை நகரத்தினுடைய பல்வேறு பகுதிகளுக்குச் சென்று, அன்றாட மக்களுக்குத் தேவையான, நகரியத் தேவைகளை, அவர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காக தனிப்பட்ட முயற்சிகளிலே ஈடுபட்டு வருவதையும் மக்கள் பாராட்டுகிறார்கள். நான் கூட பாராட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன் ஆனால் என்னதான் இருந்தாலும், நம்முடைய பிரச்சினைகள் இமாலயப் பிரச்சினைகளாக பல ஆண்டு காலம் தேக்கம் பெற்ற பிரச்சினைகளாக இருக்கின்றன, முக்கியமாகச் சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் குடிநீர்ப் பிரச்சினை, வடிகால் வாரியத்தின் வாயிலாக செய்யப்பட வேண்டிய ஒழுங்கு முறை—வடிகால்கள் தேக்கம் அடையாமல், அந்த வாய்க்கால்கள் எல்லாம் சீரான முறையில் செயல்படக் கூடிய வகையில் உள்ள—இவைதான் மிக முக்கியமானவை என்பதை நாம் அறிந்தவர்களாக இருக்கிறோம்.

குறிப்பாக அரசுக்கு ஒன்றை நான்ஆலோசனையாகச் சொல்ல வேண்டும். இப்போது குடிநீர் வடிகால் வாரியத்தைப் பிரித்து குடிநீருக்காக தனியாகவும், வடிகாலுக்காக தனியாகவும் இரண்டு, அமைப்புக்களாக ஏற்படுத்தினால் நல்லது. அதனுடையகுக் கீழே குடிநீர்ப் பகுதிக்கு தனியாகவும் டிரெயினேஜ் என்று சொல்லக்கூடிய இந்த வடிகாலுக்குத் தனியாகவும் ஒரு துறையை ஏற்படுத்தினால், விரைந்து நம்முடைய பிரச்சினைகள் தீர்க்கப் படும் என்பதை அரசு கவனித்து செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்றைக்கு மாநகராட்சி மன்றம், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லை என்ற நிலையில் இருக்கிறது. என்னதான் அதிகாரிகள் விரைந்து செயல் பட்டாலும், ஆங்காங்கு இருக்கிற பிரச்சினைகளை உடனடியாக



மேல்மட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் தங்களுடைய கவனத்தில் எடுத்துக் கொண்டால்தான் காரியத்தை விரைந்து செயல்படுத்த முடியுமே தவிர, இல்லையென்றால், அவர்களாகலே செயல்படுத்த முடியாது. தற்போது மக்கள் பிரதிநிதிகள் இல்லை. எனவே மாவட்டங்களிலே இருப்பதைப் போல, சென்னை நகரத்திலே குறைந்த பட்சம் தேர்ந்தெடுக்கப்பட்ட 14 சட்டமன்ற உறுப்பினர்களையும், 3 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கொண்ட ஓர் ஆலோசனைக் குழுவையாவது அரசு ஏற்படுத்தினால், அது—இந்த இடைக்காலத்திலே மக்கள் பிரதிநிதிகளுடைய சபை ஏற்படுவதற்கு முன்பு வரையில் உள்ள இடைக் காலத்தில் அதிகாரிகளிடத்திலே மக்கள் பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி, தேவையான நிவாரண நடவடிக்கைகளை அவ்வப்போது ஏற்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும். எனவே இதைப் பற்றி அரசு சிந்தித்து, உடனடியாக சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், 14 சட்ட மன்ற உறுப்பினர்களையும் 3 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கொண்ட ஓர் ஆலோசனைக் குழுவை அமைக்க வேண்டும். விரைந்து அதைச் செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன் வேண்டுமானால் அந்தக் குழுவிற்கு கலெக்டர் அவர்கள் தலைவராகக் கூட இருக்கலாம். மாநகராட்சி மன்றத்தினுடைய கமிஷனர் அவர்கள் செயலாளராக இருக்கலாம். (குறுக்கீடு) ஸ்பெசல் ஆபீசர் தலைவராக இருக்கலாம். கமிஷனர் அவர்கள் செயலாளராக இருக்கலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஸ்பெசல் ஆபீசர் அவர்களைப் போடலாம் என்று சொல்லுகிறார்கள். நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். யார் இருக்கிறார்கள் என்பது முக்கியமானது அல்ல. காரியங்கள் நடைபெற வேண்டும். அந்த அடிப்படையில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்தப் பிரச்சினையைக் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குறிப்பாக நான் ஒன்றை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். சென்னை நகரத்திலே மாநகராட்சி மன்றத்தின் சார்பாக பல உருதுப் பள்ளிக்கூடங்கள் நடந்து வந்தன. இப்போது பார்த்தால், பல உருதுப் பள்ளிக் கூடங்கள் இப்போது மூடிய நிலையில் உள்ளன. நடந்து கொண்டிருக்கிற உருதுப் பள்ளிக்கூடங்களில் கூட முறையாக உருதுவை அடிப்படையாகக் கொண்ட பாடத் திட்டங்களை அமைத்துத் தருகிற முறை இன்றைக்கு இல்லாமல் இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், உருதுப் பாட நூல்களை இப்போது பாட நூல் குழுவினர் முறையாக சப்ளை செய்வதில்லை. உருதுப் பாட நூல்களைக் கேட்டால் இல்லை என்று சொல்கிறார்கள். இதனால் மாணவ மாணவியர்கள் இப்போது நடந்து கொண்டிருக்கிற ஒரு சில உருதுப் பள்ளிக்கூடங்களிலே

கூட, அவர்கள் உருதுப் பாட மொழியாக எடுத்து, அவர்களு டைய தாய் மொழியிலே படிப்பதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. மேலும் அங்கீகரிக்கப்பட்ட பாட நூல்கள் கூட அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

நான் அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்வது, தயவு செய்து சிறுபான்மை மொழியான உருது மொழி இன்று சென்னை நகரத்தினுடைய இரண்டாவது முக்கியமான மொழி. உருது பேசக் கூடிய மக்கள் சென்னை நகரில் பெருவாரியான அளவில் வாழ்கிறார்கள். எனவே ஏற்கெனவே நடந்து வந்த உருதுப் பள்ளிக்கூடங்களை, மூடப்பட்டிருந்தால். அவற்றை மீண்டும் திறப்பதற்கு எற்பாடு செய்வதோடு, நடைபெறுகின்ற உருதுப் பள்ளிக்கூடங்கள் முறையாக நடப்பதற்கும், அவற்றிற்குத் தேவை யான சாதனங்களை ஏற்படுத்தித் தருவதற்கும், அவற்றிற்குத் தேவையான பாட நூல்களை விரைந்து அவர்களுக்குக் கொடுப்ப தற்கும் அமைச்சரவர்கள் அந்தத் துறையின் மூலமாக, மாநகர ஆட்சியின் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. இங்கே ஊராட்சி மன்றங்களைப் பற்றி பலவாறாகப் பேசினார்கள். நான் எல்லாவற்றையும் பேசுவதற்கு இப்போது நேரமில்லை. ஆனால் நான் ஒன்றை மட்டும் தெரிவித் துக்கொள்ள விரும்புவது, தயவு செய்து இப்போது ஊராட்சி மன்றத் தலைவர்களை அங்கேயிருக்கின்ற அதிகாரிகள் ஒன்றியங் களில் பணி செய்யக் கூடிய அதிகாரிகள் கொஞ்சம் மரியாதையாக நடத்த வேண்டும். அவர்கள் பில் பாஸ் செய்வதற்கு பில்லை எடுத்துக்கொண்டு சென்றால் அவர்கள் வீட்டிலிருந்து, அந்த அதிகாரிகள் தானம் வழங்குவது போல் அவர்களை நிற்க வைத்து ஏகாரத்தில் பேசி, இதிலே உனக்கு எவ்வளவுடா பங்கு என்று கேட்கக் கூடிய நிலை அந்த அதிகாரிகளிடத்திலே இருக்குமேயா னால், நாங்கள் கேட்கிறோம், உனக்கு பங்கு கொடுத்தால் மட்டும் அந்தத் தலைவர்கள் நல்லவர்களாகி விடுவார்களா? அவர்கள் பங்கு கொடுக்க வேண்டுமென்ற கட்டாயங்கள் எல்லாம் ஏற்படுத் தப்படுகின்றன. அவர்கள் பில் பாஸ் செய்யப்பட வேண்டும். நகரத்திற்கு, கிராமத்திற்குத் தேவையான மேம்பாட்டுத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றிவிட்டு, பில் பாஸ் செய்ய வேண்டுமென்று உரிய அதிகாரிகளிடத்திலே சென்றால், அதற்குக் கூட ஒரு பர்சென்ட்டேஜ் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அந்த கிராமத் தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள் மிகக் கீழ்த் தரமாக நடத்தப்படக் கூடிய ஒரு நிலை இருக்கிறது. காலையில் சென்றால் மாலை வரையில் கூட பில்லிலே கையெழுத்துப் போடுவதில்லை. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். தயவு செய்து அமைச்சரவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி களுக்கு உரிய மரியாதையை அதிகாரிகள் கொடுக்கும் வகையிலே அவர்கள் உத்தரவு போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



தவறு செய்கின்ற அதிகாரிகளை, தலைவர்களை தரக் குறைவாக நடத்துகின்ற அதிகாரிகளை, அவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை தண்டிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வ தோடு, கொடுக்கின்ற பில்களை அவை முறையாக இருக்குமே யானால், அவற்றை உடனடியாக கையெழுத்து போட்டு, நம் முடைய தலைவர்களிடத்திலே கொடுப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களை மிக விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு இன்னொரு இருந்த பிரச்சினை, ஒன்றியங்களிலே, கிராமப் பகுதியிலே இருக்கின்றன. இங்கே சென்னையிலே அந்தப் பிரச்சினை இல்லாவிட்டாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். மாவட்டங்களில் இருக்கின்ற தொகுதியிலே, மிகப் பரந்திருக்கின்ற ஒரு தொகுதியிலே, சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய கடமையை முறையாக ஆற்றவேண்டுமென்று சொன்னால் அவருக்கு ஏதாவது வாகன வசதி இருக்க வேண்டும். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக் கும் ஏதாவது கார் இருந்தால் தான் பணியாற்ற முடியும் என்று சொன்னால், கார் வைத்திருப்பவன்தான் தேர்தலில் போட்டி போடமுடியும். பணக்காரர்கள் தான் போட்டி போடமுடியும். அதற்கு பெட்ரோல் செலவழிக்கக்கூடியவன்தான் போட்டி போட முடியும் என்று இருந்தால், சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய பணியை எப்படிச் செய்ய முடியும்? ஏற்கெனவே ஒரு ஜி.ஓ. இருந்தது. ஒரு மாதத்திற்கு மூன்று நாட்களாவது சட்டமன்ற உறுப்பினருக்கு நம்முடைய ஒன்றியத்திலே வைத்திருக்கின்ற ஜீப்களை, பெட்ரோலோடு கொடுக்க வேண்டுமென்று, ஆனால் எத்தனை ஒன்றியங்களில் ஜீப் இருக்கிறது? இருந்தாலும் அது நடைபெறுவதில்லை. என்ஜின் சரியாக இருந்தால், அதனுடைய டயர்கள் இருப்பதில்லை. டயர்கள் இருந்தால், என்ஜின் சரி யாக இருப்பதில்லை. எல்லாம் சரியாக இருந்தால், டிரைவர் கள் இருப்பதில்லை என்ற நிலை இருந்தால், தயவு செய்து மாண்புமிகு அமைச்சரவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எப்படி மாவட்டங்களிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பணியாற்றமுடியும்? எனவேதான் கட்டாயமாக நிறுத்தப்பட வேண்டுமென்ற சிந்தனை ஒன்று அரசுக்கு இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். எவ்வளவோ நடக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் சரியாக, செம்மையாக, தன்னுடைய கடமைகளை ஆற்றுவதற்கு, அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு மாதம் ஒருமுறை அவர்களுடைய தொகுதியுடைய பணிகளை கவனிப்பதற்கு அந் தந்த ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற ஜீப்களை எடுத்துக் கொள்ளலாம். அதை நிறுத்துகின்ற ஆலோசனை இல்லை.

[திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்] [1989 ஏப்ரல் 13

இப்போது இங்கே சொல்லப்பட்ட கருத்தின் அடிப்படையில் தவறாமல் கண்டிப்பாக சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டால் அந்தத் தொகுதிக்கு உட்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதியை சுற்றிப் பார்ப்பதற்கு ஒரு நாள் கட்டாயம் ஜீப் வழங்கப்பட வேண்டும். ஒரு தொகுதியில் 2, 3 ஒன்றியங்கள் கூட இருக்கின்றன. ஆக மூன்று நாட்கள் நீங்கள் தொடர்ந்து சுற்றுப் பயணத்தை செய்தாலே தொகுதி முழுவதையும் சுற்றிப் பார்க்க முடியும். ஆகவே இன்றைக்கு இருக்கின்ற நிதிநிலைமையை ஒட்டி, நான் சொல்கிறேன். இருந்தாலும் இதனைப் பரிசீலிக்கலாம். ஆனால் கண்டிப்பாக சட்டப் பேரவை உறுப்பினர் அந்தத் தொகுதியை சுற்றிப் பார்ப்பதற்கு அந்த ஜீப்களை கொடுப்பதற்கு தகுந்த உத்தரவு வழங்கப்படும். (குறுக்கீடுகள்)

(பிற்பகல் 1-10.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்படி எல்லோரும் எழுந்து நின்றால் எத்தனை பேருக்கு அனுமதிக்க முடியும். இதிலே ஒரு முறை இல்லையே. திருமதி பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நாள் என்று சொல்கிறார்கள். ஒரு மாதத்திற்கு 50 லிட்டர் பெட்ரோல் சட்ட மன்ற உறுப்பினர்கள் எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னார். ஒரு நாளைக்கு பத்து லிட்டருக்கு மேல் ஆகாது. ஆகையினால் 5 நாளைக்கு அதை எடுத்துக் கொள்ளலாம். ஆகவே அமைச்சர் அவர்கள் ஒரு நாள் என்று சொன்னால் கொடுக்க மாட்டார்கள். 50 லிட்டரைப் பயன் படுத்தலாம் என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் :** தொகுதியைச் சுறறிப் பார்ப்பதில் சட்டப் பேரவை உறுப்பினர்கள் இவ்வளவு ஆர்வத்தோடு இருப்பதற்கு நான் பாராட்டுகிறேன். 10 ஊராட்சிகளைக் கொண்ட ஒன்றியமும் இருக்கிறது. 20 ஊராட்சிகளைக் கொண்ட ஒன்றியமும் இருக்கிறது. 60-க் மேற்பட்ட ஊராட்சி மன்றங்களைச் சேர்ந்த ஒன்றியமும் இருக்கிறது. ஆனால் ஒரு தொகுதியை சராசரியாக பார்ப்பீர்களேயானால் $1\frac{1}{2}$ ஒன்றியம் வில்லது $2\frac{1}{2}$ ஒன்றியமாவது சேர்ந்த தொகுதிகள் இருக்கின்றன. ஆகவே பேரவை உறுப்பினர்கள் தொகுதியைச்சுற்றிப் பார்ப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். இன்னும் ஒன்றைச் சொன்னார்கள். பெட்ரோல் 50 லிட்டர் என்பதைப் பற்றி. அதை வேண்டுமானால் முதலமைச்சரிடம் கலந்து பேசி கூடுதலாக உங்களுக்கு அந்தப் பெட்ரோலை வழங்கமுடியுமா, நிதி நிலைமை ஒத்து வருமா என்பதைப் பார்த்து பிறகு முறையாக நடவடிக்கை எடுக்கப்படும்.



1989 ஏப்ரல், 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பெட்ரோலா, டீசலா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் :** பெட்ரோலும் இருக்கிறது, டீசலும் இருக்கிறது.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி சிறியதாக இருக்கும் என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதி கிழக்கு மேற்காக கிட்டத்தட்ட 50, 60 மைல் இருக்கிறது. அதேபோல தென் வடலாக எடுத்துக்கொண்டாலும 30, 40 மைலுக்கு குறையாமல் இருக்கிறது. ஒரே ஒரு பஞ்சாயத்திலே மட்டும் 22 கிராமங்கள் இருக்கின்றன. காலையில் 7 மணிக்கு புறப்பட்டால் இரவு 12 மணி ஆனாலும்கூட அந்தப் பஞ்சாயத்தை முடிக்க முடியாது. எனவே நிசசயமாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் குறைந்தபட்சம் 3 நாட்களாவது தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்படியே வாதம் நடத்திக் கொண்டிருந்தால், நான் நேரிடையாக அமைச்சருடைய பதிலுரைக்கு வந்து விடுவேன். திரு. வீரையன்.

**திரு. கோ. வீரையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இப்போது அறிவித்தது ஒரு புதிய குழப்பத்தை உண்டாக்குமோ என்று நான் கருதுகிறேன. முன்னாலே இருந்தது ஒரு மாதத்திற்கு 2 நாள் ஒன்றியத்தினுடைய ஜீப்பை பயன்படுத்திக் கொள்ளலாம். 50 லிட்டர் வரையில் டீசலோ பெட்ரோலோ எதுவாக இருந்தாலும் உபயோகப்படுத்தலாம் என்று இருந்ததை இப்போது ஒரு நாள் என்றோ அல்லது ½ நாள் என்றோ, 3 நாள் என்றோ குழப்பினால் இருந்த சலுகையும் வேறு போய் விடுமோ என்ற அச்சம் இருக்கிறது. ஆகவே முன்னால் இருந்தது போல் 2 நாள், 50 லிட்டர் பெட்ரோலோ, டீசலோ உபயோகப்படுத்தலாம் என்பதை அமைச்சர் அவர்கள் உத்திரவாதமாக அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. லத்தீப் பேச்சைத் தொடர்கிறார். கடைசியிலே பதிலுரையிலே அமைச்சர் அவர்கள் பதிலுரைத்தால் தான் சரியாக இருக்கும். இப்படி இடை இடையிலே அறிவித்தால் விடிந்து போய் விடும்.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 3 ஒன்றியங்கள் உள்ள தொகுதி என்றெல்லாம் சொன்னார்கள். அப்படி ஒரு சில இடங்களில் இருக்கின்றன. உதாரணமாக நான் எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன். இப்போது வாணியம்பாடி தொகுதியிலே பஞ்சாயத்து யூனியன் .......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சேப்பாக்கத்திலேயே நிலலுங்கள்.

திரு. எம். அப்துல் லத்தீப் : உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன். வாணியம்பாடி தொகுதியிலே ஆலங்காயம் ஒன்றியம் ஏறத்தாழ முழுதுவமாக வாணியம்பாடி தொகுதியிலேயே இருக்கிறது. மாதனூர் பகுதியிலே 15 பஞ்சாயத்துக்கள் இருககின்றன. நான் கேட்டுக் கொள்வது முழுவதுமாக இருக்கிற இப்பேர்ப்பட்ட தொகுதிகளிலே பஞ்சாயத்து யூனியன்களில் பிரயாணம் செய்வதற்கு 3 நாட்களும், மைனர் பார்ட்டாக இருக்கக்கூடிய மாதனூர் போன்ற 15 பஞ்சாயத்து யூனியன்களுககு ஒரு நாளும் என்ற அளவுக்கு ஒதுக்கித்தர வேண்டும். இலலாவிட்டால் பணியே செய்ய முடியாது. வெறும் சம்பிரதாயம் சாஸ்திரமாகப் போய்விடும். காரியம் முடிய வேண்டுமென்று சொன்னால் சரியாக நடக்க வேண்டும். இல்லாவிட்டால்ஏதோ ஒதுக்கினோம், அவர்களும் வாங்கினார்கள், முடிந்தது என்ற கதையோடு முடிந்து விடும். 3 நாட்கள் ஒதுக்கினாலதான் ஒரு காரியத்தை சரியாக செய்ய முடியும்.

அத்தோடு அதிகாரிகள் உடன் வரவேண்டும் என்ற உத்தரவையும் போட வேணடும். நான் மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொணடு வருவது தயவுசெய்து சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதியை பார்க்கப் போகும்போது முக்கியமான துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் உடன் இருக்க வேண்டும் இல்லாவிட்டால் ஆங்காங்கே அவர்களுடைய பிரச்சினைகளுடைய தன்மையை அறிய முடியாது. எனவே சட்டமன்ற உறுப்பினர்களோடு அதிகாரிகளும் வருவதற்கு ஏற்பாடு செய்வதோடு, சென்னையைப் பொறுத்தவரையில் ஒரு விஷயம். சென்னை நகரத்திலேயும் நடந்து சென்று தொகுதிகளைப் பார்த்துவிட முடியாது. எனவே இப்போது மாவட்டங்களில் இருப்பதைப் போல சென்னை நகரத்திற்குக் கூட எங்களுக்கு வாகன வசதி செய்து கொடுக்க வேணடும். அவர்களாவது மண் தரையிலே நடந்து அந்த கிராமத்திலே நல்ல அழகான சூழ்நிலையிலே நடந்து செல்ல முடியும். தார் ரோடிலே இந்த சென்னையிலே நடந்து செல்லவே முடியாது. தயவு செய்து சென்னை நகரத்திலேயும் . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தார் ரோடிலே போகவில்லை என்றால் ஓரத்திலே நல்ல சாலை இருக்கும். போகலாம்.

திரு. எம். அப்துல் லத்தீப் : எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு செய்து சென்னை நகரத்திற்கும் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு ஒரு வித்தியாசம் இருக்கிறது. அமைச்சுப் பணியாளர்கள், களப் பணியாளர்கள் என்று இரண்டு நிலையிலே ஊராட்சி ஒன்றியங்களிலே பணியாற்றுகிறார்கள்.



இப்போதுள்ள சூழ்நிலையிலே இந்த புரோமோஷனுக்காக அவர்களுடைய கிரேடுகள் உயர்த்தப்படுவதற்கு அமைச்சுப் பணியாளர்களையும், இந்த களப் பணியாளர்கள் என்று சொல்லக் கூடியவர்களையும்—மினிஸ்டீரியல் ஸ்டாப் ஃபீல்டு ஸ்டாப்—இவர்கள் இரண்டு பிரிவுகளையும் இணைப்பதன் காரணமாக இரண்டு நிலைகளிலே வேலை செய்யக் கூடிய இந்த அதிகாரிகள் புரோமோஷன் விஷயங்களிலே ஒரு பகுதி அதிலே அடிபடுகிறார்கள் என்ற குறை இருக்கிறது. எனவே அவர்களை—ஏற்கனவே இருந்ததைப்போல தனிமைப்படுத்தி—ஃபீல்டு ஸ்டாப் தனி, அட்மினிஸ்ட்ரேஷன் ஸ்டாப் தனி என்ற முறையிலே அவர்களை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தயவு செய்து சென்னை நகரத்தினுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால் முறையான ஒரு திட்டம், கூவத்தை சுத்தப்படுத்துகின்ற திட்டம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கே தெரியும். எனவே கூவத்தை சுத்தப்படுத்த வேண்டும் என்றால் இடைவெளி விட்டுவிட்டு தயவுசெய்து ஒரு சுவர் எழுப்பி, இருக்கின்ற தண்ணீரை எல்லாம் காலி செய்து முறையாக வேறு வகையிலே என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி நீங்கள் ஆராய்நது செய்யாவிட்டால் இந்த சென்னை நகரம் சுத்தமே ஆகாது. மேற்கொண்டு ட்ரெயினேஜ் இருக்கிறதே, இந்த டிரெய்னேஜை எல்லாம் கூவத்திலே விடுவது தவிர்க்கப்பட வேண்டும். நீங்கள் எவ்வளவு விரைந்து செயல்படுகிறீர்களோ அவ்வளவு விரைவில் அது நல்ல அமைப்பிலே வரும். எனவே, இந்த ட்ரெய்னேஜை வேறு வகையிலே சமுத்திரத்திற்குக் கொண்டு செல்வதற்கு, வேறு திட்டங்களை அமைக்க வேண்டுமே தவிர சுலபமாக இருக்கிறது என்று சாக்கடைத் தண்ணீரை எல்லாம் கூவத்திலே விட்டுக்கொண்டிருந்தால் கூவம், கூவமாகத் தான் இருந்து கொண்டிருக்கும். அங்கே கொசுக்கள் உற்பத்தியாகிக்கொண்டே தான் இருக்கும். சென்னை நகரத்தை தயவு செய்து நரகம் என்ற நிலையிலிருந்து நகரமாக மாற்றித்தர வேண்டும். சென்னை தமிழகத்தினுடைய தலைநகர்.. இதனுடைய தலைவிதி இதுதான் என்பதை மாற்றி சென்னை நகரத்திற்கும் விடிவு காலம் உண்டு. கூவமும் மாறும். பூஞ்சோ சோலையாக உருவெடுக்கும் என்பதை இந்த அரசு செய்து காட்ட வேண்டும் என்று சொல்லி எங்களுக்கும் வசதிகளை செய்துதர வேண்டும். ஆலோசனைக் குழு உடனடியாக உருவாக்கப்பட வேண்டும் என்று அன்பு கூர்ந்து அமைசச்ர் அவர்களைக் கேட்டுக் கொண்டு தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமர்கின்றேன்.

*திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சட்டப் பேரவையின் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள், நகராட்சி நிர்வாகம் போன்ற மானிய கோரிக்கையில் பேசுகின்ற நல்ல வாய்ப்பினை அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு நாட்டிலே

மக்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டுமென்று சொன்னால் இந்த
உள்ளாட்சி அமைப்புகளும், ஊராட்சி ஒன்றியங்களும் நல்ல
முறையிலே செயல்பட்டால்தான் முடியும் என்ற முறையிலே
அண்ணல் மகாத்மா காந்தி அவர்கள் கிராம ராஜியத்தை உரு
வாக்க வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில் இந்த அமைப்பு
களை உருவாக்குவதற்காக அன்றைய அரசுகள் 1959-ஆம் ஆண்டு
அண்ணல் மகாத்மா காந்தி அவர்களுடைய பிறந்த தினத்தன்று
இந்த உள்ளாட்சி அமைப்புகளை அமைத்தார்கள். ஆனால்
படிப்படியாக வருகின்ற காலத்திலே அவைகளுக்கு வழங்கப்பட்
டிருக்கின்ற பல்வேறு சலுகைகளும், அதிகாரங்களும், இன்றைக்கு
மாற்றப்பட்டு அவைகளுடைய தன்மைகளும் மாற்றப்பட்டிருக்
கின்ற நிலைமைகளைப் பார்க்கின்ற நேரத்திலே இந்த உள்ளாட்சி
அமைப்புகளுக்கெல்லாம் தகுந்த அதிகாரங்களை வழங்க வேண்டும்
என்ற முறையிலே இன்றைக்கு பஞ்சாயத்து ராஜியங்களை
அமைக்க வேண்டும் என்ற முறையில் பாரதப் பிரதமர் அவர்களும்
மற்றவர்களும் பல்வேறுகருத்துக்களைச் சொல்கின்ற நிலைமையை
நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டிய நிலைமையில் இருந்து கொண்டு
வருகிறோம். இன்றைய சூழ்நிலையில் ஊராட்சி ஒன்றியங்
களைப் பொறுத்த வரையில் அவைகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற
அந்த அதிகாரங்கள் ஓரளவிற்கு இருந்தாலும் நிதி வசதி இல்லாத
காரணத்தினால் அந்த ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படமுடி
யாத நிலைமையில்தான் இன்றைக்கு இருந்துகொண்டு வருகின்
றன. அவைகளுக்கு அதிகாரங்களை மட்டும் வழங்கி நிதிகள்
இல்லை என்று சொன்னால் அது பொம்மை அதிகாரங்களாகி
விடும் என்ற நிலைமையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.
அந்த நிலைமைகளை அகற்றுகின்ற அளவுக்கு, நிதிவசதிகளை
அரசு தன்னுடைய மானியத்திலிருந்து அதிகமான அளவிலே
வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.
குடிநீர் பொறுத்த வரையில் அங்கிருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்
களுக்கு பராமரிப்பு செய்கின்ற பணிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.
அந்தப் பராமரிப்பு செய்கின்ற அவர்களுக்கு வேண்டிய அளவிற்கு
வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றனவா என்று எண்ணிப் பார்க்
கின்ற நேரத்திலே அந்த வசதிகள் செய்து தரப்படவில்லை என்று
தான் நான் இந்த நேரத்திலே சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.
ஏனென்று சொன்னால், முன்பு, ஊராட்சி ஒன்றியங்களைப்
பொறுத்த வரையில் கைப்பம்புகள் மிகக் குறைவாக இருந்த
காலத்திலே 100 பம்புகளுக்கு ஒரு ஃபிட்டர் என்ற முறையிலே
நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் இன்றைய சூழ்நிலை
யில், கைப்பம்புகள் இங்கே மிக அதிகமான அளவில், ஒவ்வொரு
ஊராட்சி ஒன்றியத்திலும் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இப்ப
டிப்பட்ட சூழ்நிலையில் அந்த ஃபிட்டர்களை அதிகப்படுத்துவதற்கு
அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதோடுமட்டுமல்
லாமல், இன்றைக்கு மின் இறைப்பான் மூலமாகக் குடிதண்ணீர்
வழங்குவதற்கு கிராமங்களிலே பல திட்டங்கள் உருவாக்கப்
பட்டிருக்கின்றன. ஆனால் இவைகளைச் சரியாக முறையில்



பராமரிப்புச் செய்வதற்கு, அந்த ஊராட்சி ஒன்றியங்களில் தகுந்த
அதிகாரிகள் இல்லாத நிலைமைதான் இன்றைக்கு இருந்துகொண்டு
வருகின்றது.

(பிற்பகல் 1-20)

மற்ற மாநிலங்களில் பார்க்கின்ற நேரத்தில், அங்குள்ள
அமைப்புக்கள், குடிதண்ணீர் ஆதாரங்களை எல்லாம் நல்ல முறை
யில் பராமரிப்புச் செய்வதற்கு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு
தனியாகவே பொறியியல் வல்லுநர்களை நியமனம் செய்து,
அவர்களுக்கு தனியாக ஜீப்புகளை எல்லாம் வழங்கி,
இவைகளை நல்லமுறையில் பராமரிப்பதன் காரணமாக
குடிதண்ணீர்ப் பிரச்சினை இல்லாமல் இருக்கின்றது. நம்முடைய
நாட்டைப் பொறுத்தவரையில் நமக்கென்று நிரந்தரமாக குடி
தண்ணீர் ஆதாரங்கள் இல்லை. நிலத்தடி நீரைத்தான் நாம்
நம்பி வாழ வேண்டிய நிலையில் இருந்துகொண்டு வருகிறோம்.
அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏற்கெனவே உருவாக்கப்பட்டிருக்
கின்ற குடிநீர் ஆதாரங்களையெல்லாம் நல்ல முறையில்
பராமரிப்புச் செய்வதற்கு வேண்டிய வழிவகைகளை அரசாங்கம்
செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொன்று, ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த
வரையில், ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.இ.பி., போன்ற பல்வேறு
மானியத் திட்டங்களை எல்லாம் இப்போது செயல்படுத்து
கின்றன. சமூகக் காடுகள் என்று சொல்லப்படுகின்ற நேரத்
தில், இன்றைக்கு 68,000 ஹெக்டேருக்கு மேல் இருக்கின்ற
பகுதிகளில், சமூகக் காடுகளை நாம் உருவாக்கி இருக்
கின்றோம் என்று சொல்லப்பட்டு இருக்கின்றது; உருவாக்கி
இருக்கின்றோம் என்று சொன்னாலும், அவைகளில்
எத்தனை காடுகள் இன்றைக்குக் இருக்கின்றன என்று
எண்ணிப் பார்க்க வேண்டும். 10 சதவிகிதம் கூட அந்தக்
சமூகக் காடுகள் இல்லை என்ற நிலைமைதான் இருந்து
கொண்டு வருகிறது. ஆகவே, இதையெல்லாம் சரியான
முறையிலே யார் செய்யவில்லை என்று சொன்னாலும், சரியான
முறையில் சமூகக் காடுகளை யார் பராமரிப்பு செய்யவில்லை
என்று சொன்னாலும் அவர்கள் மீது உரிய நடவடிக்கையை
அரசு எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், என்.ஆர்.இ.பி., மூலம் வீடுகளைக் கட்டித்
தருகின்ற திட்டங்களையும் செயல்படுத்திக் கொண்டு வரு
கிறோம். அவைகளில் பல்வேறு குறைகளை இன்றைக்கு பார்க்க
முடிகின்றது. அவைகளில், கட்சிக் கண்ணோட்டத்துடன் ஒரு
சில கிராமங்களிலே வழங்கப்படுகின்ற நிலைமையை நாம்

(திரு. எஸ். டி. உக்கம்சந்த்) [1989 ஏப்ரல், 19

பார்க்க முடிகின்றது. பக்கத்தில், பக்கத்தில் அந்த வீடுகளைக்
கட்டித்தரவேண்டிய அரசாங்கக் குறிப்பின்படி நடவடிக்கை
எடுக்கவேண்டுமென்று இருந்தாலும், கட்சி அடிப்படையிலே
பல இடங்களிலே அவர்கள் அந்த வீடுகளையெல்லாம் ஒன்
றோடொன்று இணைக்கின்ற அளவுக்கு அவைகளைக் கட்டித்
தராமல் ஒரு சிலர் இருக்கின்ற பகுதிகளில் வீடுகள் கட்டப்பட்டு,
அதற்கு 3, 4 வீடுகளுக்குத் தள்ளி மற்றவர்களுக்கும் கட்டித்
தருகின்ற கொடுமையானநிலைமை இப்போது இருந்து கொண்டு
வருகிறது.

அப்படிப்பட்ட தவறுகளை யார் செய்தாலும் சரி, வீடுகளைக்
கட்டித்தரவேண்டுமென்று சொன்னால், அந்தப் பகுதியிலே
இருக்கின்ற அனைத்து பட்டாதாரர்களுக்கும் தொடர்ச்சியாக
வீடுகளைக் கட்டித் தருவதறகு அரசாங்கம் நடவடிக்கை
எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்
கிறேன்.

அதே நேரத்தில் எனக்கு முன் பேசிய காங்கிரஸ் கட்சி
உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் சொன்னது
போன்று, ஐ. ஆர்.டி..பி. யின் மூலமாக வழங்கப்பட்டிருக்கிற
பல்வேறு கடன்களைப் பார்க்கின்ற நேரத்தில், அவைகள்
மூலமாக வழங்கப்பட்டிருக்கின்ற மானியங்களையும் எண்ணிப்
பார்க்கின்ற நேரத்தில் நாட்டிலே இருக்கின்ற ஆடுகளுக்கும்,
மாடுகளுக்குமே நம்முடைய நாட்டிலே இடம் இல்லாமல்
ஆகிவிடும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுஉண்மைதான்,
ஆனால் வழங்கப்பட்டிருக்கின்ற கடன்கள், மானியங்
கள் சரியான முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றனவா
என்தைப் பற்றி இன்றைக்கு எண்ணிப் பார்க்க வேண்டும்.

நம்முடைய தமிழகத்தில் மட்டும் இந்தக் குறைகள் இல்லை.
இந்தியாவில் இருக்கின்ற எல்லா மாநிலங்களிலும் அந்தக் குறை
கள் இருக்கின்றன என்பதை இன்றைக்கு எல்லாப் பத்திரிக்கை
களும் பேசிக் கொண்டிருக்கின்றன. இநதக் திட்டத்தை நல்ல
முறையில் செயல்படுத்துவதற்கு வேண்டிய வழிவகை செய்ய
வேண்டும்.

அதே நேரத்தில், இந்தத் திட்டத்திலே இருக்கின்ற குறை
களையெல்லாம் சுட்டிக்காட்டுவது என்று சொன்னால் இன்
றைக்கு ஒரு நாள் முழுவதும்கூடப் பேசிக் கொண்டிருக்கலாம்.
அதற்கென்று தனியாகக் கூட ஒரு விவாதத்தை வைக்கக்கூடிய
நிலைமைகள் இருந்து கொண்டு வருவதன் காரணமாக, இந்த
நேரத்திலே அதை நான் சொல்லாமல் மற்றொரு நேரத்திலே
அதைப்பற்றி விரிவாகப் பேசுகிறேன் என்று தெரிவித்துக்கொண்டு
இன்றைக்கு நகராட்சிகளைப் பொறுத்தவரையில் பல்வேறு
நலத் திட்டங்களை உருவாக்குகின்ற அளவிற்கு, அந்த நகராட்சி
களுக்கு எல்லாம் நம்முடைய அருமைச் சகோதரர் திரு. லத்தீப்



1989 ஏப்ரல், 19] (திரு. எஸ். டி. உக்கம்சந்த்)

அவர்கள் சொன்னது போன்று, நரகாட்சியாக இல்லாமல் மக்க
களுக்குப் பயன் அளிக்கின்ற நல்லாட்சியாக அந்த நகராட்சி
கள் செயல்பட வேண்டுமென்று சொன்னால், அரசாங்கம்
மானியத் தொகைகளை அவர்களுக்கு வழங்கவேண்டும். இன்
றைக்கு நிதிவசதிகள் இல்லாத காரணத்தால், பல்வேறு நகராட்சி
கள் செயல்படமுடியாத நிலையில் இருப்பதைப் பார்ததுக்கொண்
டிருக்கிறோம். 1987-88 ஆம் ஆண்டு நிதி குறைந்த நகராட்சி
களுக்கு, சாலைகள் மற்றும் மழை நீர்ப்பராமரிப்பு செய்
வதற்கு 25 இலட்சம் ரூபாய் அரசாங்கம் ஒதுக்கியது. இந்த
ஆணடைப் பார்க்கின்ற நேரத்தில் வெறும் 1,000 ரூபாய்தான்
அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில், நகராட்சி
மருந்தகங்களுக்கு முன்பு 9 இலட்சம் ரூபாய் 1987—88 ஆம்
ஆண்டில் வழங்கப்பட்டது. இன்றைக்கு வெறும் 1,000 ரூபாய்
தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தாய் சேய் நல விடுதிகளை மேம்படுத்துவதற்கு நகராட்சி
களுக்கு 1987—88 ஆம் ஆண்டு 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்
பட்டது. அதற்கு இன்றைக்கு வெறும் ஆயிரம் ரூபாய்தான்
ஒதுக்கப்பட்டிருக்கிறது. நகராட்சி உள்ளமைப்புகள் அபி
விருத்துப் பணியை செய்வதற்கு முன்பு 75 லட்சம் ரூபாய்
1987—88 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. இன்றைக்கு ஆயிரம்
ரூபாய் தான் வழங்கப்பட்டடிருக்கிறது. இப்படி நிதிகளை
குறைத்து மக்களுக்குப் பயன் அளிக்கின்ற அந்தக காரியங்களுக்கு
எல்லாம் இன்றைக்கு குறைத்து இருப்பதன் காரணமாக
நகராட்சிகள் நல்லமுறையில் செயல்பட முடியாத நிலையில்
இருந்து கொண்டிருக்கின்றன. அதே நேரத்தில் இன்றைக்கு
நாம் பார்க்கின்றபோது தீவிர குடிசை மேம்பாட்டுத் திட்டம்
கைவிடப் பட்டிருக்கிறது. சாலை வேலைக்கான
முழு கடன் உதவி இன்றைக்கு கைவிடப்பட்டிருக்கிறது. தூசி
அற்ற சாலை அமைப்பதற்கு பாதி கடனும், பாதி மானியமும்
வழங்குகின்ற அந்த திட்டமும் இன்றைக்கு கைவிடப்பட்டிருக்
கிறது. தனியார் தெருக்களை மேம்படுத்துவதற்கு சுழல்
நிதி முன்பு இருந்தது அதுவும் இன்றைக்கு வழங்கப்படவில்லை.
ஆரம்பப்பள்ளி கட்டிடங்கள் கட்டுவதற்கு மானியம், சத்துணவு
கூடங்களைக் கட்டுவதற்கு கொடுக்கப்படும் மானியமும்
இன்றைக்கு கைவிடப்பட்டிருக்கிறது. மேல்நிலைப் பள்ளி கடடி
டங்கள் கட்டுவதற்கு அளிக்கப்படும் மானியமும் கைவிடப்
பட்டிருக்கிறது. தன்னிறைவுத் திட்டங்கள் எதுவும் இல்லை,
நகராட்சிகளுக்கு முன்பு தொலைக்காட்சிப் பெட்டிகள், லாரிகள்
அரசு மூலமாக வழங்கப்பட்டன. அந்த திட்டமும் இப்
போது இல்லை. இப்படி நிதி வசதி இல்லாத காரணத்தால்
நகரசபைகள் அவைகளுடைய நிதியின் மூலமாக எதையும்செய்ய
முடியாத நிலை இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இப்போது
தான் ஆரம்பித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஆரம்பித்தது எப்போது என்று எனக்கு நன்றாகத் தெரியும்; மணி 1.17-ல் ஆரம்பித்தீர்கள், இன்னும் 2 மணித்துளிகளில் முடித்து விடுங்கள்.

**திரு. எஸ். டி. உகம்சந்த்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரசபைக்கு எந்தத் திட்டங்களும் இல்லாமல் இருக்கிறது. நிதி வசதி இல்லாத நகரசபைகளுக்கு அரசு மானியத்தை அதிகமாக வழங்கி இந்தத் திட்டங்களை எல்லாம் செயற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு அரசு ஒரு உத்தரவினைப் பிறப்பித்து இருக்கிறது. நகராட்சிகளில் பணியில் அமர்த்தப்படுகின்ற ஊழியர்களுக்கு வழங்குகின்ற போனஸ் போன்ற சலுகைகள்; இன்கிரிமெண்டு போன்றவைகளை எல்லாம் இன்றைக்கு அந்த நகராட்சியினுடைய கமிஷனர் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. முன்பு நகராட்சியைப் பொறுத்தவரையில் நகர மன்றம் தான் முடிவு செய்து கொண்டு இருந்தது. இடையில் அவைகள் மாற்றப்பட்டு 'டைரக்டர் பார் முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன்' அவர்கள் செய்துகொண்டு வந்தார்கள். இன்றைக்கு அவைகள் திருப்பி அனுப்பப்பட்டு கமிஷனருக்கு அந்த அதிகாரம் என்று சொன்னால் நகரமன்றத்திற்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லாமல் இருக்கிற நிலை இன்றைக்கு இருக்கிறது. அரசு இதை பரிசீலனைச் செய்து நகர மன்றத்திற்கு அந்த அதிகாரத்தை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முன்பு நகர மன்றங்களைப் பொறுத்தவரையில் நகர எல்லைக்குள் இருக்கின்ற காவல்துறையினர் நகராட்சி கட்டுப்பாட்டில் இருந்தார்கள். அதுபோல் முன்பு நீதிமன்றங்கள் என்று சொன்னால் சிவில் நீதிமன்றங்கள் நகராட்சியினுடைய கட்டுப்பாட்டிற்குள் இருந்தார்கள். இப்படி பல அதிகாரங்கள் இருந்தன. அவைகள் காலப் போக்கில் மறைக்கப்பட்டு, பறிக்கப்பட்டு இருக்கின்றன. அவைகளை பரிசீலனை செய்கின்ற நேரத்தில் இது போன்ற அந்த ஊழியர்களுக்கு எல்லாம் அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய சலுகைகளும் மற்றவைகளும் நகர மன்றம் தான் முடிவு செய்ய வேண்டும் என்ற முறையில் நீங்கள் தீர்மானத்தைப் போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் இன்றைக்கு உள்ள நிலைமை நகர மன்றங்களைப் பொறுத்தவரையில் 50 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்டிருக்கின்ற குடிநீர் திட்டங்களை அவர்கள் செய்ய முடியாத ஒரு தடை இருந்து கொண்டிருக்கின்றது. ஏற்கெனவே குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக அந்தத் தடையை அகற்றவேண்டும் என்ற முறையில் தீர்மானம் இயற்றப்பட்டு 3 லட்சம் ரூபாய் வரையில் இருக்கின்ற பணிகளை அந்தந்த நகராட்சிகளே செய்து கொள்ளலாம் என்று அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அரசு அந்த பரிந்துரையை ஏற்று நகராட்சிகளே அவைகளை செய்து கொள்கின்ற அளவுக்கு நல்ல உத்திரவினை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



சென்னை நகராட்சியைப் பொறுத்தவரையில் இங்கே பல நல்ல சூழ்நிலைகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற முறையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் இதற்காக பிரிட்டிஷ் நிதி கமிஷனோடு பேச்சு வார்த்தை நடத்தி தொள்ளாயிரம் கோடி ரூபாய் அளவில் ஒரு திட்டத்தை உருவாக்கி இருந்தார்கள். அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதை செயற்படுத்தும் வகையில் காரியங்கள் ஆற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மதுரை, கோவை நகராட்சிகளில் உலக வங்கியின் மூலமாக குடிநீர் வழங்குவதற்கு அரசு மானியத்தோடு அந்தத் திட்டங்களை நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அவைகளை திரும்ப எடுத்துச் செய்து அந்தத் திட்டங்களை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்றைக்கு உள்ள நிலைமைகள் என்ன என்று சொன்னால் தேர்தலை தள்ளி வைத்து இருக்கிறோம். ஆதரவற்ற மக்களுக்கு அவர்களுக்கு வேண்டிய பிரதிநிதித்துவம் இல்லை என்ற குறை இருக்கிறது. அவைகளை போக்குகின்ற அளவுக்கு அவர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்குகின்ற அளவுக்கு மத்திய அரசில் அதற்காக பாரதப் பிரதமர் அவர்களும் பேசியிருக்கிறார்கள். ஆனால் நாம் தேர்தலை தள்ளி வைத்து அவர்களுக்கு கொடுக்கவேண்டிய உரிமையை பறித்து இருக்கிறோம். அதையும் மாற்றுகின்ற அளவுக்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1 30)

இந்த உள்ளாட்சி அமைப்புகள் நல்ல முறையில் இருப்பதற்கு இன்னும் அதிகமான அளவிற்கு அரசாங்கம் நிதிகளை ஒதுக்க வேண்டும். ஏனென்று சொன்னால், இது ஒரு நாட்டினுடைய முதுகெலும்பாக அமைந்து இருக்கக்கூடியது. அதனால்தான் சொல்கிறேன். இவைகளுக்கு ஒதுக்கப்படுகின்ற தொகை மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. அதை அதிகப்படுத்தி, மேலும் இந்தத் துறையானது செம்மையான முறையிலே செயல்படுகின்ற அளவிற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு, வாய்ப்பினை அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, விடை பெறுகிறேன்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக, உள்ளாட்சித்துறை, மாநகராட்சி, நகராட்சி மானியக் கோரிக்கைகளின் மீது மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் 13 பேர் சில ஆலோசனைகளையும் கோரிக்கைகளையும் எடுத்து வைத்துப் பேசியிருக்கிறார்கள். நம்முடைய பேரவை உறுப்பினர்கள் பேசிய அத்தனை கருத்துக்

களுக்கும் பதில் அளிப்பதற்கு எனக்கு தாங்கள் வழங்கியிருக்
கின்ற நேரம் போதாது என்ற காரணத்தினால் சுருக்கமாக
பதிலுரைக்க விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பினை
ஏற்று இன்றோடு 80 நாட்கள் ஆகின்றன. இந்த 80 நாட்களில்
ஊரக, உள்ளாட்சி நிர்வாகத்தை கிராமப் புறங்களில் இருக்கின்ற
மக்கள், நகரங்களிலே வாழ்கின்ற மக்கள், மாநகரங்களிலே வாழ்
கின்ற மக்கள் நலன்களைக் கருத்தில் கொண்டு எந்த அளவிற்கு
விரைவான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நம்முடைய
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆர்வம் கொண்டிருக்கி
றார்கள் என்பதை இந்தப் பேரவையும் நாட்டு மக்களும் நன்
றாக அறிவார்கள்.

ஜனநாயக அமைப்புகள் சிறப்பாக செயல்பட வேண்டுமென்
றால், ஜனநாயகத்தின் தொட்டில் எனப்படும் இதுபோன்ற ஊரக,
உள்ளாட்சி நிர்வாகங்களுக்குக் கூடுதலாக அதிகாரங்கள் வழங்
கப்படவேண்டுமென்று எங்களையெல்லாம் ஆளாக்கிய
பேரறிஞர் அண்ணா அவர்கள் இதே மாமன்றத்தில் 1958 ஆவது
ஆண்டு ஊராட்சி மன்ற சட்டத் திருத்தம் கொண்டு வந்தபோது,
பாராட்டி, ஆலோசனைகளை எடுத்து வைத்து இருக்கின்றார்கள்.
அந்த அடிப்படையிலேதான் எங்களுடைய தலைவரும் தமிழகத்
தினுடைய முதலமைச்சருமான டாக்டர் கலைஞர் அவர்கள்
தேர்தல் நேரத்திலே நாட்டு மக்களுக்குத் தந்த வாக்குறுதியின்
அடிப்படையில் ''செய்வதைச் சொல்வோம், சொன்னதைச் செய்
வோம்'' என்ற அடிப்படையில் இன்று தேர்தல் வாக்குறுதி
களில் 75 சதவீதம் அமல்படுத்துகின்ற நடவடிக்கை
களை விரைவாக ஊரக, உள்ளாட்சித் துறை அதைப்
போல மற்ற துறைகள் மூலம் எடுத்து வருகின்றார்கள்.
மாநகராட்சிகளுக்குத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று தேர்
தல் நேரத்திலே சொன்ன அறிவிப்புக்கு இணங்க அதற்கான
நடவடிக்கை எடுக்கப்பட்டது. பிறகு 18 வயதுள்ளவர்களை
வாக்காளர் பட்டியலிலே கொண்டு வந்து தேர்தல் நடத்தப்பட
வேண்டுமென்று எதிர்க்கட்சியின் தரப்பிலும் அதே நேரத்தில்
இஸ்லாமிய சமூகப் பெருமக்கள் சார்பாக, நம்முடைய மாண்புமிகு
உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் இஸ்லாமிய சமுதாய மக்கள்
நோன்பு இருக்கக்கூடிய காரணத்தினாலே இந்தத் தேர்தலைக்
கொஞ்சம் தள்ளிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன்
பேரிலும் சூன், சூலையில் தேர்தல் நடைபெறும் என்று
இதே பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்
திருக்கிறார்கள்.

அதைப்போல ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத்
தலைவர்கள், உறுப்பினர்கள் பதவிக் காலத்தை ஐந்தாண்டு
களாக நீட்டிப்போம் என்று சொன்னதை இன்றைக்கு அறிவித்து,



அதிகாரங்கள் பரவலாக வழங்கப்பட வேண்டுமென்ற நட
வடிக்கையின் பேரில்தான் ஆட்சிப் பொறுப்பினை நம்முடைய
தமிழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் ஏற்றுக்கொண்ட
தும் நான் இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டதும்
அவர்கள் இடத்திலே அனுமதி பெற்று அவர்களும் சமுதாய
நலத்திட்டப் பணிகள் நாட்டு மக்களுக்கு விரைவாகப் பயன்
படும் வகையில் கிடைக்கவேண்டும் என்றால் ஊராட்சி, நகராட்சி,
மாநகராட்சிகளிலே அதிகாரங்களைக் கூடுதலாக்கி அல்லது
அங்குள்ள தடைக் கற்களை அகற்றி, அந்தப் பணிகளை முடுக்கி
விடவேண்டுமென்பதைக் கருத்தில் கொண்டிருப்பவர் என்ற
காரணத்தால் உடனடியாக ஒப்புதல் தந்து, ஆட்சிப் பொறுப்
பினை ஏற்ற 10-ஆவது நாளில் சென்னை மாநகரத்திலே
ஊராட்சி மன்றக் குழுக்களின் தலைவர்களையும், நகராட்சி
மன்றத் தலைவர்களையும் அழைத்துப் பேசி, அந்த மாநாட்டில்
ஊராட்சிமன்றக் குழுக்களின் தலைவர்கள், நகராட்சி மன்றத்
தலைவர்கள் பல்வேறு கோரிக்கைகளை எல்லாம் அரசின்
கவனத்திற்கு அன்றைக்கு எடுத்து வைத்தார்கள். அதை
நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ்
கூட பாராட்டினார்கள். ஆனால் இன்னும் அதிகாரங்கள்
நிரம்ப வரவில்லை என்று இங்கே வருத்தப்பட்டுக் கொண்டார்
கள். ஆனால் அந்த ஆலோசனைகளின் பேரில் இன்றைக்கு இந்த
நடவடிக்கைகளை எல்லாம் நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கி
றோம்.

சில பணிகளை அரசாங்க உத்தரவு மூலம், ஜீ. ஓ. போடு
வதன் மூலம் நிறைவேற்ற முடியும். சில உத்தரவுகளை சட்ட
மாக நாம் இயற்றித்தான் அமல்படுத்த வேண்டுமென்பதை
அவர்களும் அறிவார்கள். இங்கே இருக்கின்ற மாண்புமிகு
உறுப்பினர்களும் அறிவார்கள். அந்த அடிப்படையிலேதான்
இந்த ஆண்டு வேளாண்மை, பொதுச் சுகாதாரம், சத்துணவு
இவைகளை எல்லாம் ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் மேற்
பார்வையில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்று அர
சாங்க உத்தரவு வழங்கப்பட்டு, இன்றைக்கு அது நடை
முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அதிலே கூட கால்நடை பராமரிப்பு இந்த ஒன்றியங்களின்
கீழே வருவது பற்றிய கருத்துக்கு அரசாங்கத்தினுடைய பரி
சீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. அதற்கு இன்னும்
உத்தரவு வழங்கப்படவில்லை. ஊராட்சி ஒன்றிய, நகர
மன்றக் கூட்டங்களில் ஒரு பெரும் குறையைச் சொன்னார்கள்.
அதாவது வலதுபுறம் எம்.எல்.ஏ. உட்கார வேண்டும்; இடது
புறம் ஆணையாளர் உட்கார வேண்டும் என்று சொல்லியிருக்கி
றார்கள்; மரியாதை எல்லாம் போய்விட்டது என்று ஊராட்சி
ஒன்றியத் தலைவர்களும், நகராட்சித் தலைவர்களும் சொன்னதன்
அடிப்படையில் அந்த உத்தரவை உடனடியாக ரத்துச் செய்து

விட்டு, அதே நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்; அவர்களுடைய கௌரவமும் பாது காக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் அந்த மன்றக் கூட்டம் நடைபெறுகின்றபோது முன் வரிசையில் அவர் களுக்கு 'சீட்' போட வேண்டுமென்று ஒரு 'கைட்லைன்' தரப் பட்டிருக்கிறது.

ஆணையாளரைப் பொறுத்தவரையில் அந்த மன்றத்தினு டைய தலைவரைப் பார்த்தோ அல்லது தலைவருக்குப் பின் னாலோ உட்காரலாம். உங்களுக்குத் தெரியும். சட்டப்பேரவை உறுப்பினர்கள் சில கேள்விகளை எழுப்பினால், சில விவரங் களைப் பெற்று மன்றத்திற்கு பதில் அளிக்க ஆணையாளரும் தேவைப்படுகிறார். அந்த அடிப்படையில் அந்தக் கூட்டத்தி னுடைய தலைவர் அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப ஆணையாளரை அமர்த்திக்கொள்ளலாம் என்ற உத்தரவை நாம் இன்றைக்கு வழங்கியிருக்கிறோம்.

(பிற்பகல் 1.40)

அதைப் போன்று ஊராட்சி மன்றத் தலைவர்களும், நக ராட்சி மன்றத் தலைவர்களும் கட்டடத் திறப்பு விழாவுக்குத் தலைமை தாங்கக் கூடாது; திறப்புவிழாவை நடத்தக் கூடாது என்றெல்லாம் அதிகாரம் பறிக்கப்பட்டிருந்தது. இன்று அந்த அதிகாரங்கள் மீண்டும் மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியக் குழு, நகரமன்றம் ஆகிய வற்றின் தலைவர்களுக்கு மட்டுமல்ல; ஊராட்சி மன்றங்களின் தலைவர்களுக்கும் வழங்கப்பட்டு அதன்படி ஒரு கிராமத்திலே பள்ளிக்கூடம் கட்டுகிறோம் என்று சொன்னால் அந்தப் பள்ளிக் கூடம் கட்டுவதற்கு அந்த ஊராட்சி மன்றத்தினுடைய முயற்சி யும் அதிலே உண்டு. அவர்களே அந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கலாம். அந்த ஒன்றியத்தினுடைய தலைவரே திறப்பு விழா நடத்தலாம்; அதிலே சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளலாம்; மன்றத் தலைவர்கள் திறப்பு விழா நடத்த லாம. இவற்றைப் பொறுத்தவரையில் அதாவது அந்த நிகழ்ச்சிகளைப் பொறுத்த வரையில் ஊராட்சி மன்றமாக இருந்தாலும், ஊராட்சி ஒன்றியமாக இருந்தாலும் நகரமன்ற மாக இருந்தாலும் அவர்களே பார்த்து முடிவு செய்துகொள்ள வேண்டுமே தவிர யார், யாரை அழைத்து நடத்த வேண்டும் இன்னாரைத்தான் போட வேண்டும் என்று சொல்வது அவர்களை அவமானப்படுத்துகிற காரியம் என்பதை உணர்ந்த இந்த அரசும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் உடனடியாக அந்த உத்தரவை ரத்துச் செய்தார்கள்.

அதைப் போல ஊராட்சி ஒன்றிய அளவிலே தேர்தல் நடை பெற்ற பிறகு சேர்ப்பு உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் அதாவது தாழ்த்தப்பட்ட பெண் மெம்பர் ஒருவர்— மக்களால்





தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் — அதைப்போல அரிசன மெம்பர் ஒருவர், அதைப்போல சிறு விவசாயிகளில் ஒருவர் என்று சேர்ப்பு மெம்பர்கள் சேர்க்கப்படுகிறார்கள். அதாவது 10 பஞ்சாயத்துக்கள் இருந்தால் 10 பேரை கலெக்டர் நியமனம் செய்யலாம் நேரடியாக. இப்படி 3 பேர், 6 பேர் என்று சேர்ப்பு மெம்பர்களைச் சேர்த்துக்கொள்ளலாம் என்றால் 10-ம், 6-ம் சேர்ந்து மொத்தத்தில் 16 பேர்கள். பஞ்சாயத்து 10 தான். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த அமைப்புக்கு நேர் விரோதமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நியமிக்கப் படக்கூடியவர்கள் அங்கே அமர்ந்து அந்தக் கிராம அளவிலே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளை இழிவு படுத்தக் கூடிய வகையில் ஒரு காரியம் நடப்பதை அனுமதிக்கக்கூடாது என்ற அடிப்படையில்தான் அதையும் நாம் நீக்கி இருக்கிறோம். ஆனால் உடனடியாகச் செய்ய இயலாது; சட்டமாகக் கொண்டு வரவேண்டி இருக்கிறது. அதற்காகத்தான் அந்த உத்தரவு அனுப்பப்படவில்லை. ஏற்கெனவே நாம் கொள்கை அளவிலே முடிவெடுத்துவிட்டோம். இந்தப் பேரவையிலே சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றி அந்த நியமன முறையை ரத்துச் செய்துவிட்டு அந்த ஒன்றியக் குழுவே சேர்ப்பு மெம்பர்களைச் சேர்த்துக்கொள்ளலாம் என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுக்க இருக்கிறோம்.

அதைப்போல மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இங்கே ஆர்வத்தோடு எழுந்து பேசினார்கள். இந்த ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் அதாவது ஐ.ஆர்.டி.பி., போன்றவற்றின் மூலம் கடன் வழங்குவதைப் பற்றிக் கருத்துச் சொன்னார்கள். இது ஏதோ சட்டமன்ற உறுப்பினர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும், ஊராட்சி ஒன்றியத் தலை வர்களையும் ஒதுக்கிவிட்டு இந்தக் காரியம் நடைபெறவேண்டும் என்பதற்காக எடுக்கப்பட்ட முடிவல்ல. இங்கே பேசிய மாண்பு மிகு உறுப்பினர்களிலே கூட பலரும் எடுத்துக்காட்டினார்கள். இந்தத் திட்டத்தின் கீழே வாங்கப்படுகிற ஆடு, மாடு போன்றவை எல்லாம் சைக்கிளைப் போல சுற்றிச்சுற்றி சர்க்குலேஷன் வந்து கொண்டிருக்கிறது; இன்றைக்குப் போய்ப் பார்த்தால் ஆடு இருக்கும், ஒரு வாரம் கழித்துப் போய்ப் பார்த்தால் ஆடும் இல்லை; மாடும் இல்லை என்ற நிலைமை இருக்கிறது; எனவே, சப்சிடி வாங்குவதற்காக, அதைப் பயன்படுத்திக்கொள்வதற்காக சிலர் நடத்துகிற காரியம் என்று எல்லாம் குறிப்பிட்டு எடுத்துக் காட்டினார்கள். ஏழை எளிய மக்களுக்கு, நலிந்த பிரிவினருக்கு மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் இந்தத் திட்டத்தின் கீழ் உதவிகளைச் செய்திட வேண்டுமென்ற அடிப்படையில் இவையெல்லாம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. என்னுடைய அனுபவத்தில் — நம்முடைய பேரவை உறுப் பினர்களே கூட என்னிடத்திலே வந்து தெரிவித்தார்கள்.

எனவே இது உங்களுக்கும் தெரியும். சிறு விவசாயிகள்
என்று சொன்னால் இரண்டரை ஏக்கர் என்று நாம் வைத்து
இருக்கிறோம். ஆனால் 10 ஏக்கர் வைத்திருக்கிற விவ
சாயிகளை சிறு விவசாயிகளின் கணக்கில் எடுத்து —
ஏதோ ஒரு முறை மட்டும் 5,000 ரூபாய், 6,000 ரூபாய் கடன்
கொடுத்தார்கள் என்று எடுத்துக்கொள்ளாதீர்கள்— இரண்டு
முறை, மூன்று முறை, திருப்பித்திருப்பி அவர்களுக்கே கூட
வழங்கி இருக்கிறார்கள். யார் பயன்பட வேண்டும்
என்று நினைத்து மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும்
இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துகின்றனவோ அதற்கு நேர்
மாறாக நடந்திருக்கிறது. இது கடந்த காலத்திலே
நடைபெற்றிருக்கிறது. பயனீட்டாளர்களையும், ஏழை எளிய
மக்களையும் தேர்வு செய்வது ஊராட்சி ஒன்றியக் குழு.
ஒரு ஒன்றியத்தில் இருக்கக்கூடிய இத்தனை கிராமங்
களுக்கு இந்த ஆண்டு நாம் இந்தத் திட்டத்தின் கீழ் கடனுதவி
வழங்கலாம் என்று தேர்வு செய்வது ஊராட்சி ஒன்றிய
கவுன்சில். கிராமத்தைத் தேர்வு செய்த பிறகு கிராம அளவில்
ஊராட்சி மன்றத் தலைவர்— இரண்டு பெண்கள்—பெண்களுக்கு
முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பதில் எங்களுக்கு எவ்
வளவு அக்கறை இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.
இரண்டு பெண்கள். தாழ்த்தப்பட்ட மலை ஜாதியினர் ஒருவர்,
படித்த வேலையற்ற இளைஞர் ஒருவர், கிராமப்புறத்தினுடைய
நடுத்தர சிறு விவசாயி ஒருவர். மற்ற அதிகாரிகள். பி.டி.ஓ.,
இருக்கிறார். வங்கி அதிகாரிகள், தாசில்தார் இவர்களை
எல்லாம்கொண்ட ஒரு குழு அந்தக் கிராம அளவிலேகூட தேர்வு
செய்து, அன்றைக்கே, அங்கே இருக்கின்ற ஊராட்சி மன்ற
இடத்திலே அல்லது 10 பள்ளிக்கூடம் இருக்குமானால் பொது
இடங்களில் பயனீட்டாளர்கள் இன்னின்னார் என்று தேர்வு
செய்கிறார்கள். இன்னின்னாருக்கு வழங்கப்படும் என்று
லிஸ்ட் போடவேண்டும். போட்டுவிட்டால் யார் மீதும் பழி
வராது. அப்படி தவறாக அந்தக் கிராமத்திலே இருக்கக்கூடிய
வர்களைத் தேர்வு செய்திருந்தால், அந்தக் கிராமத்திலே இருப்
பவர்களே சும்மா விடமாட்டார்கள். ஆகவே உண்மையான பய
னீட்டாளர்கள், பயன் பெறக்கூடியவர்கள், அவர்களுக்கு
செய்ய வேண்டும் என்று, இந்தத் தேர்வு முறை இருக்க வேண்
டும் என்றுதான், இந்த முறையைக் கொண்டு வந்திருக்கி
றோம். இருந்தாலும் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள்
இதிலே எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்று இல்லாமல் ஒட்டு
மொத்தமாக சட்டமன்ற உறுப்பினர்களுக்காவது அனுமதி
கொடுக்கக்கூடாதா என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்
கள். நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களைக்
கலந்து நிச்சயமாக உங்களுடைய ஆலோசனையை, அந்தக்
கருத்தை கவனத்திலே எடுத்துக் கொண்டு ஆவன செய்யப்
படும் என்று நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன்.



இதிலே ஊராட்சி மன்றங்களுக்கு, குடிநீர் பம்ப் செட்டு
களைப் பழுதுபார்ப்பதில் மிகப் பெரிய தவறு நடைபெற்றிருந்
தது. அதுலே தான் ஒரு கிராமத்திலே ஆழ்துளைக் கிணறு
மோட்டார் அதற்கும் சா, மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி,
அதற்கு மோட்டாராக இருந்தாலும், அவற்றிலே பழுது
ஏற்பட்டுவிட்டால் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரியப்
படுத்துவது; அங்கே இருக்கின்ற எஞ்சினியர் வந்து பார்த்து
சான்றிதழ் வழங்குவது, பிறகு அது அனுப்பப்பட்டு அதை
ரிப்பேர் செய்வதற்கு சில இடங்களில் மாண்புமிகு உறுப்பினர்
கள் சொன்னதைப் போல ஒரு மோட்டார் ரூ. 3,500,
ரூ. 5,000 என்றால் அதற்கு பழுது செலவு, காயில் கட்டுவதற்கு
செலவு பண்ணி பிறகு ரூ. 6,000, ரூ. 7,000 என்று பில் பண்ணி
யிருக்கிறார்கள். தென் ஆற்காடு மாவட்டத்தில் இதில் மிகப்
பெரிய தவறு நடந்திருக்கிறது. அதுபோலவே செங்கை
அண்ணா மாவட்டத்திலே நடைபெற்றிருக்கிறது. அதுவும்
நமது கவனத்திற்கு வந்தது. இது தேவையில்லாத ஒன்று.
இதனாலே காலதாமதம். ஊராட்சி மன்றத்திலே குடிநீர்
மோட்டாரில் பழுது ஏற்பட்டுவிட்டால், நமக்கு எல்லாம் தெரி
யும், நாம் கிராமத்திலே இருந்து வந்தவர்கள், உடனடியாக
மோட்டாரை எடுத்துக்கொண்டுபோய் காயில் கட்டக்கூடிய
வர்கள் இடத்திலே கொடுத்தால், 6 மணி நேரம் அதிக
பட்சமாகும், அப்படியில்லை என்றால் 8 மணி நேரம் ஆகும்.
பிறகு மீண்டும் அதே மோட்டாரைக் கொண்டு வந்து கிராமப்
புற மக்களுக்கு அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலோ
ஆழ்துளைக் கிணற்றிலோ நாம் தண்ணீர் வழங்க முடியும்.
ஆனால் 3 மாத காலம், 4 மாத காலம் காயில் கட்டு
வதற்கு எடுத்துக்கொண்டு செல்கிறபோது, மோட்டார் திரும்பி
வருவதில்லை. ஆகவே இந்த நிலையெல்லாம் தேவையில்லை
என்ற அடிப்படையில்தான் இன்றைக்கு நாம் ஒரு உத்தரவை
வழங்கி, அப்படி மோட்டாரில் பழுது ஏற்பட்டுவிட்டால் காயில்
போய்விட்டால் அல்லது வேறு பழுது ஏற்பட்டாலும் உடனடி
யாக அநத ஊராட்சி மன்றத் தலைவரே நேரடியாக எடுத்துச்
சென்று—அவர் ஏதோ கொட்டேஷன் வாங்குவதற்கு காலம்
எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை— 2 கடைகளிலே, 3
கடைகளிலே அவர் சென்று கேட்டுவிட்டு, ஒருத்தன் ரூபாய் 450
என்று சொல்லலாம், இன்னொருத்தன் ரூ. 500 என்று சொல்ல
லாம். யார் குறைந்த செலவில் நல்ல முறையில் காயில் கட்டித்
தருவார் என்று பார்த்து அவர்களிடத்திலே காயில்
கட்டுவதற்கு, பழுதுபார்ப்பதற்கு நேரடியாக ஊராட்சி
மன்றத் தலைவர் அவர்கள் கொடுத்து செய்துவிடலாம் என்ற
உத்தரவை வழங்கிவிட்ட காரணத்தினால், இனிமேல் அதுபோல்
மோட்டார் கெட்டுவிட்டது, பழுது பார்க்க அனுப்பினோம்,
எங்களுக்கு சீக்கிரம் கிடைக்கவில்லை. அந்த மோட்டார் திரும்ப

வரவில்லை பொதுமக்களுக்குத் தண்ணீர் வழங்கமுடிய வில்லை என்ற சங்கடம் இருககாது எனபதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அது போலவே, வறட்சி நிவாரணப் பணிகள். இப்போது நாம் 5,000 ஆழ்துளைக் கிணறுகளை அமைக்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். நீங் கள் எல்லாம் சொன்னீர்கள். ஏதோ 200 அடி போடுவதாக சொல்லி 150 அடி அலலது 100 அடி போட்டு விடுகிறார்கள். அதற்கு சரியான அளவு எடுப்பதில்லை என்ற குறைபாடெல லாம் இருக்கிறது. ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவருடைய மகாநாட்டில் திட்டவட்டமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பொறியாளர்கள் அனைவருக்கும் தகுந்த அறிவுரைகள் வழங்கி இத்தகைய தவறுகள் நடைபெறாமல் எங்கே குடிநீர்ப் பற்றாக் குறையால் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்களோ அந்தப் பகுதியில் விரைவாக ஆழ்துளைக் கிணறுகளை எல்லாம் அமைக்க வேண்டும் என்று தகுந்த உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 1-50)

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் இரண்டொரு இடங்களில் நிதி குறைந்திருக்கிறதென்று சொன்னார்கள். ஒட்டுமொத்தமாக நீங்கள் பார்த்தால் எந்த நிதியும் குறைக்கப்படவில்லை. கூடுதலான நிதியைத்தான் இந்த ஆட்சி ஒதுக்கியிருக்கிறது. சென்ற ஆண்டு 94 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு என்றால், இந்த ஆண்டு நிதிக் கோரிக்கை உங்களுக்கே தெரியும், ஒட்டுமொத்தமாக இந்தத் துறைக்கு ரூ. 242 கோடியே 70 இலட்சத்து 48 ஆயிரமாகும். எனவே கூடுதலாகத்தான் ஒதுக்கி இருக்கிறோம். சில திட்டங்களை தேவையில்லாமல் தொடர்ந்து கடமைக்காகச் செயல்படுத்து கிறோம். அவற்றையும், அதைப்போல நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும் விட்டுவிட்டு, அடுத்த திட்டங்களுக்கு நாம் செல்கிற காரணத்தாலேதான் அவைகள் எல்லாம் குறைக்கப் பட்டிருக்கின்றன.

அதைப்போல கிராமப்புறச் சாலைகளுக்கு அதிகமாக நிதி ஒதுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். கிராமப் புறங்களிலே நெடுஞ்சாலை 3,700 கிலோ மீட்டர் நீளமுள்ளது. அதைப்போல மாவட்டச் சாலைகள் 4,300 கிலோ மீட்டர் நீள முள்ளது. கிராமப் புறங்களிலே ஒரு லட்சம் கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் இருக்கின்றன. இதிலே கிராமப்புறங் களுக்கு மட்டும் 11.70 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.



கீழ்க்கண்டவை அரசு ஒப்புதல் பெற்ற சில முக்கியமான திட்டங்களாகும். சில திட்டப்பணிகள் துவங்கப்பட்டுள்ளன. ஏனைய பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும். :—

| | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1 | சென்னை பொது மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடத்தின்மேல் கூடுதலாக 7 மாடிகள் கட்டுதல். | 1.26 |
| 2 | சேலம், மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவமனை மற்றும் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையாக மாற்றுதல். | 3.75 |
| 3 | சென்னை சைதாப்பேட்டையில் ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் அலுவலகம். | 3.66 |
| 4 | சென்னை உயர்நீதி மன்றம், கூடுதல் கட்டடம். | 4.13 |
| 5 | இராமநாதபுரம், காமராஜர் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களில் காவலர் மற்றும் ஆயுதப் படையினர் குடியிருப்புகள். | 9.26 |

புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்படுவோருக்கு உடனடி நிவாரணம் அளிப்பதற்கென கடலோரப் பகுதிகளில் புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டும் பணியை அரசு மேற்கொண் டுள்ளது. இப்பணிகள் பொதுப்பணித்துறையின் கட்டிடப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கென உலக வங்கி யின் உதவி பெறும் ஐ.பி.பி.வி. திட்டத்தின் கீழ் ஆலந்தூர், பல்லாவரம், திருவொற்றியூர் மற்றும் தாம்பரம் நகராட்சிகள் மற்றும் கத்திவாக்கம், [illegible], [illegible]வடி மற்றும் அம்பத்தூர் நகரியங்களுக்கென ரூ. 1.24 கோடிக்கு அரசு ஏற்பு அளித் துள்ளது.

144361
D
V21,31N89
N89.10.2

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrafts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9|31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3|1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B. B. Gandhi Street, Calcutta-17.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

அடுத்து ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருவது பற்றி இங்கே நீங்கள் சொன்னீர்கள். அதற்கான உத்தரவை இப்போது நாம் வழங்க இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர். அவர்கள்கூட இங்கே எடுத்துச் சொன்னார்கள், திட்டவட்டமான உத்தரவு எங்களுக்கு அனுப்டப்பட வேண்டுமென்று. 1—6—1986-லிருந்து ஆசிரியர்கள் அரசாங்கப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டுவிட்டார்கள். ஆனால் பள்ளிக் கட்டிடங்களைப் பராமரிப்பதை அவர்கள்எடுத்துக் கொள்ளவில்லை, அது நகராட்சி, ஊராட்சி ஒன்றிய அளவிலேயே பராமரிப்பது என்று இருந்தது. இன்னமும் அப்படி இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் அதற்கான நிதி ஒதுக்கீடு முறையாக நமக்கு இல்லை. ஆகவேதான் 45 பைசா ஸ்தல வரி விதிப்பிலிருந்து 20 பைசா கண்டிப்பாக கல்விக்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், நகராட்சியிலும், மாநகராட்சியிலும் ஒதுக்கப்பட்டு, பள்ளிக் கட்டிடங்களைச் சிறப்பாக பராமரிக்க வேண்டும், அந்தக் கடமை நம்முடைய ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குத்தான் உண்டு என்ற உத்தரவு இப்போது அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே பழுதடைந்த பள்ளிக் கட்டிடங்களை எல்லாம் பழுது பார்க்க தகுந்த நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறோம்.

அடுத்து வரி மேல் முறையீட்டுக் குழு பற்றிச் சொன்னார்கள். அதைக் கொள்கை அளவில் நீங்கள் பாராட்டியதைப் போல, மன்றத் தலைவர்களுக்கு அதை நாங்கள் வழங்கிவிட்டோம். ஆனால் அதுகுறித்து சட்டம் இயற்ற வேண்டியிருக்கிறது. இந்தப் பேரவையிலே அதை நிறைவேற்ற இருக்கிறோம். விதி 23(ஏ) -ன்படி நாம் திருத்தம் கொண்டு வர வேண்டும். பழைய சட்டம், ஷெட்யூல் 4 விதி 23-ன்படி நகர மன்றத் தலைவருக்கு, நகர மன்றத்திற்கு இருந்தது. அதைத்தான் 23(ஏ) விதியின்கீழ், மாவட்ட வருவாய் அலுவலர், பொதுப் பணித் துறை உதவிச் செயற் பொறியாளர், நகர மன்றத் தலைவர், நகர மன்ற உறுப்பினர் இருவர் என்று மாற்றினார்கள். நான் அதைப்பற்றி சென்ற முறை சொன்ன போதுகூட, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் இங்கே நினைவுபடுத்தி, சட்டத் திருத்தம் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். விரைவிலே சட்டத்திருத்தத்தை அறிமுகம் செய்ய இருக்கிறோம். அந்தச் சட்டத்தை இயற்றியவுடன் உடனடியாக நகர மன்றத் தலைவர், அந்தக் குழுவிற்கு தலைவர், உறுப்பினர்களிலே இருந்து 4 பேரைத் தேர்வு செய்து—நியமன முறையல்ல—நகரமன்றமே பார்த்து 4 பேர்களைத் தேர்வு செய்து, 5 பேரைக் கொண்ட வரி மேல் முறையீட்டுக் குழு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போல, நகராட்சிகளில் திட்டப் பணிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க, பொறி இயல் பிரிவு ஒன்று வேண்டுமென்று அரசு கருதி, அதற்கான நடவடிக்கையையும் நாம் விரைவில் எடுக்க இருக்கிறோம்.

மேலும் தெரு விளக்கு பராமரிப்பைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் 14 நகராட்சிகளில்— தெரு விளக்குகளில் பழுது ஏற்பட்டால்— பல்புகள் பியூஸ் போய்விட்டால்— அவற்றை உடனடியாக மாற்ற வேண்டுமானால்— திருச்சி, மாயவரம், ஸ்ரீரங்கம், சீர்காழி போன்றவற்றைத் தவிர மீதமுள்ள நகராட்சிகளில்— அந்த நகராட்சி மன்றங்கள் பணத்தைக் கொண்டு போய் மின்வாரியத்தில் கட்டிவிடுகிறார்கள். அப்படிக் கட்டினால்தான் பல்புகளை வாங்க முடியும், சோக்குகளை வாங்குவோம் என்று மின்வாரியத்தைச் சார்ந்தவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் அதற்கான பணத்தை நகராட்சிகள் கட்டிய பிறகு 3, 4 மாத காலம் தாமதமாகத்தான் அவற்றை வாங்கி வந்து பொருத்துகிறார்கள். இதனால் பல்வேறு சங்கடங்கள் ஏற்படுகின்றன. பொது மக்களும் சங்கடங்களுக்கு ஆளாகிறார்கள்— மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் மக்களுடைய வெறுப்புக்கு ஆளாகிறார்கள். இந்த நிலைமையை மாற்ற, தமிழ்நாடு முழுவதும் இதைச் சீரமைக்க —இனி எல்லா நகராட்சிகளுமே நேரடியாக — தமிழ்நாடு மின் வாரியத்தாலே நிர்ணயிக்கப்படும் தரமுள்ள பல்புகளை —அவர்கள் எந்தக் கம்பெனியில் வாங்க வேண்டுமென்று சொல்லுகிறார்களோ— அதற்கான விலைப்பட்டியலையும் கூட ஓராண்டுக்கு வாங்கிக் கொண்டு— நேரடியாக வாங்கிவைத்துக் கொண்டு எங்கெங்கே பியூஸ் போகிறதோ அங்கெல்லாம் உடனடியாக மாற்றுவதற்கு உத்தரவிடப்படுகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நகராட்சிகளிலே சொத்து வரியை வரித் தண்டலர்கள் மூலமாக— பில் கலெக்டர்கள் மூலமாக— வசூல் செய்கிறோம். இதிலே பல்வேறு குறைபாடுகள் ஏற்படுகின்றன. இவற்றையெல்லாம் போக்குவதற்கு மதுரை, சென்னை, கோவை போன்ற இடங்களில் ஒரு மாற்றத்தை நடைமுறைக்குக் கொண்டு வர இருக்கிறோம்.

தற்போது ஒரு ஆண்டு டிமாண்டு எவ்வளவு என்று போட்டு, அரை ஆண்டுக்கு எவ்வளவு வரி செலுத்த வேண்டும் என்று நாம் அவர்களுக்குத் தெரிவித்து, பிறகு நகராட்சி பில் கலெக்டர்கள் சென்று வசூல் செய்கிறார்கள். அதில் பல முறைகேடுகள் செய்யப்பட்டது, அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததால்தான் இப்போது மதுரை, கோவை போன்ற இடங்களில் இந்த நிலைமையை மாற்றி அமைக்க முடிவு செய்துள்ளோம்.



ஓராண்டுக் கேட்பை — டிமாண்டை— பூர்த்தி செய்து— அதில் அரை ஆண்டுக்கு எவ்வளவு கட்ட வேண்டும் என்று சலான் எல்லாம் எழுதி அதில் ஒவ்வொரு வீட்டுக்காரர் அல்லது கடைக்காரர் பெயரைப் போட்டு— 5 ஆண்டுக்கு ஒரு முறை தான் தற்போது ரிவிஷன் செய்கிறோம் என்ற காரணத்தால்— ஒரு பட்டா புக் போல்— பாஸ் புக் போல் கொடுத்துவிடலாம் என்றும் அவர்கள் தங்களுக்கு அருகில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் அல்லது கூட்டுறவு வங்கிகளில் அதற்கான பணத்தைச் செலுத்திவிட்டால் இப்போது ஏற்படும் தவறுகள் நடக்காமல் தடுக்கலாம் என்றும் எண்ணி அரசு இந்த முறையைப் பரிசீலனை செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு இந்த முறையை எல்லா நகராட்சிகளிலேயும் அமல்படுத்த இருக்கிறோம். அப்படி ஒரு குறிப்பிட்ட காலத்தில் வரியைச் செலுத்துகிறவர்களுக்கு இரண்டு சதவீதம் மட்டும்— டிமாண்டில்— கேட்பில்— குறைத்துக் கொள்ளலாம் என்ற ஒரு சலுகையைத் தரலாம் என்றும் நாங்கள் முடிவெடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு இங்கே நான் அறிவிக்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 2-00)

அதைப்போலவே இங்கு விருதுநகர் சட்டப் பேரவை உறுப்பினர் எடுத்துச் சொன்னார். வீட்டுமனைகளுக்கு அனுமதி பெறாமல் சில பேர் அவைகளைப் பிரித்து விற்றுவிடுகிறார்கள்; அந்த இடத்தில் வீடு கட்டி விடுகிறார்கள். அவர்களிடத்தில் நாம் வரி வசூல் செய்கிறோம். ஆனால் அவர்களுக்கு பாதை போட முடியாது; தெரு விளக்கு போட முடியாது; சாக்கடை வசதிகளை செய்து தர முடியாத சூழ்நிலை இருக்கிறது; ஆக வீட்டு வரி மட்டும் வாங்குகிறார்கள், எங்களுக்கு அந்த வசதிகளை செய்யவில்லை என்று குடியிருப்பவர்கள் நம் மீது ஆத்திரப்படுகிறார்கள். அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டாமா என்ற கோரிக்கையை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இதை இந்த அரசு தீர ஆலோசித்து— நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விரைவாக உத்தரவு வழங்க ஒப்புக் கொண்டது— இன்றைக்கு நகராட்சிகள், அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளுக்கு வேண்டிய அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தரும் வகையில் 1—1—89 வரை மனை பிரித்து விற்று இருந்தால் அந்தப்பகுதி வரை இனிமேல் அரசாங்கம் முழுமையாக 1—1—89 வரை, அவைகளைப் பராமரிக்கின்ற பாதை வசதி, சாக்கடை வசதி, தெரு விளக்கு அமைக்கும் எல்லாப் பொறுப்பையும் நகராட்சியே ஏற்றுக் கொள்ளும்; இதற்குமேல் இந்தத் தேதிக்கு மேல், இனிமேல் யாராவது மனை பிரித்து விற்பனை செய்ய முன்வருவார்

களேயானால் முறைப்படி நகர அமைப்பு-டவுன் பிளானிங் அப்ரூவல் வாங்கும்போது, அவர்கள் பாதைக்கு என்று ஒதுக்கப்படுகின்ற ரிசர்வேஷன் இடம், பொதுக் காரியங்களுக்கு என்று, பல்வேறு காரியங்களுக்கு என்று அரசாங்க விதிமுறைகளுக்கு உட்பட்டு ரிசர்வேஷனுக்காக ஒதுக்கப்படுகின்ற இடங்கள், மனை பிரித்து போடப்பட்ட இடங்களில் உள்ள அந்த இடங்களை நகராட்சிகளுக்கு, மாநகராட்சிகளுக்கு ஒப்படைப்பதோடு, அந்தப் பகுதியில் இப்போது நாம் டெவலெப்மென்ட் சார்ஜ் என்று வசூல் செய்கிறோம். இனி மேல் அவர்களே விற்பனை செய்வதற்கு முன்பே, நம்மிடம் அனுமதிக்கு அனுப்பி, நம்மிடம் அது நிலுவையில் இருக்கும்போதே, அந்த மனை பிரித்து விற்க கூடியவர்களே முழுமையாக பாதை அமைத்து, சாக்கடையும் கட்டி, தெரு விளக்கையும் போட்டால்தான் இந்த பிளான் அப்ரூவ் செய்யப்படும் என்ற நிலையைத் திட்டவட்டமாக நாங்கள் அறிவிக்கிறோம்; இல்லாவிட்டால் இந்தப் பிரச்சினைக்கு ஒரு எல்லையே இல்லாமல் போய்விடும். இந்த முடிவை இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒப்புதலோடு நான் இங்கு அறிவிக்கிறேன்.

சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு மட்டும் அரசாங்கம் 20 கோடி ரூபாய்க்கு மேலும், மாநகராட்சிக்கு 9 கோடி ரூபாய்க்கு மேலும் ஒதுக்கி, ஆக 30.65 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறோம். இங்கு நம்முடைய முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர், அன்பு அண்ணன் லத்தீப் அவர்கள் பாராட்டி பேசினார்கள். இப்போது சென்னை மாநகரத்தை பொருத்தவரையில் 10 வட்டங்களாக......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சரவர்கள் உறவைச் சொல்லி அழைக்கக் கூடாது.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 'அண்ணன்' என்று அழைக்கலாம் ; அதில் தவறு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படியென்றால், யாராவது 'மச்சான், மாமன்' என்று அழைக்க ஆரம்பித்து விடுவார்கள். அதற்காகத்தான் அதைத் தடை செய்ய வேண்டி இருக்கிறது. (சிரிப்பு).

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ.. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒன்றைப் பணிவோடு ஞாபகப்படுத்துகிறேன். நான் தி. மு. க.வில் (குறுக்கீடு) இப்போது சொல்லிவிடுகிறேன்............



**திரு. இரா. மோகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் இப்போது, புதிதாக நிலத்தைப்பிரித்து விற்கின்றவர்கள் அவர்களாகவே இனிமேல் சாலை வசதி, சாக்கடை வசதி, இவைகளையெல்லாம் அமைக்க வேண்டும்; அப்போதுதான் அரசாங்கம் அதை அப்ரூவ் செய்யும் என்று சொன்னார்கள். இப்போது பலரும் அப்ரூவ் செய்யாமலேயே, அப்ரூவல் வாங்காமலேயே நிலத்தைப் பிரித்து 'அன்-அப்ரூவ்ட்' ஆக விற்றுக் கொண்டிருக்கிறார்கள். இப்போது விற்றுக் கொண்டிருக்கிறார்கள்; இப்போது அது நடந்து கொண்டிருக்கிறது. நீங்கள் தடுக்க முடியாது அதைப் பிரித்து தொடர்ந்து விற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களே ரோடு போடவேண்டுமென்று சொல்வதைவிட அந்தப் பணத்தை அரசாங்கத்திடம் கட்டிவிட்டால், அரசாங்கம் ரோடு போடும், அரசாங்கம் சாக்கடை வசதி தரும் : அரசாங்கம் தெரு விளக்கு தரும் என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்குமே தவிர, அவர்களைப் போடச் சொன்னால் போட முடியாது. ஒரு சைட்டுக்கு ஒரு ஏக்கர் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது ஒழுங்குப் பிரச்சினையின் கீழ் வராது. அமைச்சர் பதிலுரை சொல்லட்டும், பின்னாலே பேசுவோம்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் :** தலைவரவர்களே, டவுன் பிளானிங் அப்ரூவல்—அனுமதி வாங்காமல் வீட்டு மனைகளைப் பிரித்து விற்பதும் உண்டு. ஆனால் இப்பொழுதும் கூட நமக்குச் சட்டத்திலே இடமிருக்கிறது. டெவலெப்மென்ட் சார்ஜ் என்று கட்ட வேண்டுமென்று இருக்கிறது. கட்டாயப்படுத்தி வசூல் செய்யலாம். சிலபேர் அனுமதி பெறாத வீட்டுமனையிலே வீடு கட்டி விட்டாலும் கூட, அங்கே ரோடு போட வேண்டுமென்றால் இத்தனை பர்சண்ட் அவர்கள் கட்டலாம். கட்ட வேண்டும். வசூல் செய்ய வேண்டுமென்றால்லாம் இருக்கிறது. ஒரு சங்கடத்திற்கு நாம் ஆளாகக் கூடிய நிலை ஏற்படும் என்ற காரணத்தினாலேதான் அப்படியும் நடவடிக்கை எடுக்கப்படும் அப்படி வசூல் செய்ய முடியாவிட்டாலும் இந்தத் தேதி வரை விற்பனையாக்கப்பட்டு, குடியிருக்கக்கூடிய இடங்களுக்கு இந்த வசூலைச் செய்வதற்கு நகராட்சியே பொறுப்பு ஏற்றுக் கொள்ளும். டெவலெப்மென்ட் சார்ஜைப் பொருத்தவரையில் அவர்கள் "பணத்தைக் கட்டி விடுகிறோம், நீங்களே ரோட்டைப் போட்டுக் கொள்ளுங்கள், லைட்டைப் போட்டுக்கொள்ளுங்கள்" என்று பணத்தை நம்மிடம் கட்டிவிட்டாலும் ஆட்சேபணை இல்லை. அனுமதி கொடுத்துவிடலாம். சில முறைகளிலே அவர்களே போட்டுக் கொடுத்து, பின்னாலே, ஏன் என்றால்-

[திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்] [1989 ஏப்ரல் 19

சில நகராட்சிகள்—அதிலே உள்ள சங்கடம் என்னவென்றால்,
நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். ஒரு கவனத்திற்
காகத்தான் சொல்கிறேன். சில நகராட்சிகளின் நிதிப்பற்றாக்
குறை இருக்கிறது. அப்படி டெவலெப்மென்ட் சார்ஜ் என்று
வாங்கிக் கொண்டு, வேறு பகுதிக்கு அதைச் செலவு செய்து
விட்டால், அந்தப் பகுதி புறக்கணிக்கப்பட்டு விடும். ஆகவே
தான், எப்பொழுது புதிய குடியிருப்புகள், வீடுகள் தோன்று
கின்றனவோ அந்தப் பகுதியிலே டெவலெப்மென்டோடு,
முன்னேற்றத்தோடு நகராட்சி பொறுப்பு ஏற்றுக்கொண்
டால்தான் நகர வளர்ச்சியிலே அது சிறப்பாக இருக்கும் என்று
அன்றைக்கு அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் இந்த
முடிவு, முதலமைச்சரோடு கலந்து எடுக்கப்பட்ட முடிவு
என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குச் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

இங்கே நிதிநிலை பற்றியெல்லாம் சொன்னார்கள், இதற்கு
என்ன வழி செய்யப் போகிறீர்கள் என்று. இதற்காக நம்
முடைய முதலமைச்சரவர்கள் சமீபத்திலே அனுமதி வழங்கி
விட்டார்கள். நகராட்சிகள் நிதி உதவி வாரியம் என்ற
ஒன்றை அரசின் சார்பில் உருவாக்கி, அதைப்போல ஊராட்சி
ஒன்றிய அளவில் நிதி உதவி வாரியமும் நிறுவி, அரசாங்கமும்
ஒரு முதலீடு செய்து, தனியாரிடத்திலே டெபாசிட் வாங்கி,
எல். ஐ. சி.யிலே மற்றும் எங்கெங்கே லோன் வாங்க முடியுமோ
வாங்கி, இப்படியெல்லாம் டெவலெப் பண்ணி இந்த வாரியத்தின்
மூலம் நிதியாதாரங்களைப் பெருக்கி, நலிந்த கிராமங்களுக்கு,
ஊராட்சி மன்றங்களுக்கு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதிப்
பற்றாக்குறை உள்ள நகராட்சிகளுக்கு இந்த வாரியம் நிதி
உதவியைத் திரட்டித் தருகிற பணியை மேற்கொள்ள, நக
ராட்சிகளின் நிதி உதவி வாரியம், ஊராட்சி நிதி உதவி
வாரியம், ஊராட்சி ஒன்றிய நிதி உதவி வாரியம் இவைகள்
அரசாங்கத்தின் சார்பில் அமைக்கப்படுகின்றன என்ற அந்த
மகிழ்ச்சியான செய்தியையும் நான் இங்கே தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

நிர்வாக சீரமைப்பைப் பொறுத்தவரையில், சென்னை நக
ரத்தைப் பொறுத்தவரையில், இப்பொழுது பத்து வட்டங்
களாக, சர்க்கிள்களாக, ஏரியாவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.
ரிப்பன் பில்டிங்கிலேதான் எல்லா அதிகாரங்களும் என்று
சொன்னால், இந்த மாநகரத்திலே இருக்கிற எல்லா மக்
களும் சென்று பார்க்க முடியாது என்று பத்து பகுதிகளா
கப் பிரிக்கப்பட்டு, சர்க்கிள் ஆபீஸ் என்று வைத்திருக்கிறார்
கள். பிறகு டிவிஷன்கள் எல்லாம் தனியாக இருக்கின்றன.
ஒரு சர்க்கிள் ஆபீசுக்கு பத்து டிவிஷன்கள் இருக்கின்றன.
ஆகவே, இது பிரிக்கப்பட்ட பிறகு, ஓரளவு
சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் அந்



1989 ஏப்ரல் 19] [திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்]

தந்தப் பகுதியிலே உள்ள எல்லாப் பிரச்சினைகளுக்கும் முடிவு
காண முடிகிறது. அதிகாரியிடத்திலே நாம் வேலை வாங்க
முடிகிறது; கண்காணிக்க முடிகிறது. ஆகவே, இதை இன்னும்
கூட கொஞ்சம் விரிவுபடுத்தலாம் என்று முதலமைச்சரோடு
கலந்து பேசி, நம்முடைய முதலமைச்சருடைய ஒப்புதலோடு,
ஒரு தொகுதிக்கு ஒரு சர்க்கிள் ஆபீஸ் என்று, இப்பொழுது
பத்தாக இருப்பது 14-ஆகப் பிரிக்கப்படுகிறது என்பதை
நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அரசு அலுவலர்களுக்கு சைக்கிள் வாங்குவதற்கு அட்
வான்ஸாக 600 ரூபாய் ஆக இருந்ததை 800 ரூபாய் ஆக உயர்த்தி
யிருக்கிறார்கள்; அதைப்போல நகராட்சிகளிலே பணியாற்றக்
கூடிய அலுவலர்களுக்கும் வேண்டுமென்று கேட்டார்கள்.
நகராட்சி அலுவலர்களுக்கும் 800 ரூபாய் கடன் உதவி வழங்க
ப்படும். சைக்கிள் வாங்குவதற்காக என்பதை நான் அறிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல மாநகராட்சிகள், நகராட்சிகளில் துப்புரவுப்
பணியாளர்கள் 50,000-க்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்
கள். நீண்டகாலமாக அவர்களிடத்திலிருந்து ஒரு கோரிக்கை
இருந்தது. துப்புரவுப் பணியாளர்கள் தூசியினால் பாதிக்கப்
படக்கூடியவர்கள் என்பதால் அதற்கென்று 'அலவன்ஸ்'
தர வேண்டுமென்று கேட்டு வந்தார்கள். ஆகவே அவர்
களுடைய கோரிக்கையினை ஏற்று மாதம் 10 ரூபாய் வீதம்
50,000-க்கும் மேற்பட்ட துப்புரவுப் பணியாளர்களுக்கு,
தூசியினால் பாதிக்கப்படக்கூடிய துப்புரவுப் பணியை செய்
யக்கூடிய பணியாளர்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரி
வித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 2-10)

அதைப்போல நகராட்சி அலுவலர்களை, அரசாங்கத்தின்
சார்பில் ஏதாவது பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் அல்லது
சங்கத்தின் சார்பாக அவர்கள் சென்னைக்கு வந்தால் எங்களுக்கு
பயணப்படி அந்த நகராட்சியில் தரவேண்டுமென்ற கோரிக்கை
நீண்ட காலமாக இருந்து வருகிறது. இப்போது என்.ஜி.ஓ.-
கள் அவர்கள் அரசாங்க அழைப்பின் பேரில் பேச்சுவார்த்
தைக்கு வருவார்களானால் அதற்கு அவர்களுக்கு பயணப்படி
இருக்கிறது. அதைப்போல இந்த பயணப்படி நகராட்சி அலு
வலர்களுக்கும் அவர்களுடைய சங்கத்தின் சார்பாக, அர
சாங்க அழைப்பின் பேரில் வருகை தந்தால்,—பேச்சுவார்த்
தைக்கு,—அவர்களும் பயணப்படி பெற்றுக் கொள்ள அனுமதிக்
கப்படுகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

[திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்] [1989 ஏப்ரல் 19

அதைப்போல நகர்மன்றத் தலைவர்கள். அவர்களுக்கென்று ஒரு சம்மேளனம் ஏற்கெனவே இருந்தது. இப்போது அது இல்லை, அதை மீண்டும் புதுப்பிக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கிவிட்டார்கள். அந்த சம்மேளனம் தொடர்ந்து செயல்பட அனுமதி வழங்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்களுடைய தலைவர்கள் சங்கத்திற்கும் அதைப்போல, நகர்மன்ற சம்மேளனத்திற்கும்-அவர்களுக்கென்று அலுவலகம் ஏற்கெனவே இராஜாஜி ஹாலில் இருந்தது. அந்த இடத்தை ஒதுக்குவதற்கு இடமும் அனுமதிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னதைப் போல நகராட்சிகள் வரி விதித்தால் எதற்கெடுத்தாலும் மாவட்டத்தின் அளவில் இருக்கிற நீதிமன்றங்களுக்குச் சென்று தடை உத்தரவு வாங்கிவிடுகிறார்கள். ஆகவே இதற்கு ஏதாவது முடிவு கட்டாவிட்டால் நகராட்சிகளுடைய வருமானம், வரவேண்டியது வராமல் மக்களுக்கு நன்மை செய்ய முடியவில்லை என்ற கருத்து பரவலாக இருக்கிறது. மாவட்ட அளவிலாவது நீதிமன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு வாங்காமல் இருப்பதற்கு சட்டத்தில் எந்தவகையில் நாம் மாற்றத்தைக் கொண்டு வரலாம் என்று அரசாங்கம் பரிசீலிக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நகராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்களுக்கு பயணப்படி எல்லாம் உயர்த்தப்படுகிறது. அதனுடைய விவரமும் இருக்கிறது. நகர்மன்றத் தலைவர்களுக்கு ஏற்கெனவே 10 ரூபாய் 50 காசாக தினப்படி இருந்ததை இப்போது 22 ரூபாயாக உயர்த்தி இருக்கிறோம். அதைப் போல Mileage charge ஆக கிலோமீட்டர் ஒன்றுக்கு 56 காசு என்று அவர்களுக்கு இருந்ததை இப்போது 80 காசாக உயர்த்தி இருக்கிறோம். எல்லா நகர்மன்றத் தலைவர்களுக்கும் அதைப்போல ஊராட்சி ஒன்றியக் குழுவிலும் ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு, அவர்களுக்கு 'சிட்டிங் பீஸ்' ஐந்து ரூபாயாக இருந்ததை 10 ரூபாயாக நாம் உயர்த்தி இருக்கிறோம்.

அதைப்போல, Conveyance Allowance for maintenance of overக்கு மாதம் ஒன்றுக்கு சிறப்புநிலை நகர்மன்றத் தலைவருக்கு 250 ரூபாயாக இருந்ததை 300 ரூபாயாகவும், தேர்வு நிலை நகர்மன்றத் தலைவருக்கு 200 ரூபாயாக இருந்ததை 250 ரூபாயாகவும், முதல் நிலை நகர்மன்றத் தலைவருக்கு 160 ரூபாயாக இருந்ததை, 200 ரூபாயாகவும், இரண்டாம் நிலை நகர மன்றத் தலைவருக்கு 125 ரூபாயாக



1989 ஏப்ரல் 19] [திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்]

இருந்ததை 150 ரூபாயாகவும், மூன்றாம் நிலை நகர்மன்றத் தலைவருக்கு 100 ரூபாயாக இருந்ததை 125 ரூபாயாகவும் உயர்த்தி அவர்களுக்கு இப்போது நாங்கள் அனுமதி வழங்கியிருக்கிறோம்.

அதைப்போல, (குறுக்கீடு) நகர்மன்றத் தலைவருக்கு இப்போது புதிதாகப் போடுகிறோம். (குறுக்கீடு). இல்லவே இல்லையா? நகர்மன்ற உறுப்பினர்களுக்கு இல்லை. ஏன் என்றால் அந்த நகரத்திற்குள்ளே போகவேண்டும். அதிக தூரம் வரவேண்டியதில்லை. ஊராட்சி மன்றத் தலைவர்தான் கொஞ்சம் தூரமான பகுதியிலேயிருந்து வருகிறார்கள். (குறுக்கீடு) யூனியன் சேர்மனுக்கு இருக்கிறது.

அதைப்போல சட்டமன்றம் நடைபெறாத நாட்களில் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள், நகர்மன்றத் தலைவர்கள் சென்னைக்கு அலுவல் காரணமாக வருவார்களானால், அவர்கள் முன்கூட்டியே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கு வந்து தங்குவதற்கு இடம் கேட்டு எழுதினால், ரிசர்வ் செய்து அவர்களுக்குத் தரப்படும் என்று இருந்ததை நம்முடைய முன்னாள் பேரவைத் தலைவர் அவர்கள்தான் ரத்துச் செய்து விட்டார்கள். மீண்டும் அவர்களுக்கு அங்கே அறைகள் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, முன்பு அமைச்சர் அவர்கள் வழங்கு ரத்து செய்ததை மாண்புமிகு இதை நீங்கள்தான் அறிவிக்க முடிவதாக அறிவித்தார்கள். சட்டப்பேரவையின் வளாகம். இன்னும். அந்த வளாகம் சம்மேளனத்திற்கு இடத்தை வழங்குவதாகச் சொன்னொரு பேரவைத் தலைவர்தான் வழங்க னார்கள். அதையும் முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே அவர்கள் என்னிடத்தில் ஒப்புதல் கேட்டு, அந்த அனுமதியை வழங்கிய பிறகுதான், அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. சம்சுதின் என்கிற கதிரவன் : தலைவர் அவர்களே, பழைய சட்டமன்ற விடுதியிலே இந்தச் சட்டத்தின் மூலமாக பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் வந்தால் தங்க முடியாது. ஏன் என்றால், அங்கே ஏற்கெனவே பாதி அறைகளிலே ராணுவம் சம்பந்தப்பட்டவர்கள் தங்கியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கே சரியான நேரத்திலே அங்கு அறைகள் கிடைப்பதில்லை. ஆகவே அவர்களை கொஞ்சம் வெளியேற்றுவதற்கு ஏதாவது வழிவகை உண்டா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது என்னுடைய அலுவலகம் தொடர்பானது. அறையில் வந்து கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, நிதி ஆதாரத்தைப் பற்றிச் சொல்கிறபோது, மாண்புமிகு முதலமைச்சர் ஒப்புதல் தேவை என்ற அடிப்படையிலேதான், அவருடைய அனுமதியின் பேரில்தான் இவைகள் எல்லாம் வழங்கப்படுகின்றன என்று சொன்னேன். அதைப் போல, பேரவையினுடைய அதிகார வரம்புக்கு உட்பட்ட இடங்களில் உங்களுடைய அனுமதியைப் பெற்றுத்தான் அறிவிப்பேன் என்று அவருக்குத் தெரிந்திருந்தாலும், கேட்டார் கள். நீங்களே அதற்கு பதில் தந்ததற்காக எனது நன்றி கலந்த பாராட்டுதலைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே இன்றைக்கு இந்த மானியக் கோரிக்கைகள் மீது கலந்துகொண்டு 13 பேர்கள் தெரிவித்த கருத்துக்களை எல்லாம் கவனத்தில் கொண்டு. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரத்தையும் கொஞ்சம் கவனத்தில் கொண்டு. . . .

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : அதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டுதான் பேசுகிறேன். இல்லாவிட்டால நிறைய சொல்ல வேண்டியதிருக்கிறது. ஆகவே இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் கிராமப்புறங்களில் குடி தண்ணீர் வசதி, பாதை வசதி, சாக்கடை வசதி, தெருவிளக்கு வசதியைச் செய்வதிலும், அதைப்போல நகர்ப்புறங்களின் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதிகள், பாதாளச் சாக் கடைத் திட்டம், கொசுத் தொல்லை போன்றவற்றைத் தீர்ப் பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். கூவம் ஆற்றைப் பற்றி இங்கே சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விரைவான ஒரு நடவடிக்கை எடுத்து, மத்திய அர சோடு தொடர்பு கொண்டு, இந்தக் கூவத்தைத் தூய்மைப் படுத்தவேண்டும் என்று இருக்கிறார்கள். ஏற்கெனவே இருக்கிற இந்த பாதாளச் சாக்கடைத் தண் ணீர் மீண்டும் கூவத்திறகுள்ளே வந்து கோயம்பேட்டுக்குச் சென்று மீண்டும் வருகிறது.

(பிற்பகல் 2-20)

ஆகவே இதை எப்படி நவீனப்படுத்தி, இது கடலிலே கலந்துவிடுவதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காணலாம் என்று இங்கிலாந்து அரசோடு தொடர்பு கொண்டு அங்கேயிருக்கிற வல்லுநர்களோடு பேசி இப்போது



சென்னை மாநகருக்கு வருகை தந்து ஆய்வை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இங்கிலாந்திலிருந்து எட்டு வல்லுநர் கள் வந்துவிட்டு அவர்களுடைய பணிகளையும் தொடங்கியிருக் கிறார்கள். ஆகவே அவர்களுடைய ஆலோசனையைப் பெற்ற பிறகு நிச்சயமாக சென்னை மாநகரத்தின் மத்தியிலே ஓடுகின்ற கூவம், பக்கிங்காம கால்வாய் இவைகள் எல்லாம் தூய்மைப் படுத்தப்பட்டு, நகரத்திலே இருக்கின்ற மக்கள் மகிழ்ச்சியோடு வாழக் கூடிய சூழ்நிலையை இந்த ஆட்சி உருவாக்கும் என் பதையும் எடுத்துச் சொல்லி, இங்கு நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொன்ன சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு நன்றி கூறி, என்னுடைய பதிலுரையைக் கேட்ட பிறகு, மற்றவர்களுடைய கருத்துக்களும் என்னுடைய கவனத்திலே இருக்கும் என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்வீர்கள் என்ற அந்த நம்பிக்கையோடு, கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர் மானங்களை வலியுறுத்தாமல், இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன். வணக்கம்.

திரு. கி. கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரத்தையும் கவனத்தில் கொண்டு தான் நான் ஒரு சுருக்கமான கேள்வியைக் கேட்கின்றேன். அடிக்கடி இங்கே கூறப்படுகிறது. நகராட்சிப் பள்ளிகளிலே வேலை செய்யக் கூடிய ஆசிரியர்கள் அனைவரும் அரசு ஊழியர்களாக ஆகி விட்டார்கள் என்று. இன்றைக்கும் கூட நகராட்சிகள் தான் நிதிப் பற்றாக்குறை நிலையிலிருந்தும், அவர்களுக்கு சம்பளத்தை வழங்கும் நிலைமையில் இருக்கிறது. அரசே அவர்களுக்கு சம்பளத்தை நேரடியாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை இறுதியாக நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அதுபற்றி முதலமைச்சரோடு தொடர்ந்து பேசி, கல்வியமைச்சரோடும் பேசிக் கொண்டிருக்கிறேன். நமக்கு ஏற்கெனவே தர வேண்டிய கிராண்ட் கூட நகராட்சிகளுக்கு, மாநகராட்சிகளுக்குக் கொடுக்கப்படவில்லை. அந்தப் பழைய கிராண்டைக் கொடுத்தால்கூட, இந்த அடிப்படை வசதிகளை, இப்போது நகரங்களிலே செய்ய முடியும் என்ற நிலைமை இருக்கிறது. அதே போன்று ஒன்றியங்களும் இருக்கின்றன. அவற்றையெல்லாம் விரைவில் பேசி நமக்குத் தர வேண்டிய தொகையைப் பெறுவதற்கும், அதேபோன்று தொடர்ந்து தருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சருடைய பதிலில் உருப்படியான விவரங்கள், அடிப்படையான விவரங்கள்

வரவில்லை என்று நினைக்கிறேன். நேரம் இல்லை என்று சொன்னால்கூட, ஒன்றை மட்டும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில் நகராட்சிப் பணியாளர்கள், நகர சுத்தி தொழிலாளர்கள் பல ஆண்டுக் காலமாக எடுக்கப்படவில்லை என்பதே அநேகமாக இங்கே கூறப்பட்டது. ஏற்கெனவே பலமுறை சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு தூய்மை சம்பந்தமாக மாதம் ரூ. 10 கொடுப்பதன் மூலம் அதை நிறைவேற்றிவிட முடியாது என்பதையும், அவர்கள் கூடுதலாக கட்டாயமாக நியமிக்கப்படுவதன் மூலம் தான் சுகாதாரம் பாதுகாக்கப்படமுடியும் என்பதையும் இந்த நேரத்திலே அமைச்சரிடத்தில் கூறி, அவருடைய கருத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்** : தலைவர் அவர்களே, மாதம் ரூ. 10 துப்புரவுப் பணியாளர்களுக்கு தூய்மைக்காக—அவர்களுக்கு ஒரு போனசைப் போன்று என்று கூட எடுத்துக் கொள்ளலாம்— அதை வழங்குகிறோம். அது அவர்களுக்குத் தரப்படுகின்ற ஒரு சலுகை. தமிழ்நாடு முழுவதும் எடுத்துக் கொண்டால், ஏறத்தாழ ஒரு ஆண்டுக்கு ரூ. 60 இலட்சத்திற்கும் மேலேகூட எல்லா நகராட்சிகளும், நகரியங்களும் ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவ்வளவு பெரிய சலுகையை நாம் தருகிறோம்.

இன்னொன்று, துப்புரவுப் பணியாளர்களுக்கு, பெண்களுக்கு மூன்று புடவைகள் தருகிறோம். அதைப் போன்று ஆண் துப்புரவுப் பணியாளர்களுக்கு மூன்று உடைகள் நாம் வழங்குகிறோம். அதுகூட கைத்தறியிலே இன்று வழங்கலாமா என்ற ஆலோசனை இந்த ஆட்சியிலே இருக்கிறது. அவர்கள் சொல்வது போன்று துப்புரவுப் பணியாளர்கள் அனைவரையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கை என்பது தனியாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று.

**திரு. எம். அப்துல் லத்தீப்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு செயல்பட்டுக் கொண்டிருந்தது. அதனுடைய கதி என்னவானது என்று நமக்குத் தெரியவில்லை. எனவே. தான் நம்முடைய தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இல்லாத காரணத்தால் மக்களுடைய பிரதிநிதிகளைக் கொண்ட இந்த ஆலோசனைக் குழு, ஏற்கெனவே இருந்ததை இந்த அரசு மறுபடியும் பரிசீலனை செய்து அதற்கு உயிர் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு வீரபாண்டி சோ. ஆறுமுகம்** விரைவில் தேர்தல் வர இருக்கிறது. ஒரு வேளை தேர்தல் தள்ளிப் போனால் உங்களுடைய யோசனையைப் பரிசீலிக்கலாம்.



**திரு. கோ. பூவராகன்** : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே கொசு ஒழிப்பிற்காக 2-1/4 கோடி ரூபாய் செலவிட இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக பொதுச் சுகாதார அமைப்பிலே இருக்கின்றவர்கள் தான் இந்தப் பணியைக் கவனிக்கின்றார்கள். அதனாலே சரியான முறையிலே கொசுத் தொல்லையை ஒழிக்க முடியவில்லை. தனியாக ஒரு அமைப்பை ஏற்படுத்தி, அந்தக் கொசுத் தொல்லையை ஒழிப்பதற்கு—3 மாத கால அவகாசம் கொடுத்தாலே போதும் என்று சொல்லுகிறார்கள். அதைச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா? அடுத்து பஞ்சாயத்து ஒன்றியங்களிலே பழுதடைந்த மின்சார மோட்டார்கள் இருக்கின்றன. அவற்றை ரிப்பேர் செய்வதற்கு ஐ.டி.ஐ. படித்த ஏராளமான மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த வேலை வாய்ப்பு கொடுத்தால் சரியாக இருக்குமா என்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். மூன்றாவதாக ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலேயும் கிராம சேவக்குகள்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அடுக்கடுக்காக நீங்கள் பேசிக்கொண்டே இருப்பதற்கு இது நேரமும் அல்ல. அது பொருத்தமும் அல்ல.

**திரு. கோ. பூவராகன்**: பஞ்சாயத்து ஒன்றியங்களிலே பணியாற்றக்கூடிய கிராம சேவக்குகள் ஏற்கெனவே 2 ஆண்டுகள் பயிற்சி பெற்றவர்கள். அவர்களை கிளார்க்காக வேலை பார்ப்பதையும், ஏற்கெனவே கிளார்க் வேலை பார்த்தவர்கள் கிராம சேவக்குகள் வேலை பார்ப்பதாகவும் இருக்கும் நிலைமையையும் மாற்றி உத்திரவிட முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்**: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்பட்டு பிறகு முடிவு எடுக்கப்படும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வாரம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விஷயத்தை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். அதாவது பஞ்சாயத்துகளிலும் பஞ்சாயத்து யூனியன்களிலும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு சம்பந்தமாக ஏற்கெனவே அவர்கள் ஒத்துக் கொண்டிருந்தார்களே அது விஷயமாக முதலமைச்சரோடு மற்ற அமைச்சர்களும் கலந்து பேசப்பட்டதா? அப்படி பேசப்படாவிட்டால் மீண்டும் பேசி பெண்களுக்கும், அரிசனங்களுக்கும் இட ஒதுக்கீடு சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா? அத்தோடு ஏற்கெனவே போட்டிருந்த நியமன உறுப்பினர்கள் இருக்கிறார்களே அவர்களுக்கு ஓட்டுரிமை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: நியமன உறுப்பினர்களைத் தான் இப்போது நாம் நீக்க சட்டம் கொண்டு வர இருக்கிறோம், அது தேவையில்லை என்று. அவர்களுக்கு ஓட்டுரிமை வைக்கத் தேவையில்லை. இன்னொன்று பெண்களுக்கு இட ஒதுக்கீடு பற்றியும் கேட்டார்கள். அது அரசாங்கத்தினுடைய ஆய்விலே இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவை தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் ஜி. ஜி. குருமூர்த்தி, என். பழனிவேல் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. மா. சுந்தரதாஸ் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண். 28 சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகமும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,42,70,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானிய கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முற்பகல் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் இன்று மாலை 4 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-28 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(பிற்பகல் 4-00)

மாலை 4-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.



5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) ''இந்திய உழவர்—உழைப்பாளர் கட்சி'' பேரவையில் தனி அணியாகச் செயல்படுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சேலம் மாவட்டம் கபிலர்மலைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. கே. ஏ. மணி அவர்களை சட்டமன்றப் பேரவையில் ''இந்திய உழவர் உழைப்பாளர் கட்சியின்'' சார்பாக ஒரு தனி அணியாக இயங்க அனுமதி அளிக்கிறேன்.

(இ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1989-90 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்:

1. திரு. மு. இராமநாதன்
2. திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி
3. திரு. சி. சண்முகம்
4. திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை
5. திரு. சு. குருநாதன்
6. திரு. கு. பிச்சாண்டி
7. டாக்டர் காஞ்சனா கமலநாதன்
8. திருமதி எஸ். பி. சற்குணம்
9. திருமதி யசோதா செல்லப்பா
10. திரு. ஆர். அண்ணாநம்பி
11. திரு. வி. பி. சந்திரசேகர்
12. திரு. மெ. ஆண்டி அம்பலம்

13. திரு. மா. சுந்தரதாஸ்

14. திரு. எஸ். ஏ. தங்கராஜன்

15. திரு. பா. அப்துல் சமத்

16. திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்

முறையான வேட்புத் தாள்கள் கொடுத்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமமாக இருப்பதால் 1989-90ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படித் தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், பொதுக் கணக்குக் குழு தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோரும் தங்கள் அலுவல் காரணமாக இக் குழுவின் உறுப்பினர்களாவர்.

இப்பேரவையின் 196வது விதியின் கீழ் திரு. மு. இராமநாதன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(ஈ) பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1989-90 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்குக் கீழ்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்:

1. திரு. அன்பில் பொய்யாமொழி

2. திரு. செ. இராமலிங்கம்

3. திரு. ஏ.எம். இராமசாமி

4. திரு. ஆர். எட்டியப்பன்

5. திரு. அ. கணேசமூர்த்தி

6. திரு. சா. சிவசுப்பிரமணியன்

7. திரு. செங்கைசிவம்

8. திரு. ந. சௌந்திர பாண்டியன்

9. திரு. பேரூர் ஆ. நடராசன்



10. திரு. மு. க. ஸ்டாலின்

11. திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்

12. திருமதி ரமணி நல்லதம்பி

13. திரு. எஸ். டி. உகம்சந்த்

14. திரு. துரை ராமசாமி

15. திரு. உ. ரா. வரதராசன்

16. திரு. சோ. அழகர்சாமி

நியமனம் செய்யப் பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப் பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1989-90 ஆம் ஆண்டிற்சான பொது நிறுவனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படித் தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கிறேன் மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 213-ன் கீழ் திரு. சா. சிவசுப்பிரமணியன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(உ) உரிமைக் குழு (Committee of Privileges) உறுப்பினர்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1989-90 ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டப் மன்றப் பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு கீழ்க்கண்ட பதினான்கு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்:

1. திரு. கா. அண்ணாதுரை

2. திரு. சா. அழகுவேலு

3. திரு. அ. இராசேந்திரன்

4. டாக்டர் துரை கிருஷ்ணமூர்த்தி

5. திரு. துரை சந்திரசேகரன்

6. திரு. இ. புகழேந்தி

7. திரு. நா. கணேசமூர்த்தி

8. திரு. ப. காளியப்பன்

9. திரு. வெ. கோவிந்தன்

10. திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்

11. திரு. எஸ். திருநாவுக்கரசு

12. திரு. எம். கே. கரீம்

13. திரு. ரா. சொக்கர்

14. திரு கோ. வீரையன்

முறையாக நியமனம் செய்யப் பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப் பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1989-90ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவிற்கு இவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர், எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் பேரவைத்துணைத் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவையின் 227(3)வது விதியின் கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இக்குழுவின் தலைவராக இருப்பார்.

## 6. மானியக் கோரிக்கைகள் 1989-90 விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### கோரிகை எண் 36.

### பாசனம்

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 36— பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 95,90,16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.



திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடலோரப் பகுதிகளில் உள்ள ஆறுகள் மூலம் கடல் நீர் உள்ளே வராமல் தடுக்க சட்டர்கள் போட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 36- பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 95,90,16,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிற்றாறு பட்டணம்கால் பாசனத் திட்டத்தில் தூர்ந்து கிடக்கும் கால்வாய்களைத் தூர் வாரிப் பழுது பார்ப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 95,90,16,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

### கோரிக்கை எண். 37

### பொதுப் பணிகள்—கட்டிடங்கள்

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,23,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,23,21,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. செ. நூர்முகமது ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை நகராட்சி சந்தையில் புதிய கட்டிடங்களைக் கட்டும் பணியைத் துவக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 37- பொதுப் பணிகள்— கட்டிடங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,23,21,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

கோரிக்கை எண். 38

பொதுப் பணிகள்— பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 38—பொதுப் பணிகள்— பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 30,19,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 38— பொதுப் பணிகள்— ணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் என்ற தலைப் ன்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 30,19,23,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையில் நீண்ட காலமாகப் பணி யாளர்கள் வரையறை செய்யப்பட்டு பணி நிரந்தரம் செய்யப் பட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 38— பொதுப் பணிகள்— பணி யாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 30,19,23,000இல் ரூ.100 குறைக்க வேண்டும்.''



கோரிக்கை எண்: 52.

பாசனம் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 53,03,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. பொன். விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 52—பாசனம் குறித்த மூல தனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 53,03,23,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டம் (1) கோட்டம் பட்டி கல்லார் அணை, (2) பாபர்நாயக்கம்பட்டி கோலியார் அணை; (3) வள்ளி மதுரை வறட்டையார் ஆகிய அணைத் திட்டங்கள் அமுலாக்கப்பட வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 52— பாசனம் குறித்த மூல தனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 53,03,23,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

கோரிக்கை எண்: 53

பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண்: 53—பொதுப் பணிகள்— கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 26,54,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

[1989 ஏப்ரல் 19

**திரு. பொன். விஜயராகவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 53—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 26,54,79,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி நகரில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு வசதியான நவீன முறையில் பயணியர் விடுதி கட்ட வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 53—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 26,54,79,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்பேரில் இவ்வரசுக்கு கோரிக்கை 36— பாசனம் என்பதன் கீழ் ரூ. 95,90,16,000-க்கு மேற்படாமலும், கோரிக்கை 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்பதன் கீழ் ரூ. 53,03,23,000-க்கு மேற்படாமலும், கோரிக்கை 37 —பொதுப் பணிகள்-கட்டிடங்கள் என்பதன் கீழ் ரூ.3,23,21,000 -க்கு மேற்படாமலும், கோரிக்கை 38 —பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் என்பதன் கீழ் ரூ.30,19,23,000-க்கு மேற்படாமலும், கோரிக்கை 53—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்பதன்கீழ் ரூ. 26,54,79,000-க்கு மேற்படாமலும் தொகை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தற்போதுள்ள பாசன அமைப்புகளை விரிவாக்குவதற்கும், அவற்றை இயல்பாகப் பராமரிப்பதற்கும் ஆகும் செலவும், வெள்ளம்— புயல் காரணமாக ஏற்படும் செப்பனீட்டுச் செலவும் கோரிக்கை 36— பாசனம் என்பதன் கீழ் வழங்கப்படும் மானியக் கோரிக்கையிலிருந்து ஈடு செய்யப்படும். புதிய பாசனத் திட்டங்கள், தொழிற்சாலைகளுக்கு நிலத்தடி நீர் வழங்கும் திட்டங்கள் ஆகியவற்றின் செலவு கோரிக்கை 52-- பாசனம் குறித்த மூலதன செலவு என்பதன் கீழ் பெறும் மானியத்திலிருந்து ஈடு செய்யப் படும்.



1989 ஏப்ரல் 19] [திரு. துரைமுருகன்]

(பிற்பகல் 4-10)

கட்டிடங்கள் ரூபாய் 1 இலட்சம் வரையிலான பல்வகைப் பணி
கள் மற்றும் மூலப் பணிகளுக்கு கட்டிடங்கள் கட்டுமானம் மற்றும்
மேம்பாடு தற்போதுள்ள கட்டிடங்கள் இயல்பான பராமரிப்பு
ஆகியவை போன்ற செப்பனிடும் பணிகளுக்கு செய்யப்படும்
நிதி ஒதுக்கீடு கோரிக்கை எண். 37-ன் கீழ் வருகிறது.
பொதுப்பணியின் கீழ் வருகிற கட்டிடங்களின் சொத்து வரி கட்டுவ
தற்கான செலவும் இந்த கோரிக்கையில் அடங்கும். கோரிக்கை
எண். 38—பொதுப் பணித்துறை நிர்வாகம், கருவிகளும், தள
வாடமும் பணியாளரமைப்புக்கு மொத்த செலவு இக்கோரிக்கை
யின் கீழ் வருகிறது. புதிய கட்டிடப் பணிகளுக்கு தனியாக ஆகும்
செலவு ரூபாய் 1 இலட்சத்திற்கு மேற்படும் ஆயின் அல்லது தனித்
தனியாக இந்த அளவுக்கு குறைவாக செலவு ஏற்படுமாயினும்
திட்டத்தின் ஒரு பகுதியாக அமைத்து ரூபாய் 5 இலட்சத்திற்கு
மேல் செலவாகும் ஆயின் அந்தப் பணிகள் மீதான செலவு
கோரிக்கை எண். 53 என்பதன் கீழ் பெறும் மானியத்தில் இருந்து
செலவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவையின் முன் வைக்கப்பெற்றுள்ள கொள்கை விளக்கக்
குறிப்புகளை** நான் படித்ததாகக் குறிப்பேட்டில் ஏற்றுக்கொள்ள
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோ. வீரையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்
சர் அவர்களால் இங்கே முன் மொழியப் பட்டு இருக்கக்கூடிய
5 மானியக் கோரிக்கைகள் மீது நான் சார்ந்திருக்கக்கூடிய மார்க்
சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற
விழைகிறேன்.

குறிப்பாக இதிலேயே கூறப்பட்டிருக்கிறது. குடிமராமத்து
என்பது மிகப் பெரும் அளவுக்கு பின்தங்கி செயல்படாமல் போய்
இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய பொதுப்
பணித்துறை அமைச்சர் அவர்கள், உள்ளாட்சித்துறை அமைச்சர்
அவர்கள், உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட
குடந்தையில் நடைபெற்ற ஒரு கருத்து அரங்கில் வேளாண்மைத்
துறை அமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள் குடிமராமத்து
என்பது எங்களுக்கு மறந்து போய்விட்டது என்று. குடிமரா
மத்து என்னதென்று நாங்கள் தெரிந்து கொள்வதற்கு எங்களு
டைய பிள்ளைகளுக்கு இது தான் குடிமராமத்து என்று காட்டுவ
தற்கு இந்த ஆண்டு குடிமராமத்துப் பணிகள் துவக்கப்பட வேண்
டும் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்த முறையில் இந்த
குடிமராமத்து வேலைகள் செய்வது என்பது பெரும் அளவுக்கு
அந்த வேலைகளை துவக்குவதற்கு முன்னால் நான் மாண்புமிகு
பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு உங்கள் மூலமாக

** -ம் பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

கேட்டுக்கொள்ளுவது அரசுக்குச் சொந்தமான அந்த வாய்க் கால்கள், கால்வாய்கள் எங்கெங்கே இருக்கின்றது என்று முதலில் கண்டுபிடித்து நீங்கள் சர்வே செய்து அந்த இடங்களை உறுதிப் படுத்திக்கொண்டு செய்யவேண்டும். ஏன் என்றால் இன்றைக்கு அவைகள் எங்கே இருக்கின்றது என்று கண்டுபிடிக்க முடியாத அள வுக்கு அவைகள் இல்லாமல் போய் இருக்கின்றன. அவைகளை முதலில் சர்வே செய்து கண்டுபிடித்து அந்த குடிமராமத்து வேலைகளை இந்த கோடையில் துவக்கி இந்த ஆண்டு செய்து தருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த கழிமுக சீரமைக்கும் பணியை நீங்கள் மேலே இருந்து அந்த சீரமைக்கும் பணியைத் துவக்கி கொண்டு போகா மல் கீழே இருந்து கடைகோடி பகுதியில் இருந்து அந்த கழிமுக சீரமைக்கும் வேலையைத் துவக்கினால் உதவியாக இருக்கும். அந்த முறையில் அந்த வேலையை செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கடலில் போய்ச் சேருகிற ஆறுகள் மூலம் கடலின் உப்பு நீர் உள்ளே வந்து விளை நிலங்கள் பாதிப்புக்கு உள்ளாகி விடுகின்றன. எனவே கடல் ஓரத்தில் இருக்கக்கூடிய பகுதிகளில் உள்ள அந்த ஆறுகளுக்கு நீங்கள் ஷட்டர்கள் போட்டு கடல் நீர் உள்ளே வராமல் அதைத் தடுத்து வைக்கும் முறையில் கடல் ஓரங்களில் உள்ள ஆறுகளுக்கு ஷட்டர்கள் போடுவதன் மூலமாக கடல் நீர் உள்ளே போகாமல் அதைத் தடுக்கமுடியும். அந்த முறையில் முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதிலே மிகப்பெரிய முக்கியமான ஒரு பிரச்சினை ; காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி நம்முடைய கொள்கைக் குறிப்பிலே கூறப் பட்டிருக்கிறது. அதனால் பெரும் அளவுக்கு தஞ்சை மாவட்டம் மட்டும் அல்ல, 3, 4 மாவட்டங்கள் மட்டும் அல்ல, அதனால் நஷ்டப்படக் கூடியவர்கள் லட்சோப லட்ச மக்கள் மட்டும் அல்ல, தமிழகத்தினுடைய பொருளாதாரமும் பாதிக்கப்படுகிறது. தமிழகத்தினுடைய உணவு உற்பத்தியும் இதனால் பாதிக்கப்படு கிறது. தமிழகத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படுவதற்கு இத னால் வாய்ப்பு இருக்கிறது. ஏறத்தாழ ஒரு ஆண்டுக்கு 180 கோடி ரூபாய்க்கு உற்பத்தி இழப்பு ஏற்படுகிறது. கடந்த ஆண்டில் கூட தண்ணீர் திறக்கப்படாததன் காரணத்தால் 5 லட்சம் ஏக்கர் நிலங்கள் ஒரு போக விவசாயம் செய்ய முடியாமல் போனதன் விளைவாக அந்த அளவுக்கு உற்பத்தி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அதனால் கிடைக்கக்கூடிய வேலை வாய்ப்பு இழப்பு ; அதனால் கிடைக்கக்கூடிய பொருளாதார இழப்பு ; உணவு தானிய இழப்பு இவைகள் எல்லாம் சேர்ந்து ஏற்படுகிறது. எனவே அதை சீக்கிரம் தீர்ப்பதற்கு நாம் முயற்சி செய்தாக



வேண்டியிருக்கிறது. எனவேதான் நான் குறிப்பிட விரும்புவது,
ஆரம்ப காலத்தில் நமக்குக் கிடைத்துக் கொண்டிருந்தது.
எனக்குத் தெரிந்தவரையில் 380 டி.எம்.சி. தண்ணீர் ஒரு ஆண்
டுக்குக் கிடைத்துக் கொண்டிருந்ததாக நான் கருதுகிறேன்.
அப்படி கிடைத்துக் கொண்டிருந்தது. சமீப ஆண்டுகளில் எனக்குக்
கிடைத்த விவரப்படி 1986-87-ஆம் ஆண்டில் நமக்குக் கிடைத்த
தண்ணீர் 160 டி.எம்.சி. தான் என்று நான் அறிகிறேன். அதைப்
போலத்தான் 1987-88-ல் 80 டி.எம்.சி. தண்ணீர் தான் நமக்
குக் கிடைத்திருக்கிறது. அதைப்போல 1988 89-ல் 165 டி.எம்.சி.
வரையிலே கிடைக்கப் பெற்றிருக்கிறது. இப்படி அந்தப்
பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதால் ஒரு நிச்சயமற்ற
நிரந்தரமற்ற நிலை நமக்கு நீடிக்கிறது. எனவே தான் அங்கே
இருக்கக்கூடிய தண்ணீரிலே நமக்கு எவ்வளவு பங்கு அவர்கள்
சொல்கிறார்கள், காவிரித்தண்ணீர் என்பது எங்களுக்குச் சொந்த
மானது அதிலே உங்களுக்கு சொந்தமில்லை. ஆகவே
இருந்தால் தருவோம், இல்லையென்றால் இல்லை என்று அவர்கள்
சொல்கிறார்கள், 380 டி.எம்.சி. தண்ணீர் எங்களுக்கு உண்டு என்று
நாம் 380 டி.எம்.சியிலேயே நின்று கொண்டு இருப்பதும், இந்தப்
ரச்சினை தீர்க்கப்படாமல் காலம் தாழ்த்துவதுமாக இல்லாமல்
கிடைக்கிற தண்ணீர் எவ்வளவு கிடைக்கிறதோ அந்தத் தண்ணீ
ரிலே நிச்சயமாக தமிழகத்தினுடைய பங்கு எவ்வளவு கர்நாட
கத்தினுடைய பங்கு எவ்வளவு என்று தீர்மானித்து அந்தத்
தண்ணீரைப் பெறுவதற்கான முயற்சிகளை நாம் எடுப்போமா
னால் இவ்வளவு தண்ணீர்தான் நமக்குக் கிடைக்கிறது என்று
சொன்னால் அதற்கு ஏற்ற முறையிலே எப்படி நாம் இங்கே
நிலைமைகளை சீர் திருத்திக் கொள்ள முடியும் என்று தீர்மானிக்க
முடியும். முந்தைய அளவிற்கு தண்ணீர் அங்கே இப்போது
இல்லையென்பது உண்மைதான். இருக்கிற தண்ணீரில் எவ்
வளவு தண்ணீர் இருந்தாலும் எத்தனை டி.எம்.சி. தண்ணீர்
இருக்கிறதோ அத்தனை டி.எம்.சியிலே தமிழகத்தினுடைய பங்கு
எவ்வளவு என்று பேசி முடித்து அதிலே குறைத்துக் கொள்ள
வேண்டி வந்தாலும், அதை இருக்கிறவர்கள் தீர்மானிக்க வேண்
டும். ஏனென்றால், 1976-ம் ஆண்டு ஜனவரி மாதத்திலே தமி
ழக அரசும் கர்நாடக அரசும் பேசி முடித்து கிட்டத்தட்ட ஒரு
நெருக்கத்திற்கு வந்து, அந்த பழைய அக்ரிமெண்டிலே இருக்கக்
கூடிய தண்ணீருடைய அளவை ஓரளவு குறைத்துக்கொண்டு
தீர்மானிப்பது என்று ஒரு முடிவிற்கு நெருங்கி வந்ததாகவும்
அந்த முடிவு எட்டப்படுவதற்கு முன்னாலேயே அன்றிருந்த அரசு
கலைக்கப்பட்டு விட்டதனாலே அந்த முடிவு நிறைவேற்றப்படா
மல் விடுபட்டுப் போனதாகவும் சொல்லப்படுகிறது. எனவே
அந்த இடத்திலேயிருந்தாவது தொடங்கி பேச்சுவார்த்தையை
மேற்கொள்ள வேண்டும். அவர்கள் நிற்கக்கூடிய இடத்திலே
அவர்கள் நின்றுகொண்டு, நாம் நிற்கக்கூடிய இடத்திலே நாம்
நின்றுகொண்டு பேச்சுவார்த்தை என்று பேசினால், பேச்சுவார்த்
தைக்கு தீர்வே இருக்க முடியாது. எனவே யதார்த்தத்தில்,

இன்றைக்கு அங்கே இருக்கக்கூடிய தண்ணீரின் அளவு எவ்வளவு,
அந்தத் தண்ணீரை வைத்து நம்முடைய பங்கு அதிலே எவ்வளவு
என்று, அந்தத் தண்ணீரைப் பெறுவதற்கான முறையிலே நம்மு
டைய அரசு ஒரு ஆக்கபூர்வமான ஒரு தீர்வு காணுவதற்கான
முறையிலே ஒரு அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டுமென்று
நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு எங்கேயும் கடுமையான வறட்சிக்கு நாம் ஆளாகி
இருக்கிறோம். குடி தண்ணீரே கிடைக்காத ஒரு நிலைமை இன்
றைக்கு இருக்கிறது. காவிரிப் பாசனப் பகுதிகளிலும் கூட குடி
தண்ணீர் இல்லை. தமிழகத்தின் மற்றப் பகுதிகளிலும் குடிதண்
ணீர்ப் பற்றாக்குறை என்பது ஏற்பட்டிருக்கிறது. இவையெல்லாம்
சொல்லும்போது, இவற்றுக்கு எந்தவிதமான சம்பந்தமும்
இல்லையென்று சொன்னாலும், ஒன்றையொன்று சேர்த்துச்
சொல்வதற்காகச் சொல்ல வேண்டியிருக்கிறது.

மழை குறைவதற்கு, மழை இல்லாமல் போவதற்கு, பருவ
மழை பாதிக்கப்பட்டதற்கு காடுகள் அழிந்துபோய் விட்டதுதான்
காரணமென்றும் ஆகவே காடுகளை வளர்க்க வேண்டுமென்றும்
சொல்கிறார்கள். எனக்கு அதிலே ஆட்சேபணை இல்லை.
இருந்த காடுகள் முழுவதும் எப்படி அழிக்கப்பட்டன என்பதை
நாம் திரும்பிப் பார்த்தால் தெரியும். ரிசர்வ் பாரஸ்டாக இருந்
தது முழுவதும் பிளான்டேஷனாக மாற்றப்பட்டுவிட்டது. மழை
பெய்ய வேண்டிய இடத்தில் இருக்க வேண்டிய காடுகள் முழுவதும்
அழிக்கப்பட்டு அது பூராவும் பிளான்டேஷனாக மாற்றப்பட்டு
இருப்பதும் கொஞ்சம் நஞ்சம் மழை பெய்தாலும் அந்த மழைத்
தண்ணீரைத் தேக்கி வைத்திருக்கக் கூடிய ஏரிகள் முழுவதும்
சோஷியல் பாரஸ்ட் என்ற பெயராலே கருவக்குட்டைகளைப்
போட்டு அந்த ஏரிகள் முழுவதும் தூர்ந்து போவதும்ஒரு காரணம்.
மழை பெய்யக் கூடிய இடத்தில் ரிசர்வ் பாரஸ்ட் இல்லை. கொஞ்ச
நஞ்சம் மழை பெய்தாலும் தண்ணீரைத் தேக்கி வைக்கக்கூடிய
இடங்களில் உள்ள ஏரிகள் முழுவதும் பாரஸ்டாக மாற்றப்பட்டு
விட்டன. அப்படிப்பட்ட ஒரு நிலையிலே அதற்கு முடிவு காண
வேண்டும். ஏனென்றால் சோஷியல் பாரஸ்ட்களை வளர்க்க
வேண்டுமானால் அதற்கு ஏரிகளைப் பயன்படுத்தி ஏரிகளில்தான்
அந்த சோஷியல் பாரஸ்ட்டை வளர்க்க வேண்டுமென்ற முறை
யிலே நீங்கள் முயற்சி எடுக்காமல், சோஷியல் பாரஸ்ட்டை
நீங்கள் வேறு இடங்களில் வளர்க்கலாம். ஏரிகளை அதற்குத்தேர்ந்
தெடுத்து, ஏரிகளை சோஷியல் பாரஸ்டாக மாற்ற வேண்டிய
அவசியம் இல்லை. இப்படி நான் சொல்லும்போது, சோஷியல்
பாரஸ்ட்டுகளை வளர்ப்பதற்கு நான் எதிரானவன் என்று நீங்கள்
தயவுசெய்து கருதக் கூடாது. உங்களுக்கு நான் இந்த நேரத்திலே
கூறவேண்டுமென்று சொன்னால் என்னுடைய தொகுதியில்
நாகை ஊராட்சி ஒன்றியத்தில் பிரதாபநவபுரம் என்ற ஊராட்சி
சோஷியல் பாரஸ்ட்டை வளர்ப்பதில் இந்தியாவிலேயே முதல்



பரிசை நாங்கள் பெற்றிருக்கிறோம் என்பதை மிகுந்த பெரிய
பெருமையோடு நான் சொல்லிக்கொள்ள முடியும். அந்த அள
விற்கு சோஷியல் பாரஸ்ட் வேண்டும் என்பது ஒன்று. ஆனால்
ஏரிகள் பூராவையும் அதற்காக மாற்றி கொஞ்ச நஞ்சம் பெய்யக்
கூடிய மழைத் தண்ணீரைத் தேக்கி வைத்துக் கொள்வதற்கு
சந்தர்ப்பம் இல்லாமல் ஏரிகளை ஆக்கக்கூடாது என்று இந்த
நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். காடுகளை
வளர்க்க வேண்டுமென்பது ஒரு பக்கம் இருக்கக்கூடிய நேரத்தி
லேயே, இருக்கக்கூடிய காடுகளை அழிக்கக் கூடாது என்பதிலும்
இந்த அரசு உறுதியாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

தமிழகத்திலே ஓடக்கூடிய பஸ்களையெல்லாம் பார்க்கும்போது
பின்னாலே அந்த பஸ்களிலே எழுதி வைத்திருக்கிறார்கள்,
" வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்பீர் " என்று. பஸ்களிலே மரம்
வளர்க்கிறார்கள். ஆனால் ரோடுகளிலே இருக்கக்கூடிய மரங்
களையெல்லாம் வெட்டுவீர்கள் என்று நடைமுறையிலே வெட்டிக்
கொண்டிருக்கிறார்கள். " வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்பீர் பஸ்
களிலே " நடைமுறையிலே "ரோடுகளிலே இருக்கக்கூடிய மரங்
களையெல்லாம் வெட்டுவீர்கள் ".

நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் வைகை நதித்
தொடக்கத்தில் இருக்கிற வரிசை நாட்டில் ஏராளமான மரங்கள்
இருந்தன. அந்த மரங்களை எல்லாம் வெட்டியது யார்?
எப்படி வெட்டப்பட்டன? அமெரிக்க நாட்டிலிருந்து வந்தவர்கள்
வெட்டினார்களா? அல்லது ஐரோப்பிய நாட்டிலிருந்து
வந்தவர்கள் வெட்டினார்களா? வரிச நாட்டுப் பகுதியிலே இருந்த
மரங்கள் எல்லாம் இன்றைக்கு அழிக்கப்பட்டு விட்டன. யாரால்,
எப்படி அழிக்கப்பட்டது?

(பிற்பகல் 4-20)

அதைப் போன்று திருச்சுழி முதல் அரப்பங்காடு வரையில்
மாநில அரசுக்குச் சொந்தமான நெடுஞ்சாலையில் பெரிய
மரங்கள் ஏராளமாக இருந்தன. அந்த மரங்கள் எல்லாம் இன்
றைக்கு மொட்டை, மொட்டையாகக் காட்சி அளிக்கின்றன.
அதற்கு என்ன காரணம்? வாள் வைத்து அறுத்து மொட்டை
யாக்கியிருக்கிறார்கள். யாரால் அறுக்கப்பட்டது? எப்படி
வெட்டப்பட்டது? எங்கிருந்து வந்தவர்கள் வெட்டினார்கள்?
இப்படி ரோட்டோரத்தில் இருக்கின்ற மரங்கள் எல்லாம் இன்
றைக்கு வெட்டப்பட்டுவிட்டன. காடுகளில் இருந்த மரங்கள்
எல்லாம் அழிக்கப்பட்டுவிட்டன. ஃபாரஸ்ட் பூராவும் இன்றைக்கு
பிளான்டேஷனாக மாற்றப்பட்டு விட்டது. பிளான்டேஷனாக

மாற்றிவிட்டு, இங்கே காடு இல்லை, காடு இல்லை என்று சாதாரணமாக கிராமங்களில் பேசிக்கொண்டிருப்பது எந்தவகையில் நியாயமானது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதிலே கூட இருக்கிற ஆக்கிரமிப்புகளை எல்லாம் அகற்ற வேண்டும். ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென்று சொல்லும்போது அங்கே குடிசைகள் போட்டு வாழ்ந்து கொண்டிருக்கிற ஏழை எளிய மக்களின் மீது பாய்ந்துவிடக் கூடாது. அதைப் போன்று ஏரிகளில், வரத்து வாய்க்கால்களில் இருக்கிற ஆக்கிரமிப்புகளையும் அகற்றி, ஆழப்படுத்த வேண்டும். ஏரிகளை ஆழப் படுத்த வேண்டும், ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த வேண்டும் என்பதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. இப்படி பாசனப் பகுதிகளில் இருக்கிற ஆக்கிரமிப்புகளை எல்லாம் அகற்ற வேண்டுமென்று சொல்லுகிறபோது சாதாரண ஏழை எளிய மக்கள் போட்டிருக்கிற குடிசைகள் மீது பாய்ந்து, அவர்களை வெளியேற்ற நம்முடைய அதிகாரிகள் முன்வருவார்கள். ஏழை எளியவர்களை அப்புறப்படுத்துவதிலே அவர்கள் உற்சாகமாக இருப்பார்கள்.

அதே நேரத்தில் போரூர் ஏரி, பொத்தேரி, மேல் மருவத்தூர் ஏரி இப்படி எண்ணற்ற ஏரிகள் இன்றைக்கு கட்டடங்களாக, மாடிக் கட்டடங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. அதற்கு யார் அனுமதி கொடுத்தார்கள்? இப்படி பெரும் பெரும் மனிதர்கள் ஆக்கிரமிப்பு செய்து, அங்கே பெரிய பெரிய கட்டடங்களைக் கட்டியிருக்கிறார்கள். அதை எல்லாம் எப்படி அகற்றப்போகிறார்கள்? மாடிக் கட்டடங்களாகவும், கல்விக் கூடங்களாகவும் வேறுவகைப் பயன்களுக்காகவும் மாற்றியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகளை இப்போது அகற்ற முடியாது என்று சொல்வார்கள். ஆனால் ஏழை எளிய மக்களின் குடிசைகளை அகற்றுவது சுலபம். அப்படி அகற்றும்போது ஏழை எளிய மக்கள் துன்புறாத அளவுக்கு அக்கரை காட்ட வேண்டும். ஏரிகளைச் சீரமைக்கும்போது, ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தும் போது ஏழை எளியவர்களின் குடிசைகள் இருந்தால் அவர்களுக்கு மாற்று இடம் கொடுத்து சீரமைப்புச் செய்யுங்கள்; வேண்டாம் என்று சொல்லவில்லை. அந்த வகையிலே தமிழ்நாடு பூராவும் இருக்கக்கூடிய ஏரிகள் முழுவதையும் ஆழப்படுத்தி, அகலப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். பெய்யக்கூடிய மழை நீர் வீணாகாமல், அந்த நீர் எங்கும் போகாமல் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

குறிப்பாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள். ஐரோப்பியப் பொருளாதார உதவித் திட்டத்தின் கீழ் 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே இரண்டாவது ஆண்டுத் திட்டத்தில் 24.65 கோடி ரூபாய் செலவு செய்ய திட்டமிட்டிருக்கிறார்கள். ஆனால் ஏற்கெனவே மூன்றாண்டு காலத்



தில் 23 கோடி ரூபாய் செலவிடப்பட்டுவிட்டது என்று சொன்னால் இன்னும் ஒரு கோடியே சொச்சம்தான் இருக்கும். அதிலும் இப்போது மதிப்பீடு உயர்ந்திருக்கிறது. 40 கோடி ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது என்றும் போட்டிருக்கிறார்கள். இது இன்றைக்கு இருக்கிற நிலைமையில் ' யானைப் பசிக்கு சோளப்பொரி போலத் தான் இருக்கும்.

தமிழ்நாட்டிலே 36,000-க்கு மேற்பட்ட ஏரிகள் பழுது பார்க்கப்பட வேண்டும், சீர் செய்யப்பட வேண்டும். இந்த ஏரிகள் எல்லாம் பொதுப் பணித்துறையின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். இன்றைக்கு சில ஏரிகள் பொதுப்பணித்துறையின் கீழ் இருக்கின்றன; சில ஏரிகள் ஜமீன் ஏரிகளாக இருக்கின்றன; சில ஏரிகள் வருவாய்த் துறை ஏரிகளாக இருக்கின்றன. இப்படி இல்லாமல் அனைத்து ஏரிகளையும் பொதுப்பணித் துறையின் கீழ் கொண்டுவந்து, ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, கரைகளை எல்லாம் பலப்படுத்த வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் வறட்சி நிவாரணம் என்ற பெயரால் ஏரிகள் ஆழப்படுத்தப்படுவதற்கு பணம் ஒதுக்கிய விவரங்களை எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். ஏரிகளை எப்படி ஆழப்படுத்தியிருக்கிறார்கள் என்று பார்த்தால் தெரியும். கரை ஓரத்தில் இருக்கிற மண்ணை அள்ளி வரப்புமேலே போட்டு அல்லது கரைமேலே போட்டு, பூசி, வெள்ளை அடித்து வறட்சி நிவாரண வேலை செய்திருக்கிறார்கள். அதைத் தவிர ஏரிகளை ஆழப்படுத்தவில்லை; கரைகளைப் பலப்படுத்தவில்லை.

உதாரணத்திற்குச் சொல்கிறேன். மதுராந்தகம் ஏரியின் கரைகளை அழகுபடுத்துகிறோம் என்று சொல்லி, மரங்களை வைத்து அழகுபடுத்துவதற்குப் பதிலாக மரங்களை எல்லாம் வெட்டி அழகுபடுத்திய காட்சிகள் எல்லாம் தெரியும். அப்படிப் பட்ட நிகழ்ச்சிகளைத் தடுத்து, ஏரிகளை ஆழப்படுத்தி, கரைகளைப் பலப்படுத்தி வரக்கூடிய தண்ணீரை எல்லாம் சேமித்து வைத்து, வரத்து வாய்க்கால்களையும் சீர்படுத்த தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, நிலத்தடி நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்று சொல்லும்போது மாண்புமிகு மின்சாரத் துறை அவர்கள் இங்கே ஒரு விவரத்தைச் சொன்னார்கள். சரியாகத்தான் இருக்கும் என்று நினைத்தோம். ஆனால் ஊரில் சென்று பார்க்கும்போதுதான் அப்படி இல்லை என்பது தெரியவந்தது. எந்த நேரம் மின்சாரம் வரும் என்று தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பகலிலே 4 மணி நேரமும், இரவிலே 6 மணி நேரமும் ஆக 10 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படும் என்று சொன்னார்கள். இங்கே சொல்வதற்கும் அங்கே இருப்பதற்கும் எந்த விதமான உறவும் இல்லை;

தொடர்பும் இல்லை. எப்போது வருகிறது, எப்போது போகிறது என்று தெரியாமல் விவசாயிகள் மிகப்பெரும் வேதனையோடு இருக்கிறார்கள்.

எனவே அந்த நிலத்தடி நீரைப் பெறுவதற்கு பொதுப் பணித் துறையும், மின்சாரத் துறையும் இணைந்து அந்த விவசாயிகளைப் பாதுகாக்க 10 மணி நேரம் கூட நான் கேட்கவில்லை. ஏனென்றால் உங்களுக்கு இருக்கக்கூடிய நெருக்கடி எனக்குத் தெரியும், 3 ஷிப்டாக மாற்றி 8 மணி நேரம் நிற்காமல் நிரந்தரமாக விவசாயிகளுக்குக் கொடுத்தால் அந்த விவசாயிகள் பயன் அடைய முடியும். நிலத்தடி நீரைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். அந்த வகையில் உதவ வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, வடாற்காடு மாவட்டம், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். 1974 ஆம் ஆண்டு மோர்தானா அணைகட்டுவதற்காக இன்றைய முதலமைச்சர் அன்றைய முதலமைச்சராக இருந்தபோது அடிக் கல் நாட்டப்பட்டது. அந்த முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார் என்பதற்காகவே இடையிலே அது நிறுத்தப்பட்டது. இப்போது மீண்டும் அன்றைய முதலமைச்சர் இன்றைய முதலமை ச்சராக வந்துவிட்டார் என்ற காரணத்தால் அந்தப் பகுதி மக்கள் இப்போதாவது அந்த அணை கட்டப்படும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றித்தர வேண்டும் என்று நான் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர் களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆண்டே அந்த வேலை யைத் துவக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சேலம் மாவட்டத்தில் வசிஷ்டா நதியில் பெரியேரி என்ற இடத்தில் ஒரு தடுப்பணை கட்ட வேண்டும்.

அடுத்து பைத்தூரில் வண்ணாத்திப்பாறையை இணைத்து ஒரு பெரிய ஏரி உண்டாக்க வேண்டும். சித்தேரிக்குத் தண்ணீரை கொண்டுவர சேலம் மாவட்டத்தில் உரிய முயற்சியினை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் நாகை வட்டத்தில் காமேஸ்வரன் என்ற மிகப் பெரிய ஆறு இருக்கிறது. அந்த ஏரியை ஆழப்படுத்தி கரையைப் பலப்படுத்துவதற்கான முயற்சி எடுக்க வேண்டும்.

மறவன் ஆறு, குதிரைச் சவுக்கன் ஆறு, காவேரி கொண்டான் ஆறு, சந்திரா நதி ஆகிய ஆறுகள் மராமத்து செய்யப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்த ஆறுகள் மராமத்து செய்யப்பட வேண்டும்.



வெள்ளை ஆற்றில் உடைப்பு எடுக்கும்போது அந்த ஊர் மக்கள் சேர்ந்து அடைப்பது,பிறகு அதையே நிர்வாகம் அடைத்த தாகக் கணக்கெழுதி பணம் எடுத்துக் கொள்கின்ற நிலைமையும் இருந்தது. எனவே அந்தக் கரைகள் உடைப்பு எடுக்கப்பட்ட இடம் இன்னும் அடைக்கப்படவில்லை. எனவே அந்த வெள்ளை ஆற்றின் கரையைப் பராமரிக்க வேண்டும்.

இன்னொன்று. அங்கே இறைவைப் பாசனம் இருக்கக்கூடிய பகுதிகளுக்குத் தண்ணீர் கொண்டுவர இந்த வெள்ளை ஆற்றில் சோழவத்தியாபுரம் பக்கத்தில் ஒரு தடுப்பு அணை கட்டி தண்ணீ ரைத் தேக்கி அதிலேயிருந்து கால்வாய் மூலமாக விழுந்தமாவடி, வேளாங்கண்ணி போன்ற இறைவைப் பாசனப்பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுக்க உரிய முயற்சியை எடுக்க வேண்டும்.

நம்முடைய பொதுப்பணித்துறையிலே ஏறத்தாழ 15 ஆண்டு களுக்கு மேலாக பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய என்.எம்.ஆர். என்று சொல்லப்படும் ஊழியர்கள் இன்னும் நிரந்தரமாக்கப் படாமல் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் தினக்கூலிகளாக. அந்த நிலையை மாற்றி அவர்களை நிரந்தரப் பணியாளர் களாக ஆக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதிலே இருக்கக்கூடிய இன்ஜினியர்கள் கூட இன்னும் நிரந்தரம் ஆக்கப்படாமல் தினக்கூலிகளாக இருக்கிறார்கள். அவர்களையும் நிரந்தரமாக்க வேண்டும்.

சர்வீஸ் கமிஷன் மூலமாக பொதுப்பணித்துறைக்கு 428 உதவிப் பொறியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டும் இதுவரையில் அவர்கள் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்கள் வெயிட்டிங் லிஸ்டிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்து ஆள் பற்றாக்குறை என்பது இல்லா மல் அரசுப் பணிகளைச் சிறப்பாகச் செய்ய வேண்டும். இன் றைக்குப் பொதுப்பணித்துறையைப் பொறுத்தவரையில் ஆறுகள் இல்லை. கால்வாய்கள் இல்லை. குளங்கள் இல்லை, என் றெல்லாம் சொல்லக்கூடிய அளவுக்கு சீர்கெட்டுப் போய் மிக மோசமான நிலையில் இருக்கின்றன. இப்படி எல்லாம் இருந் தாலும்கூட ஒன்றும் இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு பொதுப்பணித்துறை நிர்வாகம் இருக்கிறது.

அடுத்து கரைகளில் இருக்கக்கூடிய மரங்கள் களவு போகா மல் தடுக்க வேண்டும். இந்தச் சட்டமன்றத்தில் இரண்டாண்டு களுக்கு முன்னாலே நான் ஒரு அவசரக் கேள்வி கொடுத்தேன். அதாவது ஏறத்தாழ 35 இலட்சம் ரூபாய் பெறுமானம் உள்ள மரங்கள் தஞ்சை மாவட்டத்தில் வெட்டப் பட்டிருக்கின்றன என்று கொடுத்தேன். அது 1986-லும் வரவில்லை, 1987-லும் வர

வில்லை. அந்தக் கேள்வியே எங்கே போயிற்று என்று தெரியவில்லை. அந்த அளவுக்கு செல்வாக்குப் படைத்தவர்களாக இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அவசரம் என்பதற்கு நம் நாட்டில் என்ன பொருள் என்பதை இப்போதுதான் நான் விளங்கிக் கொண்டேன். (சிரிப்பு.)

**திரு. கோ. வீரையன்** : கிட்டத்தட்ட 35 இலட்சம் ரூபாய்க்கு மேலான மதிப்புள்ள மரங்கள் திருட்டுப் போய் இருக்கின்றன என்று அவசரக் கேள்வி கொடுத்தால் இத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன. மரத்தைக் கொண்டு போனது மட்டுமல்ல; கேள்வியையே கொண்டு போய்விட்டார்கள். (சிரிப்பு) இப்படிப் பட்ட நிலைமை இருக்கிறது. அவ்வளவு வல்லமை படைத்தவர்களாக அந்தக் காரியத்தைச் செய்யக் கூடியவர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கவனித்து இந்தப் பொதுப்பணித்துறையிலே சீர்கெட்டுக் கிடக்கக்கூடிய அந்த நிலைமையை சீர்படுத்துவதற்கு ஒரு கடுமையான பெருமுயற்சியை நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சரும், இந்த அரசும் எடுத்து விவசாயிகளைப் பாதுகாத்து தண்ணீர்தான் விவசாயத்திற்கு மூலப் பொருள் என்பதால் அது இல்லாமல் ஒன்றுமே செய்ய முடியாது அதை நம்பி இருக்கக்கூடிய குடும்பங்கள் பட்டினிதான் கிடக்கக் கூடிய நிலைமை ஏற்படுகிறது என்பதை உணர்ந்து— ஆவன செய்ய வேண்டும்; தண்ணீர் கொடுப்பதற்கான உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4-30)

கடைசியாக ஒன்று. நம்முடைய பொதுப்பணித் துறை கட்டக்கூடிய கட்டடங்களை கொஞ்சம் காலத்திலே முடித்து எந்த துறைக்காகக் கட்டுகிறோமோ அந்தத் துறையிடம் அதை ஒப்படைப்பதற்கு முயற்சிக்க வேண்டும். இன்றைக்கும் பாலக்குறிச்சி உயர்நிலைப் பள்ளியினுடைய கட்டடம் கட்டப்பட்டு மேல்தளம் போடாமல் ஒன்றரை ஆண்டுக்கு மேலாக நிற்கிறது. பொதுப்பணித்துறை கட்டக்கூடிய கட்டடம் அது. அப்படி பல கட்டடங்கள் வேலை முடிந்தாலும் சம்பந்தப் பட்ட துறைகளிலே கொடுப்பதில் காலதாமதம் ஆகிறது. முடிப்பதிலே தாமதம் ஏற்படுகிறது. இந்த முறைகளை கொஞ்சம் மாற்றி காலத்திலே அந்த வேலைகளை முடிக்க வேண்டும். நாள் கடக்க கடக்க தொகையும் கூடிப் போகிறது. ரிவைஸ்ட் எஸ்டிமேட் தயாரிக்கிறார்கள். அதனால் மேலும் தாமதமாகிறது. பணமும் கூடுதல் ஆகிறது. இந்த நிலைகளை தடுக்க முயற்சிக்கவேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன்.





**திரு. வ. அன்பழகன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்று சிறப்புமிக்க இந்த மாமன்றத்திலே நான் உரையாற்றுவதற்கு வாய்ப்பளித்த என்னுடைய செய்யாறு சட்ட மன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியத் திருநாட்டினுடைய தலைநகர் டெல்லியிலே அரசுப் பணியிலே இருந்த என்னை அரசியல் பணியிலே ஈடுபடுத்தி ஒரு இடைத்தேர்தலிலே நிற்க வைத்து, அந்தத் தேர்தலிலே நான் வெற்றி வாய்ப்பை இழந்தாலும்கூட, மீண்டும் நடைபெற்ற தேர்தலிலே இரண்டாவது முறையாக என்னை நிற்க வைத்து இந்த மாமன்றத்திலே ஒரு மனிதனாக என்னைப் பேச வைத்த நம்முடைய தானைத்தலைவர் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் இனமான பேராசிரியர் அவர்களுக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியினைத் தெரிவித்து, இந்த இயக்கத்தைக் கட்டிக்காத்து நம்மையெல்லாம் ஆளாக்கிய நம்முடைய அண்ணன் அவர்கள் துயில் கொண்டிருக்கும் இடம் நோக்கித் தொழுது, என்னுடைய கன்னிப் பேச்சினை நான் துவங்குகிறேன்.

நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், தமிழக மக்கள் ஒரு தெளிவான தீர்ப்பை வழங்கி, தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்தான் இந்த நாட்டை முதலமைச்சராக இருந்து ஆள் வதற்கு தகுதி வாய்ந்த தனிப்பெரும் தலைவர் என்பதை மெய்ப்பிக்கும் வகையிலே ஒரு நல்ல தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள்.

கலைஞர் அவர்கள் ஆட்சிப் பீடத்திலே அமர்ந்த நேரத்திலே, பொருளாதார நிலைமை சரியில்லை என்றாலும்கூட, அவர் பொறுப்பேற்ற உடனே எடுத்துக்காட்டியதைப் போல், களஞ்சியம் காலி, கஜானா காலி என்ற நிலைமை இருந்தாலும் கூட, பொருளாதார நெருக்கடியை எல்லாம் சமாளித்து, மக்களுக்கு பயன்படத்தக்க, ஏழையெளிய மக்களுக்குப் பயன் படத்தக்க ஒரு நல்ல வரவு செலவுத் திட்டத்தை நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றியையும் பாராட்டினையும் நான் தெரிவித்து, இந்தப் பொதுப்பணித்துறை மானியத்திலே என்னுடைய உரையை நிகழ்த்துவதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கே வரவு செலவுத் திட்டத்தைப் பற்றியும் பொதுப் பணித் துறை மானியத்தைப் பற்றியும் அதிகமாகப் பாராட்ட ஆர்வம் இருந்தாலும்கூட, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மணியடிப்பதற்கு வழி செய்யாமல், நேரடியாகவே என்னுடைய தொகுதிப் பிரச்சினைக்கு வருகிறேன்.

...ய்யாறு தொகுதியில் 3 அணைக்கட்டுகள் நீர்ப்பாசனத்திற்காக இருந்து வருகின்றன. ஒன்று பாலாறு அணைக்கட்டு, அடுத்து செய்யாறு அணைக்கட்டு. மூன்றாவது தண்டரை அணைக்கட்டு. ஆக 3 அணைக்கட்டுகள் இருந்து வருகின்றன.

பாலாறு அணைக்கட்டு பாசனத்தில் செய்யாறு தொகுதியில் சுமார் 100 ஏரிகளும், செய்யாறு அணைக்கட்டு பாசனத்திட்டத்தின் கீழ் 145 ஏரிகளும் தண்டரை அணைக்கட்டுப் பாசனத்தின் கீழ் 19ஏரிகளும், பாசனத்திற்காக இருந்து வருகின்றன. மேற்படி ஏரிகளின் வரத்துக் கால்வாய்கள் நீண்ட காலமாக மராமத்து இல்லாமல் வரத்துக் கால்வாய்கள் சரிவர இயங்காமலும், தண்ணீர் சிதறியும். கால்வாய்களில் உடைப்புகளும் ஆக்கிரமிப்புகளும் ஏற்பட்டு பழுதடைந்த நிலையில் இருந்து வருகின்றன. எனவே, மேற்படி வரத்துக் கால்வாய்களை மராமத்து செய்து தரவேண்டுகிறேன்.

பாலாறு ஆற்றின் தென் புற கரையில் சுமார் 15 ஊற்றுக் கால்வாய்களும், செய்யாறு ஆற்றின் வடபுற கரையில் சுமார் 9 ஊற்றுக் கால்வாய்களும் நேரடிப் பாசனத்தில் இருந்து வருகின்றன. மேற்படி ஊற்றுக் கால்வாய்கள் கடந்த 12 ஆண்டு காலமாகப் பராமரிப்பின்றியும் கால்வாய்க் கரைகள் உடைந்தும் தலைப்புப் பகுதி மண் மேடிட்டும் ஊற்றுக் கால்வாயில் தண்ணீர் வராத நிலையில் விவசாயம் செய்ய இயலாத நிலையில் இருந்து வருகிறது.

இந்நிலையை மாற்றி ஊற்றுக் கால்வாய்களுக்கு மராமத்து செய்து தர மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் உள்ள பெரிய ஏரிகளில் இரண்டாவதாக உள்ள ஏரி என்னுடைய தொகுதியில் உள்ள மாமண்டூர் ஏரியாகும். மாமண்டூர் ஏரிக்கு பாலாறு அணைக்கட்டிலிருந்து தண்ணீர் வருகிறது. பாலாறு அணைக்கட்டு வடபுறமுள்ள காவேரிப்பாக்கம் தலைமதகின் மட்டமும், அணைக்கட்டு தென்புறமுள்ள தூசி, சக்கரமல்லூர் கால்வாய் மட்டமும் வித்தியாசமான மட்டத்தில் இருக்கின்றது. காவேரிப்பாக்கம் தலைமதகின் மட்டத்தைவிட தூசி, சக்கரமல்லூர் கால்வாய் ஒரு அடிக்கு மேல் உயர்ந்துள்ள நிலையில் இருப்பதால் பாலாற்றில் வரும் வெள்ளம் காவேரிப்பாக்கம் தலைமதகில்தான் செல்கிறது. தென்புறமுள்ள தூசி, சக்கரமல்லூர் தலை மதகுக் கால்வாய்களுக்குத் தண்ணீர் வருவது குறைவு. அதனால் என்னுடைய தொகுதியிலே உள்ள ஏரிகள் நிரம்புவதே இல்லை.

ஆகையால் பொதுப்பணித் துறைப் பொறியாளர்கள் ஆய்வு செய்து, இரண்டு பக்கமுள்ள மதகின் சில்மட்டம் ஒரே அளவில் இருக்க வழிவகை செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டு



கொள்கிறேன். இரண்டாவதாக, ராஜாக் கால்வாய் மூலம் மாமண்டூர் ஏரிக்குத் தண்ணீர் வருகிறது. மேற்படி அந்தக் கால்வாய்த் தலைப்பும், ஆற்றின் மட்டமும் வித்தியாசமாக உள்ளதாலும், பாலாற்றில் வெள்ளம் வருவதில்லையாதலாலும் மேற்படி ராஜாக் கால்வாயினால் மாமண்டூர் ஏரி நிறைவதில்லை. இதனை மீண்டும் பொறியாளர்கள் ஆய்வு செய்து தலை மதகு முன்பு வெள்ளத்தடுப்புச் சுவர் ( GROYNE ) அமைத்துத் தருமாறும், ராஜாக் கால்வாயைத் தூர் வாரித் தருமாறும், முறைமைப்படுத்தித் தருமாறும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மேற்படி மாமண்டூர் ஏரியில் மதகுகளிலிருந்து வரும் வாய்க்கால்களுக்குத் தூர் வாரியும், கால்வயை முறைப்படுத்தியும் லைனிங் செய்து கொடுத்து சாகுபடி அதிகரிக்க வழிவகை செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஏரியின் பாசனத்தின் கீழ் ஐந்தூரான் கொண்டம் என்ற கொண்டத்திலிருந்து பாய்ச்சல் ஆதாரம் பெறும் கால்வாய்களைத் தூர் வாரியும், லைனிங் செய்தும் கொடுத்தால் தண்ணீர் சிதறாமலும், மண் உறிஞ்சாமலும் நேராக நிலங்களுக்குச் சென்று பயனடையும். எனவே, மேற்படி மாமண்டூர் ஏரிக்குத் தனி நிதி ஒதுக்கி, மாடர்னைசேஷன் ஸ்கீம் தலைப்பில் மராமத்தினை மேற்கொள்ள வழிவகை செய்து தருமாறு நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய ஊருக்குப் பக்கத்தில் இருக்கின்ற குண்டியாந்தண்டலம் கொண்டம் மதிப்பீடு அங்கீகரித்து நீண்ட நாட்கள் ஆகியும், மேற்படி கொண்டத்தைக் கட்டித் தராமல் துறையைச் சார்ந்த பொறியாளர்களிடம் தேக்க நிலையில் இருந்து வருகிறது. நடப்பு ஆண்டில் மேற்படி கொண்டத்தைக் கட்டி முடித்து விவசாய மக்களுக்கு குறைகளை நிவர்த்தி செய்யுமாறு நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், செய்யாறு அணைக்கட்டு பிரதானக் கால்வாய் சுமார் 33 கிலோ மீட்டர் ஆகும், செய்யாறு அணைக்கட்டின் முதல் ஏரியாக இருந்து வரும் வாக்கடை இசா முக்கூர் ஏரி கரை அரித்தும், மதகுகள் பழுதடைந்தும் நிலையில் உள்ளது. அதனை மராமத்து செய்து தர வேண்டுகிறேன். அணைக்கட்டிலிருந்து வாக்கடை ஏரி வரையில் பிரதானக் கால்வாய் மணல் நிரம்பிய பகுதியாக இருந்து வருகிறது. அதனைத் தூர் வாரியும் லைனிங் செய்து தண்ணீர் முழுமையாக வர வழிவகை செய்ய வேண்டுகிறேன். மேற்படி பிரதானக் கால்வாய் வடபுறமுள்ள கீழபந்தல் கிராம எல்லையில் அந்தப் பகுதியில் உள்ள பொது மக்களும், மாணவ சிறார்களும் செய்யாறுக்கு வருவது என்றால் பிரதானக் கால்வாயைக் கடந்துதான் வரவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். மேற்படி கால்வாயில் சுமார் இரண்டு மாதம்

தண்ணீர் போய்க் கொண்டு இருக்கும். அதனால் பொது மக்களின் குறைகளையும், மாணவர்களின் குறைகளையும் நிவர்த்தி செய்யும் பொருட்டு கீழ்பந்தல் அருகே பிரதானக் கால்வாயில் வாராவதி (பிரிட்ஜ்) ஒன்று அமைத்துத்தர வேண்டுகிறேன். தேர்தல் காலத்தில் அந்தப் பகுதி மக்களைச் சந்திக்கும்போது எங்கள் குறை இதுவரை தீர்க்கப்படவில்லை, அதனால் நாங்கள் வாக்களிக்கமாட்டோம் என்றுகூடப் புறக்கணித்து இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் சமாதானப் படுத்தித்தான் பல தேர்தல்களைச் சந்தித்து இருக்கிறோம். அதையும் கவனத்திலே கொண்டு நம்முடைய அரசு அதற்கான திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தண்டரை அணைக்கட்டு, பாலாற்று வெள்ளத்தால் ராஜாக் கால்வாய்த் தலை மதகு மூலமும், பாலாறு அணைக் கட்டுக் கால்வாய் மூலமும், மாமண்டூர் ஏரி நிரம்பாத காரணத் தால் கழக ஆட்சியின்போது, தண்டரை அணைக்கட்டு, நம் முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் அமைக்கப்பட்டு, பாசனம் பெற்று வருகிறது. அந்த அணைக்கு 19 தொகுப்பு ஏரிகளும் உள்ளன. அணைக்கட்டு இடது புறம் பிரதானக் கால்வாய்க் கரை பல இடங்களில் நல்ல நிலையில் இல்லை. கால்வாய்க் கரை அகலமும் இல்லை. முட்செடிகள் அதிகமாக வளர்ந்து தண்ணீர் கால்வாயில் போக தடையாக இருந்து வருகிறது. கால்வாயைத் தூர் வாரியும், லைனிங் செய்து கொடுத்தும் கால்வாய்க்கரை மீது ஜீப் செல்லுகிற அளவிற்கு ஜீப் டிராக் அமைத்துத்தர வேண்டுகிறேன்.

ஆகவே, பொதுப்பணித் துறை—மேற்படி தண்டரை பிர தானக் கால்வாய் பல்லி காலனி எல்லையில் ஒரு சிறிய மதகு ஒன்று அமைத்துக் கொடுத்தால் இருமந்தாங்கல் ஏரி, வடங்கம் பட்டு, செலாம்பாக்கம் ஏரி ஆகிய ஏரிகள் நிரம்பி விவசாயம் செவ்வனே நடைபெற ஏதுவாக இருக்கும் என்பதைத்தெரிவித் துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போலவே, இங்கே செண்பகத் தோப்புத் திட்டம் துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு வருவதை அறி கிறேன். மேற்படி திட்டத்தினால் கீழே உள்ள அணைக்கட்டு பாசனங்களுக்கு எந்தவித இடையூறுமில்லாமல் மேற்படி செண் பகத்தோப்புத் திட்டத்தை நிறைவேற்றும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். தண்டரை அணைக்கட்டு ஏற்பாடுகள் நடைபெறும்போது கீழ் உள்ள உத்திரமேரூர் அணைக்கட்டு பாசன விவசாயிகள் முறையீடு செய்து மறுப்பு ஏற்படுத்தினார் கள்.



(பிற்பகல் 4.40)

அவர்களையும் கலந்து, ஒப்புதல் பெற்றுத்தான் தண்டரை அணை உருவாகியுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 1904-ல் தண்டரை அணைக்கட்டு தொடங்கி முயற்சி மேற்கொள்ளப்பட்டும், 21—9—1917-ல் அந்த முயற்சி கைவிடப்பட்டது, செய்யாறுக்குக் கீழ்ப்பகுதி யில் இருக்கின்ற உத்திரமேரூர் போன்ற பகுதிமக்கள் எதிர்த்த தால் அது கைவிடப்பட்டது, மீண்டும் அரசாணை பி.டபிள்யூடி. மெ. மோ. எண். 8316-64-5-26-11-1964படி மீண்டும் அந்தத் திட்டத்தை மறு ஆய்வு செய்ய திட்டமிட்டு, கலைஞர் அவர்கள் ஆட்சிக்காலத்தில்தான் திட்டம் நிறைவேற்றப்பட்டது. செண் பகத் தோப்பு அணைகட்டுவதை நான் வேண்டாமென்று சொல்ல வில்லை. கீழே இருக்கிற சுமார் 200 ஏரிகள் பாதிக்காத அளவில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அதைப் போலவே நாட்டேரி என்ற பெயர்பெற்ற பெரிய ஏரி ஒன்று இருக்கிறது. அந்த நாட்டேரி பெரிய ஏரிக்கென்று வரத்துக் கால்வாய், அதாவது நாட்டான் கால்வாய் களாம்பாடி கிராம எல்லையில் பாலாற்றின் தென்புறத்தில் ஆரம்பித்து வருகிறது. வளவனூர் கிராம எல்லைவரை கால்வாயில் கரை (ஆற்றுப்பக்கம்) சிறிய வரப்புபோல் உள்ளதால் தண்ணீர் ஆற் றிற்கே சென்று விடுகிறது. நாட்டேரி இனாமாக இருந்து 1957-ல் அரசுக்கு மாறியதிலிருந்து, முழுமையான மராமத்து இல்லை என்று தெரிய வருகிறது. மேற்படி நாட்டான் சால்வாய்க்கு மரா மத்து செய்து கொடுத்தால், நாட்டேரி ஓட்டேரி இரண்டு ஏரிகளும் நிரம்புவதுடன் அல்லாமல் அதன் கீழே கட்டப்பட்டு இருக்கின்ற கள்பட்டு கொண்டம் ஆயக்கட்டிற்கும் கீழ் உள்ள ஏரிகளுக்கும் தண்ணீர் கிடைக்க வழிவகை உண்டு. (மணியடிக்கப்பெற்றது).

எல்லா ஏரிகளைப்பற்றியும் நான் இங்கே பேசிவிட்டேன். ஆனால் நான் பிறந்த ஊரான ஏழாச்சேரியில் உள்ள ஏழாச்சேரி ஏரியைப்பற்றி சொல்லாவிட்டால்தான் நன்றாக இருக்காது.

ஏழாச்சேரி ஏரிக்கு வரும் வரத்துக் கால்வாய் சுமார் 15 ஆண்டுகளாகக் கவனிப்பாரற்ற நிலையில் இருந்து வருகிறது. மேற்படி கால்வாய் அதிக ஆழம் தூர்ந்துள்ளது. தூர் வாரி யும், கால்வாயை முறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். மேற்படி கால்வாயை தூர் வாருவதுடன், சிமெண்ட் லைனிங் செய்துதர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அத்துடன் கடைசியாக ஒன்றைமட்டும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். பொதுவாகப் பணித்துறையில் தொழில் நுட்பப் பொறியாளர்களாகக் கடந்த 5 ஆண்டுகளாகப் பணி புரிந்து

வருபவர்கள் 74 பேரை கேடர் ஸ்டெரங்க்த் இல்லாததால் பணி நீக்கம் செய்திருக்கிறார்கள். மீதம் உள்ளவர்களையும் பணி நீக்கம் செய்யப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுத்து, மீண்டும் அவர்களை நிரந்தர அடிப்படையில் நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஏரிப் பாசனத்தை நம்பியே விவசாயிகள் வாழ்கிறார்கள் என்பது மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். அவர் எங்கள் மாவட்டத்தைச் சார்ந்தவர் என்பதால் எங்கள் பகுதியைப்பற்றி மிகவும் நன்றாக அறிந்தவர் கள் என்ற வகையில் நான் அவரைக் கேட்டுக் கொள்வதெல்லாம் எங்கள் தொகுதிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அதிலும் எங்கள் மாவட்டத்தில் இரண்டாவது பெரிய ஏரியாக விளங்குகிற தூசி—மாமண்டூர் ஏரிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, ஐரோப்பிய நிதி குழு உதவியோடு 'மாடர்னைசேஷன் ஸ்கீம்'' அடிப்படையில் அந்த ஏரியை நல்ல முறையில் லைனிங் செய்து தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்த பேரவைத் தலை வருக்கு நன்றி தெரிவித்து, மீண்டும் வாய்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. கோ. பூவராகன்** : மாண்புமிகு சட்டமன்றப் பேரவை தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற நீர்ப்பாசனத்துறை, பொதுப்பணித் துறை பற்றிய மானியக் கோரிக்கைக ள்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நீர்ப்பாசனத் துறைக்காக இன்றைய தினம் ரூபாய் நூறு கோடிக்கு மேலாக செலவிடுவதற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டு மென்று அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவருடைய அமைச்ச கத்திற்கு 5 ஆண்டுகளுக்கு—பொதுப்பணித் துறையின் கீழ் கிட்ட தட்ட ரூ. 200 கோடிக்கு மேலாக ஒதுக்கியிருக்கிறோம். நீர்ப் பாசனத் துறையைப் பொறுத்த அளவில் நமக்கு ஒரு ஜீவ நதி என்று சொல்லுகிற அளவுக்கு ஒரு நதியும் தமிழகத்தில் கிடை யாது. இருந்தாலும் நாம் நீர்ப்பாசனத் துறையின் நல்ல முறை யில் பெருவாரியாக எல்லா நீர் ஆதாரங்களையும் பயன்படுத்தி அணைக்கட்டு போன்றவற்றைக் கட்டியதன் மூலமாக நன்கு பயன்படுத்தியிருக்கிறோம். ஆனால் கடந்த காலங்களில் அதற் காக செலவழித்திருக்கிற தொகையைப் பார்க்கிறபோது, இந்தத் துறையின் சரியான முறையில் கவனம் செலுத்தப்படவில்லை என்பதே என்னுடைய குற்றச்சாட்டு.

குறிப்பாக, ஐரோப்பிய பொருளாதார அமைப்பின் கீழ் 100 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட தொகையை ஏரிகளைச் சீரமைப்பதற்கும், பராமரிப்பதற்கும், ஏரிகளின் நீர் கொள் அளவைப் பெருக்குவதற்கும் செலவழிப்பதாகச் சொல்லி



நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்தில் 25 ஏரிகளை இதன் அடிப்படையில் எடுத்திருக் கிறார்கள். அதற்காக ரூ. 4 கோடி செலவிட்டிருக்கிறார்கள். தென்னாற்காடு மற்றும் மாவட்டங்களில் இதற்காக 30 கோடிக்கு மேலாக செலவழித்திருக்கிறார்கள் என்று இங்கே சொல்லப்பட்டி ருக்கிறது. இந்தச் செலவினம் சரியான முறையில் செயல்பட வில்லை. அதற்குக் கொடுத்த காண்ட்ராக்ட்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும். யார் யாருக்கு எந்தெந்த ஏரிப்பணிகள் கொடுத்திருக்கிறார்கள், அதன்மூலம் எவ்வளவு வேலை நடந்திருக்கிறது என்பதையெல்லாம் கொஞ்சம் துருவிப் பார்த்தால் அவர்கள் என்ன வேலை செய் திருக்கிறார்கள் என்பது புரியும். சரியாக வேலை செய்ய வில்லை; அந்த பணத்தை நல்ல முறையில் பயன்படுத்த வில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு. நீர்ப்பாசனத் துறையில் பொறுப்பாக அவர்கள் எந்த பாசனத்தை செய்து இருக்கிறார் கள்; எந்த அளவுக்கு அந்தப் பணி நிறைவேற்றக்கூடிய அளவில் இருக்கிறது என்று பார்க்கும்போது நிறைவு இல்லை என்பதை சொல்லிக்கொள்கிறேன்.

செம்பரம்பாக்கம் ஏரி இருக்கிறது. அதற்கு நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு 2 கோடி ரூபாய்க்கு மேல் செலவிட்டிருக்கி றார்கள். அதை நீங்கள் போய் பார்க்கவேண்டும். அங்கு 2 கோடி ரூபாய் செலவிடப் பட்டிருக்கிறதா என்றால், இல்லை. பொதுப்பணித் துறையில் இருந்த என்ஜினியர் ஒருவர் அளிக்கப் பட்ட கருங்கல் ஜல்லியும், சிமெண்டையும் அவர் வீட்டுக்குசுவர் எழுப்பிக் கொண்டார். இவ்வாறு எழுப்பும்போது பொதுவாக ஒரு கட்டடத்தை கட்டும் போது செங்கல் வைத்து கட்டுவார்கள்; சிமெண்ட் வைத்து கட்டுவார்கள். அவர் கட்டுவதைப் பார்த் தால், அது பூராவும் கான்கிரிட் கட்டிடமாக இருக்கும். அவ்வளவு பொறுப்பாக கட்டி இருக்கிறார்கள்.

செம்பரம்பாக்கம் ஏரியை பார்க்கும்போது ஒரு சுலூயிஸ் போட்டு இருப்பார்கள். தண்ணீர் வருவதற்காக ஷட்டர்கள் போட்டு இருப்பார்கள் தண்ணீர் அதிகம் வந்தால் வெளியிடு வதற்காக அது போடுவார்கள். இப்போதுகூட நீங்கள் போய் பார்க்கலாம். ஒரு கர்டர் போட்டு இருக்கிறார்கள். அதை பொருத்தும்போது அந்த கட்டையின் மேல்தான் இரண்டு ஜாயின்ட் இருக்க வேண்டும், ஆனால், செம்பரம்பாக்கம் ஏரியில் ஏதாவது ஒரு பக்கத்தில், சென்ட்டரில் போட்டுவிட்டார்கள் அந்த இரண்டு தூண்கள் இருக்கும் இடத்தில் ஒருவேளை புதிதாக, விஞ்ஞான முறையில் அந்த ஜாயின்ட் எங்கு வேண்டு மானாலும் இருக்கலாம் என்று சொன்னால், அது இருக்க வேண்டிய அவசியம் இல்லை. எதற்காக தூண் கட்டுகிறார்கள்

என்று தெரியாது. அவ்வளவு பொறுப்பாக கவனித்து இருக்கிறார்கள் என்பதற்காக இந்த சமயத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அந்த மாதிரிதான் எல்லா ஏரிகளிலும் கூட இன்றைய தினம் அவர்கள் பொறுப்பாக செலவிட்ட தொகை 25 லட்சம், 30 லட்சம், 40 லட்சம், 1 கோடி என்று கணக்கிலே இருக்கிறதே தவிர அந்த கணக்குப்படி அங்கே போய் பார்த்தால் அது சரியாக நிர்வகிக்கப்படவில்லை. நல்ல முறையில் அந்த ஏரிகள் பயன்படும் அளவுக்கு செய்யப்படவில்லை என்றுதான் நான் இந்த சமயத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நிலத்தடி நீரைப் பொறுத்தவரையில் அதுபற்றி இங்கே குறிப்பு இருக்கிறது. நெய்வேலியில் நிலத்தடி நீரை ஆய்வு செய்திருக்கிறார்கள் என்று குறிப்பு இருக்கிறது. நெய்வேலியை ஒட்டி இருக்கிற 15, 10 கி. மீ. தொலைவில் உள்ள சுற்று வட்டாரத்தில் இருக்கிற இடங்களில் எல்லா நிலத்தடி நீர் பூராவும் கீழே வெகு ஆழத்திற்கு போய்விட்டது. அங்கே இன்றையதினம் ஆழ்துளை கிணறுகள் கூட சரியாக வேலை செய்ய வில்லை. கிணறுகளின் நீர்மட்டம் கீழே போய்விட்டது. ஆனால் அதற்காக என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள்? அங்கே இருக்கிற தண்ணீர் வேறு பக்கம் போய் கொண்டிருக்கிறது. எத்தனையோ ஐரோப்பிய பொருளாதார அமைப்பு போன்றவற்றிலிருந்து நிறைய பணம் வருகிறது. அதனால், நிலத்தடி நீர் ஆய்வு செய்கின்ற அமைப்பில் இருக்கின்ற பொறியாளர்கள், அந்த நெய்வேலி தண்ணீர் வேறு இடங்களுக்கு செல்வதை திருப்பி, அந்தப் பகுதியில் இருக்கிற ஏரிகளை நிரப்புவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அப்படி பார்க்கும்போது வடக்கு பகுதியில்நிறைய ஏரிகள் இருக்கின்றன. அதிலே அம்மேரி ஏரி, அகரம் ஏரி, முதனை ஏரி, பாலைக்கொல்லை ஏரி, மாத்தூர் ஏரி, வயலூர் ஏரி, ஆலடி ஏரி, ஆகியவைகள் இருக்கின்றன. இது போன்ற ஏரிகள் நிறைய இருக்கிறன. அந்த ஏரிகளில் கொள்ளளவு அதிகம் இருக்கிறது. அவைகளுக்கு எல்லாம் தண்ணீர் நிரப்பி மேமாத்தூர் அணைக்கட்டு வரை கொண்டு வரலாம்; மணிமுத்தாறு வரையில் கொண்டுவர முடியும் என்று இந்த சமயத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தப் பகுதியில் இருக்கும் தண்ணீர் பூராவும் பெரிய ராட்சத பம்புகள் மூலம் இறைக்கு வேறு பகுதிக்கு சென்றுவிடுகிறது. அந்தப் பகுதி வறண்டு, மரம் கூட இருக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. குறிப்பாக நிலத்தடி நீருக்காக ஏற் படுத்தப்பட்டிருக்கும் இன்ஜினியர்கள் இதை கவனத்தில்கொண்டு அந்த வடக்கு பகுதியில் இருக்கிற எல்லா ஏரிகளையும் நிரப்பு வதற்கு முயற்சி எடுக்க வேண்டும். விருத்தாசலம்-- கடலூர் சாலைக்கு வடக்கு பகுதியில் உள்ள ஏரிகளை நிரப்புவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். ஏனென்றால் இருக்கிற மற்ற



எல்லா ஏரிகளுக்கும் தண்ணீர் வரும் சந்தர்ப்பம் இருக்கிறது. இன்றைய தினம் பகாமுகி டாமில் அணை கட்டிவிட்ட பிறகு மணிமுத்தாரில் தண்ணீர் வருவதே கிடையாது; மேமாத்தூர் அணைக்கட்டுக்கு தண்ணீர் வருவதே கிடையாது. விருத்தாசலம் கஸ்பா ஏரிக்கு தண்ணீர் வருவதே இல்லை. இந்த மாதிரி ஒரு நிலை இருப்பதை அறிந்து, தண்ணீரை அந்தப் பகுதிகளுக்கு கொண்டுவந்து நல்ல விவசாயத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த சமயத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் வெலிங்டன் ரிசர்வாயர் இருக்கிறது. அது ஒரு பெரிய நீர் தேக்கம். அதற்கு சமீபத்தில் எந்தவிதமான பணமும் ஒதுக்கப்படவில்லை. அதுபோல் வீராணம் நீர்த்தேக்கம் இருக்கிறது. பெருமாள் ஏரி நீர் தேக்கம் இருக்கிறது. அந்தப் பகுதிகளை பார்க்கும்போது தென் ஆற்காடு மாவட்டத்தில் பெருமளவில் நீர்ப்பாசன இலாகா கவனம் காட்டவில்லை என்பதை தான் மொத்தமாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-50).

வீடூர் நீர்த்தேக்கம் இருக்கிறது, அதேபோன்று நந்தன் கால் வாய், நம்முடைய மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்கள் அடிக்கடி இங்கே மன்றத்திலே இருக்கிற பொழுதெல்லாம் சொல்லிக்கொண்டு இருப்பார்கள். அந்த நந்தன் கால்வாய்க்கு, சாத்தனூர் அணையிலிருந்து தண்ணீர் கொண்டுவரப்பட வேண்டும். பனமலை ஏரிக்கு வந்து, அது வழியாக இந்த நந்தன் கால்வாய்க்கு வரவேண்டுமென்று சொல்லி கொண்டிருப்பார்கள். அது எந்த அளவிலே இருக்கிறது. பரிசீலனை செய்வார்களா. இப்பொழுது வருகிறது, அப்பொழுது வருகிறது என்று சொன்னார்கள். ஒரு சமயம் வருகிறது என்பார்கள், மறு சமயத்திலே அது சாத்தியக் கூறு இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். அதைப் பரிசீலனை செய்து மறு முறையும் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமே தவிர, வேறு சாத்தியக்கூறு இல்லை என்று சொல்வது, சாதாரணமாக எல்லாவற்றிற்குமே சொல்லிவிடலாம். அதனால், தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே, இந்த நிலத்தடி நீர் சரியான முறையிலே பயன்படுத்தப்பட வேண்டும். அவர்களுக்கு வேறு ஜீவ நதி ஒன்றும் கிடையாது. அதனாலே, நிலத்தடி நீர் என்று சொன்னால், நெய்வேலியிலேயிருந்து வருகின்ற தண்ணீரை நல்ல முறையிலே பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு நிதியை அதற்கு என்று ஒதுக்க வேண்டும். அந்தத் தண்ணீரை முழுக்க முழுக்க நான் மேற் சொன்ன அந்த ஏரிகளுக்குப் பாய்ச்சி எல்லா விவசாயிகளுக்கும்

[திரு. கோ. பூவராகன்] [1989 ஏப்ரல் 19

பயன்படும்படியாகச் செய்ய வேண்டும். அதனால் பாதிக்கப்பட்ட விவசாய மக்கள் பரவலாக, ஏராளமான அளவில் இருக்கிறார்கள் என்று இந்தச் சமயத்தில் சொல்லிக் கொள்வேன்.

வெலிங்டன் நீர்த் தேக்கம், வீராணம் நீர்த்தேக்கம், பெருமாள் ஏரி போன்ற நீர்த் தேக்கங்களுக்கு அதிக நிதியை ஒதுக்க வேண்டும்.

கோமுகி நதியிலே நிறைய என்க்ரோச்மெண்ட் இருக்கின்றன. பெரிய ஆட்களெல்லாம் அதிலே விவசாயம் செய்கிறார்கள்.

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள எல்லா ஏரிகளிலும் நிறைய கட்டிடங்களாக இருக்கும். அந்த ஏரிகளை ஆக்கிரமிப்பு செய்து விட்டார்களே, அதற்காக ஏதாவது பணம் கொடுத்தார்களா? அந்த ஏரிகளுக்கெல்லாம் எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்ற கணக்கை அமைச்சரவர்கள் சொன்னால் பரவாயில்லை. செங்கல்பட்டு பாவட்டத்திலே ஏதோ செம்பரம்பாக்கம் ஏரிதான் இருக்கிறது. ஏதோ முள் வேலி போட்டு தடுத்து வைத்தால் பரவாயில்லை. அதையும் யாராவது பார்த்து அதிலேயும் என்க்ரோச் செய்து விட்டார்கள் என்று சொன்னால் நீர் பிடிக்கும் ஆதாரங்களே இருக்காது. செங்கல்பட்டு மாவட்டத்தில் எல்லா ஏரியிலேயும்முழுக்க முழுக்க எல்லாக் கட்டிடங்களும் பெரிய அளவிலே வந்துவிட்டன. அப்படிக் கட்டியிருந்தாலும் எந்த அளவிற்கு அந்த இலாக்காவிற்குப் பணமாகக் கொடுத்திருக்கிறார்கள், அரசாங்கத்திற்கு எவ்வளவு பணம் வந்திருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று தென்னார்க்காடு மாவட்டத்திலே சொல்லுகின்றபொழுது, கோமுகி அணை, மணிமுக்தா அணைக்கட்டுக்குள்ளேயே நிறைய என்க்ரோச்மெண்ட் இருக்கிறது. அதையெல்லாம் அகற்றுவதற்கு முயற்சியெடுக்க வேண்டும். அந்தக் கொள்ளளவை உயர்த்துவதற்கு முயற்சியெடுக்கவேண்டும். அது மண் அணை. அந்த மண் அணையைச் சரி செய்வதற்கு நல்ல முறையிலே ஏற்பாடு செய்யவேண்டும். ஏராளமான தண்ணீர் வரத்துக்கள் இருக்கின்றன. அந்த வரத்தை அதிக அளவிற்குச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

வெலிங்டன் நீர்த்தேக்கத்தில்கூட இரண்டு வரத்து வாய்க்கால்களை அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்லி ஏற்கெனவே அதற்கு ஒரு குறிப்பு இருக்கிறது. வரத்து வாய்க்கால்களை அதிகப்படுத்த வேண்டும். அணையின் கரையை உயர்த்த வேண்டும் கரையை உயர்த்துவதற்குப் பல காரணங்களைக் கூறுகிறார்கள். கீழே அடிமட்டத்திலே உள்ள மண் சரியான அளவிலே இல்லை



[திரு. கோ. பூவராகன்]. [1989 ஏப்ரல் 19

கரையை உயர்த்துவதற்குக் கீழே பள்ளம் போட்டால் அந்த அணையே உடைந்துவிடும் என்று ஏதோ ஒரு காரணத்தைக் காட்டுகிறார்கள். அந்தக் காரணத்தை ஒரு பக்கமாக வைத்து விடவேண்டும். இப்பொழுதெல்லாம் நவீன முறையிலே எத்தனையோ முன்னேற்றங்களைக் கண்டுபிடித்திருக்கின்றபொழுது, எங்கெங்கேயோ கரை ஓரங்களிலெயெல்லாம் தடுப்புச் சுவர்களை எழுப்புகிறோம் என்று பார்க்கிறபொழுது, நல்ல விதமாக பயன்படுத்தக்கூடிய அளவிற்கு கீழே கான்கிரீட் போட்டு நல்ல முறையிலே ஏற்பாடு செய்து, தண்ணீரை அதிக அளவிற்குக் கொள்ளளவு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதை இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

நிலத்தடி நீர் என்று பார்க்கிறபொழுது, குழாய் கிணறுகள் மூலம் நீர் இறைப்பதற்குத் தென்னாற்காடு மாவட்டத்திலே அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. அதைப் பார்த்தால் இன்றைய தினம் மின்சாரத்துறை அமைச்சரவர்கள் அங்கே இருப்பதால், இந்தக் குழாய்க் கிணறுகளுக்கு ஒரு தனி முன்னுரிமை கொடுத்து, மின்னிணைப்பு கொடுப்பதற்கு அவர் முன் வர வேண்டும்.

குறிப்பாக, கிணத்தடி நீரைப் பயன்படுத்துகிற தென்னாற்காடு மாவட்டம், வடார்க்காடு மாவட்டத்திலே இருக்கின்றவர்களுக்குக் கொஞ்சம் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அவர்களுக்கு வேறு வசதியே இல்லை. ஏனென்றால் அவர்கள் அந்தத் தண்ணீரைத்தான் பயன்படுத்த முடியும். இன்றைய தினம் இருக்கின்ற விலையைப் பார்க்கின்றபொழுது மோட்டார், ஆயில் என்ஜின் போட்டு இறைத்துக் கட்டுபடியாகாது. மின்சார இணைப்பு கொடுப்பதில் மற்ற மாவட்டங்களோடு இதை இணைக்காமல் தனிக் கவனம் காட்டி முன்னுரிமை கொடுக்க வேண்டும். குழாய்க் கிணறு போடுபவர்களுக்கு ஒரு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்வேன்.

பலயிடங்களிலே இன்றைய தினம் ஏராளமான நீர் நிலை ஆதாரங்கள் இருந்தாலும்கூட அதைப் பயன்படுத்த முடியாத தரிசுப் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அதையெல்லாம் சரியான முறையிலே உரியவர்களுக்குக் கொடுத்து, அங்கே பொதுவாக ஒரு குழாய்க் கிணறைப் போட்டு அதை எந்த அளவிற்குப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவிற்குப் பயன்படுத்த வேண்டுமென்று சொல்லிக் கொள்வேன்.

'டான்காப்' என்று ஒரு இலாக்கா இருக்கிறது. அதற்கு நிறையப் பணம் வருகிறது. இங்கே விவசாய அமைச்சரவர்கள் கூட இருக்கிறார்கள். அந்த இலாக்காகூட சரியான முறையிலே, இருக்கின்ற காலியிடங்களை நல்ல முறையிலே பயன்படுத்தி, குழாய்க் கிணறுகள் இறக்கி விவசாயிகளுக்குப் பயன்

படும்படியாக செய்ய வேண்டும். இந்த நிலத்தடி நீர் எங்கெல்லாம் இருக்கிறதோ அந்தத் தண்ணீரை அவர்கள் உரிய அளவில் பயன்படுத்துவது மிக்க சாலச் சிறந்தது என்பதை இந்தச் சமயத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து சிறு சிறு குட்டைகள் அதாவது கிராமப்புறங்களில் நம்முடைய கணக்கிலே வராதது. நீர்பாசன ஆதாரங்கள் இல்லாத இடங்களாக இருக்கிறது. சிறு நீர்ப்பாசனத்திற்கு பல இடங்களில் தகுந்த அளவில் பணம் ஒதுக்கியதாகத் தெரியவில்லை. பணம் ஒதுக்கி அந்தந்த ஊர்களில் இருக்கிற 100 ஏக்கர் 200 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி செய்யக்கூடிய அளவிற்கு, ஏரி குளங்களாக இருந்தால் அவற்றைப் புதுப்பிப்பதற்கு பணம் ஒதுக்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதையெல்லாம் பார்த்தால் தென்னார்காடு மாவட்டத்திற்கு அவ்வளவு பெரிய அளவில் பணம் ஒதுக்கியதாகத் தெரியவில்லை. அது எப்படி விடுபட்டதென்றும் தெரியவில்லை. எல்லாம் போன இடத்திற்கே போய்க் கொண்டிருக்கிறது. சாப்பிட்டவர்களே அதிகமாக சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். சாப்பிட்டார்கள் என்றால் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஆனால் சென்ற இடத்திற்கே அதிகம் செலவிடுகிற நிலை இருக்கிறதே தவிர வேறல்ல. தென்னாற்காடு மாவட்டத்திற்கு, வடாற்காடு மாவட்டத்திற்கு என்று பார்க்கும்போது தொகை மிகவும் குறைந்த அளவில் இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சரியான முறையில் நீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்கு இந்த மாவட்டங்களுக்கு அதிக நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

பொதுப்பணித் துறையில் கட்டடங்கள் கட்டுகிறார்கள். இந்த கட்டடங்களைப் பார்த்தாலும்கூட 4, 5 இடங்கள் தான் இருக்கின்றன. விருதாசலத்தில் ஒரு கட்டடம் வருகிறது. வேறு எதுவும் காணோம். செஞ்சியிலே, திருக்கோவிலூரில் படித்ததில் நிறைய இருக்கிறது. மற்ற இடங்களில் எங்கேயும் ஒன்றும் தென்படவில்லை, அதிகமாகக் காணோம். பழுது பார்க்கிற ஐட்டம் கூட தென்னாற்காடு மாவட்டத்தில் இல்லை. அது ஏன் என்று தெரியவில்லை. ஒரு வேளை கண்களில் படவில்லையோ என்னவோ? இந்த இலாக்காவினர் சரியாக கட்டிடங்களை பழுதுபார்க்க முடியாத சூழ்நிலை இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அதற்காக இன்றைய தினம் பொதுப்பணித் துறையில்இருப்பவர்கள் முயற்சியெடுக்கவேண்டும். பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் என்று எடுத்துக்கொண்டால் சாதாரணமாக ஒரு பிராப்ளம் கூட சால்வ் பண்ணமுடியவில்லை. குழாய்கள் உடைந்து அப்படியே இருக்கின்றன. யூரினல் வசதிகள்



கூட சரியாக இல்லை. அதே மாதிரி பள்ளிக்கூடங்களைப்
பார்த்தால் நீண்டநாட்களாக பழுது பார்க்கப்படாத பள்ளிக்
கூடங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவ்வப்போது பணம்
ஒதுக்குகிறார்கள். ஆனால் அது அந்தப் பகுதிக்கு மட்டும்
வருவதில்லை. போலீஸ் இலாக்காவில் கொஞ்சம் கட்டடங்கள்
ஒதுக்கி பணியாற்றுகிறார்கள். அதெல்லாம் பார்த்தாலும்
கூட விருத்தாசலத்திற்கு ஒன்றுமில்லை. ஒரு வேலையும்
நடக்கவில்லை. மொத்தம் பணம் ஒதுக்கியதாக இருக்கிறதா
என்று பார்த்தாலும் ஒன்றையும் காணோம். இத்தனை கோடி
ஒதுக்கினோம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இல்லை அந்தத்
தொகுதி புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

விருத்தாசலம் அணைக்கட்டு, மேமாத்தூர் அணைக்
கட்டு, வெலிங்டன் ரிசர்வாயர் ஆகிய நீர் ஆதாரங்களை
ஒட்டித்தான் அங்கே விவசாயம் செய்ய முடியும். வேறு
வழி இல்லை. பராமரிப்பிற்கு வேறு என்ன செய்திருக்கிறார்கள்
என்று பார்த்தால். பணத்தை ஒதுக்கியிருக்கிறார்களா
என்று பார்த்தால் ஒன்றுமே இல்லை. ஆகனால் ஓரளவிற்கு
பணத்தை ஒதுக்கி நல்லவிதமாக செலவிட்டு அந்தப் பகுதி
பாசன வசதிக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே
இருக்கிறார்கள். தென்னாற்காடு மாவட்டத்தில் இன்றைய
தினம் பார்த்தால் ஏற்கெனவே அவர்கள் அறிவித்துவிட்டார்கள்.
ஏதோ பணம் கட்டியிருந்தால் இந்தத் தேதிக்குள்
என்று குறிப்பிட்டு அவர்களுக்கெல்லாம் மின் இணைப்பு கொடுக்க
லாம் என்று அறிவித்தார்கள். அங்கே போய் அவர்கள்
அணுகினால் மின் இணைப்பு கொடுக்க எங்களுக்கு நேரிடை
யாக அரசாங்கத்திலிருந்து ஆர்டர் வரவில்லை. இதெல்லாம்
சட்டமன்றத்தோடு தான் இருக்கிறது. எங்கள் இலாக்கா
விற்கு வந்து எங்களுக்கு அங்கிருந்து வரவில்லையென்று சொல்லு
கிறார்கள். விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் எத்தனை
தடவை மின்சார இலாக்காவிற்கு போய், அவர்களுடைய
அறிவிப்பைப் பார்த்து தொடர்பு கொண்டு இணைப்பு கொடுக்க
வேண்டுமென்று கேட்க முடியும். பணம் கட்டி விட்டவர்
களுக்கு உடனடியாக இணைப்பு கொடுப்பதற்கு மின் இலாக்கா
முன்வரவேண்டும். சட்ட மன்றத்தில் தான் சொல்லியிருக்கி
றார்கள் என்ற நிலை எனக்கேகூட ஏற்பட்டிருக்கிறது. என்னு
டைய சொந்த அனுபவத்திலிருந்து சொல்கிறேன். நேரிடை
யாக சட்டமன்றத்தில் சொன்னால் மட்டும் போதாது, எங்
களை வந்து கண்டுகொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள்.
அவர்கள் அப்படி கண்டுகொள்வது முறைப்படி கண்டுகொள்ள
வேண்டுமென்று சொல்கிறார்கள். அது முடியாத காரியமாக

இருக்கிறதால் இணைப்பு கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் மட்டுமல்ல, பொதுவாக எல்லா விவசாயிகளுக்கும் சொல்கிறேன். சட்டமன்றத்தில் அறிவிப்பு வந்திருக்கிறதே தவிர அந்த இலாக்காவிற்கு அறிவிப்பு போய் பணம் கட்டியவர்களுக்கு உடனடியாக இணைப்பு கிடைப்பதற்கு முயற்சியெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் ஒரு தடவை அந்தப் பகுதிக்கு வந்து பார்த்து எந்த அளவிற்கு இந்த ஏரிகளை செப்பனிட்டு இருக்கிறார்கள், அந்தப் பணம் எவ்வாறு செலவிடப் பட்டிருக்கிறது என்பதை அறிந்து தக்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. வெ. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, உறுப்பினர் களுக்கு ஒரு சந்தேகம். காலையிலும் கையெழுத்து போடு கிறோம். மாலையிலும் கையெழுத்துப் போடுகிறோம். இந்தக் கையெழுத்திற்கு ஏதாவது...........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் அரைகுறையாக நிறுத்தியதை என் அறையில் வைத்து முடிவு செய்வோம். (சிரிப்பு).

(பிற்பகல் 5-00)

**திரு. ஐ. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்திற்கு உறுப்பினராகத் தேர்ந் தெடுப்பதற்கு வாய்ப்பு நல்கிய, உலகத்திலே வாழ்கின்ற தமிழர்களுடைய நம்பிக்கை நட்சத்திரமும் தமிழக முதல்வரு மாக இருக்கிற டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மற்றும் மாண்புமிகு கல்வி அமைச்சர் இனமானப் பேராசிரியர் அவர் களுக்கும் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த வாக்காளப் பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவித்து எனது உரையை நான் ஆரம்பிக்கிறேன்.

காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அண்ணா மாவட்டமாகப் பிரிக்கப்பட்டு, மதுரை மாவட்டத் திலே மிகவும் வறட்சிப் பகுதியாக இருக்கக்கூடிய பகுதி அனைத்தையும் ஒரே மாவட்டமாகப் பிரித்து, கடந்த ஆட்சிக் காலத்திலே அரசினால் எவ்வித சலுகையும் பெறப்படாமல் பின்னுக்குத் தள்ளப்பட்ட இந்த நேரத்தில் மீண்டும் எமது மாவட்டத்திற்கு, காயிதேமில்லத் மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவித்து, அத்துணை சலுகைகளையும் இந்த அரசு வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளு கிறேன்.





எனது ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்திலே கன்னிவாடிக்கு அருகாமையில் ஏறத்தாழ அந்தப் பகுதியில் இருக்கிற அத் துணை கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் விவசா யத்தை நம்பி வாழ்கின்ற காரணத்தால கன்னிவாடிக்கு மேற்கே நாயோடைத்திட்டம் என்ற அந்தத் திட்டம் ஆரம்ப காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டும், இன்னும் சீரமைக்கப் படாமல் இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதியிலே இருக்கிற அத்தனை விவசாயமும் இன்று பாதிக்கப்பட்ட நிலைமையில் இருக்கிறது. எனவே நமது மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்வது, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய ஏறத்தாழ 2,500 ஏக்கர் நிலங்களும் நீர்பாசனம் பெறுவதற்கும் அந்த விவசா யத்தை நம்பி வாழ்கின்ற அந்த விவசாய பெருங்குடி மக் களுடைய வாழ்வு உயர்வதற்கும இந்த பெரியூர் நாயோடைத் திட்டத்தைத் தரவேண்டும என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், தாமரைக்குளம் என்று ஒரு குளம் இருக்கிறது. அந்தக் குளம் ஏறத்தாழ 15 ஆண்டு களுக்கு முன்பு தூர் வாரப்பட்டது. அதற்குப் பிறகு இன்று வரை தூர் எடுக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. எனவே அதற்கு வருகின்ற வாய்க்கால்கள் அனைத்தையும் சீரமைக்கவேண்டும். அந்த தாமரைக்குளத்தினுடைய நீர்ப் பாசனப் பகுதிகள் ஏறத்தாழ 700 ஏக்கருக்கு மேல் இருக் கின்ற காரணத்தால், தாமரைக்குளத்தை தூர்வார வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், மாங்கரை வாய்க்காலைச் சீர் படுத்தினால், ஏறத்தாழ 10 கண்மாய்களுக்கு தண்ணீர் வரக் கூடிய நிலைமையிருக்கிறது. எனவே வட பகுதியில் இருக்கிற கிராமங்கள் அனைத்திற்கும், 10 கண்மாய்களை நம்பி வாழ் கின்ற அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவி செய்யக் கூடிய வகையில், இந்த மாங்கரை கால்வாயை சீர்படுத்த வேண்டும். அப்படி சீர்படுத்தினால், கரிசல்குளம், புதுக்குளம் பழைய குளம், ஆப்பனம்பட்டி குளம் போன்ற அத்தனை குளங்களுக்கும் தண்ணீர் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே அதைச் சீரமைத்துக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் வத்தலகுண்டு ஒன்றியத்தினுடைய பெருந்தலைவராக இருக் கிற காரணத்தால், வத்தலகுண்டு பகுதியின் தும்பனப்பட்டி யின் அருகில் உள்ள கோம்பையில் பெரியோடை நீர்த்தேக்கத் திட்டம் என்ற அந்தத் திட்டம் தி.மு.க. ஆட்சிக்காலத்திலே

ஆரம்பிக்கப்பட்டது அந்தத் திட்டத்திற்கு பொதுப்பணித் துறையினரால், ரோடு வசதிகள் எல்லாம் செய்யப்பட்டு பொயோடைத் நீர்த்தேக்கத் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அவைகள் எல்லாம் நிறைவேற்றப்படும் தருவாயில நமது கழக ஆட்சி கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. உங்களுக்கு எல்லாம நன்றாகத் தெரியும். கழக ஆட்சிக் காலத்திலே இதே காயிதே மில்லத் மாவட்டத்திலே நிறைவேற்றப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம், மருதாநதித் திட்டம்—கழக ஆட்சியிலே தீர்மாணிக்கப்பட்ட திட்டம், அதேபோல—பெரிய கோம்மை யார் திட்டம் தருமத்துப்பட்டி நீர்த்தேக்கத் திட்டம், பாலார் —பொறந்தலார் திட்டம் போன்ற அத்துணை திட்டங்களும் கழக ஆட்சிக்காலத்திலேதான் நீர்ப்பாசனத்திற்கு முக்கியத் துவம் கொடுக்கப்பட்டு, விவசாய பெருங்குடி மக்களின் வாழ்க்கை உயர்வதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டங்களாகும். இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்ட பின்பு, வாய்க்கால்கள் கூட வெட்டப்படாமல, இந்தத் திட்டங்கள் கைவிடப்பட்டு சீராமைக்கப்படாமல் இருப்பதால, அங்குள்ள விவசாயிகள், இதனுடைய நன்மையைப் பெறமுடியாத நிலை மையில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். நமது இன்றைய தமிழக முதல்வரும் கழகத் தலைவரும் அந்தப் பகுதிககு ஏற்கெனவே நேரடியாக வந்திருந்தார்கள்.

கடந்த வறட்சியினால் அங்கே ஏறத்தாழ 3500 ஏக்கர் நிலங்களில் உள்ள 3 லட்சம் தென்னை மரங்கள் இருக்கின்றன —ஒரு லட்சம் தென்னை மரங்கள் பட்டுப்போய்விட்டன. இந்தத் திட்டம் நிறைவேறினால் அந்தப் பகுதியில் இருக்கிற கிராமங்களுக்கு குடிநீர் வசதித் தருவதோடு மட்டுமல்லாமல, அங்கேயிருக்கக்கூடிய 3,500 ஏக்கர் நிலங்களில் இருக்கக்கூடிய தென்னை மரங்கள் காப்பாற்றக்கூடிய நிலைமை ஏற்படும். எனவே இந்த அரசை நான் பணிவோடும் பரிவோடும் கேட்டுக் கொள்வது, இந்த பெரியோடை நீர்த்தேக்கத் திட்டத்தை நிச்சயமாக நிறைவேற்றித்தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், பொன்மாந்துறை பகுதியைப் பொறுத்தவரையில, திண்டுக்கல்லுக்கு அருகில் இருக்கக்கூடிய விவசாயப் பகுதி நிலங்கள் எல்லாம் வாட்டர் பொலுசன் காரணமாக, அங்கே இருக்கக்கூடிய தோல் பதனிடும் தொழிற் சாலைகளினுடைய நீர், நிலத்திற்கு அடியில் உள்ள நீரி னுடைய தன்மையை மாற்றிவிடுகின்ற காரணத்தால், அங் குள்ள விவசாயிகள், அந்த நீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்வதற்கு முடியாத நிலைமையில், அவர்கள் பயனற்ற வகையிலே இருந்து கொண்டு இருக்கின்றார்கள். எனவே அங்கே இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஆழ்



தமிழ் ... 144361 ... 600 009.

குழாய்க் கிணறுகளை அமைத்து, மிக ஆழத்திலிருந்து தண்ணீரை எடுத்து விவசாயம் செய்வதற்கு வசதி செய்து கொடுத்தால்தான் அங்கே இருக்கக்கூடிய விவசாயிகளின் [illegible] வளம் பெறும். அவர்கள் வாழ முடியும்.

எனவே கிணற்றிலிருந்து இறைக்கக்கூடிய தண்ணீரை வைத்து, பொன்மாந்துறை பகுதியில் இருக்கககூடிய அத்தனை விவசாயிகளும் பாதிக்கப்படுகிறார்கள். எந்த விவசாயம் செய்தாலும் அவர்கள் கைக்கு வந்து சேர்வதில்லை. எந்த விவசாயமும் செய்யமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. கேழ்வரகு சோளம் போட்டாலகூட வந்து சேரவில்லை. அப்படிப்பட்ட விவசாயம் செய்தாலும் வந்து சேரவில்லை. எனவே அந்தப் பகுதியில் சூழ்நிலை இருந்து வருகிறது. விவசாயிகளுடைய நலன்கள் பாதுகாக்கப்பட இருக்கக் கூடிய வேண்டும். மருதா நதி அணையினுடைய நீர்த் தேக்கத் திட்டம் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப் பட்டு, அது குறிப்பிட்ட உயரம் உயர்த்தப்படாத காரணத் தால அந்தப் பகுதியிலுள்ள மக்கள் இன்னும் 10 அடி உயரம் அதை உயர்த்தலாம் என்று சொல்கிறார்கள். அப்படி உயர்த் தினால் நிச்சயமாக அந்தப் பகுதி மக்களுக்கு பயன் கிட்டும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அத்தோடு மட்டு மல்ல, ஆத்தூரைப் பொறுத்தவரையில் மூன்று கண்மாய்கள் இருக்கின்றன. அந்த மூன்று கண்மாய்கள் மூலமாக நீர்ப் பாசனம் பெறக் கூடிய நிலங்கள் ஏறத்தாழ 2,700 ஏக்கர் நிலங்கள். அந்தக் குளங்கள் கடந்த 20 ஆண்டுகளாக ஆழப் படுத்தப்படவேண்டுமென்ற அந்தப் பகுதி விவசாயிகளுடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டு வருகிறது. நமது நீர்ப்பாசனத் துறையைச் சேர்ந்த பெரிய அதிகாரிகள் எல்லாம் கருத் தரங்கு நடத்துகின்ற வேளையில் அவர்களைக் கே பொழுது அந்த மண்ணை புல்டோசர் மூலமாக தூர் எடுத் தால் அதற்கு ஆகின்ற செலவு மிகவும் கூடுதலாக ரூ. 90 இலட்சம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்த மூன்று குளங்களையும் கருங்குளம், நடுக்குளம், வில்லு வெட்டி கண்மாய் ஆகியவற்றை ஆழப்படுத்தினால் மூன் போகம் விளையும். ஆத்தூர், காயிதே மில்லத் மாவட் டத்தை எடுத்துக் கொண்டால் இரண்டே பகுதிகள்தான் செழிப்பாக இருக்கக் கூடிய பகுதிகள். ஒன்று பழனி வட்டா ரம். இன்னொன்று ஆத்தூர்-வத்தலகுண்டு வட்டாரம். இந்த பகுதிகள் தவிர, மற்ற அத்துணை பகுதிகளும் ஏறத் தாழ 95 சதவீதம் வறட்சிப் பகுதிகளாக இருக்கின்றன. எனவே அந்த மூன்று கண்மாய்களை ஆழப்படுத்தவேண்டுமென்று இந்த நேரத்தில் மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு மட்டுமல்ல, வத்தலக்குண்டு பகுதியில் ஏறத் தாழ பெரிய வாய்க்கால் மற்றும் பலாத்து வாய்க்கால்களை சீரமைக்கவேண்டும். அத்தோடு வீரங்குளம், பெரிய கண்மாய்,

D



V211, 31'N89
N89.1012

வேடங்குளம் ஆகியவற்றை ஆழப்படுத்தவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய பகுதியில் வத்தலக்குண்டு பகுதியில் வைகை சீரமைப்புத் திட்டம் என்று ஒன்றை ஆரம்பித்து அந்தப் பகுதியிலே ஏறத்தாழ உலக வங்கி உதவி ஏறத்தாழ ரூ. 32 கோடி அண்ணாவின் ஆட்சிக் காலத்தில் பெறப்பட்டு, அவை மற்ற எதோ திட்டங்களுக் காக செலவழிக்கப்பட்ட காரணத்தால், இடையிலே அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டு விட்டது. ஏறத்தாழ ரூ. 3, 4 கோடி செலவழிக்கப்பட்டது. ரூ. 32 கோடி ஒதுக்கப்பட்ட திட்டத் திற்கு செலவழிக்கப்பட்டது ரூ. 3, 4 கோடிதான். ஆரம்பக் கட்டத்திலேயே அந்தத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டு விட்டது. எனவே இந்த அரசு வைகையினுடைய சீரமைப்புத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மற்றும் மருதா நதி வாய்க்கால், சித்தூர், நெல்லூர் பகுதியில் வரக் கூடிய வாய்க்கால், மணல் மேடு ஏற்பட்டுவிட்ட காரணத்தால் அந்தப் பகுதி விவசாயி களுக்கு தண்ணீர் கிடைக்காத சூழ்நிலை இருந்து கொண்டிருக் கிறது. எனவே, சித்தூர், நெல்லூர் வாய்க்கால்களை சீர மைத்துக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். இன்னும் குறிப்பாக சொல்லப் போனால் அந்தப் பகுதியிலே, எந்தப் பகுதி எடுத்துக்கொண்டாலும், வாய்க்கால் பகுதியாக இருக்கட்டும், குளங்கள் பகுதியாக இருக்கட்டும், 'என்க்ரோச்மென்ட்' அதிகமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் வீரையன் அவர்கள் சொன்னது போன்று எங்கே வாய்க்கால் இருக்கிறது என்பதே மிகவும் சந்தேகப்படக் கூடிய சூழ்நிலையில் இன்றைக்கு ஆளாக்கப்பட்டி ருக்கிறது. ஏனென்றால வாய்க்கால்கள் எல்லாம் வயக்காடுகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன. வயக்காடுகளாக ஆக்கப்பட்ட பிறகு, விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. நடைபாதைகள் எல்லாம் வயக்காடுகளாக ஆக்கப்பட்டு விவசாயம் செய்யப்பட்டு வரு கிறது. எனவே அந்த 'என்க்ரோச்மென்ட்' பொறுத்தவரை, நீங்கள் தீவிரமாக ஒரு சட்டத்தை பிறப்பித்து, அந்த கால் வாய்களை, வாய்க்கால்களை, குளம் போன்ற அத்தனை பகுதிகளிலும் இருக்கக்கூடிய அந்த ஆக்கிரமிப்புகளை அகற்று வதற்கு திட்டவட்டமான நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

குடகனாறு அணை என்பது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டு, வெள்ளச் சேதத்தினால் அது உடைக்கப்பட்டது என்பது எல்லோரும் அறிந்த உண்மை. அது ஏறத்தாழ ரூ. 4 கோடி செலவழிக்கப்பட்டு கட்டப்பட்ட அணை. அந்த அணையை சீர்படுத்துவதற்காக ஏறத்தாழ ரூ 7, 8 கோடி ஒதுக்கப்பட்டு, அவைகளை மராமத்து செய் வதிலே மிகப் பெரிய ஊழல் நடந்திருக்கிறது என்பதை இந்த



நேரத்திலே நான் சொல்லிக் கொள்கிறேன். ஏனென்றால் கழக ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட அந்த அணை உடைக் கப்பட்ட உடனே அப்போது இருந்த அரசு இந்த அணை கட் டியது சரியில்லை என்று உயர்மட்ட என்ஜினியர் குழு அமைத்து, அதை விசாரணை செய்ய இந்த அரசு உத்தரவு பிறப்பித்தது. இந்த அரசு விசாசரணை நடத்தியதற்கு பின்பு அந்த அறிக்கை இந்த அவையில் வைக்கப்பட்டதா என்றால் இல்லை, அந்த என்ஜினியர் குழு எந்தவிதமான தவறும் நடக்கவில்லை, முறையாகக் கட்டப்பட்டிருக்கிறது இந்த குடகனாறு அணை. இந்த அணை சரியான முறையில்தான் கட்டப்பட்டிருக்கிறது என்று அந்த அறிக்கையை இந்த அவை யில் வைக்கவில்லை கடந்த கால அரசு. ஆனால் இன்று அதை சீரமைப்பதற்காக ஏறத்தாழ ரூ. 7, 8 கோடி ஒதுக்கப் பட்டு, பல கோடி ரூபாய் அதிலே கொள்ளை அடிக்கப்பட் டிருக்கிறது. எனவே இந்த அவையிலே தமிழக முதல்வர் அவர் களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர் களுக்கும் தெரிவித்துக்கொள்வது, ஒரு குழுவை அமைத்து அதை விசாரிக்க உத்திரவிடவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-10).

ஏனென்றால் விவசாயிகளுடைய பிரச்சினை தான் இன்று முக்கியமாக இருக்கிறது. அத்துணை பிரச்சினைகளையும் அவையிலே நாம் விவாதிக்கிறோம். ஆனால் விவசாயி களுடைய பிரச்சினையை விவாதிப்பதற்கு அவனுக்கு சலுகை யைக் கொடுப்பதற்கு எந்த அரசும் தயாராக இல்லை. எனவே தான் நான் கேட்கிறேன். விவசாயிகளுடைய வரிப்பணம் வீணாகக் கூடாது.

அவர்கள் ஆயிரம் ஆயிரம் கோடி கொள்ளை அடிப்பதை நிச்சயமாக இந்த அரசு விசாரணை செய்ய வேண்டும். அதே சமயத்தில் இங்கே நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கூட—(மணியடிக்கப் பெற்றது) ஒரே நிமிடத்தில் முடித்து விடுகிறேன். சொன்னார்கள். பஸ் விற்பதிலே பெரிய தவறு நடந்திருக்கிறது என்று. ஆனால் ஒரு துறையிலே தவறு நடந்தால் அங்கேயிருக்கக் கூடிய அரசு ஊழியர்களை தற்காலிக வேலை நீக்கம் செய் கிறோம். விசாரணைக்கு உத்தரவிடுகிறோம். ஆனால் இதில் சம்பந்தப்பட்டிருக்கிற ஒரு நபர், நபர் என்று கூடச் சொல்ல வில்லை, அதில் சம்பந்தப்பட்டிருக்கிற ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருக்கட்டும் அல்லது முன்னாள் அமைச்சராக இருக்கட்டும் அவர்களைத் தண்டிக்க ஒரு சட்டம் கொண்டு வரப்படுமா என்பதை நான் இங்கே ஒரு கேள்விக்குறியாக வைக்க விரும்புகிறேன். அவர்கள் பதவி விலகிக் கொள்ள

வேண்டும். குற்றம் செய்கிறார்கள் என்று தெரிந்த
உடனே இந்த அரசு ஊழியர்களை வேலை நீக்கம் செய்து
விடுகிறோம். ஆனால் அதில் சம்பந்தப்பட்ட முன்னாள் சட்ட
மன்ற உறுப்பினர்கள், இன்று சாதாரண உறுப்பினராக இருப்
பவர்கள், முன்னாள் அமைச்சர்களாக இருந்தவர்கள் தவறு
செய்திருக்கிறார்கள் என்று தெரிந்தும்கூட நாம் ஏன் அனு
மதிக்க வேண்டும். எல்லோருக்கும் ஒரு சட்டம்தானே.
இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி எல்லோரும் சமம்
தானே. சாதாரண குடிமகன் முதல் முதலமைச்சர் வரை
எல்லோரும் சமம்தானே அரசியல் சட்டத்திற்கு முன்பு.
எனவே எல்லோரும் தண்டிக்கப்பட வேண்டும். அரசு ஊழி
யர்கள் எப்படி தண்டிக்கப்படுகிறார்களோ, அதே
போன்று எந்தச் சம்பவத்திலேயாவது சந்தேகப்படுகிற
போது, சட்டமன்ற உறுப்பினர்களானாலும் சரி,
அமைச்சர் பெருமக்களானாலும் சரி தவறு செய்திருக்கி
றார்கள் என்று தெரிந்தால் பதவி விலகி தான் நிரபராதி
என்று நிரூபித்துத்தான் இந்த அவையிலே அமர வேண்டும்
என்பதை இந்த நேரத்திலே கோரிக்கையாக வைத்து அதற்கு
ஒரு சட்டம் இந்த அவையிலே கொண்டு வரவேண்டுமென்று
இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொண்டு, எனது காயிதே மில்லத்
மாவட்டத்திற்கு பொதுவாக ஒரு கோரிக்கை வைத்து விடை
பெறலாம் என்று நினைக்கிறேன். எனது காயிதே மில்லத்
மாவட்டத்திற்கு ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டு
மென்று மிகப் பணிவோடு வேண்டி விரும்பி வணங்கிக்
கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. பொன். விஜயராகவன் ;** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறை அமைச்சரால்
கோரப்பட்டிருக்கக்கூடிய மானியக் கோரிக்கைகள் மீது
என்னுடைய கருத்துக்களைக் கூற முற்படுகிறேன். இன்
றைக்கு மிக முக்கியமான ஒரு பிரச்சினை காவிரி நீர்ப்
பிரச்சினை. வருகிற 28ஆம் தேதியன்று நம்முடைய மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் கர்நாடக முதலமைச்சரை சந்தித்துப்
பேச்சு வார்த்தை நடத்தயிருக்கிறார்கள் என்ற செய்தியை
நாங்கள் அறிந்துக் கொண்டோம். ஏறத்தாழ 16 ஆண்டுக்
காலமாக இந்தப் பிரச்சினை தொடர்ந்து இருந்துக் கொண்டி
ருக்கிறது.

1974ஆம் ஆண்டு காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து இந்த
மன்றத்திலே பேசுகிறபோது கூட அன்றைக்கு முதலமைச்
சராக இருந்த இன்றைய முதல்வர் அவர்கள், பேச்சு வார்த்தை
மூலம் தீர்க்க முடியவில்லை என்று சொன்னால் நடுவர் குழு
விற்கு போவதற்கு தயங்க மாட்டோம் என்று சொன்னார்கள்.
இதற்கு முன்னாலே இருந்த அரசு நடுவர் குழுவிற்குப் போக
வேண்டுமென்று கேட்டு ஏறத்தாழ 2, 3 ஆண்டுக்காலமாக



மத்திய அரசாங்கத்தினால் எந்தவிதமான முயற்சிகளும் எடுத்து கொள்ளப்படாத நிலையில் அதற்குப் பின்னாலே குடியரசுத் தலைவர் ஆட்சி வந்ததற்குப் பின்னாலும் கூட நம்முடைய மாநிலத்திலே ஆளுநர் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தி அப்போது ஒரு முடிவிற்கும் வரவில்லை. ஆனால் கடைசி யாக ஒரு வாய்ப்பாக இன்றைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் வந்ததற்குப் பின்னாலே பேச்சு வார்த்தை மூலம் நடைபெறுமா என்று முயற்சித்துப் பார்க்கிறோம் என்ற அளவில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 28ஆம் தேதி யன்று கர்நாடக மாநில முதலமைச்சரை சந்தித்துப் பேச இருக்கிறார்கள். நான் இந்த மன்றத்தின் மூலமாக இந்த அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம் நீங்கள் பேசுகிற பேச்சு இதே கடைசிப் பேச்சாக இருக்கட்டும். இதற்கு மேலேயும் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டே போவது அவ்வளவு நல்ல நிலைமையாக இருக்காது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பேச்சுவார்த்தையில் ஒரு முடிவு ஏற்படுமே யானால் அதை தமிழகத்தில் இருக்கக்கூடிய எல்லோரும் வரவேற்பார்கள். அப்படி இன்னும் காலத்தாமதமாகி அது இன்னும் இழுத்துக் கொண்டே போகுமானால், இந்தப் பேச்சுவார்த்தைகளினாலே எந்தவிதமான முடிவும் ஏற்பட வில்லை என்று வைத்துக் கொண்டால் உடனடியாக மத்திய அரசை வலியுறுத்தி நடுவர் மன்றத்திற்கு, நடுவர் குழுவிற்கு ஏற்பாடு செய்வதற்கான முயற்சிகளை உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை. நம்முடைய மாநிலத் தைப்பொறுத்தவரையில் மேற்கே நோக்கிப் பாய்கிற ஆறு களில் இருக்கக்கூடிய உபரியான தண்ணீரை இந்த மாநிலத் திற்குத் திருப்பி விடுவதற்கான பிரச்சினை. நான் அதனுடைய குறிப்பைப் படித்துப் பார்த்தேன். 1982ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் அவர்கள் ஒரு கடிதத்தை கேரள மாநில முதலமைச்சருக்கு எழுதியிருக்கிறார்கள். ஆனால் அதற்கு இன்று வரையில் எந்தவிதமான பதிலும் இல்லை. அது மட்டும் அல்லாமல் 1986 ஜூனில் இரண்டுமாநிலத்திற்கும் இடையே உள்ள தலைமை செயலாளர்களிடையே பேச்சு வார்த்தை நடத்தி அதற்குப் பின்னாலும் அதுபற்றி எந்தவிதமான ஒரு முடிவும் எற்படவில்லை.

அதுபற்றி எந்தவிதமான தகவலும் இல்லை என்ற கருத் துக்கள் இங்கே வருகிறது. அதோடு மட்டுமல்லாமல் இன்னொன்று. பரம்பிக்குளம் - ஆளியாறு திட்டத்திற்கான

ஒப்பந்தத்தை மறு ஆய்வு நடத்த வேண்டும் என்று ஒரு குறிப்பையும் தந்திருக்கிறீர்கள். அந்த ஒப்பந்தத்தை மறு ஆய்வு நடத்த வேண்டும் என்பதற்காக 15—12— 1988ஆம் ஆண்டு கடிதம் எழுதியிருக்கிறீர்கள். அதற்கும் பதில் இல்லை. ஆக கேரள மாநிலத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய அண்டை மாநிலம், இன்னும் சொல்லப்போனால் இன்றைக்கு ஆளுகின்ற பொறுப்பில் இருக்கக் கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மிகவும் நெருக்கமான ஒரு அரசுதான் இன்றைக்கு கேரளாவிலே இருந்து கொண்டிருக்கிறது. இடது சாரி ஜனநாயகத்திற்கு முன்னணியுடைய அரசு கேரளாவில் இருக்கிறது. இங்கிருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைவதற்கு பிரச்சாரம் செய்வதற்குக் கூட அங்கிருந்து ஈ. கே. நாயனார் போன்றவர்கள் இங்கே வந்தார்கள். இந்த நெருக்கமான, சுமுகமான நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு இந்த நிலைமைக்கு ஒரு முடிவு கட்டுவதற்காக இந்த அரசு ஏன் முயற்சி எடுத்துக் கொள்ளக் கூடாது என்று நான் இங்கே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். உடனடியாகத் தீர்வு காண வேண்டிய பிரச்சினைகள். இதன் அடிப்படையில் ஒன்றை இங்கே சொல்லாமல் இருக்க முடியாது. எங்களுடைய மாவட்டமான கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக் கூடிய நெய்யாறு இடது கரைச் சேனல் திட்டம் 1958ஆம் ஆண்டு — 1956-க்குப் பின்னாலே ஸ்டேட் ரீஆர்கனைசேஷனுக்குப் பின்னாலே இந்த இடது கரைச் சேனல் இங்கே தமிழ்நாட்டிற்கு வந்தது. அணை கேரளாவிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் அன்றைக்கு இந்த அணைகளில் தண்ணீர் கொடுக்கின்ற போது ஒப்பந்தம் ஏற்பட்டதாக இல்லை. இன்னொரு ஒப்பந்தம் ஏற்படவில்லை. ஆனால் அன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய அன்டர்ஸ்டான்டிங் 150 கன அடி தண்ணீராவது கிடைக்க வேண்டும் என்பது. இன்றைக்கு 75 கன அடி தண்ணீர் கூட அந்த வாய்க்காலில் கிடைக்கவில்லை. நான் இன்றைக்கு மகிழ்ச்சியோடு ஒன்றை நினைவுகூர கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு நீங்கள் இந்த நீர்ப்பாசனத் துறைக்கு என்று ஒரு குழுவை அமைத்திருக்கிறீர்கள். அந்தக் குழுவினுடைய தலைவராக அன்றைக்கு குமரி மாவட்டம் தாய் தமிழகத்தோடு இணைந்தபோது அன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த மரியாதைக்குரிய திருமலை அவர்களை இந்தக் குழுவினுடைய தலைவராகப் போட்டிருக்கிறீர்கள். இடது கரை சேனலுடைய பிரச்சினைகள் எல்லாம் நன்றாகத் தெரிந்த ஒருவரைப் போட்டிருப்பதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுடைய மாவட்டத்திலே அன்றைக்கு ஆட்சித் தலைவராக இருந்தவர் மாவட்டத்தைப் பற்றி தெரிந்தவர் இன்றைக்கு அந்தக் குழுவினுடைய தலைவராக இருக்கிறார். இன்றைய பொதுப் பணித் துறையினுடைய செயலாளரும் எங்களுடைய மாவட்ட



ஆட்சித்தலைவராக இருந்தவர் என்ற காரணத்தாலே இரண்டு பேருக்கும் நன்றாகத் தெரிந்த ஒரு விஷயம். எனவே இவர்களுடைய காலத்திலே இது நடைபெறும் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு. ஆகவே அந்த 150 கன அடி தண்ணீரைப் பெறுவதற்கான ஒப்பந்தத்தை உடனடியாக விரைந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, நெய்யாறினுடைய இடது கரை சேனலில் ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு மடிச்சல் கிளைக் கால்வாய் என்ற ஒரு கிளைக் கால்வாய், ஒரு காலத்தில் ஒரு தொண்டு நிறுவனம் அவர்களுடைய சொந்தச் செலவில், பணத்தில், தனியார்கள் வெட்டிக் கொடுத்துவிட்டு போய் இருக்கிறார்கள். அவ்வாறு அந்தக் கால்வாய் ஏற்பட்டிருக்கிறது. அதை இன்னும் அரசு ஏற்று அதைப் பராமரித்து ஒழுங்காக அந்தக் கிளைக் கால்வாய்களுக்கும் தண்ணீர் செல்வதற்கான முயற்சியையும் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேசிய நீர் நிர்வாகத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை இந்தக் குறிப்பிலே நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். இதனுடைய அடிப்படையில் 5 முக்கியமான திட்டங்கள், கால்வாயை நவீனப்படுத்துவதும், செயல்படுத்துவதற்குமான செயற்குறிப்பு இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. சாத்தனூர், தாமிரபரணி, கோதையாறு, அமராவதி, பழைய வாய்க்கால், கம்பம் பள்ளத்தாக்கு என்று 5 திட்டங்களைச் செயற்படுத்த 52.70 கோடி ரூபாய்க்கு தமிழ்நாடு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியிருக்கிறது என்றுதான் போட்டிருக்கிறீர்கள். அட்மினிஸ்ட்ரேடிவ் சாங்ஷன்தான் வந்திருக்கிறது. ஃபினான்ஷியல் சாங்க்ஷன் இருப்பதாக இதிலே போடப்படவில்லை. அதை நான் இங்கே வலியுறுத்த கடமைப்பட்டு இருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் இதன் அடிப்படையில் ஏறத்தாழ 1.53 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி உறுதி பெறும் என்று சொல்லியிருக்கிறீர்கள். தமிழ்நாட்டிலே காவேரி கழிமுகத் திட்டத்திற்கு அடுத்தபடியாக பெரிய திட்டம் இந்தத் திட்டம் என்று நான் கருதுகின்றேன். காவேரி கழிமுகம் நவீனப்படுத்துவது என்கின்ற போது ஏறத்தாழ தமிழ்நாட்டில கால்வாய் பாசன வசதி பெறுகின்ற இடங்களில் 39% நிலம் காவேரி கழிமுகத் திட்டத்தின் கீழ் வருகிறது. அது போனால் இந்த தேசிய நீர் நிர்வாகத் திட்டம் இருக்கிறதே இதனுடைய அடிப்படையில் ஏறத்தாழ 15% இடம் வருகின்ற போது இந்த இரண்டு திட்டங்களும் முழுமையாக செயல்படுமேயானால், முழுமையாக இரண்டு திட்டங்களுடைய அடிப்படையிலே அந்தத் திட்டங்கள் நவீனப்படுத்தப்படுமேயானால் 54% தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய

பாசனம் பெறுகின்ற—கால்வாய் பாசனம் பெறுகின்ற பகுதிகள் நவீனப்படுத்தப்படும் என்று நான் நம்புகிறேன். இதை உடனடியாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளில் இந்த அரசாங்கம் ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்று, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சித்தாறு பட்டணங்கால்வாய் திட்டத்தைப்பொறுத்தவரை கடந்த முறை தண்ணீர் ஏராளமாக இருந்தபோதிலும், கால்வாய்கள் ஒழுங் காகப் பராமரிக்கப்படாததினுடைய காரணத்தால், ஏராள மான இடங்களிலே லீக்கேஜ் ஏற்பட்ட காரணத்தாலும், பல ஷட்டர்கள் அங்கே உடைந்துகிடக்கின்ற காரணத்தாலும், இன்னும் கால்வாய்கள், கிளைக் கால்வாய்கள் தூர்ந்து கிடப் பதாலும், ஏறத்தாழ ஆயிரம் ஏக்கருக்கு மேலான நிலங் களுக்கு, தண்ணீர் இருந்தும் தண்ணீர் விடமுடியாமல், அங்கே யுள்ள பயிர் காய்ந்து போயிற்று, தீய்ந்து போயிற்று என்று இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கடைவரம்பு நிலம்வரையில் தண்ணீர் சென்று பாய்வதற்கு, அங்கேயுள்ள விவசாயிகளுக்கு விவசாய உதவி ஏற்படும் வகையில் தூர்ந்து கிடக்கும் கால்வாய்களைத் தூர் எடுத்து, உடைந்து கிடக்கும் ஷட்டர்களை எல்லாம் சீர்படுத்தி, நவீன முறையில் சிமெண்ட் லைனிங் போட்டு, அதை நவீனப் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை ).

இந்தக் குறிப்பிலே நீங்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறீர் கள். ''பொதுப்பணித்துறை பல்வேறு பாசனத் திட்டங்களை உருவாக்கிச் செயலாக்குவதற்கும், நிலத்தடி நீர் ஆய்வு முடிவுகளின் மூலமாகக் குடிநீர்த் தேவையை நிறைவு செய் வதற்கும் பொறுப்பு வகிக்கிறது'' என்று சொல்லியிருக் கிறீர்கள். குடிநீர்த் தேவையையும் சேர்த்துத்தான் நாம் இங்கே கணக்கில் எடுத்துக்கொண்டாக வேண்டும். அந்த அடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆய்வு செய்யப் பட்டு, விட்டுவைக்கப்பட்டிருக்கக்கூடிய மாம்பழத்து அணையை குடிநீருக்கும், அதோடு பாசனத்திற்கும் சேர்த்து நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

விளாத்துறை நீரேற்றுப் பாசனத் திட்டம் என்பது திருவிதாங்கூர் அரசு இருந்த காலத்தில் நடைமுறைப்படுத்திய திட்டம். சித்தாறு பட்டணங்கால்வாய் திட்டம் வந்த பின்னாலே, இந்த விளாத்துறை நீரேற்றுப் பாசனத் திட்டம் அவசியமில்லை என்ற அளவில், அங்கே இருக்கக்கூடிய மிகப் பெரிய ஜையன்ட் பம்புகள், மின்சார பம்புகள் அகற்றப்பட்டு





அந்தத் திட்டம் அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசால் கைவிடப்பட்டது. இன்றைக்கு சித்தாறு பட்டணங்கால்வாய் திட்டத்தின் மூலமாகக்கூட ஒழுங்காக விவசாயிகளுக்கு தண்ணீர் கொடுக்க முடியாத நிலை என்ப தோடு, ஏறத்தாழ 710 ஏக்கர் நிலத்திற்கு அந்தத் திட்டத்தை மீண்டும் செயற்படுத்தினால் பாசன வசதி அளிக்க முடியும் என்ற நிலை இருக்கிறது. அந்தப் பகுதி மேடாக இருக்கக் கூடிய காரணத்தாலே, எல்லா வறட்சிக் காலங்களிலும் அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுகிறது. எனவே குடிநீருக்கும், பாசனத்திற்கும் சேர்த்து விளாத்துறை நீரேற்றுப் பாசனத் திட்டத்தை, அன்றைக்கு திராவிட முன்னே ற்றக்கழக அரசு கைவிட்டதை, இன்றைக்கு மீண்டும் திராவிட முன்னேற்ற கழக அரசு வந்திருக்கிற நிலையில், செயல்படுத்து வதற்கு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து வள்ளியாற்றில் வீணாகப் போகக்கூடிய தண்ணீரை சிக்கனப்படுத்த வேண்டும். அதைப்போல பழையாறு, இப் படிப்பட்ட ஆறுகளில் வீணாகப் போகும் தண்ணீரை சிக்கனப் படுத்தி, அதைச் சேமித்து வைத்து, அவற்றைப் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக வள்ளியாற்றில் வீணாகக் கடலில் சென்று கலக்கும் நீரைப் பயன்படுத்தும் திட்டத்தை உடனடி யாக இந்த அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய ஏரிகளாக இருக்கட்டும், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான குளங்களாக இருக் கட்டும், அத்தனையும் இன்றைக்குத் தூர்ந்து போய் கிடக் கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய 90 சதவிகிதம் குளங்கள்— பெரிய ஏரிகள் இல்லை என்று சொன்னாலும், 90 சதவிகிதம் குளங்கள் தூர்ந்து கிடப்பதோடு மட்டுமல்ல மெள்ள மெள்ள அந்தக் குளங்கள் எல்லாம் மைதானங்களாகி, அன்றைக்கு மைதானமாக இருந்தது குடியிருப்புகளாகி, அந்த விளை நிலங்கள் எல்லாம் ஆக்கிரமிக்கும் சூழ்நிலை இருப்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நீர்ப் பாசனக் குளங்கள், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான குளங்கள் அனைத்தையும் ஆய்வு செய்தால், பெருவாரியான குளங்களை இன்றைக்குத் தனியார் ஆக்கிரமித்துக் கொண்டிருக் கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட முடியும். அதைக் கருத்திற் கொண்டு, அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். அடுத்து அந்தக் குளங்களைத் தூர் வாரி, தோண்டி, ஆழப்படுத்தி அவற்றை ஒழுங்காக நீர்ப் பாசனத்திற்குப் பயன்படுத்த வேண்டும்.

[திரு. பொன் விஜயராகவன்] [1989 ஏப்ரல், 19

கோதையாறு பாசனத் திட்டமாக இருந்தாலும் சரி, மற்ற பாசனத் திட்டங்களாக இருந்தாலும் சரி, அங்கே யிருந்து வீணாகும் நீரை சேமிக்க முடியும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோதையாறு பாசனத் திட்டத்தைப் பொறுத்த வரையில் அதை நவீனப்படுத்துவதற்காக முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்று சொல்லியிருக்கிறீர்கள். தேசிய நீர் நிர்வாகத் திட்டத்தின் கீழ் அதைக் கொண்டு வந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் கொண்டு வந்து இருக்கக் கூடியவைகளிலேயே மிக பழமையான ஒரு திட்டம் இந்த கோதையாறு பாசன திட்டம் ஆகும். அதை கருத்தில் கொண்டு அந்த கோதையாறு திட்டத்தை நவீனப்படுத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை உடனடியாக இந்த அரசு ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.

இன்றைக்கு விவசாயிக்கு பயன்படுகின்ற தண்ணீர் 60, 65 சதவீதம் இருக்குமானால் அதில் 30, 35 சதவீத தண்ணீர் இன்றைக்கு வீணாகி விடுகிறது. அதை கன்சர்வ் செய்தால் அதை நாம் சேமித்து நாம் பயன்படுத்தினால் கூட ஓரளவுக்கு இன்றைக்கு ஏற்பட்டு கொண்டு இருக்கிற கடை வரம்பு நிலங் களுக்கு கொடுக்கக் கூடிய சூழ்நிலை இருக்கும். கடந்த முறை ஏறத்தாழ 80, 90 சதவீதம் அணைப் பிடிப்புப் பகுதியில் தண்ணீர் இருந்தது. 80, 90 சதவீத தண்ணீர் இருந்த பின்னால் கூட் கடந்த போகத்தில் ஒழுங்காக கடை வரம்பு நிலங்களுக்கு தண்ணீர் சென்று சேரவில்லை. அதற்கு காரணம் இருக்கக் கூடிய எல்லாக் கால்வாய்களும் தூர்ந்து கிடக்கின்ற ஒரு சூழ் நிலை இருக்கிறது. இதை கருத்தில் கொண்டு தூர்ந்து இருக்கக் கூடிய இந்த கால்வாய்களை எல்லாம் இந்தக் கோடைக் காலத் தில் அடுத்து தண்ணீர் விடுவதற்கு முன்னால் ஜூன் மாதத்தில் தண்ணீர் விடுவார்கள், ஜூன் மாதத்தில் தண்ணீர் விடுவதற்கு முன்னால் தூர்ந்து இருக்கின்ற அந்த கால்வாய்களை எல்லாம் தூர் எடுத்து செப்பனிட்டுத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்று ஏற்கனவே இந்த அரசின் பரிசீலனையில் இருக்கிற பிரச்சினை தான்; ஆயக்கட்டு கமிட்டிகள் போடுவது ஒவ்வொரு ஆயக்கட்டுப் பகுதியில் இருக்கக்கூடிய மக்களை 'பீப்பிள்ஸ் இன்வால்வ்மெண்டு' என்று சொல்வார்களே அது போல் மக்களை அதில் ஈடுபடுத்துகின்ற ஒரு திட்டத்தை பொதுப் பணித் துறையின் கீழ் ஏற்படுத்திக் கொண்டு ஆக வேண்டும். இன்றைக்கு காண்டிராக்ட் முறையை கூட நம்மால் மாற்றி அமைத்து அந்தந்தப் பகுதியில் இருக்கக் கூடிய அந்த ஆயக் கட்டுதாரர்களைக் கொண்டு ஒரு கமிட்டியாகப் போட்டு



1989 ஏப்ரல், 19] [திரு. பொன் விஜயராகவன்]

மக்களே இதில் இன்வால்வ் மெண்டாக இருக்கக் கூடிய அளவுக்கு அந்த கால்வாய்களில் செப்பனிடும் பணிகளைச் செய்து, தூர் வாருதல் போன்ற காரியங்களை பொதுப் பணித் துறையின் மூலமாக அதை நல்ல முறையில் பராமரிக்கின்ற ஒரு முறையை கூட இந்த அரசு யோசிக்கலாம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அளவுக்கு இந்த மானியக் கோரிக்கையின் மீது குறிப்பாக காவேரிப் பிரச்சினையை உடனடி யாக இந்த மன்றத்திலே- 28 ஆம் தேதிக்குப் பின்னாலும் நம்முடைய அவை இருக்கிறது.- ஒரு நல்ல செய்தியை நாம் எதிர்பார்க்க முடியும் என்று நம்புகிறோம். அப்படி ஒரு நல்ல செய்தியை எதிர்பார்த்து பேச்சு வார்த்தை பேசுகிறோம் என்று சொல்லுகின்ற இந்த அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நாம் இந்த மன்றத்தின் சார்பாக வாழ்த்தி அனுப்புவதற்கு கடமைப்பட்டிருக்கிறோம். ஒரு முடிவு ஏற்பட வில்லை என்று சொன்னாலும் கூட இந்த பேச்சு வார்த்தையின் மூலம் ஒரு நல்ல முடிவு ஏற்படவில்லை என்று சொன்னாலும் கூட இந்த காவேரிப் பிரச்சினையில் ஒரு திட்டவட்டமான முடிவு இந்தச் சட்டமன்றத் தொடர் முடிவதற்குள் இந்த அரசு மேற் கொள்ள வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தி வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**பி. எச். பாண்டியன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை, பாசனம் குறித்த மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களை பேசு வதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நான் நன்றி கூறுகிறேன். விவசாயி மழையை நம்பி, கால்வாயை நம்பி, கிணற்றில் உள்ள நீரை நம்பி, தன்னுடைய விவசாயத் தொழிலை செய்து அதற்கு மேல் அரசாங்கத்தையும் நம்பி சில நேரங்களில் அல்லலுக்கு ஆளாகி உயராமல்; வாழ முடியாமல் தத்தளித்துக் கொண்டு இருப்பதை நாடு நன்கு அறியும்.

மானாவாரி குளங்கள் தான் இன்றைக்கு நம்முடைய தமிழகத்தில் அதிகம். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தாமிரபரணி ஆறு அங்கே போகிறது; முன்பு நெல்லை மாவட்டத்தில் முடிவு அடைந்து கொண்டிருந்தது. கடலில் கலந்து கொண்டு இருந்தது. இப்போது சிதம்பரனார் மாவட்டத்திற்குச் சென்று கடலில் கலந்து கொண்டு இருக்கிறது. தாமிரபரணி ஆற்றுக் கால்வாய்களை நவீனப்படுத்துவதற்கு உலக வங்கியின் உதவியோடு மறைந்த தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு 9 கோடி ரூபாயை ஒதுக்கி அதற்கான ஒப்புதலை எல்லாம் வழங்கி தாமிரபரணி ஆற்றில் உள்ள எல்லா கால்வாய்களையும் நவீனப் படுத்துவதற்கு அவருடைய காலத்திலேயே வேலையை துவக்கி வைத்து விட்டு அனுமதி வழங்கி விட்டு மறைந்து இருக்கிறார்கள்.

நவீனப்படுத்தபடும்போது, தண்ணீர் நிச்சயமாக சேமித்துவைக்க ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அதை வேகமாகச் செய்தால் நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எல்லா கால்வாய் களிலும் தண்ணீரைத் தேக்கி வைத்து விவசாயப் பெரு மக்களுக்குக் குறித்த காலத்தில் விவசாயத்தைச் செய்வதற்கு வாய்ப்பைக் கொடுக்கும். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், காரணம் விவசாயத்தைப் பற்றிப் பேசும்போது மாநில அளவில் பேசுவதை விட தொகுதியைப் பற்றிப் பேசுவது தான் சாலச் சிறந்ததாகும். என்னுடைய தொகுதியில் கடையம் பஞ்சாயத்து யூனியனிலே இருக்கக்கூடிய பண்டாரக் குளம் என்று ஒரு குளம் இருக்கிறது. இதற்கு சுமார் 10 ஆண்டுக் காலமாக டிசிஆர் எஸ்டிமேட் ஆறு இலட்சம் ரூபாய்க்கு போடப்பட்டு இன்னும் அனுமதி வழங்கப்படாமல், பணி துவக்கப்படாமல் இருக்கிறது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-30)

மணிமுத்தாறைப் பொறுத்தவரையில் 80 அடி கால்வாய், மற்றொன்று 40 அடி கால்வாய். இந்த ஆண்டு 82 அடி தண்ணீர் இருக்கும்போது தண்ணீரைத் திறந்து விட்ட காரணத்தால் 80 அடி கால்வாய் விவசாயப் பெருமக்க ளுக்கு வரவேண்டிய நேரத்தில் அவர்களுடைய பயிர் பசுமை யாவதற்கு வாய்ப்பில்லாமல் போய் விட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். 82 அடி இருக்கும்போது திறக்காமல் 80 அடிக்கு கீழே வந்த பிறகு திறந்திருப்பார்களே யானால் சில விவசாயிகளுக்கு, நூற்றுக் கணக்கான ஏக்கர் பயிர் செய்யக் கூடிய விவசாயிகளுக்கு, குறிப்பாக பல்வேறு கிராம விவசாயிகளுக்கு, மலையாங்குளம், பாடாபுறம், கரிசல்பட்டி, பிள்ளைகுளம், கங்கராங்குளம், போன்ற பகுதிகளில், அங்கே இருக்கக் கூடிய விவசாயப் பெருமக்களுக்கு அது நிச்சயமாக உதவியாக இருந்திருக்கும். ஆகவே, இனிமேல் திறந்துவிடும் போது 80 அடிக்கு கீழே வந்த பிறகு திறந்துவிடுவீர்களேயானால் 80 அடி கால்வாய் விவசாயிகளுக்குப் போக வேண்டிய தண்ணீர் போய் சேரும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். எல்லா விவசாயிகளுக்கும் ஓர் ஆர்வம் உண்டு. தண்ணீர் எங்களுக்கு வேண்டுமென்று கேட்பார்கள். நானேகூட கேட் டிருக்கிறேன். 40 அடி கால்வாயைப் பொறுத்த வரையில், பொட்டல் அருகே பல்வேறு குளங்கள் இருக்கின்றன. சுமார் 12 குளங்கள் இருக்கின்றன. 80 அடி கால்வாய்க் குளங்கள் சுமார் 128 ஏக்கர் பயிர் செய்யக் கூடிய மலையாங்குளம், 10 ஏக்கர் பயிர் செய்யக் கூடிய வடக்கு வழிமறிச்சான்குளம், 49 ஏக்கர் பயிர் செய்யக்கூடிய தெற்கு வழிமறிச்சான்குளம், 52 ஏக்கர் பயிர் செய்யக் கூடிய வல்லமடபிள்ளைக் குளம், 29 ஏக்கர் பயிர் செய்யக்கூடிய கன்னிப்பொத்தை, 41 ஏக்கர்



பயிர் செய்யக்கூடிய பெருமாள் புதுக் குளம், 29 ஏக்கர் பயிர் செய்யக் கூடிய மாடன்குளம், 64 ஏக்கர் பயிர் செய்யக் கூடிய கூத்தாடிகுளம், 78 ஏக்கர் பயிர் செய்யக்கூடிய மாட்டுடையார்குளம், 20 ஏக்கர் பயிர் செய்யக் கூடிய செங் குளம், 23 ஏக்கர் பயிர் செய்யக் கூடிய ஆத்தியான் குளம், 37 ஏக்கர் பயிர் செய்யக் கூடிய கூத்தடிச்சி குளம் என்று பல்வேறு 12 குளங்கள் 80 அடி கால்வாய் தண்ணீரினால் பயன்படக் கூடிய குளங்களாகும். இவைகள் இந்த ஆண்டு பாதிக்கப்பட்டு இருக்கின்றன என்பதை நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு மேற்கே சுமார் 40 அடி கால்வாயில் பல குளங்கள் தண்ணீரைப் பெற்றுக் கொண்டிருக் கின்றன. அதிலும் தற்சமயம் பொட்டல் அருகே குறிப்பால் குளத்திற்கு அருகே மணிமுத்தாறு அணையில் 40 அடி கால்வாய் தண்ணீரை அதன் கிழக்கு மறுகால் அருகே ஒரு மதகு கட்டுவார் களேயானால் மலையங்குளத்திற்கு தண்ணீர் சென்று அங்கே அருகாமையில் இருக்கக் கூடிய வல்லத்துநம்பி குளம், கன்னி பொத்தைகுளம், பெருமாள் புதுக் குளம், மாடன்குளம், மேலே சொன்னேனே, பல்வேறு குளங்கள் அத்தனை குளங் களும் நிரம்பி விவசாயப் பெருமக்களுக்கு பலன் கிடைக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைத் தவிர அமைச்சர் அவர்கள் பச்சையாறு திட்டம், நம்பியாறு திட்டம் என்று இரண்டு திட்டத்தையும் நிறை வேற்றுவதாக நெல்லையிலே வந்து சொல்லியிருக்கின்றார்கள். எத்தனையோ பாசன அமைச்சர்கள் இருந்த நேரத்திலும் இதற்காக முயற்சி செய்து முடியாத அந்தத் திட்டத்தை நீங்கள் நிறைவேற்றுவீர்களேயானால் உண்மையிலேயே நான் பாராட்டுவேன். காரணம் பல பேரால் நிறைவேற்ற முடிய வில்லை. காரணம் இயற்கைச் சூழ்நிலை, அதில் வேறு ஒன்றும் விவகாரம் கிடையாது.

இங்கே இருக்கிற நம்முடைய பாசனத் துறை அமைச்சர் அவர்கள் எந்த எந்த அணைகளை போய்ப் பார்த்தார் என்பது எனக்குத் தெரியாது. ஒருமுறை நான் சட்ட அமைச்சரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். நான் துணைச் சபாநாயகராக இருந்த போது சண்டிகாருக்கு அருகே பக்ராநங்கல் அணையைப் போய்ப் பார்க்கும்போது நம்முடைய தமிழக அமைச்சர் யாரா வது அந்த அணையைப் பார்த்திருக்கிறார்களா என்று வருகைப் பதிவேட்டை (விசிட்டர்ஸ் புக்) பார்த்தேன். அதில் பார்த்த போது கலைஞர் ஒருமுறை சென்றிருக்கிறார். சாதிக் பாட்சா ஒரு முறை சென்றிருக்கிறார். வேறு யாரும் போகவில்லை. ஆகவே நீங்கள் போய் பார்த்துவிட்டு— காரணம் 'வாட்டர் மானேஜ்மெண்ட்' அங்கே போய்ப் பார்த்தால் தான் தெரியும்— வரவேண்டும். அமைச்சராக இருக்கிற நீங்கள்

அங்கே போய்ப் பார்த்தால்தான் காலத்திற்கு ஏற்ப தண்ணீரை திறந்துவிடுவது, எப்படி தண்ணீரை சேமித்து வைப்பது என்பதைப் தெரிந்து கொள்ள முடியும். காரணம் நமக்கெல்லாம் விவசாயம் முழுமையாகத் தெரியாது. ஆகவே, பார்த்து தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொன்னேன்.

அது தவிர, இன்றைக்கு பச்சையாறு திட்டம் நிறைவேறி வரும்போது—என்றைக்கு வந்தாலும் சரி—அந்தத் திட்டத்தால் இடையன்குளம், உலகனகுளம், இன்னும் பல்வேறு கிராமங்கள் அடங்கிய குளங்களுக்கு எல்லாம் தண்ணீர் கிடைப்பதற்கான வாய்ப்பு கிடைக்கும். ஆகவே அந்தத் திட்டத்தை எந்த அளவுக்கு உங்களால் நிறைவேற்ற முடியுமோ அந்த அளவுக்குச் செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு நம்முடைய மணிமுத்தாறு அணையில் இருக்கக்கூடிய ஸ்டோரேஜ் பொசிஷன் 377 எம்.சி.எப்.டி. அதைப்போன்று பாபநாசம் 112 எம். சி. எப். டி. நான் இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால் என்னுடைய தொகுதியில் தாமிரவருணி ஆற்றிலிருந்து கன்னடியன் கால்வாய் ஓடிக் கொண்டிருக்கிறது. 11 ஆண்டு காலமாக இதே கால்வாய் மூலம் பல ஆயிரம் ஏக்கர் பயிர் செய்யக் கூடிய விவசாயப் பெருமக்களுக்கு ஜூன் மாதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டு வருகிறது. அப்படி திறந்துவிட்டு, பசுமையான காட்சியை கடந்த கால ஆட்சியில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆசியோடு காண முடிந்தது. அவர்கள் ஆசியோடு அணையைத் திறந்துவிடக் கூடிய வாய்ப்பு இருந்தது. ஏனென்றால் கன்னடியன் கால்வாய்தான் முதல் கால்வாய். கன்னடியன் கால்வாயில் தண்ணீரை திறந்து விட்ட பின்னால் தான் நதியுன்னிக் கால்வாய், பாளையம் கால்வாய் மற்ற கால் வாய்களில் திறந்து விடுவது வழக்கம். இப்போது தண்ணீர் இருக்கிறது. அடுத்த மாதம் தண்ணீர் திறந்து விடப்படும். வழக்கம்போல் இந்த கன்னடியன் கால்வாயை முதலில் திறந்து விட வேண்டும். இதற்கு முன்பும் அப்படித்தான் இருந்தது. அதற்கு ஜி.ஓ. இருக்கிறது. அரசாங்க உத்தரவு இருக்கிறது. (குறுக்கீடு) சம்பந்தம் இல்லாத சப்ஜெக்டாக இருப்பதால் கொஞ்சம் யோசித்து பேசவேண்டியிருக்கிறது. விவசாயம் அவ்வளவாகத் தெரியாது. ஆகவே, ஜூன் மாதம் முதல் வாரத் தில் கன்னடியன் கால்வாயில் தண்ணீரை திறந்துவிட வேண்டு மென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஸ்டோரேஜ் பொசிஷனை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, கால்வாய்கள் குறுக்கே சிறு சிறு பாலங்கள் கட்ட வேண்டும். இப்போது நடைபெற்ற தேர்தலிலே நான் வெற்றி பெற்ற போது, மேலச் செவலில் பாளையம் கால்வாய்



குறுக்கே ஒரு பாலம் கட்ட 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, நிர்வாக ஒப்புதலும் வழங்கப்பட்டு, பின்னால் நிறுத்தப்பட்டது. தற்போது அந்த வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்** : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுப் பணித் துறை யில் அனுபவம் இல்லை என்று சொன்னார்கள். அவர்கள் குறிப்பிடுகிற பாலம் கட்டுவதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி எச். பாண்டியன்** : கால்வாயில் நீங்கள் கட்ட வேண்டியது தான். அது நெடுஞ்சாலை அல்ல. (குறுக்கீடு) சரி. விவசாயப் பெருமக்களுக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்த எந்த அளவுக்குப் பணியாற்ற முடி யுமோ அந்த அளவுக்கு வேகமாகப் பணியாற்ற வேண்டும். ஏனென்றால் இந்தப் பாசனத் துறைதான் விவசாயிகளுக்கு முக்கியமான துறை. மழை பெய்தால் தண்ணீர் நிரம்ப வரு கிறது. அதை சேமித்து வைத்து, உரிய காலத்தில் முறைப்படி கால்வாய்களில் திறந்த விட்டு விவசாயப் பெருமக்கள் வாடாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்ற ஆலோசனையைத் தெரி வித்து, இந்த அளவில் என்னுடைய கருத்துக்களைச் சொல்லி முடித்து, அமர்கிறேன், வணக்கம்.

(பிற்பகல் 5-40)

***திரு. க. சொ. கணேசன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரசியலுக்கு வருவதற்குக் காரணமாக இருந்த, தந்தை பெரியாருடைய நினைவிடத்திற்கும், அறிஞர் அண்ணா நினைவிடத்திற்கும் முதலிலே வணக்கத்தை தெரி வித்துக் கொள்கிறேன்.

ஜெயங்கொண்டம் தொகுதியில் என்னை வேட்பாளராக நிறுத்தி வெற்றி பெறுவதற்கு உறுதுணையாக இருந்த தமிழினத் தலைவரும், எங்களுடைய தானைத் தலைவரும் ஆன கலைஞர் அவர்களுக்கும், இனமான காவலர் பேராசிரியர் அவர்களுக்கும் எங்களுடைய மாவட்ட முன்னாள் அமைச்சர் அண்ணன் அன்பில் அவர்களுக்கும் தஞ்சை மாவட்டச் செயலாளரும், இன்றைய வேளாண்மைத் துறை அமைச்சருமான அண்ணன் கோ. சி. மணி அவர்களுக்கும் மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அண்ணன் செல்வராஜ் அவர்க ளுக்கும் முதலிலே எனது நன்றியை தெரிவித்துக் கொள் கிறேன்.

என்னை ஜெயங்கொண்டம் தொகுதியில் சட்டமன்ற உறுப்பி பினராகத் தேர்ந்தெடுத்த என்னுடைய தொகுதி மக்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் முதன்முதலாக சட்டமன்றத்தில் கன்னிப்பேச்சை பேசுவதற்கான வாய்ப்பினை எனக்கு நல்கி இருக்கிறீர்கள்.

பொதுப் பணித்துறை மானியக் கோரிக்கை மீது பல கருத்துக் களைச் சொல்ல வேண்டுமென்ற ஆசை இருந்தாலும் குறுகிய காலமாக இருக்கின்ற காரணத்தால் நான் முதலில், பொதுத் தொண்டு செய்து இன்று பொதுப் பணித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கக் கூடிய ஒரு அமைச்சரின் மானியக் கோரிக் கையிலே பேசுவதற்கான வாய்ப்பு கிடைத்தமைக்காக நான் நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஒரே ஒரு பாசன வாய்க்கால்தான் இருக்கிறது. அது கொள்ளிடத்தில் இருந்து பிரிகிறது. அதனை பொன்னாற்று வாய்க்கால் தலைப்பு என்று சொல்வார்கள். இல்லாவிட்டால் பொன்னேரி வாய்க்கால் தலைப்பு என்று சொல் வார்கள். கொள்ளிடத்தில் குருவாடி என்ற இடத்தில் அந்தத் தலைப்பு வருகிறது. அந்தத் தலைப்பிலிருந்துதான் ஜெயங் கொண்டம் தொகுதியில் T. பழவூர் ஒன்றியத்தில் இருக்கிற ஒரே ஒரு பாசன வாய்க்காலுக்குத் தண்ணீர் வருகிறது. அதன் நிலை மையை யாருமே சரியாகக் கவனிக்கவில்லை. காரணம் அதைக் கண்காணிக்கின்ற பிரிவு அதிகாரி தா. பழூரில் இருக்கிறார். அது திருச்சி மாவட்டம். அதற்கு மேல் இருக்கிற உதவி பொறியாளர், அதாவது கண்காணிக்கின்ற உதவிப் பொறியாளர் தஞ்சை மாவட் டத்தினுடைய குடந்தையில் இருக்கிறார். அதற்கும் மேலே இருக்கிற செயற்பொறியாளர் மற்றும் நிர்வாகப் பொறியாளர் ஆகிய இருவரும் வெவ்வேறு இடங்களில் இருக்கிறார்கள். சிதம் பரத்தில் செயற் பொறியாளரும், கட லூரில் நிர்வாகப் பொறியாள ரும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருக்கின்ற காரணத்தால் அந்த வாய்க்காலுக்கு, வெள்ள நிவாரண நிதி வந்தாலும், வறட்சி நிவாரண நிதி வந்தாலும் எந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்கு கொடுப்பது என்பதிலே போட்டி போட்டுக் கொண்டு யாருமே கொடுப்பதில்லை. ஆனால் அந்த வாய்க்காலைப் பொறுத்தவரையில் ஆங்கிலேயர்கள் ஆண்ட காலத்தில் 20, 71 ஏ.பி.எம். அன்ட் ஆர். என்ற தலைப்பில் இரண்டு இலட்சம் ரூபாய் ஆண்டுக்காண்டு பராமரிப்புச் செலவுக் காக ஒதுக்குகிறார்கள். இன்றைய வரையில் அவ்வளவுதான் ஒதுக்கப்படுகிறது. அன்றைக்குச் சம்பளம் அதாவது நித்தியக் கூலி 3 ரூபாய் என்று இருந்தது. அது இன்றைய தினம் 15 ரூபாய் 16 ரூபாய் என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது. அதாவது 30 ஆண்டு, 40 ஆண்டுகளுக்கு முன்பு ஒதுக்கப்பட்ட தொகையான 2 இலட்சம் ரூபாய் இன்றைக்கும் ஒதுக்கினால் அந்த வாய்க்காலை



எப்படி மராமத்து செய்ய முடியும் என்பதை உணர்ந்து அதற்குரிய வகையில் போதிய நிதியினை ஒதுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அந்த வாய்க்கால் தலைப்பில், கொள்ளிடத்தில் தண்ணீரைத் தேக்கி வாய்க்காலுக்கு விடுவது வழக்கம். மழைக் காலங் களில் வெள்ளம் வந்தால் அந்தத் தலைப்புகளை எல்லாம் அடித்து துக் கொண்டு போய்விடும். அதன் காரணத்தால் தண்ணீர் வாய்க்காலில் சரியாக வராது. பின்னர் புல்டோசர் மூலம் அங்கே தூர் வாரித்தான் அந்த வாய்க்காலிலே தண்ணீர் விடுவது வழக்கம் அது ஆண்டாண்டு காலமாகச் செய்யப்பட்டு வருகிறது. இந்தக் கொள்ளிடத்தில் பெட் டாம் கட்ட வேண்டும் என்ற பிரச்சினை ஆரம்ப காலத்திலிருந்து இருந்து வருகிறது. முதலமைச்சராக பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இருந்த காலத்திலும் சரி, அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்திலும் சரி- அதற்குப் பின்னர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்திலும் சரி அதாவது 1967-லிருந்து 1976 வரையில் அந்தத் திட்டம் இருந்து வந்தது. ஆனால் அந்தத் திட்டம் இப்போது டெப்பிலே போடப்பட்டிருக்கிறது. எனவே கொள்ளிடத்தில் பெட் டாம் கட்டித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கி றேன். அதைப் போலவே, அந்த வாய்க்கால் பிரிகின்ற இடத் தில் பல்வேறு வாய்க்கால்கள் இருக்கின்றன. 1-ம் நெம்பர், 2-ம் நெம்பர், 3-ம் நெம்பர் என்று 6-ஆம் நெம்பர் வரையிலே வாய்க்கால்கள் இருக்கின்றன. அந்த வாய்க்கால்கள் எல்லாம், இங்கே பேசிய பல உறுப்பினர்கள் பேசியது போல், எல்லா வாய்க் கால்களும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்றன. அப்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இன்றைக்கு அவைகள் வாய்க்கால் களாக இல்லை. அது சாதாரண ஒரு சின்ன வாய்க்காலாக வய லுக்கு போகின்ற நீர்ப் பாய்ச்சுகின்ற கன்னி வாய்க்காலாக இருக் கிறது. காரணம் பக்கத்திலே இருக்கின்ற நிலச்சுவான்தார்கள் அதை எல்லாம் ஆக்கிரமிப்பு செய்து கொண்டார்கள். தஞ்சை மாவட்டத்திலே தென்னாற்காடு ஜில்லாவிலே வாய்க்காலை அகலப்படுத்தி ஆழப்படுத்தி எப்படி வாய்க்கால்கள் இரு பக்கமும் சிமின்ட் பிளாக் போடப்பட்டிருக்கிறதோ அதைப் போல அந்தத் திட்டத்தை எங்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரே ஒரு வாய்க்கால் இருக்கின்ற ஜெயங்கொண்டம் தொகு தியில் தா. பழூர் ஒன்றியத்தில் அந்த வாய்க்காலுக்கு சிமென்ட் பிளாக் போட்டு அடைக்கிற திட்டத்தைச் செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே, வாய்க்கால் வடிகால் வெட்டுவதற்குவசம் கிடையாது. இரண்டு லட்சம் ரூபாய் தான் கொள்ளிடகரையிலே பராமரிப்பு செய்ய வேண்டும். வாய்க்கால் தலைப்பையும்

பராமரிப்புச் செய்ய வேண்டும். வடிகால் வாய்க்கால்களை யும் வெட்ட வேண்டும். பழைய பொன்னாறு என்று ஒன்று இருக்கிறது. அந்த பொன்னாறு தூர்ந்துவிட்ட காரணத்தினால், மழைக் காலங்களில் வருகின்ற தண்ணீர் அந்த பொன்னாற்றின் வழியாகத்தான் வடியவேண்டும். அது வடியாத காரணத்தினால் இன்றைய தினம் பல இடங்களிலே உடைப்பு ஏற்பட்டு பாசன வாய்க்கால்கள் தூர்ந்துவிடுகின்ற நிலை இருக்கிறது. அந்த பழைய பொன்னாற்று வாய்க்காலை வெட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே, சிந்தாமணி ஓடை என்று ஒன்று இருக்கிறது. அது இடங்கன்னி அண்ணகாரன்பட்டியிலே இருக்கிறது. அது ஒரு கிராமம். அங்கு சிந்தாமணி ஓடை, வெட்டாறு ஓடை என்று இரண்டு இருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் சாதாரண மழை பெய்தாலும்கூட அந்த கிராமம் தண்ணீரால் மூழ்கடிக்கப்பட்டு விடுகின்றன. ஹெலிகாப்டர் மூலம்தான் ஆண்டுதோறும் மழைக் காலங்களில், ஒரு நாள் மழை பெய்தாலும் போதும் அங்கே நீரால் மூழ்கடிக்கப்படுவதால், ஹெலிகேப்டர் மூலம் பொட்டலம் போடப்பட வேண்டிய நிலைமைகள் ஏற்படுகின்றன. காரணம் அந்த வடிகால் சிந்தாமணி ஓடையும் வெட்டப்படுவதே கிடையாது. ஆனால் மழைக்காலங்களில், வெள்ளக்காலங்களில் எல்லா அதிகாரிகளும் மாவட்ட ஆட்சித் தலைவர் எல்லாம் பார்வை இடுவார்கள். சில சமயங்களிலே அமைச்சர்களே கூட வந்து பார்வை இட்டிருக்கிறார்கள். என்ன பார்வையிட்டாலும் அத்தோடு சரி. எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதே கிடை யாது. சென்ற ஆண்டுதான் ஆரம்பித்தார்கள், கொஞ்சம் வாய்க் கால் வெட்ட அதுவும் நிறுத்தப்பட்டு இருக்கிறது.

நான் இங்கே கேட்க விரும்புவது, வெட்டாறு ஓடை, சிந்தா மணி ஓடை, பழைய பொன்னாறு இவைகளை புல்டோசர் மூலம் வெட்டித் தரவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே, பொன்னாற்று வாய்க்கால்களில் தண்ணீர் தேங்கி கீழ் மடையிலே இருக்கின்ற சோழன் மாதேவி, கோடாலி கருப்பூர், நான் இருக்கின்ற அந்த கண்டியம்கொல்லை கோடாலி கிராமம் அணைக்கரை ஓரம் வரை யிலே சித்தேரியில் தண்ணீர் தேக்கித்தான் பாசனம் நடைபெற வேண்டும். அந்த சித்தேரியில்-இன்றைக்கு சித்தேரியாக இல்லை அது-சற்றேறக்குறைய 50 ஏக்கர்க்கு மேல் பரப்பளவு கொண்ட ஏரி. அந்த ஏரி இன்றையதினம் 3,4 ஏக்கர் பரப்பளவுதான் இருக்கிறது. காரணம் பக்கத்திலே இருப்பவர்கள் சுற்றி நிலமாக்கி இன்றைக்கு உழுது பயிர் செய்து கொண்டிருக்கின் றார்கள். அதைச் சர்வே செய்ய வேண்டும். ஏரியை புல்டோசர் மூலமாக வெட்டித்தந்தால் தண்ணீர் இல்லாத காலங்களில் ஒரு 15 தினங்களுக்கு தண்ணீர் கிடைப்பதற்கு வசதியாக இருக்கும். அந்த ஏரியை புல்டோசர் மூலம் வெட்டித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.





அதைப்போலவே, எங்களுடைய ஜெயங்கொண்ட சோழ புரத்தில் கங்கைகொண்ட சோழபுரம் இருக்கின்றது. அது நம்முடைய ராஜராஜ சோழனால் கட்டப்பட்டது. அந்த கங்கைகொண்ட சோழபுரத்தில் பொன்னேரி என்று ஒரு ஏரி இருக்கிறது. அது ராஜேந்திர சோழனால் வெட்டப்பட்ட ஏரி. சற்றேறக்குறைய300 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது அந்த ஏரி அந்த ஏரி இன்றைக்கு பார்த்தால் மண் மேடாக காட்சியளிக்கிறது. காரணம் அந்த ஏரியைப் புல்டோசரால் வெட்டுவதற்கு பல ஆண்டுகளாக கோரிக்கை இருந்தும், அதை இதுவரையில் எந்த அரசும் செய்து தரவில்லை. இதை இந்த அரசு செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அதைக் கண்டிப்பாக பார்வையிட்டு ஜெயங்கொண்டம் வருகிறபோது அதை செய்துதர வேண்டும் என்று நான் மிகவும் பணிவன் போடு கேட்டுக்கொள்கிறேன். அதனுடைய பாசனம் 1,700 ஏக்கர் என்று இருக்கிறது. ஆனால் இன்றைக்கு பாசனம் பெறுவது 5 ஆயிரம் ஏக்கர். ஆனால், ரெஜிஸ்ட்ரேஷன் ஆயக் கட்டு 1,700 ஏக்கர் என்று இருக்கிறது. இன்றைக்கு 5 ஆயிரம் ஏக்கர் அது பாய்கிற காரணத்தினால் 5 ஆயிரம் ஏக்கர் ரெஜிஸ்ட் ரேஷன் ஆயக்கட்டாக ஆக்கி, அந்த ஏரியை மராமத்து செய்து தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற பல்வேறு ஏரிகளும் மானத்தை நம்பிக் கொண்டிருக்கிற ஏரிகள். ஒரே ஒரு பாசன வாய்க்கால் இருக்கின்றது. அது 5 ஆயிரம் ஏக்கர் என்று சொன்னேன். அந்த பாசன ஏக்கர்கூட நடை முறையில் இன்றைக்கு 10 ஆயிரம் ஏக்கர் பாசனம் வருகிறது. அது ரெஜிஸ்ட்ரேஷன் ஆயக்கட்டாக 5 ஆயிரம் என்று தான் இருக் கிறது. 10 ஆயிரம் ஏக்கர் பாய்கிற ரெஜிஸ்ட்ரேஷன் ஆயக்கட்டாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல, பொன்னேரி 1,700 ஏக்கர் தான் பாசனம் இருக் கிறது. 5 ஆயிரம் ஏக்கர் பாசனம் இருக்கிறது. அந்த 5 ஆயிரம் ஏக்கரை ரெஜிஸ்ட்ரேஷன் ஆயக்கட்டாக ஆக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே எல்லாம் மானத்தை நம்பியிருக்கின்ற பகுதி.

(பிற்பகல் 5-50)

ஒவ்வொரு ஏரியையும் இப்போது ஐரோப்பிய பொருளா தாரத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டு, அவற்றை ஆழப்படுத்தியாக வேண்டும். மழைக் காலங்களில் மழை நீரைத் தேக்கினால்தான்—உடையார்பாளையம் தாலுகா வில் இருக்கின்ற ஜெயங்கொண்டம் தொகுதியானாலும், ஆண்டி மடம் தொகுதியானாலும், அரியலூர் தொகுதியானாலும்அங்கே வேறு பாசன வாய்க்கால்கள் அதிகம் கிடையாது. ஆகவே,

மழைக் காலங்களில் நீரைத் தேக்கி— அதை நம்பித்தான் நாங்கள் பாசனம் செய்து வருகிறோம். ஆகவே, அங்கே இருக்கிற ஏரிகளை அவசியம் ஆழம் செய்துதரவேண்டும். அப்படி ஆழம் செய்து தந்தால்தான் அந்தத் தொகுதியிலே இருக் கிற மக்கள் விவசாயம் செய்து பிழைக்க முடியும். ஏரியை நம்பி நாங்கள் விவசாயம் செய்கிற காரணத்தால், அந்த ஏரிகளை யெல்லாம் இந்தத் திட்டத்திலே சேர்ந்து ஆழப்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, என்னுடைய தொகுதியில் ஜெயங்கொண் டத்தில் உங்களுக்குத் தெரியும். ஆரம்ப காலத்தில் சுயமரியாதைக் காக சுடராக விளங்கிய ஆசிரியர் வேலாயுதம் கொலை செய்யப் பட்ட ஊர் ஜெயங்கொண்டத்தில் உடையார்பாளையம். அந்த உடையார்பாளையம் வேலாயுதத்தின் பெயரால் ஜெயங்கொண் டத்தில் ஒரு கலைக் கல்லூரி, அல்லது ஐ.டி.ஐ. அல்லது பாலி டெக்னிக் கண்டிப்பாக அமைத்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அது பிற்பட்ட பகுதி. அந்தப் பகுதியிலிருந்து பெண்களோ, ஆண்களோ படிப்பதற்குப் போதிய வசதி கிடையாது. அதுமட்டு மல்லாமல், போதிய போக்குவரத்து வசதியும் கிடையாது. . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி):** பொதுப் பணித் துறை மானியத்தில் பேசுகிறீர்கள்.

**திரு. க. சொ. கணேசன் :** நான் முதன் முதலாகப் பேசுகிற காரணத்தால் என்னுடைய தொகுதியிலே உள்ளதை நான் பொது நிதி நிலை அறிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்புக் கேட்டேன். கிடைக்காத காரணத்தால் இந்தச் சந்தர்ப்பத்தில் அதைச் சொல்ல வேண்டும் என்று தான் அதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன். ஜெயங்கொண்டம் தொகுதியைப் பொறுத்தவரையில் மிகவும் பிற்பட்ட பகுதியாக இருக்கிற காரணத்தால், அதைப்போல மேல் நிலைப் பள்ளியாக இருந்தாலும், உயர்நிலைப் பள்ளியாக இருந்தாலும் அதற்கெல் லாம் போதிய கட்டிடங்கள் கிடையாது. மரத்தடியிலே மாண வர்கள் படிக்கிறார்கள். மரத்தடியிலே வெயில் காலங்களில் படிக்கலாம். மழைக் காலங்களில் மாணவர்கள் எப்படிப் படிப்பது என்ற நிலை தெரியாமல், 'ஓன் செக்ஷன்', ஒரே பிரிவாக வைத்து விடுமுறை விட்டு விடுகிறார்கள். ஆகவே, நான் கேட்டுக் கொள்வதெல்லாம், அங்கே இருக்கிற பல மேல்நிலைப் பள்ளி களுக்கும், உயர்நிலைப் பள்ளிகளுக்கும் நல்ல கட்டிடங்களைக் கட்டித் தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டு, கொள்ளிடத்தில் முக்கியமான பிரச்சினை ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.



கொள்ளிடத்தில் அணைக்கரை பாலம் இருப்பது உங்களுக்குத் தெரியும். அணைக்கரை பாலம் இன்றையதினம் ஆட்டம் கண்டு கொண்டு இருக்கிறது. அது டேமேஜ். . . . .

**மாண்புமிகு "மாற்றுத்" தலைவர் (திரு. என். கணபதி) :** முடியுங்கள்.

**திரு. க. சொ. கணேசன் :** அந்தக் கொள்ளிடத்தில் நீலாத் தூருக்கும், மதனத்தூருக்கும் இடையில் ஒரு பாலம் கட்டுவதற்கு சர்வே பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. ஆகவே, அணைக்கரைப் பாலத்திற்குப் பதிலாக, அந்தப் பாலம் இடிவதற் குள்ளாக, நீலாத்தூர், மதனத்தூர் பாலத்தைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே, வட வாற்றிலே ஈச்சம்பட்டிக்கும், கொல்லாபுரத்திற்கும் ஒரு பாலம் கட்டித்தரக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பா. அப்துல் சமத் :** பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றி. என்னுடைய மாவட்ட அமைச்சரான பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களை நான் மிகவும் பணி வோடு கேட்டுக் கொள்வது, டாக்டர் கலைஞர் ஆட்சியில் ஆரம் பித்த ,அங்கீகரிக்கப்பட்ட புல்லூர் அணைக்கட்டுத் திட்டத்தையும் வெள்ளைக்கல் அணைத் திட்டத்தையும், ஆலங்காயம் பெரிய ஏரி சீரமைப்புத் திட்டத்தையும் இப்போது கலைஞர் ஆட்சியிலா வது நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டம் இப்போது ஒரு பாலைவனமாக மாறிக் கொண்டிருக்கிறது. பாலைவனமாக மாறாமல் அதைக் காப்பாற்ற வேண்டும். என்னுடைய மாவட்ட அமைச்சர் அவர்க ளால் தான் முடியும். டாக்டர் கலைஞர் ஆட்சியில்தான் முடி யும் என்ற ஒரு நம்பிக்கை என்னுடைய மாவட்டத்தில் அனைவ ருக்கும் ஏற்படுகின்ற வகையில் இருக்கிறது. தயவுசெய்து, அந்த புல்லூர் அணைத் திட்டத்தையும் வெள்ளைக்கல் அணைத்திட்டத் தினையும் உங்கள் காலத்திலேயே சீர் செய்து அதைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, ஆம்பூரிலே வாழுகின்ற மக்களுக்குக் குடிதண்ணீர் கிடைக்க வேண்டுமானால் அந்த வெள்ளைக்கல் அணைத் திட்டம் கட்டியே ஆகவேண்டும். ஆம்பூரிலே வாழுகின்ற மக்கள் இன்னும் ஐந்தாண்டுகளுக்கு அந்த நீரையே குடித்தால் அவர்களுக்கு சிறு நீரகம் பாதிக்கப்பட்டு விடும் என்று டாக்டர்கள் அறிக்கை கொடுத் திருக்கிறார்கள். தயவு செய்து, அந்த வெள்ளைக்கல் அணைத் திட்டத்தையும், இந்த நிதியாண்டிலேயே நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பா. அப்துல் சமத்]. [1989 ஏப்ரல் 19

ஏரி படுகைகள், ஏரிக் கால்வாய்கள், ஆக்கிரமிப்புகளை அகற்ற
வேண்டும். ஏரிகள் பராமரிப்பிற்காக ஒரு உயர்மட்டக் குழு
அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆலங்
காயத்தில் ஒரு அரசு சுற்றுலா மாளிகை அமைக்க வேண்டும்.
காரணம், ஆலங்காயத்திற்கு மேலே காவலூரில் வான் ஆராய்ச்சி
நிலையம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. அங்கே பல விஞ்ஞானி
களும், பல அதிகாரிகளும் அவ்வப்போது வருகிறார்கள். அவர்
களுக்கு அங்கே தங்கும் வசதியில்லை. ஆகவே, அவர்கள்
வேண்டுமானால் வாணியம்பாடிக்கு வரவேண்டும் அல்லது
திருப்பத்தூருக்காவது செல்லவேண்டும். எனவே, அங்கே ஆலங்
காயத்தில் ஒரு சுற்றுலா மாளிகையை அமைக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். பொதுப் பணித்துறை பராமரிப்பில்
உள்ள பள்ளிக் கட்டிடங்கள் இன்றைய தினம் சீரான முறையில்
பராமரிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொதுப்
பணித் துறையால் கட்டப்படும் கட்டிடங்களில் ஊழல்கள் நிறைய
நடக்கின்றன. நல்ல சிமிண்ட் இல்லாமலும் ஒப்புக் கொள்ளப்
பட்ட மரங்களுக்குப் பதிலாக காட்டு மரங்களையும் கொண்ட
வாசக்கால், ஜன்னல்கள் ஆகியவற்றையும் புதிய கட்டிடங்களில்
அமர்த்தி அதன் மூலம் ஊழல் செய்கிறார்கள். மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் அதையெல்லாம் இனி உன்னிப்பாகக் கவ
னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக் கட்டிடங்களின் உள் அளவு சுமார் 12 அடி ஆவது
ருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு சில
ளிக் கட்டிடங்களின் உள் அளவு 8 அடியாக இருக்கிறது. அதன்
ணமாக வெயில் காலங்களில் குழந்தைகள் அங்கு படிக்க
வும் கஷ்டப்படுகிறார்கள்- அவதிக்கு உள்ளாகிறார்கள்.
எனவே, அரசால் கட்டப்படும் கட்டிடம் எதுவாக இருந்தாலும்
அதன் உள் அளவு 12 அடியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

ஏரிகளிலிருந்து பாசனத்திற்கு மதகுகளிலிருந்து தண்ணீர்
எடுக்கும் முறை ரத்து செய்யப்பட வேண்டும் என்பது என்னு
டைய கோரிக்கை. காரணம் ஏரிகளில் தண்ணீர் இருந்தால்தான்
நிலத்தடி நீர் கிடைக்கும். என்னுடைய பகுதியில் ஆலங்காயம்
முதல் வாணியம்பாடி வரை உள்ள எல்லா ஏரிகளிலும் தண்ணீர்
எடுக்கும் விவசாயிகள் மதகுகளை சிமின்ட் போட்டு, கல்லைப்
போட்டு அடைத்துவிட்டார்கள். ஏரிகளில் தண்ணீர் இருந்தால்
தான் கிணறுகளில் தண்ணீர் இருக்கும். நிலத்தடி நீர் கிடைக்கும்.
ஆகவே இப்போது எல்லா விவசாயிகளும் இதை ஏற்றுக்கொள்கி
றார்கள். காரணம் 6 மாதத்திற்கு ஒரு முறைதான் எலெக்ட்ரிக்
பில் கட்டுகிறார்கள். எத்தனை மணி நேரம் என்று பாகுபா
டில்லை. கரண்ட் பில் ஒரே சீரான முறையில் இருக்கும். ஆக
விவசாயிகளுக்கு ஏரிகளில் தண்ணீர் நின்றால் போதும். நிலத்
தடி நீர் கிடைக்கும். இதை குறைந்த பட்சம் வடாற்காடு மாவட்
டத்திலாவது ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 19] [திரு. பா. அப்துல் சமத்]

காட்டு இலாக்காவில் உள்ள ஏரிகள் தூர்ந்து போன நிலை
யில் உள்ளன. குறிப்பாக என்னுடைய தொகுதியில் பால் ஏரி
என்று இருக்கிறது. இதைத் தூர்வாரி சீர் செய்ய வேண்டுமென்று
கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கி
றேன். வணக்கம்.

*திரு. ஆர். வரதராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,
நடந்து முடிந்த தேர்தலில் என்னை வேட்பாளனாகத் தேர்ந்
தெடுத்த கழகத் தலைவர் அவர்களுக்கும் பேராசிரியர் அவர்க
ளுக்கும் சேலம் மாவட்டச் செயலாளர் மாண்புமிகு உள்ளாட்சித்
துறை அமைச்சர் திரு. வீரபாண்டியார் அவர்களுக்கும் என்னை
இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த சங்ககிரி சட்டமன்ற
வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

1989-90 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை அடிப்
படையில், பொதுப் பணித்துறையின் மானியத்தின் மீது பேசுவதற்
கான வாய்ப்பு தந்த தங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்
கொண்டு ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அரசு அலுவலகங்கள் எல்லாம் இந்தத் துறையால்தான் பரா
மரிக்கப்படுகின்றன. ஆனால் பல கட்டிடங்கள் பழுது
அடைந்த நிலையில் இருப்பதால், மழைக் காலங்களில்
எந்த நேரமும் விழுந்துவிடக்கூடிய நிலையில் இருக்கின்றன
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தொகுதியான சங்ககிரியில் உள்ள அரசுக் கட்டிடங்கள்,
பள்ளி சம்பந்தமான டி.ஈ.ஓ., டி.ஐ. ஆபீஸ்கள், தலைமை முன்சீப்
கோர்ட், ஆதிதிராவிட நல வட்டாட்சியர் அலுவலகங்கள்
எல்லாம் தனியார் கட்டிடங்களில் தான் இயங்கி வருகின்றன.
அதைப் போலவே, வணிக வரித்துறை அலுவலகமும் வாடகை
கட்டிடத்தில்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்
அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சங்ககிரி தாலுக்கா தலைநகரமாக இருந்தாலும் உயர் அரசு
அதிகாரிகள், அமைச்சர் பெருமக்கள் எல்லாம் வந்து தங்கு
வதற்கு ஒரு வசதியான ஓய்வு விடுதியில்லை. எனவே அருகே
உள்ள பள்ளிப்பாளையம் பேப்பர் மில்ஸ் அல்லது சங்ககிரி சிமின்ட்
ஆலையில் உள்ள ஓய்வு விடுதியில்தான் தங்க வேண்டியிருக்கிறது.
ஆகவே, பொதுப் பணித்துறை மூலமாக ஒரு நல்ல வசதியான
ஓய்வு விடுதியைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

ஏரி படுகைகள், ஏரிக் கால்வாய்கள், ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். ஏரிகள் பராமரிப்பிற்காக ஒரு உயர்மட்டக் குழு அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆலங் காயத்தில் ஒரு அரசு சுற்றுலா மாளிகை அமைக்க வேண்டும். காரணம், ஆலங்காயத்திற்கு மேலே காவலூரில் வான் ஆராய்ச்சி நிலையம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. அங்கே பல விஞ்ஞானி களும், பல அதிகாரிகளும் அவ்வப்போது வருகிறார்கள். அவர் களுக்கு அங்கே தங்கும் வசதியில்லை. ஆகவே, அவர்கள் வேண்டுமானால் வாணியம்பாடிக்கு வரவேண்டும் அல்லது திருப்பத்தூருக்காவது செல்லவேண்டும். எனவே, அங்கே ஆலங் காயத்தில் ஒரு சுற்றுலா மாளிகையை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுப் பணித்துறை பராமரிப்பில் உள்ள பள்ளிக் கட்டிடங்கள் இன்றைய தினம் சீரான முறையில் பராமரிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொதுப் பணித் துறையால் கட்டப்படும் கட்டிடங்களில் ஊழல்கள் நிறைய நடக்கின்றன. நல்ல சிமிண்ட் இல்லாமலும் ஒப்புக் கொள்ளப் பட்ட மரங்களுக்குப் பதிலாக காட்டு மரங்களையும் கொண்ட வாசக்கால், ஜன்னல்கள் ஆகியவற்றையும் புதிய கட்டிடங்களில் அமர்த்தி அதன் மூலம் ஊழல் செய்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதையெல்லாம் இனி உன்னிப்பாகக் கவ னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக் கட்டிடங்களின் உள் அளவு சுமார் 12 அடி ஆவது இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு சில பள்ளிக் கட்டிடங்களின் உள் அளவு 8 அடியாக இருக்கிறது. அதன் காரணமாக வெயில் காலங்களில் குழந்தைகள் அங்கு படிக்க மிகவும் கஷ்டப்படுகிறார்கள்- அவதிக்கு உள்ளாகிறார்கள். எனவே, அரசால் கட்டப்படும் கட்டிடம் எதுவாக இருந்தாலும் அதன் உள் அளவு 12 அடியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏரிகளிலிருந்து பாசனத்திற்கு மதகுகளிலிருந்து தண்ணீர் எடுக்கும் முறை ரத்து செய்யப்பட வேண்டும் என்பது என்னு டைய கோரிக்கை. காரணம் ஏரிகளில் தண்ணீர் இருந்தால்தான் நிலத்தடி நீர் கிடைக்கும். என்னுடைய பகுதியில் ஆலங்காயம் முதல் வாணியம்பாடி வரை உள்ள எல்லா ஏரிகளிலும் தண்ணீர் எடுக்கும் விவசாயிகள் மதகுகளை சிமின்ட் போட்டு, கல்லைப் போட்டு அடைத்துவிட்டார்கள். ஏரிகளில் தண்ணீர் இருந்தால் தான் கிணறுகளில் தண்ணீர் இருக்கும். நிலத்தடி நீர் கிடைக்கும். ஆகவே இப்போது எல்லா விவசாயிகளும் இதை ஏற்றுக்கொள்கி றார்கள். காரணம் 6 மாதத்திற்கு ஒரு முறைதான் எலெக்ட்ரிக் பில் கட்டுகிறார்கள். எத்தனை மணி நேரம் என்று பாகுபா டில்லை. கரண்ட் பில் ஒரே சீரான முறையில் இருக்கும். ஆக விவசாயிகளுக்கு ஏரிகளில் தண்ணீர் நின்றால் போதும். நிலத் தடி நீர் கிடைக்கும். இதை குறைந்த பட்சம் வடாற்காடு மாவட் டத்திலாவது ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



காட்டு இலாக்காவில் உள்ள ஏரிகள் தூர்ந்து போன நிலை யில் உள்ளன. குறிப்பாக என்னுடைய தொகுதியில் பால் ஏரி என்று இருக்கிறது. இதைத் தூர்வாரி சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கி றேன். வணக்கம்.

*திரு. ஆர். வரதராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நடந்து முடிந்த தேர்தலில் என்னை வேட்பாளனாகத் தேர்ந் தெடுத்த கழகத் தலைவர் அவர்களுக்கும் பேராசிரியர் அவர்க ளுக்கும் சேலம் மாவட்டச் செயலாளர் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. வீரபாண்டியார் அவர்களுக்கும் என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த சங்ககிரி சட்டமன்ற வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

1989-90 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை அடிப் படையில், பொதுப் பணித்துறையின் மானியத்தின் மீது பேசுவதற் கான வாய்ப்பு தந்த தங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அரசு அலுவலகங்கள் எல்லாம் இந்தத் துறையால்தான் பரா மரிக்கப்படுகின்றன. ஆனால் பல கட்டிடங்கள் பழுது அடைந்த நிலையில் இருப்பதால், மழைக் காலங்களில் எந்த நேரமும் விழுந்துவிடக்கூடிய நிலையில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தொகுதியான சங்ககிரியில் உள்ள அரசுக் கட்டிடங்கள், பள்ளி சம்பந்தமான டி.ஈ.ஓ., டி.ஐ. ஆபீஸ்கள், தலைமை முன்சீப் கோர்ட், ஆதிதிராவிட நல வட்டாட்சியர் அலுவலகங்கள் எல்லாம் தனியார் கட்டிடங்களில் தான் இயங்கி வருகின்றன. அதைப் போலவே, வணிக வரித்துறை அலுவலகமும் வாடகைக் கட்டிடத்தில்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சங்ககிரி தாலுக்கா தலைநகரமாக இருந்தாலும் உயர் அரசு அதிகாரிகள், அமைச்சர் பெருமக்கள் எல்லாம் வந்து தங்கு வதற்கு ஒரு வசதியான ஓய்வு விடுதியில்லை. எனவே அருகே உள்ள பள்ளிப்பாளையம் பேப்பர் மில்ஸ் அல்லது சங்ககிரி சிமின்ட் ஆலையில் உள்ள ஓய்வு விடுதியில்தான் தங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, பொதுப் பணித்துறை மூலமாக ஒரு நல்ல வசதியான ஓய்வு விடுதியைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6.00)

சங்ககிரியிலுள்ள அரசாங்க மருத்துவ மனையில் பணிபுரியும்
நர்ஸ்கள் தங்கும் ஓய்வு அறை பழுதடைந்த நிலையில் உள்ளது.
அதை உடனடியாக புதுப்பித்துக் கொடுக்குமாறு இந்த அரசை
கேட்டுக் கொள்கிறேன். அந்த மருத்துவ மனையில் இட வசதி
இருந்தும் அது ஒரு சிறிய பிரசவ விடுதி ஒன்றில் இயங்கி வரு
கிறது. அதில் ஒரு நல்ல பிரசவ விடுதி கட்டிக் கொடுக்குமாறும்
இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் அவசரப்
பிரிவு கட்டிடம் ஒன்றும் கட்டிக் கொடுக்குமாறும் கேட்டுக்
கொள்கிறேன். இந்த அரசு மருத்துவ மனையில் குடிநீர் பற்றாக்
குறை இருப்பதால், ஆழ்துளைக் கிணறு வெட்டி அதில்
மோட்டார் வைத்து தண்ணீர் பிரச்சினையை தீர்த்து வைக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் 70 சதவீதம் பேர் விவசாயத்தை நம்பித்தான்
இருக்கிறார்கள். மழைக் காலங்களில் மலைச்சாலைகளில்
மலைக் குன்று போன்ற பகுதிகளிலிருந்து ஓடி வரும்தண்ணீரை,
ஏரி, குளம், குட்டைபோன்ற இடங்களில் தேக்கி வைக்க வேண்.
டும். அப்படி அதைதேக்கி வைக்காததால் நிலத்தடிநீர் வற்றி
விடுகிறது. ஆகவே அந்த இடங்களில் சிறுசிறு நீர்த்தேக்கங்களைக்
கட்டி பாசனத்திற்கு வழி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சங்ககிரி எலச்சிப்பாளையம், மல்லசமுத்திரம் ஊராட்சி
ஒன்றியங்களில் பல ஏரிகள் மண் மூடிக் கிடக்கின்றன. அவைகளை
தூர் எடுத்து கரைகளை உயர்த்திக் கட்டி, மழை நீரை தேக்கி
வைத்தால் பாசனத்திற்கு பயன்படுத்தலாம் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன். பல ஏரிகள் மண் மூடிக் கிடப்பதால்
அங்குள்ள மக்கள் அதை வீட்டு மனைகளைப் பிரித்து வீடுகளை
கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அரசின் கவனத்
திற்கு கொண்டு வருகிறேன்.

சேலம் மாவட்டம், மேட்டூர் காவிரி அணையிலிருந்து ஒரு
சிறிய கால்வாயை புதிதாக அமைத்துக் கொடுத்து, இடப்பாடி,
சங்ககிரி, திருச்செங்கோடு, வழியாக ஒரு கால்வாய் அமைக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டம் மல்ல சமுத்திரம் பகுதியிலுள்ள திருமணி
முத்தாறு என்ற வாய்க்கால் திட்டம் முன்பு கலைஞர் ஆட்சிக்
காலத்தில் வெட்டப்பட்டு, அந்தக் கால்வாய் முடிக்கப்படும்
முன்பே ஆட்சி கலைக்கப்பட்டது. சென்ற ஆட்சிக் காலத்தில்
அந்த கால்வாய் நிறைவு செய்யப்படவில்லை. தற்போது
கலைஞர் ஆட்சி அமைந்துள்ளதால் அந்தக் கால்வாயை
உடனடியாக வெட்டி முடித்தால் அதனால் 3 பெரிய ஊர்களுக்கு
தண்ணீர் கிடைக்கும். அதனால் அந்தப் பகுதியிலுள்ள 14



ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும்
என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, திருமணி
முத்தாறு திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

சங்ககிரி— தேவூர் பகுதியில் காவிரி ஆற்றிலிருந்து ஒரு வாய்க்
கால் செல்கிறது. அங்குள்ள மக்கள் தங்களுடைய விவசாய
நிலங்களுக்கு செல்ல வேண்டுமானால் தண்ணீரில் இறங்கித்தான்
செல்ல வேண்டும். அதுபோல புதுப்பாளையம் வாய்க்கால்
பாலமும் கொட்டாரபாளையம் வாய்க்கால் பாலமும் பொன்
னம் பாளையம் வாய்க்கால் பாலமும் உடனடியாக அந்த வாய்க்
கால்களின் குறுக்கே கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். தேவூர் பகுதியிலிருந்து சங்ககிரிக்கு வரவேண்டு
மானால் அம்மாபாளையம் வழியாக வரும் ஒரு வாய்க்கால்
பாலம் சிறிய அளவில் அகலம் குறைவாக இருக்கிறது. அதை
அகலப்படுத்தினால் பேருந்துகள் விடுவதற்கு வசதியாக இருக்கு
மென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுப் பணித் துறை என்பது தமிழ்நாட்டில் அதிக முக்கி
யத்துவம் வாய்ந்த துறையாகும். அதில் செய்யப்படும்
வேலைகள் அனைத்தும் மக்களின் நலன் கருதி செய்யப்பட
வேண்டும் இந்தத் துறை விரைந்து செயல்படுமானால் ஒரு
நாட்டின் முன்னேற்றத்திற்கு துணையாக இருக்கும் இந்தத்
துறை நல்ல பல திட்டங்களை அதிக அளவில் விரைவாக செய்
தால் பல படித்த பட்டதாரிகளுக்கும், பாமர மக்களுக்கும் வேலை
வாய்ப்பு கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
ஆகவே பொதுப் பணித் துறை மூலம் நல்ல பல திட்டங்களை
நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த
நல்ல சமயத்தில் பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி
தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. ம. மணிமாறன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, இந்தப் பொதுப் பணித் துறை மானியத்தில் பேச
வாய்ப்பு வழங்கிய தலைவருக்கு நன்றி தெரிவித்து இங்கே
விவாதித்துக் கொண்டிருக்கிற பொதுப் பணித் துறை மானியம்
எந்த அளவுக்கு விவசாயிகளுக்கு பயன்படுகிறது. என்பதை
எண்ணிப் பார்க்கிற நிலையில் நாம் நின்று கொண்டிருக்கிறோம்.
ஆனால் கடந்த காலத்தில் பொதுப் பணித் துறை எந்த அளவுக்கு
பயன்பட்டு இருக்கிறது என்பதை எல்லாம் பல ஆதாரங்கள்
குற்றச்சாட்டுகளையெல்லாம் எண்ணிப் பார்க்கும் நேரத்தில்
அத்துறை அரசியல் வாதிகளின் புகலிடமாக, வாழ்வதற்கு வழி
தேடுகிற ஒரு இடமாக பொதுப் பணித் துறை மாறி இருந்ததை
நம்மால் மறந்துவிட முடியாது. குறிப்பாக 1986-87 ஆம ஆண்டில்
2½ கோடி ரூபாய் அளவுக்கு காவிரி பகுதியில் சீர் செய்வதாகவும்

வாய்க்கால் வெட்டுவதாகவும், ஆறு வெட்டுவதாகவும் அறிவிக்கப்பட்டு, அதில் 2½- கோடி ரூபாய்க்கு மேல் முறைகேடு நடந்ததின் காரணமாக இன்றைக்கு அதனால் பாதிக்கப்பட்ட பல விவசாயக் குடும்பங்கள் தொல்லைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. அந்த 2½ கோடி ரூபாயில் ஏறத்தாழ 1½ கோடி ரூபாய் அளவுக்கு வாங்கி விட்டார்கள். வேலை செய்யாமலோ வாங்கி விட்டார்கள். இன்றைக்கு அது ஆய்வில் இருக்கிறது. பல ஆண்டுக் காலமாக அது ஆய்வில் இருக்கிறதேயொழிய, அந்த ஆய்வின் மூலமாக வேலை நடந்து இருக்கிறதா, இல்லையா என்பது பரிசீலிக்கப்பட்டு தெரிவிக்காததன் விளைவாக உண்மையாகவே வாய்க்கால் வெட்டாமல் பணம் எடுத்துவிட்ட காரணத்தால், கடந்த 2 ஆண்டுக் காலமாக அந்த வாய்க்கால்கள் எல்லாம் தூர்ந்து போய் பாதிப்புக்கு ஆளாகி, வடிகாலும் சீர் செய்ய முடியவில்லை, பாசன வாய்க்காலும் சீர் செய்ய முடியவில்லை.

இப்படித் தொடர்ந்து தவறு செய்ததைக்கூட, இன்றைக்கு வரைகடந்த கால கவர்னருடைய ஆட்சியிலே மிகவும் சீரோடும், சிறப்போடும் ஆராயப்பட்டு தவறுகளெல்லாம் தண்டிக்கப்படுகின்றவதாகக் கூறிய அந்த நேரத்திலேகூட, பரிசீலிக்கப்படவில்லை. சீர் செய்யாத காரணத்தினாலே இன்றும் ஆய்வில் இருந்து கொண்டு இருக்கிறது. அதனால் பாதிக்கப்படுவது, உண்மையான வடிகாலையும், பாசனத்தையும் நம்பியிருக்கக் கூடிய விவசாயக் குடும்பங்கள்தான். எனவே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் அதிலே இருக்கிற இன்வெஸ்டிகேஷனைப்பார்த்து, உடனடியாக, வெட்டாமலேயே வாய்க்காலை வெட்டியதாக பணத்தை எடுக்கப்பட்ட அந்த வாய்க்கால்களுக்கு விதி விலக்காவது கொடுக்க வேண்டும். அப்படியில்லை என்று சொன்னால், ஊரில் இருக்கின்ற பொது மக்களைக் கொண்ட ஆல் பார்ட்டி மீட்டிங்காவது போட்டு, அதில் இருக்கின்ற சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டு, வாய்க்கால் வெட்டப்படவில்லை என்றால், வடிகால் வெட்டப்படவில்லை என்று சொன்னால், அந்த வாய்க்காலையெல்லாம் சீர் செய்கின்ற பணியை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, நன்னிலம் சப் டிவிஷனில் 13 இலட்சம் ரூபாய் தான் செலவு செய்ய முடியும். ஆனால் ஏறத்தாழ 60 இலட்சத்திலிருந்து 70 இலட்சம் ரூபாய் வரை செலவு செய்திருக்கிறார்கள். 70 இலட்சம் ரூபாய் செலவு செய்ததாலே அவருக்கு உடனடியாக எக்சிகியூட்டில் என்ஜினியராகப் புரமோஷன் கொடுத்த பெருமை அந்தக் காலத்தினுடைய வரலாறு. ஆகவே, இவ்வளவு பணம் முறைகேடாக ஒரு



டிவிஷனிலே செய்ய வேண்டிய பணத்தை ஒரு சப் டிவிஷனிலே செய்திருக்கிறார்கள் என்றால், ஏழெட்டு சப் டிவிஷன்களிலே செய்ய வேண்டிய பணத்தை ஒரு சப் டிவிஷனிலேயே எப்படிச் செய்ய முடியும் என்பதைக் கூட ஆராயாமல் அந்தப் பணத்தைக் கொடுப்பதற்கு வேண்டிய எல்லா ஆயத்தங்களும் முறைகேடாகச் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்டவர்களுக்கு உடனடியாக எக்சிகியூட்டிவ் என்ஜினியராகப் புரமோஷன் கொடுத்திருக்கிறார்கள். முடியுமானால் நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் அப்படி முறைகேடு செய்து 13 இலட்சம் ரூபாய் வேலை செய்யப்படக்கூடிய இடத்தில் 70 இலட்சம் ரூபாய்க்கு வேலை செய்ததாக எல்லா வேலைகளையும் செய்து, எம். புக்கிலே என்ட்ரி போட்டு எடுத்த அந்த அதிகாரியினுடைய புரமோஷனை மீண்டும் மறுபரிசீலனை செய்து ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதை நீங்கள் எண்ணிப் பாருங்கள். இல்லையென்று சொன்னால். அவரவர்களும் ஏதாவது அரசியல் காரணமாகத் தவறுகள் செய்துவிட்டு, பல கோடிக்கணக்கான ரூபாய்க்கான தவறுகளைச் செய்துவிட்டு, பாதுகாப்பிற்காக அரசியல் வாதிகளைத் தேடிக் கொள்வதும், அதற்கு அரசியல்வாதிகள் பாதுகாப்பாக இருப்பதும் எதிர்காலத்தில் ஒரு தவறான முன் உதாரணத்தை உருவாக்கும் என்பதை மிக்க பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதை ஆய்வு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

காவிரியைப் பொறுத்தவரைக்கும் நவீன மயம் செய்வதற்காகப் பல திட்டங்கள் உருவாக்கப்பட்டு டெல்லிக்கு அனுப்பியிருந்தும்—ஏறத்தாழ பல தடவை நம்முடைய மரியாதைக்குரிய பாரதப் பிரதமர் அவர்கள் தமிழகத்திலே சுற்றிச்சுற்றி வந்திருக்கிறார்கள். ஆனால் காவிரியை நவீனப்படுத்துவதற்கு அனுப்பப்பட்ட அந்தத் திட்டங்கள் இன்னும் அந்த மேசை மேல்தான் தூங்கிக்கொண்டு இருக்கின்றன. அதிலேயும்கூட திருப்பித் திருப்பி அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள் டெல்லியிலேயிருந்து, நீங்கள் ஏன் 120 கோடி ரூபாய்க்குத் திட்டங்களைத் தயாரித்து அனுப்பியிருக்கிறீர்கள். அதை 70 கோடி ரூபாய் அளவிற்குச் செய்ய முடியுமா என்று மறுபரிசீலனை செய்யுமாறு, அதைத் திருப்பி அனுப்பினார்கள். இதைத் திருப்பி அனுப்பியவுடன் பொதுப் பணித் துறையைச் சார்ந்தவர்கள் அதை 70 கோடி ரூபாய்க்கான திட்டமாகத் தயாரித்து அனுப்புகின்ற நேரத்தில், திருப்பியும், உலக வங்கியிலிருந்து 400 கோடி ரூபாய்க்கு நீங்கள் திட்டத்தை அனுப்புங்கள் என்று அறிவிக்கிறார்கள். எனவே, தமிழ்நாட்டினுடைய காவிரியினுடைய நவீனப்படுத்துகின்ற திட்டம் டெல்லியிலேயும் உலகவங்கியிலேயும் இன்றைக்கு அஞ்சல் துறையிலே போக்குவரத்திலே இருந்து கொண்டு இருக்கிறதே தவிர, விவசாயிகளினுடைய நன்மையைத் தரக்கூடிய திட்டங்களாக இன்றைக்கு இல்லை.

மாண்புமிகு அமைச்சரவர்கள் எப்படியாவது டெல்லியோடு பேசியாவது நடவடிக்கை மேற்கொண்டு, 70 கோடி ரூபாய் என்பதை மாற்றி, இப்பொழுது 400 கோடி ரூபாய்க்கான திட்டங்களைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள் பொதுப் பணித் துறையைச் சார்ந்தவர்கள். அந்த 400 கோடி ரூபாய்க்கு ஒப்புதலை, டெல்லி மூலம் உலக வங்கியிடமிருந்து கிடைக்கக் கூடிய நிதியாதாரங்கள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கேரளாவாக இருந்தாலும் மைசூராக இருந்தாலும் அண்டை மாநிலமான ஆந்திராவாக இருந்தாலும் நீர் ஆதாரங்கள் மிக அதிகமாக இருக்கிறது. ஆனால் மூன்று பகுதிகளிலேயும் இருக்கும் அந்த மாநிலங்களின் நீர் ஆதாரங்கள் மிக அதிகமாக இருக்கின்ற இந்த நேரத்தில், அதிலும் குறிப்பாக, கேரளா பகுதியிலே மேல் நோக்கி வடிகின்ற அந்த ஆறுகளையெல்லாம் கீழ் நோக்கிக் கொண்டு வந்தால், அதிலும் குறிப்பாக கோவை மாவட்டத்தில் இருக்கின்ற பகுதியைச் சேர்ந்தாற்போல இருக்கின்ற கேரள நதிகளையெல்லாம் கீழ்ப் பக்கத்திலே விட்டுவிடுவார்கள் என்று சொன்னால், ஏறக்குறைய காவிரியிலே 50 சதவீத பாசனத்தைப் பெற வேண்டிய நீர் ஆதாரங்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நாம் அதைப் பெற முடியாத நிலை இன்றைக்கு அரசியல் காரணமாக, குறிப்பாகத் தமிழகத்தைப் பொறுத்தவரையில், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, நீர் ஆதாரங்களைப் பெறுகின்ற அந்தக் கால கட்டங்களில் முட்டுக் கட்டையாக டெல்லி இருக்கிறது என்பதை மிக்க பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட முட்டுக் கட்டைகளைத் தவிர்ப்பதற்கும் நீக்குவதற்கும் அரசியலுக்கு அப்பால், இந்தத் தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்துச் சட்டமன்ற கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கட்சிகளையெல்லாம் மறந்து, டெல்லியோடு நாம் கட்டாயம் போராட வேண்டுமென்றாலும் போராடி, கோரிக்கையை வற்புறுத்துவது நம்முடைய தலையாய கடமை என்பதை நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன் நம் தமிழகத்தைப் பொறுத்த வரையில், காவிரியினுடைய மேம்பாட்டுத் திட்டங்களெல்லாம்கூட புறக்கணிக்கப் படுவதற்கு அரசியல் காழ்ப்புணர்ச்சி தவிர வேறொன்றுமில்லை. வரக்கூடிய நேரங்களிலேயெல்லாம் ஆளுக்கு ஒரு விளக்கத்தைத் தந்து செல்கிறார்களே தவிர விவகாரங்களை முடிப்பதற்கு, டெல்லியாக இருந்தாலும் சரி, ஏனைய அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, இதுவரையில் இல்லை. கடந்த 13 ஆண்டுக் காலமாக, சட்டமன்றத்திலே நடந்த விவாதங்களையெல்லாம் தொகுத்துப் பார்த்தோமேயானால் ஆளுக்கு ஒருவர் மீது குற்றம் சுமத்திக்கொண்டு இருக்கிறார்களே தவிர மெட்டீரியலாக, கண்ணுக்குத் தெரி



கின்ற அளவிற்குக் காரியங்களை ஆற்றுகின்ற அளவிற்கு எந்தக் கட்சியும் முன்வரவில்லை. ஒரு முறை நான் பணிவாகக் கேட்டேன், கடந்த காலத்தில், நீங்கள் குற்றச்சாட்டுகளை மட்டும் சுமத்திக்கொண்டிருக்கிறீர்களே தவிர, ஒட்டுமொத்தமாக எல்லோரும் ஒரு உணர்வைப் பெற்று, தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்காக, குறிப்பாகக் காவிரிப்பகுதியினுடைய வளர்ச்சிக்காக, அனைத்து அரசியல் கட்சிகளையும் சார்ந்தவர்களும் ஒருமித்த உணர்வை உண்டாக்குவதற்குத் தயாராக இல்லாத அந்தக் காரணத்தினாலேதான், அரசியல் காழ்ப்புணர்ச்சியை உருவாக்குவதன் மூலமாக நமக்குக் கிடைக்க வேண்டிய பலன்களையும் தண்ணீரையும் இன்றைக்குத் தருவதற்கு ஏனைய மாநிலங்களும், தான் வாங்கித் தருவதற்கு டெல்லி அரசாங்கமும் இன்றைக்குத் தயக்கம் காட்டுவதற்கு நம்மிடையே இருக்கின்ற பிளவுதான் காரணம் என்று கூறினேன்.

(பிற்பகல் 6-10).

எனவே, தமிழகத்தில் இருக்கக்கூடியவர்கள் நாம் ஒருவருக்கொருவர் பிளவை காட்டுவதைத் தவிர்த்து, ஒருமித்த கருத்தை உருவாக்கி நம்முடைய பலன்களைப் பெறவேண்டும் என்பதில் நாம் ஒன்றாக இருக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். மாதிரிக்கு மைசூரைப் பார்த்தால் கூட நன்றாகத் தெரியும். எந்த அளவிற்கு அங்கே அரசியலில் எதிர்முகாமாக இருக்கிற காங்கிரஸ் கட்சியும் ஜனதா கட்சியும் அவர்கள் தங்களுக்கு நலம் கிடைக்கிற நேரத்தில் கட்சியை மறந்து, கோபதாபங்களை மறந்து, அரசியல் காழ்ப்புணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டு தாங்கள் வாழ வேண்டும் என்பதற்காக ஒன்றாக நிற்கிறார்களோ அதைப் பார்த்தாவது அந்த நிலையை தமிழகம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பாசனம் சம்பந்தமான மானியக்கோரிக்கை மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன். முதலாவதாக இந்த புத்தகத்தின் 35 ஆம் பக்கத்தில் தமிழ்நாடு தண்ணீருக்காக வாடும் ஒரு மாநிலம், தண்ணீருக்காகவாடக் கூடிய ஒரு மாநிலம்.....

திரு. செ. நூர்முகமது : மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே ஒரு பூனை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறதா என்று தெரியவில்லை. (சிரிப்பு) ஆனால் சட்டமன்றத்தில் ஒரு பூனை ஊர்ந்து செல்வது இப்போது நடந்தது. ஆகவே அதைத் தெளிவுபடுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி) : உறுப்பினர் கண்ணிற்கு மாத்திரம் தெரிகிற பூனையாக இருக்குமென்று கருதுகிறேன். (சிரிப்பு).

திரு. சோ. அழகர்சாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, தண்ணீருக்கு எவ்வளவு தட்டுப்பாடு உள்ள மாநிலம் என்று கூறியதோடு மட்டுமல்லாமல் வேறு மாநிலங்களோடு ஒப்பிடும் போது நாம் மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் உபயோகிக்கிற தண்ணீரில் மூன்றில் ஒரு பங்கு தண்ணீரைத்தான் உபயோகிக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், மாநிலத்தில் உள்ள நீர்வளத்தில் 85 சதவீதத்திற்கு மேல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. உபரியாக உள்ள சொற்ப நீரைப் பயன்படுத்துவதைத் தவிர நீர்வளத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை. ஆகவே இதை நாம் ரொம்ப சீரியசாக, அதாவது கவலையோடு பார்க்க வேண்டும். ஏனென்றால் இந்தப் பாசனத்திற்காக ஒதுக்கிய தொகை இருக்கிறதே அது மிக மிகக் குறைவானதொகை என்று நான் கருதுகிறேன். மொத்த பட்ஜெட்டிலே ஏறக்குறைய 2½ சதவீதம்கூட வரவில்லை. குறைந்தது 10 சதவீதம் அல்லது 5 சதவீதமாவது பாசனத்திற்காக ஒதுக்கியிருக்க வேண்டும். கடந்த காலத்தில் ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை ஆளுகிற காலத்தில் பொதுப்பணித்துறை என்று சொல்லக்கூடிய இந்த டிபார்ட்மெண்டைத் தான் உதாசீனப்படுத்தியதாக சொல்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் ரெவின்யூ டிபார்ட்மெண்ட்டை அதிகமாக வரி வசூல் செய்வதற்காக சீராக சரியாக வைத்துக்கொண்டு, இந்தப் பொதுப்பணித் துறையை, அப்போதே கவனிக்காமல் விட்டதன் காரணமாக கடந்த காலத்தில், ஏரி, குளங்கள், கால்வாய்கள் மராமத்து செய்யப்படாமல் பல இடங்களில் தூர்ந்து போய் இருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே தான் இன்றைக்கு குடிதண்ணீருக்கு கூட மிகமிக கஷ்டப்படக்கூடிய நிலை இருக்கிறது. பூமிக்கு கீழே 120 அடிக்கு போர் போட்ட இடங்களில் இன்றைக்கு குடிதண்ணீருக்காக மேலும் 50 அடி ஆழப்படுத்தி 170 அடி வரையில் போனால் தான் இந்த ஆண்டு குடிக்க தண்ணீர் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஏன் சொல்கிறேன் என்றால், இந்தத் துறைக்கு பாசனம் என்று சொல்லக்கூடிய இந்த மானியத்தின்கீழ் அதிகமாக நிதி ஒதுக்கினோம் என்று சொன்னால் வறட்சி, குடிதண்ணீர் போன்றவற்றிற்கு செலவழிப்பது, போர் போடுவது இதுபோன்ற செலவுகளைச் செய்யாமல் இருப்பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே தான் நான் சொல்கிறேன். முதலாவதாக இந்தத் துறைக்கு அதிகமாக நிதியை ஒதுக்க வேண்டும். குறைந்தது 200 கோடி ஒதுக்கியிருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



அடுத்தபடியாக இன்றைக்கு மேற்கு நோக்கி பாயும் ஆறுகள் தமிழ்நாட்டில வறட்சியால் பாதிக்கப்பட்ட தென் மாவட்டங்களுக்கு குடிநீருக்கும் ஏனைய இன்றியமையாத தேவைகளுக்கும் கிடைக்கச்செய்யும் பொருட்டு கேரளாவில உள்ள மேற்கு நோக்கி ஓடுகிற ஆறுகளின் உபரி நீரை திருப்பி விட திட்டமிடப்பட்டு வருகிறது என்பது, கேரள அரசோடு இதுபற்றி விரைவில் பேச்சு வார்த்தை நடத்தவும் கருதப்பட்டுள்ளது என்றும் சொல்லப்பட்டுள்ள வார்த்தைகள் எங்களுக்கு மிக இனிப்பாக இருக்கிறது. இதை வேகமாக, துரிதமாக செய்வதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டும். ஏனென்றால் கடந்த காலத்தில் கடிதம் எழுதியும் பதில் வரவில்லை என்று ஒரு பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, கடிதம் எழுதுவதோடுமட்டுமல்லாமல், உபரியாக இருக்கிற நீரை மக்கள் பயன்படுத்தக்கூடிய முறையில், இங்கே உள்ளவர்கள் பயன்படுத்தக்கூடிய முறையில் அவர்களுக்கு உபரியாக இருக்கிற நீர் கிடைக்க வாய்ப்பு இருக்கிறதா என்பதைப் பார்த்து, எந்த முறையில் நாம் அதை அணுகினால் பெறமுடியும் என்பதையெல்லாம் ஆலோசித்து, இதை சீராக, கவலையோடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் எதிர்காலத்தில் குடிக்க தண்ணீர் வேண்டும். அரிசி இல்லையென்றாலும் சமாளித்துக்கொள்ளலாம். குடிக்க தண்ணீர் இல்லையென்றால் ஊரை விட்டு போவது என்ற நிலை வந்துவிடும். ஆகவே இதை கவலையோடு கவனம் செலுத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதற்கு அடுத்தபடியாக முக்கியமான திட்டம், காவிரி டெல்டா பகுதியை நவீனப்படுத்துகிற திட்டம். ஏற்கெனவே 1983ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்காக உலக வங்கி உதவிபெற்று நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால் தமிழகம் பெரும்பகுதி உணவிற்காக காவிரி பாசனத்தை நம்பித்தான் இருக்கிறது. அதுகூட கடந்த காலத்தில் நம்முடைய புள்ளிவிவரங்கள் கூறுகிறது. உணவு உற்பத்தி நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. உற்பத்தி, அது நெல் உற்பத்தியானாலும் சரி, மற்ற தானிய உற்பத்தியானாலும் சரி, குறைந்து கொண்டு வருகிறது. தேவை அதிகரிக்கிறது, உற்பத்தி குறைகிறது. ஆகவே, அதற்கு அடிப்படையாக உள்ளது, நீர்ப்பாசன வசதியை சீராகச் செய்யாதது ஒரு பிரதான காரணமாக இருக்கிறது என்பதை கருத்தில் கொண்டு, நடவடிக்கை எடுக்கவேண்டும்.

காவிரி கழிமுகப் பகுதியை மேம்படுத்துவதற்காக உலக வங்கி அளிக்கக்கூடிய திட்டமானது 1983 ஆம் ஆண்டு தொடங்கி 6 ஆண்டுக்காலம் ஆகிறது. இனியும்கூட, இந்தத் திட்டம் அமலுக்கு வராமல் இருக்கிறது. இதை நடை

முறைப்படுத்துவதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன. காரணம் என்னவென்று சொன்னால், காவிரி நீர் சம்பந்தப்பட்ட தாவாக்கள் இன்னும் தீராத காரணத்தால், கர்நாடக அரசுக் கும், நம்முடைய தமிழக அரசுக்கும், இந்தத் தண்ணீர் சம் பந்தப்பட்ட தாவா தீராத காரணத்தால், உலக வங்கிக் கடன் கிடைப்பதில் தாமதம் ஆகிறது என்று நான் அறிகிறேன். ஆகவே இதைத் துரிதப்படுத்தி—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கர்நாடக முதல அமைச்சரோடு பேச்சு வார்த்தை நடத்துவார்கள் என்று சொன்னார்கள். மிக்க மகிழ்ச்சி. எப்படியாவது ஒரு தீர்வு கண்டு, இந்தப் பிரச்சினையில், காவிரி நீர் சம்பந்தப்பட்ட பிரச்சினையில ஒரு முடிவை ஏற் படுத்தி, இந்தத் தட்டத்தின் மூலமாக சீராக வரக்கூடிய நீரைப் பயன்படுத்தி, ஒழுங்குபடுத்தக் கூடிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு நம்முடைய தமிழகத்தில் இருக்கக்கூடிய மொத்த நிலப்பரப்பிலே மூன்றிலே ஒரு பகுதிதான் பாசன வசதி பெறுகிறது. அதிலும் கூட பெரும்பகுதி பாசன வசதி கிணறுகளின் மூலமாகவும் போர்-வெல்களின மூலமாகவும் பெறப்படுவதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே இன்றைக்கு வாய்க்கால்களின் மூலமாகவும் ஏரிப் பாசனம் மூலமாகவும் ஏறக்குறைய 18½ லட்சம் ஹெக்டேர் நிலங்கள்தான் பாசன வசதி பெறுகின்றன. மீது உள்ள 60 லட்சம் ஹெகடேர் நிலங்கள் எல்லாம் பாசன வசதி இல்லாமல் மானாவாரியாக இருக்கின்றன. எனவே பாசன வசதியை அதிகப்படுத்துவதற்கு நாம் செய்ய வேண்டிய முக்கியமான பணி, கடந்த காலத்தில் உள்ள ஜமீன் குளங்கள் மற்றும் மன்னர் காலத்தில் உள்ள குளங்கள் மேடிட்டு பிர யோசனம் இல்லாமல் போன குளங்களை எல்லாம் சீர்படுத்தி செப்பனிட வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், இப்போதும்கூட, எங்கள் பக்கத்திலே பல குளங்கள் இருக்கின்றன. முன்னாலே சொல்வார்கள், ஒரு தடவை நிரம்பினால், இரண்டு போகம் விளையும் என்று. ஆனால் இன்றைக்கு ஒரு போகம் விளையவே, 2 தடவை நிரம்பவேண்டியதாக இருக்கிறது. காரணம் அவ்வளவு மேடிட்டு இருக்கிறது. அதைப்போலவே, இந்தக் கண்மாய் கள், ஏரிகள், குளங்கள் எல்லாம் மேடிட்டு இருக்கின்றன. முன்னாலே ஒரு தடவை நிரம்பினால், 2 போகம் விளையும், இப்போது ஒரு போகம் விளைய இரண்டு தடவை நிரம்ப வேண்டியிருக்கிறது என்று சொல்கிற நிலைமையிருக்கிறது, இதற் கெல்லாம் காரணம் இந்தக் கண்மாய்கள் ஆழப்படுத்தப் படாமல் இருப்பதுதான். எனவே இவைகளை ஆழப்படுத்துவ தோடு மட்டுமல்லாமல், அவற்றின் கரைகளை உயர்த்தி மழைக்காலங்களிலே வரக்கூடிய தண்ணீரைத் தேக்கி வைக்கக்



கூடியமுறையில் எற்பாடு செய்யவேண்டும். சில இடங்களில் மழைக் காலங்களில் அதிகமான தண்ணீர் வந்து கண்மாய் கள் உடைந்து கொண்டே போகின்றன. அப்படி உடைப் பெடுத்த கண்மாய்களைச் சீர்படுத்த வேண்டும். அந்தக் கரைகளைக் கட்டவேண்டும் என்று சொனனால்கூட, இரணடு ஆண்டுக்காலமாக முயற்சி செய்தாலும் முடியவில்லை. காரணம் அவர்களைச் சொல்லி குற்றம் இல்லை. பொதுப்பணித்துறை யிடத்திலே பணம் இல்லை. அவர்களிடம் சொன்னால், எங்களுக்கு அலாட்மெண்ட் இல்லை, அந்தக் கரையை கட்ட வேண்டும் என்று சொன்னால், 30 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும், இது பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த குளம், ஆகவே அதற்குப் பணம் இலலை என்று சொலகிறார்கள். இல்லை. பொதுப் பணித்துறை குளம் என்று சொன்னால் எங் களுக்கு அலாட்மெண்ட் முடிந்துவிட்டது. ஆகவே கரையைக் கட்டமுடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, இதற்கு அதிகமான பணத்தை ஒதுக்கி, இதைக் கொஞ்சம் சீரியசாக கவனித்து பாசனத்தை அபிவிருத்தி பண்ணுவதற்கும், குடி தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய நிலையைப் போக்கு வதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். வேறு மாநிலங்களில் இருப்பவர்கள் உபயோகப்படுத்துகிற தண்ணீரில் மூன்றில் ஒரு பகுதியைத்தான் இங்கு ஒரு நபர் உபயோகப்படுத்துகிறார் எனறு சொல்லும்போது. இதை நாம் கவலையோடு கவனித்து, இவை களைச் சீர்படுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், எங்கள் பகுதியில், குறிப்பாக கோவில் பட்டி, விளாத்திகுளம், மற்றும் ஒட்டப்பிடாரம் தாலுக்காக் களில் பெரும்பகுதி மானாவாரிக் காடுகள் உள்ளன. அங்கே பெரிய நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் கிடையாது. குளங்கள், கண்மாய்கள் அமைக்கலாம். ஆயிரம் ஏக்கர், 500 ஏக்கர், 300 ஏக்கர்களுக்கு பாசன வசதி அளிக்கக்கூடிய வகையில் குளங்களை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு கள் இருக்கின்றன. மழைக் காலங்களில் வரக்கூடிய தண் சில இடங்களில் ஊரையே அடித்துக்கொண்டு போகிற நிலை யிருக்கிறது. எனவே அப்படிப்பட்ட இடங்களிலே எங்கெங்கு வாய்ப்புகள் இருக்கிறதோ, அங்கெல்லாம் குளங்களை அமைப் பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்றைக்கு இருக்கக்கூடிய குளங்களை சீர்படுத்துவதோடு மட்டும் அல்லாமல், தண்ணீர் வரக்கூடிய அந்த வரத்துக் காய வாய்களை எல்லாம் அழகாகச் செப்பனிடுவதற்கு வேண்டி நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும்.

அதற்கு அடுத்தபடியாக எங்கள் பகுதியிலே, நெல்லை மாவட்டத்திலே உள்ள கொடுமுடியாறு நர்த்தேக்கத் திட்டம் பற்றி சொல்லப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டம் (வரிசை

எண். 5) வனத்துறையினுடைய இசைவுக்காக காத்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லப்பட்டுள்ளது. இதைப்பற்றி ஏறக்குறைய 10, 15 ஆண்டுக்காலமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். நான் முன்னாலே எம்.எல்.ஏ. வாக நான்கு தடவை இருந்திருக்கிறேன். இத்திட்டம் பற்றி பலமுறை இந்த அவையிலே கூறியுள்ளேன். இதற்காக கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்யப்பட்டு, யாரோ ஒருவர் தாவா செய்கிறார், தடுக்கிறார் என்பதற்காக இந்தத் திட்டம் நிறைவேறாமல் இருக்கிறது. இந்த அணைத்திட்டம் நிறைவேறினால், நாங்குனேரி தாலுக்காவில் உள்ள பல கிராமங்களுக்குப் பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். இது ஒரு நல்ல வாய்ப்புள்ள இடம். யாரோ தடுக்கிறார்கள் என்பதற்காக நிறுத்தி வைப்பது என்பது சரியல்ல. அதிகமான நஷ்ட ஈட்டை வேண்டுமானால் கொடுங்கள். அதைப் பற்றிக் கவலை இல்லை. பாசன வசதியை அந்தப் பகுதிக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும், கொடுமுடியாறு திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக பல இடங்களிலே குடிமராமத்து என்று முன்பு இருந்தது. இப்போது அதை எடுத்து விட்டார்கள், சில இடங்களிலே இந்தக் கால்வாய்களை எல்லாம் பார்த்தீர்கள் என்று சொன்னால், ஆக்கிரமிப்பு இருக்கிறது. 20 அடி அகலத்தில் தண்ணீர் போகக்கூடிய வாய்க்கால்களை எல்லாம் இந்த ஆக்கிரமிப்பின் காரணமாக 10 அடியாக சுருக்கிவிட்டார்கள். ஆகவே அதிகமாகத் தண்ணீர் வரும்போது, கரையை உடைத்து, வயல்கள் எல்லாம் சீர்கேடு அடையச் செய்து, தண்ணீர் சீராக வராமல் போய் விடுகிறது. ஆகவே அந்த மாதிரி உள்ள இடங்களில் எல்லாம் இந்தக் குடிமராமத்து என்று சொல்லக்கூடிய அந்த ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

(பிற்பகல் 6-20)

அதற்கு அடுத்தபடியாக குளங்கள், ஏரிகள் இவைகளை மராமத்து செய்யக்கூடிய காலத்தில் காண்டிராக்ட் விடுவதற்குப் பதிலாக நம்முடைய பொதுப்பணித்துறை மூலமாக எடுத்து வேலையில்லாமல் இருக்கின்ற வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பு தரவேண்டுமென்று சொல்கிறோம். அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்து, நேரடியாக இன்றைக்கு அவர்களுக்கு வேலைகள் கிடைக்க ஆர்.எல். ஈ. ஜி. பி. மூலமாக வேலை நடக்கிறது. என். ஆர். ஈ. பி. மூலமாக வேலை நடக்கிறது. அந்த வேலைகள் பூராவும் சட்டப்படி நியாயமாக வேலை செய்பவர்களுக்கு தானியத்தையும், பணத்தையும் கொடுத்து, செய்யவேண்டுமென்றுருக்கிறது. ஆனால், காண்டிராக்ட்காரர்களுக்கு விட்டு



விட்டு, ஏதோ ஒரு பொய்யான கணக்கைக் காட்டி வேலைகள் நடந்து வருகிறதே தவிர, நேரடியாக டிபார்ட்மெண்டின் மூலமாக வேலைகள் நடப்பது கிடையாது. அந்த முறையில் இன்றைக்கு அந்த வேலைகளை எல்லாம் செய்வதற்கு காண்ட்ராக்டிற்கு விடாமல், வேலை இல்லாமல் இருக்கின்ற வாலிபர்களுக்கு வேலை கொடுக்கும் வகையில் அவர்களுக்கு மேற்பார்வை வய்யும் வேலைகளைக் கொடுத்து. மஸ்டர் ரோல் போட்டு,வேலை செய்பவர்களுக்கு அன்றைக்கு மாலையிலேயே அல்லது இரண்டு நாளைக்கு ஒரு முறை ஊதியம் கொடுக்கும் முறையில் அந்த வேலைகளைச் செய்ய வேண்டும். இன்றைக்கும் சட்டத்தில் அப்படித்தான் போட்டிருக்கிறார்கள். அது என். ஆர்.ஈ.பி. வேலையாக இருந்தாலும் சரி, ஆர்.எல்.ஈ.ஜி.பி. வேலையாக இருந்தாலும் சரி, மஸ்டர் ரோல் போட்டு, வேலை செய்பவர்களுக்கு அன்றாடம் வேலைக்கு ஊதியம் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறதே தவிர, உண்மையில்காண்டிராக்டிற்குத்தான் விடப்படுகிறது. பி.டபிள்யூ.டி.யில் ஒரு விதி இருக்கிறது. அந்த விதியை மாற்றவேண்டும். காண்டிராக்ட் விடாமல் டிபார்ட்மெண்ட் மூலம் இந்தப் பணிகள் நடைபெற வேண்டும் என்று பணிவோடு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் ஒரு கண்மாயை ரிப்பேர் செய்ய வேண்டுமென்றால். ஒரு ஏரியை ரிப்பேர் செய்ய வேண்டுமென்றால், 3 ஆண்டுகள் தொடர்ந்து மழை பெய்து, மூன்று ஆண்டுகளும் தொடர்ந்து சர்பிளஸ்-ஆக அந்தத் தண்ணீர் போனால் தான் அந்தக் குளத்தை ரிப்பேர் செய்ய வேண்டுமென்று விதி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது சரியல்ல. அந்த விதியை மாற்ற வேண்டும். மூன்று ஆண்டுகள் தொடர்ந்து மழை பெய்வது என்பது ரொம்ப கஷ்டம். இரண்டு ஆண்டுகள் மழை பெய்தால், மூன்றாவது ஆண்டு விட்டுப்போகிறது. மூன்றாவது ஆண்டு தொடர்ந்து மழை பெய்து, மருகால் ஓடினால்தான் அந்தக் கண்மாயை, ஏரியை ரிப்பேர் செய்யலாம் என்று சொல்லக் கூடிய முறையை மாற்ற வேண்டும்.

அடுத்தபடியாக குடிதண்ணீருக்காக ஆழ் குழாய்க் கிணறுகள் போடப்படுகின்றன. அதற்குப் பக்கத்திலே தனியார் பெரிய போர் வெல்களைப் போடுவதனால், குடிதண்ணீர் கிடைக்காத நிலை ஏற்படுகிறது. அதை எல்லாம் செய்யாமல் இருப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய நிலையில் தமிழகத்திற்கு தண்ணீர் மிகமிகத் தேவை. குடிதண்ணீரும் தேவை. பாசனத்திற்கு அதைவிட மிகுந்த தேவை, இன்றைக்கு விவசாய உற்பத்தி, நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது. இதை அபிவிருத்தி பண்ணக்கூடிய முறையில் இன்றைக்கு அதிகமாக அந்தத் துறைக்கு நிதி ஒதுக்கியிருக்கவேண்டும். அடுத்த ஆண்டாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அல்லது சப்ளிமெண்டரி பட்ஜெட்டிலாவது இத்துறைக்கு அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கிராமப்புறங்களில்

வாழும் மக்களுக்கு வேலைவாய்ப்பு தருவது மட்டுமல்லாமல்,
நீர்ப்பாசன வசதி ஏற்படுத்திக் கொடுத்து, உணவு உற்பத்தியை
பெருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குடி தண்
ணீரைப் பொறுத்தவரையில் வருடாவருடம் நாம் இந்த பஞ்சத்
திற்கு வறட்சி என்று சொல்லி, போர்வெல் போன்று மற்ற
காரியங்களுக்காக செலவழிக்கக்கூடிய பணத்தைக் குறைக்கும்
நோக்கம், இந்தக் காரியங்களைச் செய்வதன் மூலமாக
நிறைவேறும். ஆகவே பாசனத்துறை சம்பந்தப்பட்ட
விஷயத்தில், கவனம் செலுத்தி, இந்தக் காரியங்களை எல்லாம்
செய்யவேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை மானியத்தின்
மீது எல்லா தரப்பையும் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள்
11 பேர் பங்குகொண்டு அரிய ஆலோசனைகளை வழங்கியதற்
காக அவர்களுக்கு எல்லாம் என்னுடைய சார்பிலும் நான்
பொறுப்பு ஏற்றிருக்கிற இந்த பொதுப் பணித்துறையின் சார்
பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல அரிய ஆலோசனைகளை உறுப்பினர்கள் வழங்கி
யிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் நான் ஏற்றுக் கொண்டி
ருக்கிற பணிக்கு உறுதுணையாகக் கொள்வேன் என்று தெரி
வித்துக்கொள்கிறேன். சிலர் எச்சரிக்கை செய்திருக்கிறார்
கள். அறிவுரை வழங்கி இருக்கிறார்கள். அவைகளை
எல்லாம் நான் எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு, என்னுடைய
பணிகளைச் செய்ய நான் முற்படுகிறேன் என்பதை இந்தஅவைக்கு
நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு காலத்தில் மராமத்துத்
துறை என்று இருந்தது இந்தத் துறை. இந்த அமைச்சருக்குப்
பெயரே மராமத்து அமைச்சர் என்றே இருந்தது. 1967 ஆம்
ஆண்டு அறிஞர் அண்ணா பொறுப்பேற்ற காலத்தில், மரா
மத்து மந்திரியாக, இன்றைய முதல்வராக இருக்கிற நம்முடைய
தமிழ் இனத் தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் பொதுப்
பணித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றார்கள். அப்போது
தான் மராமத்து மந்திரி போய், பொதுப்பணித் துறை தமிழகத்
திலே மலர்ந்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.
அன்றைக்கு பொதுப்பணித் துறை பொறுப்பு ஏற்றிருந்த நம்
முடைய கலைஞர் அவர்கள் இன்றைக்கு முதல்வராக பொறுப்பு
ஏற்றிருக்கிற காலத்தில், அவர் ஏற்றிருந்த பெதுப்பணித்
துறையில் என்னைப் பணியாற்று என்று பணித்தது குறித்து
நான் பெருமைப்படுகிறேன். காரணம், இன்னும் ஒரு படி
மேலே போய் நான் சொல்ல வேண்டுமானால், என்னுடைய
கிராமத்திலே சாதாரண ஒரு பஞ்சாயத்து போர்டு உறுப்பின
ராகக்கூட வர முடியாத என்னை இன்றைக்கு இந்த அவையில்
பொதுப்பணித்துறை அமைச்சராகப் பொறுப்பாற்றுகிற, மகத்



தான பொறுப்பை வழங்கிய என்னுடைய தலைவருக்கு மீண்டும்
மீண்டும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் நான்
இந்த அவையிலே தெரிவித்துக் கொள்வது என்னுடைய கடமை
என்று கருதுகிறேன்.

கலைஞர் அவர்கள் பொதுப்பணித்துறையின் அமைச்ச
ராகப் பொறுப்பேற்றிருந்த காலம் பொதுப்பணித் துறையின்
பொற்காலம். அந்தக் காலக் கட்டத்தில் தான் கட்டிடங்கள்
எழிலோடு எழுந்து நின்றன. அணைகள் பிரம்மாண்ட
மாக உருவாயின. சாலைகள், பாலங்கள் தோன்றின.
சென்னையிலே அண்ணா மேம்பாலம், கோயம்புத்தூரிலே
திருநெல்வேலியிலே, மாயவரத்திலே, திருச்சியிலே என்று
எங்கு பார்த்தாலும் பாலங்கள். அதே போல காவிரியிலே
இன்றைக்கும் எப்படி கரிகாலனுடைய பெயரைச் சொல்லக்
கல்லணை இருக்கிறதோ அப்படி ''முக்கொம்பு'' என்ற
இடத்திலே கட்டப்பட்டிருக்கிற அந்தப் பாலம் கலைஞரு
டைய பெருமையை இன்னும் பல ஆண்டுகள் கழித்தும் சொல்லிக்
கொண்டு இருக்கும். அப்படி பொதுப் பணித் துறையி
னுடைய பொற்காலமாக, மக்களுக்கு வாழ்வு அளிக்கக் கூடிய
திட்டத்தை செயல்படுத்தக்கூடிய ஒரு அமைப்பாக இருந்தது
எல்லாம் இடையிலே பொய்யாய் பழங்கதையாய்ப் போனதே
என்று நினைக்கிறபோது நம்முடைய திரு அழகர்சாமி அவர்கள்
சொன்னது போல பொதுப்பணித் துறை என்றாலே இன்
றைக்கு சாதாரணமாகக் கேலி பேசுகிற அளவுக்கு அது வந்து
சேர்ந்து விட்டது.

இருந்தாலும் அவர் முதல்வராக இருக்கிறார் என்ற
தைரியத்தில்தான் இந்த இருண்ட இடத்திற்கு ஒரு ஒளி
விளக்கை ஏற்றிக் கொண்டு நான் உள்ளே நுழைந்திருக்கிறேன்.
எனவே அந்த வகையிலே இந்தப் பணிகளை ஆற்றுவதற்கு
மன்ற உறுப்பினர்கள் எனக்குத் தந்த அறிவுரைகளையும் ஆலோ
சனைகளையும் நான் பெருமையாக எடுத்துக்கொண்டு நான்
என் பணியைத் தொடர்கிறேன். பொதுவாகவே ஒவ்வொரு
உறுப்பினரும் பொதுப் பணித்துறையில் நிறையப் பேசுவார்கள்.
நான் 71-லேயிருந்து இந்த அவையிலே இருந்து இருக்கிறேன்.
ஆளும் கட்சியிலேயும், எதிர்க்கட்சியிலேயும். தங்களுடைய தொகுதி
களுக்குதேவையான பல திட்டங்களை எடுத்துச் சொல்லக் கூடிய
துறைகளில் பொதுப்பணித்துறையும் ஒன்றாகும். இந்தத்
துறை மிகப் பழமையானது. மனிதன் என்
றைக்கு நீரைக் கையிலே தேக்கினானோ அன்றைக்கே அணை
உருவாகிவிட்டது. என்றைக்கு குகையிலே நின்று மழை
வராமல் ஒதுங்கினானோ அன்றைக்கே கட்டிடங்கள் உருவாகி
விட்டன. எனவே தான் இந்தத் துறை மனிதனோடு தோன்றி
ஒன்றியிருக்கிற ஒரு துறை. இந்தத் துறையிலே இன்றைக்கு
எல்லோரும் தங்களுடைய தொகுதிக்கு அது வேண்டும் இது

வேண்டுமென்று பேசினார்கள் என்று சொன்னாலும் அது அவர்களுடைய கடமை என்பதை நான் உணர்கிறேன். பொதுவாகவே சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். மராமத்து என்பது மறந்தே போய் விட்டது. வீரையன் சொன்னார் பிள்ளைகளிடத்திலே மராமத்து என்றால் மரத்தால் ஆன மத்து மட்டும்தான் தெரியும். இவையெல்லாம் தெரியாது என்று. அது மறந்தே போய்விட்டது. பொதுவாக கொட்டாங்கச்சியைப்போன்று காட்சி அளித்த ஏரிகள் இப்போதெல்லாம் தூர்ந்து போய் தாம்பாளத்தட்டுபோல கொஞ்சம் மட்டும் பள்ளம் இருக்கிறது. அப்படி ஆக்கிரமிப்பு அதிகமாகிவிட்டது என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள்.

இரண்டாவது அப்படி செய்யப்படுகிற ஏதாவது தூர்வாருகிற வேலை வேறு பல வேலைகள் நடைபெற்றால் அவைகள் ஒழுங்காக நடைபெறுவது இல்லை, வேலை நடக்கிறதோ இல்லையோ, மண்ணைப் போடுகிறானோ இல்லையோ பில்லை போட்டு விடுகிறார்கள் என்ற கவலையையும் உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மூன்றாவதாக அவர்கள் தெரிவித்த இன்னொரு குறைபாடு. காலதாமதம் ஆகிறது. ஆண்டாண்டாக இழுத்துக்கொண்டே போகிறது என்பதையும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அடுத்தது கட்டிடங்களைப் பொறுத்தவரையில் எழும்புகிற கட்டிடங்கள் உறுதியாக இல்லை என்று நம்முடைய திரு, சமத் அவர்கள் தெரிவித்தார்கள். கட்டிடங்கள் பராமரிக்கப்படவில்லை என்ற கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதோடு ஆழ் குழாய்க் கிணறுகளை போட வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் குறைபாடுகள் எல்லாம் இல்லை என்று நான் உங்களிடத்திலே வாதாடத் தயாராக இல்லை. இருந்து இருக்கலாம். ஆனால் இந்தக் குறைபாடுகளைப் போக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய முக்கிய கொள்கையாக இருக்கிறது. ஆக சுணக்கங்களை ஒதுக்கித் தள்ளி விட்டு அவர்களை பந்தயக் குதிரை போல் மீண்டும் 67 பொதுப்பணித்துறை நிலைக்கு கொண்டு வந்து நிறுத்துவதைத்தான் இந்த அரசு விரும்புகிறது என்பதை நான் உங்களுக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இங்கே ஒவ்வொரு உறுப்பினரும் எடுத்து வைத்த கருத்துக்களுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டும் என்பது தான் என்னுடைய எண்ணம். அதேபோல உறுப்பினர்கள் நிறையப் பேர் தங்கள் வெட்டுத் தீர்மானங்கள் மூலம், பேச வாய்ப்பு இல்லாதவர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். நான் அந்த வெட்டுத் தீர்மானங்களை முழுவதும் படித்தேன். என்னுடைய துறையினுடைய அதிகாரிகளோடு விவாதித்தேன். எது எது செய்ய முடியும் என்று தோன்றுகிறதோ அதையெல்லாம் உடனடியாக காலதாமதம் இன்றிச் செய்யவேண்டும் என்று அவர்களுக்கு நான் உத்திரவும் இட்டிருக்கிறேன்.



(பிற்பகல் 6-30)

அதே போன்று இங்கே பேசியவர்கள் சொன்ன கருத்துக்களையும் அதிகாரிகள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களும் இது குறித்து நடவடிக்கை எடுப்பார்கள். இருந்தாலும் இந்தத் துறையினுடைய அமைச்சர் என்ற முறையில் நான் சில கருத்துக்களை இங்கே வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். முதலில் நம்முடைய வீரையன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். காவேரி டெல்டா கடைமடைப் பகுதியை இப்போது நவீனமாக்குகின்ற திட்டத்தில் கடைமடையிலிருந்து தான் அந்தப் பணியை ஆரம்பிக்க வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். அவருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். காவேரி டெல்டாவின் கடைமடைப் பகுதி பாசனக் கால்வாய் தண்ணீர் பற்றாக்குறையாலும் மழைக் காலங்களில் வெள்ளத்தினாலும் பாதிக்கப்படுகின்றன. தற்போது போதுமான கொள்ளளவு ஏற்படுத்த இடைக்காலத் திட்டப் பணிகளும் கடைமடைப் பகுதிகளுக்கு முககியத்துவம கொடுத்துத்தான் செய்யப்படுகின்றன எனவே உலக வங்கியின் உதவியுடன் செய்யப்படுகின்ற இந்தப் பணியும் கடைமடை பகுதியில் தான் ஆரம்பிக்கப்படுகிறது. முதல் கட்டத்திலே மேற்கொள்ள இருககும் 10 ஆறுகளின் பணிகளும் அவ்வாறே கடைமடைப் பகுதியிலிருந்து தான் ஆரம்பிக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னொன்று அவர் பேசுகின்ற போது குறிப்பிட்டார். மோர்தானா அணை தஞ்சை மாவட்டத்திலிருந்து வட ஆற்காடு மாவட்டத்திற்கு அவர் வக்காலத்து வாங்கிப் பேசியதற்காக, நான் அந்த மாவட்டத்தைச் சார்ந்தவன் என்ற முறையில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் திரு. சுந்தரத்திற்காக பேசினார் என்று எனக்குத் தெரியும், ஆனால் மோர்தானா என்பது குடியாத்தம் தாலுக்காவிலே உள்ள நீர்த்தேக்கத் திட்டம்—பாலாற்றிலே உப நதியான கொண்டையா நதியின் குறுக்கே கட்டப்படுகின்ற ஒரு திட்டம். நம்முடைய முதல்வர் அவர்கள் 1975 ஆம் ஆண்டு முதல்வராக இருந்த போது அதற்கு அடிக்கல் நாட்டினார்கள். எல்லா வேலைகளும் நடைபெற்றன. சுமார் 6,377 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி செய்ய திட்டமிடப்பட்டது. ஆனால் என்ன காரணத்திற்காக அது இடையிலே விடப்பட்டது என்பது இதுவரையில் மர்மக் கதையாக இருக்கிறது. காரணம் அரசாங்கக் குறிப்பிலே கூட ஏன் இது கைவிடப்பட்டது என்றால் காரணம் தெரியவில்லை என்று தான் இலாக்காவே பரிந்துரை செய்கிறது. எனவே அரசியல் காரணத்திற்காக விடப்பட்ட அந்தத் திட்டம் நிச்சயமாக எடுத்துக் கொள்ளப்படும் என்பதை நம்முடைய திரு. வீரையன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து இன்னொன்று, நம்முடைய ஏ. ஈ. க்களைப் பற்றியது. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு செய்த 428 உதவிப்

பொறியாளர்களில் 338 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது. மீதி இருக்கின்ற 90 பேர்களுக்கு, பணியில் அமர்த்த ஆணை வழங்க வேண்டும். பல வேலைகள் முடிக்கப்பட்டதால பல கோட்டங்கள் மூடப்பட்டு வருகின்றன. எனவே இவர்களுக்கு ஆணை வழங்கத் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையிலே இவர்களை பணியில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 15 பேர்கள் நெடுஞ்சாலைத் துறைக்குச் செல்ல விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய திரு. பாண்டியன் அவர்கள் உரையாற்றுகின்ற போது குறிப்பாக அவருடைய தொகுதியிலே 11 ஆண்டுக் காலமாக—கென்னடியன் கால்வாய் சூன் மாத முதல் வாரத்திலே திறந்து விடப்படுகிறது. அதே போல இப்போதும் திறந்துவிட வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார். தாமிரபரணியில் மொத்தம் 11 கால்வாய்கள் இருக்கின்றன. அதிலே கென்னடியன் கால்வாய் மூன்றாவது அணைக்கட்டின் கீழ் அமைந்திருக்கிறது. சூன் மாதம் திறந்து விடுவதிலே எங்களுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை. ஆனால் பருவ மழை வந்தாக வேண்டும். பருவ மழை வருமேயானால் நம்முடைய திரு. பாண்டியன் கோரிக்கை நிச்சயமாகக் கவனிக்கப்படும் என்பதை நான் அவருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் இங்கே நந்தன் கால்வாயைப் பற்றி......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பருவ மழை வருவதற்கு யாரிடத்திலாவது கோரிக்கை வைக்க வேண்டுமா? (சிரிப்பு.)

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** பருவ மழை வருவதற்கு யாரிடத்திலும் கோரிக்கை வைக்கத் தேவையில்லை. கோரிக்கை இல்லாமலேயே பொழிவது தான் பருவ மழை. (குறுக்கீடு). வருண பகவான் கிட்டேயா? சரி தீட்சிதர் சொன்னால் அப்பீல் கிடையாது. (சிரிப்பு.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்தப் பொறுப்பை வேண்டுமானால் நம்முடைய தீட்சிதரிடத்திலே ஒப்படைத்து விடுவோம். (சிரிப்பு.)

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** திரு பூவராகன் சொன்னார் தென்னாற்காடு மாவட்டத்தை மறந்தே போய் விட்டதே; பொதுப்பணித்துறை காணோமே; எதிலும் பணம் ஒதுக்கவே ஒரு பில்டிங்குக்கு ஒதுக்கியிருக்கிறார்களா? ஏரி, குளம், ஒரு குட்டைக்கு ஒதுக்கியிருக்கிறார்களா? ஒன்றுமே



இல்லையே என்று சொன்னார்கள். அவருக்கு நிறைய இருக்கிறது. இருந்தாலும் நேரம் இல்லாத காரணத்தால் அவர் அதிகமாகப் புரட்டியிருக்க மாட்டார். ஒன்று இரண்டு மட்டும் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மெயின்டெனன்ஸ் கிராண்ட்ஸீக்கு மட்டும் லட்சக் கணக்கிலே—வேலாயர் கொலரோன்னுக்கு 2.31 இலட்சம்; திருக்கோயிலூர் அணைக்கட்டுக்கு 5 இலட்சம்; மாம்பாத்தூர் அணைக்கட்டுக்கு 3 இலட்சம்; விருத்தாசலம் அணைக்கட்டிற்கு 3 இலட்சம்;சேத்தியாத் தோப்பு அணைக்கட்டுக்கு 6 இலட்சத்து 18 ஆயிரம். வீரா நந்துறை அணைக்கட்டு 10 இலட்சம்; தொழுப்பேடு அணைக்கட்டு 10 இலட்சம்; வீடூர் அணைக்கட்டு 3 லட்சத்து 10 ஆயிரம்; கோமுகி நதி அணைக்கட்டு 4 லட்சத்து 7 ஆயிரம்; மணிமுத்தாறு நதி 4 லட்சத்து 76 ஆயிரம்—ஆக இவ்வளவு அந்தப் பகுதிக்கு மெயின்டனன்சுக்காக கொடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து இன்னொன்று சொன்னார்கள், நெய்வேலியில் உள்ள தண்ணீரை வெளியேற்றி, அவற்றை எல்லாம் கொண்டு போய், அம்மேரி, முதலை ஏரி போன்ற ஏரிகளில் விட வேண்டுமென்ற கோரிக்கை வைத்தார்கள். நெய்வேலியைச் சுற்றியுள்ள பகுதிகளில் நில மட்டம் வடக்கிலிருந்து கிழக்கு மற்றும் தெற்கு நோக்கியும் சாய்வாக இருக்கிறது. எனவே முதல் சுரங்கத்திலிருந்து கிடைக்கும் உபரி நீர் தற்சமயம் இயற்கையாக உள்ள வழிகளில் விடப்படுகிறது. அது சாய்வான நிலப் பகுதிகளில் உள்ள ஏரிகளுக்குத் தானாகச் சென்று நிரம்பி, விவசாயத்திற்குப் பயன்படுகிறது. மேட்டுப் பகுதியில், அதாவது மேற்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் உள்ள ஏரிகளுக்குத் தண்ணீரைக் கொண்டு சென்று நிரப்ப, பம்ப் மூலம்தான் இயலும். எனவே அவற்றுக்கு மேலும் செலவாகும் என்ற காரணத்தால் அதுபற்றி நாங்கள் யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

அடுத்து, ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டப்பணி தென்னாற்காடு மாவட்டத்தில் குறைந்துவிட்டதே, ஏன் என்று கேட்டார்கள்.

**திரு. கோ. பூவராகன் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் வழக்கமாக எழுதிக் கொடுத்திருப்பதைப் படிக்கிறார்கள். முதல் சுரங்கத் திட்டத்தில் இந்த ஏற்பாடு. இரண்டாவது சுரங்கத் திட்டத்தை வெட்டும் போது அது மேட்டுப் பகுதியில்தான் இருக்கிறது. மேட்டுப் பகுதியிலிருந்து தண்ணீரைக் கொண்டு போக முடியாது என்று சொன்னால் அது அவ்வளவு பொருத்தமாக இராது. வருடாவருடம் சொல்லும் பதில் தான் இது. அமைச்சரவர்கள் பல ஏரிகளைப் படித்தார்கள். ஏற்கெனவே செலவு செய்ததா அல்லது இந்த ஆண்டு செலவு செய்ய இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் அமைச்சராக இருந்தவர்கள். இந்த ஆண்டு பட்ஜெட் வருகிறபோது, ஸ்டேன்டிங் பைனான்ஸ் கமிட்டி எப்போது கூடுகிறதென்பது அவருக்குத் தெரியும். நாங்கள் அதில் எவ்வளவு சேர்க்க முடியும் என்பதும் தெரியும்.

ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டத்திலே முதல் கட்டத்திலே 25 ஏரிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இன்னும் பல ஏரிகள் இருக்கின்றன. ஆக முதல் திட்டம், இரண்டாவது திட்டம் சேர்த்து 45 ஏரிகள் 10 கோடி ரூபாய் செலவில் எடுத்துக்கொள்ளப்படும் நிலைமை தென்னாற்காடு மாவட்டத்தில் உண்டு என்பதை நான் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயராகவன் அவர்கள் மாம்பழத்து ஆறு திட்டம், விளாத்துறை நீரேற்றுத் திட்டம், சித்தாறு பட்டணங்கால் திட்டங்கள் பற்றிச் சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் வில்லுக்குறி கிராமத்திற்கு அருகில் வெள்ளையாற்றின் உபநதியாகிய மாம்பழத்து ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்ட ஒரு கருத்துரு அரசுக்கு வந்திருக்கிறது. இதன் மதிப்பீடு 575 லட்சம் ரூபாயாகும். இது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இதனால் 475 ஏக்கர்கள் இருபோக நஞ்சை பாசன வசதி பெறும். விளாத்துறை நீரேற்றுத் திட்டம் 1961 இல் முதன் முதலாகச் சொல்லப்பட்டது. சித்தாறு பட்டணங்கால் திட்டம் நிறைவேற்றப்பட்டபோது நீண்ட நீர்ப் பாசனப் பிடிப்பு சேர்க்கப்பட்டிருக்கிறது. சித்தாறு பட்டணங்கால் திட்டம் முடிக்கப்பட்டிருக்கிறது. அடுத்து, அவர்கள் முக்கியமாகச் சொன்னது, நெய்யாறு இடதுகரை சேனல் திட்டம். கேரள அரசிடம் கேட்க வேண்டுமென்று சொன்னார்கள். இந்தத் திட்டத்தில் கன்னியாகுமரி கிளைக் கால்வாய்க்கு 150 கியுசெக்ஸ் தண்ணீர் பெறுகிற ஒப்பந்தம் கேரள அரசுடன் எடுத்துக்கொள்ளப்பட்டு, கேரள அரசுடன் கடிதப் போக்குவரத்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை அவருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதைப்போன்று மற்றும் இருக்கிற உறுப்பினர்கள் பல் வேறு கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவிரிப் பிரச்சினை பற்றி அவர்கள் தெரிவித்தார்கள். காவிரிப் பிரச்சினை பற்றி நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், கர்நாடக முதல்வர் மாண்புமிகு திரு. பொம்மை



அவர்களும் 28ஆம் தேதி பேச இருக்கிறார்கள். அந்தப் பேச்சில் நல்ல முடிவு ஏற்படுமென்று இந்த அரசு நம்புகிறது.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்கள் கூட வேகமாகச் சொன்னார்கள். எத்தனையோ அமைச்சர்கள் வந்தார்கள், போனார்கள், ஆனால் பச்சையாறுத் திட்டம் என்னவாயிற்று, முடிந்ததா, முடியவில்லை என்று சொன்னார்கள். நம்முடைய முதல்வரவர்கள் இங்கே நிதிநிலை அறிக்கை படித்தபோதுகூட அவைகளை எல்லாம் இந்த அவையிலே சுட்டிக்காட்டி, அவைகள் எல்லாம் நிறைவேற்றப்படுமென்று சொன்னார்கள். பச்சையாறு திட்டம் வந்திருக்கிறது. அதை நிச்சயமாக அரசு ஏற்றுக் கொள்ளும், இதிலே பிரச்சினை என்னவென்றால், அணைகள் கட்டுவதிலேகூட சிரமம் இல்லை. இப்போது புதிய பிரச்சினை கொண்டு வந்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 6-40)

அணை கட்டுகின்றபோது காட்டு இலாக்காவினுடைய இடத்தை நாம் எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்போது காட்டு இலாக்காவினுடைய இடம் ஒரு 50 ஏக்கர் நமக்கு அதில் தேவைப்படுகிறது என்றால் 100 ஏக்கர் நிலம் டபுளாக தரவேண்டும் என்று நம்மை வற்புறுத்துகிறார்கள். இந்த 100 ஏக்கர் நிலத்தைக் கொடுப்பதற்கு நாம் கலெக்டரை அணுகவேண்டும். கடைசியில் 100 ஏக்கர் நிலத்தை எங்கேயாவது கண்டுபிடித்து கொஞ்சம் அங்கிருந்து 25 மைல், 30 மைல், 40 மைல் தள்ளி 100 ஏக்கர் நிலம் இருக்கிறது எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னால் காட்டு இலாக்காவினர் சொல்கிறார்கள் இங்கு சரளைக் கற்கள் நிறைந்து இருக்கிறது இதை நாங்கள் எடுத்துக்கொள்ள மாட்டோம் என்று சொல்கிறார்கள். ஏன் என்றால் காடுகளில் கல்லே கிடையாது. மரம் தான் கிடையாது என்று நினைத்தோம் இப்போது கல்லும் கிடையாது போல் இருக்கிறது. அது தான் பல திட்டங்கள் தாமதப்படுவதற்குக் காரணம். இல்லாவிட்டால் வேகமாக வேலைகள் நடக்கும். அப்படியே போனால் திரும்ப, திரும்ப ஒரு கொரி போட்டு திருப்பி நமக்கு வந்து கொண்டே இருக்கும். ஆகவே இதைச் செய்து இருப்பது மத்திய அரசு. இங்கே ஒரு சிறு இடத்தில ஒரு அணை கட்டுவதற்குக் கூட மத்திய அரசினுடைய அனுமதி தேவைப்படுகிறது. இதற்கு ஆண்டுக் கணக்கில் கூட தாமதம் ஏற்பட்டு விடுகிறது. அதிலேதான் தாமதப்படுகிறதே தவிர வேறு ஒரு காரணமும் அல்ல.

நம்முடைய திரு. பாண்டியன் அவர்கள் கூட சொன்னார்கள். பச்சையாறு திட்டம் உங்களால் முடியுமா என்று. பச்சையாறு திட்டம் கொண்டு வரவேண்டும் என்று மாண்பு

கலைஞர் அவர்கள் முதலமைச்சராக அன்றைக்கு இருந்த நேரத்திலே அறிவித்தார்கள். இன்றைக்கு நிதிநிலை அறிக்கையில் கூட அதைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதில் ஒன்றை சிலபேர் சொல்லுவது சிங்க வால் குரங்கு இருக்கிறது என்பது தான். ஆனால் இந்த முறை சிங்க வால் குரங்கு கூட ராமன் அணை கட்டுகிறபோது கல் எடுத்துப் போட்டது போல் சிங்க வால் குரங்கு கூட பச்சையாறு அணைக்கு கல் எடுத்துக் கொடுக்கும். எனவே திரு. பாண்டியன் அஞ்சத் தேவையில்லை. பச்சையாறு வந்தே தீரும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

எனவே நான் சில அறிவிப்புகளை—அவற்றில் பல்வேறு பிரச்சினைகளுக்கு பதில் அடங்கியிருக்கிற காரணத்தால்—நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு பல கோடி ரூபாய்களைச் செலவு செய்து நீர்த் தேக்கங்கள், ஏரிகள், பாசனக் கால்வாய்கள் ஆகியவற்றை அமைக்கின்றன. மேலும் பாசன முறைகளையும், ஏரிகளையும் நவீனப் படுத்தும் திட்டங்களையும் அரசு மேற்கொள்ளுகிறது. நீர்த் தேக்கங்கள் மற்றும் ஏரியின் நீர்ப்பரப்புப் பகுதிகளில் ஆக்கிரமிப்புகள் இருப்பதால் முழுமையான அளவு நீரைத் தேக்க முடியவில்லை. நீர் வரத்துக் கால்வாய்களில் ஆக்கிரமிப்புகள் இருப்பதால் நீர்த்தேக்கங்களுக்கும், ஏரிகளுக்கும் வரவேண்டிய நீர் முழு அளவில் வராமல் திசை திரும்பி விடுகிறது. எனவே, நாம் பல கோடிக்கணக்கான ரூபாயைச் செலவு செய்து அமைத்த நீர்த்தேக்கங்கள், ஏரிகள், பாசனக் கால்வாய்கள் ஆகியவற்றின் முழுப் பயனையும் நம்மால் அடைய இயலாமல் போய் விடுகிறது. எனவே இவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை உடன் அகற்றுவது மிகவும் இன்றியமையாதது ஆகும்.

தற்போதுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு பொதுப் பணித் துறை அதிகாரிகளுக்கு பெயர் அளவில்தான் அதிகாரம் இருக்கிறது. இதற்கு வருவாய்த் துறை மற்றும் காவல் துறையின் முழு ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது. மேலும் நடவடிக்கை எடுக்க முனையும்போது அவைகள் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நடவடிக்கைகள் தாமதப்படுகின்றன. எனவே ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் முழு வெற்றியை நம்மால்பெற முடியவில்லை. முழு வெற்றியைக் காணவேண்டும் என்று சொன்னால் தற்போதுள்ள சட்டங்களில் பெரும் மாற்றங்களைச் செய்து பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கு முழு அதிகாரம் தர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் முழுக் கவனம் செலுத்த முடிவு செய்துள்ளது. முதல் கட்டமாக பொதுப்பணித்



துறையைச் சார்ந்த ஏரிகளிலும் குறிப்பாக ஐரோப்பியப் பொருளாதார கூட்டு உதவியுடன் நவீனப் படுத்தும் பிரிவில் வரத்துக் கால்வாய்களிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற எல்லா ஏற்பாடுகளையும் பொதுப்பணித் துறை மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவது பாசன சங்கங்கள்.............

**திரு. இரா. மோகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரி திட்டத்தைப் பற்றி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது ஒரு முக்கியமான பிரச்சினையை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கோவை மாவட்டத்தில் கோவை வட்டத்தில் இப்போது உருவாகிக் கொண்டு இருக்கின்ற சின்னவேடம்பட்டி ஏரி திட்டம் ஏறக்குறைய 4 கோடியே 7 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட இருக்கின்ற அந்த ஏரித் திட்டத்தினுடைய பணிகள் 60 சதவீதம் மண் அணை வேலையும், 26 சதவீதம் கால்வாய் பணியும் முடிந்துள்ளது. இந்த நிலையில் அது தாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. என்ன காரணம் என்று சொன்னால் ஹை டென்ஷன் ஒயர் கம்பங்கள் வரிசையாக அந்த ஏரித் திட்டத்தின் குறுக்கே சென்று கொண்டிருக்கின்றன. கடந்த ஆட்சியிலே பல முறை எடுத்துக் கூறப்பட்டும் கூட மின் வாரியம் அந்த ஹை டென்ஷன் ஒயரை இன்னும் அப்புறப்படுத்தவில்லை. இன்னும் அது கால தாமதம் ஆகின்ற காரணத்தால் 4 கோடி ரூபாய் செலவில் உருவாகின்ற அந்தத் திட்டம் பாதிப் பணிக்கு மேல் முடிந்தும் வீணாகக் கால தாமதம் ஆகிறது. 'கோ-ஆர்டினேஷன் பிட்வீன் டு டிபார்ட்மென்ட்ஸ்' இல்லை. தயவு செய்து அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு உடனடியாக அந்த ஹை டென்ஷன் ஒயரை அப்புறப்படுத்தி அந்த ஏரித் திட்டத்தை அமல் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** சின்னவேடம்பட்டி ஏரித் திட்டம் மதிப்பீடு 407 இலட்சம். இந்தச் சுணக்கத்திற்கான காரணங்கள் இங்கே ரயில்வே பாலம் கட்டுவதற்காக ரயில்வே துறையுடன் தொடர்பு கொண்டு மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வருவாய்த் துறையினர் 246.136 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தி பொதுப் பணித்துறை வசம் ஒப்படைக்கவேண்டும். இதுவரை நிலம் எதுவும் ஒப்படைக்கப்படவில்லை. தற்போது நிலச் சொந்தக்காரர்களிடம் உள்ள நிலங்களில் நுழைவு செய்து பணிகளைச் செய்ய அனுமதி கொடுத்து, வாங்கிய இடங்களில் மட்டும் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். அடுத்து பார்மர்ஸ் அசோசியேஷன் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பச்சையாறு திட்டம், பச்சையாறு திட்டம் என்று சொல்லும்போது எனக்கு ஒரு ஆவல். என்னுடைய தொகுதியிலே ஒரு பச்சையாறு திட்டம் 5 கோடி ரூபாய் மதிப்பீடு தயார் செய்து இன்வெஸ்டிகேஷன் முடிந்து தலைமைப் பொறியாளர் இடத்திலே ஒரு 5, 6 ஆண்டுக் காலமாக இருக்கிறது. அந்தப் பச்சையாறு திட்டமா அல்லது இது வேறா என்று விளக்குமாறு கேட்டுக்கொள்வதோடு...... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாண்டியன் பச்சை. (சிரிப்பு).

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியானால் என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய பச்சையாறு திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது நெல்லை மாவட்டத்தினுடைய பச்சையாறு திட்டம், மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் அவர்கள் சொல்லுகிற அந்தத் திட்டமும் ஆய்வில் இருக்கிறது.

அடுத்ததாக, பாசன சங்கங்கள் அமைப்பது பற்றி. அதாவது அசோசியேசன் அமைப்பது பற்றி. ஆற்றுப் பாசனம் என்றாலும், ஏரிப் பாசனம் என்றாலும், பாசனம் சீரிய முறையில் நடைபெற வேண்டுமெனில் விவசாயிகளுடைய முழு ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது. பாசன ஆதாரங்களை விவசாயிகள் தங்களுடைய சொந்த ஆதாரங்களாக நினைத்து அவற்றை பேணிக் காக்கிற ஒரு உணர்வினை விவசாயிகளுக்கு ஏற்படுத்தவேண்டியது மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது. எனவே ஆதாரங்களைப் பராமரிப்பதிலும் வருகிற நீரினை சீரிய முறையில் தங்களுக்குள் பங்கீடு செய்து கொள்வதற்கும் அவர்களை ஈடுபடுத்தும் நோக்கத்தான், பாசன முறைகள், ஏரிப் பாசனம் இவற்றிலுள்ள ஆயக்கட்டுக்காரர்கள் அடங்கிய பாசன சங்கங்கள் அமைப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது. இப்பாசன சங்கங்களுக்குத் தேவையான விதிமுறைகளை அவர்களே ஏற்படுத்திக் கொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது. முதல் கட்டமாக ஐரோப்பிய பொருளாதார குழு உதவியுடன் நவீனப்படுத்தப்படும் ஏரிகளிலும், உலக வங்கி உதவியுடன் செயலாக்கப்படும் தேசிய நீர் மேலாண்மை திட்டத்திலுள்ள திட்டங்களிலும் பாசன சங்கங்கள் அமைக்கப்படும். விவசாயிகளுக்கு நீர்ப் பங்கீடு செய்வதிலும் பராமரிப்பு



செய்வதிலும் பயிற்சி அளிக்கப்படும். பின்னர் இத்திட்டம் உலக வங்கி உதவியுடன் செயலபடுத்தப்படும். பெரியாறு, வைகை திட்டத்திலே பிற பாசன முறைகளும் செயல்படுத்தப் படும்.

மூன்றாவதாக, ஐரோப்பிய பொருளாதாரக் குழு உதவியுடன் நடைபெறும் தமிழ்நாட்டிலுள்ள ஏரிகளை நவீனப் படுத்துகிற ஒரு திட்டம். முதல கட்ட மதிப்பீடு 44.43 கோடி. ஐரோப்பிய பொருளாதார மானியம், இந்தத் திட்டத்திற்கு முதல் கட்டம் முடிந்து இரண்டாவது கட்டம் வந்திருக்கிறது. இந்த இரண்டாவது கட்டத்தில் இந்த ஆண்டு புதிதாக எடுத்துகொள்ளவுள்ள பாசனத் திட்டங்களில் இது முதன்மையானது. திட்டத்தின் மொத்த மதிப்பு 53.12 கோடி. ஐரோப்பிய பொருளாதார குழு மானியம் 39.20 கோடி, தமிழ்நாடு அரசின் பங்கு 13.92 கோடி. ஐரோப்பிய பொருளாதாரக் குழு மானியமாக வழங்குகிறது. கடனாக அல்ல. இரண்டாம் கட்ட பணித் திட்டங்கள் உருவாகியுள்ளன.

அடுத்ததாக, திருச்சி மாவட்ட காவிரிப் பாசன புது திட்டங்கள். புதுவாத்தலை வாய்க்கால் மாற்றி அமைத்தல். இத்திட்டத்தின் கீழ் மேலணையின் மேல்புறத்தில் காவிரியில் 28/7 மைனஸ் 130 கல்லில் தலைப்பு மதகு புதிதாக கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்புதிய தலைப்பு மதகிலிருந்து பழைய தலைப்பு மதகு வரையில் சுமார் 1515 மீட்டர் நீளத்திற்கு புதிய வாய்க்கால் வெட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பாசன வாய்க்கால் சுமார் 3086 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கும். திட்ட மதிப்பீடு தொகையான ரூபாய் 89 இலட்சத்தில் 1989-90-ல் ரூபாய் 5 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கட்டளை உயர்மட்டக் கால்வாயின் குறுக்கே நீர் கண்டிகை கட்டுதல். கட்டளை உயர் மட்டக் கால்வாயின் நீர்ப்போக்கை கட்டுப்படுத்தி மதகுகளுக்கு நீர் மட்டத்தை பராமரிக்கும் அளவிற்கு தீவிர முறைப் பாசனத்தை சீர்படுத்தவும், ஒரு நீர்கண்டிகை கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நீர்கண்டிகை கட்டுவதால் பதிவுற்ற இரு போக சாகுப்படி நிலங்களுக்கு பாசனம் உறுதிப்படுத்தப்படும். ஒரு போக சாகுபடி நிலங்களுக்கு தேவைக்கேற்ப பாசன நீர் பகிர்ந்து அளிக்கப்படும். திட்ட மதிப்பீடு தொகையான ரூபாய் 4.84 இலட்சத்தில் 1989-90-ல் 3 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உய்யகொண்டான் கால்வாய் அருகே நீர்கண்டிகை கட்டுதல். உய்யகொண்டான் கால்வாய் அருகே மேல்பகுதியிலுள்ள

இருபோக சாகுபடி நிலங்களுக்கும், கிழ்ப்பகுதியிலுள்ள ஒரு போக சாகுபடி நிலங்களுக்கும் நீர் விநியோகத்தை கட்டுப்பாடு செய்வதற்கு ஒரு நீர்கண்டிகை கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(பிற்பகல் 6-50)

திட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூபாய் 6.16 லட்சத்தில் 1989-90-ல் ரூபாய் 3 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, தேசிய நீர் நிர்வாகத் திட்டத்தின்கிழ் புதிய நிர்வாகத் திட்டங்கள். அதாவது, இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்படுகிற திட்டங்கள். கம்பம் பள்ளத்தாக்கு ஒரு திட்டம். மதுரை மாவட்டத்தில் இந்தத் திட்டத்தினால் சுமார் இருபதாயிரத்து பதின்மூன்று ஏக்கர் பாசனப் பரப்பு பயன்பெறவிருக்கிறது. இத்துணைத் திட்டத்திற்காகும் செலவு ரூபாய் 202.42 லட்சங்கள். இத் திட்டத்திற்கு மாநில அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. இத் திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெற்றதும் பணிகள் தொடங்கப்படும்.

இரண்டாவது, அமராவதி துணைத் திட்டம். கோவை, பெரியார் மற்றும் திருச்சி மாவட்டங்களில் இத்திட்டங்களால சுமார் 51,318 ஏக்கர் பரப்பளவு பாசனம் பெறவிருக்கிறது. இத்துணைத் திட்டத்திற்காகும் செலவு ரூபாய் 519.20 லட்சங்கள் ஆகும். இத்திட்டத்திற்கு மாநில அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெற்ற பிறகு, மற்ற பணிகள் தொடங்கப்படும்.

இரண்டாவது, இந்த ஆண்டு புதிதாக சேர்த்திருப்பவை, சேத்தியாத்தோப்பு அணைக்கரைத் திட்டம். மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் கவனிக்க வேண்டும். தென்னாற்காடு மாவட்டத்தில் சுமார் 44,473 ஏக்கர் பாசனப் பரப்பு பயன் பெறுகிறது. இத் துணைத் திட்டத்திற்கு ஆகும் செலவு ரூபாய் 449.95 லட்சங்கள் ஆகும். இத்திட்டத்திற்கான விரிவாக்கத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

அடுத்து, மருதா நதித் திட்டம். இங்கே கூட பல உறுப்பினர்கள் அதைப்பற்றிப் பேசினார்கள். திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் மற்றும் மதுரை மாவட்டத்தில் சுமார் 6,585 ஏக்கர் பாசன பரப்பளவு பயன் பெறுகிறது. இத் திட்டத்திற்காகும் செலவு ரூபாய் 66.63 லட்சங்கள். இத்திட்டத்திற்கான விரிவாக்கத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.



அதேபோன்று, இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்படுவது குடியாத்தம் தாலூக்கா, செஞ்சி கிராமம் அருகே ராஜா தோப்பு கானாற்று அருகே நீர்த் தேக்கத் திட்டம். வடார்க்காடு மாவட்டம், குடியாத்தம் தாலுக்கா, செஞ்சி கிராமம் அருகே ராஜா தோப்பு குறுக்கே ஒரு நீர்த் தேக்கம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் செயலாக்கப்பட்டால், 41.72 ஏக்கர் கூடுதல் நன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும். 500.50 ஏக்கர் நன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும். திட்ட மதிப்பீடு ரூபாய் 212 லட்சங்கள் ஆகும்.

அடுத்து போளூர் சட்டமன்ற உறுப்பினர், நம்முடைய நண்பர் திரு. அன்பழகன் அவர்கள் இங்கே பேசும்போது கூடச் சொன்னார்கள், செண்பகத் தோப்பு என்று. வடார்க்காடு மாவட்டத்தில் போளூர் தாலுக்கா, செண்பகத் தோப்பு கிராமத்தில் கமண்டல ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்ட இந்த அரசு உத்தேசித்திருக்கிறது. திட்டம் செயலாக்கப்பட்டால் 5,107.3 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். இத் திட்டத்திற்காக 307.54 ஏக்கர் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கின்றன.

அடுத்து, வாணியம்பாடி தாலுகாவிலுள்ள ஆண்டியப்பனூர் ஓடையின் குறுக்கே அணை கட்டுதல். இந்தத் திட்டத்தினால் 2 ஆயிரம் ஏக்கர்கள் பாசன வசதி பெறும். இவ்வணைக்கட்டிற்கு..........

**திரு. ப. சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டம், 1974ஆம் ஆண்டு, இன்றைய தினம் முதல்வராக இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்கள் போட்ட திட்டம். ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்கு முன்னாலே இத்திட்டத்தை நிறைவேற்றித் தந்த டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவரவர்களும் எழுந்து நன்றியைத் தெரிவித்துக் கொண்டிருந்தால் விடிந்துவிடும்.

**மாண்புமிகு. திரு. துரைமுருகன் :** அடுத்து, எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்த பச்சையாறு. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், பச்சையாறு நீர்த்தேக்கத் திட்ட அரசு ஆணை 322, பொதுப்பணித் துறை, நாள் 28-4-1989 ஆகும். இத் திட்டத்திற்கு சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. செலவு ரூ. 458 லட்சங்கள். பயன்பெறும் நிலங்கள் 14,349

ஏக்கர். புதிய நிலங்கள் 240 ஏக்கர். கூடுதல் உணவு உற்பத்தி 7,841 டன்கள். பயன்பெறும் விதங்கள், இத்திட்டத்திற்காக 100 ஏக்கர் நிலம் கையகப்படுத்த வேண்டியுள்ளது. இத் திட்டத்தை நிறைவேற்றுவதால் களக்காடு வனப் பகுதியிலுள்ள மிக அரிதாகக் காணப்படும் சிங்கவால் குரங்கு அழியும் வாய்ப் புள்ளதாகக் கூறுகிற அந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட வில்லை. ஆனால் இந்தத் திட்டம் இதைக் காட்டியே 1981-லே, 1982-ல் கைவிடப்பட்டிருக்கிறது.

பொதுப்பணித் துறையில் புதியதாக கணிப் பொறி-கம்ப்யூட்டர்கள் வாங்குகிற ஒரு திட்டத்தை ஏற் படுத்தியிருக்கிறோம். காரணம், பொதுப்பணித் துறை 150 ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருகிறது. இத்துறையில் முக்கிய பல அடிப்படை விவரங்களை நிரந்தரமாகச் சேகரித்து வைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மனித ஆற்றலால் தயா ரிக்கப்பட்ட கையேடுகள் காணாமல் போய்விடுவது உண்டு. அவற்றையெல்லாம் நீக்குவதற்காக கணிப்பொறி ஒன்று வைக்கப் பட்டிருக்கிறது.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதல் அமைச்சராக இருந்து, நான் பொதுப் பணித் துறை அமைச் சராக இருந்தாலும், அவருக்கு இந்தத் துறை தண்ணீர் பட்டபாடு. எனவே, என்னை எப்படி அரசியலில் இயக்குகிறாரோ அப்படி, இந்தப் பொதுப் பணித் துறையையும் அவர் தான் இயக்குகிறவர். அவர் நம்முடைய முன்னாள் முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களுடைய சமாதியை அழகுபடுத்த வேண்டும், அது கட்டி முடிக்கப்பட வேண்டு மென்பதில் மிகவும் வேகமாக இருக்கின்றவர். நான் அமைச்சரான பிறகு, அதிகமாக அவரிடத்திலே திட்டு வாங்கியிருப் பேன் என்றால், அதிலேதான். கொஞ்சம் கூட அதைப் பார்க்கக் கூடாதா? இத்தனை நாளா? சென்று போய் பார்த்தீர்களா? என்று காலையிலே போகிற பொழுது ஒரு தரம், வருகிற பொழுது ஒரு தரம் கேட்டுக் கொண்டே இருப்பார்கள். எனவே, முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடத்திற்காக, ஒரு திட்டத்தை உருவாக்கு வதற்குக் கலைஞர் அவர்கள் உறுதுணையாக இருந்தார்கள். அந்தத் திட்டத்தைப் பற்றிச் சொல்கிறேன். எம்.ஜி.ஆருடைய நினைவிடம், சின்னத்திற்குப் பொதுப் பணித் துறைத் தலைமைக் கட்டிடக் கலைஞர் தயாரித்த வரைபடங்களின் அடிப்படையில், ரூ. 30 இலட்சத்திற்கு விரிவான மதிப்பீடு தயாரித்து, அரசின் ஆட்சி ஒப்புதலை எதிர்நோக்கி வந்தது. ஆட்சியும் அதற்குத் தன்னுடைய அனுமதியைக் கொடுத்து விட்டது. இப்பணியில் சில சிறப்புத் தளப் பணிகளும் அடங்கி யுள்ளன. அப்பணி அனுபவமுள்ள தனியார்கள் மூலமே



செயல்பட வேண்டும். இவை நீங்கலாக, பிற பொதுப் பணி கட்டுமானங்களுக்காக, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, டெண்டர் விடப்பட்டு, அந்த வேலைகள் எல்லாம் முடிந்து இன்றைக்கு அந்தப் பணி ஆரம்பிக்கிற நிலைமையிலே வந் திருக்கிறது. எனவே, மாண்புமிகு டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களுடைய சமாதியை ரூ. 30 இலட்சத்திலே அழகுபடுத்து வதற்கு நம்முடைய முதல்வர் அவர்கள் அனுமதி அளித்ததற் காக, துறையின் சார்பிலும் உங்கள் சார்பிலும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல, கட்டிடத்தை, பில்டிங்கை, பொறுத்த வரை யில், ஒன்றை நான் தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பி னர்கள் எல்லாம் சொன்னார்கள், எங்கு பார்த்தாலும் பரா மரிப்பு இல்லை, பராமரிப்பு இல்லை என்று. நான் கூட, அமைச்சராகிறவரையிலே, எல்லா கட்டிடங்களுக்கும் அவர்கள் தான் வெள்ளை அடிக்க வேண்டும். பைப் போனால் அவர் கள்தாம் போட வேண்டும். எல்லாம் பொதுப் பணித் துறை தான் என்று நினைத்துக் கொண்டு இருந்தேன். உட்கார்ந்து பேசிய பிறகு, பொதுப் பணிக்கு என்று பராமரிப்புக்கு ரூ. 1 கோடி கொடுத்திருக்கிறார்கள். இந்த 1 கோடியை இந்த மாநிலம் முழுவதும் அவர்கள் பகிர்ந்தளிக்க வேண்டும். இந்த ரூ. 1 கோடியானது, பொதுப் பணித் துறை, கல்வித் துறை, மக்கள் நலவாழ்வுத் துறை என்று. அவர்களுக்கெல் லாம் கொடுக்கப்படவேண்டும். உதாரணத்திற்கு வட ஆற்காடு மாவட்டம் என்று எடுத்துக் கொள்வோம். வட ஆற் காடு மாவட்டத்திற்கு, பராமரிப்புக்கு ரூ. 20 இலட்சம் கொடுக்கிறார்கள் என்றால், அந்த ரூ. 20 லட்சத்தில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எடுத்துக்காட்டுக்கு வேறு ஏதாவது மாவட்டம் எடுத்திருக்கக் கூடாதா? அதி லேயும் வட ஆற்காடுதானா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மற்றவர்கள் சொன் னாலும் நான் சொன்னாலும் ஒன்றுதான். ஏதோ ஒரு மாவட்டம். அங்கே இருக்கிற ஒரு கல்லூரிக்கு, அரசாங்கக் கட்டிடத்திற்கு வெள்ளை அடித்தல், புதுப்பித்தல், பரா மரித்தல் போன்ற பணிகளைச் செய்ய வேண்டும். இவை அன்றியில் தமிழ்நாட்டில் எல்லா சர்க்யூட் ஹவுஸ்களுக்கும் அந்தப் பராமரிப்புச் செலவிலே இருந்து ஃபோன் பில் கட்ட வேண்டும். அது மட்டும் அல்ல. ப்ராப்பர்ட்டி டாக்ஸ் அந்தப் பராமரிப்புச் செலவிலேயிருந்துதான் கட்டவேண்டும். இதெல் லாம் கட்டுகிறபொழுது பராமரிப்பிலே கொஞ்சம் குறையும். இப்பொழுது இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்திருக்கிறோம். ஹெல்த் டிபார்ட்மெண்ட் என்றால், ஹெல்த் டைரக்டரைக் கேட்க

வேண்டும். இந்த வருஷம் எந்த வேலைய எடுத்துக் கொள்ள வேண்டும் என்று. எந்தக் கட்டிடத்திற்கு பெயிண்ட் அடிக்க வேண்டும். வெள்ளை அடிக்க வேண்டுமென்று கேட்டு, அவர்கள் எதற்கு பிரையாரிட்டி கொடுக்கிறார்களோ, அந்த வேலையைச் செய்ய வேண்டுமென்று நான் அவர்களுக்குப் பணித்திருக்கிறேன். எனவே, இனி பராமரிப்பு, அந்த, அந்தத் துறையினுடைய விருப்பப்படி செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சபாநாயகர் கோபித்துக் கொள்ளக் கூடாது. கட்டிடப் பிரிவினால், வட ஆற்காடு வேலூரிலே, புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ரூ. 395 இலட்சம் கட்டப்படுகிறது. மேற்படி வேலைகளில் 5 தளங்கள் முடிவு பெற்று வருகின்றன. இப்பணிக்கு இதுவரையில் ஆன செலவு, ரூ. 1,47,07,089. மேலும், இப்பணி 31—3—1990-ல் முடியும் என திட்டமிடப்பட்டுள்ளது.

அடுத்து, சென்னை உயர்நீதிமன்றத்திற்குக் கூடுதல் கட்டிடம் கட்டுகிற பணி. அந்தப் பணி மொத்தத்திற்கு சேர்ந்து ஆகிற செலவு ரூ. 413 இலட்சங்களாகும். இதில் புதுமையும் சேர்ந்து பழமையும் கெடாமல் இருக்கக்கூடிய அளவுக்கு நம்முடைய முதல்வர் அவர்களே, அந்த முகப்பெல்லாம் எப்படி இருக்க வேண்டுமென்று அவர்களுக்குகே உரிய கலை நுணுக்கத்தோடு வரைந்து கொடுத்திருக்கிறார்கள். 1 மாதம் ஆகிவிட்டது. வேலை துரிதமாக நடைபெறும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இரவு 7-00)

அடுத்து, பொதுப் பணித் துறையிலே இருக்கிற பணியாளர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறேன். பொதுப் பணித் துறையிலே பணியாற்றும் பொறியாளர்களை சொந்த மாவட்டத்தில் பணியமர்த்தக் கூடாது என்று ஒரு தடை இருக்கிறது. மற்ற இலாக்காக்களிலே அந்தந்த மாவட்டத்திலே இருக்கலாம். ஆனால் பொதுப்பணித் துறையிலே மட்டும் இருக்கக்கூடாது. அந்தத் தடையிலிருந்து அரசு ஆணை எண். 712, பொதுப்பணித்துறை, நாள் 27—4—1988 மூலம் கீழ்க்கண்ட ஆராய்ச்சி அலுவலகங்களில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டிருக்கிறது.

நிலத்தடி நீர் மற்றும் ஆய்வுப் பணிகள். ஏற்கெனவே பொதுப்பணித் துறையில் இருந்தாலும், அவர்கள் மட்டும் அந்த மாவட்டத்தில் இருக்கலாம். திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம், சென்னை; நீரியல் நீர்நிலையியல் ஆய்வுக் கழகம், பூண்டி; மண் தன்மை ஆராய்ச்சி நிலையம், சென்னை, மையக் கட்டடக் கோட்டம், சென்னை; நீரியியல் நிறுவனம், தரமணி, சென்னை; பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், துவாக்குடி, திருச்சி.



பொறியாளர் சங்கத்திடமிருந்து எல்லாப் பொறியாளர்களையும் சொந்த மாவட்டத்தில பணியமர்த்த வேண்டுமென்று பல கோரிக்கைகள் வந்துள்ளன. பல அரசுத் துறைகளில் பொறியாளர்களை சொந்த மாவட்டத்தில் பணியமர்த்தத் தடை ஏதும் கிடையாது. எனவே இத்தகைய சலுகையை பொதுப்பணித் துறையில் உள்ள அனைத்துப் பொறியாளர்களுக்கும் வழங்கி, இந்தத் தடையை நீக்கி, அவர்கள் சொந்த தாலுகாவைத் தவிர்த்து மற்ற எல்லா இடங்களிலும் பணியமர்த்தப்படலாம் என்ற இந்த அறிவிப்பைத் தருகிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்களும் மற்றும் பலரும் இங்கே பேசினார்கள். அதிலே ஒரு இளம்பொறியாளர் நிலைமை பற்றிச் சொல்கிறேன். 1987-லிருந்து இளம் பொறியாளர்கள் பொதுப் பணித் துறையிலே மிகவும் பந்தாடப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பணியிலே உத்தரவாதம் இல்லாமல் இருந்திருக்கிறார்கள். அவர்களை சேர்ப்பது, மறுபடியும் வெளியே அனுப்புவது, மீண்டும் தேவையானால் கூப்பிடுவது, இல்லாவிட்டால் வெளியே அனுப்புவது என்ற நிலைமை இருந்தது. பிறகு அவர்கள் எங்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று சொன்னார்கள். நாங்கள் பி. இ. படித்திருந்தாலும் டெக்னிக்கல் அசிஸ்டன்டாக எங்களை எடுத்துக் கொள்ளுங்கள் என்று பலமுறை விண்ணப்பித்தார்கள். முடியவில்லை. பிறகு போராட்டம் நடத்தி, மொட்டை அடித்து, கோவணம் கட்டி, ஊர்வலம் வந்தார்கள. நல்ல காலம் கோவணம் கட்டி ஊர்வலம் போய் திரும்பப் போகிறபோது ஊர்வலமாக வந்தார்கள். இல்லாவிட்டால் அது கூட இல்லாமல் செய்திருக்க முடியும், அன்றைக்கு இருந்த ஆட்சியாளர்களால்.

இந்த அவல நிலையைக் கலைஞர் அவர்கள் முரசொலி பத்திரிகையில் உடன் பிறப்பு மடலில் எழுதினார்கள். பி.இ. படித்திருக்கிற பட்டதாரிகளுக்கு ஒரு ஆட்சியில் இந்த அவல நிலையா என்று முரசொலியில் எழுதினார்கள். அந்தக் கடிதத்தை எங்கோ நெஞ்சில் வைத்திருந்து, நான் இந்தக் கோரிக்கை பற்றி கலைஞரிடம் சொன்னபோது கலைஞர் அவர்கள் சொன்னார்கள். நான் இதைப்பற்றி முரசொலியில் எழுதியிருக்கிறேன். போய்ப்பார் என்று சொன்னார்கள். நான் போய்ச் சொல்லப்போவது இளம் பொறியாளர்களை டெக்னிக்கல் அசிஸ்டன்டாகச் சேர்த்துக் கொள்ளலாம் என்பது

ஆனால் அவர்கள் சொன்னார்கள். நான் முரசொலியில் எழுதியிருக்கிறேன், போய்ப்பார் என்று. பிறகுதான் எடுத்துப்பார்த்தேன். எடுத்துப் பார்த்தால் தெளிவான விளக்கங்களை அன்றைக்குக் கலைஞர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். எனவே இன்றையதினம் அவர்களுக்கு ஒரு பரிகாரம் காண வேண்டுமென்ற அடிப்படையில் இந்த அறிவிப்பை நான் செய்கிறேன்.

1987-ல் ஏற்பட்ட பதவிக் குறைப்பினால் 195 இளம் பொறியாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். அதைப் போன்று 1988-ல் ஏற்பட்ட பதவிக் குறைப்பினால் வேலை நீக்கம் செய்யபட்ட தொழில் நுட்ப உதவியாளர்கள் 74 பேர்கள். அவர்கள் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து அந்த வழக்கு நிலுவையில் உள்ளது. எனவே, மேற்கூறியவர்கள் 195 பிளஸ் 74 ஆக மொத்தம் 269 நபர்களுக்கும் உடனடியாக வேலை வாய்ப்பு அளிககப்பட வேண்டும். இந்த 269 தொழில் நுட்ப உதவியாளகள் பதவகளை உருவாக்கிட அனுப்பப்பட்ட கருத்துருவுக்கு அரசு சாதகமான சூழ்நிலையில் இல்லை என்றாலும் இந்த 269 போகளோடு இன்னும் கொஞ்சம் பேர் வருவார்கள். அவர்களையும் சேர்த்து 300 நபர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பு அளித்திட வேண்டுமென்று காலையிலே எனக்கு அனுமதி அளித்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்தத் துறையின் சார்பிலும் இந்த மன்றத்தின் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). வெளியே இருக்கிற அந்த இளம் பொறியாளர்கள் அன்றைக்கு எழுதிய உடன் பிறப்பு மடல் எவ்வளவு வேலை செய்திருக்கிறது என்பதை அறிந்து பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன்.

அதே போன்று இங்கே நம்முடைய மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்களும் மற்றவர்களும் சொன்னார்கள். 10 ஆண்டு, 8 ஆண்டு காலம், என்.எம்.ஆர். வேலை செய்கிறவர்கள், அவர்கள் என். எம். ஆர். ஆக சேர்ந்து, என்.எம்.ஆர். ஆக வேலை செய்து, என்.எம்.ஆர். ஆக ரிட்டயர் ஆகி, அல்லது என்.எம்.ஆர். ஆக செத்துப் போகிறார்கள் என்று அவர்களுடைய நிலைமையைப் பற்றிச் சொன்னார்கள். அப்படி இருப்பவர்களுக்கு எல்லாம்கூட பணியை நிரந்தரமாக்க வேண்டும் என்பது இந்த அரசின் எண்ணம். அந்த வகையில் பொதுப் பணித் துறையில் தினக் கூலி பணியாளர்களாக 10 ஆண்டு காலம் தொடர்ந்து பணி புரிந்து வந்தவர்கள் 31—12—1983 முடிய 1576 நபர்கள் பணி வரன்முறை செய்யப்பட்டனர்.



1984 முதல் 1986 முடிய 10 ஆண்டு தொடர்ந்து பணியாற்றிய 600 தினக் கூலி பணியாளர்களுக்குப் பணி வரன் முறை செய்ய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு, அரசினால் ஏற்கப்பட்டிருந்தது. 10 ஆண்டுகள் பணியாற்றியவர்களைப் பணி வரன்முறை செய்ய வேண்டுமென்று நான் கேட்டபோது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் காலையிலே பெருமனதோடு அந்த 600 பேர்களை நான் பணி வரன்முறை செய்து அவர்களை ஏற்றுக் கொள்ளலாம் என்று அறிவித்திருக்கிறார்கள்.

எனவே அதற்காகவும் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் முன்பே சுட்டிக் காட்டியதைப் போல முதலமைச்சர் அவர்களுடைய இலாக்கா வேறு என்றாலும்—எல்லா இலாக்காக்களும் அவருடையதுதான் என்றாலும்—பொதுப் பணித் துறையிலே அவருக்குக் கொஞ்சம் விருப்பம் அதிகம் என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த வகையில்தான் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே கூட சுட்டிக்காட்டினார்கள். Standing Irrigation Development and Water Resources Commission தமிழ்நாடு தண்ணீருக்காக வாடும் ஒரு மாநிலம். இந்த மாநிலத்தில் பெரும்பாலான பகுதிகளில் குடி தண்ணீருக்கே கூட கடும் பற்றாக்குறை உள்ளது. இங்கே நபர் ஒருவருக்குக் கிடைக்கும் தண்ணீரின் அளவு தேசிய அளவில் நபர் ஒருவருக்குக் கிடைக்கும் தண்ணீரின் சராசரி அளவில் மூன்றில் ஒரு பங்காகும். வடி நிலப்பகுதிகள் அனைத்திலும், பெரிய நடுத்தர, சிறிய பாசன அமைப்புக்களை ஏற்படுத்துவதற்கு பெருமுயற்சியை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. இந்த மாநிலத்தின் பாசன வாயில்களின் பரப்பளவு 48 சதவீதமாகும். இந்த வகையில் இந்த மாநிலம் நமது நாட்டில் பஞ்சாபுக்கு அடுத்த இடத்தை வகிக்கிறது. இந்த மாநிலத்தின் நீர் வளத்தில் 85 சதவீதத்திற்கு மேல் பயன்படுத்தப்பட்டுள்ளது. உபரியாக உள்ள சொற்ப நீரையும் பயன்படுத்திக் கொள்வதைத் தவிர இந்த மாநிலத்தின் நீர் வளத்தை மேம்படுத்துவதற்கான வேறு வாய்ப்பகள் இல்லை.

இந்த மாநிலத்தில் வேளாண்மையைப் பெருக்கும் நோக்கத்தோடு, வேளாண்மைப் பொருள் உற்பத்தியினைப் பெருக்கும் நோக்கத்தோடு நீர் வளத்தை மதிப்பீடு செய்யவும் தமிழ்நாட்டில் தற்போதுள்ள பாசன முறைகளைச் செயல்படுத்தும் விதம் குறித்து மறு ஆய்வு செய்யவும் பாசன முறைகளை மேம்படுத்தி நிர்வகிப்பதற்குரிய வழிமுறைகள் பற்றிப் பரிந்துரை செய்ய வேண்டிய அத்தியாவசியமான நிலை எழுந்துள்ளது. எனவே பல துறைகளைச் சேர்ந்த நிபுணர்களைக் கொண்ட,

நிலத்தடி நீர் பாசன வாயில்களை மேம்படுத்துவது உட்பட அனைத்து பாசன வாயில்களையும் ஒருங்கிணைத்து மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கிட பாசன மேம்பாட்டு மற்றும் நீர் வள நிலை ஆணைக்குழு ஒன்றை அமைப்பது என்று தமிழ்நாடு அரசு தீர்மானித்திருக்கிறது.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நம்முடைய அரசின் நிதிநிலை அறிக்கையில் கூட அறிவித்திருக்கிறார்கள். இந்த ஆணைக்கிணங்க திரு. ஆர். திருமலை, ஐ.ஏ.எஸ், ஓய்வு பெற்றவர்—தலைவராக உள்ளார். பாசன விவகாரங்களில் நிபுணர்களாக உள்ள பின்வரும் நபர்கள் இந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். திரு. எஸ். பி. நமசிவாயம், முன்னாள், தலைமைப் பொறியாளர்; திரு. எஸ். பஞ்சநாதன், முன்னாள் தலைமைப் பொறியாளர்; திரு. ஏ. மோகனகிருஷ்ணன், முன்னாள் தலைமைப் பொறியாளர்; திரு. எஸ். நாகேஸ்வரன் முன்னாள் தலைமைப் பொறியாளர்; திரு. ராஜகோபாலன், தமிழ்நாடு. வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினுடைய முன்னாள் துணை வேந்தர்; பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் (பாசனம்) இப்படி இவர்கள் எல்லாம் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

அடுத்து குடிமராமத்தைப் பொறுத்த வரையில் தஞ்சையிலே கூடிய பாசன மாநாட்டில் உள்ளாட்சித் துறை, பொதுப்பணித் துறை, வேளாண்மைத் துறை ஆகிய மூன்று துறைகளும் ஒருங்கிணைத்து குடிமராமத்தை மீண்டும் தமிழ்நாட்டிலே கொண்டு வர வேண்டும் என்று முடிவு எடுத்து இருக்கிறார்கள். அந்த வகையில் மற்ற துறைகளோடு சேர்ந்து என்னுடைய பொதுப் பணித் துறையும் குடிமராமத்து செய்யும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்னும் பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும் நேரம் கருதி (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை இந்த அரசு ஆய்ந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்கிற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வாபஸ் பெற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ஏ. ஜி. சம்பத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் பல உறுப்பினர்கள் எடுத்துக் காட்டிய தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நந்தன் கால்வாய்த் திட்டம் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்வார்கள் அறிவிப்பு இங்கே செய்வார்கள் என்று நாங்கள் எல்லாம்



ஆவலோடு காத்திருந்தோம். ஆனால் எங்களுக்கு அமைச்சர் அவர்கள் ஏமாற்றத்தைக் கொடுத்து விட்டார்கள். எனவே எங்களுடைய மாவட்டத்தில் அச்சத்தைப் போக்குகிற வகையில் அமைச்சர் அவர்கள் அதை மீண்டும் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, நந்தன் கால்வாய்த் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஏமாற்றத்தைக் கொடுக்க நான் விரும்பவில்லை இந்த நந்தன் கால்வாய்த் திட்டத்தில் 36 ஏரிகளின் கீழ். 6565 ஏக்கர் ஆயக் கட்டுகள் தண்ணீர் பெற வேண்டிய தேவை இருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாகவே போதிய மழை இல்லாத காரணத்தால் போதிய நீர் வரவில்லை. இருந்தாலும் அந்தப் பகுதிக்குப் போதிய நீர் வரும் பொருட்டு நந்தன் கால்வாய்த் திட்டத்தை நவீனப் படுத்தும் திட்டம் தற்போது ஆய்வில இருக்கிறது. இந்தத் திட்டத்தில் Modern Water Management Technique மூலம் விழுப்புரம் பலமலை ஏரிக்கும் மற்றும் இருக்கிற 11 ஏரிகளுக்கும் தொடர்புடைய இந்த ஆயக்கட்டுகளுக்குப் பயன்தரத்தக்க வகையில் இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும். இடையில் இந்தத் திட்டத்தில் கொஞ்ச தூரம் போகும் என்று கருதி விட்டு விட்டார்கள. நந்தன் கால்வாயிலே ஒரு பகுதியைச் செய்து முடித்துவிட்டார்கள். மறுபகுதி செய்தார்கள். இடையிலே கொஞ்சம் இடத்தை விட்டு விட்டார்கள். அதற்கு என்ன காரணம் என்றால் தண்ணீர் போகக் கூடிய அளவுக்கு அங்கே பள்ளம் இருக்கிறது என்று சொல்லி கடைசியிலே பார்த்தால் தண்ணீர் போக முடியாத நிலை ஏற்பட்டது. எனவே நந்தன் கால்வாய்த் திட்டம் மாடர்ன் வாட்டர் மேனேஜ்மெண்ட் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும் என்பதை உறுப்பினர் திரு. சம்பத் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 7.10.)

திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பொதுப் பணித் துறைக்கு முன்னோடியாக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் தான் வழிகாட்டி என்று சொன்னார்கள். பொதுப் பணித் துறையை முதன் முதலிலே கலைஞர் அவர்கள் எடுத்த நேரத்திலே என்னுடைய தொகுதியிலே இருக்கிற அடையாறிலே தான் படகிலே சென்று பாலத்தைப் பார்த்து புதிய பாலத்தை கட்டினார்கள். இப்போது அடையாறு கவனிப் பார் அற்று கிடக்கின்றது. காவிரி, பாலாறு, தாமிரவருணி போன்ற ஆறுகளைப் பற்றி பேசுகிறார்களே தவிர அடையார் கூவத்தைப் பற்றி யாருமே கவலைப்படவில்லை. கூவம் போக்குவரத்துத் திட்டம், அடையாறு சுத்தப் படுத்தும் திட்டம்

ஆகியவை பற்றி இப்போது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் என்ன விளக்கங்களைக் கூறுகிறார் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் பொதுப் பண்த துறை அமைச்சராக ஆனவுடன் அந்த அடையாறு பகுதி எம்.எல்.ஏ. உடனே வந்து அவர் தொகுதிக்கு வர வேண்டும் என்று அழைத்துக் கொண்டு போய் அவருடைய திட்டத்தை முடித்துக் கொண்டார்கஜ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அப்படியெல்லாம் செயல்பட வில்லை என்று சொல்கின்றீர்களா?

**திருமதி பாப்பா உமாநாத் ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருச்சியில் செந்தண்ணீர்புரத்தில் உள்ள எரி சாராயத் தொழிற்சாலையின் கழிவு நீர் உய்யக்கொண்டான் வாய்க்காலில் கலந்து, சென்ற காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த கடைசி கட்டத்திலிருந்து, அந்த நீர் கலக்கப்படுவதால், பாசனம் முழுவதும் இன்று வரையில் பாழாகிக் கொண்டிருக்கிறது என்பதையும் எத்தனையோ பாசன மகாநாடுகள் நடத்தினாலும் அது தீர்க்கப்பட வில்லை என்பதையும் நம்முடைய மாண்புமிகு மக்கள் நலத் துறை அமைச்சர் அவர்கள் துறைபற்றி நான் பேசிய போது அவரும் பதில் சொல்லவில்லை. அப்படிப் பலரும் தப்பித்துக் கொள்கிறார்கள். கடைசியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டுமா என்பது எனக்குத் தெரியவில்லை. எனக்கு அது தெரிந்தாக வேண்டும். அது மாதிரி, தோல் ஷாப்பினுடைய கழிவு நீர் கலந்து பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் தமிழ் நாட்டில் பூராவும் நாசம் ஆகிறது. அதை நிறுத்தப் போகிறீர்களா? முதலாளிகள் ஏன் அதைத் தனியாக சுத்தப்படுத்தக் கூடிய கருவிகளை வாங்கிப் பயன்படுத்தக் கூடாது? இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சாராய ஆலைகள் கொதி கலன்கள் குளிர்ச்சி செய்வதற்காக ஏழாயிரம் காலன் தண்ணீரை அந்த கால்வாயிலிருந்து எடுக்கின்றார்கள். எடுத்த தண்ணீரைச் சுத்தப்படுத்தி மறுபடியும் கால்வாயில் விட வேண்டும். விடுகின்ற அந்தத் தண்ணீருக்கு சில நிபந்தனைகள் உண்டு. அந்த வகையிலேதான் கிண்டி இன்ஸ்டிட்யூட்டில் அந்தத் தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்து இருந்தபோது அவர்கள் அந்தத் தண்ணீரால் பயிருக்கு பாதகம் இல்லை என்றுதான் சொல்



கின்றார்கள். ஆனால் அதை நான் ஏற்றுக் கொள்கிறேனா இல்லையா என்பது வேறு விவகாரம். காரணம் இதே நிலைமைகள்தான் வாணியம்பாடியிலிருந்து செங்கை வரையிலே இருக்கிறது. பாலாற்றிலேயும் இருக்கிறது. முதலிலே பெர்மிட் கொடுக்கிற நேரத்தில், தண்ணீர் எடுக்கிற நேரத்தில், இந்த பொலூஷன் கன்ட்ரோல் போர்ட் கிடையாது அப்போது. ஆனால் இப்போது மீண்டும் அவர்களுக்கு 3 வருடங்களுக்கு ஒரு முறை அரசாங்கத்திடம் இருந்து அனுமதி பெறவேணடும். இப்போது அது முடிகிறது. அவர்கள் அரசுக்கு வரவேண்டும். அப்படி வருகிறபோது அவர்கள் எல்லாம் பொலூஷன் கன்ட்ரோல் போர்டிலிருந்து சர்டிபிகேட் வாங்கி அதை இனி நாங்கள் விடமாட்டேடாம் என்று அந்த சான்றிதழ் வந்தால்தான் அவர்களுக்கு மீண்டும் தண்ணீர் எடுக்க அனுமதி வழங்கும். அம்மையார் அவர்கள் குறிப்பிடுவதைக் கவனத்தில் கொண்டிருக்கிறோம். இரண்டாவது அதுவரையிலே அந்தத் தண்ணீர் கலக்கிறதே நியாயம்தானா என்று கேட்கிறார்கள். அரசு அவர்களை நிர்ப்பந்தித்து இருக்கிறது. அப்படிப்பட்ட கழிவுநீரை அவர்கள் சுத்தப்படுத்துவதற்கு ''எப்ளுவணட்'' ட்ரீங்மெண்ட் பிளான்ட் அவர்கள் கட்ட வேண்டும். அதைக் கட்ட வேண்டும் என்று அவர்களை நிர்ப்பந்தித்து இருக்கிறோம். அவர்கள் கட்டுகிறோம் என்றுதான் அரசாங்கத்திற்குத் தெரிவித்து இருக்கிறார்கள். அது கட்டி முடிக்கப்பட்டதா இல்லையா என்பதை அந்தப் பகுதியிலே இருப்பவர்கள்தான் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் நானே நேரிலே வந்து பார்க்கிறேன். அம்மையார் அவர்களுக்கு உறுதி கூறுகிறேன்.

**திரு. பி. என். வல்லரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுக்காவில் பாப்பாரப்பட்டி உள்ளிட்ட 58 கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை நீண்ட நாட்களாக வலியுறுத்தி வருகிறோம். இந்தத் திட்டத்தை காலையில்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுதி கேட்டார்கள். தமிழக முதல்வர் அவர்களிடம்கூட நான் எடுத்துக் கூறி இருக்கிறேன். எனவே அந்தத் திட்டத்தை இந்த அரசு நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டு அந்த வட்டார விவசாய மக்களுடைய வயிற்றில் பால் வார்க்க வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேரூரணைக்கு மேலே வைகையிலே இருந்து ஒரு தனி கால்வாய் கொண்டு வந்தால்தான் அந்த 58 கிராமங்களுக்குத் தண்ணீர் வழங்கப்படும். கீழேயிருந்து தனிக் கால்வாய் மூலமாகக் கொண்டு வர வேண்டும். இது ஒரு பெரிய திட்டம். அரசாங்கம் அதுகுறித்து ஆராய்ந்து கொண்டு இருக்கிறது என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1989 ஏப்ரல் 19]

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் வாட்டர் பொல்யூஷனைப் பற்றி நம்முடைய திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் சொல்லுகிற அந்த உய்யக்கொண்டான் வாய்க்காலைப் பற்றிச் சொன்னார்கள். அதை நேராகப் பார்க்கப் போயிருக்கிறார். ரொம்ப சந்தோஷம், அதற்கு மேலே இருக்கிற காவிரியிலே அந்தப் பேப்பர் மில் இருக்கிறது பாருங்கள், அந்தப் பள்ளிப் பாளையத்திலே, அதிலே இருந்து வருகிற கழிவுநீர் பொல்யூஷன் ஒன்று. ஈரோட்டிலே இருக்கிற எக்கச்சக்கமான சாயப் பட்டறைகள், ஒன்றல்ல. இரண்டல்ல, நூற்றுக்கணக்கான சாயப் பட்டறைகள். அவை எல்லாம் பூராவுமே காளிங்கராயன் சேனலிலே எக்கச்சக்கமாகப் போகின்றன. காவிரிலேயும் பூராவும் வருகின்றன. பொல்யூஷனினாலே மீன் கூட செத்து போய் விடுகிறது. கால்நடைகள், மாடுகூட நீரைக் குடிக்க மாட்டேன் என்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. தீட்சிதர் அவர்கள் மீன்களைப் பற்றி இவ்வளவு அக்கறையோடு கவலைப்படுகிறாரே என்று கவலை. (சிரிப்பு)

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** அந்த நிலையில் எங்கள் கிராமம் இருக்கிறதனாலே, பலவிதமான தொந்தரவுகள் இருக்கின்றன. ஸ்நானமே கூட பண்ணமுடியவில்லை. அந்த அளவில் இன்றைக்குக் காளிங்கராயன் சேனல் வாட்டர் பொல்யூஷன் ஆகிவிட்டது. காவிரியினுடைய நீரும் வாட்டர் பொல்யூஷன் ஆகிவிட்டது. அதற்கெல்லாம் ஒரு நிவாரணம் கிடைக்குமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** திரு தீட்சிதர் அவர்கள் சொல்வதிலே நியாயம் இருக்கிறது. ஆனால் நியாயமாக அவர்களுக்கு நீரை சுத்தப்படுத்தித் தான் திருப்பி விட வேண்டும் என்று தெரிவித்து இருக்கிறோம். அவர்கள் சில நேரங்களில் சுத்தப்படுத்தாமலும் விட்டு விடுகிறார்கள. அதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்கும். இரண்டாவது, காவிரியினுடைய அந்த தண்ணீரைச் சுத்தப்படுத்துவதற்கு, பொல்யூஷனைக் கன்ட்ரோல் செய்வதற்கு உலக வங்கியால் ஒரு பெருந் தொகை கொடுக்கப்படுகிறது. அதை வைத்துக் கொண்டு மேட்டூரிலிருந்து கடைமடை வரையிலே அப்படிப்பட்ட கழிவுநீர் கலக்காமல் சுத்தம் செய்து, ஸ்நானம் செய்வதற்கு நல்ல காவிரி ஜலத்தை, தண்ணீரைத் தரலாம். (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.



1989 ஏப்ரல் 19] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

**கோரிக்கை எண். 36**

**பாசனம்.**

திருவாளர்கள் கோ. வீரையன், பொன். விஜயராகவன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண். 36—பாசனம்—என்ற தலைப்பின் கீழ் ரூ. 95,90,16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண். 37**

**பொதுப் பணிகள்— கட்டிடங்கள்**

திருவாளர்கள் பொன். விஜயராகவன், செ. நூர்முகமது ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள்—என்ற தலைப்பின்கீழ், ரூ. 3,23,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண். 38**

**பொதுப் பணிகள்— பணியாளாமைப்பும், கருவிகளும் தளவாடமும்.**

திருவாளர்கள் பொன். விஜயராகவன், கோ. வீரையன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு போரவைத் தலைவர்** : பேரவை முன்னுள் கேள்வி:

''மானியக் கோரிக்கை எண். 38—பொதுப் பணிகள்—பணி யாளரமைப்பும் கருவிகளும், தளவாடமும்—என்ற தலைப் பின் கீழ், ரூ. 30, 19,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண். 52**

**பாசனம் குறித்த மூலதன செலவு**

திருவாளர்கள் பொன். விஜயராகவன், எம். அண்ணாமலை ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனு மதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ், ரூ. 53,03,23,000-க்கு மேற் படாத தொகைக் அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

[இரவு 7—20]

கோரிக்கை எண். 53

பொதுப் பணிகள்— கட்டிடங்கள் குறித்த மூலதனச்செலவு.

திருவாளர்கள் பொன். விஜயராகவன், என். பழனிவேல் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனு மதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு போவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண். 53—பொதுக் பணிகள்— கட்டி டங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ், ரூ. 26,54,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."





மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவையின் இன்றைய அலு வல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (20—4—1989) காலை 9·00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7-21 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைககப் பெந்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

63. 1987-88ஆம் ஆண்டிற்கான இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின் இரண்டாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

64. 1987-88ஆம் ஆண்டிற்கான தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

65. 1987-88ஆம் ஆண்டிற்கான ஜீவா போக்குவரத் துக் கழகத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

66. 1987-88ஆம் ஆண்டிற்கான மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

67. 1987-88ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்கு வரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் பதிமூன்றாவது ஆண்ட டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

[1989 ஏப்ரல் 19

68. 1987-88ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகத்தின் பதிமூன்றாவது ஆண்டறிக்கை. 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

69. 1987-88ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் பதிமூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

70. 1987-88ஆம் ஆண்டிற்கான கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

71. 1987-88ஆம் ஆண்டிற்கான சேரன் பொறியியற் கழகத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

72. 1987-88ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

73. 1987-88ஆம் ஆண்டிற்கான அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ் ஆங்கிலம்).

74. 1987-88ஆம் ஆண்டிற்கான சேரன் போக்குவரத்துக் கழகத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

75. 1987-88ஆம் ஆண்டிற்கான சோழன் போக்குவரத்துக் கழகத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ் ஆங்கிலம்).



1989 ஏப்ரல் 19]

76. 1987-88ஆம் ஆண்டிற்கான பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது (தமிழ் ஆங்கிலம்).

77. 1984-85ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் ஆறாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது. (தமிழ், ஆங்கிலம்)

78. 1985-86ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் ஏழாவது ஆண்டறிக்கை (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது. (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கை, அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

90. கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1989-90 (தமிழ், ஆங்கிலம்)

91. கோரிக்கை எண். 28—நகராட்சி நிருவாகமும் மாநகராட்சிகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

92. சமுதாய வளர்ச்சி பற்றிய செயலாக்க வரவு செலவுத் திட்டம், 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

93. நகராட்சி நிருவாகமும், மாநகராட்சிகளும் பற்றிய செயலாக்க வரவு செலவுத் திட்டம் 1989-90 (தமிழ், ஆங்கிலம்)

94. பேரூராட்சி நிருவாகம் பற்றிய செயலாக்க வரவு செலவுத் திட்டம், 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

95. 1989-90ஆம் ஆண்டிற்கான பாசனம் மற்றும் கட்டிடங்கள் பற்றிய மானியக் கோரிக்கை மீதான பொதுப் பணித் துறை அமைச்சரின் உரை (தமிழ், ஆங்கிலம்).

96. 1988-89ஆம் ஆண்டில் பொதுப் பணித் துறை (கட்டிடப் பிரிவு) யின் பணிகள் பற்றிய ஆய்வுரை (தமிழ் ஆங்கிலம்).

97. பாசனம் மற்றும் நிலத்தடி நீர் பற்றிய சாதனைத் திட்டம், 1988-89 (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு 1

[1989 ஏப்ரல் 19

(பக்கம் 274இல் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### 1. சமுதாய நல வளர்ச்சி

கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு முழுமையான வளமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் அங்கெல்லாம் ஒரு சமூகப் பொருளா தார மாற்றத்தை ஏற்படுத்துவதே சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தின் தலையாய நோக்கமாகும். நாடு விடுதலை அடைந்த பின், செயற்படுத்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள் அனைத்தும் கிராமப் பகுதிகளின் ஒட்டு மொத்த முன்னேற் றத்தையே குறிக்கோளாகக் கொண்டிருந்தன. மொத்த ஊரக வளர்ச்சி என்பது, கிராம மக்களின் குறிப்பாக, ஏழை களின் பொருளாதார—சமூக வாழ்க்கையில் முன்னேற்றம் காணும் ஒரு செயல் முறைத் திட்டமாகும், இத்திட்டம், கிராமப் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் முன் னேற்றத்தை ஒருங்கிணைத்துக் கிராம மக்களின் பண வலிமை யையும், வாழ்க்கைத் தரத்தையும் முன்னேற்றுவதை நோக்க மாகக் கொண்டது. அது சமூக பொருளாதார அடிப்படையில், வருமான உயர்வையும் விரிவான வேலை வாய்ப்பையும், சமூகப் பாதுகாப்பையும் சமத்துவ நெறியையும் உறுதிப்படுத்தும் அறிகுறியாகும். சமூக வளர்ச்சி அணுகுமுறையானது, கிராம மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் முடிவு காண்பதோடு, கிராம மக்களின் அன்றாட வாழ்க்கையின் .ஒத்துணர்ச்சி மனப்பான்மை, கடமையுணர்ச்சி ஆகியவற்றில் தேவையான மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

சமூக வலர்ச்சியின் நோக்கம், பல்லடுக்கு நோக்கம் கொண்ட தாகும். அவற்றின் வேளாண்மையும் வேளாண்மை சாராத பணிகளும் அடங்கும்.

அதன் வளர்ச்சி, அனைத்துப் பணிகளிலும் மேற்கொள்ளப் படும் பொருளாதார நடவடிக்கைகள், அவற்றின நிகழ்ச்சி தொடர்பான சமூக நல செயல் முறைத் திறன் ஆகியவற்றை வலியுறுத்துவதாக அமைகிறது. கிராம வளர்ச்சியின் மூலம் அறிவியல், மற்றும் தொழில் நுட்பவியல் ஆகியவற்றை மனித ஆற்றலோடு இணைத்து, இயற்கை வளங்களை ஒருங்கிணைந்த முறையில் பயன்படுத்தி, மண்வளம், நீர்வளம், பயிர் வேளாண் மை, வேளாண்மை முறைகள் உற்பத்திப் பொருட்கள் துணைப் பொருட்கள், சாலைகள், கட்டடங்கள், பொதுச் சுகாதாரம், நல்வாழ்வு, சத்துணவு, குடும்ப நலக் காப்பு, வேளாண்மைக சழிவுப் பொருட்கள் வனவளங்கள், கால்நடை சார்ந்த தொழில்கள், தூய்மைப் பாதுபாப்பு, சுற்றுச் சூழல், கழிவுப் பொருட்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றில் முன்னேற்றம் காண்பதே அதன் நோக்கமாகும். இத்திட்டத்தைச்



1989 ஏப்ரல் 19]

செயல்படுத்த இடங்களை நன்கு தெரிந்தெடுத்து, இயற் கை வளங்களை சமூக நீதிக்கேற்ப முழு வேலை வாய்ப்புக்கும் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. கிராமப் பகுதி வறுமையை இருமுனைத் தாக்குதல் மூலம் அறவே ஒழிப்பதுதான் நமது கொள்கை. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ( IRDP ) தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் ( NREP ) ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் ( RLEGP ) போன்ற திட்டங்கள் மூலம் சமுதாயத்தில் குறிப்பிட்ட ஒரு சில பகுதியினரின வாழ்வில் நிலவும் வறுமையை ஒழிப்பது ஒரு முனையாகும். வேளாண்மை உற்பத்திப பெருக்கத்தில் ஊக்கம் காட்டி அதற்கு ஏற்ற திட்டங்களை வகுத்து, நிறைவேற்றுவது, இரண் டாவது முனையாகும். எனவே, வேளாண்மைப் பணிகளுக்கும் வறுமை ஒழிப்புப் பணிகளுக்கும் முறையான தொடர்பு இருப்பது அவசியம் என்பது கூறாமலே விளங்கும்.

3. வளர்ச்சித் தகைமை, சமுதாய நீதி, தன்னம்பிக்கை, உற்பத்தித் திறன் உயர்வு ஆகியவை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கொள்கை கோட்பாடுகளாகத் தொடர்ந்து திகழ்கின்றன. இக்கட்டுக்கோப்பிற்குள், சமூக நீதியை நிலை நாட்ட மேற்கொள்ளப்படும் முயற்சிகள் விரைவுப்படுத்தப்பட வேண்டும். வேலை வாய்ப்பைப் பெருக்குவதிலும் வறுமையை ஒழிப்பதிலும் கூரிய நாட்டம் செலுத்தப்பட வேண்டும். ஏழா வது திட்டமும் உணவு தானிய உற்பத்தியில் கணிசமான முன்னேற்றம், வேலை வாய்ப்புகளை அதிகரித்தல் ஆகிய வற்றையும், உற்பத்தித் திறனை உயர்த்துகின்ற கொள்கை களையும் கோட்பாடுகளையும் வலியுறுத்துகிறது.

இதைத் தவிர, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு ஆகிய பெரிய திட்டங்களுக்கு உதவும் வகையில், பல்வேறு நடவடிக்கை கள் ஊராட்சி ஒன்றியங்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நடவடிக்கைகள் வட்டார அளவில் மேற்கொள்ளப்படும். அவை. பல பணிகளுக்கிடையே, தொடர்பை ஏற்படுத்துவ துடன், பல வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைக்கவும் உறுதுணையாய் உள்ளன.

வரும் ஆண்டுகளில், ஊரக வளர்ச்சித் துறை கீழ்க்கண்ட சீரிய நோக்குகள் கொண்டு செயல்படும் :—

(அ) வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வரும் குடும் பங்களை கண்டறிந்து, வறுமைக் கோட்டிற்கு மேலே அவை வளம் நோக்கிச் செல்லும் வகையில் வங்கிக் கடன், மானியம் அடங்கிய நிதி உதவிகளைச் செய்தல்.

(ஆ) நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும், குறைந்த ஊதியம் பெறும் பணியாளர், வேலை வாய்ப்பற் றோர் (ஆண், பெண் இருபாலருக்கும்) பொதுப் பணிகள் மூலம் பயனுள்ள வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.

(இ) ஊரக அடிப்படை வசதியைப் பெருக்குவதன் மூலம் ஊரக ஏழைகளின் பொருளாதாரத்தைப் பெருக்கவும் அவர்கள் வருவாயை நிலையாக உயர்த்தவும் சமுதாய உடைமைகளைத் தோற்றுவித்தல்.

(ஈ) மீளப் பயன்பாட்டுடன் கூடிய மாற்று வகை எரி பொருள்களைக் கண்டுபிடித்து, அவற்றின் உற்பத்தியைப் பெருக்கு வதற்கான தேசிய திட்டத்தின் பகுதியாக, தனி நபர்கள் மற்றும் சமூக அமைப்புகள் கரியமிலவாயுக் கலன்களை அமைத்தல், புகையில்லா அடுப்புகளும் இத்திட்டத்தைச் சார்ந்ததே.

(உ) நில மேம்பாடு, நிலத்தைச் சமன் செய்தல், சிறு பாசனக் கிணறுகள் அமைத்தல் அல்லது கிணறுகளைச் செப்பனிடுதல், பம்பு செட்டுகள் அமைத்தல் ஆகிய பணிகளுக்கு சிறு, சொற்ப நில விவசாயிகளுக்குக் கடனும் மானியமும் வழங்குதல்.

## 2. ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள்.

நிர்வாகச் சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்துவதற்கு அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகளின் விளைவாக, அரசு ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்கள் போன்ற உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் கணிசமான அதிகாரங்களை வழங்கியுள்ளது. அதன் மூலம் இவ்வமைப்புகள் பொதுப் பணியிலும் சமூக நலத்திலும் திறமையாகச் செயல்படும் வாய்ப்பைப் பெற்றுள்ளன. அரசு, வேளாண்மை, பொதுச் சுகாதாரம், சத்துணவு ஆகிய பணிகளை மீண்டும் உள்ளாட்சிகளிடம் ஒப்படைத்து, ஆணை பிறப்பித்துள்ளது.

ஊராட்சி உறுப்பினர்கள், தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள், ஒன்றியக் குழுத் தலைவர்கள் ஆகியோரின் பதவிக் காலம் மூன்றாண்டுகளிலிருந்து ஐந்தாண்டுகளாக நீடிக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகளின் தற்போதைய உறுப்பினர்கள், தலைவர்கள், ஒன்றியக் குழுவின் தலைவர்கள் ஆகியோரின், பதவிக் காலம் இரண்டு ஆண்டுகள் நீடிப்புப் பெற்று 3-3-1991 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று அரசு விளக்கம் கொடுத்துள்ளது.

## 3. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (I.R.D.P)

மைய, மாநில அரசுகளின் சரிசமமான நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் வறுமை ஒழிப்புத் திட்டமாக மைய அரசால் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1980-81 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் தமிழ்நாட்டின் அனைத்து வட்டாரங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.



இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன—

(1) சுய வேலை வாய்ப்பை அதிகரிப்பதன் மூலம் கிராமப் புறங்களில் நிலவும் வேலையின்மை போதிய வேலை வாய்ப்பின்மை பிரச்சினைகளைத் தீர்ப்பது.

(2) கிராமப்புறங்களில் மிகவும் வறுமையில் வாடும் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்.

இந்த நோக்கங்களை எய்தும் பொருட்டு, கிராமப் பகுதிகளில் உள்ள முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட மிக ஏழ்மை குடும்பங்களுக்கு வருமானம் தரத்தக்க உடைமைகள் அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தில் பயன்பெறத்தக்க தொகுப்பு கிராமங்களைத் தெரிந்தெடுக்கும் பொறுப்பை ஊராட்சி ஒன்றிய குழுக்களிடம் ஒப்படைத்து அண்மையில் அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் பயன்பெறத் தக்க குடும்பங்களைத் தெரிந்தெடுக்க ஊராட்சி அளவில் ஒரு செயல்முறைக் குழு அமைக்கவும், அதில் வட்டார வளர்ச்சி அலுவலர் (திட்டம்), சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவர் வட்டாட்சியர் திட்டத்தில் பங்குபெறும் வங்கி மேலாளர் ஆகியோருடன், தாழ்த்தப்பட்டோர் மலை ஜாதியினர் சார்பாக ஒருவர், மகளிர் சார்பாக இருவர், கிராமத்தில் வேலை வாய்ப்பற்ற படித்த இளைஞர் ஒருவர், சிறு மற்றும் மிகச் சிறு விவசாயி சார்பாக ஒருவர் ஆகியோரும் உறுப்பினர்களாக இருக்கவும் அரசு ஆணையிட்டுள்ளது. உடைமைகளை உருவாக்க வங்கிகளின் மூலம் கடனும் அரசு உதவித் தொகையும் அளிக்கப்படுகின்றன. உதவித் தொகையில் 50 சத வீதத்தை மாநில அரசும், 50 சத வீதத்தை மைய அரசும் வழங்குகின்றன. அரசு உதவித் தொகை, பொருளாதார வளர்ச்சிப் பணிகளுக்காக கீழ்க்கண்ட முறையில் வழங்கப்படுகிறது :—

| | | |
|---|---|---|
| சிறு விவசாயிகள் | ..25 சதவீதம். | |
| சொற்ப நில விவசாயிகள், நிலமற்ற விவசாய கூலிகள். | 33 சதவீதம் | வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டு திட்ட ( DPAP ) வட்டாரங்களில் ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சமாக ரூ. 4,000 வீதம், இதர வட்டாரங்களில் ஒரு குடும்பத்திற்கு ரூ. 3,000 வீதம். |

[1989 ஏப்ரல் 19

| | | |
|---|---|---|
| மலை ஜாதியினர் .. | 50 சதவீதம் | அனைத்து கிராமப் பகுதிகளிலும் ஒரு குடும்பத்திற்கு ரூ. 5,000-க்கு மேற்படாமல். |

6-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 3,500-க்கும்
குறைவாக ஆண்டு வருமானம் உள்ள குடும்பங்கள் வறுமைக்
கோட்டிற்குள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருந்தது. 7-வது
ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இவ் வரம்பு ரூ. 6,400 ஆக
உயர்த்தப்பட்டுள்ளது. ரூ. 4,800 வருமானம் ஒரு வரம்பாக
நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ. 3,500 வரை ஆண்டு
வருமானம் உடைய குடும்பங்கள் முதலில் உதவி பெறுவர்,
ரூ. 3,500-க்கும் குறைவாக வருமானம் உடைய அனைத்து குடும்
பத்தினருக்கும் உதவி அளிக்கப்பட்ட பின்னரே ரூ. 3,500 முதல்
ரூ. 4,800 வரை ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு உதவி
அளிக்கப்படும்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒரு வட்டாரத்
துக்கு ஆண்டுக்கு 600 குடும்பங்கள் வீதம் மொத்தம் 13.96
இலட்சம் குடும்பங்களுக்கு அரசு உதவித் தொகையாக ரூ. 14,661
இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. முன்னர், 6-வது ஐந்தாண்டுத்
திட்டத்தில் வங்கிக் கடன், அரசு உதவித் தொகை பெற்று,
நியாயமான காரணங்களால் வறுமைக் கோட்டைத் தாண்டி
வர முடியாதவர்களுக்கு மறு உதவி செய்து முந்தைய திட்டத்
தின் பயன்களை ஒன்று சேர்த்து அளிப்பதும், அதன் பின் இயன்ற
அளவு புதிய குடும்பங்களுக்கு உதவிகள் வழங்குவதுமே, ஏழாவது
ஐந்தாண்டுத் திட்டத்தில் 1988-89 வரையுள்ள முதல் நான்கு
ஆண்டுகளில் கருதியுள்ள நோக்கங்கள் ஆகும்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டான
1989-- 90 ஆம் ஆண்டில் மைய அரசால் நிர்ணயிக்கப்படும் அள
வுக்கே வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள புதிய குடும்பங்கள்
பயன்பெறும். மைய அரசிலிருந்து அறிவிக்கப்பட்ட நிர்ணயத்
தின்படி 1989-90 ஆம் ஆண்டில் 1,92,337 புதிய குடும்பங்களுக்கு
இத்திட்டத்தின்கீழ் உதவி அளிக்கப்படவேண்டும். இதற்காக
ரூ. 4,940.564 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்
தொகையை மைய, மாநில அரசுக்கள் சமமாக ஏற்க வேண்டும்.
வறுமைக் கோட்டிற்கு கீழ் இருப்பவர்கள் அளவை 48 சதவீதத்
திலிருந்து 23 சதவீதமாக குறைக்க வேண்டுமென்பதே ஏழாவது
ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியான நோக்கம் ஆகும்.



1989 ஏப்ரல் 19]

1985-86 முதல் இலக்கு, சாதனை விவரங்கள் :

| ஆண்டு. | குடும்பங்களின் எண்ணிக்கை. | | பொருள் அளவு. | |
|---|---|---|---|---|
| | இலக்கு. | சாதனை. | இலக்கு. | சாதனை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.). | | |
| **1985-86—** | | | | |
| புதிய குடும்பங்கள். | 78,239 | 82,030 | | |
| முன்னர் பயன் பெற்ற குடும்பங்கள். | 1,18,000 | 1,27,666 | 3,024.166 | 2,985.891 |
| மொத்தம்.. | 1,96,239 | 2,09,696 | | |
| **1986-87—** | | | | |
| புதிய குடும்பங்கள். | 96,000 | 1,04,334 | | |
| முன்னர் பயன் பெற்ற குடும்பங்கள். | 1,51,000 | 1,54,489 | 4,195.120 | 4,322.201 |
| மொத்தம்.. | 2,47,000 | 2,58,823 | | |
| **1987-88—** | | | | |
| புதிய குடும்பங்கள். | 69,380 | 76,619 | | |
| முன்னர் பயன் பெற்ற குடும்பங்கள். | 2,00,000 | 1,99,796 | 4,234.50 | 4,742.661 |
| மொத்தம்.. | 2,69,380 | 2,76,415 | | |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 1988-89— | | | | |
| புதிய குடும்பங்கள். | 1,42,680 | 1,69,883 | | |
| முன்னர் பயன் பெற்ற குடும்பங்கள். | 82,248 | 87,320 | 4,697.516 | 5,154.813 |
| மொத்தம்.. | 2,24,928 | 2,57,203 | | |

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ( IRDP ) அடிப்படையில் தனிப்பட்ட பயனீட்டாளர்களுக்கு உதவி செய்யும் திட்டமான போதிலும் இத்திட்டத்தில் 10 சதவீதம் அரசு உதவித் தொகையை, திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்துவதற்கு உறுதுணையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு பயன்படுத்த வழிவகை உள்ளது. இத்திட்டம் மாவட்ட ஊரக வளர்ச்சி அமைப்பின் மூலம் வட்டார வளர்ச்சி அலுவலர்களால் செயல்படுத்தப்படுகிறது. மாவட்டம் மற்றும் மாநில அளவுகளில் இப்பணி கண்காணிக்கப்படுகிறது.

சுய வேலை வாய்ப்புத் திட்டத்தில் கிராம இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல். (TRYSEM).

சுய வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம் ( TRYSEM ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ( IRDP ) ஒரு பகுதியாகும். வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள குடும்பங்களைச் சார்ந்த கிராமப் பகுதி இளைஞர்களுக்குத் தொழிற் பயிற்சி அளித்து, இதன் மூலம் சொந்தமாக வேளாண்மை, சார் துறைகளிலும் தொழில் வணிகத் துறைகளிலும் சொந்தமாகத் தொழில் நடத்தப் பயிற்சியளிப்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

பயிற்சி பெறும் இளைஞர்கள் 18 முதல் 35 வயதுக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும். 3 மாதம் முதல் ஒரு ஆண்டு வரை பலவிதமான தொழில்கள் செய்ய பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்கள் அரசின் தொழில் பயிற்சி கூடங்கள் மற்றும் தனியார் பயிற்சி நிலையங்கள், மூலம் நடத்தப்படுகிறது. பயிற்சிக்குத் தகுந்த இளைஞர்களும், பெண்களும் வட்டார அளவில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100 முதல் ரூ. 250 வரை பயிற்சி நிலையத்தில் தரப்படும். தங்கும் வசதி உணவு வசதிக்குத் தகுந்தபடி உதவித் தொகை வழங்கப்படுகிறது.



மாதம் ஒன்றுக்கு ரூ. 40-ம் பயிற்சி காலம் முழுவதற்கும் ரூ. 350-க்கு மேற்படாமலும் பயிற்சியாளர்களுக்கு மூலப் பொருட்களாக வழங்கப்படுகின்றன. பயிற்சி முடித்த பின் ரூ. 500 பெறுமான தொழில் கருவிகள் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றது. பயிற்சியாளர் பயிற்சிக்காக பயன்படுத்தும் பயிற்சி நடத்தும் பள்ளிக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு பயிற்சியாளருக்கு ரூ. 75 வீதமும் ஆசிரியருக்கு ரூ. 50 வீதமும் வழங்கப்படுகிறது.

1987-88 ஆம் ஆண்டின் 12,315 நபர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் 3,335 நபர்கள் சொந்மாகவும், 2,985 நபர்கள் ஊதியம் பெறும் வகையிலும் தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

1988-89 ஆம் ஆண்டிற்கான 13,230 என்ற இலக்கில் 28-2-1989 வரை, 13,321 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது.

1989-80 ஆம் ஆண்டில் 13,230 ஊரக இளைஞர்களுக்குச் சுய வேலை வாய்ப்பிற்கான பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கிராமப் பகுதி மகளிர் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டம் (DWCRA).

இத்திட்டத்தின் கீழ், கிராமப் பகுதி மகளிருக்குத் தொழில் பயிற்சியும், வருவாய் தரத்தக்க கைத் தொழில்கள் செய்ய வசதியும் அளிக்கப்படுகின்றன. அதே சமயத்தில், கிராமப் பகுதிகளில் கிட்டும் வசதிகளையும், வாய்ப்புகளையும் எளிதில் பெறுவதற்காக ஒரு குழுவாக செயல்படுமாறு அறிவுறுத்தப்படுகிறது. மகளிரிடம் போதிய நிதி உதவி இருந்தால் குடும்பத்தின் வாழ்க்கைத்தரமும் நன்றாக இருக்கும். இதற்கு முக்கியமான காரணம், மகளிர் ஈட்டும் பணத்தை அவர்கள் குடும்பத்தின் உணவு, உடை, குழந்தைகளின் மருத்துவச் செலவுக்கு பயன்படுத்துவதேயாகும். இந்திய நாட்டின் பல இடங்களிலும், தமிழ்நாட்டிலும் நடத்திய ஆய்வுகள் இந்த உண்மையை உணர்த்தியுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் பெண்களை குழுக்களாக அமைத்து, அவர்களுக்கு வங்கிக் கடனும், மானியமும் அளிக்கப்படுகின்றன. ஒரு குழுவில் 15 பெண்கள் முதல் 20 பெண்கள் வரை இருக்கலாம். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஓர் ஆண்டிற்கு சராசரியாக 100 குழுக்கள் அனுமதிக்கப்படுகின்றன. ஒரு மாவட்டத்தில் அதிக பட்சம் 600 குழுக்கள் வரை அமைக்கப்படலாம். இக்குழுக்களின் உறுப்பினர்களுக்கு உள்ளூரிலேயே உரிய பயிற்சியாளர்கள் மூலம் பயிற்சியளிக்கப்படும்.

1983-84 ஆம் ஆண்டில் இத்திட்டம் பெரியார், தர்மபுரி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. 1986-87 ஆம் ஆண்டில் இத்திட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு நீட்டிக்கப்பட்டது. 1987-88 ஆம் ஆண்டில் இத்திட்டம் தென் ஆற்காடு மாவட்டத்திற்கும், 1988-89 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை, வடாற்காடு மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் சில வருவாய் தரத்தக்க நடவடிக்கைகள் சிலவற்றின் விவரம் இங்கே தரப்பட்டுள்ளன. இது எடுத்துக்காட்டான பட்டியல், முழுமையானதல்ல.

1. பால்பண்ணை.
2. ஆடு வளர்ப்பு—கம்பளி நெசவு.
3. கயிறு திரித்தல்.
4. தேனீ வளர்த்தல்.
5. பாய் முடைதல்.
6. பட்டுப்பூச்சி வளர்த்தல்.
7. செங்கல் செய்தல்.
8. காலணிகள் செய்தல்.
9. ஆயத்த ஆடைகள் தயாரித்தல்.
10. அகர்பத்தி செய்தல்.
11. பைகள் செய்தல்.
12. மூங்கில் கூடைகள்.
13. பாசிமணி மாலைகள்.
14. பொம்மைகள்.
15. கையுறைகள் செய்தல்.
16. மெழுகுவர்த்தி/மெழுகு பொம்மைகள்.
17. கற்களால் நகைகள் செய்தல்.
18. கற்கள் பட்டை தீட்டுதல்.
19. பேப்பர் பைகள்— பாலிதீன் பைகள் செய்தல்.
20. கைத்தறி நெசவு.
21. புதுமுறையில் பாய் முடைதல்.





22. கோழி வளர்ப்பு.
23. மீன் வளர்ப்பு.
24. தென்னங்கீற்று பின்னுதல்.

1983—84 முதல் 1988—89 வரை கீழ்க்கண்டவாறு குழுக்கள் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன :—

அமைக்கப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை.

| ஆண்டு. | பெரியார். | தர்மபுரி. | திருச்சிராப்பள்ளி. | தென்னார்காடு. | வடார்காடு. | புதுக்கோட்டை. | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1983-84 | 20 | 20 | .. | .. | .. | .. | 40 |
| 1984-85 | 100 | 100 | .. | .. | .. | .. | 200 |
| 1985-86 | 100 | 100 | .. | .. | .. | .. | 200 |
| 1986-87 | 165 | 155 | 100 | .. | .. | .. | 420 |
| 1987-88 | 178 | 80 | 150 | 100 | .. | .. | 508 |
| 1988-89 | 37 | 85 | 100 | 163 | 90 | 100 | 575 |
| மொத்தம்.. | 600 | 540 | 350 | 263 | 90 | 100 | 1,943 |

1989-90 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை (மாநில அரசின் பங்கு) ரூ. 20.40 இலட்சமாகும். 1989-90 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்துக்கு இத்திட்டத்தை நீட்டிக்கவும் 100 மகளிர் குழுக்களைத் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 5. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் (NREP) :

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் தமிழ்நாட்டில் 1980 ஆம் ஆண்டு அக்டோபர் முதல், மத்திய அரசுத் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை நிறைவேற்ற ஆகும் செலவை மத்திய அரசும் மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன.

### திட்டத்தின் நோக்கங்கள் :

(அ) கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பின்றி இருக்கும் ஏழை, எளிய ஆடவர், பெண்டிர் அனைவருக்கும் கூடுதல் ஊதியம் கிடைக்கும் வகையில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.

(ஆ) இதன் மூலம் கிராமங்களில் ஏழை மக்களின் அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்காகச் சமுதாயத்திற்குப் பயன்படும் சொத்துக்களை உருவாக்குவதுடன், கிராமப் பொருளாதாரத்தை விரைந்து மேம்படுத்தி, கிராமப் பகுதியில் வருவாயைச் சீராக உயர்த்துதல்.

(இ) கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

### (2) நிதியுதவி சாதனை விவரம் :

இத்திட்டத்தின் கீழ் 31-3-1989 இல் முடிவடையும் காலத்திற்கு நிதி ஒதுக்கீடு, உருவான மனித உழைப்பு நாட்கள் பயன் விவரம் :—

| ஆண்டு. | நிதி ஒதுக்கீடு இருப்பு (உணவு மதிப்புடன்). ஆரம்ப உட்பட தானிய | செலவு. | உருவான மனித உழைப்பு நாட்கள் உற்பத்திப் பயன். | |
|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | இலக்கு. | சாதனை |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1988-89.. | 8,841.22 | 8,814.676 | 314.33 | 442. |



(3) இத்திட்டத்தின் கீழ் பணியாற்றும் நபர்களுக்கு, உணவு தானியங்களைக் கூலியின் ஒரு பகுதியாக மலிவு விலையில் வழங்கும் பொருட்டு, 1988-89 நிதியாண்டில் மைய அரசு ரூ. 661.98 இலட்சம் மதிப்புள்ள 36,660 மெட்ரிக் டன் உணவு தானியங்களை இலவசமாக அளித்துள்ளது.

### (4) குறைந்தபட்சக் கூலி :

இத்திட்டத்தின் கீழ் பணியாற்றுகின்றவர்களுக்கு (ஆண், பெண் இருபாலாருக்கும்) ஒரு நாளைக்கு ஒருவருக்கு ரூ. 10 வீதம் கூலி வழங்கப்படுகிறது. இக்கூலியில் உணவு தானியமாக (அரிசி, கோதுமை) நாளொன்றுக்கு $1\frac{1}{2}$ கிலோ வீதமும் எஞ்சியது ரொக்கமாகவும் அளிக்கப்படுகிறது.

### (5) ஜீவன் தாரா பாசனக் கிணறுகள் திட்டம் :

1988-89 ஆம் ஆண்டிலிருந்து ''ஜீவன்தாரா'' பாசனக் கிணறுகள் அமைக்கும் திட்டம் புதிதாகச் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள ஆதி திராவிடர், பழங்குடியினர், விடுவிக்கப்பட்ட கொத்தடிமை இனத்தாரைச் சேர்ந்த சிறு சொற்ப நில விவசாயிகட்கு, இலவசமாகப் பாசனக் கிணறுகள் தோண்டிக் கொடுக்கப்படுகின்றன. 1988-89 ஆம் ஆண்டில் 3,377 கிணறுகளை ரூ. 791.66 இலட்சம் மதிப்பீட்டில் தோண்டிக் கொடுக்கத் திட்டமிடப்பட்டு, 31-3-1989 முடிய 2,731 கிணறுகள் தோண்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய கிணறுகள் விரைவில் தோண்டி முடிக்கப்படும்.

### (6) கரும்பலகைத் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் 1988-89 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 3[illegible] பள்ளிக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 266 பள்ளிக்கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய கட்டடங்கள் விரைவில் கட்டி முடிக்கப்படும்.

[1989 ஏப்ரல் 19

(7) 1988-89 ஆம் ஆண்டில் பணிகள் (நிலுவைப் பணிகள் உட்பட) பற்றிய இலக்கு, சாதனை (31-3-1989 முடிய) விவரம் அடியிற்கண்ட பட்டியலில் உள்ளது.

| தொடர் எண்ணும், திட்டமும். (1) | இலக்கு (எடுத்துக் கொள்ளப் பட்ட பணிகள்). (2) | சாதனை (முடிக்கப் பட்ட பணிகள்). (3) |
|---|---|---|
| 1. ஆதி திராவிடர் பழங்குடியினருக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுதல். | 41,520 | 41.480 |
| 2. கழிப்பறைகள் கட்டுதல் .. | 448 | 448 |
| 3. ஜீவன்தாரா பாசனக் கிணறுகள் தோண்டுதல். | 3,377 | 2,731 |
| 4. பள்ளிக்கட்டடங்கள் கட்டுதல் (கரும்பலகைத் திட்டம் அடங்கியது). | 711 | 616 |
| 5. சாலைகள் மேம்படுத்துதல், சிறு பாலங்கள் கட்டுதல். | 1,905 | 1,905 |
| 6. குடிநீர் ஆதாரங்கள் கிணறுகள் அமைத்தல், மேம்பாடு செய்தல். | 300 | 300 |
| 7. சிறு பாசனக் கால்வாய்கள் ஓர் அமைப்பு. | 64 | 64 |
| 8. வடிகால் சீரமைப்பு செய்தல் .. | 496 | 496 |
| 9. குளங்களையும் குட்டைகளையும் சீரமைத்தல். | 231 | 231 |
| 10. சமுதாயக் கூடங்கள் கட்டுதல் .. | 1,239 | 1,236 |
| 11. இதரப் பணிகள் (ஊரகப் பேரூராட்சிப் பகுதிப் பணிகள் உட்பட). | 5,013 | 4,997 |
| மொத்தம் .. .. | 55,304 | 54,504 |



## 6. ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் (RLEGP)

ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் மைய அரசின் முழு நிதி உதவியுடன் 1983-84 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் வருமாறு :—

(அ) ஊரகப் பகுதிகளில் வாழும் நிலமற்ற தொழிலாளர்களது குடும்பங்களில், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒருவருக்காவது ஓர் ஆண்டில் 100 நாட்கள் வரை வேலை வாய்ப்பிற்கு உறுதி அளிக்கும் வகையில் ஊரக நிலமற்றோருக்காக வேலை வாய்ப்பைப் பெருக்குதல்.

(ஆ) ஊரக பகுதிகளில் உள்ள ஏழ்மையில் உள்ளவர்களுக்கு, உற்பத்திப் பயன் உள்ள நிலையான உடைமை உருவாக்குதல், ஊரகப் பொருளாதாரத்தை மேம்படுத்தி, வேலை வாய்ப்பை அதிகரிக்கும் வகையில் ஊரகப் பொருளாதார சமுதாயத்தின் அடித்தள அமைப்பை வலுப்படுத்துதல்.

(இ) ஊரகப் பகுதிகளில் வாழ்க்கைத் தரத்தைப் பொதுவாக உயர்த்துதல்.

20 அம்சத் திட்டத்திற்குட்பட்ட பணிகள், மற்றும் குறைந்த பட்சத் தேவைகள் திட்டம் (Minimum Needs Programme) ஆகியவற்றில் இடம்பெறும் பணிகள் இத்திட்டத்தின் மூலம் எடுத்துக்கொள்ளப்படலாம். இத்திட்டம் நமது மாநிலத்தில் கீழ்க்கண்ட துறைத் தலைவர்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது :—

| வரிசை எண்ணும் திட்டமும். (1) | செயல்படுத்தும் துறைத் தலைவர். (2) |
|---|---|
| 1. ஊரக இணைப்புச் சாலைகள் அமைத்தல் (குறைந்தபட்சத் தேவைகள் திட்டத்தின் ஒரு பகுதியாக). | தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை). |
| 2. சிறு பாசன ஆதாரங்களை மேம்படுத்துதல். | தலைமைப் பொறியாளர் (பொதுப் பணித்துறை-சிறு பாசனம்.) |
| 3. மற்றும் 4. தரிசு நிலங்களைச் சீராக்குதல், பாசன வசதியைப் பெருக்கக் கசிவு நீர்க்குட்டைகள் ஏற்படுத்துதல். | தலைமைப் பொறியாளர் (விவசாயப் பொறியியல் துறை). |

[1989 ஏப்ரல் 19

| வரிசை எண்ணும் திட்டமும். (1) | செயல்படுத்தும் துறைத் தலைவர். (2) |
|---|---|
| 5. சமூகக் காடு வளர்ப்பு .. | ஆணையர் (ஊரக வளர்ச்சித் துறை.) |
| 6. இந்திரா நினைவு குடியிருப்புகள் (ஆதி திராவிடர் விடுவிக்கப் பட்ட கொத்தடிமைகள், பழங் குடியினர் ஆகியோருக்கு இலவசக் குடியிருப்புகள் கட்டிக் கொடுத்தல்). | ஷை |
| 7. ஊரகக் கழிப்பறை கட்டிக் கொடுத்நல். | ஷை |
| 8. ஊரக மகளிர் குழந்தைகள் நலன் பேணுவதற்கான பலநோக்குச் சமூகக் கூடம் கட்டிக் கொடுத்தல் | ஷை |
| 9. ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு ''ஜீவன் தாரா'' திட்டத்தின் மூலம் பாசனக் கிணறுகளை இலவசமாக அமைத்துத் தருதல். | ஷை |

இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு, செலவு, மனித உழைப்பு நாட்கள், இலக்கு, சாதனை பற்றிய விவரங்கள் 1984–85 முதல் 1988–89 முடிய உள்ள கால அளவுக்கு இணைப்பில் கொடுக்கப் பட்டுள்ளது.

| வரிசை எண்ணும் விபரமும். (1) | 1984–85. (2) | 1985–86. (3) | 1986–87. (4) |
|---|---|---|---|
| 1. நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில் தானிய விலை உட்பட). | 53,40.00 | 51,67.76 | 52,88.53 |
| 2. மொத்தச் செலவு (ரூ. இலட்சத்தில்). | 57,24.32 | 43,54.335 | 56,13.987 |
| 3. மனித உழைப்பு நாட்கள் (இலட்சத்தில்). | | | |
| (அ) இலக்கு .. | 2,98.16 | 2,62.90 | 2,42.00 |
| (ஆ) சாதனை .. | 3,14.43 | 2,88.46 | 3,26.00 |



1989 ஏப்ரல் 19]

| வரிசை எண்ணும் விபரமும். | 1987–88. (5) | 1988–89. (6) |
|---|---|---|
| 1. நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில் தானிய விலை உட்பட). | 54,24.80 | 6,331.14 |
| 2. மொத்தச் செலவு (ரூ. இலட்சத்தில்). | 53,91.735 | 6,081.40 |
| 3. மனித உழைப்பு நாட்கள் (இலட்சத்தில்). .. | | |
| (அ) இலக்கு .. | 2,55.66 | 2,45.76 |
| (ஆ) சாதனை .. | 2,84.659 | 330,74 |

7. 1989-90-ல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தையும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தையும் ஒருங்கிணைத்தல்.

1989-90 ஆம் ஆண்டிற்கான (மைய அரசின்) வரவு-செலவுத் திட்டத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தையும், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தையும் ஒருங்கிணைத்து ஒரே திட்டமாகச் செயல்படுத்தப் போவதாக மைய அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்திற்கான செலவை மைய அரசும், மாநில அசரம் 75 : 25 என்ற விகிதத்தில் ஏற்க வேண்டும். இந்தத் திட்டத்தின் மூலம் மைய அரசின் பங்காக சுமார் ரூ. 80 கோடியும், மாநில அரசின் பங்காக ரூ. 26 கோடியும் கிடைக்கவுள்ளது. இந்த ரூ. 106 கோடிக்கான திட்டங்கள் எல்லா மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படும்.

2. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் அறிவிப்பு மைய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

**ஜவகர்லால் நேரு வேலைவாய்ப்புத் திட்டம் :**

இந்த ஆண்டு மைய அரசு வரவு-செலவுத் திட்டத்தில் ஜவகர்லால் நேரு வேலை வாய்பபுத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் நாடு முழுவதிலும் 120 மாவட்டங்களில் மட்டும் சுமார் 500 கோடி ரூபாயில் வேலை வாய்ப்புத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படும். தமிழ் நாட்டிற்கு இந்தத் திட்டத்தின்கீழ் ரூ. 33.31 கோடி மானியமாக பெறப்படும். வறுமை கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் அதிகமாக உள்ள 7 தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் இத் திட்டம் செயல்படுத்தப்படும். இதனால், மேற்படி 7 மாவட்டங்களிலும் சுமார் 6,000 ஊராட்சிகளில் கூடுதல் வேலை வாய்ப்பு வசதி கிட்டும். தமிழ்நாட்டிலுள்ள மொத்த ஊராட்சிகளின் எண்ணிக்கை 12,616. எனவே, இத்திட்டத்தின் மூலம் 50 சத வீத ஊராட்சிகள் பயனடையும். ராமநாதபுரம், புதுக்கோட்டை, பசும்பொன் தேவர் திருமகன், திண்டுக்கல் காயிதேமில்லத், சேலம், வட ஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் மேற்படி திட்டம் செயல்பட வாய்ப்பு உள்ளது. ஆயினும், இத் திட்டத்தை அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்துவது பற்றி மைய அரசின் பரிசீலனையில் உள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் அறிவிப்பு மைய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

**9. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்—ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் ஆகியவற்றின் கீழ் சமூகக் காடுகள் வளர்க்கும் திட்டம்.**

வறுமை ஒழிப்புத் திட்டத்தின் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்—ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் ஆகியவற்றைப் போலவே, சமூகக் காடுகள் வளர்க்கும் திட்டமும் ஓர் இன்றியமையாத ஒருங்கிணைந்த திட்டமாகும். 5–1–1985-ல் அகில இந்திய வானொலியில், பாரதப் பிரதமர் நாட்டுக்கு விடுத்த செய்தியில் நாட்டில் வனங்கள் வேகமாக அழியும் நிலை நிலவுவதையும் அதன் விளைவாக நம்மை எதிர்நோக்கியுள்ள மிகப் பெரிய சுற்றுப்புறச் சூழல், சமூக பொருளாதார நெருக்கடியையும் கோடிட்டுக் காட்டியுள்ளார். அப்போது அவர் உடனடியாக ஆண்டுக்கு 50 இலட்சம் ஹெக்டேர் நிலத்தில், விறகு மரக்கன்றுகள், தீவனச் செடிகள் ஆகியவற்றை நடவேண்டியது அவசியமெனக் கூறினார். காடுவளர்க்கும் இப் பெருந் திட்டத்தை மக்கள் இயக்கமாகவே செயல்படுத்தவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அண்மைக் காலம் வரை, காடுகள் வளர்த்தல் என்பது தொழில் ரீதியிலோ தொழில் நுட்ப ரீதியிலோ கிராம வளர்ச்சிப்



பணியாகக் கருதப்பட்டதில்லை. அதற்குக் காரணமும் விளங்க வில்லை. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நவீன காடு வளர்க்கும் திட்டம் இந்தியாவில் உருவெடுத்தபோது, வன ஆதாரப் பாதுகாப்பு நிலையான பயனீட்டுப் பாதுகாப்பும் வேளாண்மை நிலங்கள் உள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன. வேளாண்மையையும் விவசாயிகளையும் வனப் பகுதியிலிருந்து மிகத் தொலைவில் வைத்திருப்பதே இப்பாதுகாப்புத் திட்டத்தின் நோக்கமாய் இருந்தது. 1970-க்கும் 1980-க்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட இரு நிகழ்ச்சிகள். காடுவளர்த்தலை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஒரு வளர்ச்சிப் பணியாக உணரச் செய்தன.

அவற்றில் ஒன்று, காடுகளை அழித்தல் போன்றவற்றால் ஏற்பட்ட மண் அரிப்பு வெள்ளம் காரணமான இழப்பு, இது பலர் கவனத்தையும் ஈர்த்தது. அத்துடன் மக்கள் தொகைப் பெருக்கத்தால், பலரும் மரங்களை விறகுக்காகவும் தீவனத் திற்காகவும் வெட்டும் நிலை ஏற்பட்டு, காடுகள் அழியும் நிலை காணப்பட்டது.

இரண்டாவது எண்ணெய் உற்பத்தி நாடுகளின் போக்கு அதிர்ச்சி தரும் வகையில் இருந்தமையால், மாற்று எரிபொருள் கண்டுபிடிப்பதில் மக்கள் ஈடுபட வேண்டிய நிலை. இதனால் விறகு மரங்கள் வளர்ப்பை மக்கள் மேற்கொள்ளத் தலைப்பட் டனர். சூரிய எரிச் சக்தியைப் பயன்படுத்துவதற்குத் தேவைப் படும் ஆராய்ச்சி மேம்பாட்டு முயற்சிகள் இதற்குத் தேவை யில்லை. என்பதோடு, அணுசக்தி பயன்பாட்டு எதிர்விளைவு அபாயமும் இல்லை என்பதுதான் இதற்குக் காரணம்.

இப்பின்னணியில்தான் ஊரக வளர்ச்சியின் ஒரு அங்கமாக காடு வளர்ப்புப் பணி இடம் பெறவேண்டும் என்ற தெளிவு ஏற்பட்டது. காடுவளர்ப்புப் பணி பாதுகாக்கப்பட்ட காட்டு நிலங்களில் மட்டும் மேற்கொள்ளப்பட்டு வந்த காலத்தில், அங்கு மனிதர்களால் இழப்பு ஏற்படுவதைத் தடுக்க முடிய வில்லை. ஆனால் காடு வளர்ப்புத் திட்டம் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டமாக உருவேடுத்தபோது பாதுகாக்கப்பட்ட காடுகளுக்கு வெளியே வாழும் மக்களை அதில் ஈடுபடுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

பெருவாரியான மக்கள், வனத்துறை அதிகாரிகளின் கருத்தை ஏற்றுக் கொள்ளுமாறு செய்யவேண்டியதாயிற்று. அவர்கள் அதிகார முறையில் எதையும், செயற்படுத்த இயலவில்லை. சமூக பொருளாதார சூழலுக்கு ஏற்ற முறையில்தான் காடு வளர்க்கும் திட்டம் செயல்பட முடியுமே அன்றி வேறு முறையில் அல்ல என்பது தெளிவாக உணரப்பட்டது.

கிராம மக்கள் உணவு தானியங்களை விளைவித்தல், விளை நிலங்களைப் பயன்படுத்துதல் குழாய்க் கிணறு அமைத்தல்,

கழிவுக் பொருட்களை எரிபொருளாகப் பயன்படுத்துதல் ஆகிய
வற்றை எந்த முறையில் செய்கிறார்களோ. அதே முறையில்
அதே மனநிலையில் மரங்களை நடுகின்றனர். அல்லது அவற்றை
அழிக்கின்றனர். அவர்கள் வனத்துறைப் பணிகளையும், ஊரக
வளர்ச்சிப் பணிகளையும் இரு வேறு பணிகளாகக் கருதுவ
தில்லை. எனவே, கிராமப் பகுதிகளில் காடு வளர்க்கும் பணி
வளர்ச்சிப் பணியின் ஒரு அங்கமாக வேண்டுமாயின், அது இம்
முயற்சியில் ஒருங்கிணைய வேண்டும். எனவேதான், வறுமை
ஒழிப்புத் திட்டத்தின் கீழ் இயங்கும் ஊரக வேலைவாய்ப்புத்
திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டம் ஒரு
பகுதியாக, சமூகக் காடுகள் திட்டம் சென்ற நான்கு ஆண்டு
களாக செயற்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு வனத்துறை, 1961 ஆம் ஆண்டு முதல், தரிசு
நிலங்களில் மரம் வளர்க்கும் திட்டத்தை, 'பண்ணைக் காடுகள்'
திட்டத்தின் கீழ் செயல்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் 1979
வரை சுமார் 1.5 லட்சம் ஹெக்டேர் தரிசு நிலத்தில் காடு
வளர்க்கப்பட்டது. இது, வனத்துறையில் ஏற்கனவேயுள்ள ஊழி
யர்கள் மூலம், எந்தவிதக் கூடுதல் ஊழியர்களுமின்றியே
நடைபெற்றது. 1980-81 ஆம் ஆண்டில் சுவீடன் உலக நாடு
கள் மேம்பாட்டு நிறுவனம் ( SIDA ) அளித்த நிதி உதவியுடன்
மத்திய அரசுத் திட்டமான விறகு மரம் வளர்க்கும் திட்டத்தின்
கீழ் வழங்கப்பட்ட உதவியுடனும், ரூபாய் 10 கோடி செலவில் ஒரு
மாபெரும் சமூகக் காடுகள் திட்டம் ஐந்தாண்டுத் திட்டமாக
அறிமுகம் செய்யப்பட்டது. இதற்கென தனியாக, ஒரு கூடுதல்
தலைமை வனப்பாதுகாப்பாளர் தலைமையிலான சமூகக் காடு
கள் பிரிவு தொடங்கப்பட்டது. ஆண்டுக்கு 26,000 ஹெக்டேர்
நிலத்தில் காடுகள் வளர்க்கத் திட்டமிடப்பட்டது. இத்திட்டம்
7-வது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் மேலும் ஐந்தாண்டுகளுக்கு
நீட்டிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள கிராம மக்களின் எரிப்பொருள், தீவ
னத் தேவைகளைப் பொறுத்தவரை, இம்முயற்சி, மிகச் சிறிய
அளவிற்கே பயன் கொடுத்துள்ளது எனலாம். கி.பி. 2000-ம்
ஆண்டில் நாட்டில் கீழ்க்கண்ட அளவிற்கு பற்றாக்குறை நிலவும்
எனக் கணக்கிடப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| விறகு (எரிபொருள்) .. .. | 80 சத விகிதம். |
| வைக்கோல் .. | 55 சத விகிதம். |
| பசும்புல் தீவனம் .. .. | 81 சதவிதிதம். |

இந்நிலை நீடிக்குமானால், கி.பி. 2000 ஆம் ஆண்டில் தமிழ்
நாடு இப்போதிருக்கும் நிலையைவிட அதிகமான மக்கள் பெருக்





கம், தூய்மைக்கேடு, உறுதியற்ற சுற்றுச்சூழல் ஆகியவற்றிற்கு
உள்ளாகி, பெரிய இழப்பினை சந்திக்க வேண்டியநிலை உரு
வாகும். மக்கள் தொகை பெருக்கம் இயற்கை ஆதாரங்கள்,
சுற்றுச் சூழல் ஆகிய பெரும் பிரச்சினைகள் இப்போதே வெளிப்
படையாகத் தெரிகின்றன. பெருத்த மாற்றம் ஏற்பட்ட போதிலும்
தமிழ்நாடு மக்கள் பல துறைகளில் இன்றைய நிலையை
விட மோசமாகவே காட்சியளிப்பர். பல நூற்றுக்கணக்கான
நம்பிக்கையிழந்த ஏழை மக்களுக்கு உணவும் இதர இன்றியமை
யாத தேவைகளும் கிடைத்ததற்கரியனவாய் இருக்கும்.

தற்போதுள்ள போக்கினை மாற்ற அரசும் மக்களும் முனைந்து
செயல்பட்டாலொழிய, அறிவியலில் ஏற்படும் புரட்சிகரமான
மாற்றங்கள் தவிர மக்கள் வாழ்க்கையில் எவ்வித மாற்றமும்
இருக்காது.

1980-81-ல் தொடங்கிய ஐந்தாண்டுகளில் ஊரக வளர்ச்சித்
துறையில், ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், காடு
வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. ரூபாய் 1,586.66
இலட்சம் ஒதுக்கீட்டில், ரூபாய் 1063.61 இலட்சம் இதற்காகச்
செலவு செய்யப்பட்டது. அதன் மூலம் 1,33.528.26 ஹெக்டேர்
நிலத்தில் காடுகள் வளர்க்கப்பட்டன. இத்திட்டம் ஒரு சில சமு
தாய வளர்ச்சி வட்டாரங்களில் மட்டுமே செயல்படுத்தப்பட்
டது. அவையும் முறையாக, அறிவியல் அடிப்படையில் செயல்
படுத்தப்பட்டதாகச் சொல்ல இயலாது. ஆறாவது ஐந்தாண்
டுத் திட்டக் காலத்தில் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு
உறுதித் திட்டத்தில், காடு வளர்க்கும் திட்டம் சேர்க்கப்பட
வில்லை.

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டாகிய 1985-
86-ல் காடு வளர்க்கும் திட்டத்திற்கு ஊரக வேலைவாய்ப்புத்
திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்
ஆகிய இரு திட்டங்களிலும் பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்
பட்டது. கடந்த இரு ஆண்டுகளில், இவ்விரு திட்டகங்ளுக்கும்
வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டில் 25 சதவீதம், சமூகக் காடுகள்
வளர்ப்புத் திட்டத்திற்குக் குறிப்பிட்ட ஒதுக்கீடாக வழங்கப்படு
கிறது. இவ்விரு திட்டங்களிலும் 1988-89 ஆம் ஆண்டில்
மொத்த ஒதுக்கீட்டுத் தொகை ரூ. 1755 லட்சத்தில் 31—3—89
முடிய ரூ. 1795.842 லட்சம் நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.
மொத்தம் 443,654 லட்சம் செடிகள் 20,742 ஹெக்டேர் நிலத்தில்
நடப்பட்டுள்ளன. மரப்பட்டா 30,638 வறுமை கோட்டிற்கு
கீழேயுள்ள குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. சமூகக் காடு
கள் வளர்க்கும் திட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு
எய்திய சாதனை ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்
டுள்ளன.

[1989 ஏப்ரல் 19

## சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம்—1988-89.

(31- 3- 1989 முடிய சாதனை).

| (1) | | தே. ஊ. வே.தி. (2) | ஊ.நி.வே. உ.தி. (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|---|
| **1. நிதி பற்றியது :** | | | (ரூ. இலட்சத்தில்). | |
| 1 ஒதுக்கீடு | .. | 1,209.500 | 545.500 | 1.755.000 |
| 2 செலவு | .. | 1,196.547 | 599.295 | 1,795.842 |
| 3 சதவீதம் | .. | 99 | 109 | 102 |
| **2. திட்டம் பற்றியது :** | | | | |
| 1. மனித உழைப்பு நாட்கள் (லட்சத்தில்)— | | | | |
| 1. இலக்கு | .. | 84.665 | 38.143 | 12C.808 |
| 2. சாதனை | .. | 87.562 | 47.984 | 135.546 |
| 2. நாற்றங்கால் நிறுவுதல்— | | | | |
| 1. இலக்கு | .. | 1,561 | 756 | 2,317 |
| 2. சாதனை | .. | 1,349 | 844 | 2,193 |
| 3. கன்று வளர்த்தல் (இலட்சத்தில்)— | | | | |
| 1. இலக்கு | .. | 396.081 | 168.933 | 565.014 |
| 2. சாதனை | .. | 349.250 | 181.612 | 530.862 |
| 4. கன்றுகள் நடுதல் (லட்சத்தில்)— | | | | |
| 1. இலக்கு | .. | 392.493 | 193.383 | 585.876 |
| 2. சாதனை | .. | 281.288 | 162.366 | 443.654 |
| 5. பரப்பளவு (ஹெக்டேரில்)— | | | | |
| 1. இலக்கு | .. | 16,823 | 8,702 | 25,525 |
| 2. சாதனை | .. | 12,917 | 7,825 | 20,742 |



1989 ஏப்ரல் 19]

## சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் 1988-89—தொடர்ச்சி.

| | | | | |
|---|---|---|---|---|
| 6. பயன்பெற்ற வீடு சூழ் பண்ணைக் குடும்பங்கள்— | | | | |
| 1. இலக்கு | .. | 50,337 | 17,138 | 67,475 |
| 2. சாதனை | .. | 68,499 | 26.240 | 94,739 |
| 7. மரப்பட்டா வழங்கல்— | | | | |
| 1. இலக்கு | .. | 23.000 | 21,000 | 44.000 |
| 2. சாதனை | .. | 15.894 | 14,244 | 30.038 |

ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், ஆகியவற்றில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தைச் சேர்த்துச் செயல்படுத்தும்போது, நாம் கிராமப் பகுதிகளில் அவசரமான மறுக்க முடியாத தேவைகளைப் புறக்கணிக்கவில்லை. அதே நேரத்தில் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதிலும், நிலை நாட்டுவதிலும் உரிய கவனம் செலுத்தாமலும் இல்லை. இம்மாநிலத்தில், சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தை ஒரு மக்கள் இயக்கமாகச் செயல்படுத்த, பல முனை நோக்கு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. உரிய நிறுவன நிர்வாக தொழில்நுட்ப உதவியுடன் சமுதாய வட்டாரங்களின் பன்முகப்படுத்தப்பட்ட நாற்றங்கால்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆதி திராவிடர், பழங்குடியினருக்கான தொகுப்பு வீடுகளில், நாற்றங்கால்கள் நிறுவப்பட்டுள்ளன. நிலமற்ற ஏழைப் பெண்களுக்கு '2சி' மரப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள், சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் பயனை ஆயிரக்கணக்கான மக்கள் பெற வழி செய்துள்ளன. இதன் மூலம் தமிழ்நாட்டில் ஒதுக்குப்புற கிராமங்களில் வாழும் மக்களுக்கு வேலை வாய்ப்பும் வருவாய் பெருக்கமும் கிட்டியுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

1987-88 மற்றும் 1988-89 ஆகிய இரு ஆண்டுகளில் முறையே 42,092 மற்றும் 30,038 மரப்பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன.

## 10. சிறு/சொற்ப நில விவசாயிகள் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க உதவி வழங்கும் பெருந்திட்டம்.

சிறு/சொற்ப நில விவசாயிகள் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்காக, உதவி வழங்கும் இப் பெருந்திட்டம் தமிழ் நாட்டில் 1983-84ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில், சிறுபாசன வசதிகளைப் பெருக்கவும், நிலங்களைச் சீர்படுத்தவும், சமப்படுத்தவும் வங்கிகள் மூலம் கடனும், அரசு

மானியமும் வழங்கி, விவசாயிகளுக்கு உதவி அளிக்கப்படு
கிறது. 1988-89ஆம் ஆண்டில், ஒவ்வொரு வட்டாரத்திற்கும்
ரூ. 2.31 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்
டுள்ளது. இந்த நிதி, பெருந்திட்டத்தின் மூன்று இனங்களுக்கு
பகிர்ந்து அளிக்கப்படுகிறது :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. சிறு பாசனத் திட்டம் .. .. | 1.62 |
| 2. தானிய விதைகள், எண்ணெய் வித்துக்கள், ஆகியவற்றை இலவசமாக வழங்குதல். | 0.23 |
| 3. நிலமேம்பாடு, பணியாளர் செலவினம் (பணியாளர் செலவினம் வட்டாரத்துக்கு ரூ. 4,000 வரை). | 0.46 |
| மொத்தம் ஒரு வட்டாரத்திற்கு ஒதுக்கீடு .. | 2.31 |

சிறு பாசனம், நில மேம்பாடு ஆகிய திட்டங்கள் ஊரக
வளர்ச்சித் துறை மூலம் செயல்படுத்தப்படுகின்றன. தானிய
விதைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றை வழங்கும்
திட்டம், வேளாண்மை இயக்குநர் மூலமும் எண்ணெய் வித்துக்
கள் இயக்குநர் மூலமும் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்திற்காகும் செலவை மைய அரசும், தமிழ்நாடு
அரசும் 50 : 50 என்ற விழுக்காட்டில் பகிர்ந்துக் கொள்
கின்றன.

இதற்கு 1988-89 நிதியாண்டின் ஒதுக்கீடு ரூ. 876.62
இலட்சம். இதில் சிறு பாசனத்திற்கு ரூ, 613.63 இலட்சமும்,
" நில மேம்பாடு, பணியாளர் செலவினம் தானியம் எண்ணெய்
வித்துக்கள் வழங்கல் " ஆகியவற்றிற்கு ரூ. 22.99 இலட்சமும்
நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

31- 3—1989 வரை, ரூ. 529.90 இலட்சம் செலவில் 16,853
விவசாயிகள், சிறு பாசன வசதிகளும், ரூ. 132.39 இலட்சம்
செலவில், நிலமேம்பாடு, திட்டத்தின்கீழ் 4,289 விவசாயி
களும் பயன் பெற்றனர்.

1989-90இல் இத்திட்டத்திற்கு ரூ. 793.46 இலட்சம்
ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 11. முறைசாரா எரிபொருள் திட்டம்.

### (அ) தேசிய சாண எரிவாயுத் திட்டம்.

இத்திட்டம் மத்திய அரசின் உதவியுடன் முழு அளவு மானியத்
தில் மேற்கொள்ளப்படும் திட்டம் ஆகும். இத்திட்டம் 1981-82
முதல் தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சித் துறையால் செயல்படுத்
தப்பட்டு வருகின்றது. 1981-82 முதல் 1987-88 முடிய 76,014
எரிவாயுக் கலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1988-89-ஆம் ஆண்
டில் மைய அரசால் 14,000 கலன்கள் அமைக்க நம் மாநிலத்திற்கு
இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 1989 மார்ச் திங்கள் முடிய 13,488
கலன்கள் நிறுவி முடிக்கப்பட்டுள்ளன. இதுவரை அமைக்கப்
பட்ட மொத்தம் 13,488 கலன்களில் 889 கலன்கள் தாழ்த்
தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மக்கள் பலன் பெற
அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

மைய அரசு 1987-88-ஆம் ஆண்டுக்கு ரூ. 312.62 இலட்சம்
மானியம் அனுமதித்துள்ளது. 1988-89-ஆம் ஆண்டிற்கு மானிய
மாக ரூ. 364 இலட்சம் அனுமதித்ததில், இதுவரை ரூ. 182
இலட்சம் மட்டும் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மீத
மானியத் தொகையை மத்திய அரசு விரைவில் வழங்கும்.

இத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு 1989-90-ஆம் ஆண்
டிற்கு 16,000 கலன்கள் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்
துள்ளது.

### (ஆ) மேம்படுத்தப்பட்ட அடுப்பு அமைக்கும் தேசிய திட்டம் :

நடப்புக் காலத்தில் எரிபொருளும் விறகும் கிடைப்பது கடின
மாக இருப்பதாலும், பரந்த அளவில் காடுகள் அழிக்கப்படு
வதின் காரணமாகவும் இந்திய அரசு மேம்படுத்தப்பட்ட
அடுப்பு அமைக்கும் தேசிய திட்டத்தை 1983-84ஆம் ஆண்டு
கொண்டு வந்தது. இத் திட்டத்தின் கீழ் 25 சதவீத எரிசக்தியை
சேமிக்கும் வகையில், பலவகையான மேம்படுத்தப்பட்ட அடுப்பு
(நிலையான மற்றும் கையடக்க வகைகள்) உருவாக்கப்பட்டு
அவற்றை உபயோகிக்க இந்திய அரசு சான்றிதழ்களை வழங்கி
யுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழகம்
முன்னணியில் இருக்கிறது. நாட்டிலேயே அதிக அளவில் இவ்
வடுப்புகளை நிறுவி, 1985-86, 1986-87-ஆம் ஆண்டுகளில்
தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது. 1987-88ஆம் ஆண்டு
1 05,000 என்ற இலக்கையும் தாண்டி 1,55,482 அடுப்புகளை
நிறுவியுள்ளது. 1988-89ஆம் ஆண்டு 80,000 என்ற இலக்கை
யும் தாண்டி 31—3— 1989 முடிய 1,18,043 அடுப்புகளை நிறுவி
யுள்ளது. அடுப்புகள் நிறுவுவதில் சுயதேவையை நிறைவு செய்

நோக்கத்துடன், கிராம கைவினைஞர்களுக்கு அடுப்பு அமைப் பது சம்பந்தமாகப் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டு இந்த ஆண்டில் 384 ஊராட்சி ஒன்றியங்கள் 5 தொண்டு நிறுவனங்களி லிருந்து தெரிவு செய்யப்பட்டு 400 கைவினைஞர்களுக்கு (சுய வேலைவாய்ப்புப் பணியாளர்கள்) ஐந்து ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்ற சுய வேலை வாய்ப்புப் பணியாளர் ஒவ்வொருவருக்கும் தலா 300 அடுப்புகள் அமைப்பது என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அமைத்து வருகிறார்கள். மேற்படி சுய வேலை வாய்ப்புப் பணி யாளர்கள் அடுப்புகள் அமைப்பது மட்டுமின்றி, மாதந்தோறும் அவற்றின் செயல்பாட்டினை கண்காணிக்கவும் வேண்டும். அதற் காக அவர்களுக்கு, ஒரு அடுப்புக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 10 பராமரிப்புத் தொகை வழங்கப்படுகிறது. 1988-89ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 62 இலட்சம் ஆகும். இந்த ஆண்டில் இதுவரை இந்திய அரசு ரூ. 49.91 இலட்சம் ஒதுக்கியுள்ளது. மீதியை இந்திய அரசு விரைவில் ஒதுக்கீடு செய் யும்.

1989-90-ஆம் ஆண்டிற்குத் தமிழகத்தில் 1,00,000 அடுப்பு கள் அமைக்க இந்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

## 12. ஊரக மையத் துப்புரவுத் திட்டம் (CRSP).

மேம்பட்ட சுகாதாரம், மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியமானதாகவும், மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகவும் கருதப்படுகிறது. தமிழ் நாட்டில், மக்களைப் பாதிக்கும் நோய்களில், நீர் வழியாகவும், மலத்தின் மூலமாகவும் பரவக்கூடிய நோய்கள், 80 சதவீத மாகும். இதனைத் தடுப்பதற்குக் குறைந்த செலவிலான மேம் பட்டச் சுகாதாரமே மிகவும் உகந்ததென கருதப்படுகிறது. திறந்த வெளிகளில் மலம் கழிக்கும் பழக்கம் மக்களிடையே பரவலாக உள்ளது. எனினும், அதனால் ஏற்படும் தீமைகளை அவர்கள் சரிவர உணருவதில்லை. இப்பழக்கம், அதிகமான இறப்பு களுக்கும் குறிப்பாக, குழந்தைகளின் இறப்பிற்கும் பெரிதும் கார ணமாகிறது. வயிற்றுப் போக்கு, டைபாய்டு, புழு பாதிப்பு, சீத பேதி ஆகியவை. மலத்தின் மூலம் பரவும் முக்கிய நோய்களாகும். துப்புரவுக் கழிவறைகளைப் பயன்படுத்துவதால் இத்தகைய நோய்களையும் அதன் காரணமான இறப்புகளையும் தவிர்க்க லாம். மலத்தை முறையாக அப்புறப்படுத்துவதின் மூலம். தமிழ் நாட்டில் இதுபோன்ற நோய்களைக் கட்டுப்படுத்துவதுடன், சுகாதார நிலையைப் பெரிதும் மேம்படுத்தவும் செய்யலாம். பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதின் பயனை முறையான சுகாதாரமின்மையால்மக்கள் அடைய வாய்ப்பில்லை என ஆய்வு கள் தெளிவாக்குகின்றன. கிராமங்களில் கழிப்பிட வசதியின்மை சுகாதாரக் கேடுகளை விளைவிக்கிறது. குறிப்பாக. பெண்



களுக்கு மறைவிட வசதி இல்லை. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் ஆகியவை மூலமாக ஏற்படுத்தப்பட்ட கழிப்பிட வசதிகள் போதிய அளவில் இல்லாமையால் மைய அரசு ''ஊரக மையத் துப்புரவுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்திட்டம், ஆதிதிராவிடர், பழங்குடியினர், வறுமைக் கோட்டிற்குக் கீழுள் ளவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிப்பதாக இருப்பினும் கிராமங்கள் அனைத்தையும் இத்திட்டத்தில் எடுத்துக் கொள் வதே இதன் குறிக்கோளாகும். இத்திட்டத்தின் மூலமாக கிரா மத்திலுள்ள அனைத்து வீடுகளிலும் கழிப்பிட வசதி செய்து தரப்படும்.

மொத்தத்தில், இத்திட்டத்தின் நோக்கம், 1991ஆம் ஆண் டிற்குள் ஊரக மக்கள் தொகையில், 25 சதவீதத்தினருக்குப் படிப்படியாகக் கழிப்பிட வசதிகள் செய்து கொடுப்பதாகும். இதற்கான செலவினை மைய அரசும் மாநில அரசும் சமமாக ஏற்கும். 1989-90-ஆம் ஆண்டிற்கு இதற்கென ரூ. 40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் கழிப்பிட மாதிரி வடிவமைப்பு (டைப் டிசைன்) எல்லா வகையிலும் சிறந்த தாகவும், கிராம மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவிலும், அமைப்பதற்கு எளிதானதாகவும், சொற்ப செலவினதாகவும் இருக்கும்.

## 13. கிராம வேலைகள் திட்டம்.

### 1. இணைப்புச் சாலைகள் :

இணைப்புச் சாலைகளை மேம்படுத்தல் போன்ற பணிகளை இத்திட்டத்தின் மூலம் ஊராட்சி ஒன்றியங்கள் நிறைவேற்றுகின் றன. 1986—87ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்திற்கென அடையாள ஒதுக்கீடாக ரூ. 1,000 மட்டும் வரவு - செலவுத் திட் டத்தில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இச்சாலைகளைப் பராம ரிப்பதற்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்வது பற்றி அரசின் தீவிர ஆய்வில் உள்ளது.

### கிராமக் குடிநீர்த் திட்டம் :

கிராமக் குடிநீர்த் திட்ட நிதி ஒதுக்கீடு, கிராமப் புறங்களில் குடிநீர் வழங்குவதற்கும், குடிநீர் வழங்குவதில் போதிய பயனற்று இயங்கும் குடிநீர்த் திட்டங்களுக்கு மின் இணைப்புச் செலவை ஈடு செய்ய மானியம் அளிக்கவும் பயன்படுத்தப்படும். ஆதி திராவிடர், பழங்குடியினர் பகுதிகளுக்கு குழாய் அமைத்தல்,

[1989 ஏப்ரல் 19

ஏனைய குடிதண்ணீர் வசதிகள் செய்துத் தரவும், புதிய குடியிருப் புகளுக்குப் புதிய குடிநீர் ஆதாரங்களை உருவாக்கவும், செயலற் றுள்ள குடிநீர்த் திட்ட வேலைகளைச் சீரமைக்கவும் மேல்நிலை நீர்த்தேக்கத் தானியங்கி விசை இரும்பு தொட்டிகளை மாற்றி புதிய தொட்டிகள் கட்டவும் இந்நிதி பயன்படுத்தப்படுகிறது. இத் திட்டத்தில் ஆதி திராவிடர் பழங்குடியினர் பகுதிகளுக்குக் குடிநீர் வசதி செய்துத்தர முதலிடம் அளிக்கப்படுகிறது.

கிராமக் குடிநீர்த் திட்ட மொத்த நிதி ஒதுக்கீட்டில் 20 சத வீதத் தொகையைத் தனியே ஆதி திராவிடர் பழங்குடியினர் பகுதிகளுக்குச் செலவு செய்யவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

1989—90ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 100.00 இலட்சம் ஆகும்.

கை பம்புகள், விசை பம்புகள் பராமரிப்பு.

கை பம்புகள் பராமரிப்புப் பணி மூன்று அடுக்கு முறையில் ஊரக வளர்ச்சித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கிராமப் பகுதி அளவில் :

நீர் வசதி பெறுவோர் பகுதிகளில் கை பம்புகள் பழுதடைந் தால் அதுபற்றி விபரம் தெரிவிக்க சேவை அடிப்படையில் ஒரு பராமரிப்பாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

வட்டார அளவில் :

பயிற்சி பெற்ற கை பம்பு பொருத்துநர் நியமனம் செய்யப் பட்டுள்ளார்.

கோட்ட அளவில் :

உதவிப் பொறியாளரடங்கிய நடமாடும் குழு இயங்கி வருகிறது.

ஒரு கைபம்பு-மின் விசை பம்பு பழுதடைந்தால் ஏழு நாட்க ளுக்குள் பழுது பார்க்சப்படுகிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, 65,499 ஆழ்துளை கிணறு கை பம்புகளும், 34,942 வடிமுனை குழாய் கை பம்புகளும், 1989 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாளிட்ட ஆய்வறிக்கையின் படி, ஊரக வளர்ச்சி இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரு கின்றன. கை பம்புகள் ஒரு சதவீதத்திற்கு மேல் எப்போதும் பழுதடைந்த நிலையில் இல்லை.



1989 ஏப்ரல் 19]

மின்விசைப் பம்புகள் பராமரிப்பு :

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து விசைபம்பு கள் பராமரிப்புப் பணி 1982—83ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றி யங்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. விசைப் பம்புகள் பராமரிப்புக்கான செலவு வரையளவு 1985-86 ஆம் ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டது. விசை பம்பு பராமரிப்புத் திட்டத் தைச் செயற்படுத்த "குறைந்த பட்சத் தேவைகள் திட்டம், கைபம்பு, விசைப்பம்பு பராமரிப்புத் திட்டம்" ஆகிய இரு இனங் களின் கீழ் அரசு மானியம் வழங்கப்படுகிறது.

நடைமுறையில் உள்ள மின் விசைப்பம்பு பராமரிப்பு விதி களின்படி, குடிநீர் தட்டுப்பாடின்றி கிடைக்கச் செய்வதில் கால தாமதம் ஏற்படுவதாக முறையீடுகள் பெறப்பட்டுள்ளதால் விசை பம்பு பராமரிப்புப் பணியை, ஊராட்சிகளின் முழுப் பொறுப்பில் விட தீர்மானிக்கப்பட்டு, 1989ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 7-ஆம் தேதியிட்ட அரசாணை எண். 224 (ஊ.வ. துறை) பிறப்பிக்கப் பட்டுள்ளது.

1989ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் தேதி ஆய்வு அறிக்கையின்படி, 18,870 மின்விசை பம்புகள் உள்ளன. அவற் றில் 9,568 சென்டிரிப்யூகல் மோட்டார் பம்புகளும், 7,206 ஜெட் பம்புகளும், 2,096 சப்மெர்ஜிபிள் பம்புகளும் அடங்கும்.

விசை பம்புகளின் பழுது 1.9 சதவீதம் ஆகும்.

1988-89ஆம் ஆண்டுக்கு கை பம்பு, விசை பம்புகளைப் பராமரிப்பதற்கு வரவு - செலவு திட்டத்தில் கை பம்பு பராமரிப்பு தலைப்பின் கீழ் ரூ. 75 இலட்சமும், குறைந்த பட்சத் தேவைகள் திட்டத்தின் கீழ் 153.75 இலட்சமும், ஆக மொத்தம் ரூ. 228.75 இலட்சத்தை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

1989-90ஆம் ஆண்டில் மேற்படி திட்டத்திற்கு ரூ. 434.04 இலட்சம் தேவைப்படுகிறது.

சிறுபாசன ஆதாரங்களை மேம்படுத்துதல் :

தற்போதுள்ள சிறுபாசன ஆதாரங்கள் ஐந்து ஆண்டு சுழற்சி முறைப்படி பராமரிக்கப்படுகின்றன. ஐந்து ஆண்டு சுழற்சி முறைப்படியும், குறைவான நிதி ஒதுக்கீடு காரணமாக சிறுபாசன ஆதாரங்களை சரியாக பராமரிக்க இயலவில்லை. சிறுபாசன ஆதாரங்கள் பெரிதும் சீர்குலைந்துள்ளன. எனவே, உடனடி யாக அவற்றை சரி செய்ய கீழ்க்கண்டவாறு கவனம் செலுத்த வேண்டியுள்ளது. :—

1. நீர்க் கசிவு; மண் அரிப்பு ஆகியவற்றைத் தடுக்கக் கரை களை பலப்படுத்தல்.

2. அதிகப்படியாக உள்ள சிறு அணைகளை சீரமைத்து அவற்றைப் பயன்படுத்துதல்.

3. 4 ஹெக்டேர் வரையிலான நிலங்களுக்குப் போதிய நீர் வசதி கிடைக்கும் பொருட்டு, நீர்க்கசிவுகளைத் தடுத்தல், நீர் வரத்து வாய்க்கால்களை பலப்படுத்தல்.

4. பாசன ஏரிகளின் பாசனப் பரப்பை அதிகமாக்குதல்.

5. பாசனக் குளங்களை சீரமைத்து அவற்றைத் தரமுள்ளவையாக ஆக்குதல்.

1989—90ஆம் ஆண்டில் மேற்படி திட்டத்திற்கு அரசு ரூ. 50 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

சமூகக் கல்வி மானியம் :

நமது மாநிலத்தில் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 384 தகவல் மையங்களும், 12,616 சமூகக் கல்வி மையங்களும் இயங்கி வருகின்றன.

அரசு மானிய உதவியாக மேற்படி சமூகக் கல்வி மையம் ஒன்றுக்கு ரூ. 100-ம் தகவல் மையம் ஒன்றுக்கு ரூ. 500-ம் அளிக்கப்படுகிறது. மேற்படி மானிய உதவியில பத்திரிகைகள் வாங்கப்படுகின்றன. 1989—90 ஆம் ஆண்டிறகு வரவு [illegible] திட்டத்தில் ரூ. 17.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்பு மானியம் :

அரசு கால்நடை வளர்ப்பு தொடர்பாக கால்நடை மருத்துவ நிலையம் கட்டுவதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியம் வழங்க உள்ளது. இந்த மானியத்தைப் பெற ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், சம்பந்தப்பட்ட திட்டத்திற்கான உதவித் தொகையைத் திரட்ட முன் வரவேண்டும்.

இந்த மானியங்கள் பணி முடிந்தவுடன் வழங்கப்படும். அதாவது, முதலில் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து செலவிடப்பட்டு, கோட்ட வளர்ச்சி அலுவலர்களால் ஒன்றிய நிதிக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டு ஈடு செய்யப்படும்.

1989-90 ஆம் ஆண்டில் மேற்படி திட்டத்திற்கு அரசு ரூ. 7.25 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.



மீன் வள மானியம் :

மீன் வளர்ச்சி தீவிர திட்டம் தொடர்பாக, ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சிகளும் மேற்கொள்ளுகின்ற பணித் திட்டங்களுக்காக இந்நிதி ஒதுக்கப்படுகிறது.

இந்த மானியத்தைப் பெற ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் சம்பந்தப்பட்ட திட்டத்திற்கான உதவித் தொகையைத் திரட்ட முன்வர வேண்டும். இத்திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட குளங்களில் மீன் வளர்ச்சி தீவிரத் திட்டம் செயல்படுத்தப்படும்.

இந்த மானியங்கள், பணி முடிந்தவுடன் திருப்பிக் கொடுக்கப்படும் அடிப்படையில் வழங்கப்படுகிறது. அதாவது முதலில் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து செலவிடப்பட்டு பின்னர் கோட்ட வளர்ச்சி அலுவலர்களால், ஒன்றிய நிதிக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டு ஈடு செய்யப்படும்.

1989-90-ல் மேற்படி திட்டத்திற்கென அரசு ரூ. 6 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தத் திட்டத்தை மீன் துறைக்கு மாற்றுவதுபற்றி அரசின் ஆய்வில் உள்ளது.

14. பயிற்சித் திட்டங்கள் :

மேம்பாட்டுத் திட்டங்கள் பயன் விளைவிப்பது என்பது, சரியான பயிற்சியையும் செயல்படுத்தும் அலுவலரது செயல் முறையையும் பொருத்தது என்பதைக் கருத்தில் கொண்டு, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பயிற்சிக்கு முதலிடம் அளிக்கப்பட்டது. வளர்ச்சித் துறை பணியாளர்களுடைய பயிற்சித் தேவைகளுக்கேற்ப கீழ்க்காணும் ஆறு பயிற்சி நிலையங்கள் ஊரக வளர்ச்சி இயக்குநர் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன.

1. மாநில ஊரக வளர்ச்சி நிலையம்
(உயர் மட்டப் பயிற்சி நிலையம், சென்னை.)

2. ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையம் (5 இடங்கள்).

(அ) சத்தியவிஜயநகரம், வட ஆற்காடு மாவட்டம்.

(ஆ) தி. கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம்.

(இ) கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டம்.

(ஈ) பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

(உ) பவானிசாகர், பெரியார் மாவட்டம்.

மேற்சொன்ன ஐந்து ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களிலும், தொழிற் பட்டறைப் பிரிவுகள் உள்ளன. அவை கிராமப் பகுதி இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் பயிற்சி அளிப்பதில் தீவிரப் பங்கு வகிக்கின்றன. தி. கல்லுப்பட்டியிலும், சத்தியவிஜய நகரத்திலும் உள்ள ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்களில் வீட்டுப் பராமரிப்பு அறிவியல் பிரிவு உள்ளன. எனவே அவ்விடங்களில் பால சேவிகாக்களுக்கும், தொடர்பு கொண்ட சமூக நலத்துறை ஊழியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. சென்னையிலுள்ள மாநில ஊரக வளர்ச்சிப் பயிற்சி நிலையத்தில் ஊராட்சி ஒன்றியத் தலைவர், துணைத் தலைவர் ஆகிய அலுவலர் அல்லாதவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஐந்து ஊரக விரிவாக்கப் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை.

(31—12—1988 வரை)

| பயிற்சியின் பெயர். | ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையத்தின் பெயர். | | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | | (3) |
| 1. ஒரு பணி விதியின் கீழ் பயிற்சித் திட்டம்— | | | |
| ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையம். | | | |
| (அ) ஒரு மாதப் பயிற்சி. | கிருஷ்ணகிரி .. | .. | 60 |
| | பட்டுக்கோட்டை | .. | 110 |
| | தி. கல்லுப்பட்டி | .. | 110 |
| | பவானிசாகர் | .. | 105 |
| | எஸ். வி. நகரம் | .. | 80 |
| (ஆ) இரு மாதப் பயிற்சி. | கிருஷ்ணகிரி .. | .. | 138 |
| | பட்டுக்கோட்டை | .. | 174 |
| | தி.கல்லுப்பட்டி | .. | 126 |
| | பவானிசாகர் | .. | 181 |
| | எஸ். வி. நகரம் | .. | 96 |



| | | | |
|---|---|---|---|
| 2. சூளை தேசியத் திட்டம் மூலம் அளிக்கப்படும் பயிற்சி— | | | |
| கட்டுமானப் பராமரிப்புப் பயிற்சி. | கிருஷ்ணகிரி .. | .. | 75 |
| | பட்டுக்கோட்டை | .. | 98 |
| | தி.கல்லுப்பட்டி | .. | 93 |
| 3. சுய வேலைவாய்ப்புத் திட்டப் பயிற்சி .. | | .. | 5,291 |
| | | | நபர்கள். |

மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம்—பயிற்சி பெற்றவர்கள்.

| பயிற்சியின் பெயர். | மொத்த அணிகள். | பயிற்றுவிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கான பணிப் பயிற்சி. | 5 | 101 |
| 2. வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கான புத்துணர் பயிற்சி. | 5 | 57 |
| 3. கோட்ட வளர்ச்சி அலுவலர்களுக்கான ஒருமுகப் பயிற்சி. | 1 | 21 |
| 4. வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கான பயிற்சி. | 3 | 114 |
| 5. பயிற்றுநர்கள் பயிற்சி .. .. | 1 | 50 |

செங்கை-அண்ணா மாவட்டம், பெருமனூர் கிராமத்தில் (தெற்கு நெடுஞ்சாலைக்கு அருகில்) நில அளவை எண். 43-ஏ 1-ல் 84.26 ஏக்கர் நிலப்பரப்பில், மாநிலப் பயிற்சி நிறுவனத்திற்காக பெரியதொரு வளாகம் கட்டுவதென அரசு முடிவெடுத்துள்ளது. இந்நிறுவனத்தின் கட்டிடத்திற்கும் விடுதிக்குமான கட்டுமானச் செலவு, ரூ. 1.38 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. ஐரோப்பியப் பொருளாதார அமைப்பின் கீழ், மத்திய அரசு இத்திட்டத்திற்கு ரூ. 20 லட்சம் தொடராச் செலவிற்காக நிதி உதவி அளித்துள்ளது. இவ்வேலையை உடனே தொடங்கி, முதற் கட்டமாக ஐரோப்பிய பொருளாதார அமைப்பு, சுயவேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ. 44.20

இலட்சத்தில் அலுவலகக் கட்டிடத்தை மட்டும் கட்டி முடிக்கும்படியும், எஞ்சிய வேலைகளை, தேவையான நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றபின் மேற்கொள்ளும்படியும், பொதுப் பணித்துறைத் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

## II. பேரூராட்சிகளின் நிர்வாகம்.

தமிழ்நாட்டில் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கான சுமார் ஒரு கோடி மக்கள் 645 பேரூராட்சிகளில் வாழ்கிறார்கள். பேரூராட்சிகள் இரண்டாம் நிலை, முதல் நிலை, தேர்வு நிலை, மற்றும் சிறப்பு நிலை என்று நான்கு நிலைகளைக் கொண்டுள்ளன.

### 1. பேரூராட்சிகளின் கடமைகள் :

பேரூராட்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பு, பேரூராட்சிகளுடையது. அவற்றிடம் கடப்பாட்டு விருப்ப உரிமைப் பணிகள் (Obligatory and discretionery) ஒப்படைக்கப்பட்டுள்ளன. சாலைகள் பராமரிப்பு, குடிநீர் வழங்குதல், தெரு விளக்குகள் அமைத்தல், தெருக்களைத் தூய்மைப் படுத்தல் ஆகியவை பேரூராட்சிகளின் கடப்பாட்டுப் பணிகளில் சிலவாகும்.

### 2. பேரூராட்சிகளின் நிதி ஆதாரங்கள் :

கீழ்க்கண்டவை பேரூராட்சிகளின் முக்கிய நிதி ஆதாரங்களாகும் :—

1. வீட்டு வரி.
2. தொழில் வரி.
3. வண்டி வரி.

இவை தவிர, முத்திரை வரி மீதான மேல் வரி, கேளிக்கை வரி, அபாயகரமான ஆபத்து விளைவிக்கக்கூடிய தொழில் உரிமங்கள், பயன் தரத்தக்க தொழில்கள் ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் வருவாய் முதலியவை பேரூராட்சிகளின் இதர வருவாய்களாகும்.

பேரூராட்சிகளின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்குரிய வழிவகைகளைக் கண்டறிய தமிழ்நாடு அரசு ஓர் உயர்நிலைக் குழுவை அமைத்தது. அக் குழு, பேரூராட்சிகள் குறித்த தன்து பரிந்துரைகளை முடிவு செய்தது. அவை அரசுக்கு அனுப்பபட்டுள்ளது.



### 3. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் :

தமிழகத்தில் உள்ள 645 பேரூராட்சிகளில் 236 பேரூராட்சிகளில் கூட்டுக் குடிநீர் திட்டம் நடைமுறைப் படுத்தப் பட்டுள்ளது. மேலும், 96 பேரூராட்சிகளின் கூட்டுக் குடிநீர் திட்டத்தைச் செயற்படுத்தத் தேர்வு செய்யப்பட்டு, வேலைகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. எஞ்சியுள்ள 313 பேரூராட்சிகளில் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் நிதியுதவியுடனும் அரசின் நிதி உதவியுடனும் கூட்டுக் குடிநீர் திட்டத்தைச் செயற்படுத்த முடிவு செய்யப் பட்டுள்ளது.

இதுதவிர, 72 பேரூராட்சிகளில் உலக வங்கி நிதியுதவியுடன் ரூ. 42.84 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல் திட்டத்தைச் செயற்படுத்த உலக வங்கியும் நிதியுதவி அளிக்கிறது. ஐரோப்பிய பொருளாதாரக் குழு வளர்ந்து வரும் நகர்ப் பகுதிகளில் குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்த நிதியுதவி அளித்து வருகிறது. இப்பணிகள் தற்பொழுது முன்னேற்ற நிலையில் உள்ளன.

புதிதாக மேம்படுத்தப்பட்ட பகுதிகளில் மக்களின் உடனடித் தேவைகளை நிறைவு செய்யக் கை பம்புகளைப் பேரூராட்சிகள் பராமரித்து வருகின்றன. கை பம்புகள், விசை பம்புகள் ஆகியவற்றுடன் கூடிய குடிநீர் வழங்கல் திட்டத்தைப் பராமரிக்க 1988-89 ஆம் ஆண்டு குறைந்த பட்சத் தேவைகள் திட்டத்தின் கீழ் ரூ. 51.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

நலிந்த நிதிநிலை கொண்ட பேரூராட்சிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தைச் செவ்வனே செயல்படுத்தும் பொருட்டு, குழாய்களை மாற்றவும் பழுதுபார்க்கவும் 1988-89'ல் ரூ. 20.00 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

### 4. துப்புரவு :

முறையான துப்புரவு இன்மையும் கழிவுநீர், வடிகால் நீர் அகற்றப்படாததும்தான் பேரூராட்சிகளின் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகும். , பேரூராட்சிகளில் உள்ள மொத்தம் 8,946 கி.மீ. நீளமுள்ள சாலைகளில் 4,486 கி.மீ. நீளத்திற்கு மட்டும் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. 1988-89 ஆம் ஆண்டில், பேரூராட்சிப் பகுதிகளில் வடிகால்கள் அமைப்பது முக்கியமாக வலியுறுத்தப் பட்டுள்ளது. இதற்கென தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்ட நிதி பயன்படுத்தப்படுகிறது. இவற்றால் இப்பிரச்சினையின் ஒரு பகுதியை மட்டுமே தீர்க்க முடிந்தது. அதிக எண்ணிக்கையில் வடிகால்கள் கட்ட வேண்டியுள்ளது.

பேரூராட்சிகளின் எல்லைக்குள் ஏறக்குறைய 1,10,386 உலர் கழிப்பிடங்கள் உள்ளன. இந்த உலர் கழிப்பிட மலம் 879 துப்புரவுப் பணியாளர்கள் மூலம் அகற்றப்படுகிறது. தலைச் சுமையாக மலத்தை அகற்றுதல் இன்னமும் நடைபெற்று வருகின்றது. இத்தகைய, விரும்பத்தகாத அருவருப்பான தொழிலை அடியோடு அழிக்க, மைய அரசும், மாநில அரசும் உலர் கழிப்பிடங்களை நீரடிக் கழிப்பிடங்களாக மாற்ற பேரூராட்சிகளுக்கு உதவி அளிக்கின்றன.

துப்புரவுக்காகப் பல்வேறு ஆதாரங்களிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ள நிதி விவரம் வருமாறு :—

1. மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உதவி (மத்திய அரசுத் திட்டம்).

2. மாநில அரசு மானியம், கடன், உதவித் தொகை (40 : 40 : 20).

3. மாநில அரசு— யூனிசெப் நிறுவன உதவியுடன் (40 : 40 : 20).

4. சிறிய, நடுத்தர நகரங்களில் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் (கடன்).

மேற்கண்ட நான்கு திட்டங்களினால் ஏறக்குறைய 23,000 கழிப்பிடங்களை அமைக்க இயலும். 1989-90 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை மேலும் ஆறு நகரங்களுக்கு விரிவுபடுத்த நிதி உதவி கோரி மத்திய அரசை அணுகப்பட்டுள்ளது. மேலும், வீட்டு வசதி நகர்ப்பகுதி வளர்ச்சி வாரிய (அட்கோ) கடன் உதவியுடன் பேரூராட்சிகளில் தனியார் வீடுகளில் கழிப்பிடங்கள் அமைக்க நிதியுதவி கோரும் ஒரு கருத்து ஆய்வில் உள்ளது.

தனிக் கழிப்பிடங்கள் அமைக்கப்பட போதுமான இடவசதி முதலியவை இல்லாத பகுதிகள் உள்ள பேரூராட்சியில் சுமார் ரூ. 30,000 செலவில் சமுதாயக் கழிப்பிடங்களை அமைக்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. 1988-89 ஆம் ஆண்டில் 25 சமுதாயக் கழிப்பிடங்களை அமைக்க இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

பெருமளவு எண்ணிக்கையில் பொதுமக்கள் கூடுமிடங்களில், கழிப்பிடம் ஒன்றுக்கு ரூ. 1.00 இலட்சம் என்ற செலவுக் கணக்கில் கட்டணக் கழிப்பிடங்களும் கட்டப்படுகின்றன. இது, பொதுமக்கள் நலமுள்ள சூழலில் வாழ உதவியாக உள்ளது. 1988-89 ஆம் ஆண்டில் 20 பேரூராட்சிகளில் கட்டணக் கழிப்பிடங்களை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த சிறு, நடுத்தர நகர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தனியார் கழிப்பிடங்கள், சமுதாயக் கழிப்பிடங்கள் அமைக்கப்பட ரூ. 55.97 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1988-89 ஆம்



ஆண்டில் இராமேஸ்வரம், அரியலூர், ஆண்டிப்பட்டி ஆகிய இடங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இப்பகுதிகளில் 4,857 தனியார் கழிப்பிடங்களும், 16 சமுதாயக் கழிப்பிடங்களும் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

5. கழிவுப் பொருட்களை அகற்றுதல் :

கழிவுப் பொருட்களை அகற்றுதல் பேரூராட்சிகளின் மற்றுமொரு முக்கியப் பிரச்சினையாகும். பேரூராட்சிகளில் கழிவுப் பொருட்களை பழைய வழக்கப்படி இன்னமும் மாட்டு வண்டிகளின் மூலம் அகற்றி வருகிறார்கள். இந்தப் பழைய முறையை ஒழித்து கழிவுப் பொருள்களையும், கழிவு நீரையும் அகற்ற பேரூராட்சிகளுக்கு தானியங்கி உழுவையுடன் கூடிய கொள்கலன் இணைப்பு வண்டிகளுக்கு (Power Tiller with Tanker and Trailor) அரசு அனுமதி வழங்கியுள்ளது. திருக்கோயிலூர், கழிஞ்சூர், பருகூர், பல்லடம், கரம்பைக்குடி, தாமரைக்குளம், இலஞ்சி, காயல்பட்டணம் ஆகிய எட்டு பேரூராட்சிகளுக்கு, 1988-89 ஆம் ஆண்டில் தானியங்கி உழுவை வாங்கிக் கொள்ள ரூ. 6.00 இலட்சம் (75 சதவீத நிதியுதவியும் 25 சதவீதக் கடனும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் தயாரிக்கப்படும் எரு, பொது ஏலத்தில் விற்கப்படும். அதன் வாயிலாகப் பேரூராட்சிகளுக்கு அதிக வருவாய் கிட்டும்.

6. சாலைகளை பராமரித்தல், நிலையை உயர்த்துதல் :

பேரூராட்சிகளில் கீழ்க்கண்ட வகைகளில் சாலைகள் உள்ளன:

| | கி.மீ. |
|---|---|
| 1. மண் சாலைகள் .. .. .. | 1,448 |
| 2. சரளைக் கல் சாலைகள் .. .. | 1,483 |
| 3. கப்பிச் சாலைகள் .. .. | 4,342 |
| 4. தார் சாலைகள் .. .. .. | 1,128 |
| 5. சிமிட்டிச் சாலைகள் .. .. .. | 234 |

பேரூராட்சிகளில் போதிய நிதி வசதியில்லாமையால் சாலைகளைப் பராமரிப்பது மிகவும் கடினமாக உள்ளது. சாலைகளை மேம்படுத்தவும், நல்ல தரத்தில் வைக்கவும், இயலாத நிலை உள்ளது. நல்ல சாலை வசதிகளை அளிப்பதற்குத் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திலிருந்தும் நிதி உதவி பெறப்படுகின்றது.

இதுமட்டுமன்றி, 1988-89 ஆம் ஆண்டில் நிதி வசதியற்ற பேரூராட்சிகளில் உள்ள சாலைகளின் தரத்தை உயர்த்த, அரசு ரூ. 25.00 இலட்சம் ஒப்பளிப்புச் செய்துள்ளது.

7. கோயில் நகரங்கள் மேம்பாடு :

அரசு இத்திட்டத்தைச் செயற்படுத்த 7 பேரூராட்சிகளுக்கு 1988-89-ல் ரூ. 5.00 இலட்சம் நிதி உதவி வழங்கியுள்ளது.

திருக்கோயில்களுக்கு வரும் பயணிகளும், இப் பேரூராட்சிப் பகுதி மக்களும் பயன்பெறும் வண்ணம், சாலைகள், தங்குமிடம், வணிக வளாகங்கள் முதலிய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

8. பயன் தரத்தக்க முயற்சிகள் :

பேரூராட்சிகளின் வருவாயை உயர்த்தி, அவற்றின் சொந்த வருவாயைக் கொண்டு அவற்றின் கடமைகளைச் செய்ய அரசு "ஒருங்கிணைந்த நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தை" பேரூராட்சிகளில் செயல்படுத்தியுள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 35 பேரூராட்சிகளில் ரூ. 219.81 இலட்சம் செலவில் 50 வேலைகள் செய்யப்பட்டன. பேருந்து நிலையம், வணிக வளாகங்கள், அங்காடிகள், வங்கிக் கட்டிடங்கள் முதலிய பயன் தரத்தக்க கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஐந்து ஆண்டுக் காலக் கடன் தவணையுரிமையுடன் 25 ஆண்டுக் கால அளவுக்குள், நகர் - ஊரமைப்பு வாரியத்திற்குத் திருப்பிச் செலுத்தப்படும் வகையில் இதற்கான செலவுத் தொகை, நகர் - ஊரமைப்பு இயக்குநரால் பேரூராட்சிகளுக்குக் கடனாக வழங்கப்படுகிறது. ஆண்டுத் தவணையைப் பேரூராட்சிகள் திருப்பிச் செலுத்திய பின்னர் அதிகமான வருவாயைப் பெற பேரூராட்சிகளுக்கு இயலும். சில ஆண்டுகள் கழிந்தபின் நல்ல வருவாயை ஈட்டுவதுடன் அவை நிலையான சொத்துக்களாகவும் உருவாகும். ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 983.91 இலட்சம் மதிப்பீட்டில் வேலைகள் மேற்கொள்ள நகர் - ஊரமைப்பு வாரியத்தினரால் 70 பேரூராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

1988-89 ஆம் ஆண்டில் மத்திய அரசு, ஆண்டிப்பட்டி, அரியலூர், இராமேஸ்வரம் ஆகிய மூன்று நகரங்களில் ஒருங்கிணைந்த சிறு, நடுத்தர நகர் மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் அனுமதிக்கப்பட்ட ரூ. 300.00 இலட்சத்தில் பயன் தரத்தக்க முயற்சிகளுக்காக ரூ. 244.03 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



9. ஒருங்கிணைந்த சுற்றுலா மையங்கள் மேம்பாட்டுத் திட்டம்.

இராமேஸ்வரம், கன்னியாகுமரி, மாமல்லபுரம் போன்ற சுற்றுலா மையங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பேருந்து நிலையங்கள் வணிக வளாகங்கள் கட்ட அரசு ரூ. 58 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்திட்டத்திற்கான செலவுத் தொகையில் 50 சதவீதம் நிதியுதவியும், 50 சதவீதம் கடனும் ஆகும். இவ் வேலைகள் முடியும் தருவாயில் உள்ளன.

10. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் :

தற்போது இத் திட்டம் ஊரகப் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. ஊர்ப் பகுதிகளில் போதிய வேலை வாய்ப்பு இல்லாத, வேலை வாய்ப்பு அறவே இல்லாத ஆண்களுக்கும், பெண்களுக்கும் பயன் தரத்தக்க வேலை வாய்ப்பை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1988-89ஆம் ஆண்டில், 259 பேரூராட்சிகளில் ரூ. 581.190 இலட்சம் செலவில் 3,795 நிலையான சமுதாய உடைமைகளை உருவாக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1989-90ஆம் ஆண்டில் சாலைகளை மேம்படுத்துதல், சிறிய பாலங்கள் அமைத்தல், போதிய குடிநீர் வழங்க வசதி செய்தல், வணிக வளாகங்கள் கட்டுதல் தேவையான இடங்களில் வடிகால் வசதி செய்தல், பேரூராட்சி அலுவலகங்கள் கட்டுதல் போன்ற பணிகளைத் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித்திட்ட நிதியிலிருந்து தொகுப்பு வீடுகள் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 'யூனிசெப்' உதவியுடன், பெரியார் மாவட்டத்தில் தீவிர துப்புரவுத் திட்டத்தின் கீழ் 35,000 தனிக் கழிப்பிடங்கள் கட்டப்படவுள்ளன.

வீரபாண்டி ஆறுமுகம்,

ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சி நிர்வாகத் துறை
அமைச்சர்.

## இணைப்பு - II.

[பக்கம் 74-இல் உள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

### நகராட்சி நிர்வாகம்.

தமிழ்நாட்டில் 98 நகராட்சிகளும், 8 நகராட்சி நகரியங்களும் உள்ளன. அந்நகராட்சிகளும், நகரியங்களும் ஆண்டு வருமானத் திற்கேற்ப ஐந்து நிலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அரசு ஆணை எண். 1078, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 15—12—1988-ல் நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் ஆகியவற்றை வகைப்படுத்துவதற்கான குறியீடுகள் கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளன :—

| வரிசை எண் மற்றும் நகராட்சியின் நிலை. | வரையறை (ஆண்டு வருமானம் ரூபாய் இலட்தில்). | நகராட்சிகளின் எண்ணிக்கை. | நகரியங்களின் எண்ணிக்கை. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. சிறப்பு நிலை .. | 200 | 14 | .. | 14 |
| 2. தேர்வு நிலை .. | 100 | 12 | 5 | 17 |
| 3. முதல் நிலை .. | 40 | 29 | 1 | 30 |
| 4. இரண்டாம் நிலை | 20 | 30 | 2 | 32 |
| 5. மூன்றாம் நிலை | 10 | 13 | .. | 13 |
| மொத்தம் .. | | 98 | 8 | 106 |

### 2. நகர் மன்றங்களின் பதவிக்கால அளவு :

1985ஆம் ஆண்டு மே மாதத்திற்கு முன்னர் நகர் மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகளாக இருந்தது. 1985ஆம் ஆண்டு மே மாதம் இந்த ஐந்து ஆண்டு பதவிக் காலம் நான்கு ஆண்டுகளாக குறைக்கப்பட்டது. மீண்டும் 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நான்கு ஆண்டுகளிலிருந்து மூன்று ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டு, நகராட்சித் தேர்தல்கள் 1986 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற்றது. நகர் மன்றங்களின் மூன்று ஆண்டு பதவிக் காலம் 3—3—1989-ல் முடிவடையவிருந்தது.



1989ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மூன்று ஆண்டு பதவிக்
காலத்தை முதலில் இருந்தது போல் ஐந்து ஆண்டுகளாக உயர்த்
தப்பட்டது. இதனால் தற்போதுள்ள நகர்மன்றத் தலைவர்
மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் 3—3—1991 வரை
நீடிக்கும்.

### 3. நகர்மன்றங்களுக்கும், நகர்மன்றத் தலைவர்களுக்கும் அதிகாரங்கள் :

சட்டப்பூர்வமான வரி மேல்முறையீட்டுக் குழுவில் தேர்ந்
தெடுக்கப்பட்ட நகர்மன்றத் தலைவர்களும், நகர்மன்ற உறுப்
பினர்களும் மட்டுமே அங்கம் வகிக்க வேண்டும் என்ற கோரிக்கை
யினை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்
கேற்ப, சட்டத்திருத்தம் செய்யப்படும். பொதுவாக அரசானது,
நகர்மன்றங்களின் தனித்தன்மை, கவுரவம் மற்றும் உரிமைகளை
மீண்டும் அளிக்க வேண்டும் என விரும்புகிறது. கடந்த இருப
தாண்டு காலமாக நகர்ப்புற மக்கட்தொகை மற்றும் நகரங்களின்
எண்ணிக்கை மாநிலத்தில் இயல்பாகவே கூடியுள்ளன. 1961ஆம்
ஆண்டு 64ஆக இருந்த நகராட்சிகள் மற்றும் நகரியங்களின் எண்
ணிக்கை தற்போது 106 ஆக உயர்ந்துள்ளது. 1961 ஆம் ஆண்டு
45,11,165 ஆக இருந்த நகர்ப்புற மக்கட் தொகை 1981ஆம்
ஆண்டு 74,36,961-ஆக அதிகரித்துள்ளது. (கிட்டத்தட்ட 65
சதவீதம் உயர்ந்துள்ளது).

### 4. நகராட்சித் திட்டங்கள் :

மக்கட் தொகை பெருக்கத்திற்கேற்ப வருவாய் அதிகரிக்காத
தாலும் செலவினங்கள் கூடுதலினாலும், மாநிலத்தில் உள்ள
அநேக நகராட்சிகள் பொது மக்களுக்குத் தேவையான அடிப்படை
வசதிகளை செய்து தருவதற்கு நிதிவசதியின்றி உள்ளன.
அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்கும் வருமானத்தைப்
பெருக்குவதற்கும் அவ்வப்போது அரசு நகராட்சிகளுக்கு நிதியுதவி
அளித்து வருகிறது.

தன்னிறைவுத் திட்டம், விரைவுபடுத்தப்பட்ட குடிசைப்
பகுதி மேம்பாட்டுத் திட்டம், சாலைகள் மற்றும் பாலங்கள்
அமைக்கும் திட்டம் முதலான 22 திட்டங்களின் கீழ் ஏழாவது
ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நகராட்சிகளுக்கு 1,978.01
இலட்ச ரூபாய் நிதியுதவி வழங்கப் பட்டுள்ளது. (இதில் 1989
90-ம் ஆண்டிற்கான ஒதுக்கீடும் அடங்கியுள்ளது.)

1988ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நகராட்சிகளின் அடிப்
படை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு கீழ்க்கண்ட திட்டங்
களுக்காக ரூ. 200 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

[1989 ஏப்ரல் 19

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. | பொதுச் சுகாதார லாரிகள் வாங்குதல் .. | 125 |
| 2. | மழை நீர் வடிகால் அமைத்தல் .. .. | 25 |
| 3. | கட்டணக் கழிப்பிடங்கள் அமைத்தல் .. | 25 |
| 4. | தார்ச் சாலைகள் அமைத்தல் .. .. | 25 |

5. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் :

உலக வங்கி உதவியுடன் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அடிப்படை வசதிகள் மற்றும் உள் அமைப்பு அபிவிருத்தி செய்ய நிதி உதவி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இது, தொடர்பாக உலக வங்கி குழுவுடன் அக்டோபர் 1987-ல் விவாதிக்கப்பட்டது. பேரூந்து நிலையம் கட்டுதல், சாலைகள் அமைத்தல், குடிசைகளை மேம்படுத்துதல் போன்ற பல திட்டங்களும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

6. நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதி :

உள்ளாட்சி நிறுவனங்கள் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள வருவாய் தரக்கூடிய திட்டங்கள் மற்றும் அத்யாவசியமானத் திட்டங்களை செயல்படுத்த நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதி என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து வருகின்ற 4-5 வருட காலத்தில் 167.2 கோடி அளவிற்கு மாநகராட்சிகளுக்கு— நகராட்சிகளுக்கு நிதியுதவி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1988-89ஆம் ஆண்டில் 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுவன்றி உலக வங்கியிடமிருந்து கிடைக்கப்பெறும் ரூ. 6.00 கோடியுடன் சேர்த்து, இந்த 16 கோடி ரூபாய் சுழல் நிதியாக வைக்கப்பெற்று, முதல் கட்டமாக இந்நிதியிலிருந்து உதவித் தொகை கீழ்க்கண்ட மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் கிடைக்கும் :—

மாநகராட்சிகள் :

1. சென்னை.
2. மதுரை.
3. கோயம்புத்தூர்.



1989 ஏப்ரல் 19]

நகராட்சிகள் :—

1. சேலம்.
2. திருச்சிராப்பள்ளி.
3. வேலூர்.
4. ஈரோடு.
5. திருப்பூர்.
6. திருநெல்வேலி.
7. தூத்துக்குடி.
8. சூரமங்கலம்.
9. ஸ்ரீரங்கம்.
10. பொன்மலை.
11. பாளையங்கோட்டை.
12. மேலப்பாளையம்.
13. தேனி— அல்லி நகரம்.
14. இராஜபாளையம்.
15. விருதுநகர்.
16. சிவகாசி.
17. அம்பத்தூர் நகரியம்.
18. ஆவடி நகரியம்.
19. ஆலந்தூர்.
20. கத்திவாக்கம் நகரியம்.
21. பல்லவபுரம்.
22. மாதவரம் நகரியம்.
23. திருவொற்றியூர்.
24. தாம்பரம்.
25. தென்காசி.
26. குற்றாலம் நகரியம்.
27. செங்கோட்டை.
28. கடையநல்லூர்.
29. புளியங்குடி.
30. சங்கரன்கோயில்.

இந்த நிதி நகராட்சி நிர்வாக இயக்குநரால் நிர்வகிக்கப்படும். திட்டமேலாண்மைக் குழுவிற்கு இந்நிதியின் கணக்கு சம்பந்தப்பட்ட விவரங்களைக் கொடுப்பதுடன், இத்திட்ட செயல்பாட்டுக்குத் தேவையான முன்னேற்பாடு நடவடிக்கைகளையும் அவர் மேற்கொள்வார். இத்திட்டங்களை பரிசீலித்து ஒப்புதல் வழங்க ஓர் திட்ட மேலாண்மைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன் உறுப்பினர்கள் பின்வருமாறு :—

1. செயலர்,
   வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை,
   சென்னை-9— தலைவர்.

2. உறுப்பினர்— செயலர்,
   சென்னை பெருநகர் மேம்பாட்டுக் குழு—செயலர்.

[1989 ஏப்ரல் 19

3. செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை, சென்னை-9— உறுப்பினர்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5— உறுப்பினர்.

5. தலைமை நகர அமைப்பாளர்— உறுப்பினர்.

6. முதுநிலை நிதி பகுத்து ஆய்வுநர்— உறுப்பினர்.

7. கண்காணிப்பு பொறியாளர் (நெடுஞ்சாலை)— உறுப்பினர்.

8. இணை ஊரமைப்பு இயக்குநர் (நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகம்)— உறுப்பினர்.

9. கண்காணிப்பு பொறியாளர் (தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்)— உறுப்பினர்.

இத்திட்டங்களை நகராட்சி-மாநகராட்சிகள் நேரடியாகவோ அல்லது அரசுச் சார்பான நிர்வாகங்களாகிய தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், பொதுப் பணித்துறை ஆகியவற்றின் வாயிலாகவோ செயல்படுத்தும். மேற்படி திட்டங்களைத் தயாரிப்பதில் சம்பந்தப்பட்ட நகராட்சிகளுக்கு உதவும் பொருட்டு கலந்தறிவதற்குரியர் (Consultants) நியமிக்கப்பட்டுள்ளனர்.

7. குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டம் :

(i) பொதுக் கழிப்பிடங்களை பராமரிக்கும் பணி நகராட்சிகளின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும். நகராட்சிகளிடம் போதிய நிதி வசதி இல்லாததாலும், பாதாள சாக்கடை திட்டத்தை நிறைவேற்றுவது அதிக காலமும், செலவும் ஆகக் கூடிய திட்டமாக இருப்பதாலும் நகராட்சிகள் அனைத்திலும் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்தை செயலாக்குவது எளிதல்ல. எனவே, நடுத்தர மற்றும் குறைந்த வருமானமுள்ள மக்களின் நலனுக்காக குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டம் என்கிற புதிய திட்டம் ஒன்று இம்மாநிலத்திலுள்ள நகர்ப்புற பகுதி அனைத்திலும் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் உலர் கழிப்பிடங்கள் கொட்டு நீர் கழிப்பிடங்களாக மாற்றப்படுகின்றன. துப்புரவுப் பணியாளர்கள், மலத்தை அகற்றி அவற்றைத் தலைச் சுமையாக எடுத்துச் செல்லும் அருவருக்கத்தக்க பணியை செய்வதிலிருந்து விடுவிப்பதும், நகர்ப் பகுதியை துப்புரவு கேடுகளிலிருந்து நீக்கி துப்புரவான சுற்றுப்புற சூழ்நிலையை ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.



1989 ஏப்ரல் 19]

(ii) குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றும் வகையில் மைய அரசு உதவியுடன் நகரசுத்தி தொழிலாளர்களின்றி பராமரிக்கப்படும் கழிப்பிடங்கள் அமைக்கும் திட்டம் உடுமலைப்பேட்டை நகராட்சியில் ரூ. 54.77 இலட்சம் செலவில் செயற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான செலவினை மைய அரசும் மாநில அரசும் சமமாக ஏற்றுக் கொண்டுள்ளன. இத்திட்டத்தினால் 45 நகர சுத்தி தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டு, மாற்றுப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

(iii) இத்திட்டத்தை மேலும் அம்பத்தூர் நகரியம், விழுப்புரம் மற்றும் நாகர்கோவில் நகராட்சி ஆகியவற்றில் ரூ. 111.28 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்ட செலவில் 50 சதவீதத்தை மைய அரசு மானியமாக வழங்கும். மீதி 50 சதவீதத்தை அந்தந்த நகராட்சிகள், தங்களது சொந்த நிதியிலிருந்து செலவு செய்யும். இத்திட்டத்திற்காக மைய அரசு முதல் தவணையாக ரூ. 27.81 இலட்சம் மானியம் அளித்துள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பு ' சுலாப் இண்டர்நேஷனல் ' என்கிற சமூக அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்குரிய பணி நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் உலக வங்கி நிதி உதவியுடன் ரூ. 709.55 இலட்சம் செலவில் 14 நகராட்சிகளின் குறைந்த செலவிலான கழிப்பறை கட்டும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக அரசு இது வரை வழங்கிய நிதியுதவிக்கான விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | மானியத் தொகை. | கடன் தொகை. |
| --- | --- | --- |
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1987-88 .. .. .. | 110.90 | 167.76 |
| 1988-89 .. .. .. | 107.95 | 183.77 |
| மொத்தம் .. | 218.85 | 351.53 |

சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குறைந்த செலவிலான கழிப்பறை கட்டும் திட்டம் ஆறு நகராட்சிகளில் ரூ. 150 இலட்சத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## 8. அகவிலைப்படி உதவித் தொகை வழங்குதல் ;

நகராட்சி நிதி ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டு அரசு ஊழியர்களுக்கு அவ்வப்போது அளிக்கும் அகவிலைப்படி உயர்வினை நகராட்சி ஊழியர்களுக்கும் அளிக்கும் வகையில் நகராட்சிகளுக்கு நிதி உதவி அளிக்க முடிவு செய்துள்ளது. அகவிலைப்படி உதவி முன்பணத் தொகையாக நகராட்சிகளுக்கு 1986 ஆம் ஆண்டு ரூ. 250 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தல நிதிக் கணக்கு ஆய்வாளர் அவர்களின் தணிக்கை சான்றிதழின் பேரில் மேற்கொண்டு உதவித் தொகை வழங்குவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

### சென்னை மாநகராட்சி.

சென்னை மாநகராட்சி 1688ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29ஆம் நாளில் நிறுவப்பட்டது. சுமார் 174 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள இந்நகரில் சுமார் 45 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர்.

### 1. நிருவாகம் :

1973-ஆம் ஆண்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மன்றத்தின் பதவிக் காலம் முடிவுற்றது. அது முதல் மாநகராட்சி மன்றம் மற்றும் நிலைக் குழுக்களது பணியினை சிறப்பு அலுவலர் நிறைவேற்றி வருகிறார். ஆணையாளர் மாநகராட்சியின் தலைமை நிருவாக அலுவலராக பணியாற்றிவருகிறார். நிருவாக வசதிக்காக சென்னை மாநகரம் 150 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி நிருவாகத்தை பரவலாக்கும் வகையில் 10 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டத்திலும் 15 கோட்டங்கள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு வட்டமும் ஒரு வட்ட அலுவலர் பொறுப்பில் உள்ளது.

### 2. நிதிநிலை :

சொத்து வரி, தொழில் வரி, மற்றும் ஒதுக்கீடு செய்யப்படும் வருவாய்களான சொத்து மாற்றத்திற்கான தீர்வை, கேளிக்கை வரி மற்றும் விற்பனை வரி மீதான கூடுதல் வரி ஆகியவை இம் மாநகராட்சிக்கு வருவாய் தரும் முக்கிய ஆதாரங்களாகும். அரசிடமிருந்து மேற்கூறிய முறைகளில் கிடைக்கப் பெறும் வருவாய் கிட்டத்தட்ட சென்னை மாநகராட்சியின் மொத்த வருவாயில் 35-லிருந்து 40 விழுக்காடுகளாகும். மாநகராட்சியின் வருவாய்களைப் பெருக்குவதற்கான கருத்துருக்கள் பரிசீலனையில் உள்ளன. 1989-90ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி முறையே வரவு ரூ. 58.09 கோடிகள் என்றும் செலவு ரூ. 68.85 கோடிகள் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.





### 3. கல்வி :

சென்னை மாநகராட்சி 360 துவக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகள், 25 உயர்நிலைப் பள்ளிகள், 10 மேல் நிலைப் பள்ளிகள் ஆகியவற்றை நடத்தி வருகின்றது. இந்த மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும்மாணவர்களது எண்ணிக்கை பின்வருமாறு:—

| (1) | சிறுவர் (2) | சிறுமியர் (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| துவக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள். | 72,487 | 77,042 | 1,49,529 |
| உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகள். | 15,552 | 16,398 | 31,950 |

மாநகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களது சம்பளம் கொடுப்பதற்காக அரசு மாநகராட்சிக்கு மான்யம் வழங்குகின்றது. 1—6—1986ஆம் தேதி முதல் மாநகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களை அரசுப் பணியாளர்களாக மாற்றி உத்தரவிடப்பட்டுள்ளது. மாநகராட்சிப் பள்ளிகளை அரசு முழு அளவில் எடுத்துக்கொள்வதற்கான வழிமுறைகள் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. தமிழக அரசு சத்துணவுத் திட்டத்தின் கீழ் 87,053 குழந்தைகள் பயன் பெறுகிறார்கள். இப் பள்ளிகளின் பராமரிப்புக்காக ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 4. சாலைகள் :

மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் 1,600 கி.மீ. மொத்த சாலைகளில் 300 கி.மீ. சாலைகள் பேருந்து வழித்தடச் சாலைகளாகும். 1989-90ஆம் ஆண்டில் சாலைப் பணிகளுக்காக ரூ. 220 இலட்சங்கள் அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 5. தெரு விளக்குகள் :

சென்னை மாநகராட்சியால் 56,273 தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது. அதன் விபரம் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | குழல் விளக்குகள் .. .. .. | 46,107 |
| 2. | பாதரச ஆவி விளக்குகள் .. .. | 4,058 |
| 3. | சோடியம் ஆவி விளக்குகள் .. .. | 6,108 |

1989-90ஆம் ஆண்டில் 100 கி.மீ. நீளம் மின் கம்பி வடங்களைப் புதுப்பிக்கவும் கூடுதலாக 2,000 புதிய மின் விளக்குகளை அமைக்கவும் சென்னை மாநகராட்சியால் திட்டமிடப்பட்டுள்ளது

6. இரண்டாம் பகுதி திட்டம்:

தனியார் தெருக்கள், மாநகராட்சி நிலங்களில் அமைந்துள்ள குடிசைப் பகுதிகள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்யவும் பேருந்து நிலையங்கள் மற்றும் மேம்பாலங்கள் முதலிய இடங்களில் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கவும் புதிதாக சென்னை நகரத்துடன் சேர்க்கப்பட்டுள்ள முன்னாள் பன்னிரெண்டு பஞ்சாயத்துப் பகுதிகளை மாநகராட்சியின் தரத்திற்கு உயர்த்தும் வகையில் அப்பகுதிகளில் அமைந்துள்ள மின் கம்பி இணைப்புகளை மாற்றி பூமிக்கடியில் அமைப்பதற்காகவும், 1989-90 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் ரூ. 105 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

7. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டங்கள் :

சென்னை நகரில் மக்கட் தொகையை கட்டுப்படுத்துவதற்கான திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் தமிழக அரசுடன் இணைந்து சென்னை மாநகராட்சியால் 58 மையங்களில் செயல்படுத்தப்படவுள்ளது. குழந்தை நலம் மற்றும் குடும்ப நலம் ஆகிய இரண்டு திட்டங்களும் இத்திட்டத்தின் கோட்பாட்டினை நிறைவேற்றும் வகையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

8. மின்சார சுடுகாடு:

தமிழக அரசால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ரூ. 82.3 இலட்சம் நிதியுதவியைக் கொண்டு 1989-90 ஆம் நிதி ஆண்டில் பெசன்ட் நகர் மற்றும் நுங்கம்பாக்கம் ஆகிய இரண்டு இடங்களில் இடுகாடுகளில் சடலங்களை எரிக்கும் மின் சாதன அமைப்புக்களை நிறுவும் பணி விரைவில் துவக்கப்படவுள்ளது.

9. தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம்:

உலக வங்கி உதவியுடன் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு பகுதியான நகர்ப்புற வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவும் மாநகராட்சி உத்தேசித்துள்ளது.

10. துப்புரவு:

சென்னை மாநகரில் நாள் ஒன்றுக்கு 2,500 மெட்ரிக் டன் வரை குப்பை சேருகிறது. தமிழக அரசால் கொடுக்கப்பட்டுள்ள சிறப்பு மானியத்திலிருந்து 30 கூடுதல் லாரிகள், 6 பளு தூக்கிகள் மற்றும் 17 காம்பாக்டர்களை வாங்கி உள்ளமைப்பு வசதிகளை வலிவுள்ளதாகச் செய்துள்ளதால் குப்பைகளை அகற்றும் பணி வேகம் அதிகரிக்கப்பட்டுள்ளது. குறுகலான தெருக்களிலும் குடிசைப் பகுதிகளிலும் உள்ள குப்பைகளை அகற்றுவதற்கு பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ள 60 கட்டைமாட்டு வண்டிகள் மாநகராட்சியால் வாங்கப்பட்டுள்ளது. குப்பைகளை கொட்டுவதற்கு புதிதாக மூன்று இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதால் லாரிகளில் குப்பைகளை அதிக தடவைகள் எடுத்துச்



செல்ல உதவும். 1988-89ஆம் ஆண்டு முடிவில் 1,011 துப்புரவுப் பணியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளதற்கு கூடுதலாக ஓட்டுநர்களும், இயந்திரப் பணியாளர்களும் துப்புரவு பணிக்கென அமர்த்தப்பட்டுள்ளனர். துப்புரவுப் பணி படிப்படியாக இயந்திர மயமாக்கப்பட்டு வருகிறது. தாறுமாறாக குப்பைகளையும் மற்றும் கழிவுப் பொருள்களையும் எறிவதைத் தடுப்பதற்காக நகரின் பல இடங்களில் குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. நகரின் சில பகுதிகளில் ஒவ்வொரு வீட்டிலும் பிளாஸ்டிக் குப்பைக் கூடை வைத்து இருக்கிறார்கள். மாநகராட்சி குப்பை மாட்டுவண்டி தெருவில் வருவதை மணி ஒலிப்பதன் மூலம் அறியலாம். எனவே, மணியின் ஒலியைக் கேட்டவுடன் பிளாஸ்டிக் குப்பைக் கூடையிலுள்ள குப்பையை ஒவ்வொரு வீட்டிலுள்ளவர்களும் கொண்டு வந்து குப்பை வண்டியில் கொட்டுவார்கள். பகல் மற்றும் மதியம் துப்புரவுப் பணி மற்றும் தூய்மைப் பகுதிகளை பராமரித்தல் ஆகியவை சென்னை மாநகராட்சியால் தொடர்ந்து செய்யப்படும்.

11. பூங்காக்களும் விளையாடும் இடங்களும்:

88 பூங்காக்கள், 80 விளையாடுமிடங்கள் மற்றும் மூன்று விளையாட்டரங்குகள் ஆகியவை சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. நவீன விளையாட்டுப் பொருட்கள் வழங்குதல் உள்ளடங்கலாக பூங்காக்களும் விளையாடுமிடங்களும் ரூ. 50 இலட்சங்கள் செலவில் மேம்பாடு செய்யப்படும்.

12. சிறப்புத் திட்டங்கள்:

சிறப்புத் திட்டங்களின் கீழ் சாலைகளை மேம்படுத்துதல் கம்பி வடங்களை மாற்றியமைத்தல், அதிக ஒளி அளிப்பதற்காக சோடியம் ஆவி விளக்குகளை அமைத்தல், குடிசைப் பகுதிகளில் துப்புரவுப் பணிகளை மேம்படுத்துவதற்கான தளவாடங்கள் வாங்குதல், மயானம் மற்றும் சலவைத் துறைகளை மேம்படுத்துதல், நாய் பிடிப்பதற்கான வண்டிகளை வாங்குதல், பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்களை மேம்படுத்துதல் மற்றும் மரம் நடுதல்,பொதுக் கழிப்பிடங்களை கட்டுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள 1989-90ஆம் ஆண்டு அரசு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 6 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

13. தேர்தல்கள்:

சென்னை மாநகராட்சி மன்றத்தின் பதவிக் காலம் 1973ஆம் ஆண்டில் முடிவுற்ற பிறகு சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு தேர்தல்கள் நடைபெறவில்லை. 18 வயது வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு வரும் ஜூன், ஜூலையில் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளின் தேர்தல்களை நடத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. மன்ற உறுப்பினர்கள் ஐந்தாண்டு பதவிவகிப்பார்கள் மேயர் ஓர் ஆண்டுகாலம் பதவி வகிப்பார்.

[1989 ஏப்ரல், 19

## மதுரை மாநகராட்சி.

1971ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதி முதல் மதுரை நகராட்சி மாநகராட்சியாக உயர்த்தப்பட்டது. 1981ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி மதுரை மாநகராட்சியின் மக்கட் தொகை 8.18 இலட்சங்களாகும். இருப்பினும் தற்போதைய மக்கட் தொகை 10 இலட்சங்கள் என மதிப்பீடு செய்யப்படுகிறது. மாநகராட்சியின் பரப்பளவு 51.85 சதுர கிலோ மீட்டர் ஆகும். சமீப காலங்களில் கிராமப் புறங்களிலிருந்து மதுரைக்கு குடியேறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது. 1989-90 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டின்படி வரவு ரூ. 2,066.05 இலட்சம் மற்றும் செலவு ரூ. 2,160.19 இலட்சமாக இருக்கும் என மதிப்பிடப் படுகிறது.

### 1. கல்வி:

மதுரை மாநகராட்சி தற்பொழுது 55 ஆரம்பப் பள்ளிகளையும், 13 நடுநிலைப் பள்ளிகளையும், 12 உயர்நிலைப் பள்ளிகளையும் மற்றும் 8 மேல்நிலைப் பள்ளிகளையும் பராமரித்து வருகிறது. மாநகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களும் பிற பணியாளர்களும் 1—6—1986 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டு விட்டார்கள். 21,961 மாணவர்களும், 1,826 முதியோர் ஓய்வுத் தொகை பெறுவோரும் தமிழக அரசு சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன் பெறுகின்றனர்.

பள்ளிகளின் பராமரிப்புக்காக 1989-90ல் ரூபாய் 3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 2. சாலைகள்:

மதுரை மாநகராட்சி கீழ்க்கண்ட வகை சாலைகளை பராமரித்து வருகிறது—

| சாலை வகைகள். | நீளம் கி.மீ. |
|---|---|
| 1. தார் சாலைகள் .. | 267.94 |
| 2. மெட்டல் சாலைகள் .. | 73.69 |
| 3. கிராவல் சாலைகள் .. | 36.54 |
| 4. கல்தளம் பரவப்பட்ட நடைபாதைகள் .. | 53.92 |
| 5. பாதசாரிகள் செல்ல சாலையின் இருமருங்கும் உள்ள நடைபாதை. | 42.57 |
| மொத்தம் .. | 474.66 |



1989 ஏப்ரல் 19]

1989-90ஆம் ஆண்டில் சாலைகள் அமைக்கவும் செப்பனிடவும் மாநகராட்சி ரூ. 150 இலட்சங்கள் செலவிட உத்தேசித்துள்ளது. 1989-90 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின் கீழ் சாலைகளை அமைக்கவும் செப்பனிடவும் ரூ. 10 இலட்சங்கள் கடனாக வழங்க அரசால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 3. பாலங்கள்:

அருப்புக்கோட்டை சாலையில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி அரசு நெடுஞ்சாலைத் துறையினரால் மேற்கொள்ளப் பட்டுள்ளது. அந்தப் பணி விரைவில் முடிக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 4. தெரு விளக்குகள்;

மாநகராட்சி கீழே குறிப்பிட்டுள்ளவாறாக மொத்தம் 14,881 தெரு விளக்குகளை பராமரித்து வருகிறது.

| | புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளில் மின்சார வாரியத்தினரால் பராமரிக்கப்பட்டு வருபவை. | மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ளவை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. சோடியம் ஆவி விளக்குகள் | 5 | 1,152 | 1,157 |
| 2. பாதரச ஆவி விளக்குகள். | 445 | 1,832 | 2,277 |
| 3. குழல் விளக்குகள் .. | 4,236 | 6,459 | 10,695 |
| 4. மற்ற விளக்குகள் .. | .. | 752 | 752 |
| மொத்தம் ... | 4,686 | 10,195 | 14,881 |

1989-90ஆம் ஆண்டில் கூடுதலாக ஒளி வசதி அமைப்பதற்காக 250 தெரு விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. சோடியம் ஆவி விளக்குகள் | .. | 50 |
| 2. பாதரச ஆவி விளக்குகள் | .. | 100 |
| 3. குழல் விளக்குகள் | .. | 100 |
| மொத்தம் | .. | 250 |

5. நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதி மற்றும் புதிய திட்டங்கள்:

உலக வங்கி உதவியுடன் 1988-89ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டுவருகிறது உள்ளாட்சி அமைப்புகளுக்கு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்கும் பொருட்டு மேற்படி திட்டத்தின் கீழ் நகராட்சிகளின் நகர்ப்புற வளர்ச்சி நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1989-90 ஆம் ஆண்டில் மதுரை மாநகராட்சிக்கு மேற்படி நிதியிலிருந்து ரூ. 365 இலட்சங்கள் பெறுமான திட்டங்களுக்கு ஒப்பளிப்பு அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6. மயானத்தில் மின் எரியூட்டு சாதனம் அமைத்தல்:

தத்தனேரி மயானத்தில் மின் எரியூட்டு சாதனம் அமைக்கும் பணிக்கு அரசு ஏற்கனவே ரூ. 10 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் தற்போதைய மதிப்பீடு ரூ. 30.01 இலட்சமாகும். இதில் மீதமுள்ள ரூ. 20.01 இலட்சம் தொகையை 1989-90 ஆம் ஆண்டில் நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதியிலிருந்து கடனாகப் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணி பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

7. துப்புரவு:

நாளொன்றுக்கு சராசரியாக 300 மெட்ரிக் டன் குப்பையும் 10 மெட்ரிக் டன் மலமும் சேகரிக்கப்பட்டு உரமாக்கும் கிடங்கிற்கு அனுப்பப்படுகிறது. 1989-90 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் ரூ. 6 இலட்சம் செலவில் கூடுதலாக இரண்டு குப்பை லாரிகள் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது மாநகராட்சியில் 2,600 துப்புரவுப் பணியாளர்கள் உள்ளனர்.



8. குடிநீர் வழங்குதல்:

வட கிழக்கு மற்றும் தென் கிழக்கு பருவ மழைகள் பெய்யத் தவறியதன் காரணமாக பெரியாறு மற்றும் வைகை அணைகளின் தண்ணீர் மட்டம் வெகுவாகக் குறைந்து விட்டது. மதுரை மாநகரில் ஏற்பட்டுள்ள குடிநீர் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக, 120 ஆழ்துளை கிணறுகள் அமைப்பதற்கும், லாரிகள் மூலம் குடிநீர் வழங்குவதற்கும் அரசு 1989ஆம் வருடம் பிப்ரவரி மாதம் ரூ. 70 இலட்சங்கள் வழங்கியுள்ளது. வைகை அணையிலிருந்து மதுரை மாநகருக்கு குழாய்கள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யும் திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மூலமாக நிறைவேறறப்பட்டு வருகிறது. இத்திட்டம் நிறைவு பெற்றவுடன் மதுரை மாநகருக்கு இதனால் நாள் ஒன்றுக்கு 20 மில்லியன் காலன் குடிநீர் வழங்கப்படும். வறட்சியால் ஏற்படும் குடிநீர் தட்டுப்பாட்டு நிலைமையை சமாளிக்க மாநகராட்சி எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

9. வடிகால் திட்டங்கள்:

1989-90ஆம் ஆண்டில் பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் திறந்த வெளி வடிகால்கள் அமைப்பதற்கும் ரூ. 9 இலட்சங்கள் வழங்க அரசு உத்தேசித்துள்ளது.

10. தேர்தல்கள்:

மதுரை மாநகராட்சியில் பதவிக் காலம் முடிவுற்ற 29—7—1984 முதல் மதுரை மாநகராட்சி மன்றத்திற்கு தேர்தல் நடைபெறவில்லை. 18 வயது வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு வரும் ஜூன், ஜூலையில் சென்னை மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளின் தேர்தல்களை நடத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. மன்ற உறுப்பினர்கள் ஐந்தாண்டு பதவி வகிப்பார்கள். மேயர் ஓர் ஆண்டுக் காலம் பதவி வகிப்பார்.

## கோயம்புத்தூர் மாநகராட்சி.

கோயம்புத்தூர் நகராட்சி 1981ஆம் ஆண்டு மே திங்கள் முதல் நாள் அன்று மாநகராட்சியாக உயர்வு செய்யப்பட்டது. நகரத்தின் மொத்த பரப்பளவு 105.60 சதுர கிலோ மீட்டர். 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்

1989 ஏப்ரல் 19]

நகரின் மொத்த மக்கள் தொகை 7,04,514 ஆகும். 1989-90 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி முறையே வரவு ரூ. 1,757.52 இலட்சம் மற்றும் செலவு ரூ. 2,020.14 இலட்சமாக இருக்கும் என மதிப்பிடப்படுகிறது

1. சாலைகள்;

இம்மாநகராட்சி கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி 450.108 கி.மீ. நீளமுள்ள சாலைகளைப் பராமரித்து வருகிறது.

| | | கி.மீ. |
|---|---|---|
| (i) சிமெண்ட் கற்சாலை, தார் சாலை சந்துகள் முதலியன. | | 416.650 |
| (ii) கல் தளச் சாலைகள் | .. | 33.678 |
| (iii) மண்சாலைகள் மற்றும் கல் தளமிடாத சாலைகள். | .. | 5.780 |
| மொத்தம் | .. | 450.108 |

மண்சாலைகள், கற்சாலைகள் மற்றும் தார் சாலைகள் உள்பட ஆக மொத்தம் 110 கி.மீ. நீளம் புதிய சாலைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக மாநகராட்சி வரவு-செலவுத்திட்டத்தில் ரூ. 100 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போதுள்ள சாலைகளை பராமரிப்பதற்காக ரூ. 100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆக சாலை பணிகளுக்காக ரூ. 200 இலட்சங்கள் 1989—90 ஆம் ஆண்டு மாநகராட்சி திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. கட்டிடங்கள்:

நடப்பு ஆண்டில் 1989—90-ல் மாநகராட்சி ஊழியர்களுக்காக ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் 15 குடியிருப்புகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. மாநகராட்சி அலுவலகத்திற்கு அருகாமையில் ரூ. 100 இலட்சம் மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடம் ஒன்று கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் வருமானத்தைப் பெருக்கும் வகையில் கௌலி பிரவுன் சாலை,



1989 ஏப்ரல் 19]

ஆர்.எஸ். புரம் ராஜி நாயுடு தெரு, டாடா பாத், அவினாசி சாலையில் உள்ள வணிக மையத்தின் முதல் மாடி, ரத்தின சபாபதிபுரம் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி சாலையையொட்டி உள்ள இடத்தில் தடாகம் சாலை, உப்பு மண்டி வீதி மற்றும் பட்டேல் ரோடு ஆகிய இடங்களில் வணிக மையங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 40 இலட்சம் 1989-90 ஆம் ஆண்டு மாநகராட்சி வரவு செலவுத் திட்டத்தில்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரதராசபுரத்தில் ரூ. 9.00 இலட்சம் மதிப்பீட்டில திருமண மண்டபம் கட்டும் பணி தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.

3. தண்ணீர் விநியோகம்:

575 கி.மீ. நீளக் குழாய் அமைப்புகள் மூலம் நகர் முழுவதும் சிறுவாணி குடிநீர் வழங்கப்படுகிறது. குடிநீர் குழாய் அமைப்புகள இல்லாத பகுதிகளுக்கு 13 தண்ணீர் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. இம்மாநகரில் தற்போது 48,276 வீட்டு குழாய் இணைப்புகளும் 1038 பொதுக் குடிநீர் குழாய்களும் உள்ளன. ரூ. 90 இலட்சம் செலவில் 60 கி.மீ. நீளமுள்ள குழாய்கள் அமைத்து குடிநீர் விநியோகத்தை மேம்படுத்த 1989—90 ஆம் ஆண்டு குடிநீர் விநியோக கணக்குத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. தெரு விளக்குகள் :

மாநகராட்சியால் கீழ்க்கண்ட வகையான 8,400 தெரு விளக்குகள் பராமரிக்கப்படுகிறது :—

| | | | |
|---|---|---|---|
| (1) சோடியம் ஆவி விளக்குகள் | .. | .. | 952 |
| (2) பாதரச ஆவி விளக்குகள் | .. | .. | 1,300 |
| (3) குழல் விளக்குகள் | .. | .. | 5.969 |
| (4) பிறவகை விளக்குகள் | .. | .. | 179 |
| மொத்தம் | | | 8,400 |

நெடுஞ்சாலைகளில் போக்குவரத்திற்கு அதிக வெளிச்சம் அளிக்கும் பொருட்டு சாலையின் மையத்தில் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. மாநகராட்சியுடன் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகள் :

மாநகராட்சியுடன் புதியதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளில் தெரு விளக்குகள் தமிழ்நாடு மின் வாரியத்தால் கீழ்க்கண்ட வாறு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| (1) சோடியம் ஆவி விளக்குகள் | .. .. | 6 |
| (2) பாதரச ஆவி விளக்குகள் | .. | 100 |
| (3) குழல் விளக்குகள் | .. .. .. | 7,515 |
| | மொத்தம் | 7,621 |

மாநகராட்சியுடன் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளில் 1989-90-ஆம் ஆண்டில் மேலும் 1,000 தெரு விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் செலவினத்தை மாநகராட்சியே ஏற்று வருகிறது.

6. வடிகால் திட்டங்கள் :

வடிகால் அமைக்கும் பணியை தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் நிறைவேற்றி வருகின்றது. இப்பணி மூன்று பகுதிகளை உள்ளடக்கும். பகுதி I மற்றும் பகுதி II திட்டங் கள் ஆகியவைகளில் பணி முடிக்கப்பெற்று பயன்படுத்தப்படு கின்றது. மூன்றாம் பிரிவில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மாநகரில் வடிகால் அமைக்கப்படாமல் விடுபட்ட பகுதிகளுக்கும் புதை சாக்கடை திட்டத்தினை விரிவுபடுத்தி தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தில் ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட் டுள்ளது. 1989—90 ஆம் ஆண்டிற்கான மாநகராட்சியின் வரவு செலவுத் திட்டத்தில் ஏற்கெனவே உள்ள வடிகால்களை பராமரிக் கவும் புதிதாக மழை நீர் வடிகால்கள் கட்டவும் ரூ. 143 இலட் சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. கல்வி :

மாநகராட்சிப் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்களும், ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்களும் 1—6—1986 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டு உள்ளனர். முழுமையாகப் பள்ளிகளை அரசு எடுத்துக் கொள்ளும் வரை, மாநகராட்சி தொடர்ந்து 64 தொடக்கப்பள்ளிகளையும், 14 உயர் தொடக் கப்பள்ளிகளையும், ஒரு நடுநிலைப் பள்ளியையும், 12 உயர்





நிலைப் பள்ளிகளையும், 9 மேல் நிலைப் பள்ளிகளையும் மற் றும் ஒரு செவிடு ஊமைப் பள்ளியையும் பராமரித்து வருகின் றது. பள்ளிகளின் பராமரிப்புக்காக 1989-90-ல் ரூ 11 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

8. பொது சுகாதாரம் :

துப்புரவு, மருத்துவம் மற்றும் குடும்ப நலப்பணிகள் ஆகிய வற்றுக்காக 1989-90ஆம் ஆண்டிற்கான மாநகராட்சி வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 446.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. 1989-90 ஆம் ஆண்டில் துப்புரவு பணியை மேம்படுத்துவதற்காக ரூ. 28.85 இலட்சம் கூடுதல் பொது சுகாதார லாரிகள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9. ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் :

ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1989-90 ஆம் ஆண்டில் ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் நகரமைப்புத் திட்டத்தின் கீழ் சேலம்—கொச்சின் சாலையையும், சுண்டக்கா முத்தூர் சாலையையும் இணைக்கும் சாலையினை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. நகரப் பேருந்து நிலையத்தை மேம் பாடு செய்வதற்கான பணி ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் நடை பெற்று வருகிறது. எஞ்சியுள்ள பணியை முடிப்பதற்காக 1989-90 ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சங்கள் மாநகராட்சியால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி :

டிரக் டெர்மினல், வணிக மையம் கட்டிடம் போன்ற மாநக ராட்சிக்கு நிலையான வருவாய் வரும் பல திட்டங்களை ரூ. 445 இலட்சம் செலவில் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வரும் ஆண்டுகளில் நிறைவேற்ற உத்தேசிக்கப் பட்டுள்ளது.

11. பகுதி இரண்டு திட்டம் ;

சாலைகளுக்கு தார் தளமிட பகுதி 2 திட்டத்தின் கீழ் அரசு ரூ. 25 இலட்சம் கடனாக ஒதுக்கீடு செய்துள்ளது.

**12. பலவகை :**

(அ) மரம் நடுதல் :

மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள சாலைகளில் மரக் கன்றுகளை நட்டு வளர்க்க ரூ. 2 இலட்சம் 1989—90 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மிருகக்காட்சிச் சாலை :

மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் மிருகக் காட்சி சாலை பள்ளிக் குழந்தைகளுக்கு கல்வி அறிவை வளர்க்கும் வகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. வா.உ.சி. பூங்காவில் உள்ள மிருகக் காட்சி சாலைக்கு இந்த வருடம் ரூ. 2 இலட்சம் செலவில் புதிய மிருகங்களையும் பறவைகளையும் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த மிருகக் காட்சி சாலையால் மாநகராட்சிக்கு சுமார் 3.5 இலட்சம் வருவாய் கிடைக்கிறது.

**13. தேர்தல்கள் :**

1981 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மாநகராட்சி அமைத்த பிறகு கோயம்புத்தூர் மாநகராட்சி மன்றத்திற்கு தேர்தல்கள் நடைபெறவில்லை. 18 வயது வாக்காளர் பட்டியலை அடிப் படையாகக் கொண்டு வரும் ஜூன், ஜூலையில் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளின் தேர்தல்களை நடத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மன்ற உறுப்பினர்கள் ஐந்தாண்டு பதவி வகிப்பார்கள். மேயர் ஓர் ஆண்டுக் காலம் பதவி வகிப்பார்.



## இணைப்பு—III

(பக்கம் எண் 375-ல் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### கொள்கை விளக்கக் குறிப்பு 1989-90.

### பொதுப் பணித்துறை.

முன்னுரை :

பொதுப்பணித்துறை, பல்வேறு பாசனத் திட்டங்களை உருவாக்கி செயலாக்குவதற்கும், நிலத்தடி நீர் ஆய்வு-முடிவுகளின் மூலமாக குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதற்கும் பொறுப்பு வகிக்கிறது. கடுமையானத் தண்ணீர் தட்டுப்பாடும் வறட்சியும் ஏற்பட்ட காலங்களில்கூட, இத்துறை நிருவாகத் திறமையாலும், மேம்பாட்டுத் திட்டங்களை உரிய நேரத்தில் செயலாக்கியதாலும் அந்நிலையை எளிதில் சமாளித்துள்ளது. அரசு அலுவலகங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள், வீட்டு வசதிக் குடியிருப்புகள் முதலியவற்றைக் கட்டுவதற்கும் இத் துறை பொறுப்பேற்றுள்ளது.

வேளாண் உற்பத்தியைப் பெருக்கி அதன் மூலம் உழவர்களுக்கு ஆதாயமுள்ள வருமானம் கிடைக்கச் செய்யும் வகையில், மேற்பரப்பு நீரையும், நிலத்தடி நீரையும் நன்கு நிருவகித்து அறிவார்ந்த அறிவியல் முறையில் பங்கீடு செய்வதையே பாசன முறை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இம்மாநிலத்தில் இரு பெரும் நீர்த்தேக்கங்கள் உள்ளன. ஒன்று பெரியாற்றின் குறுக்கே உள்ள அணையாகும். மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள வறட்சியால் பாதிக்கப் பட்ட பகுதிகளுக்குப் பாசனம் அளிப்பதற்காக, இங்கிருந்து கிழக்குப் பக்கமாகத் தண்ணீர் திருப்பிவிடப்படுகிறது, மற்றொன்று, காவிரி ஆற்றின் குறுக்கே உள்ள மேட்டூர் நீர்த்தேக்கமாகும். கழிமுகப் பகுதி பாசனத்தை மேம்படுத்தும் பொருட்டும், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கல்லணைக் கால்வாயிலிருந்து புதிய பாசனம் கிடைக்கும் பொருட்டும் மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து நீர் திருப்பிவிடப்படுகிறது. இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர், அடுத்தடுத்து செயல்படுத்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டக் காலங்களிலும், ஆண்டு திட்டக்காலங்களிலும், அதிகமான நிலப் பகுதிகளுக்குப் பாசன வசதி அளிக்கும் நோக்கத்தோடு, பெரிய அளவிலும், சிறிய அளவிலும் மொத்தம் 49 பாசன நீர்த் தேக்கங்கள் அமைக்கப்பட்டன. கேரள அரசின் ஒத்துழைப்புடன் அருகிலுள்ள மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளிலிருந்து பரம்பிக்குளம்-ஆளியாறுத் திட்டம் மூலமாக ஓர் ஆற்றுப்படுகையிலிருந்து மற்றொரு ஆற்றுப் படுகைக்கு நீரை எடுத்துச் செல்லும் பணி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டது

சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களை மேற்கொண்டதுடன், சிறு பாசனத் திட்டங்களை மேம்படுத்துவதிலும் உரிய கவனம் செலுத்தப் பட்டது.

இம்மாநிலத்திலுள்ள மொத்தம் 13 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பில், 8.4 மில்லியன் ஹெக்டேர் (65 சதவீதம்), பயிரிடத்தக்க நிலங்களாகும்; 6 மில்லியன் ஹெக்டேர் பரப்பில் தற்போது சாகுபடி செய்யப்படுகிறது. இதில் 3 மில்லியன் ஹெக்டேருக்குப் பாசன வசதி கிடைக்கிறது. ஒரு மில்லியன் ஹெக்டேரில் இருபோகப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. பாசனம் பெறும் 3 மில்லியன் ஹெக்டேரில், 0.95 மில்லியன் ஹெக்டேருக்கு கால்வாய்ப்பாசனமும், 0.90 மில்லியன் ஹெக்டேருக்கு ஏரிப் பாசனமும், எஞ்சிய 1.15 மில்லியன் ஹெக்டேர் பரப்பு கிணறுகள் மற்றும் குழாய்க்கிணறுகள் மூலம் பாசனமும் கிடைக்கிறது. நிகரப் பரப்பில், இந்தியா முழுவதிலும் பாசனம் பெறும் சராசரி பரப்பு சுமார் 28 சதவீதம் ஆக இருக்க, தமிழ் நாட்டில் பயிரிடப்பட்ட பரப்பில் பாசனம் பெறும் சராசரி பரப்பு 50 சதவீதமாகும். தேசிய அளவில் நபர் ஒருவருக்குக் கிடைக்கும் சராசரி நீரின் அளவு 0.09 மில்லியன் கன அடியாக இருக்க, இம்மாநிலத்தில் நபர் ஒருவருக்குக் கிடைக்கும் சராசரி நீரின் அளவு 0.03 மில்லியன் கன அடியாக மட்டுமே இருக்கின்ற போதிலும் இம்மாநிலத்தில் பயிரிடப் பட்ட மொத்தப் பரப்பைப் பார்க்கையில் பாசனம் பெறும் பகுதி அதிகமாகவே உள்ளது. கிடைக்கின்ற நீர் வளம் பெரும்பாலும் முற்றிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே மேம்படுத்தப்பட்ட பாசனப் பகுதியை, நல்ல முறையில் நிருவகிக்க வேண்டியது மட்டுமின்றி, உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறவும், வேளாண் பொருளாதாரத்தில் சீரான வளர்ச்சி இருக்கவும் மேற்கொண்டும் பாசனம் வளர்ச்சி அடைகிறதா என கவனிக்க வேண்டியது அவசியம்.

தமிழ்நாட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், அண்டை மாநிலங்களான கேரளம், கருநாடகம், ஆந்திரப்பிரதேசம், ஆகியவற்றில் வளமான நீர் ஆதாரங்கள் உள்ளன. அண்டை மாநிலங்களில் சராசரியாக நபர் ஒருவருக்குக் கிடைக்கும் நீரின் அளவு, தமிழ்நாட்டில் சராசரியாக நபர் ஒருவருக்குக் கிடைக்கும் நீரின் அளவைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாகும். தமிழ்நாட்டின் நீர் ஆதாரங்களை அதிகரிக்கும் பொருட்டு, அண்டை மாநிலங்களில் உள்ள ஆற்றுப் படுகையின் உபரிநீரைத் தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிடுவது பற்றியும் கருதப்பட்டு வருகின்றது. இதையொட்டி, தமிழ்நாட்டிலுள்ள வறட்சியால் பாதிக்கப்பட்ட தென் மாவட்டங்களுக்கு குடிநீரும், ஏனைய இன்றியமையாத் தேவைகளும் கிடைக்கச் செய்யும் பொருட்டு, கேரளத்திலுள்ள மேற்காக ஓடுகின்ற ஆறுகளின் உபரி நீரைத் திருப்பிவிடத் திட்டமிடப்பட்டு வருகின்றது என்பதும், கேரள அரசுடன் இதுபற்றி விரைவில் பேச்சு வார்த்தை நடத்தவும் கருதப்பட்டுள்ளது.



நவீன பணிகளின் வாயிலாக தற்போது நீரைப் பயன்படுத்துவதில், இயலுகின்ற இடங்களில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதில்தான் எதிர்கால மேம்பாடு உள்ளது. இவ்வாறாக சேமித்த நீரை, புதிய பகுதிகளுக்குப் பாசனமளிக்கவும் அல்லது அதே பகுதியில் கூடுதலாகப் பயிர் வளர்க்கப் பயன்படுத்த இயலும். இது உலக வங்கி நிதியுதவியுடன் பெரியார்-வைகைப் பாசனத் திட்டத்தில் பெரிய அளவில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. ஒரு மில்லியன் ஏக்கர் பரப்புப் பாசனம் பெறும் வகையில் பழைய காவிரிக் கழிமுகப் பாசனத் திட்டத்தை நவீனமாக்குவதற்கான செயற்குறிப்புகள் முடிவு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் முதல் கட்டப்பணி, மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன் உலக வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப் படவுள்ளது. எனினும், இத்திட்டத்தினால் பாசன வசதி பெறும் நிலங்கள் கூடுதலாக இராது. ஆனால் கிடைக்கும் நீர் நியாயமாக பங்கீடு செய்யப்படும்.

பெரிதும் நம்பத்தக்க, முன்கூட்டியே அறியத்தக்க, சமமானப் பாசன வழங்குத்திட்டம் மூலமாக, உற்பத்தித் திறனையும், பண்ணை வருமானத்தையும் அதிகரிக்க, பழைய பாசனத் திட்டங்களை நவீனமாக்கி அவற்றின் திறனை மேம்படுத்தும் பொருட்டு, அவசியம் ஏற்பட்டால் தற்போதுள்ள பயிரிடும் முறையை மாற்றுவதன் மூலமாக, உலக வங்கி நிதி யுதவியுடன் தேசிய நீர் நிருவாகத் திட்டம், தமிழ்நாட்டில் ஐந்து பாசனப் பகுதிகளில், அதாவது, சாத்தனூர், கோதையாறு, தாமிரபரணி, கம்பம் பள்ளத்தாக்கு, அமராவதி பழைய வாய்க்கால் பகுதி ஆகியவற்றிலும் தெரிந்தெடுக்கப்படவுள்ள திட்டப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவை தவிர, உழவர்கள் உட்பட, திட்டமிடுபவர் முதல், நிருவாகி, வடிவமைப்பாளர், பொறியியலாளர், வேளாண் பொருளாதார வல்லுநர், செயல்-பணியாளர் முதலிய பாசனம் பெறும் உழவுத் தொழிலில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் போதிய பயிற்சி அளித்து, நீரை உரிய அளவு பயன்படுத்தி, மேலான உற்பத்தித் திறனை அடையும் பொருட்டு, பாசன நிருவாகத்தில் அவர்களுக்கு நவீன உத்திகளைக் கற்றுத் தரும் பொருட்டு, அமெரிக்க நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் பாசனப் பயன்பாட்டுப் பயிற்சி நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தின் நீர்வளம் குறைவாக இருப்பதையும், நீர் நிருவாகத்திலும், நீர் ஆதாரங்களை மேற்கொண்டும், மேம் படுத்துவதிலும் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் சிக்கலாக இருப் பதையும் கருத்தில் கொண்டு ஆறுகள், ஏரிகள், நிலத்தடி நீர் போன்ற பல்வேறு நீர் ஆதாரங்களில் பாசனத்தை மேம் படுத்த ஒருங்கிணைநத அணுகு முறை இருக்க வேண்டியது அவசியம். இப்பணியை, ஆற்றின் வடிநிலப் பகுதியில் உள்ள நீரின் நிலையைப் பொறுத்து மேற்கொள்ள வேண்டும். இந்த அணுகு முறையை மேற்கொண்டும் செயலாக்க, அரசு பொறியியலாளர்கள்

பாசனம் மற்றும் அதன் தொடர்புடைய துறைகளில் வல்லுநர்கள் அடங்கிய நிலையான பாசன மேம்பாட்டுக் குழு ஒன்றை அமைத்துள்ளது.

### பெரிய, நடுத்தரப் பாசனம் :

மத்திய அரசு வரையறுத்துள்ள விதி முறைகளின்படி 2,000 ஹெக்டேருக்கும் குறைவாகப் பாசனம் பெறும் பரப்புகளைக் கொண்ட திட்டங்கள் சிறுப்பாசனத்திட்டங்கள் என்றும், 2,000 ஹெக்டேர் முதல் 10,000 ஹெக்டேர் வரையிலான பாசனம் பெறும் பரப்புகளைக் கொண்ட திட்டங்கள் நடுத்தரப் பாசனத் திட்டங்கள் என்றும் 10,000 ஹெக்டேருக்கும் அதிகமான பாசனம் பெறும் பரப்பைக் கொண்ட திட்டங்கள்'' பெரும் பாசனத் திட்டங்கள்'' என்றும் கருதப்படுகின்றன.

### ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடு :

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1935-86 முதல் 1989-90 வரை) பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 212 கோடியாகும். இதுவரை ரூ. 144.77கோடி செலவிடப்பட்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டான 1989-99 இல் ரூ. 28.72 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது; இத்தொகையையும் ஏற்கெனவே செலவிட்ட தொகை ரூ. 144.77 கோடியையும் சேர்த்து மொத்தம் ரூ. 173.49 கோடியை, 7 ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செலவிட இயலும்.

### பெரிய பாசனத் திட்டங்கள்.

ஏழாவது திட்டத்தில் பின்வரும் பெரிய பாசனத் திட்டங்களை நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது.

(1) பெரியாறு—வைகை பாசன ஏற்பாட்டுக்கு மேம்பாடுகள்.

(2) பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட ஆயக்கட்டு விரிவாக்கம் நிலை I, II, III.

(3) காவிரி கழிமுகப் பாசன ஏற்பாட்டை நவீனப் படுத்துதல்.

(4) தேசிய நீர் நிர்வாகத் திட்டம்.



### (1) உலக வங்கி உதவியுடன் பெரியாறு—வைகை பாசன ஏற்பாட்டிற்கு மேம்பாடுகள்—நிலை II.

பெரும்பாலான பாசன ஆதாரங்கள் பயன்படுத்தப்பட்டு விட்டன. நீரை இயன்ற அளவுக்கு சேமிக்கும் வகையில் தற போதுள்ள பாசன ஏற்பாட்டை நவீனப்படுததும் பணியில் நாம் தற்போது கவனம் செலுத்துகிறோம். இவ்வாறு சேமிக்கப் பட்ட நீரைக் கொண்டு பாசன வசதி நீட்டிக்கப்படுகிறது. நமது மாநிலத்தில் பெரியாறு-வைகைத் திட்டம் முதலாவது பெரிய திட்டமாகும். கால்வாய் நெடுக கரை அமைத்து நவீனப் படுத்துவதன் மூலம், நீர் கொண்டு செல்வதில் ஏற்படும் இழப்பும் இயக்குதல் இழப்பும் குறைவதற்கு வகை செய்கிறது. உலக வங்கியிடமிருந்து 23 மில்லியன் அமெரிக்க டாலர் உதவியாகப் பெற்று பெரியாறு-வைகை பாசன மேம்பாட்டுப்பணி நிலை I ரூ. 44.50 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. 1977-ல் மேற்கொள்ளப்பட்ட இப்பணி 1984 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் முடிக்கப்பட்டது. 10,305 ஹெக்டேர் நிலத்துற்கும் கூடுதல் பாசன வசதி அளிக்கிறது. இதற்கு மொத்தம் ரூ.46.40 கோடி செலவிடப்பட்டது.

முதல் நிலை திட்டப்பணியை வெற்றிகரமாக முடித்ததன் பலனாக (பாசனத்திற்கு நீர் இதனால் மிச்சம் ஏற்பட்டது) திட்டத்தின் நிலை II பணிக்கு கடன் உதவி அளிக்க உலக வங்கி ஒப்புக் கொண்டது. இதனால் கூடுதலாக 7,521 ஹெக்டேர் பரப்பளவு பாசன வசதி பெறும். இத்திட்டத்திற்கு ரூ. 70.00 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏழாவது திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில், ரூ. 40.28 கோடி செலவிடப்பட்டுள்ளது. 1988—89 ஆம் ஆண்டில் ரூ. 7.88 கோடி செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது, 1989—90 ஆம் ஆண்டில் உத்தேச ஒதுக்கீடு ரூ. 6.20 கோடியாகும். தேவைப்படின் கூடுதல் தொகை ஒதுக்குவதன் மூலம் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இத் திட்டம் முடிக்கப்படும்.

### பரம்பிக்குளம்-ஆளியாறு ஆயக்கட்டு விரிவாக்கம்—நிலை I, II, III—

வறட்சியால் பாதிக்கப்பட்ட கோயம்புத்தூர் பெரியார் மாவட்டங்களில் 2,45,000 ஏக்கர் நிலத்திற்கு பாசனம் அளிக்க மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் நீரைத் திருப்பி விட, 1959 ஆம் ஆண்டு தொடக்கத்தில் கேரளா அரசுக்கும், தமிழ்நாடு அரசுக்குமிடையே ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இது 1980—81 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது. இத்திட்டத்தினால், பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த தாராபுரம், பல்லடம் வட்டங்களும், கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை வட்டங்களும் பயன் அடைகின்றன.

பின்னர், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின்கீழ் பாசன வசதிகளை பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பல்லடம், தாராபுரம், வட்டங்களில் உள்ள வறட்சிப் பகுதிகளுக்கு நீட்டிக்குமாறு கேட்டு பல முறையீடுகள் வந்துள்ளன. அரசு அப் பகுதிகளில் கூட்டிய பல பாசன கருத்தரங்குகளில் உழவர்கள் இதனை வலியுறுத்தியுள்ளனர். விரிவான ஆய்வுக்குப் பின்னர், தறபோதுள்ள ஆயக்கட்டுக்கு பக்கத்தில் உள்ள வறட்சி பகுதிகளுக்கு பாசனவசதிகளை இயன்ற அளவுக்கு நீட்டிப்பதென அரசு முடிவு செய்தது.

மூன்று நிலைகளில் 1,75,000 ஏக்கர் ஆயக்கட்டுக்கு ரூ. 31.59 கோடி மதிப்பீட்டுச் செலவில் பாசன வசதியை நீட்டிக்கும் செயற் குறிப்புகளுக்கு அரசு ஒப்புதல் அளித்தது. முதல்நிலைப் பணி 1986 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது. இரண்டாவது, மூன்றாவது நிலைப் பணிகள் முறையே 1986—87, 1987—88 ஆம் ஆண்டுகளில் நிறைவேறறி முடிக்கப்பட்டன.

ஆண்டாண்டு காலமாக வறட்சியால் மிகவும் பாதிக்கப் பட்ட கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில் இயன்ற அளவுக்கு பாசன வசதி அளிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பாசனப் பகுதியை வசதியான மண்டலங்களாகப் பிரிப்பதன் மூலமும், முறை மாற்றுப் பாசன ஏற்பாட்டை பின்பற்றுவதன் மூலமும் ஓராண்டு விட்டு ஓராண்டு பாசன வசதி அளிப்பதும் முதல திட்டப்படியும், விரிவாக்கத் திட்டத்தின் படியும், 4,20,000 ஏக்கர் நிலங்களுக்கு (2,45,000 + 1,75,000) பாசன வசதி அளிப்பதும் இத் திட்டத்தின் நோக்கமாகும்.

காவிரி கழிமுக பாசன ஏற்பாட்டை நவீனப்படுத்துதல்—

தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள காவிரி கழிமுகப் பாசன ஏற்பாடு நாட்டிலேயே மிகப் பழமையான பாசன ஏற்பாடுகளில் ஒன்றாகும். இது மாநிலத்தில் முதன்மையான பாசன ஆதாரமாகும். 9.34 இலட்சம் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி அளிக்கும் மக்களின் முதன்மை உணவுப்பொருளான அரிசி உற்பத்தியில் இம் மாவட்டம் முதன்மையாக விளங்குவதால் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்று இது அழைக்கப்படுகிறது.

இந்தப் பாசன ஏற்பாட்டில் 36 ஆறுகள் உள்ளன. இவற்றின் நீளம் 1,610 கிலோ மீட்டராகும். பல முக்கிய கிளைக் கால்வாய்கள் உள்ளன. கழிமுகப் பகுதியில் உள்ள பெரும்பாலான ஆறுகள், வாய்க்கால்கள், பாசன வடிகால், நீர் கொண்டு செல்பவையாக செயல்படுவது இந்த ஏற்பாட்டில் சிறப்பான அம்சமாகும். குடிமராமத்துப் பணிகளை மேற்கொள்ளத் தவறிய



தாலும் வாய்க்கால்களில் வண்டல் படிந்ததாலும், கால்வாய்களிலும் ஆற்று ஓரங்களிலும், ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டதாலும் அண்மை ஆண்டுகளில் நீர் நிலைகளில் அதிகமாக களைச் செடிகள் வளர்ந்துவிட்டதாலும், இந்த பாசன ஏற்பாடு தொடர்ந்து செயலிழந்து வருகிறது. உரங்களையும் பயிர்ப்பூச்சி கொல்லி மருந்துகளையும் அதிக அளவில் பயன்படுத்துதல், நீரை சிக்கனமாகப் பயன்படுத்துதல் மூலம் வேளாண்மை தேவைகளை பூர்த்தி செய்ய இந்த நவீனமாக்கும் ஏற்பாட்டை விரிவான அளவில் செயல்படுத்துவது அவசியம் ஆகும்.

காவிரி கழிமுகப் பகுதியை நவீனப்படுத்துவதற்கான திட்ட அறிக்கை ஒன்றை தமிழ்நாடு அரசு தயாரித்து உலக வங்கி உதவிபெறும் பொருட்டு 1983 ஆம் ஆண்டு மார்ச்சில் அதனை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. இது ஒரு பெருந் திட்டமாதலால். இதனை நிறைவேற்ற பல ஆண்டுகள் ஆகும் என்பதாலும், ஒவ்வொன்றிலும் 5 ஆண்டுகள் கொண்ட 3 நிலைகளில் நிறைவேற்ற முடிவு செய்யபபட்டது. கழிமுகப் பகுதியில் மொத்தம் உள்ள 9.34 இலட்சம் ஏக்கரில் 1.73 இலட்சம் ஏக்கர் அடங்கிய பகுதியுடன் 36 ஆறுகளில் 10 ஆறுகளை மேம்படுத்த வகை செய்யும் நிலை I-ன் திட்ட அறிக்கை மத்திய நீர்வள ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்து தயாரிக்கப்பட்டு, 1985 ஆம் ஆண்டில் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு :—

(1) புதிய பொறி மதகுகளைக் கட்டுதலும் தற்போதுள்ள பொறி மதகுகளை மேம்படுத்துதலும்.

(2) முக்கியமான இடங்களில் பக்கச் சுவர்களை பாதுகாத்து. அவசியமானால் ஆற்றுக்கரைகளை உயர்த்தி வலுப்படுத்துதல் போன்ற ஆற்று சீரமைப்புப் பணிகள்.

(3) வாய்க்கால்களை நிலைப்படுத்துதல் அவசியமான இடங்களில் மதகு கட்டுதல், கடைகோடி அணை கட்டுதல் போன்று 20 ஏக்கர் வரை நீர் வழங்கு வாய்க்கால்களுக்கு மேம்பாடுகள்.

(4) 20 ஏக்கர் எல்லை வரை வாய்க்கால்களுக்கும் நிலை வாய்க்கால்களுக்கும் கரையமைத்தல்;

(5) வடிகால் மேம்பாட்டுப் பணிகளின் கீழ் காவிரியிலும், வெண்ணாறு துணை வடிநிலத்திலும் வடிகால்களுக்கு மேம்பாடுகள்.

[1989 ஏப்ரல் 19

தற்போதைய வயலுக்கு வயல் பாசனம் அளிக்கும் முறையை நீக்கி 20 ஏக்கர் வரையறைக்கும் குறைவாக உள்ள (8 ஹெக்டேர்) பகுதிக்கு கண்ணி வாய்க்கால் மற்றும் வடிகால்களையும், வகை செய்வது பண்ணை மேம்பாட்டுப் பணிகளில் அடங்கும். இப்பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறை மேற்கொள்கிறது. ஆனால் இத்திட்ட மதிப்பீட்டின் ஆய்வுவரம்புக்கு அப்பாற்பட்டு, இதனை மேற்கொள்ள மத்திய அரசின் பாசனப் பகுதி மேம்பாட்டு அதிகார மன்றத்தின் தனி திட்டத்தின் கீழ் இதற்கு நிதி ஒதுக்கப்படுகிறது. எனவே, மேம்பாடு இத்திட்ட மதிப்பீடுகளில் பண்ணை மேம்பாட்டுப்பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

1987-88 ஆம் ஆண்டு விலைப்பட்டியல் அடிப்படையில் இத்திட்டத்திற்கு ரூ. 78.80 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கையை மத்திய நீர்வள ஆணைக் குழுவின் தனி இயக்ககங்கள் அனைத்தும் பரிசீலித்துள்ளன. எழுப்பப்பட்ட கருத்துக்கள், கேட்கப்பட்ட விளக்கங்கள் ஆகியவற்றுக்கு பதில் அளிக்கப்பட்டு விட்டது. உதவி பெற இத்திட்டம் ஏற்றது என உலக வங்கி கருதிய போதிலும் மத்திய அரசின் ஒப்புதலை எதிர் நோக்கி உள்ள நிலையில், இத்திட்டம் மேற்கொண்டு பரிசீலனையில் செயல்படுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் புதிதாக நீரைப் பயன்படுத்த அல்லது ஆயக்கட்டை விரிவுபடுத்த வகை செய்வதாகாது என்றும் இருக்கின்ற நீரை உரியஅளவு பயன் படுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளதாலும், மாநிலங்களுக்கிடையேயன நதி நீர் பிரச்சினையிலிருந்து இச் செயற்குறிப்பை விடுவிக்குமாறு தமிழ்நாடு அரசு மத்திய நீர்வள ஆணைக்குழுவை வலியுறுத்தி வருகிறது. இத்திட்டம் தொழில் நுட்ப பொருளாதார ரீதியில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது என்றும்; பாசனம்-வெள்ளக் கட்டுப்பாடு குறித்த ஆலோசனைக் குழுவின் பரிசீலனைக்காக இது வைக்கப்பட்டுள்ளது என்றும், 1989 ஆம் ஆண்டு ஏப்ரலில் இதற்கான குழுக்கூட்டம் நடத்தப் படவுள்ளது என்றும் மத்திய நீர்வள ஆணைக்குழு தெரிவித்தது. ஆலோசனைக் குழுவின் இசைவு எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், அரசின் மாநில நிதிகளிலிருந்து ஒட்டுமொத்த அனுமதி பெறுவதன் மூலம் கழிமுகப் பகுதியில் பாசன வடிகால் வாய்க்கால்களை மேம்படுத்துவதற்கு ஒவ்வோராண்டும் சில தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நோக்கத்திற்காக 65 'ஏ' வகை வாய்க்கால்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. 1987-88 ஆம் ஆண்டு இறுதியில் 17 வாய்க்கால்கள் முடிக்கப்பட்டன. அடுத்து வரும் பாசன ஆண்டிற்கு முன்னர் 11 வாய்க்கால்களை தோண்டி முடிக்கக் கருதட பட்டுள்ளது. 1990—91 ஆம் ஆண்டிற்குள் 65 வாய்க்கால்களில் வேலை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஏழாம் ஐந்தாண்டு திட்டக் காலத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் ரூ. 12.52 கோடி செலவிடப்பட்டது. 1988—89 ஆம் ஆண்டில் ரூ. 4.04 கோடி ஒதுக்கடபட்டது. 1989—90 ஆம் ஆண்டில் உத்தேச ஒதுக்கீடு ரூ. 4.20 கோடியாகும்.



1989 ஏப்ரல் 19]

## தேசிய நீர் நிருவாகத் திட்டம் :

இத்திட்டம், இந்தியாவில் தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கருநாடகம் ஆகிய மூன்று மாநிலங்களில் 1986-87 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. நம்பகமான முறையில், முன்னரே அறிந்து, சமமான அளவில் பாசன வசதிக்கான பணிகளை மேற்கொள்ளுவதன் மூலம், தற்போதுள்ள பாசன முறையில்'' உற்பத்தித் திறனையும், பண்ணை வருவாயையும்'' அதிகரிப்பதே, இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பயிர் வளர்ப்பிற்குத் தேவையான அளவு நீர் வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் நவீன நடை முறை பராமரிப்பு முறைகள் ஆகியவற்றை திட்டமிடுதல், செயல் படுத்தல், கண்காணித்தல் ஆகியவற்றிற்குத் தேவையான திறனைப் பெருக்க மாநிலத்திற்கு இத்திட்டம் மிக உதவியாக இருக்கும். இத்திட்டம் குறித்து எக்டேர் ஒன்றுக்கு ரூ. 2,500 மட்டுமே செலவிடப்பட வேண்டும் என்று வரையறுக்கப் படவுள்ளது. இச்செலவுக்குள் பணிகள் தெரிந்தெடுக்கப்பட்டு முன்னுரிமை அளிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இத்திட்டம், சாத்தனூர் தாமிரபரணி, கோதையாறு, கம்பம், பள்ளத்தாக்கு, அமராவதி பழைய வாய்க்கால், ஆகிய பாசனப் பகுதிகளிலும், சுமார் 1.53 இலட்சம் எக்டேர் பரப்புள்ள ஏனைய நடுத்தர பாசனப்பகுதிகளிலும் செயல்படுத்தக் கருத்தப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட துணைத் திட்டங்களைச் செயல்படுத்த ரூ. 52.70 கோடி தொகைக்கு தமிழ்நாடு அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

## திட்டத்தின் பெயர் :

1. சாத்தனூர்.
2. தாமிரபரணி.
3. கோதையாறு.
4. அமராவதி பழைய வாய்க்கால்.
5. கம்பம் பள்ளத்தாக்கு.
6. தெரிந்தெடுக்கப்படவுள்ள திட்டங்கள்.

**பயனடையும் மொத்த பரப்பு** :—1.53 இலட்சம் எக்டேர்,

சாத்தனூர் அணைத் திட்டம் :

தமிழ்நாடு அரசின் நிலையில் தொழில்நுட்ப ஆய்வுக் குழுவும், நிருவாக ஒப்புதல் குழுவும், மத்திய அரசு நிலையில் மதிப்பீட்டுக் குழுவும் இத்துணைத் திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளன. இத்திட்டத்தின் பணிகள் முழு அளவில் நடந்தேறி வருகின்றன.

தாமிரபரணி கோதையாறு துணைத் திட்டங்கள் :

இந்தத் துணைத் திட்டங்களுக்கும், மேலே குறிப்பிடப்பட்ட குழுக்கள் அனுமதி அளித்துள்ளன. பொதுப் பணித் துறையின் 5-9-1988 ஆம் நாளிட்ட 1412 ஆம் எண் அரசாணையில், செயல்படுத்தும் கோட்டங்களை ஏற்படுத்த அனுமதி வழங்கப் பட்டுள்ளது. தொடக்கப் பணிகள் நடந்தேறி வருகின்றன.

அமராவதி பழைய வாய்க்கால், கம்பம் பள்ளத்தாக்குத் திட்டம் தொடர்பான திட்ட அறிக்கைகள் வரப் பெற்றுள்ளன. அவை அரசின் பரிசீலனையில் உள்ளன. இத்திட்டம் ஏழாம் ஐந்தாண்டு திட்ட நடைமுறை காலத்தில் அனுமதிக்கப் பட்ட திட்டமாகும். எனவே, இத்திட்டத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்ட ஒதுக்கீடு ஏதுமில்லை. 31—3—1988 வரையில் ரூ. 1.14 கோடி செலவாகியுள்ளது. 1988—89-ல் இத்திட்டச் செலவு ரூ. 2 கோடியாக இருக்கும். 1989-90 ஆம் ஆண்டிற்குக் கேட்டுள்ள தொகை ரூ. 7.50 கோடியாகும். எனவே, ஏழாம் திட்டக் காலத்தில் எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 10.64 கோடியாகும். பணிகள் எட்டாம் திட்டத்திற்கு கொண்டு செல்லப் படும். எஞ்சிய பணிகள் 1992—93 ஆம் ஆண்டிற்குள் முடிக் கப்படுமென எதிர் பார்க்கப்படுகிறது.

நடுத்தரத் திட்டங்கள் :

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத் தொடக்கத்தில் அதாவது 1985—86-ல் கீழே கொடுக்கப்பட்டுள்ள நடுத்தரத் திட்டங்கள் குறித்த பணிகள் பல்வேறு நிலைகளிலுள்ளன :—

1. வாணியாறு நீர்த்தேக்கத் திட்டம்.
2. வேம்பகோட்டை நீர்த்தேக்கத்திட்டம்.
3. பெரியார் அணையை வலுப்படுத்துதல்.
4. ஈச்சம்பாடி அணை (ஈச்சம்பாடி கிராமத்திற்கருகில் பெண்ணையாறுக்குக் குறுக்கே அணை கட்டுதல்).





5. தொப்பையாறு நீர்த்தேக்கத் திட்டம்.
6. சித்கமல்லி நீர்த்தேக்கத் திட்டம்.
7. நொய்யல் நீர்த்தேக்கத் திட்டம்.
8. ஆனைமடுவு நீர்த்தேக்கத் திட்டம்.
9. குதிரையாறு நீர்த்தேக்கத் திட்டம்.
10. ஓரத்துப்பாளையம் நீர்த்தேக்கத் திட்டம்.
11. கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம்.
12. அனந்தனாறு கால்வாய்களையும் அதன் கிளைக் கால்வாய்களையும் மாற்றியமைத்து நவீனப் படுத்துதல்.

மேற்கூறிய நடுத்தர, நவீனப்படுத்தப்படும் 12 திட்டங் களுள் 7 நடுத்தரத் திட்டங்கள் (தொடர் எண்கள் 1, 2, 4, 5, 6, 7 மற்றும் 12 ஆகியவற்றைக் காண்க) இதுவரையில் முடிக்கப்பட்டுள்ளன.

1988—89 ஆம் ஆண்டில் ஒரு நடுத்தரத் திட்டம் (குதிரையாறு நீர்த்தேக்கத் திட்டம்) முடிக்கப்பட்டது. திட்ட இறுதியாண்டில் (1989—90) ஆனைமடுவு நீர்த் தேக்கத் திட்டப் பணியை முடிக்கக் கருதப்பட்டுள்ளது. கேளவரப்பள்ளி, ஓரத்துப்பாளையம் நீர்த்தேக்கத் திட்டங்களும் பெரியாறுஅணையினை வலுப்படுத்தும் திட்டமும் எட்டாம் திட்டக்காலத்தில் எஞ்சியுள்ள பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 1990—91 ஆம் ஆண்டிற்குள் முடிக்கப்படுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

போளூர் தாலுக்கா செண்பகத் தோப்பு கிராமத்தின் அருகில் கமண்டலாற்றின் குறுக்கே அமையும் நீர்த்தேக்கம்.

வடஆற்காடு மாவட்டம், போளூர் தாலுக்கா, செண்பகத் தோப்பு கிராமத்தின் அருகே கமண்டலாற்றின் குறுக்கே ஓர் நீர்த்தேக்கம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் செயலாக்கப்பட்டால் 5107.37 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 1585.97 ஏக்கர் இடைவெளி நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும். இத்திட்டத்திற்கு 307.54 ஏக்கர் வனலங்கள் ஆர்ஜிதம் செய்யப்படவேண்டும். இதற்கு வனத்துறை "ன் ஒத்திசைவு எதிர்பார்க்கப்படுகிறது. வனத்துறையின் ஒத்திசைவு பெறப்பட்ட உடன், இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பது குறித்து இவ்வாண்டு பரிசீலிக்கப்படும்.

[1989 ஏப்ரல் 19

## வாணியம்பாடி தாலுக்காவில் உள்ள ஆண்டியப்பனூர் ஓடையின் குறுக்கே அணை கட்டுதல்.

ஆண்டியப்பனூர் ஓடை தர்மபுரி மாவட்ட எல்லைக்கருகே அமைந்துள்ளது. இது மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் வறண்ட மாவட்டங்களுள் ஒன்றாகும். ஆண்டியப்பனூர் ஓடையின் குறுக்கே கட்டப்படும் அணைக்கட்டினால் சுமார் 810 எக்டேர் (2,000 ஏக்கர்) நிலம் பாசன வசதிபெறும். இதன் மூலம் ஆண்டியப்பனூர் கிராமத்தின் நீண்ட காலத்தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

இவ்வணைக்கட்டின் நீர்க்கொள்ளளவு சுமார் 112 மில்லியன் கன அடி, இந்த திட்டத்திற்கு சுமார் 254.09 ஏக்கர் பட்டாநிலங் களும், 24.51 ஏக்கர் புறம்போக்கு நிலமும் மற்றும் 98 ஏக்கர் வனத்துறை நிலமும் கையகப்படுத்தப்பட வேண்டும். வனத்துறை யின் ஒத்திசைவு எதிர்பார்க்கப்படுகிறது. வனத்துறையின் இசைவு பெற்றபின் நடப்பாண்டில் இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

## பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசன திட்டங்களின் கீழ் ஏற்படுத் தப்பட்ட சாதனை.

மேற்கூறிய பெரிய மற்றும் நடுத்தரத் திட்டங்களைச் செயற்படுத்துவதன் மூலம், ஏழாம் திட்டக் காலத்தில், கூடுதலாக 28435 ஹெக்டேருக்கு பாசனம் அளிக்கும் வகையில் பாசன வளத்தை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இதில், ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதல் மூன்றாண்டுகளில் 23,695 ஹெக்டேருக்குப் பாசன வசதி அளிக்கப்பட்டுள்ளது. 1988- 89 ஆம் ஆண்டில் 2,330 ஹெக்டேருக்குப் பாசனம் அளிக்கக் கருதப்பட்டுள்ளது; ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதியாண்டிற்கு அதாவது 1989— 90 ஆம் ஆண்டிற்கு 2,410 ஹெக்டேருக்குப் பாசன வசதியளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கிடைக்கக்கூடிய பெரும்பான்மையான மேற் பரப்பு நீர்வாயில்களைத் தமிழ்நாடு பயன்படுத்தியுள்ளது. எனவே, பெரிய ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்கள் எதனை யும் புதிதாகத் தொடங்க வாய்ப்பில்லை, கிளை ஆறுகளில் கிடைக்கும் மிகச் சிறிதளவு நீரோட்டமும் காட்டாற்றில் பெருக்கெடுக்கும் திடீர் வெள்ளமுமே பயன்படுத்தப்படவுள்ள ஒரே நீர் வாயிலாகும், இத்தகைய நீர்வளத்தைப் பயன்படுத்த சிறுபாசனத் திட்டங்கள் தீட்டப்படுகிறது.

எனவே, பலன்களை விரைவில் பெற இயலும் வகையில், குறுகிய கால அளவிற்குள் முடிவடையக் கூடிய சிறு பாசனத் திட்டங்களில் கவனஞ் செலுத்துவதே தற்போதைய நோக்க மாகும். திட்டக் காலத்தில், சிறு பாசனத் திட்டங்கள் பெரு மளவில் மேற்கொள்ளப்பட்டன.



1989 ஏப்ரல் 19]

ஐம்பது இலட்சம் ரூபாய்க்குக் குறைவான சிறு பாசனத் திட்டங்களைத் தலைமைப் பொறியாளர் (சிறு பாசனம்) மேற்கொள்கிறார்.

### சிறு பாசனத் திட்டங்கள்.

(ரூபாய்க்கு 50 இலட்சத்திற்கு மேல்.)

தலைமைப் பொறியாளர் (பாசனம்) செயல்படுத்திய சிறு பாசனத் திட்டங்களுக்கான ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 24.22 கோடியாகும். ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில், ரூ. 51.52 கோடி மதிப்பிட்டுச் செலவி லான பின்வரும் 8 சிறு பாசனத் திட்டங்கள் பற்றிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

1. நாகவதி நீர்த் தேக்கத் திட்டம்.
2. கேசாகுலிஹல்லா நீர்த்தேக்கத் திட்டம்.
3. கோ[illegible]டட்டி நீர்த் தேக்கத் திட்டம்.
4. கரியக்கோயில் நீர்த் தேக்கத் திட்டம்.
5. சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டம்.
6. ஆணை குட்டம் நீர்த் தேக்கத் திட்டம்.
7. பெரும்பள்ளம் நீரத் தேக்கத் திட்டம்.
8. திருப்பரப்பு அணைக்கட்டின் வலது புறக் கால்வாயை நீட்டித்து அதன் முழுப் பகுதியையும் நவீனப்படுத்தும் திட்டம்.

இந்த 8 திட்டங்களில், பின்வரும் 5 திட்டப் பணிகள் இது வரையில் முடிக்கப்பட்டுள்ளன, அவையாவன :—

1. நாகவதி நீர்த் தேக்கத் திட்டம்.
2. கேசரிகுளிஹல்லா நீர்த்தேக்கத் திட்டம்.
3. ஆணை குட்டம் நீர்த் தேக்கத் திட்டம்.
4. பெரும்பள்ளம் நீர்த்தேக்கத் திட்டம்.
5. திருபரப்பு அணையின் வலது புறக் கால்வாயை நீட்டித்து அதன் முழுப் பகுதியையும் நவீன படுத்தும் திட்டம்.

பாசன வளம் :

சிறு பாசனத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் கூடுதலாக 11,970 ஹெக்டேர் பரப்புக்கு பாசன வசதியளிக்கக் கருதப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட 11,970 ஹெக்டேர் பரப்பில், ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்றாண்டுகளில் 4,820 ஹெக்டேர் பரப்புக்குப் பாசனம் அளிக்கப்பட்டது. நடப்பாண்டில் 3,220 ஹெக்டேர் பரப்புக்குப் பாசனம் அளிக்கப்படும். ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் கால கடைசி ஆண்டில் 3,930 ஹெக்டேர் பரப்புக்குப் பாசனமளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சிறு பாசனத் திட்டங்கள் (ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டுக்கு குறைவானது.)

ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிற்கு குறைவான சிறுபாசன திட்டங்கள், தலைமைப் பொறியாளர் (சிறு பாசனம்) அவர்களால் நிறைவேற்றப்படுகிறது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சிறப்பு சிறுபாசன திட்டங்களுக்கும் தூர் எடுத்தல் மற்றும் புனரமைத்தல் திட்டப் பணிகளுக்காகவும் ரூபாய் 7.43 கோடி ஒதுக்கப்பட்டது. இவ்வொதுக்கீடு மேற்குறிப்பிட்ட திட்டப் பணிகளுக்கு மிகவும் குறைவானது. முதலில் ஊராட்சி ஒன்றியக் குளங்கள் மற்றும் முன்னாள் ஜமீன்குளங்கள், துரிதப்படுத்தப்பட்ட சிறு பாசன செயல்பாடு திட்டங்கள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. பின்னர் இப்பணிகள் சேர்க்கப்பட்டன.

திட்டத்தின் முதல் மூன்றாண்டுகளில் இத்திட்டப்பணிகளுக்கு செலவிடப்பட்ட தொகை கீழே தரப்பட்டுள்ளது—

(ரூபாய் இலட்சத்தில்.)

| | |
|---|---|
| (1) எஸ். ஐ. எம்.பி. மற்றும் டி.சி.ஆர். திட்டப் பணிகள். | 741.64 |
| (2) ஏ.எம்.ஐ.பி. ஊராட்சி ஒன்றிய ஏரிகள் .. மற்றும் முன்னாள் ஜமீன் ஏரிகள். | 321.78 |
| | 1,063.42 அல்லது 10.63 கோடி |



ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 60.20 கோடி மொத்தச் செலவில் 8 திட்டங்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அவையாவன :—

(ரூபாய் கோடியில்.)

| | |
|---|---|
| 1. மதுராந்தகம் வலப்புறக் கால்வாய் .. | 4.30 |
| 2. சென்ன வேடம்பட்டி ஏரி .. .... | 3.70 |
| 3. ஷண்முகா நிதி நீர்த்தேக்கத் திட்டம் .. | 6.95 |
| 4. சின்னவேடம்பட்டி அணை .. .. | 6.70 |
| 5. கொடிமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம் | 15.60 |
| 6. மதுரை மாவட்டம், தெப்பம்பட்டி கிராமத்தில் நாகலாற்றின் குறுக்கே ஏரி அமைத்தல். | 1.96 |
| 7. பொய்கை நீர்த்தேக்கத்திட்டம் .. | 10.87 |
| 8. நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டம் .. | 10.12 |
| மொத்தம் .. | 60.20 |

தொடர் எண் 1 முதல் 5 வரையிலான திட்டப் பணிகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டு, பல்வேறு நிலையில் உள்ளன. கொடுமுடி ஆறு நீர்த்தேக்க திட்டம் (வரிசை எண். 5) வனத்துறை இசைவுக்காக காத்திருக்கிறது. தொடர் எண். 7, 8 திட்டங்களுக்கான தொடக்கப் பணிகள் 1988–89-ல் தொடங்கப்பட்டுள்ளன. தொடர் எண் 6 திட்டப்பணி 1989–90-ல் மேற்கொள்ளப்படும்.

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்றாண்டுகளில் மேற் கூறியத் திட்டங்களைச் செயற்படுத்தியதற்கு ரூ.22.95 கோடி செலவு ஏற்பட்டுள்ளது. (1988–89) ரூ. 6.93 கோடி செலவு எதிர்பார்க்கப்படுகிறது. ஏழாம் ஐந்தாண்டுத்திட்டத்தின் கடைசி ஆண்டிற்கு ரூ. 8.10 கோடி நிதி ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது. ஏழாம் திட்டக் காலத்தில் எதிர்பாக்கப்படும் செலவு ரூ. 37.98 கோடியாகும்.

1988-89 ஆம் ஆண்டு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் 1989-90 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு பின்வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்.)

| | 1988-89 | 1989-90 |
|---|---|---|
| (1) எஸ்.எம்.ஐ.பி. மற்றும் டி. சி. ஆர்., திட்டப்பணிகள். | 246.85 | 246.49 |
| (2) ஏ.எம்.ஐ.பி. பஞ்சாயத்து யூனியன் மற்றும் முன்னாள் ஜமீன் ஏரிகள். | 125.00 | 125.00 |
| | 371.85 அல்லது 3.72 கோடி. | 371.49 அல்லது 3.71 கோடி. |

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகளுக்காக தற்போது தேவைப்படும் திருத்திய நிதி ஒதுக்கீடு ரூபாய் 18.07 கோடி எஸ்.எம்.ஐ.பி. மற்றும் டி.சி.ஆர்.திட்டப்பணிகளுக்காக ரூபாய் 12.35 கோடி, திட்டப்பணிகளுக்காக ரூ. 5.72 கோடி மேற்குறிப்பிட்ட திருத்திய மதிப்பீட்டில் அடங்கும். ஏ. என். ஐ. பி. ஊராட்சி ஒன்றிய மற்றும் முன்னாள் ஜமீன் ஏரிப் பணிகளும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டமையாலும் மற்றும் எஸ்.எம்.ஐ.பி. டி.சி.ஆர். பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு போதாமையால் திருத்திய நிதி ஒதுக்கீடு ரூ. 18.07 கோடியாக உயர்ந்துள்ளது.

செயல் இலக்கு :

எஸ்.எம்.ஐ.பி. மற்றும் டி.சி.ஆர். திட்டப் பணிகளில் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்செயல் இலக்கு 6,499 ஹெக். என நிர்ணயம் செய்யப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டு திட்டக் காலமான முதல் மூன்றாண்டுகளில் 5,639 ஹெக்டேரில் திட்டப் பணிகள் நிறைவு பெற்றன. 1988-89 ஆம் ஆண்டு செயல் இலக்கு 570 ஹெக்டேர் எஸ். எம். ஐ. பி. மற்றும் டி.சி.ஆர். திட்டப் பணி செயல்பாடுகள் மூலம் 1989-90 ஆம் ஆண்டில் கூடுதலாக 290 ஹெக்டேரில் நீர்ப்பாசன வசதிகளை பெருக்குவதென தீர்மானிக்கப்பட்டது.



இதர சிறுபாசனத் திட்டப் பணிகள் :

மத்திய அரசு மற்றும் அயல்நாட்டு உதவி பெறும் கீழ்க்கண்ட திட்டப்பணிகளுக்கும் தலைமைப் பொறியாளர் (சிறு பாசனம்) அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்—.

(1) ஒருங்கிணைக்கப்பட்ட மலைஜாதியினர் மேம்பாட்டு செயல் திட்டம்.

(2) மலைப்பகுதி மேம்பாட்டு செயல் திட்டம்.

(3) மேற்கு மலைப் பகுதி மேம்பாட்டு செயல் திட்டம்.

(4) ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிக்கும் செயல் திட்டம்.

மத்திய அரசு நிதி உதவி பெறும் திட்டப் பணிகள் சமூக நலம், திட்டம் மற்றும் வளர்ச்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகள் மூலமாக செயல்படுத்தப்படுகின்றன.

அயல்நாட்டு உதவி பெறும் திட்டப் பணிகள் :

ஏரிகள் நவீனப்படுத்தும் பணிகள் முதல் கட்டம் மற்றும் இரண்டாம் கட்டப் பணிகளாக ஐரோப்பிய பொருளாதார சமுதாய உதவியுடன் நடைபெறுகின்றன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதல் கட்டப் பணிகளுக்காக ரூ. 24.65 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக முதல் மூன்றாண்டுகளில் செலவிடப்பட்ட தொகை ரூ. 2,306.35 இலட்சம். 1989-90-ல் இரண்டாவது கட்டப்பணிகள் எடுத்துக் கொள்ளலாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. 1988-89 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு 1989—90 ஆம் ஆண்டிற்கான உத்தேசத் திட்ட நிதி ஒதுக்கீடு கீழே தரப்பட்டுள்ளன.

(ரூபாய் இலட்சத்தில்.)

| | 1988—89 | 1989—90 |
|---|---|---|
| ஐரோப்பிய பொருளாதார சமுதாய நிதி உதவியுடன் நடைபெறும் முதல் கட்ட ஏரி நவீனப்படுத்தும் பணிகள். | 914.41 | 915.00 |
| ஐரோப்பிய பொருளாதார சமுதாய நிதி உதவியுடன் நடை பெறும் இரண்டாம் கட்ட ஏரி நவீனப்படுத்தும் பணிகள். | .. | 347.00 |
| | 914.41 | 1,262.00 |

ஐரோப்பிய பொருளாதார சமுதாய நிதி உதவிபெறும் இப் பணிகளுக்கு தேவைப்படும் தற்போதைய திருத்திய மதிப்பீடு ரூ. 44.83 கோடி. இந்நிறுவனத்தின் நிதி உதவியை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு கூடுதல் பணிகள் சேர்க்கப் பட்டதே இத்திருத்திய மதிப்பீட்டின் உயர்வுக்குக் காரண மாகும். பெடரல் ரிபப்ளிக் ஜெர்மனி மற்றும் உலக வங்கியிட மிருந்து இத்திட்டப் பணிகளுக்காக நிதி உதவியைப் பெறுவதற்கு அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகின்றது.

செயல் இலக்கு :

ஏரிகள் நவீனப்படுத்தும் முதல் கட்டப்பணியின் செயல் இலக்கு 3,271 ஹெக்டேர் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்றாண்டுகளில் 1,685 ஹெக் டேர் பாசன வசதி பெற்றன. 1988—89ஆம் ஆண்டு இலக்குக் குறியீடு 806 ஹெக்டேர். 1989—90 ஆம் ஆண்டில் கூடுதலாக 800 ஹெக்டேர் பாசன வசதியளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்பணிக்காக நிர்ணயிக் கப்பட்ட குறியீட்டை அடைவதற்கு எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஐரோப்பிய பொருளாதார அமைப்பின் நிதியுதவியுடன் தமிழ் நாட்டில் ஏரிப்பாசன முறையை நவீனப்படுத்துதல்— நிலை-I.

தமிழ்நாட்டிலுள்ள ஏரிப்பாசன முறையை நவீனப்படுத் தும் திட்டத்தின் கீழ், செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென்னாற் காடு, புதுக்கோட்டை, தேவர் திருமகன், இராமநாதபுரம், காமராஜர் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 200 ஹெக்டேருக்கும் குறைவாக ஆயக்கட்டுடைய மழை நீரை எதிர்பார்த்திருக்கும் 150 ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டம் ஐரோப்பிய பொருளாதார அமைப்பின் 25 மில்லியன் ஈ.சி.யு. முழு உதவியுடன் எண். 1/83-18 ஆம் எண். நிதியுதவி ஒப்பந்தத் தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் 1984 ஜூலையில் தொடங்கப்பட்டது.

ரூ. 29.93 கோடி மதிப்பீட்டுச் செலவில் இந்த 150 பணிகள் அனைத்துக்கும் அரசு ஒப்புதலளித்துள்ளது. ஈ. சி. யு.-வின் செலாவணி மதிப்பு 1984 ஜூலையில் ரூ.9.5 ஆக இருந்தது; இது 1988 இல் ரூ. 16 ஆக உயர்ந்தது. ஐரோப்பிய பொருளாதார அமைப்பின் கீழ் இந்த 25 மில்லியன் ஈ.சி.யு. மானியத்தைப் பயன்படுத்திக்கொள்ள பணிகளின் மொத்தச்செலவு ரூ. 44.43 கோடி அளவுக்கு ஆகிறது. இத்திட்டத்தின் கீழ், கூடுதலாக 56 ஏரிகள் நவீனப்படுத்துவதற்கு எடுத்துக்கொள்ளப்படும்.



ஏழாவது திட்டத்தின் முதல் மூன்றாண்டுகளில் ஏற்பட்ட செலவு ரூ. 2,306.35 இலட்சம் (அல்லது) 23.06 கோடியாகும்.

1988—89 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு ரூ. 914.41 இலட்ச மாகும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டில் அதாவது 1989—90 ஆம் ஆண்டு உத்தேசிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ. 915.00 இலட்சமாகும்.

திட்டச் சாதனை ;

1987-88ஆம் ஆண்டு வரையில் 1,665 ஹெக்டேர் பரப் பளவுக்குப் பாசன வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 19—8—1989 ஆம் ஆண்டில் 806 ஹெக்டேர் பரப்பளவுக்குக் கூடுதலாக பாசன வசதி அளிக்கப்படும். கடைசி ஆண்டில் (1989-90)800 ஹெக்டேர் பரப்பளவுக்குப் பாசன வசதி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் நிலை I பணியை நிறைவேற்று வதன் மூலம் மேலும் கூடுதலாக3,271 ஹெக்டேர் பரப்பளவுக்குப் பாசன வசதி அளிக்கப்படும்.

வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள்:

வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்காக ஏழாவது ஐந்தாண்டுத்திட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 9.00 கோடியாகும். 1985-86 முதல் 1987-88 வரையிலான மூன்றாண்டுகளில் ரூ. 5.91 கோடி அளவுக்குச் செலவு ஏற்பட்டுள்ளது. 1988-89 ஆண்டுக்கான வரவு-செலவு ஒதுக்கீடு ரூ. 1.81 கோடியாகும். இத்தொகையில் ரூ. 1.71 கோடியைப் பயன்படுத்திக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1989-90ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு இலக்கு ரூ. 1.37 கோடியாகும்.

வைகை ஆற்றுக்கு வெள்ளப் பாதுகாப்புக்கான கரை வசதி அமைத்தல், பார்த்திபனூர் மதகுக்கு கீழே வெள்ளத்தால் சேதமடைந்த வாய்க்காலைப் புதுப்பித்தல் ஆகிய பணிகள் இத் துறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பெருந்திட்டப்பணிகளாகும். பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

கால நிலைமைகள்.

1988-89 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் பெரியாறு, தாமிரபரணி, கோதையாறு, பரம்பிக்குளம் நீர்த்தேக்க நீர் பிடிப்பு பகுதிகளில் தென்மேற்கு பருவமழை இயல்பாக இருந்தது. ஆனால் காவிரி பாசனப் பகுதியில் ஜூலை மாதம் மத்தியில் மட்டும் பருவமழை தீவிரமாக இருந்தது. தென்னாற் காடு, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் 1988 செப்டம்பர் முதல் வாரம் வரையில்.

பருவமழை இயல்பாக அல்லது இயல்புக்கும் கூடுதலாக
இருந்துள்ளது. செப்டம்பர் மாதம் இரண்டாவது வாரத்தி
லிருந்து தென் மேற்கு பருவமழையின் தீவிரம் குறைந்துள்ளது.

காவிரி வடிநிலம்.

நீர்த் தேக்கத்தில் போதிய அளவுக்குத் தண்ணீர் இல்லாத
தால் ஜூன் மாதம் 12 ஆம் தேதி திறக்கவிருந்த மேட்டூர்
நீர்த் தேக்கம் பாசனத்திற்காக அந்த தேதியில் திறந்து விட
இயலவில்லை, எனினும் இந்நீர்த் தேக்கம் சுமார் இரண்டு
மாத கால தாமதத்திற்குப் பிறகு 7—8—1988 அன்று பாசனத்
திற்காக திறந்து விடப்பட்டது. பாசன காலம் முழுவதற்கும்
இருக்கிற நீரை இயன்ற அளவு முழுமையாகப் பயன்படுத்திக்
கொள்ளும் நோக்குடன் தொடக்கத்திலிருந்து முறை வைப்புப்
பாசன ஏற்பாடு பின்பற்றப்பட்டது.

இந் நீர்த்தேக்கம் காலதாமதமாகத் திறந்து விடப்பட்டதன்
காரணமாக சுமார் 5 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட
வேண்டிய குறுவைப் பயிரைப் பயிரிட இயலவில்லை. மொத்த
நிலப் பரப்பிலும் ஒரு போகப் பயிரை மட்டும் பயிரிடுமாறு உழ
வர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

கருநாடக மாநிலம் கிருஷ்ணராஜசாகர், கபினி நீர்த் தேக்கத்
திற்குக் கீழே உள்ள நீர்ப் பிடிப்புப் பகுதியில் அதிக அளவுக்கு
மழை இருந்ததன் காரணமாக மேட்டூர் நீர்த் தேக்கத்தில்
தண்ணீர் வரத்து நன்றாக இருந்தது. தண்ணீர் கொள்ளளவு
64 டி.எம்.சி. வரையில் உயர்ந்துள்ளது. மேட்டூர் நீர்த் தேக்
கத்தில் கொள்ளளவு உயர்ந்ததன் காரணமாக மேட்டூர் நீர்த்
தேக்கத்தில் கீழ் வருகின்ற அதாவது சேலம், பெரியார் மாவட்டங்
களிலுள்ள மேட்டூர் கால்வாய், திருச்சி, தஞ்சாவூர், மாவட்டங்
களிலுள்ள புதிய கட்டளை உயர் மட்டக் கால்வாய், புள்ளம்பாடி
கால்வாய் அவைகளின் கீழ் வருகின்ற எஞ்சிய பாசன ஆயக்
கட்டுகளுக்கும் 21—9—1988 அன்று பாசனத்திற்காக திறந்து
விடப்பட்டன. 1988 நவம்பர், டிசம்பரில் காவிரி கழிமுகப் பகுதி
யில் மழை குறைவாக இருந்தது. மேட்டூர் நீர்த் தேக்கத்தின்
நீர் இருப்பு விவசாயத்திற்குப் போதுமானதாக இல்லை
என்று அறியப்பட்டது. தற்போதுள்ள பயிர்களைச் சாகு
படி நிலைக்குக் கொண்டு வர குறைந்தது 30 டி. எம். சி.
தண்ணீர் தேவைப்படுமென்று மதிப்பிடப்பட்டது. பயிரிடப்
பட்டுள்ள பயிர்களைக் காப்பாற்ற கருநாடகத்தின் நீர்த்
தேக்கத்திலிருந்து 30 டி.எம்.சி. தண்ணீரை விடுமாறு கருநாடக
அரசை தமிழ்நாடு அரசு எழுதிக் கேட்டுக் கொண்டது. பெங்க
ளூரில் நடை பெற்ற அதிகாரிகள் அளவிலான பேச்சு வார்த்
தையையடுத்து கருநாடகஅரசு 5 டி.எம்.சி. தண்ணீரை மட்டும்விட
ஒப்புக்கொண்டுள்ளது. இந்த 5டி.எம்.சி. தண்ணீர் 28—12—1988
முதல் 4—1—1989 வரையில் விடப்பட்டது. 12—1—1989





அன்று மேட்டூர் நீர்த் தேக்கம் மூடப்பட்டது. அதன் பின்னர் தமிழ் நாட்டில் புதிய அமைச்சரவை பொறுப்பேற்ற பின்னர் தமிழக முதலமைச்சர் வேண்டுகோளுக்கிணங்க கர்நாடக அரசு முதல் நிலையில் 2 டி.எம்.சி.யும் அதனையடுத்து 3 டி.எம்.சி.யும் தண்ணீரைத் திறந்து விட்டுள்ளது. ஆக இந்தப் பாசன காலத்தில் கருநாடக அரசு மொத்தம் 10 டி.எம்.சி. தண்ணீரை திறந்து விட்டுள்ளது. கருநாடக அரசு திறந்து விட்டுள்ள இந்தத் தண்ணீரைக் கொண்டு காவிரி கழிமுகப் பகுதிக்கு 12—2—1989 முதல் ஒரு வாரம் பாசனமளிக்க அனுமதிக்கப்பட்டது.

கீழ் பவானி பிரதான கால்வாய் பாசனத்திற்காக வழக்கமான தேதியான ஆகஸ்டு 15 அன்று திறந்து விடப்பட்டது. முறை வைப்புப் பாசன ஏற்பாட்டைப் பின்பற்றி பாசனம் முறைப்படுத்தப் பட்டது. பவானி சாகரின் கீழ் வருகின்ற பழைய ஆயக்கட்டு களும் பாசனத்திற்காகத் திறந்து விடப்பட்டன. டிசம்பர் மாதத் தில் பருவமழை பொய்த்தது; அதன் காரணமாக நீரின் கொள் ளளவு மிகவும் குறைந்தது. கீழ் பவானி திட்டப் பாசனப் பகுதி யில் ஏற்பட்ட பயிர் இழப்பை அரசு மதிப்பிட்டது. சுமார் 3 இலட் சம் டன் நெல் உற்பத்தி இழப்பு ஏற்பட்டதாக மதிப்பிடப்பட் டது. மேற்கொண்டு பயிர் விளைச்சல் பாதிப்பினால் விவசாயி களுக்குக் கடுமையாக நட்டத்தை ஏற்படுத்துவதுடன் உணவுப் பொருள் உற்பத்தியிலும் நட்டம் ஏற்படுத்தும், எனவே, மின் வாரியத்திற்கு ஏற்பட்ட இழப்பு மின் உற்பத்தி இழப்பு ரூ. ஏழு கோடியாக இருந்த போதிலும் 10-12-1988 முதல் 21-12-1988 வரையில் பவானி நீர்த் தேக்கத்தின் புனல் நீர்த் தேக்கத்திலிருந்து நாளொன்றுக்கு 175 மில்லியன் கன அடி நீரை விடுமாறு ஆணையிடப்பட்டது. அவ்வாறு விடப்பட்ட தண்ணீர் ஆயக்கட்டு பாசனத்திற்கு விடப்பட்டது. 1—1—1989 முதற் கொண்டு பாசனந்திற்கு நீர் விடுவது நிறுத்தப்பட்டது.

அமராவதி பிரதான கால்வாயில் வழக்கமாக தண்ணீர் விடு கின்ற நாள் ஆகஸ்டு 1ஆம் நாளாகும். தென் மேற்கு பருவமழை பொய்த்ததன் காரணமாக, நீர்த் தேக்கத்திற்குப் போதிய அளவு தண்ணீர் வரத்து இல்லை. இதன் காரணமாக இந்தக் கால்வாயை வழக்கமான தேதியன்று அதாவது ஆகஸ்டு 1ஆம் நாளன்று இந்நீர்த் தேக்கத்தின் கீழ் புதிய ஆய்க்கட்டு நிலங் களுக்கு தண்ணீரைத் திறந்து விட இயலவில்லை. எனினும் முன் னுரிமை பெற்றுள்ள பழைய வாய்க்கால்களுக்கு 27—7—1988 அன்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. அச்சமயம் தண்ணீர் இருப்பு ஓரளவுக்கே இருந்தது. இதனையடுத்து, நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை இருந்ததன் காரணமாக நீர்த்தேக்கத்திற்கு தண்ணீர் வரத்து இருந்தது. தண்ணீர் கொள்ளளவு மேம்பாடு அடைந்ததைக் கருத்தில் கொண்டு 2—10—1988 முதற் கொண்டு புதிய கால்வாய்க்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டது. 1—1—1989 அன்று நீர்த்தேக்கம் மூடப்பட்டது.

பெரியாறு :

பெரியாறு பிரதானக் கால்வாயின் கீழ் வருகின்ற இரு போகப் பயிர் சாகுபடி பகுதிக்கு 10—6—1988 அன்று தண்ணீர் திறந்து விடப்பட்டது (வழக்கமான தேதி ஜுன் முதல் நாள்), பெரியாறு பிரதான கால்வாயின் கீழ் வருகின்ற ஒரு போகப் பயிருக்கு 25—9—1988 அன்று (வழக்கமான தேதி ஆகஸ்டு 15) தண்ணீர் திறந்துவிடப்பட்டது. கம்பம் பள்ளத்தாக்குப் பகுதிக்கு ஜுன் மாதம் 1ஆம் தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது. (வழக்க மானதேதிஜுன் 1 ஆம்நாள்) தண்ணீரின் அளவு போதுமானதாக இல்லாததால் திருமங்கலம் பிரதான கால்வாய் 10—10—1988 அன்று தான் திறந்துவிடப்பட்டது. நீரின் அளவு போது மானதாக இல்லாததால் பெரியாறு புதிய விரிவாக்க கால்வாய் பகுதிக்குப் பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிட இயலவில்லை.

தாமிரபரணி :

தாமிரபரணி வாய்க்கால்களின் மூலம் மொத்தம் 86,000 ஏக்கர் பரப்பளவுக்குப் பாசனம் பெறுகிறது. பதினொரு வாய்க் கால்களில், கடைசி நான்கு வாய்க்கால்களுக்குச் சிறப்பு கார்பாசன னத்திற்குத் தண்ணீர் விடப்படுகிறது. எனைய வாய்க்கால் களுக்கு முறையாக கார் பயிருக்குத் தண்ணீர் விடப்படுகிறது. ஆக ஒரு போகப் பயிருக்குத் தண்ணீர் பதினொரு வாய்க்கால்களிலும் பெஷானம் பயிருக்காக தொடர்ந்து அனைத்து ஆயக்கட்டு நிலங் களுக்கும் தண்ணீர் விடப்படுகிறது.

கோதையாறு :

கோதையாறு, பட்டணங்கால், ராதாபுரம் கால்வாய்களில் முறையே 1—6—1988, 5—6—1988, 20—6—1988. ஆகிய தேதிகளில் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டது.

பெண்ணாறு :

தருமபுரி மாவட்டத்தில் 9,000 ஏக்கர் பயனளிக்கக் கூடிய கிருஷ்ணகிரி வாய்க்கால் பரப்பளவிற்கு ஒன்றாம் நாள் திறந்து விடப்படும். ஆனால் வழக்கமாக ஆகஸ்டு விடும் அந்நாளில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால் திறந்து விட முடியவில்லை. செப்டம்பரில் கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்தில் நீர்த்தேக்க அளவு, நீர்த் தேக்க முழு அளவிற்கு ஓரடி குறை வாகத் தண்ணீர் இருந்தது. உபரி நீர் சாத்தனூர் நீர்த் தேக் கத்திற்கு அனுப்பப்பட்டது. நீர்த் தேக்கத்திற்கு முழு அளவு நீர் செப்டம்பர் மாதத்தில் வந்து சேர்ந்த போதும் ஆயக்கட்டு தாரர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க 4—11—1988 அன்று பாசனத்திற்காக வாய்க்கால் திறந்து விடப்பட்டது



கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில் ஏற்பட்ட நீர் நிலை முன்னேற்றம் காரணமாக சாத்தனூர் நீர்த்தேக்கத்தின் நீர் அளவில் சிறிதளவு முன்னேற்றம் காணப்பட்டது. எனினும் அனைத்து ஆயக்கட்டு நிலங்களுக்கும் நீர் வழங்கப் போதுமானதாக இல்லை. எஸ்.ஆர். பி.சி-யின் கீழ் ஏரிகளை நிரப்புவதற்கு மட்டும் சாத்தனூர் நீர்த் தேக்கத்திலிருந்து சுமார் 5,000 ஏக்கர் பரப்பு பயனடையும் வகை யில் தண்ணீர் வழங்க அனுமதி அளிக்கப்பட்டது. சாத்தனூர் வட கரை கால்வாய்த் திட்டத்தின் கீழ் சுமார் 20,000 ஏக்கர் பரப்பு பயனடையும் வகையில் தண்ணீர் வழங்க அனுமதி அளிக் கப்பட்டுள்ளது.

பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம்.

பரம்பிக்குளம் ஆளியாறுத் திட்டத்தைப் பொறுத்தவரை யில் பரம்பிக்குளம், முக்கியக் கால்வாய் 3 மண்டலத்தில் மே திங்கள் முதல் நாளிலிருந்து பாசனத்திற்குத் திறந்து விடப்பட்ட 60,000 ஏக்கர் பரப்பிற்கு 4—10—1988 அன்று தண்ணீர் விடு வது நிறுத்தப்பட்டது. பரம்பிக்குளம் ஆளியாறு திட்ட ஆயக் கட்டு விரிவாக்கத் திட்டத்தில் பல்லடம்—திருப்பூர் பகுதியில் உள்ள குளங்களையும் ஏரிகளையும் நிரப்புவதற்கு 1988 ஆகஸ்ட் மூன்றாவது வாரத்திலிருந்து 4—10—1988 வரையில் தொடர்ந்து நீர் வழங்கப்பட்டு வந்தது.

பரம்பிக்குளம், சோலையாறு நீர்த் தேக்கங்களில் சாதக மான அளவு நீர்த் தேக்கநிலை இருந்ததால், பரம்பிக்குளம் முக்கிய கால்வாய் மண்டலம்1-ன் கீழ் 47,473 ஏக்கருக்கும், உடுமலைப்பேட்டை கால்வாயின் கீழ் 18,540 ஏக்கருக்கும், பாலாறு கழிமுகப் பகுதியிலுள்ள உயரளவு கால்வாயின் கீழ் 730 ஏக்கருக்கும் ஆளியாறு கழிமுகப்பகுதியிலுள்ள சேதுமடை கால் வாயின் கீழ் 5,044 ஏக்கருக்கும் 4—12—1988 அன்று பாசனத் திற்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. மேலும் ஆளியாறு நீர்த்தேக்கம் பொள்ளாச்சிக் கால்வாய் மண்டலம் 'ஏ' பகுதியில் 11,000 ஏக்கருக்கும், வேட்டைக்காரன்புதூர் வாய்க்கால் மண் டலம் 'பி' பகுதியில் 5,500 ஏக்கருக்கும் 21—12—1988 முதற் கொண்டு பாசனத்திற்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இவ்வாறு கோயம்புத்தூர் மாவட்டத்தில் மொத்தம் 0.88 இலட்சம் ஏக்கர் பரப்புடைய நிலத்திற்கு 1988-89-ஆம் ஆண்டு இரண்டாவது பகுதியில் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

வட கிழக்கு பருவ மழை.

பொதுவாக தமிழ்நாட்டில் அக்டோபர் 3-ஆம் வாரத்தில் தொடங்கும் வடகிழக்கு பருவமழை நவம்பர் 2-ஆம் நாள் அதுவும் ஒரே வாரம்தான் பெய்துள்ளது. அனைத்து மாவட்டங் களிலும் பெய்துள்ள மழையளவை, வழக்கமான மழையள வுடன் ஒப்பிடும்போது குறைவானதாகவுள்ளது. வட கிழக்குப்

ப்ருவமழை தவறியதால் வடகிழக்குப்பருவமழையை நம்பியிருந்த பெரும்பாலான நீர்த் தேக்கங்களை பாசனத்திற்கு திறந்து விட முடியவில்லை.

இவ்வாறு, மொத்தமுள்ள சுமார் 22.46 இலட்சம் ஏக்கர் பரப்புடைய முன்பருவப் பயிரில் சுமார் 21.89 இலட்சம் ஏக் கருக்குத் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. மொத்தமுள்ள 10.84 இலட்சம் ஏக்கர் பரப்புடைய பின்பருவப் பயிரில் 4.91 இலட்சம் ஏக்கர் பரப்பிற்குத் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

<u>முடிவுரை.</u>

முன்பருவப்பயிர், பின்பருவப்பயிர் காலத்தில் மொத்தமுள்ள 33.30 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் (i, ii) 26.80 இலட்சம் ஏக்கர் பரப்பிற்கு மட்டுமே தண்ணீர்த் திறந்து விடப்பட்டது. போதிய அளவு தண்ணீர் இருப்பு இல்லாததால், எஞ்சியுள்ள 6.50இலட்சம் ஏக்கருக்கு தண்ணீரைத் திறந்துவிட முடியவில்லை. தண்ணீர் திறந்து விடப்பட்ட பகுதிகளில் கூட காவிரி பாசனத் திட்டத்தின் கீழ் 2 இலட்சம் ஏக்கர் பரப்பும், பெரியாறு வைகைத் திட்டத்தின் கீழ் சுமார் ஒரு இலட்சம் ஏக்கர் பரப்பும் பற்றாக் குறை நிலைமை காரணமாக மோசமாக பாதிக்கப்பட்டது.

காவிரி நீர்ப் பிரச்சனை:

மத்திய அரசு முன்னிலையில் சென்ற 16 ஆண்டு காலமாக நடைபெற்று வந்த காவிரி நீர் சம்பந்தப்பட்ட மூன்று மாநிலங்களை சேர்ந்த முதலமைச்சர்களிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை மூலமும் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் மூலமும் எந்தப் பலனையும் அளிக்கத் தவறிவிட்டதாலும், பேச்சு வார்த்தை மூலம் சுமூகமான உடன்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்பு எதுவும் இல்லாததாலும், காவிரி நீர்ப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் பயனற்றுப் போயின. 16—6—1986 அன்று மத்திய அரசு கூட் டியக் கூட்டத்தில் நடுவர் மன்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டது. இது 1956 ஆம் ஆண்டு மாநிலங் களுக்கு இடையேயான தண்ணீர்த் தகராறுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் காவிரி நீர்ப்பிரச்சினையை கவனிப்பதற்கு நடுவர் மன்றம் அமைப்பது குறித்து தமிழ்நாடு அரசு 6—7—1986 அன்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டது. மத்திய அரசு இதுவரை நடுவர் மன்றம் ஒன்றை ஏற்படுத்தவில்லை.

இதே சமயம், தமிழ்நாடு காவிரி நீர்ப்பாசன விளைப் பொருட் கள் விவசாயிகள் நலஉரிமைப் பாதுகாப்புச்சங்கம் 18—7—1988 -ஆம் நாளிட்ட ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்தது. அதில், காவிரி நீர்ப்பிரச்சனை நடுவர் மன்றம் ஒன்றிற்கு அனுப்ப



உத்தரவிடுமாறு மத்திய அரசை அச்சங்கம் கேட்டுக்கொண்டது. இதில் உச்ச நீதி மன்றம் பிறப்பித்த ஆணையின் படி சுமூகமான முடிவு ஒன்றை ஏற்படுத்தும் நோக்குடன் 1988 செப்டம்பரில் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் கர்நாடக முதலமைச்சருடன் பேச்சு வார்த்தை நடத்தினார். ஆனால், இருதரப்பிலும் பயனளிக்கத்தக்க முயற்சிகள் இருந்த போதிலும், பொது வான உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை. இது குறித்து. 30—9—1988 அன்று உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப் பட்டது. மத்திய அரசு, நடுவர் மன்றம் ஒன்றை ஏற்படுத்துவதை குறித்து இதுவரை ஒரு முடிவிற்கு வரவில்லை. எனினும், தமிழக அரசு, கர்நாடக அரசுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை மூலம் சுமூகமான முடிவு ஒன்றை அடைவதற்குரிய வாய்ப்பு குறித்து சாத்தியக்கூறினை ஆய்ந்து வருகிறது. தமிழக முதலமைச்சர் அவர்கள் இது குறித்து ஏற்கனவே கர்நாடக முதலமைச்ச ருடன் பேச்சு வார்த்தை நடத்தி உள்ளார். இருமாநில அரசு களுக்கும் இடையேயான இருதரப்பு பேச்சுவார்த்தை விரைவில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<u>சென்னை மாநகருக்கான கிருஷ்ணா நதி குடிநீர் வழங்கல் திட்டம் :</u>

1976 ஆம் ஆண்டில் பாரதப் பிரதமர் அவர்கள் மேற் கொண்ட முயற்சியின் பேரில், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றும், கிருஷ்ணா நதி நீரில் தங்களுக்குள்ள பங்கில் 5 டி.எம்.சி. அளவு நீரைச் சென்னை மாநகருக்குக் குடிநீருக்காக வழங்க ஒப்புக்கொண்டன. சென்னை மாநகர் குடிநீர் வழங்குதலுக்காக கிருஷ்ணா நதியி லிருந்து 15 டி.எம்.சி. நீரைப் பெறுவதற்கானத் திட்டத்தை செயல்படுத்த 18—4—1983 ஆம் நாளன்று தமிழ்நாடு அரசு, ஆந்திரப் பிரதேச அரசுடன் ஒப்பந்தம் ஒன்று செய்துக் கொண்டது. ஒப்பந்தத்தின் வரையறை நிபந்தனைக்குட்பட்டு இத் திட்டம், சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கல், ஆந்திரப் பிரதேசத்திற்குப் பாசனம் அளித்தல் என்ற கூட்டுத் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் மேற்கொள்ளக்கூடிய பணிக்கான செலவில் ஒரு பகுதியை தமிழ்நாடு ஏற்கவேண்டியுள்ளது. சென்னை மாநகர் குடிநீர் வழங்கலுக்கு ஆந்திரப்பிரதேச தமிழ்நாடு எல்லையில், ஆண்டொன்றுக்கு 12 டி.எம்.சி. அளவு நீர் (கொண்டு வருகையில் ஏற்படும் இழப்பு நீங்கலாக) வழங்கப்படும். தமிழ்நாட்டிற்கு அனுமதிக்கப்பட்ட நீரின் முழு அளவினையும் கொண்டு வர ஸ்ரீசைலத்திலிருந்து பூண்டிக்கு நீர் எடுத்துவரும் அமைப்பு நிறை வேற்றப்பட்டு வருகிறது. எனினும், தமிழக எல்லையில் இப் பணிகள் பல கட்டத்தில் நிறைவேற்றப்படவுள்ளது. முதல் கட்டத்தில் நாள் ஒன்றுக்கு 400 மில்லியன் காலன் நீர் சேமிப்புத் திட்டம் கருதப்பட்டுள்ளது.

பூண்டி நீர்த்தேக்கம், செம்பரம்பாக்கம், செங்குன்றம் ஏரிகள் ஆகியவற்றின் முழு கொள்ளளவை 2 அடி அதிகரித்தல், தமிழ்நாடு எல்லையோரப் பகுதியிலிருந்து பூண்டி நீர்த்தேக்கத் திற்கு கால்வாய் வெட்டுதல், பூண்டி நீர்த் தேக்கத்திலிருந்து செம்பரம்பாக்கம் ஏரிக்கு இணைப்புக் கால்வாய் வெட்டுதல் போன்ற பணிகள் அடங்கிய முதல் கட்டப் பணியை நிறைவேற்று வதற்காக, ரூ. 30.15 கோடி தொகைக்கு இவ்வரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

தமிழ்நாடு எல்லையோரப் பகுதியிலிருந்து பூண்டி நீர்த் தேக்கத்திற்குக் கால்வாய் அமைக்க உத்தேசித்திருந்த பணியின் மண்வெட்டும் பணியில் பெரும்பகுதி முடிக்கப்பட்டுள்ளது. 39 குறுக்குக் கல் கட்டுமானப் பணிகளில் 25 முடிக்கப் பட்டுள்ளன. பூண்டி நீர்த்தேக்கத்தின், முழு கொள்ளளவும் அதிகரிப்பதற்காக நிலம் கையகப்படுத்தும் பணியும் முடிக்கப் பட்டுள்ளது. செங்குன்றம், செம்பரம்பாக்கம் ஏரிகளின் முழு கொள்ளளவை அதிகரிப்பது, பூண்டி நீர்த் தேக்கத்திலிருந்து செம்பரம்பாக்கம் ஏரிக்கு இணைப்புக் கால்வாய் வெட்டுதல் ஆகியவற்றிற்கான நிலத் திட்டவரை படங்கள் தயாரிக்கப் பட்டு வருகின்றன.

இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து தமிழ்நாட்டு எல்லைக்குள் பொதுப்பணித் துறை ரூ. 14.952 கோடி (1989 பிப்ரவரி வரை (19.85 இலட்சம்) செலவிடப்பட்டுள்ளது.

**ஆந்திரப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள், தெலுங்கு கங்கா திட்டம் ;**

1988ஆம் ஆண்டு விலை வீதங்களின்படி ஆந்திர மாநிலத்தில் பணிகளின் மொத்தச் செலவு ரூ. 938 கோடியாகும். அதில் தமிழ்நாட்டின் பங்கு ரூ. 251 கோடி என்று கணக் கிடப்படுகிறது.

1988 டிசம்பர் இறுதி வரை தெலுங்கு கங்கா திட்டத் திற்கானச் செலவு ரூ. 274.12 கோடி ஆகும். இச்செலவில் தமிழ்நாட்டின் பங்கு ரூ. 74.05 கோடி என்று கணக்கிடப் படுகிறது. இதுவரை ஆந்திரா பிரதேசத்திற்கு வழங்கப் பட்ட தொகை ரூ. 47.00 கோடியாகும். 1991-92ஆம் ஆண்டு வாக்கில் சென்னை மாநகருக்கு கிருஷ்ணா நீரைக் கொண்டு வர ஏதுவாக இருக்கும் வகையில், இத்திட்டத்திற் கான அவசியமான துணைப் பணிகளை முடிப்பதற்காக நிதி ஒதுக்குவது குறித்து ஆந்திர பிரதேச அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.





**பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் :**

**ஒப்பந்தத்தை மறு ஆய்வு செய்தல்.**

29—5—1970ஆம் நளன்று கையெழுத்தான பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் குறித்த தமிழ்நாடு-கேரளா ஒப்பந்தம் 9—11—1958ஆம் நாளன்று முதல் செயலுக்கு வந்துள்ளதாக கருதப்படுகிறது. அன்றுதான், கேரளா, தமிழ்நாடு மாநில முதல்வர்கள், நீரைப் பங்கிட்டுக் கொள்வதற்கான விரிவான கொள்கைகள் குறித்த அவர்களின் ஒப்பந்தத்தை மத்திய அமைச் சரிடம் முதலில் தெரிவித்தனர். இந்த இடைப்பட்ட காலத்தில் ஒப்பந்தத்தின் விவரங்களை, இரு மாநில அதிகாரிகள் தங்களுக் குள் விவாதித்து முடிவு செய்தனர். 30 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த ஒப்பந்தத்தை மறு ஆய்வு செய்ய ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. 1988 நவம்பர் முதல் மறு ஆய்வு செய்ய வேண்டும். ஒப்பந்தத்தின் பல்வேறு அம்சங்கள் குறித்தும் விதித் துறைகள் குறித்தும் (தற்போது கிடைத்துள்ள புள்ளி விவரங்களின் அடிப்படையில், இந்த பாசன ஏற்பாட்டிற்கு வழங்கப்படும் நீர் அளவைப் பெருக்க வேண்டியதன் அவசியம் உள்பட) ஆய்வு செய்யவும், கடந்த ஆண்டுகளாக செயல் படுத்தப்பட்ட இந்த பாசன ஏற்பாட்டுத் திட்டத்தின் மூலம் பெறப்பட்ட அனுபவத்தைக் கொண்டு மறு ஆய்வின்போது பரிசீலிக்க அவசியமானவையாக இருக்கக்கூடிய திருத்தங்கள், சேர்க்கைகள், மாற்றங்கள் குறித்து கருத்து தெரிவிக்கவும் தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறை 6—9—1988 ஆம் நாளிட்ட 1,424ஆம் எண் அரசாணையில் ஒரு வல்லுநர் குழுவை அமைத்துள்ளது. இக்குழுவில் புகழ்பெற்ற பொறியாளர்கள் அதாவது இப்பாசனத் திட்டத்தை நிறைவேற்றுதல், இயக்குதல், பராமரித்தல் ஆகிய பணிகளிலும் ஒப்பந்தத்தை வகுப்பதிலும் ஈடுபட்டிருந்த பொறியாளர்கள் இடம் பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டுகளில் கிடைக்கபெற்ற புள்ளி விவரங்கள் அனைத்தையும் குழு ஆய்வு செய்து, ஒப்பந்தம் குறித்து மறு ஆய்வு செய்யும்போது பரிசீலிக்க வேண்டிய பிரச்சினையை குழு கண்டறிந்தது. இக்குழு அதன் அறிக்கையை அரசிடம் அளித்துள்ளது. இப்பிரச்சினைகள், 29—11—1988ஆம் நாளன்று நடைபெற்ற நிருவாக குழுக் கூட்டத்தில் விவாதிக்கப் பட்டன. கேரள அரசு பரிசீலிப்பதற்காக, இந்த முக்கியமான கருத்துக்கள் அடங்கிய அறிக்கையை அவ்வரசிடம் பரிமாறிக் கொள்ள முடிவு செய்யப்பட்டது. ஆளுநர் ஒப்புதல் அளித்த பிறகு, இவ்விரு அரசுகளும், திருவனந்தபுரத்தில் இந்த ஆவணங் களைப் பரிமாறிக் கொள்ள ஒரு நாளைக் குறிப்பிடுமாறும், அதன் பிறகு ஒப்பந்தம் குறித்த மறு ஆய்விற்கு அதிகாரிகள் அளவிலான விவாதத்திற்கு ஒரு நாளை தெரிவிக்குமாறும் கேட்டு, கேரள அர சுக்கு 15—12—1988 அன்று கடிதம் எழுதப்பட்டது. கேரள அரசிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

**மேற்கு நோக்கிப் பாயும் கூடுதல் நீருள்ள ஆறுகளை திருப்பி விடுதல் :**

1976இல் மத்திய அரசு அமைத்த தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் பாசன வசதிகளை அளிக்கவும், குடிநீர் தேவையை நிறைவு செய்யவும், கேரளாவில் மேற்கு நோக்கிப் பாயும் சில ஆறுகளில் உள்ள உபரி நீரை திருப்பி விடுவது குறித்த பேச்சுவார்த்தைக்காக தமிழ்நாடு முதலமைச் சர் 1982ஆம் ஆண்டில் கேரள முதல் அமைச்சருக்கு கடிதம் எழுதினார். இது தொடர்பாக கேரள அரசின் பதில் ஏதும் வரப் பெறவில்லை. மேற்கு நோக்கிப் பாயும் ஆற்றிலிருந்து உபரி நீரைத் திருப்பிவிடுவது தொடர்பாக 1986 ஜூனில் கேரள அரசு தலைமைச் செயலாளருடன் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் நடத்திய விவாதத்தின் பேரில் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் கேரள அரசிடமிருந்து பதில் ஏதும் வரப்பெற வில்லை.

மத்திய அரசு அமைத்த தேசிய நீர்வள மேம்பாட்டு செயலமைப்பு முதற்கண் தேசிய தொலைநோக்குத் திட்டத்தின் ஒரு பகுதியாக தீபகற்ப ஆறு மேம்பாடு குறித்து ஆய்வை மேற் கொண்டுள்ளது. தீபகற்ப ஆறுகள் மேம்பாட்டில், தமிழ்நாட்டில், வறட்சிப்பாங்கான பகுதிகள் பயனடைவதற்காக கேரளாவில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறு ளில் உள்ள உபரி நீரை கிழக் காகத் திருப்பிவிடுவதும் அடங்கும். இப் பணியின் இப் பகுதிக்கு முன்னுரிமை அளிக்கப்பெறும்,ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட இறுதிக் குள், மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளிலிருந்து உபரி நீரைகிழக்கு நோக்கித் திருப்பிவிடுவது குறித்த ஆய்வை முடிக்குமாறும், தேசிய நீர்வள மேம்பாட்டு முகவரமைப்பை தமிழ்நாடு அரசுக் கேட்டுள்ளது. இதுகுறித்து தேசிய நீர்வள மேம்பாட்டு முகவரமைப்பின் இயக்குநர் தலைவருடன் மேலும் பரிசீலிக்கப் பட்டுவருகிறது.

**நிலத்தடி நீர் ஆய்வு :**

**தலைமைப் பொறியாளர் (நிலத்தடி நீர்) :**

நிலத்தடி நீர்வளத்தை மதிப்பிடும் பொருட்டு தேர்ந்தெடுக் கப்பட்ட பின்வரும் பகுதிகளில் ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்ட உதவியுடன் வடிநிலங்கள் வாரியான ஆய்வு முதன் முதல் 1966 மார்ச்சில் தொடங்கப்பட்டது.—

1. சென்னை பெருநகரமும் அதைச் சுற்றியுள்ள பகுதி களும்.
2. பாலாறு வண்டல் வடிநிலம்.





3. நெய்வேலி.
4. காவிரி வடிநிலப் பகுதி.

பின்னர் பொதுப் பணித் துறையின்கீழ் நிலத்தடி நீருக்கென தனியாக ஒரு பிரிவு 1970 நவம்பரில் எற்படுத்தப்பட்டது. மத்திய அரசு அமைத்த நிலத்தடி நீர் மதிப்பீட்டுக் குழுவின் கோட்பாட்டினைப் பின்பற்றி, மிக அதிகமான புள்ளிவிவரங்கள் சேகரித்து, தொகுத்து வகைப்படுத்தி, வளர்ச்சி வட்டாரம் வாரியாக நிலத்தடி நீர் மதிப்பிடப்பட்டுள்ளது. மழை பெய்த தால் நிலத்தடி நீர்வள மேம்பாடு குறித்து கவனிக்கும் பொருட்டு தொடர்ந்து நிலத்தடி நீரைக் கண்காணிக்க வேண்டியுள்ளது. இத்துறை மாநிலத்தில் நிலத்தடி நீர்வள மேம்பாட்டுக்காக தொழில் நுட்ப வழிகாட்டிக் குறிப்புகள் அளிப்பதற்கும் பொறுப்பாகும்.

**பொதுப்பணித் துறையின் இப்பிரிவு பின்வரும் பணிகளை மேற்கொண்டு வருகிறது :**

(1) நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் ஆய்வு.

(2) மண்ணியல் சம்பந்தப்பட்ட புகைப்பட ஆய்வு.

(3) நிலத்தடிநீர் விரிவாக்கப் பணி.

(4) பாசனப் பகுதியில் நிலத்தடி நீர்வளத்தை மதிப் பிடுதல்.

(5) நீர்மட்ட அளவை கவனித்தல்.

(6) நீரின் தரம் குறித்து ஆய்வு.

(7) ஆழ் துளையிடுதல்.

(8) ஆலோசனைப் பணி.

(9) மாசு கட்டுப்பாடு ஆய்வு.

(10) நில நீர் நிலத்தடி நீர் ஆகியவற்றின் இணைந்த பயன்.

(11) செயற்கை முறையில் நிலத்தடி நீரை மீண்டும் ஊற்றெடுத்து பெருக்கச் செய்தல்.

நிலத்தடி நீர்வளத்தைப் பெருக்குதல், நிலத்தடி நீர்வள மேம்பாட்டில் ஏற்பட்ட உயர்வுபற்றி மதிப்பிடுதல், கூடுதலாக நிலத்தடி நீர் பெறுவதற்காக இத்தகைய இடங்களைக் கண்டு

பிடித்தல், நிலத்தடி நீர் மேம்பாட்டுக்காக நிறுவன நிதியைப் பரிந்துரைத்தல் ஆகியவற்றிற்காக மேற்குறிப்பிட்ட பணிகள் செய்யப்படுகின்றன. இது தவிர மாநிலத்தில் நல்ல நீர் கிடைக்காத இடங்களை குறிப்பிட்டு, நிலத்தடி நீருக்காக மாற்று இடங்கள் கண்டுபிடிப்பதுபற்றி பரிசீலிக்கப்படும். கடற்கரையோரப் பகுதிகளில நன்னீர் கடல் நீர் இரண்டும் சந்திக்கும் இடத்தை பிரிப்பதற்கு தனி ஆய்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன. கடற்கரையோரப் பகுதிகளில் நிலத்தடி நீரை மேம்படுத்துவதற்குத் தகுந்த உத்திகள் தெரிவிக்கப்படுகின்றன. தொழில கழிவுகளினாலும், இரசாயன உரப் பயன்பாட்டினாலும் மாசுபட்ட நிலத்தடி நீர்ப் பகுதிகள் கண்டறியப்பட்டு எந்த அளவுக்கு நிலத்தடி நீர் தூய்மைக்கேடு அடைந்துள்ளது என்பதை நிர்மானிப்பதற்கு ஆய்வு செய்யப்படுகிறது.

நிதி :

சிறு பாசனத் துறையின் கீழ் நிறைவேற்றப்பட்ட நிலத்தடி நீர் திட்டங்களுக்குகாக ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 5.10 கோடியாகும். இதில ரூ. 3.17 கோடி ஏழாம் ஐந் தாண்டுத் திட்டக் காலத்தின் முதல் மூன்றாண்டுகளில் செல விடப்பட்டுள்ளது. 1988-89 ஆண்டில் ரூ. 1.08 கோடி பயன் படுத்தப்படும். ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டிற்காக (1989-90) ரூ. 0.93 கோடி ஒதுக்கப்பட் டுள்ளது.

ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நீரியல்—நீர் நிலையியல் நிறுவனம் பூண்டி :

மாநிலத்திலுள்ள பல்வேறு திட்டங்கள் குறிப்பாக பாசனத் திட்டங்கள் தொடர்பாக நீரியலில் ஏற்படும் தொழில்நுட்பப் பிரச்சினைகளை முன்மாதிரியான தொழில்நுட்ப உத்திகள் மூலம் தீர்ப்பதற்கான வழிமுறைகளை வகுப்பதற்காக செங் கல்பட்டு மாவட்டத்தில் பூண்டி நீர்த்தேக்கத்திற்குக் கீழே பொதுப் பணித் துறையின் ஒரு பிரிவான பூண்டி, நீரியல்- நீரழுத்தவியல் நிறுவனம் 1945ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட் டது. புது டில்லி பாசன மின்சக்தி மைய வாரியம் (C.B.I.B.) இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழு (I.C.A.R.) பொறுப் பேற்ற ஆய்வுகள் தெரிந்தெடுக்கப்பட்ட நீர்த்தேக்கங்களில் வண் டல் படிவு ஆய்வு, அதன் நீர்ப்பிரிமுகடு ஆய்வு ஆகியவற் றையும் இந்த ஆராய்ச்சிப் பிரிவு செய்கிறது.

தலைமைப் பொறியாளர் பதவித் தரத்திலுள்ள ஒரு இயக்குநர் இந் நிறுவனத்தின் தலைவராவார். இவருக்கு நிர்வாகப் பொறியாளர் பதவித் தரத்திலுள்ள 4 துணை இயக்குநர்கள் உதவி புரிகின்றனர். தற்போது இந்நிறுவனத்தில் பின்வரும் நான்கு பகுதிகளில் மட்டும்ம ஆராய்ச்சிப் பணிகள் செய்யப்படு கின்றன.



1. பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, தமிழ்நாடு மின்வாரியம், வேளாண்மைப் பொறியியல் துறை, பெருநகர் குடிநீர் வழங்கல், தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியம், நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் முதலியவை குறிப்பிடும் திட்டம் பற்றிய அடிப்படை ஆய்வுகள் செயல்முறை பிரச்சினைகள் தமிழ்நாடு கடற்கரை நெடுக ஆய்வுகள், காவிரி கழிமுகப் பகுதியில் நீர் வழங்கலை மேம்படுத்துவது குறித்து செயல்திட்ட ஆராய்ச்சிப் பணிகள்.

2. மழையளவு, வானியல் போன்று நீரழுத்தவியல் புள்ளி விவரங்களை வகைப்படுத்தி, தொகுத்தல்.

3. புதுடில்லி, பாசனம், மின்சக்தி மைய வாரியம் பொறுப்பேற்ற ஆய்வுகள்.

4. சென்னை, நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்த வாரியம் தெரிந்தெடுத்த நீர்த்தேக்கங்களில் வண்டல் மண் பிரிவுபற்றி ஆய்வும், நீர்ப்பிரிமுகடு ஆய்வும்.

நீர்வள ஆய்வு நிறுவனம் :

நீர் ஆதாரங்கள் தொடர்பான கொள்கை விஷயம் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக 1974ஆம் ஆண்டில் தலைமைப் பொறியாளரின் (நிலத்தடி நீர்) கட்டுப்பாட்டின்கீழ் நீர்வள ஆய்வு நிறுவனத்தை தமிழ்நாடு அரசு அமைத்தது. தற்போது இந்நிறுவனம், மேற்பார்வைப் பொறியாளர் பதவித் தரத்திலுள்ள ஒரு இயக்குநருடன் தரமணியில் அமைந்துள்ள அதன் சொந்தக் கட்டிடத்தில் இருக்கவேண்டிய பணியாளர் களுடன் (ஒரு தனி அதிகாரியுடன்) 1974-லிருந்து 1982 வரை இயங்கியது. பின்வரும் பணிகள் செய்யப்பட்டன :—

1. வைகை வடிநிலப் பகுதியில் நீர்வள ஆதாரம் குறித்து தொடக்க ஆய்வுகள் ;

2. இந்நிறுவனத்திற்காக எதிர்காலத் திட்டங்களை வகுத்தல் ;

3. தொடக்க புள்ளிவிவரங்களைச் சேகரித்து அதன் அடிப்படையில் ஆண்டு அறிக்கைகளைத் தயாரித்தல்.

பின்னர் 1982ஆம் ஆண்டில் மேலும் இரு கோட்டங்களைச் சேர்த்ததன் மூலம் இந்நிறுவனம் வலுப்படுத்தப்பட்டது. 1983 வரை பொன்னியாறு வடிநிலப்பகுதியில் நீர்வளம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வின் முடிவுகள் I.S.R.I. நிதி உதவி செய்யும் பொன்னியாறு வடிநிலப் பகுதி குறித்த ஒருங் கிணைந்த நீர் ஆதார ஆய்வு குறித்த திட்டத்திற்குப் பயன் படுத்திக்கொள்ளப்பட்டன.

[1989 ஏப்ரல் 19

1983 முதல் 1988 வரையுள்ள காலத்தில், ஐக்கிய நாட்டு
வளர்ச்சித் திட்ட உதவியுடன் வைகை தாமிரபரணி, பாம்பாறு,
கோட்டக் கரையாறு, குண்டாறு, பொன்னியாறு, வெள்ளாறு,
வைப்பாறு, நம்பியாறு வடிநிலப் பகுதிகளில் நீர் ஆதார மதிப்பீடு
குறித்து விரிவான ஆய்வுகள் முடிக்கப்பட்டன. அடிப்படை வசதி
களைப் பெருக்கவும், நீர் ஆதாரங்கள், திட்டமிடல் வளர்ச்சி நிர்
வாகத் துறையில் நவீனகால தொழில் நுட்ப உத்தியைப் பெறவும்
ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் உதவி செய்துள்ளது.

வடிநிலப் பகுதிகளில், 9 வடி நிலப் பகுதிகளில் ஆய்வுகள்
முடிக்கப்பட்டுள்ளன. பாலாறு வடிநிலம் குறித்த ஆய்வுகள்
1988-90-ல் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

நீர் ஆதார ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள தொழில் வல்லுநர்
களுக்கு நீர்வள ஆய்வு நிறுவனம் பயிற்சி வகுப்புகளை நடத்து
கிறது. இதுவரை 8 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. நீர்
வள ஆய்வு நிறுவனத்தின் பணிகளின் ஒரு பகுதியாக சேகரிக்கப்
பட்ட நீரமுத்தவியல் நீர் மண்ணியல் புள்ளி விவரங்களைத்
தொகுத்து வைப்பதற்காக கண்ணி பொறி மூலம் தகவல் சேகரிக்
கும் நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேவைப்படும்போது இவ்
விவரங்களை இந்நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

<u>நீர் வள நிர்வாக ஆய்வு :</u>

முதுநிலை ஐ.ஏ.எஸ். அதிகாரி பதவித் தரத்தில் திட்ட இயக்
குநர் ஒருவர் தலைமையில் உலக வங்கி உதவி செய்யும் நீர் வள
நிருவாக ஆய்வுத் திட்டமும் நீர்வள ஆய்வு நிறுவனக் கட்டிடத்
தில் செயல்படுகிறது. கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் குடிநீர்
வழங்க திட்டமிடுவதும், கி.பி. 2000-க்குள் தேவைக்கேற்ப நீர்
வழங்குவதற்கான சாத்தியக் கூறுகளை கண்டறிவதுமே
திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் பொன்னியாறு, பெரி
யாறு, வைகை, தாமிரபரணி ஆகிய வடிநிலப் பகுதிகளில் ஆய்
வுப்பணிகளை மேற்கொண்டுள்ளது. இம்மூன்று வடிநிலங்களில்
ஏற்கெனவே ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்ட உதவியுடன் செய்
யப்பட்ட ஆய்வுகள் இவ்வடிநிலங்களில் நீர்வள நிர்வாக ஆய்வுக்
காக இரு பொருட்களாக விளங்குகின்றன.

<u>தொலை தூர இயற்கைவள ஆய்வுக் கூடங்கள் :</u>

திட்டத்தின் கீழ் நிலத்தடி நீர் வள ஆய்வுத் திட்டங்களை
மேற்கொள்வதற்காக 1966-69ஆம் ஆண்டில் புவியியல் நிழற்படி
ஆய்வக மையத் தொகுதி ஒன்று (கட்டம்I) நிறுவப்பட்டது. புவி
யியல், நீரியல் கூறுகளை ஆய்வு செய்வதற்காக கீழே குறிப்பிடப்
பட்டுள்ள 4 திட்டப்பகுதிகள் தொடர்பாக இங்கிலாந்து இலண்
டனிலுள்ள ஹண்டிங்ஸ் சர்வீரி கம்பெனி எடுத்த 1,20,000 நிழற்
படங்கள் ஆய்வு செய்யப்பட்டன.



1989 ஏப்ரல் 19]

1. பாலாறு வடிநிலம் :

2. வெள்ளாறு வடிநிலம் :

3. காவிரி வடிநிலம் (தஞ்சாவூர் கழிமுகப் பகுதி).

4. சென்னையும் அதன் சுற்றுப் புறங்களும்.

இதனைத் தொடர்ந்து, 1976ஆம் ஆண்டு இந்த ஆய்வகத்
தில் மேலும் நில தொலை தூர இயற்கைவள ஆய்வுக் கருவிகள்
நிறுவப்பட்டன. பின்னர், பல்வேறு நவீனபார்வை பகுப்பாய்வுக்
கருவிகள் வாங்கி அங்கு நிறுவப்பட்டன. 1988ஆம் ஆண்டில்
ஒரு பெரிய பார்மட் இமேஜ் என்லார்ஜ் ஒன்றும் நிறுவப்பட்டது.
இதன் உதவிகொண்டு செயற்கைக்கோள் அனுப்பும் 1:10,00,000
நிழற்படங்களை 1 :2.50,000 என்ற அளவில் உருப் பெருக்கிக்
காண இயலும், இதன் மூலம் விரிவான ஆய்வு நடத்துவதற்கு
வசதி ஏற்பட்டது. தற்போது பொதுப்பணித் துறையின் தலை
மைப்பொறியாளர் (நிலத்தடி நீர்) கட்டுப்பாட்டின் கீழ், தரமணி
யில் நீர் ஆய்வு நிறுவனக் கட்டிடத்தில் முழு அளவிலான தொலை
தூர இயற்கை வள ஆய்வுக் கூடம் ஒன்று இயங்கி வருகிறது.

பல்வேறு நிறுவனங்கள் தயாரித்த, பல்வேறு நிலைகளில்
அமைந்த தொலை தூர இயற்கை வள ஆய்வுத் தொடர்பான
புள்ளி விவரங்களைப் பயன்படுத்தி அதாவது லேண்டு செட்
டி. எம். ஸ்பாட் லேண்டு, செட் கருப்பு-வெள்ளை வண்ணக்
கலவை படிவம் குறித்த புள்ளி விவரங்கள் ஆகியவற்றை பயன்
படுத்தி பின்வரும் நிலத்தடி நீர் வள ஆய்வுத் திட்டங்கள் வெற்றி
கரமாக நிறைவேற்றப்பட்டன.

1. லினமெண்ட், ஜியோமார்பலாஜி மண்ணின் பயன்,
நிலத்தடி நீர்வளம் வரை படங்களை ஐதராபாத்திலுள்ள NRSA
நிறுவனத்தின் ஒத்துழைப்புடன், தமிழ் நாட்டின் தென்
பகுதியிலுள்ள 35,000 சதுர கிலோ மீட்டர் பரப்பிற்குத் தயா
ரித்தல்.

2. அகமதாபாத்திலுள்ள ஸ்பேஸ் அப்ளிகேஷன் சென்ட
ரின் ஒத்துழைப்புடன் பொன்னையாறு வடிநிலப் பகுதி குறித்து
நீர் வள ஆய்வு நடத்துதல்.

3. வட்டம் வாரியாக நிலம் பயன்படுத்தப்படுவது குறித்
தும், தமிழ்நாடு முழுவதற்குமாக 1:30,000 என்ற அளவில்
ஜியோமார்பாலஜி வரைபடம் ஒன்றைத் தயாரித்தல்.

5. தமிழ்நாட்டிற்கான பெரும் நில அமைப்புகளைத்
தயாரித்தல் (1 : மில்லியன் அளவு).

[1989 ஏப்ரல் 19

மேற்சொன்ன வரை படங்களைப் பயன்படுத்தி, நிலத்தடி
நீர் பெருக்குவதற்கான நீர் வள மண்டலங்கள் தரத்தின் அடிப்
படையில் தெரிந்தெடுக்கப்பட்டு புவியியல் திட்டம் சாதனை
ஆய்வு நடத்துமாறு அறிவுரை வழங்குவதுடன், கடினமான
பாறைகள் உள்ள பகுதிகளில் இம்முறை மூலம் துளையிடுவது
குறித்து தொலைதூர இயற்கை வள ஆய்வுக்கூடம், நிலத்தடி நீர்
லினென்மெண்ட் வரைபடம் 1:50,000 அளவிலான ஹைடிரோஜி
யோமார்பிக் வரைபடம் ஆகியவற்றைத் தயாரிக்கும் பணியில்
ஈடுபட்டுள்ளது. இதன் மூலம் கள அலுவலர்கள் துளையிடும்
விளக்கத் திட்டங்களை மேற்கொள்வதற்கான தகவல்கள் வழங்
கப்படுகின்றன. ஐ.ஆர்.எஸ். செயற்கைக் கோள் தகவல்கள்
கிடைத்தவுடன் ஏற்கெனவே செய்யப்பட்டுள்ள ஆய்வுகள் இன்
றைய நிலைக்கு ஏற்ப மாற்றியமைக்கப்படும்.

## தூவாக்குடியிலுள்ள பாசன நிருவாகப் பயிற்சி நிலையம்

பாசன நிருவாகப் பயிற்சித் திட்டத்தின் கீழ் அமெரிக்க ஐக்கிய
நாட்டின் நிதியுதவியுடன் நமது நாட்டில் நிறுவப்பட்டுள்ள
5 நிலையங்களில் தமிழ் நாட்டிலுள்ள பாசன நிர்வாக பயிற்சி
நிலையமும் ஒன்றாகும். இத்திட்டத்தின் கால அளவு 1983 செப்
டம்பர் முதல் 1990 செப்டம்பர் வரையிலானதாகும். அதன்
பின்னர் இத்திட்டம் மாநில அரசின் பொதுப்பணித்துறையின் மேற்
பார்வையின் கீழ் தொடர்ந்து செயல்படும். பொதுப்பணித்துறை
யின் அரசுச் செயலரின் தலைமையின் கீழ் அமைந்த நிருவாகக்
குழு ஒன்று இந்நிலையத்தை நிருவகித்து வரும்.

### நோக்கங்கள் :

திட்டமிடுபவர், நிருவாகி, வடிவமைப்பவர், கிராமப் பொரு
ளியல் நூலார், வயலில் பாடுபடும் பணியாளர்கள், உழவர்கள்,
உட்பட பாசன வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்
கும் போதுமான பயிற்சி அளிப்பது தேவையான அளவிற்குத் தண்
ணீரைப் பயன்படுத்துவதற்காகப் பாசன நிருவாக நவீனத்
தொழில் நுட்பங்களை அவர்களுக்கு கற்றுக் கொடுத்து, நல்ல
விளைச்சலை உறுதி செய்வதே இந்நிலையத்தின் நோக்கமாகும்.

திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டார பொறியியல் கல்லூரி,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம்,
வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலுள்ள வசதிகளை
யும் நிபுணத்துவத்தையும் இந்நிலையம் பயன்படுத்திக் கொள்ளும்.

இந்நிலையம், தற்காலிகமாக சென்னையில் நிறுவப்பட்டது.
25—11—1987ஆம் நாளிலிருந்து திருச்சிராப்பள்ளி தூவாக்குடி
யிலுள்ள காவேரி வளாகத்திற்கு நிரந்தரமாக மாற்றப்பட்டது.
இந்நிலையம் அனைத்து நவீன வசதிகளையும் கொண்ட பயிற்சி
நிலையமாக மேம்படுத்தப்பட்டது.



1989 ஏப்ரல் 19]

அத்துறைக்குள்ளேயே பல்வேறு பாடத்திட்டங்கள் குறித்த
பயிற்சி வகுப்புகளைக் கொண்டுள்ள இப்பயிற்சிப் பிரிவுகளைச்
செயல்முறை நிலையில், இளநிலை, நடுத்தர, முதுநிலை அலு
வலர்களுக்கு பாசனத்திலும் வேளாண்மையிலும், வேளாண்
பொறியியலிலும் பல பணியாளர்கள் பயிற்சி வகுப்புகளை
நடத்துகின்றது. இவை தவிர விவசாயிகளுக்கான பயிற்சி செய்
முறை விளக்கத் திட்டங்கள் நடத்தப்படுகின்றன.

இதுவரையில் 2,890 பணியாளர்களுக்கு இந்நிலையத்தில்
பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிலையம் பின்வரும்
ஆலோசனைப் பணிகளையும் செய்துவருகின்றது :—

### 1. பெரியாறு-வைகைத் திட்டம் :—

பணியிடைப் பயிற்சி :

உலகவங்கி நிதியுதவி அளிக்கும் பெரியாறு-வைகைத் திட்டத்
தின் இரண்டாம் கட்டத்தின் ஒரு பகுதியாக இந்நிலையம்,
இத்திட்ட இளநிலை அதிகாரிகளுக்கென தொகுதி தொகுதியாக
பயிற்சி வகுப்புகளை வடிவமைத்து, நிறுவி, நிறைவேற்றுகிறது.
20 திட்டங்கள் நிறுவப்பட்டு இத்திட்டத்தின் 600 இளநிலை
அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

### 2. தேசிய நீர் நிருவாகத் திட்டம்—பணியிடைப் பயிற்சி :

இந்நிலையம் இத்திட்டத்தின் கீழ் வரும் பயிற்சிச் திட்டங்
களை வடிவமைத்து நிறுவுவதில் ஆலோசனை நிறுவனமாகச்
செயல்படுகிறது. தேசிய நீர் நிருவாகத் திட்டத்தின் கீழ் சாத்த
னூர் துணைத் திட்டப்பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று
வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் வரும் பணியாளர்களுக்குப்
பணியிடைப்பயிற்சி அளிப்பதற்காக தேவை அடிப்படையிலான
பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது.

### 1989-90ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படவேண்டிய திட்டங்கள்:

1989-90ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில்
10.87 கோடி ரூபாய் செலவில் பொய்கையாறு பாசனத்
திட்டமும், நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் ரூ. 10.12
கோடி செலவில் நம்பியாறு பாசனத்திட்டமும் நிறைவேற்று
வதற்காக எடுத்துக் கொள்ளப்படும். 1975ஆம் ஆண்டு உத்தே
சிக்கப்பட்ட பச்சையாறு பாசனத் திட்டம் அதற்கான சுற்றுப்புறச்
சூழல் குறித்த ஒப்புதல் கிடைக்காமையால் தொடங்கப்பட
வில்லை. தேவையான ஒப்புதல்களைப் பெற்ற பின்னரே திட்டங்
கள் நிறைவேற்றுதலுக்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

ஈசில் அடங்கியுள்ள இரு திட்டங்களில் ஒன்று 100 முதல் 200 எக்டேர் வரை ஆயக்கட்டு பகுதிகளைக் கொண்ட 150 மழையில் நிரம்பும் ஏரிகளை நவீனப்படுத்துவதாகும். இத்தகைய ஏரிகள் செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கம், இராமநாதபுரம், காமராசர், திருச்சிராப்பள்ளி, மதுரை, அண்ணா, நெல்லை கட்டபொம்மன், சிதம்பரனார் ஆகிய 12 மாவட்டங்களில் அமைந்துள்ளன. இதில் மற்றொரு திட்டம் ஐரோப்பிய பொருளாதார சமுதாய உதவியுடன் புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கம், இராமநாதபுரம், காமராசர் ஆகிய மாவட்டங்களிலுள்ள 5,585 முன்னாள் ஜமீன் ஏரிகளைப் புதுப்பிப்பதற்கானது ஆகும். ஐரோப்பிய பொருளாதார சமுதாய பின்வரும் இட்டங்களடங்கிய திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு 39.20 கோடி ரூபாய்க்குச் சமமான 24.5 எம்.இ.சி.யு. மானியமாக வழங்கியுள்ளது.

1. மொத்தம் 20,302 ஹெக்டேர் ஆயக்கட்டு பரப்பு கொண்ட 150 மழையில் நிரம்பும் ஏரிகளை நவீனப்படுத்துதல்.

2. மொத்தம் 2,080 ஹெக்டேர் ஆயக்கட்டு பரப்பு கொண்ட 80 முன்னாள் ஜமீன் ஏரிகளைப் புதுப்பிப்பதற்கான முன்னோடித் திட்டம்.

இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு 33.20 எம்.இ.சி.யு. ஆகும். இது 53.12 கோடி ரூபாய்க்குச் சமமானதாகும். இதில் ஐரோப்பிய பொருளாதார சமுதாயத்தின் பங்கு 24 எம்.இ.சி.யு. அல்லது 39.20 கோடி ரூபாய் ஆகும்.

தமிழ்நாடு அரசின் பங்கு 8.70 எம்.இ.சி.யு. அல்லது 13.9 கோடி ரூபாய் ஆகும்.

1989-90ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 3.47 கோடி முதலீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. நிதியுதவி செய்வதற்கான ஒப்பந்தம் கையெழுத்தான நாளிலிருந்து 5 ஆண்டுக்குள் இத்திட்டம் முடிக்கப்படும்.

## குடிநீர் வழங்கும் திட்டம்:

காலதாமதமின்றி, குடிநீர் தட்டுப்பாட்டிலிருந்து மதுரை விடுவிக்கப்படவேண்டும். கள்ளார் மற்றும் அச்சன் கோயில் ஆறுகளிலிருந்து மதுரைக்கு 2.40 டி.எம்.சி. நீரைப் பெறுவதற்காக கேரள அரசுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்த உள்ளோம். வைகை நதியில் வந்து விழாத சிறு ஆறுகளின் நீரை தேக்குவதை அழகர் அணைத் திட்டம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் செயல் சாத்தியக்கூறுகளை ஆராய உள்ளோம்





## காவிரிப் பாசன மேம்பாட்டுத் திட்டம் :

பொதுவாக, காவிரியாற்றில் வரும் நீரின் அளவு குறைந்திருப்பதால், இவ்வாற்றின் மூலம் நீர்பெறும் பல கால்வாய்களில் வரும் நீரின் அளவும் குறைந்து விட்டது. ஆகவே இக்கால்வாய்களின் மூலம் பயன்பெறும் ஆயக்கட்டு நிலங்களுக்கு சரியான அளவில் பாசன வசதி அளிப்பது கடினமாகிக் கொண்டே வருகிறது. பாசனக் காலங்களில், இடையூறின்றி பாசன வசதியளிக்கும் பொருட்டு சில கால்வாய்களில் தலை மதகுகளையே மாற்றியமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் பாசனக் காலங்களில் கொரம்பு கட்டும் செலவினை குறைக்க முடியும். மேற்கூறிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு, கீழ்க்கண்ட மூன்று பாசனத் திட்டங்களையும் 1989-90 ஆம் வருடத்திய பகுதி 2ஆம் திட்டத்தில், ரூ. 100 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### (1) புதுவாத்தலை வாய்க்கால் தலைப்பை மாற்றியமைத்தல் :

இத்திட்டத்தின் கீழ் மேலணையின் மேல்புறத்தில் காவிரியின் 28/7-130 கல்லில், தலைப்பு மதகு புதிதாகக் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்புதிய தலைப்பு மதகிலிருந்து பழைய தலைப்பு மதகுவரையில் சுமார் 1,515 மீட்டர் நீளத்திற்கு புதிய வாய்க்கால் வெட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பாசன வாய்க்கால் சுமார் 3,086 ஏக்கர் நிலங்களுக்கு பாசனவசதி அளிக்கும். திட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ. 89 இலட்சத்தில், 1989-90-ல் ரூ. 5 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### (2) கட்டளை உயர்மட்டக் கால்வாயின் குறுக்கே நீர்க்கண்டிகை (Regulator) கட்டுதல்:

கட்டளை உயர்மட்டக் கால்வாயின் நீர்ப்போக்கைக் கட்டுப்படுத்தி, மதகுகளுக்கு நீர் மட்டத்தைப் பராமரிக்கும் அளவிற்கு தீவிர முறைப்பாசனத்தை சீர்படுத்தவும் மைல், 1913-430-ல் ஓர் நீர்க்கண்டிகை கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நீர்க்கண்டிகை கட்டுவதால், பதிவுற்ற இருபோக சாகுபடி நிலங்களுக்கு பாசனம் உறுதிப்படுத்தப்படும். ஒருபோக சாகுபடி நிலங்களுக்குத் தேவைக்கேற்ப பாசன நீர் பகிர்ந்தளிக்கப்படும். திட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ. 4.84 இலட்சத்தில், 1989-90-ல் ரூ. 3 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(3) உய்யக்கொண்டான் கால்வாயின் குறுக்கே நீர்க்கண்டிகை (Regulator) கட்டுதல்.

உய்யக்கொண்டான் கால்வாயின் குறுக்கே மைல் 274-ல் மேற்பகுதியிலுள்ள இருபோக சாகுபடி நிலங்களுக்கும், கீழ்ப் பகுதியிலுள்ள ஒரு போக சாகுபடி நிலங்களுக்கும் நீர் வினியோகத்தைக் கட்டுப்பாடு செய்வதற்கு ஒரு நீர்க்கண்டிகை கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ. 6.16 இலட்சத்தில், 1989-90-ல் ரூ. 3 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குடியாத்தம் தாலுகா செஞ்சி கிராமம் அருகே ராஜ தோப்புக் கானாரின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் :

வட ஆற்காடு மாவட்டம், குடியாத்தம் தாலுகா, செஞ்சி கிராமம் அருகில் ராஜாதோப்புக்கானாரின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் செயலாக்கப்பட்டால் 41.72 ஏக்கர் கூடுதல் நஞ்செய் நிலங்களுக்கு பாசன வசதியும் 500.50 ஏக்கர் நஞ்செய் நிலங்களுக்கு பாசன உறுதியும் கிடைக்கும்.

திட்ட மதிப்பீடு ரூ. 142 இலட்சம் ஆகும். 45.95 ஏக்கர் பட்டா நிலமும், 6.54 ஏக்கர் புறம்போக்கு நிலமும், 17.76 ஏக்கர் வன நிலமும் ஆக மொத்தம் 70.25 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவேண்டும். உத்தேசிக்கப்பட்டுள்ள நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 41.31 கன அடி. வனத்துறையின் ஒத்திசைவு எதிர் பார்க்கப்படுகிறது.

பாசன மேம்பாடு -நீர்வள நிலை ஆணைக்குழு.

தமிழ்நாடு தண்ணீருக்காக வாடும் ஒரு மாநிலம். இம் மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் குடி தண்ணீருக்குக் கூட கடும் பற்றாக்குறை உள்ளது. இங்கு நபர் ஒருவருக்குக் கிடைக்கும் தண்ணீரின் அளவு,தேசிய அளவில் நபர் ஒருவருக்குக் கிடைக்கும் தண்ணீரின் சராசரி அளவில்மூன்றில் ஒரு பாகமாகும். ஆனால், தமிழ்நாடு ஆற்று வடிநிலப்பகுதிகள் அனைத்தும் பெரிய, நடுத்தர சிறிய பாசன வசதி அமைப்புகளை ஏற்படுத்துவதற்காக பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இம் மாநிலத்தின் பாசன வளவாயில்களின் பரப்பு 48 சதவீதம் ஆகும். இவ்வகையில் இம் மாநிலம் நாட்டில் பஞ்சாபிற்கு அடுத்த இடத்தை வகிக்கிறது. மாநிலத்தில் நீர் வளத்தில் 85 சதவீதத்திற்கு மேல் பயன்படுத்தப்பட்டுள்ளது. உபரியாக உள்ள சொற்ப நீரைப் பயன்படுத்துவதைத் தவிர இம்மாநிலத்தில்



நீர் வளத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை. இம் மாநிலத்தில் வேளாண்மை விளை பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தோடு நீர் வளத்தை மதிப்பீடு செய்யவும், தமிழ்நாட்டில் தற்போதுள்ள பாசன முறைகள் செயல்படும் விதத்தை மறு ஆய்வு செய்யவும் பாசன முறைகளை மேம்படுத்தி நிருவகிப்பதற்கான வழிமுறைகளைக் கருத்துரைக்க வேண்டிய அத்தியாவசியமான நிலை எழுந்துள்ளது. எனவே, பல துறைகளைச் சார்ந்த நிபுணர்களைக் கொண்டு நிலத்தடி நீர் பாசன வாயில்களை மேம்படுத்துவது உட்பட அனைத்து பாசன வாயில்களின் வளத்தை ஒருங்கிணைத்து மேம்படுத்துவதற்கான ஆலோசனை வழங்கிட பாசன மேம்பாட்டு மற்றும் நீர்வள நிலை ஆணைக்குழு ஒன்றை அமைப்பதென்று தமிழ்நாடு அரசு தீர்மானித்துள்ளது.

இந்த ஆணைக்குழுவிற்கு திரு. ஆர். திருமலை, இ.ஆ.ப. (பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்) தலைவராக உள்ளார். பாசன விவகாரங்களில் நிபுணர்களாக உள்ள பின்வரும் நபர்கள் இந்த ஆணைக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.

1. திரு. எஸ். பி. நமச்சிவாயம், முன்னாள் தலைமைப் பொறியாளர்.
2. திரு. எஸ். பஞ்சநாதன், முன்னாள் தலைமைப் பொறியாளர்.
3. திரு. ஏ. மோகனகிருஷ்ணன், முன்னாள் தலைமைப் பொறியாளர்.
4. திரு. எஸ். நாகேஸ்வரன், முன்னாள் தலைமைப் பொறியாளர்.
5. திரு. வி. இராஜகோபாலன், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்.

பொதுப்பணித்துறையின் (பொது) தலைமைப் பொறியாளர் (பாசனம்) இந்த ஆணைக்குழுவில் அலுவலர் முறையில் உறுப்பினராக இருப்பார்.

வெளி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறுவதற்கு உத்தேசித்துள்ள திட்டங்கள்— உலக வங்கி உதவி :

தமிழ்நாட்டிலுள்ள பாசன ஏரிகளை ரூ. 310 கோடி செலவில் நிலைப்படுத்துவதற்கான திட்ட அறிக்கை ஒன்று உலக வங்கியிடமிருந்து நிதியுதவி பெறுவதற்காக முதலில் தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான தொடக்கப் பணிகளைத் தொடங்கிவைப்பதற்காக உலக வங்கி அதிகாரிகள் 1988 ஆம் ஆண்டு மே திங்களில் தமிழ்நாட்டிற்கு வந்தனர்.

(2) உலக வங்கிக் குழுவின் கருத்துரைகளின் அடிப்படையில், ரூ. 350 கோடி முதலீட்டுச் செலவில் ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டம் புத்துயிர் அளித்தல்— நீர் நிருவாகப் தொடர்பான தெரிந் தெடுக்கப்பட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப் பெற்று உலக வங்கி யிடம் நிதி உதவி கோரி கொடுக்கப்பட்டது. 1989 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் இது குறித்து உலக வங்கி அதிகாரிகளுடன் விவா திக்கப்பட்டது. உலக வங்கி ஆய்வுக் குழுவின் கருத்துரைகளின் ஆய்வின் அடிப்படையில், 4 ஆற்று வடிநிலங்களில் அதாவது தாமிரபரணி, வைகை, பொன்னியாறு, பாலாறு வடிநிலங்களில் உள்ள ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டங்களை உள்ளடக்கிய வாறு இத்திட்ட அறிக்கை மீண்டும் திருத்தியமைக்கப்பட்டது.

(3) தற்போதைய திட்டம் பாசனத்திறனை 44 சதவீதத்தி லிருந்து 67 சதவீதமாக அதிகரிக்கும், பாசனப் பணிகளில் ஏற் படும் இழப்புகள், நீர்க்கசிவினால் ஏற்படும் இழப்புகள், நிலத்தில் பின்பற்றும் முறைகளினால் ஏற்படும் இழப்புகள் ஆகியவற்றில் ஏற்படும் சிக்கனம் காரணமாக ஒவ்வொரு ஹெக்டேர் ஆயக்கட்டு பகுதியிலும் 0.40 ஹெக்டேர் பரப்பு பாசனச் சேமிப்பினால் பயனடைகிறது. இப்பணியில் நீர் எடுத்துச் செல்லும் கால்வாய்களைச் சீர்படுத்தல், ஏரிகளின் கரைகள், மதகுகள், உபரிநீர் செல்வதற்கான ஏற்பாடுகளை வலுவூட்டுதல் ஆகியவை அடங்கும். இத்திட்டம் செயல்படுத்தப்படுமானால் ஹெக்டேர் ஒன்றுக்கான விளைச்சல் அதிகரித்து உணவு உற்பத்தி மொத்தம் 5,84,641 டன் அதிகரிக்கும்.

2. ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசின் நிதியுதவி :

ஒவ்வொன்றிலும் 50 முதல் 100 ஹெக்டேர் பாசனப் பரப்பு கொண்ட மொத்தம் 300 ஏரிகளை ரூ. 50 கோடி மதிப்பீட்டுச் செலவில் நவீனப்படுத்தி, மொத்தம் 22,500 ஹெக்டேர் பரப்பிற்கு பாசன வசதி அளிப்பதற்கான திட்டம், ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

கட்டிடங்கள்.

அரசின் பல்வேறு துறைகளுக்கான கட்டிடங்கள் கட்டுவது குறித்துத் திட்டமிடுவதும், வடிவமைத்தலும், கட்டுமானப் பணி களை மேற்கொள்ளுவதும் அவற்றைப்பராமரித்துச் சீரமைத்தலும் பொதுப்பணித்துறையின் கட்டிடப் பிரிவின் பொறுப்பிலுள்ளது. மேலும் குறிப்பிட்ட சதவீதக் கட்டணத்தைப் பெற்று, உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் அரசு சார் நிறுவனங்களின் கட்டு மானப் பணிகளும், பொதுப்பணித்துறையால் மேற்கொள்ளப்படு கின்றன. தவிரவும், மத்திய அரசுக்கென தொழிலாளர் காப்புறுதிக் கழகம், ஒருங்கிணைந்த நகர்ப்புற முன்னேற்றத் திட்டம், மற்றும் மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றுக் கான கட்டுமானப் பணிகளும் பொதுப்பணித் துறையால் செய்யப்படுகின்றன.



(2) ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பொதுப்பணித் துறைக் கட்டடப் பிரிவிற்கான செலவு விபரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன :—

ஆண்டு வாரியான செலவினம்.

செலவு.

(ரூபாய் இலட்சத்தில்).

| வருடம். | பொதுப்பணி. | வீட்டுவசதி. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1985—86 .. | 548.68 | 41.24 | 589.92 |
| 1986—87 .. | 893.97 | 94.45 | 988.42 |
| 1987—88 .. | 927.92 | 139.94 | 1,067.86 |
| 1988—89 .. | 769.56 | 243.39 | 1,012.95 |
| 1989—90 .. (எதிர்பார்ப்பது). | 857.15 | 291.77 | 1,148.92 |

(3) 1988-89 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட சிறப்புமிகு கட்ட டங்கள் பொதுப்பணித்துறையினரால் கட்டி முடிக்கப்பட்டன:—

(ரூபாய் கோடியில்)

| வரிசை எண்ணும் மாவட்டமும். | பணி. | செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 தேவர் திருமகன் | சிவகங்கை—மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள். | 5.77 |
| 2 காமராஜர் | விருதுநகர்—மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் விருந்தினர் விடுதி. | 3.89 |
| 3 இராமநாதபுரம் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் அலுவலர் குடியிருப்புகள். | 3.33 |

| (1) | | (2) | (3) |
| --- | --- | --- | --- |
| | | | (ரூபாய் கோடியில்.) |
| 4 | மதுரை | இராஜாஜி மருத்துவமனை செவிலியர் அலுவலர், மகளிர் பயிற்சியாளர் நவீன சமையற்கூடம், வெள்ளிவிழா கட்டடம் மற்றும் கலையரங்கம். | 1.17 |
| 5 | பெரியார் | ஈரோடு—நீதிமன்றம் மற்றும் வழக்கறிஞருக்கான கட்டடம். | 0.93 |
| 6 | செங்கை-அண்ணா. | ஒருங்கமைந்த நீதிமன்றக் கட்டடங்கள். | 0.77 |
| | | | 15.88 |

(4) தற்போது ஒவ்வொன்றும் ரூ. 5 இலட்சத்துக்கும்
கூடுதலான செலவில் வெவ்வேறு துறைகளைச் சார்ந்த 450
கட்டடங்களைக் கட்டும் பணியை பொதுப்பணித் துறை
மேற்கொண்டுள்ளது. 1988-89-ல் கட்டுமானம் மற்றும்
பராமரிப்புப் பணிகளுக்கென ரூ. 20.69 கோடி செலவிடத் திட்ட
மிடப்பட்டுள்ளது. இவ்வருடத்துக்கான இலக்கு 1,050 கட்டடங்
களாகும். ஏறத்தாழ அனைத்துமே ஏற்கனவே முடிக்கப்பட்டு
வெவ்வேறு துறைகளிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன. ஒவ்
வொன்றும் ரூ. 50 இலட்சத்துக்கும் அதிகமான மதிப்புள்ள 18
கட்டடப்பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் 1989-90-ல்
நான்கு பெரிய கட்டடங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிதம்பரனார் மாவட்டத் தலை நகரான தூத்துக்குடிக்கான
பெரும் திட்டம் அரசின் ஆய்விலுள்ளது. அரசு ஏற்பு வழங்கியதும்
ஆரம்ப நிலை வேலைகள் துவுங்கப் பெறும். இத்திட்டத்துக்
கென 244.16 ஏக்கர் நிலம் வருவாய்த் துறைக்கு அளிக்கப்பட்
டுள்ளது.



கீழ்க்கண்டவை அரசு ஒப்புதல் பெற்ற சில முக்கியமான
திட்டங்களாகும். சில திட்டப்பணிகள் துவங்கப்பட்டுள்ளன.
ஏனைய பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும். :—

| | | |
| --- | --- | --- |
| | | (ரூபாய் கோடியில்) |
| 1 | சென்னை பொது மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடத்தின்மேல் கூடுதலாக 7 மாடிகள் கட்டுதல். | 1.26 |
| 2 | சேலம், மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவமனை மற்றும் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையாக மாற்றுதல். | 3.75 |
| | | 3.66 |
| 3 | சென்னை சைதாப்பேட்டையில் ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் அலுவலகம். | |
| 4 | சென்னை உயர்நீதி மன்றம், கூடுதல் கட்டடம். | 4.13 |
| 5 | இராமநாதபுரம், காமராஜர் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களில் காவலர் மற்றும் ஆயுதப் படையினர் குடியிருப்புகள். | 9.26 |

யலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்படுவோருக்கு உடனடி
ரணம் அளிப்பதற்கென கடலோரப் பகுதிகளில் புயல்
காப்பு இல்லங்கள் கட்டும் பணியை அரசு மேற்கொண்
து. இப்பணிகள் பொதுப்பணித்துறையின் கட்டிடப்
[illegible]டம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

[illegible]ன்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கென உலக வங்கி
யின் உதவி பெறும் ஐ.பி.பி.வி. திட்டத்தின் கீழ் ஆலந்தூர்,
பல்லாவரம், திருவொ[illegible] மற்றும் தாம்பரம் நகராட்சிகள்
மற்றும் கத்திவாக்கம், [illegible] வடி மற்றும் அம்பத்தூர்
நகரியங்களுக்கென ரூ. 1.24 கோடிக்கு அரசு ஏற்பு அளித்
துள்ளது.

144361
D
V241,31N89
N89.10.2

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

## IN MADRAS CITY

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrafts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited Madras-2.
13 Kalawani Book Centre, No. 1, Ponniamamn Koil Street, Egmore, Madras-8.

## IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9|31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3|1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

## IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B. B. Gandhi Street, Calcutta-17.

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras**